
அந்த
அரபிக்கடல் ஓரம்
தமிழ் நிவேதா

## நூல் விவர அட்டவணை

நூலின் பெயர் : அந்த அரபிக் கடல் ஓரம்

ஆசிரியர் : தமிழ் நிவேதா

உரிமை : ஆசிரியருக்கு

மொழி : தமிழ்

முதல் பதிப்பு : செப்டம்பர், 2011

தாள் : 11.6 kg. வெள்ளைத் தாள்

நூலின் அளவு : 1 x 8 கிரவுன்

அச்சு எழுத்து : 11 புள்ளி

மொத்தப் பக்கங்கள் : 400

பைண்டிங் : சாதா அட்டை

நூல் வெளியிடுவோர் : அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

**விலை: ரூ.150.00**

கணினி அச்சு : வேலன் லேசர் - 94441-01753

அச்சிட்டோர் : ஜீ.எம்.கிராபிக்ஸ்,
சென்னை-14.




# அந்த
# அரபிக் கடல் ஓரம்

# அந்த
# அரபிக் கடல் ஓரம்

## 1

''வாவ்!'' உற்சாகத்துடன் கை கொட்டிச் சிரித்தாள் ஜோஷிதா. அவளது தலையிலும், தோளிலும் சலுகை யுடன் அமர்ந்திருந்த புறாக்கள் மெல்லிய சிறகுகளை விரித்துப் படபடத்தன.

டிரா∴பால்கர் ஸ்கொயரை சுற்றிப் பறக்கும் புறாக்களை பார்க்கையில் லண்டனின் ஒட்டு மொத்த புறாக்களும் இங்கே தான் வசிப்பது போலிருந்தது. தன் விரல் நுனி யில் அமர்ந்திருந்த புறாவை மிருதுவாய் தடவிக் கொடுத்த படி தானும் புறாவாய் இறக்கையின்றி பறந்தவளிடம்,

''ஜோஷிதா போகலாமா?'' என்றான் ஹரிஷ்.

''ஓ! போகலாம். ஆனால் இந்த புறாக்கள் என்னை விட மாட்டேன் என்கிறதே!'' என்றாள் ஜோஷிதா, சிணுங்கலாக.

"உன்னைப் பார்த்ததும் என்னைப் போலவே இந்த புறாக்களும் மயங்கி விட்டது போலிருக்கிறது" என்றான் ஹரிஷ் அவள் முகத்தையே பார்த்தபடி.

அவன் வார்த்தைகளை கவனிக்காமல் "அடுத்து எங்கே போகிறோம்?" என்றபடி எழுந்து நின்றாள் ஜோஷிதா.

"இந்த லண்டனில் மிக முக்கியமான இடம்" என்றான் ஹரிஷ், தன் கையிலிருந்த கைடைப் புரட்டியபடி.

"என் ஊரில் எது முக்கியமானது என எனக்கு சொல்கிறாயா? இப்போது நாம் பக்கிங்ஹாம் பேலஸ் அல்லது வெஸ்ட் மினிஸ்டர் அபே போகிறோம். சரியா?" என்றாள் ஜோஷிதா அலட்சியமாக.

"யு வார் ரைட். பேலசுக்குத்தான் போகிறோம்" என்றான் ஹரிஷ். இருவரும் டிரஃபால்கர் ஸ்கொயரின் அழகான பவுண்டனையும், டிரஃபால்கர் போரின் வெற்றி சின்னமான நெல்சனின் சிலையையும் சுற்றிக் கொண்டு நடக்கையில் ஜோஷிதாவின் செல்போன் சிணுங்கியது.

"ஹலோ அம்மா" என்றாள் ஜோஷிதா சிரித்தபடி.

"ஜோஷி, மாலையில் வீட்டில் பார்ட்டி இருக்கிறது நினைவில்லையா?" என்றாள் ஜோஷிதாவின் அம்மா கீதா.

"ஓ! யா. நன்றாக நினைவிருக்கிறது."

"ரொம்ப நேரம் வெளியே சுற்றினால் இருவரும் களைத்துப் போவீர்கள். மாலையில் உறவினர்கள் முன் அலுப்புடன் இருந்தால் நன்றாக இருக்காதில்லையா? அதனால் சீக்கிரமாய் கிளம்பி வீட்டிற்கு வா. லண்டன் எங்கே போகிறது? தினமும் பார்க்கும் இடம்தானே!" என்றாள் கீதா.

"தினமும் பார்க்கும் இடம்தான். ஆனால் 'லண்டன் அலுத்துப் போய் விட்டது என்று ஒருவன் சொன்னால்



அவனுக்கு வாழ்வே அலுத்துப் போய்விட்டது என்று அர்த்தம்' என்று டாக்டர் சாமுவேல் ஜான்சன் சொல்லியிருக்கிறார் தெரியுமா?" என்றாள் ஜோஷிதா.

"உன்னுடைய இந்த விளக்கத்தை மாலையில் உன் நிச்சயதார்த்தத்திற்கு வருகிறவர்களிடம் எல்லாம் நான் சொல்ல முடியாது. அதனால் விரைவில் கிளம்பி வந்து சேர்" என கீதா போனை வைத்தாள்.

அவள் தாயுடன் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்த ஹரிஷ் "ஜோஷிதா உனக்கு உண்மையாலுமே லண்டனை அவ்வளவு பிடிக்குமா?" என்றான் யோசனையாக.

"நான் பிறந்த இடம் என்பதால் எனக்கு இதன் மீது காதல் உண்டு. உன்னை நான் திருமணம் செய்து கொள்வதற்கு நான் சம்மதித்ததே நீ திருமணம் ஆனதும் இந்தியாவிலிருந்து வந்து இங்கேயே செட்டில் ஆகி விடுவதாகச் சொன்னதால்தான்."

"அப்படியானால் என்னை உனக்குப் பிடிக்கவில்லையா?" என்றான் ஹரிஷ் வருத்தத்துடன்.

யோசிக்காமல் பேசிவிட்டதை உணர்ந்தவளாய் "பிடிக்காம எப்படி ஓகே சொல்லுவேன்? பிடிச்சதுக்கு முக்கிய காரணம் இதுன்னு சொன்னேன்" என்றாள் ஜோஷிதா.

ஹரிஷின் சிவந்த முகம் மேலும் சிவந்து பளபளத்தது. "உனக்கு என்னை பிடித்திருக்கிறதுதானே!" என்றான் எதிர்பார்ப்புடன்.

"ஆமாம்" என்று தலையசைத்த ஜோஷிதா பிரிட்டிஷ் ராணியின் இல்லமாகவும், அலுவலகமாகவும் இருக்கும் பக்கிங்ஹாம் பேலசின் அழகையும் பிரம்மாண்டத்தையும் அவனிடம் காண்பித்தாள். ஆவலுடன் பார்வையிட்ட ஹரிஷ் சொன்னான். "ஜோஷிதா, உனக்குத்

தெரியுமா? பல வருடங்களுக்கு முன்பு இளவரசர் சார்லஸ் இந்தியா வந்திருந்தபோது ஜனாதிபதி மாளிகையைச் சுற்றிப் பார்த்து விட்டுச் சொன்னாராம். 'உங்களுடைய ராஷ்டிரபதி பவனுடன் ஒப்பிடுகையில் எங்களுடைய பக்கிங்ஹாம் பேலஸ் ஒரு அவுட்ஹவுஸ் தான் என்று.'''

''நிஜமாகவா!'' என்றாள் ஜோஷிதா வியப்புடன்.

''நிஜம்தான். இதுவரை எந்த இந்திய ஜனாதிபதியும் தன் பதவிக் காலத்தில் ராஷ்டிரபதி பவனை முழுதாய் பார்த்ததில்லை என்றுகூடச் சொல்வார்கள்.''

ஜோஷிதா ஆர்வத்துடன் அதைப் பற்றி அவனிடம் கேள்வி கேட்கும் போதே ஹரிஷின் செல்போன் சத்த மிட்டது. போனை எடுத்துப் பேசியவன், ''என் அப்பா தான் ஜோஷிதா. உடனே வரச் சொல்கிறார். ஏற்கனவே லேட்டாகி விட்டது. இனிமேலும் தாமதிக்க முடியாது மற்ற இடங்களைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்றான்.

ஜோஷிதா பதில் பேசாமல் கிளம்பினாள்.

இருவரும் வீட்டை அடைந்ததும் அங்கிருந்த கல கலப்பையும், கும்பலையும் பார்த்த பிறகுதான் நடக்க விருக்கும் நிகழ்ச்சி முழுசாய் மனதில் பட்டது.

''என்னம்மா மாப்பிள்ளையுடன் பேச நேரமா இல்லை? நிச்சயத்தின் போதுதானா வெளியே போக வேண்டும்?'' என்றார் ஜோஷிதாவின் அப்பா பரசுராமன்.

''சின்னஞ் சிறுசுக. அப்படித்தான் இருப்பாங்க. விடுங்க பரசுராமன்'' என்றார் ஹரிஷின் அப்பா கல்யாண சுந்தரம்.

ஜோஷிதா தன் அறைக்குச் சென்று அம்மா எடுத்து வைத்திருந்த புடவையையும் நகையையும் அணிந்து



கொண்டாள். முறைப்படி நிச்சயதார்த்தம் நடந்து முடிய, எல்லோரையும் கை குலுக்கி வரவேற்று, வாழ்த்துக் களைப் பெற்ற போதும் மனம் யதார்த்தத்தில் ஒட்டாமல் நின்றது. பெற்றோரின் அவசரத்திற்கு தலையாட்டாமல் இன்னும் சில வருடங்கள் திருமணத்தைத் தள்ளிப் போட் டிருக்கலாம் என்ற எண்ணத்தை தவிர்க்கவே முடிய வில்லை.

பரசுராமன் தமிழ்நாட்டில் பெரிய குடும்பத்தில் நிறைய சகோதர சகோதரிகளுடன் பிறந்தவர். இந்திய நடுத்தர குடும்பங்களின் பொருளாதாரத் தடைகளையும் பயங் களையும் தாண்டி தன் திறமையில் படித்து டாக்டரானார். வெளிநாட்டில் வேலை பார்க்கும் சந்தர்ப்பம் வந்தபோது அதை தான் முன்னேறக் கிடைத்த ஏணியாய் நினைத்துப் பற்றிக் கொண்டார். சில வருடங்கள் அவர் லண்டனில் உழைத்த உழைப்பில் இந்தியாவிலிருந்த அவர் குடும்பம் சற்றே நிமிர்ந்தது. அவர் பெற்றோர் தங்கள் சொந்தத்தில் எம்.பி.ஏ. படித்த பெண் இருப்பதாகவும், நல்ல வேலை யில் இருப்பதாகவும் சொன்னதும் அவர்கள் விருப்பப்படி கீதாவை மணந்து கொண்டார். அவரைப் போலவே நடுத்தர குடும்பத்தில் பிறந்து படிப்பையே சொத்தாக கருதி வளர்ந்திருந்த கீதா எல்லா விதத்திலும் பரசுராம னுக்கு உறுதுணையாய் நின்றாள்.

திருமணமாகி முதல் ஐந்து வருடம் சொந்த வீடு வாங்கு வதிலும், இருவரின் உடன் பிறப்புகளின் திருமணத் திற்கு உதவுவதிலும், கழிய அவர்கள் திட்டமிட்டபடி ஆறாவது வருடம்தான் கீதா கர்ப்பமானாள். ஒரு பெரிய குடும்பத்தின் பொறுப்பை சுமந்த சலிப்பில் இருவரும் ஒரே குழந்தை போதுமென முடிவு செய்தனர். ஜோஷிதா வளரும் சமயம் பரசுராமன் குடும்பம் செல்வச்

செழிப்பில் இருந்ததால் ஜோஷிதா இங்குள்ள மற்ற குழந்தைகளைப் போல கஷ்டம் என்பதே தெரியாமல் அரிஸ்டோகிராப் தனமாய் வளர்ந்தாள். அப்பாவைப் போலவே அவளுக்கும் மருத்துவத்தில் ஈடுபாடு ஏற்பட்டு தன் விருப்பப்படி டாக்டரானாள்.

என்னதான் வெளிநாட்டில் வாழ்ந்தாலும், தங்கள் சொந்த நாட்டில் இருந்து பையனையோ, பெண்ணையோ திருமணம் செய்து வைத்தால்தான் தங்கள் குழந்தைகளுக்கு பாதுகாப்பு என்று எண்ணும் பெரும்பான்மை பெற்றோரைப் போலவே பரசுராமன் தம்பதிகளும் நினைத்ததால் ஜோஷிதாவிற்கு இந்தியாவில் மாப்பிள்ளை தேடினார். தமிழ்நாட்டிலுள்ள உறவுகளின் மூலமாக மும்பையிலிருந்த ஹரிஷ் குடும்பத்தைப் பற்றித் தெரிய வந்தது. மும்பையில் எஞ்ஜினியரிங் முடித்து விட்டு லண்டனில் வேலை தேடிக் கொண்டிருந்த ஹரிஷ் அவர்களுக்கு நல்ல சாய்ஸ் என்று பட்டது. குடும்பமும் நல்ல குடும்பம் என்று கேள்விப்படவே அவர்களைத் தொடர்பு கொண்டு பேசினார். போட்டோக்கள், ஜாதகங்கள் இன்டர்நெட் மூலம் பரிமாறப்பட்டன. எல்லாம் சரியாக வந்ததும் மகளிடம் சொன்ன போது இதை எதிர்பார்த்திராத ஜோஷிதா திகைத்துப் போனாள்.

''அப்பா நான் என்னுடைய துறையில் எதையாவது சாதித்த பிறகு தான் திருமணத்தைப் பற்றி யோசிக்க வேண்டும்'' என்றாள்.

''கண்டிப்பாய் சாதிக்கலாம். திருமணத்திற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?'' என்றாள் கீதா.

''அம்மா, உனக்குப் புரியவில்லையா? என் கவனம் சிதறக் கூடும். என் வேலைகளுக்கு நடுவே இன்னொரு



வருக்காக நேரம் ஒதுக்க வேண்டும். அவனை கவனிக்கப் புரிந்து கொள்ள, என்னை அவனுக்குப் புரிய வைக்க முயற்சிக்க வேண்டும். இப்போது அதற்கான மனநிலையோ நேரமோ எனக்கில்லை.''

''ஜோஷிதா, நீ சொல்வது உனக்கே விசித்திரமாக இல்லையா? சாதிக்க வேண்டும் என்று முடிவெடுத்தவர்களுக்கு எதுவுமே தடையில்லை. எந்த வயதிலும் சாதிக்கலாம். ஆனால் திருமணம் இளமையில் செய்து கொண்டால்தான் வாழ்வை அனுபவிக்க முடியும்'' என்றாள் கீதா.

''இன்னும் இரண்டொரு வருடங்களில் நான் இளமை போய் கிழவியாகி விடுவேனா அம்மா?''

''நீ கிழவியாகாமல் இருக்கலாம். ஆனால் எங்களுக்கு வயதாகிறது இல்லையா. நாங்க எப்படியிருப்போம் என்று சொல்ல முடியாதில்லையா?'' என்றார் பரசுராமன்.

''ச்சீ, என்னப்பா பேசுகிறீர்கள்?'' என்றாள் ஜோஷிதா எரிச்சலுடன்,

''என்னதான் டாக்டராய் இருந்தாலும் ஒரு பெற்றோராய் எல்லாவற்றையும் யோசிக்கத்தான் வேண்டும்'' என்றார் பரசுராமன்.

ஜோஷிதா பதிலே பேசாமல் யோசனையில் மூழ்கியிருக்க, பெற்றோர் இருவரும் வாரக்கணக்கில், மாதக் கணக்கில் பேசி அவள் மனதை கரையாய் கரைத்தார்கள். ஹரிஷின் பெற்றோரை வரவழைத்து நிச்சயதார்த்தத்திற்கு ஏற்பாடு செய்தார்கள்.

ஜோஷிதாவின் படிப்பும் அழகும் வசதியும் பையன் வீட்டவர்களை கட்டிப் போட்டது. ஹரிஷ் முகத்தில் தெரிந்த அமைதியும் நிதானமான பேச்சிலும் ஜோஷிதாவின் பெற்றோர் திருப்தியடைந்தனர்.

நிச்சயதார்த்தத்திற்காக கிளம்பி ஹரிஷ் லண்டன் வந்ததிலிருந்து ஒரு வாரமாய் தினமும் ஜோஷிதாவும் அவனும் சந்தித்துப் பேசுகிறார்கள். ஜோஷிதா அவனுக்கு லண்டன் நகரைச் சுற்றிக் காட்டினாள். புதிதாக ஒரு நண்பனிடம் பழகுகிற சரளம் அவள் பேச்சில் தெரிந்ததே தவிர அதை மீறிய ஆர்வமோ, பரபரப்போ ஏற்படாதது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. இத்தனைக்கும் ஹரிஷ் மிக அழகாக இருந்தான். சிவந்த நிறமும், ரோஸ் நிற இதழ்களில் மென்மையான புன்னகையுமாய் நாசுக்காகப் பேசினான். அவனுக்கு ஜோஷிதாவை மிகவும் பிடித்து விட்டிருப்பதை ஒவ்வொரு செயலிலும் பேச்சிலும் காட்டிக் கொண்டான்.

''ஜோஷி'' என்ற அம்மாவின் உலுக்கலில் ஜோஷிதா திரும்பிப் பார்த்தாள். சுற்றியிருந்தவர்களின் கரவொலிக் கிடையே ஹரிஷ் அவள் விரல்களைப் பற்றி வைர மோதிரத்தை அணிவித்துக் கொண்டிருந்தான். அம்மா கொடுத்த மோதிரத்தை வாங்கி ஹரிஷ் கையில் போடும் போது இவனிடம் குறை காணும்படியாய் எதுவும் இல்லை என்ற திருப்தி ஏற்பட்டது.

விருந்து முடிந்து எல்லோரும் கலைந்து சென்ற பின் ஒரு சுப நிகழ்ச்சி முடிந்த இனிய களைப்பில் அமர்ந்திருந்த போது கீதா சொன்னாள்.

''நாம் எதிர்பார்த்த மாதிரியே பையன் நல்லவனாகத் தெரிகிறான். எனக்கு ரொம்ப சந்தோஷம்.''

''ஆனால் எனக்குத்தான் ஒரு வருத்தம்'' என்றாள் ஜோஷிதா.

''என்ன வருத்தம்?'' என்றார்கள் பெற்றோர்கள் இருவரும் ஒரே குரலில்.



''இந்தியாவில் போய் சில நாட்கள் இருந்துவிட்டு வர வேண்டும் என்று எண்ணியிருந்தேன்.''

''ப்பூ, இவ்வளவுதானா? நான் என்னவோ என்று பயந்து போனேன்'' என்றார் பரசுராமன்.

''அப்படியானால் நான் இந்தியா போகட்டுமா?'' என்றாள் ஜோஷிதா ஆர்வத்துடன்.

''எப்போது என்று சொல். ஏற்பாடு செய்யலாம்'' என்றார் பரசுராமன்.

''இன்னும் பதினைந்து நாளில் ஏற்பாடு செய்யுங்கள்.''

''எதற்கு இவ்வளவு அவசரம் ஜோஷிதா? திருமணமான பிறகு ஹரிஷுடன் போய் அவன் வீட்டிலேயே தங்கியிருக்கலாம். ஹனிமூன் போன மாதிரியும் இருக்கும். ஹரிஷும் எல்லா விதத்திலும் உனக்கு உதவியாக இருப்பான்'' என்றாள் கீதா.

''ஹனிமூன் போகும் போது என்னால் எப்படி சுதந்திரமாக இருக்க முடியும்? அதுவுமில்லாமல் இங்கு என்னுடன் வேலை செய்த ஷீலா நாயர் மும்பையில் இருக்கிறாள். அவளுடைய விடுமுறை நாளில் வசதியில்லாதவர்களுக்கு இலவச மருத்துவ உதவி செய்து வருகிறாள். அவளுடன் நானும் சில கேஸ்கள் பார்க்க வேண்டியிருக்கிறது. சிறு வயதில் நான் உங்களுடன் சில முறைகள் இந்தியா போயிருப்பதால் என்னால் அங்கே சமாளித்துக் கொள்ள முடியும்'' என்றாள் ஜோஷிதா.

''உன் ஆர்வத்தில் தவறு இல்லை. இங்கேயே கூட நீ வார இறுதி நாட்களில் ப்ரீ சர்வீஸ் செய்யத்தான் செய்கிறாய். இந்தியாவில் செய்ய நினைப்பது எனக்கும் சந்தோஷம்தான். ஆனால்'' என்ற பரசுராமனை இடைமறித்து ''வேறு எதைப் பற்றியும் யோசிக்காதீர்கள்.

அப்பா ப்ளீஸ்...'' என அவர் மோவாயைப் பிடித்து கொஞ்சினாள் ஜோஷிதா.

''இனி அவ்வளவுதான். மகள் கொஞ்ச ஆரம்பித்தால் இவருக்கு மூளையே வேலை செய்யாது'' என கீதா முணுமுணுக்க ''சரி போய் வா'' என்றார் பரசுராமன் சிரிப்புடன்.

''ஹே!'' என ஜோஷிதா துள்ளிக் குதித்து அம்மாவையும், அப்பாவையும் முத்தமிட்டாள்.

''உனக்கு ஒரு அனுபவத்திற்காகத்தான் போகிறாய் என்பதை நினைவில் வைத்துக் கொள் ஜோஷிதா. விரைவில் வந்து விடு'' என்றார் பரசுராமன் முடிவாக.

அடுத்த நாள் ஹரிஷ் 'ஹைட் டார்க்'ல் ஜோஷிதாவை சந்தித்தபோது ''அடுத்த வாரம் நான் இந்தியா கிளம்பி விடுவேன்'' என்றான்.

''நானும் தான்'' என்றாள் ஜோஷிதா.

''என்ன சொல்கிறாய்?'' என்றான் ஹரிஷ் புரியாமல்.

''நானும் இரண்டொரு வாரத்தில் இந்தியா வரப் போகிறேன்'' என்றாள் ஜோஷிதா.

''உண்மையாகவா?'' என்றான் ஹரிஷ் நம்ப முடியாமல். ''ஜோஷிதா, நம் திருமணத்திற்கு இன்னும் ஆறு மாதங்கள் இருக்கிறதே. உன்னைப் பார்க்க முடியாதே என நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். நீ என்னைவிட, அதிகமாய் கவலைப்பட்டிருப்பாய் போலும். என் பின்னாலேயே கிளம்பி வருவதென்றால் உன் அன்பு எத்தனை உயர்ந்ததாய் இருக்க வேண்டும்?'' என்றான் உணர்ச்சி வசப்பட்டு.

ஜோஷிதாவுக்குச் சிரிப்பை அடக்க முற்பட்டதில் புரையேறியது. இவன் என்ன, இத்தனை டிராமாடிக்காய் இருக்கிறான் என்று தோன்றியது. ஹரிஷ் மேலும் அவள்



அன்பைப் பற்றி ஏதோ பேசிக் கொண்டு போக தன் முக பாவத்தால் அவனை புண்படுத்த விரும்பாமல் ஜோஷிதா பார்வையைத் திருப்பினாள். ஸ்பீக்கர்ஸ் கார்னரில் நின்று ஒருவன் உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்தான். சுற்றிப் பார்க்க வந்தவர்களும் நடப்பவர்களுமாக ஒரு சிலர் நின்று அவன் பேச்சை கவனித்துக் கொண்டிருந்தனர். ஜோஷிதாவைப் பார்த்த ஹரிஷ், அவள் பார்வை சென்ற இடத்தைப் பார்த்ததும் ''அங்கே பேசுவது யார்?'' என்றான் அவளிடம்.

''யார் வேண்டுமானாலும் அங்கே நின்று பேசலாம். பேச்சாளர்களுக்கென்றே ஏற்படுத்தப்பட்ட இடம் அது. ஸ்பீக்கர்ஸ் கார்னர் என்பார்கள். வின்ஸ்டன் சர்ச்சில் போன்றவர்கள் இங்குதான் முதலில் பேசிப் பழகினார்கள். யாரும் எதைப் பற்றி வேண்டுமானாலும் இங்கு நின்று கொண்டு பேசலாம். அரச குடும்பத்தினரைப் பற்றிப் பேசக்கூடாது என்பது இங்கு எழுதப் படாத விதி.''

''அப்படியானால் இங்கு யாருமே அரச குடும்பத்தைப் பற்றிப் பேச மாட்டார்களா?'' என்றான் ஹரிஷ் வியப்புடன்.

''அங்கே பார்த்தாயா? அந்த பேச்சாளன் சிறிய பெட்டி மீது நின்று கொண்டு பேசுகிறான்! இங்கு பேசுபவர்கள் இதன் மீது நின்றுதான் பேச வேண்டும். அதாவது இந்த பிரிட்டிஷ் மண்ணில் கால் வைத்துக் கொண்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தையோ, மன்னர் பரம்பரையைப் பற்றியோ பேசக்கூடாது என்பது மரபு.''

''ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இந்தியாவில் பேச்சு சுதந்திரம் மிகவும் அதிகம். யாரும் யாரைப் பற்றியும் விமர்சிக்கத் தயங்குவதே கிடையாது. இந்திய கடவுள்கள்

கூட விமர்சனத்திற்கு உட்பட்டவர்கள்தான்'' என்றான் ஹரிஷ்.

பிறகு அரசியல், பொருளாதாரம் என பேச்சு திரும் பியது. ஜோஷிதா வீட்டிற்குக் கிளம்புகையில் ஹரிஷ் சொன்னான். ''புதிதாகத் திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்கள் தனிமையில் சந்திக்கும்போது அரசியல் தான் பேசுவார்கள் என்பதை இப்போதுதான் தெரிந்து கொண்டேன்.''

ஹரிஷின் ஆர்வம் நியாயமானதுதான் என்ற போதும் அவனுக்குத் தகுந்த பதிலளிக்க முடியாத ஜோஷிதா சொன்னாள் ''எதைப் பற்றிப் பேசினோம் என்பது முக்கியம் அல்ல ஹரிஷ். என்ன தெரிந்து கொண்டோம் என்பதுதான் முக்கியம்.''

''அப்படியானால் என்னைப் பற்றி என்ன தெரிந்து கொண்டாய் ஜோஷிதா?'' என்றான் ஹரிஷ் ஆவலுடன்.

''இன்னும் பேசவும் புரிந்து கொள்ளவும் சமயம் நிறைய இருக்கிறது. நான் வரட்டுமா?'' எனக் கிளம்பி னாள் ஜோஷிதா.

ஜோஷிதா அடுத்து வந்த நாட்களில் மிகவும் பிசி யாக இருந்தாள். இந்தியன் எம்பஸியில் விசாவுக்கு விண் ணப்பித்து விட்டு தன் மருத்துவப் பணிகளை முடித்துத் தருவதில் மும்முரமானாள். அந்த மருத்துவமனை தலை வரிடம் தான் சிறிது நாட்கள் இந்தியா போய் விட்டு வரப் போவதைச் சொன்னதும், ''உனக்கு நிச்சயம் வித்தியாச மான எக்ஸ்பீரியன்ஸ் கிடைக்கும். நம்முடைய மருத்துவ பணி புனிதமானது. எங்கே செய்தாலும் உன் வேலை யின் முக்கியத்துவம் உணர்ந்து நடந்து கொள்'' என்றார் கைகளைக் குலுக்கி.



ஹரிஷ் தான் கிளம்பும் நாள் நெருங்கி விட்டதாக தினமும் போன் செய்தான். வேலை பளுவினால் அவனை ஒரு வாரமாக அவளால் சந்திக்க முடியவில்லை. கடைசி யாகக் கிளம்புகிற நாள் அன்று பேசிய அவன் ''இன்று மதியம் இரண்டு மணிக்கு ப்ளைட் வழியனுப்பவாவது வருவாயா?'' என்றான் கெஞ்சலாக.

''மதியம் ஒரு முக்கியமான ஆபரேஷன் இருக்கிறது'' என ஜோஷிதா சொன்னதும், ''அப்ப வர முடியாதா?'' என்றான் ஹரிஷ் ஏமாற்றத்துடன்.

''ஹரிஷ் ஆபரேஷனுக்கான தேதி எல்லாம் பல நாள் முன்பே முடிவு செய்யப்பட்டு விடும். ஆப்ரேஷன் தியேட் டரும், நர்ஸ், சக டாக்டர்கள் எல்லோரும் தயாராய் இருக் கையில் உயிருக்கு ஆபத்தான நோயாளியை விட்டு விட்டு நான் அங்கு வருவது சரியா? நீயே யோசி.''

ஹரிஷ் யோசித்தானா அல்லது கோபப்பட்டானா தெரிய வில்லை, பதிலே பேசவில்லை. அதற்குள் ''டாக்டர்'' என்ற படி ஒரு நர்ஸ் வரவே ''நான் அப்புறமாய் பேசுகிறேன் ஹரிஷ்'' என்று ஜோஷிதா போனை வைத்தாள்.

மாலை வரை வரிசையாக காத்திருந்த வேலைகளில் மதியம் அவர்களுக்கு போனில் விடை கொடுக்கக் கூட மறந்து போனாள். இரவு வீட்டில் சாப்பிடும் போது அம்மா சொன்னதும் தான் நினைவு வந்தது.

''ஹரிஷ் பாவம் நீ. எப்படியும் வழியனுப்ப வந்து விடு வாய் என்று ப்ளைட் கிளம்பும் வரை காத்திருந்தான்.''

''நீங்க போனீங்களா?'' என்றாள் ஜோஷிதா.

''ஆமாம். நானும் அப்பாவும் போயிருந்தோம். ஹரி ஷின் பெற்றோர் திருப்தியாகத்தான் கிளம்பிப் போனார் கள். ஹரிஷ்தான் வாடிப் போய் இருந்தான். அட்லீஸ்ட்

போனிலாவது அவனுக்கு சந்தோஷப்படும் படியாய் பேசியிருக்கலாம்.''

''நான் காலையில் அவன் போன் செய்த போதே என்னால் வர முடியாது என்று விளக்கினேன். உங்களுக்குத் தெரியாததில்லை. என் வேலை அப்படி.''

''உண்மைதான். ஆனால் வருங்கால மனைவியைப் பிரிந்து போகையில் அவன் வருந்துவதும், வழியனுப்ப அவள் வரவேண்டும் என்று எதிர்பார்ப்பதும் நியாயமானதில்லையா ஜோஷிதா?''

''சே! இதற்காகத்தான் நான் இப்போது திருமணமே வேண்டாம் என்றேன்'' ஜோஷிதா பாதி சாப்பாட்டில் கையைக் கழுவிக் கொண்டு எழுந்தாள்.

''இப்போ நான் என்ன சொல்லிவிட்டேன்'' என்று கீதா திகைக்கவும், ''நீ டயர்டாக இருப்பாய். போய் படும்மா'' என்றார் பரசுராமன் மகளிடம்.

அவள் தலையை அசைத்து விட்டு தன் அறைக்குச் சென்றதும், ''ஜோஷிதாவைக் கொஞ்சம் விட்டுத்தான் பிடிக்க வேண்டும் கீதா'' என்றார் பரசுராமன். ''இப்போது அவளது கவனம் பூராவும் அவளது வேலையில் தான் இருக்கிறது. நான் கூட நம் திருமணத்தின் போது எந்த பரபரப்பும் இல்லாமல் ஒரு கடமையைச் செய்கிற மனோ நிலையில் தான் உன் கழுத்தில் தாலி கட்டினேன். பிறகு எல்லாம் மாறிவிட வில்லையா? இப்போது நீ கூட உட்காராமல் இந்த சாப்பாடே உள்ளே இறங்க மாட்டேன் என்கிறது. அது போலத்தான் ஒருவருக்கொருவர் நெருக்கமாய் பழகி சேர்ந்து வாழும்போது வித்தியாசங்கள் மறைந்து விடும். அன்பும் ஆர்வமும் தானாய் ஏற்படும்.''



''நீங்கள் சொல்வது உண்மைதான்'' என்றாள் கீதா முகம் தெளிவுற.

''ஜோஷியின் இந்திய பயணமும் அவளைத் திருமணத்திற்கு தயார் செய்யக் கூடும்'' என்றாள் யோசனையுடன்.

''நிச்சயமாய்'' என்றார் பரசுராமன்.

காலையில் கீதாவும், பரசுராமனும் தங்கள் வழக்கம் போல பரபரத்துக் கொண்டிருந்தார்கள். நிதானமாய் எழுந்து வந்து ''அம்மா டீ'' என்றபடி அன்றைய நியூஸ் பேப்பரை பிரித்தாள் ஜோஷிதா.

மகளிடம் லெமன் டீயை கொடுத்து விட்டு ''ஜோஷிதா லஞ்ச் பாக்ஸில் இருப்பதை மதியம் மைக்ரோ அவனில் சுட வைத்துக் கொள். இப்போது சாப்பிட....'' என்றவளிடம் குறுக்கிட்ட ஜோஷிதா ''நான் பார்த்துக் கொள்கிறேன் அம்மா. எனக்கு பசிக்கு சாப்பிடத் தெரியாதா?'' என்றாள்.

''தெரியும்தான். ஆனால் எடுத்து சூடு பண்ணி சாப்பிட சோம்பல் பட்டுக் கொண்டு ப்ரெட்டுடன் உணவை முடித்து விடுவாய். அதனால்தான் சொன்னேன்'' என்றபடி கீதா கணவருடன் கிளம்பிப் போனாள். செல்வநிலை பெருகிய பின்பும் கீதா தான் பார்த்து வந்த வேலையை விடாமல் செய்து வந்தாள். பரசுராமன் ஒரு பெரிய மருத்துவமனையின் தலைமை டாக்டர்களில் ஒருவராகவும், அதன் பங்குதாரர்களில் ஒருவராகவும் ஆன பிறகு கீதா அந்த மருத்துவமனையிலேயே மேனேஜ்மென்ட் பிரிவில் வேலை பார்க்கத் தொடங்கினாள். ஆனால் பெற்றோர்களின் நிழலிலேயே செயல்படாமல் தன்னிச்சையாக செயல்பட வேண்டி ஜோஷிதா வேறு ஒரு பெரிய மருத்துவமனையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள்.

பெற்றோர் கிளம்பிப் போனதும் ஜோஷிதா டி.வி.யை ஆன் பண்ணி விட்டு சோபாவில் அமர்ந்ததும் டெலி போன் ஒலித்தது. ''ஹலோ ஜோஷிதா'' என்றான் ஹரிஷ் போனில்.

ஓ! இவன் போய் பத்து நாட்கள் ஆயிற்று என்று அப்போதுதான் அவளுக்கு நினைவு வந்தது. ஜோஷிதா வழியனுப்ப வரவில்லை என்ற கோபத்தில் இரண்டொரு நாள் இருந்தவன் பிறகு தானாய் கோபம் தீர்ந்து போன் செய்தான். சொல்லி வைத்தாற் போல் அவன் போன் செய்யும் போதெல்லாம் அவள் போனை சைலண்டில் வைத்து விட்டு மருத்துவமனையில் இருக்கும் நேரமாகவோ, இரவு தூங்கும் நேரமாகவோ இருக்கும். மிஸ்ட் கால் பார்த்ததும் பேச வேண்டும் என்று நினைப்பாள். அடுத்தடுத்த வேலைகளில் பிறகு மறந்தே போய்விடும்.

''ஹரிஷ், எப்படியிருக்கிறாய்?'' என்றாள் ஜோஷிதா அவனிடம். அவள் குரலைக் கேட்டதும் அவன் மகிழ்ந்து போனது வெளிப்படையாகத் தெரிந்தது. ''ஜோஷிதா, உன்னைப் பார்த்து எத்தனை நாள் ஆயிற்று தெரியுமா?'' என்றான் ஒரு பெருமூச்சுடன்.

''பத்து நாட்கள் ஆகிறது'' என்றாள் ஜோஷிதா.

''அவ்வளவுதானா? எனக்கு பல வருடங்கள் ஆனது போலிருக்கிறது. இத்தனை நாள் உன்னைப் பார்க்காமல் எப்படி உயிர் வாழ்ந்தேன் என்றே தெரியவில்லை. எனக்கு மட்டும் இறக்கைகள் இருந்தால் இந்நேரம் பறந்து வந்திருப்பேன்'' - என அவன் பேசிக் கொண்டே போகையில் 'ஓ! இவன் உளறுகிறான்' என்று அவளுக்கு சலிப்பு தட்டியது.



''மும்பை எப்படியிருக்கிறது ஹரிஷ்? உன் பெற்றோர்கள் நலமா? உன் தம்பி எப்படிப் படிக்கிறான்?'' என்றாள் ஜோஷிதா பேச்சை மாற்றும் விதமாய்.

''எல்லாரும் எல்லாமும் நலம். என்னைத் தவிர'' என்றான் ஹரிஷ்.

'இவன் விட மாட்டான் போலிருக்கிறதே' என்றாள் ஜோஷி தனக்குள். ''என்ன ஜோஷிதா அமைதியாகி விட்டாய்? எதாவது பேசு. உன் குரலை கேட்காவிட்டால் எனக்குப் பைத்தியமே பிடித்து விடும்'' என்றான் ஹரிஷ்.

ஒரு நிமிடம் தயங்கிய ஜோஷிதா. அவன் மனம் புண்படாத வண்ணம் பேசிவிட்டு போனை வைத்தாள். ஹரிஷின் தவிப்பும், ஏக்கமும் தன்னை பெரிதாக பாதிக்காததற்கு காரணம் கலாச்சார முரண்பாடுகளாய் இருக்கக்கூடும் என்று தோன்றியது. பிரிட்டிஷ் சமூகத்தில் ஆண் பெண் உறவு மிக வெளிப்படையானது. பெண்ணை கவர்ந்திழுக்க ஆண் எந்த சாகசமும் செய்ய வேண்டியதில்லை. ஆணின் ஐஸ்க்ரீம் பேச்சில் எந்தப் பெண்ணும் உருகுவதில்லை. திருமணத்திற்கு முன்பே தான் விரும்பிய ஆணுடன் சேர்ந்து வாழ்வதும் நடக்கத்தான் செய்கிறது. ஆனால் தனக்கு பிரியமில்லாதவனை பணத்திற்காகவோ, மற்ற காரணங்களுக்காகவோ மணந்து கொள்ள மாட்டார்கள்.

மனதுக்குப் பிடித்தவனிடம் மட்டுமே உறவு கொள்ளும் அவர்கள் அவனை பிடிக்காதபோது பிரிந்து செல்லவும் தயங்க மாட்டார்கள். நட்பையும் காதலையும், கல்யாணத்தையும் இங்கு மனம் சம்பந்தப்பட்ட விஷயமாகவே பார்க்கிறார்கள். ஆனால் பண்பாட்டிலும், கலாச்சாரத்திலும் சிறந்தது எனப்படும் இந்தியாவில் மனதை

பின்னிருத்தி மணப்பவரால் கிடைக்கும் வாழ்க்கை வளங்களை அடிப்படையாகக் கொண்டே திருமணங்கள் நடக்கின்றன. முன் பின் பார்த்துப் பேசி அறியாதவன் என்றாலும் வசதி வாய்ப்புள்ளவனை இந்தியப் பெண்கள் புறக்கணிப்பதில்லை என்று ஜோஷிதா கேள்விப்பட்டிருந்தாள். ஹரிஷின் பேச்சு கூட தனக்கு மிகையாகத் தெரிவதற்கு இருவரும் வளர்ந்த வெவ்வேறு சூழ்நிலைகளே காரணம் என்று தோன்றியது.

மாலையில் ஜோஷிதாவைப் பார்க்க அவளுடன் பணிபுரியும் தோழி பாமெலா வந்திருந்தாள். ''ஜோஷிதா உன்னுடன் பேச வேண்டும். நாம் வெளியே போய் வரலாமா?'' என்றதும் ஜோஷிதா அவளுடன் கிளம்பிப் போனாள்.

கார் சிறிது தூரம் போனதும் ''எங்கே போகலாம்?'' என்றாள் பாமெலா.

''உனக்கு எங்கே தோன்றுகிறதோ, அங்கே.''

''ஓகே. சும்மா ஒரு ரைட் போகலாம்'' பாமெலா ஸ்டியரிங்கை திருப்பினாள். கார் ரஸ்ஸல் ஸ்ட்ரீட் போய் புகழ் பெற்ற ரஸ்ஸல் ஸ்கொயரைத் தாண்டி முன்னால் நகர்ந்தது. எதிரிலிருந்த கட்டிடத்தையும், அதை ஒட்டியிருந்த பார்க்கையும் கடக்கையில் பார்க்கின் நடுவே இருந்த சிலையைக் காண்பித்த பாமெலா, ''இந்த சிலை ஒரு இந்தியருடையது இல்லையா? மனித இனத்துக்கு அகிம்சையை போதித்தவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றாள்.

''இவர் பெயர் மகாத்மா காந்தி. இந்தக் கட்டிடம்தான் அவர் படித்த கிங்ஸ் காலேஜ். அவர் அகிம்சையை போதித்தது பெருமைக்குரியதல்ல பாமெலா. எந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தை எதிர்த்துப் போராடினாரோ,



அந்த நாட்டிலேயே அவருக்கு சிலை வைக்கப் பட்டிருப்பது மிக மிக பெருமைக்குரியது. ஒவ்வொரு இந்தியனும் இந்த சிலையை கடக்கையில் தலை நிமிர்ந்து செல்வதை நான் பார்த்திருக்கிறேன்.''

பாமெலா சிறிய வியப்புடன் அவளைப் பார்த்தாள். ''நீ இங்கேயே பிறந்து வளர்ந்தவள் இல்லையா? இந்தியா மீது உனக்கு இருக்கும் அபிமானம் ஆச்சரியமாக இருக்கிறது.''

''நான் இங்கே பிறந்ததால் இது என் நாடுதான். ஆனால் என் வேர்கள் இந்தியாவிலும் கிளைகள் லண்டனிலும் விரிந்திருக்கின்றன. என் பெற்றோர்கள் வேலை நிமித்தம் இங்கு வசிக்க நேர்ந்த இந்தியரின் மனோநிலையிலேயே இருப்பதால் என்னையும் இந்தியா பற்றி சொல்லியே வளர்த்தார்கள்'' என்றாள் ஜோஷிதா.

''நீ எப்போது இந்தியா கிளம்புகிறாய்?'' என்றாள் பாமெலா.

''சரியாக இன்னும் பதினொரு நாட்களில்.''

''நான் உன்னை ரொம்ப மிஸ் செய்வேன் ஜோஷிதா.''

''நான் சொல்வது தற்காலிகமாகத்தான்'' என்ற ஜோஷிதா ''எனக்கு ஒரு ஜோடி ஷூவும் சில காஸ்மெட்டிக் ஐட்டங்களும் வாங்க வேண்டும்'' என்றாள்.

''டன்'' என்றபடி லண்டனின் மிக புகழ்பெற்ற கடை வீதியான ஆக்ஸ்போர்ட் ஸ்ட்ரீட்டுக்குள் சென்றார்கள். அழகிய நகரத்தைப் போல் பரந்திருந்த ஆக்ஸ்போர்ட் ஸ்ட்ரீட் சொர்க்கலோகம் போல் காட்சியளித்தது. அங்கு தேவையானவற்றை வாங்கிக் கொண்டு டவர் ப்ரிட்ஜ் வந்தார்கள். காரிலிருந்து இறங்கி சுவாரஸ்யத்துடன் வேடிக்கை பார்த்தபடி ப்ரிட்ஜ்ஜின் மேல் நடந்தார்கள்.

கீழே ஓடிக் கொண்டிருந்த தேம்ஸ் நதி அந்த நகரத்துக்கே அழகு சேர்த்துக் கொண்டிருந்தது. நதியின் அசைவுக்கு ஏற்ப அசைந்து கொண்டிருந்த உல்லாசப் படகுகள் பார்க்க மிகவும் ரம்மியமாக இருந்தது. சூழ்நிலையில் மனதை பறிகொடுத்து அவர்கள் நின்றிருந்த போது பெரிய கப்பல் ஒன்று பாலத்தை நெருங்கியது. பாலத்தின் இருபுறமும் திறந்து கப்பலுக்கு வழி விட்டது. கப்பல் கடந்ததும் பாலம் தானாய் மூடிக் கொள்ளவும் ஜோஷிதாவுக்கு ஹரிஷ் சொன்னது நினைவுக்கு வந்தது. தமிழ்நாட்டில் ராமேஸ்வரத்தில் கூட இதே போல கப்பல் செல்ல வசதியாய் திறந்து மூடிக் கொள்ளும் பாலம் இருக்கிறது என்றான்.

இந்தியாவை இருநூறு வருடங்கள் ஆண்டவர்கள் தங்கள் நாட்டில் இருப்பதைப் போலவே காலனி ஆதிக்கத்திலுள்ள நாட்டில் அமைத்தது இயல்பான விஷயம் தான் என்று தோன்றியது ஜோஷிதாவுக்கு. ''ஜோஷிதா'' என்ற பாமெலாவின் குரலில் கலைந்து திரும்பினாள் ஜோஷிதா.

''நான் திருமணம் செய்து கொள்ளலாம் என்றிருக்கிறேன்'' என்றாள் பாமெலா முன்னறிவிப்பின்றி.

''அப்படியா? நல்ல விஷயமில்லையா இது?'' ஜோஷிதா அவள் கைகளைப் பற்றிக் குலுக்கினாள். ''இத்தனை நேரம் இந்த விஷயம் சொல்லவா ஊரையே சுற்றினாய்? சரி, மாப்பிள்ளை யார்?''

''நம் மருத்துவமனையில் கார்டியாலஜி டிபார்ட்மென்டின் சீப் டாக்டர் ஸ்டீவர்ட் இருக்கிறார் இல்லையா?''

''ஆமாம். அவருடைய மகனா?''

''இல்லை. அவரேதான்.''



''என்னது?'' ஜோஷிதாவுக்கு தூக்கி வாரிப் போட்டது.

''ஆமாம். நான் ஸ்டீவர்ட்டைத்தான் மணந்து கொள்ளப் போகிறேன்.''

''பாமெலா, அவருக்கு உன் அப்பா வயதாகிறது. அது மட்டுமில்லாமல் அவருக்கு திருமணமாகி வளர்ந்த பையன், பெண்கள் உண்டு.''

''சோ வாட்? அவர்களுக்கும் எனக்கும் என்ன சம்மந்தம்? நான் ஸ்டீவர்ட்டைத்தான் காதலிக்கிறேன்.''

''அவரும் இதற்கு ஒத்துக் கொண்டாரா?''

''முதலில் ஆர்வம் காட்டவில்லை. நான் தொடர்ந்து பேசி என் அன்பையும் காதலையும் புரிய வைத்த பிறகு புரிந்து கொண்டார். இப்போது சொல்கிறார். 'இத்தனை நாளாய் தான் காதல் என்றால் என்ன என்பதையே அறிந்திருக்கவில்லை. உன்னோடு பழகிய பின்புதான் அதன் பொருள் தெரிந்தது என்று.'''

''அவருடைய மனைவியும், குழந்தைகளும் உங்களது பழக்கத்தை எப்படி எடுத்துக் கொண்டார்கள்?''

பாமெலா தோள்களைக் குலுக்கினாள். ''அவர் என்னிடம் அதைப் பற்றி எதுவும் சொல்லவில்லை.''

''உங்களது திருமணத்திற்கு அவர்களது சம்மதம் முக்கியமில்லையா?

''கணவன் வேறொரு பெண்ணை நேசிப்பதை தன் மானமுள்ள எந்த பெண்ணும் விரும்ப மாட்டாள். அவரிடமிருந்து விலகி விடுவாள். ஸ்டீவர்ட் மனைவியும் இதற்கு விதிவிலக்கல்ல.

''இதனால் அவர்கள் பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படாதா?''

''எதற்காக பாதிக்க வேண்டும்?'' பாமெலா படபடத்தாள். ''குடும்பம் என்ற அமைப்பில் வசிக்க நேர்ந்த போதும் நாம் அடிப்படையில் தனித்தனி மனிதர்கள். நம் விருப்பங்கள், லட்சியங்கள் எல்லாம் வேறு. நம் நாட்டில் மாணவர்களுக்கு படிப்பு இலவசம். மருத்துவ செலவு இலவசம். படித்து முடித்ததும் வேலையில் அமரும் வரை அரசு அளிக்கும் சலுகை தொகை என இத்தனை வசதிகள் இருக்கும்போது அந்த குழந்தைகளுக்கு எந்த பாதிப்பும் இருக்காது. என் பத்தாவது வயதில் என் அம்மா கூட என் அப்பாவை விட்டுப் பிரிந்து விட்டாள். அது என்னை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை.''

''இல்லை பாமெலா அந்த பாதிப்பு உன் மனதில் இருக்கிறது. அதனால் தான் உன் வயதுக்கும் தோற்றத்துக்கும் சற்றும் பொருத்தமற்ற ஒருவரை நீ தேர்ந்தெடுத்திருக்கிறாய்'' என்றாள் ஜோஷிதா.

''காதல் விசாலமானது ஜோஷிதா. அது பணம், பதவி, வயது, திருமணம் ஆனவரா இல்லையா என்றெல்லாம் பார்த்து வருவதில்லை.'' ஜோஷிதா பதில் சொல்லாமல் புன்னகைத்தாள். இதே போல் தீவிரமாய் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட அவள் தோழிகள் சிலர் சில வருடங்களில் அதே போன்ற தீவிர வெறுப்புடன் விலகிப் போனதை அவள் பார்த்திருக்கிறாள். விருப்போ, வெறுப்போ எல்லாவற்றிலும் இவர்களுக்கு வேகம் அதிகம் என்று தோன்றியது.

ஜோஷிதாவை அவள் வீட்டில் இறக்கி விடுகையில் பாமெலா சொன்ன ''தவறோ, சரியோ நல்லதோ கெட்டதோ எதுவாயிருந்தாலும் நீதான் என் பெஸ்ட் ப்ரண்ட்.''

''அது எனக்குத் தெரியும் பாமெலா'' என்றாள் ஜோஷிதா அவள் கைகளைப் பற்றி.



''ஜோஷிதா எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டாயா?'' என்றார் பரசுராமன் பத்தாவது முறையாக.

அவர்கள் ஹித்ரு விமான நிலையத்தில் நின்றிருந்தார்கள். உலகிலேயே அதிகமான மக்கள் பயணம் செய்யும் அந்த விமான நிலையம் அவர்கள் கவனத்தை ஈர்க்கவில்லை. மாறாக மகளை பிரியப் போகும் கவலையில் இருந்தார்கள். பரசுராமன் தம்பதிகள் அவர்கள் வாடிய முகம் ஜோஷிதாவின் மனதையும் வருத்த, ''நான் எங்கே போய் விடப் போகிறேன்? இன்னும் இரண்டொரு மாதத்தில் வந்து விடப் போகிறேன்'' என்றாள் அம்மாவையும் அப்பாவையும் அணைத்தபடி.

''உனக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை. என்றாலும் கவனமாக நடந்து கொள்'' என்றார் பரசுராமன் தன்னை சமாளித்துக் கொண்டு,

''மும்பை ஏர்போர்ட்டுக்கு ஹரிஷ் உன்னை அழைத்துப் போக வருவான். சென்னையிலிருக்கும் நம் உறவினர்களின் முகவரி எல்லாம் ஹேண்ட் பேக்கில் இருக்கிறது. அவர்களை ஒரு முறை போய் பார். உன் வேலை முடிந்ததும் தாமதிக்காமல் லண்டன் திரும்பி விடு'' என்றாள் கீதா மகளை அணைத்தபடி.

இருவர் கண்களும் கலங்கிப் போயிருக்க, வாய் அதை மறைக்க தன் போக்கில் பேசிக் கொண்டிருந்தது. ஜோஷிதா படிக்கும் சமயத்திலேயே இத்தாலி, ரோம் என பலமுறை பெற்றோரை பிரிந்து போய் வந்திருக்கிறாள். அப்போதெல்லாம் அவர்கள் இப்படி கலங்கி அவள் பார்த்ததில்லை. எனவே, ''அம்மா, என்ன இது? எதற்காக இப்படி கவலைப்படுகிறீர்கள்? என்னை நான் பார்த்துக் கொள்வேன் என்ற நம்பிக்கை இல்லையா உங்களுக்கு?

அப்பா, வெளி தேசங்களுக்கு எல்லாம் தயங்காமல் அனுப்பி வைத்தீர்கள். உங்கள் நாட்டுக்கு அனுப்ப ஏன் இத்தனை கவலைப்படுகிறீர்கள்? நான் முடிந்தவரை விரைவாக திரும்பி வந்து விடுவேன். நீங்கள் இருவரும் உங்கள் உடம்பை கவனித்துக் கொள்ள வேண்டும். சந்தோஷமாக இருக்க வேண்டும். சரியா?'' என பலவாறாக சமாதானம் கூறிவிட்டு ஜோஷிதா கிளம்பினாள்.

டிராலியை தள்ளியபடி செக்யூரிட்டி செக்கிற்குள் நுழைந்து திரும்பிப் பார்த்தபோது, விமான நிலையத்தின் கண்ணாடி கதவுகளுக்கு வெளியே பெற்றோரின் உருவம் மங்கலாகத் தெரிந்தது.



## 2

மும்பை விமான நிலையத்தில் ஜோஷிதாவை வரவேற்க ஒரு கூட்டமே வந்திருந்தது. ஹரிஷின் பெற்றோருடன், நண்பர்கள், உறவினர்கள் என ஒரு பெண் பார்க்கும் படலத்திற்கான முஸ்தீபுகளுடன் வந்திருந்தனர். நீண்ட தூரப் பயணத்தில் அலுப்புற்றிருந்த ஜோஷிதா உடனடியாக அத்தனைக் கூட்டத்தை எதிர் கொள்ளும் மனோநிலையில் இல்லை.

''இது என் சித்தப்பா பெண், இது என் பெரியப்பா, இவர் ஹரிஷின் மாமா, இது...'' என வரிசையான அறிமுகத்துக்கு கைகுவித்து, புன்னகைத்து சோர்ந்து போனாள். உற்சாகத்துடன் தன் பங்குக்கு அறிமுகம் செய்ய ஆரம்பித்த ஹரிஷைப் பார்க்கையில் இங்கிதம் தெரியாதவன் என முதன் முதலாகக் கோபம் வந்தது.



''நாம் வீட்டிற்குப் போகலாமே!'' என்றாள் ஜோஷிதா ஹரிஷ் அம்மா கல்பனாவிடம்.

''வந்ததும் உன் புருஷன் வீட்டிற்குப் போகணும்னு ஆசையா'' என கல்பனா அவள் நெற்றியைத் தொட்டு திருஷ்டி கழித்தாள்.

''இருக்காதா பின்னே! கணவன் வீட்டையும் ஊரையும் பார்க்கணும்னு ஆசையில் இத்தனை தொலைவு ஓடி வந்த பெண்ணை இன்னும் இங்கேயேவா நிறுத்தி வெச்சு பேசுவது? கிளம்புங்க போகலாம்'' என்றார் ஒரு உறவுப் பெண்மணி.

''கணவன் ஊரா? என் பெற்றோர்கள் கூட இந்தியர்கள்தான். தெரியும் இல்லையா?'' என்றாள் ஜோஷிதா.

''அது அப்போ. இப்போதான் அவர்கள் லண்டன் வாசியாகி விட்டார்களோ'' என்றாள் அந்தப் பெண் விடாமல்.

''ஆனால் மனதிலும், பழக்க வழக்கங்களிலும் நாங்கள் எங்கிருந்தாலும் இந்தியர்கள்தான்'' என்றாள் ஜோஷிதா அழுத்தமாக.

அந்தப் பெண்ணின் முகம் சுருங்கிப் போக, ''நல்ல நேரம் முடிவதற்குள் வீட்டிற்குப் போகவேண்டும்'' என்ற கல்யாணசுந்தரத்தின் குரலில் எல்லோரும் சென்று வண்டியில் ஏறினர்.

வேனிலும், காரிலுமாய் முண்டியடித்துக் கொண்டு பயணிக்கையில், அதற்குப் பழக்கம் இல்லாத ஜோஷிதா, 'எதற்காக இங்கே தங்க ஒத்துக் கொண்டேன்?' என தன்னையே நொந்து கொண்டாள்.

மும்பையின் பாந்ரா பகுதியிலிருந்த ஹரிஷின் அபார்ட்மென்ட் மூன்று படுக்கை அறைகள், ஒரு ஹால், கிச்சன் என்று வசதியாக இருந்தது. ஜோஷிதாவை வாயிலில்

நிறுத்தி ஆலம் கரைத்து உள்ளே அழைத்துச் சென்றனர். ஹரிஷின் பெற்றோர் ஒரு அறையிலும், அவனும் அவன் தம்பியும் ஒரு அறையிலும் தங்கிக் கொள்ள ஜோஷிதாவுக்கு மற்றொரு அறையை ஒதுக்கியிருந்தார்கள். அறை சமீபத்தில் வெள்ளையடிக்கப்பட்டு படுக்கை விரிப்புகள் சிவந்த நிறத்தில் பளபளத்தன. ஹரிஷின் தம்பி பிரசாத் அவள் லக்கேஜ்களை கொண்டு வந்து அந்த அறையில் வைக்கவும் ''தேங்க்ஸ் பிரசாத்'' என்றாள் ஜோஷிதா புன்னகையுடன்.

ஹரிஷை விட இரண்டு வயதே சிறியவனான பிரசாத் ஒரு கூச்சப் புன்னகையுடன் தலையசைத்து விட்டு வெளியே சென்றான். ஜோஷிதா பெட்டியைத் திறந்து உடைகளை எடுத்துக் கொண்டு குளிக்கப் போனாள். குளித்து முடிந்ததும் இரவு உடையான பனியனும், கால் சட்டையும் அணிந்து தலையை துவட்டிக் கொண்டிருந்தவளின் அருகே வந்தாள் கல்பனா.

''ஜோஷிதா, நம்ம சொந்தக்காரங்க எல்லோரும் கிளம்பறாங்க. உங்கிட்ட சொல்லிட்டுப் போகணும்னு காத்திருக்காங்க'' என்றாள் அவளிடம்.

''ஸாரி ஆன்ட்டி. ரொம்ப டயர்டா இருக்கு. இன்னொரு நாள் பார்க்கலாம்'' என்றாள் ஜோஷிதா.

''இத்தனை நேரம் உன்னைப் பார்க்கக் காத்திருந்தவர்கள் வழியனுப்பக் கூட நீ வரவில்லை என்றால் மரியாதைக் குறைவாக நினைப்பார்கள்'' என்றாள் கல்பனா வற்புறுத்தலாக.

''அவர்களும் என்னை மதிக்க வேண்டும் இல்லையா ஆன்ட்டி? இத்தனை தொலைவிலிருந்து வந்திருக்கிறேன். இன்னும் ஜெட் லாக் கூட போகவில்லை. சரியான



தலைவலி வேறு. எனக்கு ஓய்வெடுக்க நீங்கள் நேரம் ஒதுக்க வேண்டும்'' என்றாள் தன் சுபாவப்படி வெளிப்படையாக.

'வந்த முதல் நாளே இப்படியா' என்ற நெருடலை தனக்குள் அடக்கியபடி ''சரிம்மா நீ ரெஸ்ட் எடு'' என கல்பனா வெளியே சென்றாள்.

அறைக்கதவைத் தாழிட்டு விட்டுத் திரும்பிய ஜோஷிதா படுக்கையின் சிவப்பு நிற சாட்டின் துணி கண்களை உறுத்த, அதை எடுத்துவிட்டு தன் பெட்டியிலிருந்த நீலநிற காட்டன் விரிப்பை விரித்து நன்றாக தூங்கிப் போனாள்.

வெகுநேரம் கழித்து ஜோஷிதா கண் விழிக்கும் சமயம் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. கதவைத் திறந்ததும் ''நல்ல தூக்கமா?'' என்றான் ஹரிஷ். ''உனக்கு பசிக்கத் தொடங்கியிருக்குமே, வா சாப்பிடலாம்.''

''நீ சாப்பிடத் தொடங்கு ஹரிஷ். இரண்டு நிமிடங்களில் நான் வந்து சேர்ந்து கொள்கிறேன்'' என்றாள் ஜோஷிதா.

''இல்லை. நீ தயாராகி வா. நாங்கள் காத்திருக்கிறோம்'' என அவன் சொல்லவும் அவசரமாய் முகத்தைக் கழுவி, முடியைத் திருத்திக் கொண்டு டைனிங் டேபிளுக்கு சென்றாள். ஹரிஷின் பெற்றோரும் தம்பியும் தனக்காகக் காத்திருப்பதைப் பார்த்தவள், ''எனக்காக நீங்கள் ஏன் பசியோடு காத்திருக்க வேண்டும்? சாப்பிட்டிருக்கலாமே!'' என்றபடி ஜக்கிலிருந்த நீரை டம்ளரில் சரித்துக் குடித்தாள்.

சாதம், குழம்பு, கூட்டு காய்கறிகள், வடை, பாயசம் என விருந்து அமர்க்களமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. தனக்கு பரிமாறிய கல்பனாவிடம்,

''நானே எடுத்துக் கொள்கிறேன். நீங்க உட்காருங்க ஆன்ட்டி'' என வற்புறுத்தி அவளை உட்கார வைத்துவிட்டு ஜோஷிதா தனக்குத் தேவையானதை தானே எடுத்துக் கொண்டாள். இரவு நேரத்தில் ஹெவியாக சாப்பிட்டுப் பழக்கம் இல்லாததால் காய்கறிகள், தயிர் சாதம், ஒரு ஸ்பூன் பாயசம் என்று உணவை முடித்துக் கொண்டவளிடம் ''என்னம்மா இது? உனக்கு டேஸ்ட் பிடிக்கலையா?'' என்றார் கல்யாணசுந்தரம்.

''அப்படி இல்லை அங்கிள். இரவு நேரத்தில் இனிப்பு, எண்ணெய் பொருட்கள் சாப்பிடுவது நல்லதல்ல. அதுவும் நான் எப்பவுமே லைட்டாகத்தான் சாப்பிடுவேன்'' என்றாள் ஜோஷிதா.

''அம்மா உனக்காக கஷ்டப்பட்டு சமைத்திருக்கிறார்கள் ஜோஷிதா. அவர்களுக்காகவாவது சாப்பிடு'' என்றான் ஹரிஷ்.

''எனக்காகவா ஆன்ட்டி இத்தனையும் சமைத்தீர்கள்?'' என்றாள் ஜோஷிதா வியப்புடன். ''முன்பே தெரிந்திருந்தால் சொல்லியிருப்பேன். எனக்காக நீங்கள் சிரமப்படவே வேண்டியதில்லை. பழங்கள், ப்ரெட், சப்பாத்தி, தயிர்சாதம் இருந்தால் போதும் எனக்கு. இனிமேல் ப்ளீஸ் எனக்காக சிரமப்படாதீர்கள்'' என கைகழுவ எழுந்து போனாள்.

அவள் பின்னாலேயே வந்த ஹரிஷ் ''உன்னால் இன்று யாரும் சரியாகச் சாப்பிடவில்லை'' என்றான் தன் கையைக் கழுவியபடி.

''ஏன்?''

''எங்களுடைய முக்கியமான கெஸ்ட் நீ. இந்த வீட்டுக்கு வரப்போகும் மருமகளும் கூட. நீ சாப்பிடாவிட்டால் எங்களால் எப்படி சரியாகச் சாப்பிட முடியும்?''



''இதென்ன முட்டாள்தனம் ஹரிஷ்! நான் விளக்கம் சொல்லிய பிறகும் இப்படிச் சொன்னால் நான் என்ன செய்வது? உனக்குப் பிடிக்காத உடையை, பழக்கமில்லாத உணவை எடுத்துக் கொள்ளச் சொல்லி யாராவது வற்புறுத்தினால் நீ செய்வாயா?''

''நிச்சயம் செய்வேன். அது நீயாக இருந்தால்.''

''எனக்காக என்றாலும் நீ ஏன் செய்ய வேண்டும்?''

''ஏனென்றால் நான் உன்னை விரும்புவதால். வாழ்நாள் முழுக்க உன்னுடன் வாழப் பிரியப்படுவதால்.''

''ரப்பிஷ். ஒருவரை பிடித்திருக்கிறது என்பதற்காக நம்முடைய தனித்தன்மையை விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.''

''தனித்தனி நபர்கள் ஒன்றிணைந்து ஒருவருக்காக ஒருவர் வாழ்வதுதான் குடும்பம் ஜோஷிதா.''

''ஒரே குடும்பம் என்பதற்காக உன் பசிக்கு நான் உணவு உண்ண முடியாது ஹரிஷ். எனக்கு அடிபட்டால் உனக்கு வலிக்காது. ப்ராக்டிக்கலாக யோசி. இது போன்ற சென்டிமென்ட்சை வளர்த்துக் கொண்டால் உனக்குள் ஆளுமை குணம் வந்துவிடும். மனைவியை தன் உடைமைப் பொருளாய் கருதி அதிகாரம் செய்யும் சராசரி ஆணாய் மாறி விடுவாய்.''

ஹரிஷ் பதில் சொல்லாமல் இருக்க, ஜோஷிதா தொடர்ந்து பேசினாள்.

''நமக்குள் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன ஹரிஷ். எண்ணத்திலும், வளர்ப்பு முறையிலும் நாம் வளர்ந்த சூழலின் தாக்கம் இருக்கிறது. இதையெல்லாம் மீறி நாம் மகிழ்ச்சியாக வாழ முடியுமா என இருவரும் யோசிக்க வேண்டும். முதலில் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.''

''நிச்சயம் மகிழ்ச்சியாக வாழ முடியும். ஜோஷிதா காதல் எனும் பசை எல்லா முரண்பாடுகளையும் சேர்த்து ஒட்டி விடும்'' என்றான் ஹரிஷ் நம்பிக்கையுடன்.

''காதலித்து மணந்தவர்களிடையே கூட வேறுபாடு வந்தால் காதல் காணாமல் போய் விடுகிறது'' என்றாள் ஜோஷிதா சிரித்தபடி.

''நீ ஏன் எப்போதும் நெகட்டிவ் ஆகவே பேசுகிறாய்? உனக்கு இந்த திருமணத்தில் விருப்பம் இல்லையா?'' என்றான் ஹரிஷ்.

''அப்படி இல்லை. நாம் இன்னும் பழகவும், புரிந்து கொள்ளவும் நிறைய நாட்கள் ஆகலாம்'' என்றாள் ஜோஷிதா.

''இனி வரும் நாட்கள் நம்முடையவை'' என்றான் ஹரிஷ் தலையைத் தாழ்த்தி.

ஜோஷிதா தான் வந்து சேர்ந்த தகவலை தன் பெற்றோருக்கு தெரிவித்த பின், மும்பையிலுள்ள தன் தோழி ஷீலா நாயருக்கு போன் செய்தாள்.

''ஜோஷிதா நீ வந்து விட்டாயா?'' என்றாள் ஷீலா உற்சாகத்துடன்.

''எங்கே தங்கியிருக்கிறாய்?''

''ஹரிஷ் வீட்டில்'' என்ற ஜோஷிதா ''ஷீலா நாம் எப்போது சந்திக்கலாம்?'' என்றாள் ஆர்வத்துடன்.

''நான் இப்போது லீலாவதி மருத்துவமனையில் இருக்கிறேன். இன்னும் இரண்டு நாட்கள் நான் ரொம்ப பிஸி. புதன்கிழமை மாலை நாம் சந்திக்கலாம்'' என்றாள் ஷீலா நாயர்.

ஷீலா நாயர் மருத்துவக் கல்லூரியில் முதுநிலை வகுப்பில் ஜோஷிதாவின் சீனியர். படிக்கும்போதே



சமூக சேவையில் நாட்டம் உள்ளவள். படித்து முடித்ததும் ஜோஷிதாவும் அவளும் ஒரே மருத்துவமனையில்தான் வேலை பார்த்தார்கள். நல்ல சம்பளம், திறமைக்கேற்ற வாய்ப்புகள், சொகுசான வாழ்க்கை சூழல் எல்லாம் இருந்தும் ஷீலா நாயரின் கவனம் முழுவதும் இந்தியாவில்தான் இருந்தது. மிக ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து, தன் கடின உழைப்பால் முன்னேறி தம்பி, தங்கைகளின் பொறுப்பைச் சுமந்தவள். அவர்கள் செட்டில் ஆனதும் யார் சொல்லியும் கேட்காமல் தன் வேலையை ரிசைன் செய்து விட்டு இந்தியா திரும்பினாள். தன்னைப் போன்ற கஷ்டப்பட்ட மக்களுக்கு உதவப் போவதாகவும் திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை என்றும் ஜோஷிதாவிடம் சொன்னாள். சொன்னபடியே இந்தியா வந்து லீலாவதி மருத்துவமனையில் பணிபுரிந்து கொண்டு, தன் செலவு போக மீதி தொகையில் ஏழைகளுக்கு மருந்து வாங்கவும், இலவச வைத்தியம் பார்க்கவும் செலவிடுவதையும் பார்க்கும்போது ஜோஷிதாவுக்கு அவள் பேரில் ஒரு மரியாதையே ஏற்பட்டது.

''ஷீலா, மருத்துவத் தொழிலே புனிதமானதுதான். அதையும் தன் நலம் கருதாமல் நீ செய்வதன் மூலம் அந்தத் தொழிலுக்கே பெருமை சேர்த்திருக்கிறாய். உன்னை நினைத்து எனக்கு உண்மையிலேயே பெருமையாக இருக்கிறது'' என்றாள் ஜோஷிதா.

''பெருமைப்படுவதுடன் நின்று விட்டால் எப்படி? எனக்கு உதவ மாட்டாயா? ஜோஷிதா? என்னுடைய நோயாளிகள் சிலருக்கு அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது. என்னுடைய வருமானத்தில் சர்ஜன்களுக்கு செலவழிக்க முடியாது. நீ ஆபரேஷன் செய்வதாக

இருந்தால்'' ஷீலா முடிக்கும் முன் ஜோஷிதா சொன்னாள். ''கண்டிப்பாக வருகிறேன். நான் லண்டனிலிருந்து கிளம்பும் போதே உனக்கு உதவி செய்யும் திட்டத்துடன்தான் கிளம்பினேன். அப்பாவிற்கும் ரொம்ப சந்தோஷம். இனி வருடம் ஒருமுறை இந்தியா வந்து என்னால் முடிந்த உதவியைச் செய்யலாம் என்றிருக்கிறேன்.''

''ரொம்ப நன்றி ஜோஷிதா. நான் இதை எதிர்பார்க்கவே இல்லை'' என்றாள் ஷீலா நாயர் மகிழ்ச்சியுடன்.

ஜோஷிதா தன் பெற்றோரிடம் பேசுகையில் தன் முடிவைச் சொன்னபோது அவர்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். ''பிறந்த நாட்டில் போய் சேவை செய்ய எங்களுக்குத்தான் சந்தர்ப்பம் கிடைக்கல. உனக்கு அந்த எண்ணம் வந்திருப்பது ரொம்ப சந்தோஷம்தான். திருமணத்திற்குப் பிறகு நீயும் ஹரிஷும் வருடம் ஒரு முறை இந்தியா போய் வரலாம். உனக்கு சர்வீஸ் பண்ணிய திருப்தியும், ஹரிஷுக்கு அவன் வீட்டிற்குப் போய் வந்த திருப்தியும் கிடைக்கும்'' என்றார் பரசுராமன்.

தன் பெற்றோர் இந்திய மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்ததற்கு, இந்தியாவுடன் தொடர்பில் இருக்க வேண்டும் என்பதும் ஒரு காரணமாய் இருக்கக்கூடும் என்று தோன்றியது ஜோஷிதாவுக்கு.

மறுநாள் ஜோஷிதா ஹரிஷின் குடும்பத்துடன் மகாலட்சுமி கோவிலுக்குச் சென்றாள். கோவிலின் உயரமான படிகளில் ஏறி, அம்மனை தரிசித்து குங்குமமும் கல்கண்டும் பிரசாதமாய் பெற்றுக் கொண்டு வெளியே வந்தனர். பிரகாரத்தில் அமர்ந்து மும்பை நகரின் துடிப்பை வேடிக்கை பார்க்கையில் கல்யாணசுந்தரம் சொன்னார்.



''ஜோஷிதா, இந்தியாவின் பொருளாதார தலைநகரம் மும்பைதான். இந்த நகரின் வளர்ச்சிக்கும், செழிப்புக்கும் காரணம் என்ன தெரியுமா? இந்த மகாலட்சுமிதான். இது மகாலட்சுமி வசிக்கும் நகரம். இங்குள்ள இத்தனை பணப்புழக்கத்திற்கு இவள்தான் காரணம்.''

ஜோஷிதா 'இல்லை' என்று தலையசைத்தாள். ''இது இந்துக்களின் நம்பிக்கை. ஆனால் இங்கு இந்தியாவிலுள்ள எல்லா மதத்தவர்களும், வெளிநாட்டினரும் கூட வசிக்கின்றனர். அவர்களும்தான் காரணம் அங்கிள். நான் மும்பையின் வரலாறைப் படித்திருக்கிறேன். ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்து வியாபாரம் செய்வதற்காக மும்பை, சென்னை போன்ற துறைமுக நகரங்களை விலைக்கு வாங்கினார்கள். ராபர்ட் கிளைவ் இந்தியாவின் வைஸ்ராய் ஆன பிறகு கொல்கத்தாவும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இந்தியாவின் மற்ற நகரங்களை விட இவை மூன்றும் அபரிதமான வளர்ச்சியடைந்திருப்பதற்குக் காரணம் ஆங்கிலேயர்கள் காலத்தில் பெரிய வளர்ச்சி பெற்றதுதான். இதற்கு முதல் காரணம் பார்சி சமூகத்தினர். பார்சிகள் பாரசீகத்தை விட்டு ஓடி வந்து இந்தியாவில் குடி புகுந்தவர்கள். இந்துக்கள் ஆங்கிலேயரை வில்லன்களாக பார்த்தபோது பார்சிகள் உடனடியாக அவர்களிடம் நட்புக் கரம் நீட்டினார்கள். அதற்கு அடுத்தது குஜராத்தின் கட்ச் பகுதியில் விவசாயம் செய்ய வாய்ப்பில்லாத குஜராத்திகளும், ராஜஸ்தான் பாலைவனத்தை விட்டு வந்த மார்வாடிகளும். மார்வாடிகள் சென்னை, கொல்கத்தா என இந்தியாவின் பல பகுதிகளும் சென்று ஆங்கிலேயர்களுக்கு வியாபாரத்தில் இடைத்தரகர்களாக செயல்பட்டனர். மார்வாடி

சமூகம் இன்று இந்தியாவின் முக்கிய நகரங்களில் பரந்திருப்பதற்கு இதுதான் காரணம். பார்சி சமூகத்தின் தாதாபாய் நௌரோஜி, டாடாவும் மார்டிகளில் பிர்லா, லஷ்மி மிட்டல், குஜராத்தில் தொழில் தொடங்கிய அம்பானியும் நம் கண்ணுக்குத் தெரிந்த உதாரணங்கள்.

''ஆனால் ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்பே மாராத்தியர்கள்தான் இந்த மகாராஷ்டிராவில் வசித்தார்கள். அவர்களது பூர்வீகம் இதுதான்.'' என்றார் கல்யாண சுந்தரம் அவளுக்கு விளக்கும் விதமாக.

''உண்மைதான். ஆனால் நூற்றி ஐம்பது ஆண்டு களுக்கு முன்பு வரை இங்கிருந்த மராத்திகள் விவசாயம் தான் செய்து கொண்டிருந்தார்கள். தொழில், வியாபார வளர்ச்சி எதுவுமின்றி அப்போது மும்பை விவசாய நகரமாக இருந்தது'' என்றாள் ஜோஷிதா.

''நான் சிறு வயதிலிருந்து இங்கே வசிக்கிறேன். மும்பையைப் பற்றி எனக்குத் தெரியாத விஷயங்கள் உனக்குத் தெரிந்து விட்டிருக்கிறதே!'' என்றார் கல்யாண சுந்தரம் இனம் விளங்கா குரலில்.

வீட்டிற்குக் கிளம்புகையில் ''அப்பாவை எதிர்த்து பேசாதே ஜோஷிதா.'' என்றான் ஷரிஷ் அவளிடம்.

''நான் எதிர்த்துப் பேசினேனா?'' என்றாள் ஜோஷிதா ஒன்றும் புரியாமல்.

''ஆமாம். அப்பா சொன்னதற்கு மாறாக பதில் சொன் னால் மரியாதை குறைவாகப் பேசுவதாக நினைப்பார்.''

''மை காட் நான் மரியாதை குறைவாகப் பேசவில் லையே! அவருக்குத் தெரியாத விஷயத்திற்கு விளக்கம் சொன்னேன்.''

வீடு திரும்புகையில் ஜோஷிதா வழக்கம் போல் பேசிக் கொண்டிருக்க, பதில் வராததை உணர்ந்து திரும்பிப்



பார்த்தாள். கல்யாணசுந்தரம் இறுக்கமான முகத்துடன் ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டிருக்க, கல்பனா தூங்குகிற பாவனையில் கண்களை மூடிக் கொண்டிருந் தாள். பிரசாத் ஒரு வார இதழைப் படித்துக் கொண் டிருக்க, ஹரிஷ் தர்மசங்கடத்துடன் அவளைப் பார்த் தான். அந்த மௌனம் ஜோஷிதாவுக்கு மூச்சு முட்டு வதைப் போலிருந்தது. யதார்த்தமாய் பேசும் ஒவ்வொரு விஷயத்திற்கும் யோசிக்க வேண்டுமானால் இவர்களின் வாழ்க்கை யோசனைகளிலேயே விரயமாகி விடும் என்று தோன்றியது.

வீடு சென்றதும் கல்பனா சமையலறைக்குள் செல்ல, ''எனக்கு ஒரு கப் கூல் மில்க், ஒரு ஆப்பிள் போதும் ஆன்ட்டி'' என்று ஒரு ஆப்பிளைக் கடித்தபடி ஜோஷிதா பால்கனியில் சென்று அமர்ந்தாள்.

''அவ்வளவுதானா உங்க டின்னர்?'' என்றான் அங்கே வந்த பிரசாத்.

''நாம் சாப்பிடும் உணவு உடலுக்கு எனர்ஜியையும், ஸ்ரென்த்தையும்தான் கொடுக்கணும். வயிறு நிறைய இருந்தால் அசதியைத்தான் கொடுக்கும்'' என்றாள் ஜோஷிதா.

''இப்போது தெரிகிறது. உங்கள் புத்துணர்வின் இரக சியம்'' என்ற பிரசாத்,

''ஏன் இங்கே வந்து உட்கார்ந்து விட்டீர்கள்?'' என் றான் அவளிடம்.

''வேறு நான் என்ன செய்யட்டும்?''

புரிந்து கொண்ட பிரசாத் சொன்னான். ''ஜோஷிதா நீங்கள் பளிங்கு போல் வெளிப்படையானவர். பாசாங் கில்லாதவர். உங்களைப் புரிந்து கொள்ளும் பக்குவம்,

சம்பிரதாயங்களிலேயே ஊறிப் போன என் பெற்றோர்களுக்கு இருக்கும் என்று எதிர்பார்க்காதீர்கள்.''

''சரி, உன் அண்ணனுக்குக் கூட அந்தப் பக்குவம் இல்லையே! ஏன்?''

இதற்கு பதில் சொல்ல முடியாமல் ஒரு நிமிடம் திகைத்த பிரசாத். ''ஹரிஷ் புரிந்து கொள்ள கொஞ்சம் அவகாசம் தேவைப்படலாம்.'' என்றான் பொதுப்படையாக.

''ஹாய் ஜோஷிதா. யு வார் ஹியர்'' என்றாள் ஷீலா நாயர். அவளை ஆர்ப்பாட்டத்துடன் அணைத்துக் கொண்டு ''இத்தனை நாள் இடைவெளியில் நீ மிகவும் அழகாகியிருக்கிறாய்'' என்றாள் தொடர்ந்து.

''ஆனால் நீ மிகவும் இளைத்து விட்டாய்'' என்றாள் ஜோஷிதா.

''ஆமாம். ஓய்வில்லாத வேலைதான் காரணம். ஆனாலும் நிறைவாக இருக்கிறேன். பிறருக்கு உதவியாக இருக்கிறோம் என்பது தனி மகிழ்ச்சியைத் தருகிறது.''

ஜோஷிதாவும் ஷீலா நாயரும் சேர்ந்து அவள் ஆபரேஷன் செய்ய வேண்டிய நோயாளிகளின் பைல்களைப் பார்த்தார்கள். சிகிச்சை முறை. அறுவை சிகிச்சையை எங்கே எப்போது வைத்துக் கொள்ளலாம் என்ற விஷயங்களைப் பேசி முடிவு செய்தார்கள். ஷீலா நாயர் அவளுக்குப் பழக்கமான மருத்துவமனைகளில் ஆபரேஷன் தியேட்டரை குறைந்த வாடகையில் சிகிச்சைக்கு பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்று விசாரித்தாள். நேரம் போவது தெரியாமல் இருவரும் வேலையில் ஈடுபட்டிருக்க, ஜோஷிதாவின் செல்போன் ஒலித்தது. ''ஜோஷிதா நீ எங்கே இருக்கிறாய்?'' என்றான் ஹரிஷ் பதட்டத்துடன்.



''மாதுங்காவில் ஷீலா நாயருடன் இருக்கிறேன். நான் வரும்போது நீ வீட்டில் இல்லாததால் ஆன்ட்டியிடம் சொல்லிவிட்டு வந்தேன். என்ன விஷயம் ஹரிஷ்?''

''என்ன, சாவகாசமாய் கேட்கிறாய்? இந்த ஊருக்கு புதிதாய் வந்திருப்பவள், வீட்டிலிருந்து கிளம்பிப் போய் வெகுநேரமாகியும் திரும்பி வரவில்லை. வீட்டிலிருப்பவர்கள் எப்படி பயந்து போவார்கள் என்று யோசித்தாயா? அட்லீஸ்ட் நீ போனாவது செய்திருக்கலாம்.''

''வெய்ட்... வெய்ட்... நீ இப்படி புலம்புகிற மாதிரி எதுவும் இல்லை. மும்பை சிட்டி மேப், ரயில் வழித்தடங்கள் எல்லாம் கையில் வைத்திருக்கிறேன். பெயர் பலகைகள் ஆங்கிலத்தில் இருப்பதால் எனக்கு எந்த கஷ்டமும் தெரியவில்லை.''

''சரி, உன்னுடைய வேலை முடிந்து விட்டதா?''

''ஓ யெஸ். முடிந்து விட்டது. வீட்டிற்குத்தான் கிளம்பிக் கொண்டிருந்தேன்.''

''அங்கேயே காத்திரு. நான் வந்து அழைத்துப் போகிறேன்'' என்றான் ஹரிஷ்.

''டைம் வேஸ்ட். நீ எதற்கு வீணாய் அலைய வேண்டும்? நான் வந்து விடுகிறேன்'' ஜோஷிதா போனை வைத்ததும் ''உன் பியான்ஸிக்கு ஒரு நாள் மாலை வரை உன்னைப் பார்க்காமல் இருக்க முடியவில்லையா?'' என்றாள் ஷீலா நாயர் கிண்டலாய்.

''எனக்கு புதிய இடம் என்ற பயம்தான். என் பெற்றோரே என் மீது நம்பிக்கை வைத்து இத்தனை தொலைவு அனுப்பியிருக்கும்போது இவர்கள் ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்?'' என்றாள் ஜோஷிதா அலுப்புடன்.

"அவர்கள் கவலைக்குக் காரணம் இல்லாமலில்லை. தீவிரவாதமும், வழிப்பறியும் அதிக அளவில் நடக்கும் ஊர் இது. இங்கு ஒரு அன்டர் க்ரவுன்ட் உலகமும், அதன் தலைவர்களாக பிரபல தாதாக்களும் உண்டு'' என்றாள் ஷீலா நாயர்.

"நூறு சதவீதம் பாதுகாப்பான இடம் என்று எதைச் சொல்ல முடியும் ஷீலா? கல்லூரியில் படிக்கும்போது ரோம் நகருக்கு டூர் போய் இருந்தோம். நினைவிருக்கிறதா? அங்கு வழிப்பறியும் திருட்டும் அதிகம். தனியாகப் போகாதீர்கள் என நம் ஆசிரியர்கள் எச்சரித்திருந்தார்கள். அதையும் மீறி நம்முடன் வந்த இரண்டு மாணவர்களை போலீஸ் சீருடையில் வந்த அமெரிக்கர்கள் இருவர் உங்கள் பாஸ்போர்ட்டை பரிசோதிக்க வேண்டும் என்று அழைத்துப் போய், பணத்துடன் பாஸ்போர்ட்டையும் பிடுங்கிக் கொண்டு ஓடி விட்டார்கள். வந்த இடத்தில் பாஸ்போர்ட்டை பறி கொடுத்து விட்டு அவர்கள் தவிக்க, அவர்களால் நம்முடைய ட்ரிப் கெடக் கூடாது என அவர்களை விட்டு விட்டு நம்மை மட்டும் அழைத்துப் போனார்கள். அவர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கும் எம்பஸிக்குமாய் அலைந்து ஒரு வழியாய் டூப்ளிகேட் பாஸ்போர்ட் வாங்குகையில் நாம் டூர் முடிந்து லண்டன் திரும்பி இருந்தோம். எத்தனையோ திட்டமிட்டும், பணம் செலுத்திய பிறகும் அவர்கள் டூரை அனுபவிக்க முடியாமல் போனதற்கு ரொம்ப நாள் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள் இல்லையா?''

"ஆமாம்'' என்றாள் ஷீலா நாயர் நினைவு வந்தவளாக. "இத்தாலியிலும் ரோமிலும் வேலையில்லா திண்டாட்டம் அதிகம். அங்கு கலாச்சார விஷயங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து வந்திருப்பதால் தொழில்



துறை வளர்ச்சியடையவில்லை. ஆனால் இங்கு தொழிலும், வியாபாரமும் அபரிமிதமாய் வளர்ந்திருப்பதைப் போல் குற்றங்களும் வளர்ந்திருக்கின்றன. ஜோஷிதா, உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? டெல்லிதான் இந்தியாவின் தலைநகரம் என்பதுடன் அரசியல் நிகழ்வுகள், ஆட்சி மாற்றங்களின் களமும் அதுதான். ஆனால் நாட்டின் பிற பகுதிகளிலிருந்து டெல்லி போன அரசியல்வாதிகள் சிலர் பெரிதாக எதையும் சாதிக்காமல், சம்பாதிக்காமல் கூட திரும்பி வந்திருக்கிறார்கள். ஆனால் சாப்பிட வழியில்லாமல் மும்பைக்கு திருட்டு ரயில் ஏறிய ஒரு சாதாரண மனிதன் கூட மும்பையை விட்டுப் போகும் போது கை நிறைய பணத்தோடுதான் போவான். ஏனென்றால் மும்பையின் நிழலுலகம் யாரையும் ஏமாற்றுவதில்லை. அது ஒரு தனி அரசாங்கம்.''

"அசுரத்தனமாய் வளர்ச்சி பெற்ற எல்லா நாடுகளிலும் ஒரு நிழலுலகம் இருக்கவே செய்கிறது'' என்றாள் ஜோஷிதா.

ஜோஷிதாவின் போன் விடாமல் ஒலிக்க, "நீ எங்கே இருக்கிறாய்?'' என்றான் ஹரிஷ் பொறுமையிழந்த குரலில்.

"கிளம்பிக் கொண்டே இருக்கிறேன்'' என அவனுக்கு பதிலளித்த ஜோஷிதா, "ஷீலா வா போகலாம். இனி மேலும் தாமதித்தால் ஹரிஷ் நடந்தே ஓடி வந்து விடுவான்'' என்றாள் சிரித்தபடி.

தன் ஹேன்ட்பேக்கை தோளில் மாட்டியபடி அவளுடன் நடந்த ஷீலா நாயர் "உன் மீது மிகுந்த ரெஸ்பான்ஸிபிலிட்டி அவனுக்கு'' என்றாள்.

"எனக்கு யாரும் பொறுப்பேற்க வேண்டாம் ஷீலா. என் தனிப்பட்ட விஷயத்தில் தலையிடாமல் இருந்தால் போதும்.''

''உன்னை மணந்து கொள்ளப் போகிறவன் என்னை யில் அவனால் எப்படி தலையிடாமல் இருக்க முடியும்?''

''ஏன் முடியாது? அவனது பிரைவஸியில் நான் ஒரு போதும் குறுக்கிட்டதே இல்லை.''

''சாதாரணமாய் ஆண்களால் அப்படியிருக்க முடியாது. அதுவும் தனி மனித சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கும் மனோபாவம் இந்தியாவில் இல்லவே இல்லை. அதனால்தான் நான் திருமணமே செய்து கொள்வதில்லை என்ற முடிவுக்கு வந்தேன். என் விருப்பங்களையும், துக்கங்களையும், சந்தோஷத்தையும் வேறு ஒருவரிடம் அடகு வைக்க நான் தயாரில்லை.''

ஷீலா நாயரின் முகத்தில் தெரிந்த தீவிரம் அவளது முடிவு சரியானது தான் என்று எண்ண வைத்தது.

ஆட்டோ பிடித்து ஜோஷிதாவை பாந்ராவில் இறக்கி விட்டு பிறகு வருவதாக சொல்லி ஷீலா உள்ளே வராமல் கிளம்பினாள்.

அபார்ட்மென்ட் வாயிலிலேயே நின்றிருந்த ஹரிஷ் ''ஏன் இவ்வளவு நேரம்?'' என்றான் கவலையுடன்.

''நான் போனிலேயே உனக்கு விளக்கம் சொன்னேனே'' என்றாள் ஜோஷிதா அவனை பாராமலே.

''சொன்னாய்தான். ஆனால் தாமதமானதும் நாங்கள் எல்லோரும் ரொம்ப பயந்து விட்டோம்.''

''எதற்காக பயப்பட வேண்டும்? நீ வேலைக்குப் போகும் போதும், உன் தம்பி கல்லூரிக்குப் போகும் போதுகூட இப்படித்தான் பயப்படுவீர்களா?''

''எங்கள் பாதுகாப்பில் நீ இருக்கையில் எங்களுக்கு அந்த பயம் ஏற்படுவது இயற்கையானது ஜோஷிதா.''



''நான் மிகவும் களைத்துப் போயிருக்கிறேன் ஹரிஷ். இன்னும் எத்தனை நேரம் என்னை இப்படி வெளியே நிற்க வைத்துப் பேசப் போகிறாய்?'' என்றாள் ஜோஷிதா அலுப்புடன்.

''ஐ யம் ஸாரி. வா போகலாம்'' ஹரிஷ் சடாரென நகர்ந்து வழிவிட்டான்.

ஹாலில் அமர்ந்திருந்த கல்யாணசுந்தரமும், கல்பனாவும் எதாவது கேட்கத் தொடங்கும் முன் ''ஹலோ அங்கிள், இன்னும் ஒரு மணி நேரத்தில் டின்னருக்கு வந்து ஜாயின்ட் செய்து கொள்கிறேன்'' என்றபடி அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டாள்.

ஷீலா நாயர் ஜோஷிதா அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நோயாளிகளை சிகிச்சைக்கு தயார் செய்து வைத்திருந்தாள். ஜோஷிதா தினமும் இரண்டு அல்லது மூன்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. மாலையில் சிகிச்சை முடிந்த நோயாளிகளைப் பார்வையிட வேண்டியிருந்தது. காலையில் ஹரிஷ் வீட்டிலிருந்து கிளம்பிப் போனால் அவள் திரும்பி வர கிட்டத்தட்ட இரவாகி விடும்.

''என்னம்மா, வந்ததிலிருந்து இப்படியே ஓடிக் கொண்டிருக்கிறாய்! உன்னுடன் உட்கார்ந்து பேசக் கூட முடியவில்லை'' என்றாள் கல்பனா.

''என்ன செய்வது ஆன்ட்டி? நான் லண்டனில் இருந்த போதே பிக்ஸ் பண்ணிய அப்பாயின்ட்மென்ட்ஸ். பார்க்க வேண்டாமா?''

''எங்களைப் பார்க்கத்தான் நீ வந்திருக்கேன்னு நினைச்சேன்'' என்றாள் கல்பனா.

இதற்கு என்ன பதில் சொல்வதென்று புரியாமல் ஜோஷிதா அமைதியானாள்.

ஹரிஷ் தினமும் அவள் வேலை முடிந்து வரும் வரை காத்திருப்பான். அவள் எதையாவது சாப்பிட்டு விட்டு தூங்கப் போகும் வரை பேசிக் கொண்டே இருப்பான்.

''ஜோஷிதா, நாளை மலபார் ஹில்ஸ் போகலாமா?

''எங்க சித்தப்பா பெண்ணுக்கு பர்த்டே. நீ வரணும்னு ரொம்ப பிரியப்படறாங்க.

''இப்ப ஒரு டிரைவ் போய் வரலாமா?''

''நாளைக்குக் காலையில் ஒரு ஆபரேஷன் இருக்கிறது. நேரம் கிடைக்கும்போது போகலாம்'' என்ற ஒரே பதிலை ஜோஷிதா தினமும் சொன்னாள்.

''நீ உண்மையில் இந்தியா வருவதாகச் சொன்னதும் நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன்'' என்றான் ஹரிஷ்.

''இப்போது அந்த சந்தோஷம் இல்லையா என்ன?''

''நான் எதிர்பார்த்த அளவு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். நீ தினமும் வேலை என்று ஓடி விடுகிறாய். திரும்பி களைப்புடன் வந்து தூங்கி விடுகிறாய். திருமணம் செய்து கொள்ளப் போகிற இருவர் மத்தியில் பேசவும், பழகவும் எவ்வளவோ இருக்கும். வேலைக்கு நடுவே சிறிது நேரம் கிடைத்தாலும் உடனே பேச வேண்டும் என்று மனம் பரபரக்கும்.''

ஹரிஷ் வார்த்தைகளிலுள்ள உண்மை மனதில் பட்டது. அவன் எதிர்பார்ப்பு நியாயமானதுதான் என்றாலும் எனக்கு அந்த மாதிரி ஆர்வமோ, பரபரப்போ ஏற்படவில்லை. வேலை மீதுதான் எனக்கு காதல் என்று சொல்லத் தோன்றியது.

''என்ன ஜோஷிதா அமைதியாகி விட்டாய்?'' என்றான் ஹரிஷ்.



''சரி ஹரிஷ். வருகிற ஞாயிறு எங்காவது வெளியே போகலாம்'' என்றாள் ஜோஷிதா.

ஹரிஷின் முகம் உடனே மலர்ந்து போக, ''எங்கே போகலாம்?'' என்றான் மகிழ்ச்சியுடன்.

''எங்கே வேண்டுமானாலும் உனக்குத்தானே. உன் ஊரைப் பற்றித் தெரியும்'' என்றாள் ஜோஷிதா.

மறுநாள் ஜோஷிதா தாமதமாக கிளம்பினால் போதும் என்பதால் காலையில் இன்டர்நெட்டில் ஆழ்ந்திருந்தாள். கல்லூரிக்குத் தயாரான பிரசாத் அவளைப் பார்த்ததும்

''என்ன அதிசயமா இருக்கு? நீங்க கூட ப்ரீயா இருக்கீங்க?'' என்றான் ஜோஷிதாவிடம்.

''அது என்ன நான் கூட? நானும் மனுஷிதானே! இயந்திரமா என்ன?'' என்றாள் ஜோஷிதா.

''வந்த நாளாய் நீங்கள் ஓடிய ஓட்டத்தைப் பார்த்து மெஷின் என்றுதான் நினைத்தேன்.''

''எனக்கு லண்டனில் இத்தனை வேலை இருக்காது பிரசாத். பெரிய மருத்துவமனை, உதவிக்கு நிறைய ஆட்கள், முன்பே பதிவு செய்யப்பட்ட நோயாளிகள் என்றிருப்பதால் என்னுடைய வேலையை மட்டும் பார்த்தால் போதும். ஆனால் இங்கு உதவிக்கு அதிக ஆட்கள் வைத்துக் கொண்டு ஷீலாவால் சம்பளம் கொடுக்க முடியாததாலும், வருகிற அத்தனை நோயாளிகளையும் கவனிக்க வேண்டி இருப்பதாலும் வேலை அதிகமாகத்தான் இருக்கிறது'' என்றாள் ஜோஷிதா.

''பொதுவாக டாக்டர் தொழிலே சிரமமானதுதான். இல்லையா?''

''ஈடுபாடு இருந்தால் எதுவுமே சிரமம் இல்லை.''

''பிரசாத்'' என்றழைத்தபடி அங்கே வந்த கல்பனா

''இதோ, உன் இந்த மாத பாக்கெட் மணி. அப்பா

கொடுத்தார்'' என அவனிடம் பணத்தைக் கொடுத்தாள்.

''விலைவாசி நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. அப்பா தரும் பாக்கெட் மணி மட்டும் உயருவதேயில்லை'' என்றான் பிரசாத்.

''உன் அப்பாவிடமே கேட்டுக் கொள்'' என கல்பனா செல்ல, ''நீ ஏன் உன் அப்பாவின் பணத்தை எதிர்பார்க்க வேண்டும்?'' என்றாள் ஜோஷிதா.

''பின்னே என்ன செய்வது?''

''நீயே சம்பாதிப்பது.''

''நான் இன்னும் படிப்பை முடிக்கவே இல்லையே!''

''படித்துக் கொண்டே சம்பாதி. என்னதான் பெற்றோர்கள் என்றாலும் சொந்தச் செலவிற்கு அவர்களைச் சார்ந்திருப்பது கேவலம் இல்லையா? நான் ஆறாம் வகுப்பு படிக்கையில் அருகிலுள்ள பள்ளிக்குப் போய் வர சைக்கிள் வேண்டுமென்று என் அப்பாவிடம் கேட்டேன். என் அப்பா நூறு பாக்கெட்டுகள் சாக்லேட் வாங்கிக் கொடுத்தார்.''

''என்னதான் குழந்தையை சமாதானப்படுத்த என்றாலும் நூறு பாக்கெட்டா வாங்கித் தருவார்கள்?'' என்றான் பிரசாத் வியப்புடன்.

ஜோஷிதா சிரித்தாள். ''சாப்பிடுவதற்கு இல்லை பிரசாத். விற்பதற்கு. எங்கள் பள்ளியில் விற்பனையையும் ஒரு பாடமாக சொல்லித் தருவார்கள். எனவே என் ப்ரண்ட் பாமெலா மில்க்ஷேக் தயார் செய்வாள். இருவரும் வீடு வீடாகப் போய் விற்பனை செய்வோம்! விடுமுறை தினங்களில் பார்க்கிலும், மியூசியத்தின் வாயிலிலும் நின்று விற்பனை செய்த பணத்தில் சாக்லேட் வாங்



கியதற்கான பணத்தை என் பெற்றோரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, லாபத்தை சேர்த்து வைத்து சைக்கிள் வாங்கினோம். என் சொந்த உழைப்பில் முதன் முதலாய் வாங்கிய சைக்கிள் இப்போது சிறியதாகி விட்டாலும் இன்னும் என் வீட்டில் இருக்கிறது. அதன் பிறகு நான் சம்பாதித்து வாங்கிய விலை உயர்ந்த பொருட்கள் எத்தனையோ இருந்தாலும் அந்த சைக்கிளுக்கு உள்ள முக்கியத்துவமே தனி.''

பிரசாத் ஒரு குற்ற உணர்வுடன் தன் கையிலிருந்த பணத்தைப் பார்த்தான்.

ஜோஷிதா அவன் மனநிலையை உணர்ந்தவளாகச் சொன்னாள், ''இந்தியாவில் பார்ட் டைம் வேலை கிடைப்பது சிரமம் என்று கேள்விப் பட்டிருக்கேன். இங்கு படிப்பதற்கே அதிகம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. அதனால் அடுத்த முறை அப்பாவிடம் பணம் வாங்கும் போது, 'இது நான் உழைத்து சம்பாதித்த பணம் அல்ல' என்ற எண்ணம் உனக்கு வந்தால் போதும்.''

''நிச்சயமாக. எனக்கு இப்போதே அப்படித்தான் இருக்கிறது. என் நண்பர்கள் சிலர் சனி, ஞாயிறுகளில் பார்ட் டைம் வேலை பார்ப்பதாகச் சொன்னார்கள். அவர்களிடம் விசாரித்துப் பார்க்கிறேன். எனிவே, எனக்கு வாழ்க்கையை வேறொரு விதத்தில் பார்க்க கற்றுக் கொடுத்தீர்கள். தேங்க்ஸ்'' என்ற பிரசாத் ''எனக்கு காலேஜுக்கு நேரமாகி விட்டது'' என கிளம்பினான்.

''பிரசாத், நீ காலேஜுக்கு எப்படிப் போவாய்?''

''என் பைக்கில்தான்.''

''என்னை டிராப் பண்ண முடியுமா?''

''அதிகபட்சம் பத்து நிமிடங்களில் மேக்கப் முடிந்து தயாராவீர்கள் என்றால் முடியும்.''

''நான் மேக்கப்பே போடுவதில்லை. இப்போதே தயாராகத்தான் இருக்கிறேன்.'' என்ற ஜோஷிதா ஜீன்சின் மேலே அணிந்திருந்த குர்தாவை சரி செய்தபடி கிளம்பினாள்.

கல்பனாவிடம் சொல்லிக் கொண்டு பிரசாத்தின் பைக்கில் ஏறி அமர்ந்தாள். ஜன்னல் வழியாய் தங்களை கவனித்த கல்பனாவிடம் ''பை, ஆன்ட்டி'' என சிரித்தபடி கையசைத்தாள்.

பதிலுக்குக் கல்பனா சிரிக்கவோ, தலையாட்டவோ கூட இல்லை என்பதைக் கண்டு வியந்தபடி ஜோஷிதா பிரசாத்துடன் சென்றாள்.

''தினமும் நீங்கள் இரயிலிலா போய் வருகிறீர்கள்?'' என்றான் பிரசாத் பின்னால் வந்த வண்டிக்கு வழி விட்டபடி.

''மும்பை ரயிலிலா? நானா?'' என்றாள் ஜோஷிதா நெஞ்சைப் பிடித்தபடி. ''ஷீலாவுடன் ஒருமுறை ரயில் நிலையம் சென்றிருந்தேன். மூச்சு விட முடியாமல், சின்ன இடைவெளி கிடைத்தாலும் அதில் உடம்பை சொருகிக் கொண்டு நசுங்கியபடி செல்கிற கூட்டத்தைப் பார்த்து பயந்து போனேன். லண்டன் உலகின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்று. அங்கும் காலை நேரம் பிஸியாகத்தான் இருக்கும். ஆனால் இப்படி ஒரு கூட்டத்தை நான் பார்த்ததேயில்லை.''

பிரசாத் சிரித்தான். ''நீங்கள் சொல்வது உண்மைதான். இங்கு ஆயிரத்து எழுநூறு பேர் பயணம் செய்யக் கூடிய இரயிலில் கிட்டத்தட்ட ஆறாயிரம் பேர் பயணம் செய்வார்கள்.''

''எதற்காக அப்படிப் போக வேண்டும்?''

''நல்ல கேள்வி!'' பிரசாத்துக்கு மறுபடி சிரிப்பு வந்தது. ''மும்பையில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு



சுமார் இருபதாயிரம் பேர் வரை வசிக்கிறார்கள். மும்பை நகரம் உலகிலேயே ஜன அடர்த்தி அதிகமுள்ள நகரம் என்கிறார்கள். இதனால் ஆசியாவின் பழமையான கட்டமைப்புகளில் ஒன்றான மும்பை இரயில்வே உலகிலேயே அதிகமான பளுவைச் சுமக்கிறது. தினமும் ஐம்பது லட்சத்திற்கும் அதிகமானவர்கள் மும்பை இரயிலில் பயணிக்கிறார்கள். இந்நகரின் நரம்பு மண்டலமாய் அது இருப்பதால் தான் நகரத்தைச் சீர் குலைக்க தீவிரவாதிகள் இரயிலை தேர்ந்தெடுத்தார்கள்.''

''இதற்கு வேறு வழியே இல்லையா?''

''இல்லவே இல்லை. இந்தியாவின் வணிகத் தலைநகரமான மும்பையின் மத்திய பகுதிகளில்தான் பெரும்பாலான வணிக நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. ஆனால் இவற்றில் பணிபுரிகிற லட்சக்கணக்கானவர்கள் நகருக்கு வெளியே இருந்துதான் வருகிறார்கள்.''

''என் அலுவலகத்திற்கு அருகிலேயே வசித்தால் என்ன?''

''மும்பையில் சதுர அடி நிலம் லட்சக்கணக்கில் விலை போகையில் நடுத்தர மக்கள் நகருக்குள் வீடு வாங்குவது சாத்தியம் இல்லை. சொந்தமாக வண்டி வைத்திருப்பவர்கள்கூட நெடுந்தூரம் டிராபிக்கில் நின்று வருவதால் களைப்படைந்து போகிறார்கள். அதனால் உள்ளூர் இரயில்களின் முக்கியத்துவம் அதிகரித்திருக்கிறது. இன்றைய நிலையில் மும்பையில் பணக்காரர்களும், ப்ளாட்பாரத்தில் வசிப்பவர்களும்தான் புதிதாக குடியேற முடியும்.

ஷீலாவின் டிஸ்பென்சரி வாயிலில் பைக் நின்றது.

''தேங்க்யூ பிரசாத். உனக்கு நேரமிருந்தால் உள்ளே வா. ஷீலாவை அறிமுகப்படுத்துகிறேன்'' என்றாள் ஜோஷிதா.

''எனக்கு கல்லூரிக்குப் போக வேண்டும். இன்னொரு நாள் வருகிறேன்'' என பிரசாத் அவளிடம் விடை பெற்றுச் சென்றான்.

'ஹரிஷிடம் தன்னால் ஏன் இதுபோல பழக முடிவதில்லை?' என்று யோசித்தபடியே ஜோஷிதா. டிஸ்பென்சரிக்கு உள்ளே சென்றாள். பிரசாத் ஒரு நண்பனைப் போல் நடந்து கொண்டதால் அவனிடம் பழகுவது அவளுக்கு எளிதாக இருந்தது.

# 3

சனிக்கிழமை மதியம் ஜோஷிதாவுக்கு சற்று ஓய்வு கிடைத்தது. ஒரேயடியாக தலையை வேறு வலித்தது. வீட்டிற்கு போனால் ரெஸ்ட் எடுக்கலாம் என்று சீக்கிரமே டிஸ்பென்ஸரியிலிருந்து கிளம்பி வந்தாள்.

''என்ன ஜோஷிதா, இந்த நேரத்தில்?'' என்றாள் கல்பனா அவளைப் பார்த்ததும்.

''கொஞ்சம் தலைவலி ஆன்ட்டி. அதனால் சீக்கிரமாய் வந்து விட்டேன்.''

''தலைவலி மாத்திரை சாப்பிடுகிறாயா? அல்லது தைலம் வேண்டுமா?'' என்றாள் கல்பனா.

''ப்ளாக் டீ கொடுங்க ஆன்ட்டி. குடித்துவிட்டு படுத்துத் தூங்கினால் சரியாகி விடும்.''



''சரி. உன் அறைக்குப் போய் ரெஸ்ட் எடு. நான் வருகிறேன்'' என்ற கல்பனா சில நிமிடங்களில் டீயுடன் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள்.

''தேங்க்ஸ் ஆன்ட்டி'' என ஜோஷிதா டீயை வாங்கிக் குடிக்கத் தொடங்கவும் கல்பனா கட்டிலில் அவள் அருகே அமர்ந்து ஜோஷிதாவின் வேலையைப் பற்றி விசாரித்தாள். லண்டனைப் பற்றி, அவள் தோழிகள் பற்றியெல்லாம் பொதுவாகப் பேசிவிட்டு பிறகு சொன்னாள்.

''இங்கு நம் குடும்பங்களில் வாழ்க்கை முறை வேறு ஜோஷிதா. ஒரு பெண் தன் கணவனைத் தவிர வேறு எந்த ஆணுடன் பழகினாலும் தவறாகத்தான் நினைப்பார்கள். நீ பிரசாத்துடன் சகஜமாகப் பழகுவதையும், நாலு நாள் முன்பு பைக்கில் போனதையும் நல்ல வேளையாய் நம் உறவினர்கள் யாரும் பார்க்கவில்லை. ஹரிஷுக்கென நிச்சயம் செய்யப்பட்ட நிலையில் நீ பிரசாத்துடன் வெளியில் போவது சரியல்ல.''

ஜோஷிதா திடுக்கிட்டாள். ''ஆன்ட்டி, நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்று உங்களுக்கே புரிகிறதா? பிரசாத் உங்கள் மகன். நான் உங்கள் மருமகளாகப் போகிறவள். நாங்கள் இருவருமே இந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நீங்களே எங்களை வித்தியாசமாய் பேசலாமா?'' என்றாள் படபடப்புடன்.

''நான் வித்தியாசப் படுத்தவில்லை ஜோஷிதா. யாருடைய பேச்சுக்கும் ஆளாகி விடக்கூடாதே என்று சொன்னேன்.''

''மும்பை ஒரு கிராமமோ, இங்கு வசிப்பவர்கள் பத்தாம் பசலிகளோ இல்லை ஆன்ட்டி. தினமும் பார்க்கிலும், பீச்சிலும் பகிரங்கமாய் சுற்றித் திரியும் காதலர்களை நான்

பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன். அவசாத்துக்கு பிரசாத் ஒருநாள் என்னை பைக்கில் அழைத்துப் போனது எதேச்சையானது. அதற்கு எந்த வர்ணமும் பூசாதீர்கள்'' என்றாள் லேசான கோபத்துடன்.

''என்னவோ, மனதில் பட்டதைச் சொன்னேன்'' என கல்பனா காலி கப்புடன் எழுந்து போனாள்.

இவர்கள் ஏன் இத்தனை குறுகிய மனம் உடையவர்களாய் இருக்கிறார்கள்? வந்த சில நாட்களிலேயே எத்தனை முரண்பாடுகள்! ஹரிஷ் கூட தன் பெற்றோரின் எண்ணங்களை பிரதிபலிப்பவனாகத்தான் இருந்தான். இவர்களுடன் என் வாழ்வை பிணைத்துக் கொள்வது எந்த வகையில் புத்திசாலித்தனமாய் இருக்கும்? ஜோஷிதா முதன் முறையாக ஹரிஷுடனான திருமண வாழ்வைப் பற்றி யோசித்தாள்.

செல்போன் ஒலியில் யோசனை தடைபடவே போனை எடுத்து ''அப்பா'' என்றாள் ஜோஷிதா.

குரலின் சோர்வை உணர்ந்த பரசுராமன் ''என்னம்மா, உடம்பு சரியில்லையா? எதாவது பிரச்சனையா?'' என்றார் கவலையுடன்.

''அதெல்லாம் இல்லப்பா. லேசான தலைவலி, சொல்லுங்க, நீங்க, அம்மா எல்லோரும் எப்படியிருக்கீங்க?'' என குடும்ப விஷயங்களைப் பேசிவிட்டு சொன்னாள். ''அப்பா நான் ஷீலாவுடனே தங்கிக் கொள்ளலாம் என்றிருக்கிறேன்.''

''ஹரிஷ் வீட்டினர் உன்னை நன்றாக கவனிக்கவில்லையா?'' என்றார் பரசுராமன் யோசனையுடன்.

''நன்றாகத்தான் கவனிக்கிறார்கள். ஆனால் எனக்குக் கொஞ்சம் பிரைவஸி வேண்டும் என்றிருக்கிறது.''



''திருமணமானதும் நீயும், ஹரிஷும் லண்டனிலேயே இருந்து விடுவதால் அவன் குடும்பத்துடன் பழக உனக்கு வேறு சான்ஸ் கிடைக்காது. அதுவுமில்லாமல் ஷீலா ஹாஸ்டலில் தங்கியிருக்கிறாள். உன்னைக் கூட வைத்துக் கொள்வதோ, சமைத்துப் போடவோ அவளால் முடியாது பார்.''

ஜோஷிதா பேசாமல் இருக்கவும், ''எப்படியும் நீ நிரந்தரமாக அங்கே இருக்கப் போவதில்லை. அதனால் சீக்கிரமாய் கிளம்பி வர ஏற்பாடு செய்'' என்றார் பரசுராமன்.

அன்று மதிய உணவு இடைவேளையில் ஷீலாநாயருடன் சேர்த்து சாப்பிடுகையில் ஷீலா நாயர் கேட்டாள். ''நீ கூட இங்கு வந்த பிறகு ரொம்ப வாடிப் போய் விட்டாய் ஜோஷிதா. இங்கே உனக்கு மிகவும் சிரமமாக இருக்கும் இல்லையா? நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் இந்தியாவில் என்பதால், எனக்கு லண்டனிலிருந்து வந்த போதும் ரொம்ப சிரமமாகத் தெரியவில்லை. உன்னைப் போல் லண்டனிலேயே பிறந்து சொகுசான வாழ்க்கை வாழ்ந்தவர்களுக்கு மிகவும் கஷ்டமாகத்தான் இருக்கும். உன்னை ரொம்ப கஷ்டப்படுத்தி விட்டேன் என்று எனக்கு வருத்தமாக இருக்கிறது'' என்றாள் உண்மையான வருத்தத்துடன்.

''இதில் நீ வருத்தப்பட ஒன்றுமே இல்லை ஷீலா. உன் நோயாளிகளை கவனிக்கவென்று நீ அழைத்த போதும் என் பெற்றோர் அனுப்பி வைத்த முக்கிய காரணம் ஹரிஷுடனும், அவன் வீட்டினருடனும் நான் பழக வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் இங்குள்ள தூசியும், வெப்பமும் நிஜமாகவே என்னை பயமுறுத்துகின்றன'' என்றாள் ஜோஷிதா.

''ஹரிஷ் வீட்டவர்கள் எப்படி?'' என்றாள் ஷீலா ஆர்வத்துடன்.

''எனக்கு சொல்லத் தெரியல ஷீலா'' என்றாள் ஜோஷிதா. ''எனக்காக கவனமாய் சமைக்கிறார்கள். மறுக்க மறுக்க பரிமாறுகிறார்கள். நான் வீடு போக தாமதமானால் பதறுகிறார்கள். அவர்கள் உறவினர்களை எல்லாம் நான் சந்தித்தே ஆக வேண்டும் என்று விரும்புகிறார்கள். எனக்காக வீட்டையே மாற்றியமைத்து என் அறையில் சகல வசதிகளும் செய்திருக்கிறார்கள். ஆனால் வெளிப்படையான சுபாவம் இல்லாதவர்களாய் இருக்கிறார்கள். ஒவ்வொரு சின்ன விஷயத்திற்கும் நிறைய யோசிக்கிறார்கள். நிறைய பேசுகிறார்கள்.''

ஜோஷிதா சொல்லிக் கொண்டே போக ஷீலா நாயர் சிரித்தாள்.

''ஏ டிபிக்கல் இந்தியன் பேமிலி. இங்குள்ள குடும்பங்கள் இப்படித்தான் இருக்கும்.''

''கருத்து சுதந்திரமும், தனி மனித சுதந்திரமும் இல்லாமல் ஒரு சமூகம் எப்படி செயல்பட முடியும்?'' என்றாள் ஜோஷிதா குழப்பத்துடன்.

''இங்கும் சுதந்திரம் இல்லாமலில்லை. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளைப் போல அது பெண்களின் பிறப்புரிமையாக இருப்பதில்லை. இங்கு பெண்கள் சுதந்திரமாகச் செயல்பட குடும்பத்தினரின் ஆதரவு முக்கியம்.''

''ஏன் இந்திய சமூகம் திறந்தவெளி சமூகமாய் இல்லை?'' என்றாள் ஜோஷிதா.

''பல ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்தியாவின் வரலாறும், கலாச்சாரமும் ஒவ்வொரு இந்தியனின் வாழ்வுடனும் பின்னிப் பிணைந்திருக்கையில் அது சாத்தியம் இல்லை ஜோஷிதா.''



ஜோஷிதா கைகளை நாப்கினால் துடைக்கையில் பாமெலாவிடமிருந்து போன் வந்தது. ''ஹாய் ஜோஷிதா, எப்படியிருக்கிறாய்?'' என்றாள் பாமெலா உற்சாகத்துடன்.

''பைன். நீ?''

''ரொம்ப, ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. வாழ்க்கையில் நான் இத்தனை மகிழ்ச்சியுடன் இருந்ததே இல்லை. முன்பே ஸ்டீவர்டை சந்தித்திருக்காமல் போய் விட்டோமே என்ற கவலைதான் எனக்கு. தினமும் சூரியன் எங்களுக்காகவே உதிப்பது போலிருக்கிறது. நிலா வரும் ஒவ்வொரு நாளும் தேன் நிலவாக கழிகிறது. இன்றுதான் புதிதாய் பிறந்தது போலிருக்கிறது'' பாமெலா பேசிக் கொண்டே போக ஸ்டீவர்ட்டின் முதல் மனைவியும் பையன்களும் என்னவானார்கள் என்ற கேள்வி ஜோஷிதாவின் மனதில் ஓடியது. அதைக் கேட்டு அவளை சங்கடப்படுத்த விரும்பாமல் இனிமையாய் சில வார்த்தைகள் பேசிவிட்டு ஜோஷிதா போனை வைத்தாள்.



# 4

ஜோஷிதா தன் எதிரில் அமர்ந்து சாக்லேட்டை சுவைத்துக் கொண்டிருக்கும் அந்த சிறுவனைப் பார்த்தாள். ஷீலா நாயர் அவளுக்காக அப்பாயின்மென்ட் கொடுத்திருந்த எல்லா நோயாளிகளையும் அவள் கவனித்து அறுவை சிகிச்சையாய் முடித்து விட்டிருந்தாள். நல்லபடியாய் வேலையை முடித்தோம். ஊருக்குக் கிளம்ப

வேண்டியதைப் பார்க்க வேண்டும் என்று அவள் யோசிக்கும் சமயம் இந்த சிறுவன் தீவிரமான தலைவலியுடன் வந்தான். ஸ்கேன் செய்து பார்த்ததில் அவனுக்கு மூளையில் நுணுக்கமான இடத்தில் ஒரு கட்டி இருந்தது. ஷீலாவும் ஜோஷிதாவும் மூளை நரம்பியல் நிபுணர் ஒருவரின் உதவியை நாடினார்கள். தன் நோயின் தீவிரத்தையோ, ஆபரேஷனின் ரிஸ்க்கையோ உணராமல் சாக்லேட்டின் சுவையில் மூழ்கியிருந்த அந்த எட்டு வயது சிறுவனை பார்க்கையில் மனம் கரைந்தது ஜோஷிதாவுக்கு.

சேலை முந்தானையால் தலையை மூடியபடி அவன் அம்மாவும், பான்பராக் கறை படிந்த வாயுடன் அவன் அப்பாவும் மூளை நரம்பியல் நிபுணர் சொல்வதை கலவரத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர்.

''இது மிகவும் சிக்கலான அறுவை சிகிச்சை. இதில் நோயாளி உயிர் பிழைக்க பாதிதான் சான்ஸ் இருக்கிறது. ஒருவேளை ஆபரேஷன் செய்யாமல் விட்டால் அந்த பாதி சான்ஸ்சும் கிடைக்காமல் போகக் கூடும். இதற்கு மேல் நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.''

பல வருஷ அனுபவம் தந்த லாவகத்துடன் அந்த டாக்டர் சுருக்கமாய் ஹிந்தியில் விளக்கினார்.

அந்த பெண் முகத்தை மூடியபடி விசும்ப, அவளை அடக்கிய அவள் கணவன் தன் கண்கள் கலங்கியதைத் துடைத்தபடி சொன்னான். ''நீங்கள் எல்லோரும் ரொம்ப படித்தவர்கள். எப்படியாவது என் மகனை நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும். அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். இந்த அறுவை சிகிச்சையினால் அவன் பிழைக்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால் நான் அதை தடைசெய்ய விரும்பவில்லை.''



''குழந்தையை குணமாக்கத்தான் நாங்களும் பாடுபடுகிறோம். எல்லோருக்கும் மேலாக கடவுள் ஒருவர் இருக்கிறார்'' என்றாள் ஷீலா நாயர் அவர்களுக்கு சமாதானமாய்.

பெற்றோர்களை காத்திருக்கச் சொல்லிவிட்டு அவர்கள் சிகிச்சைக்கு முன்னால் செய்ய வேண்டிய பரிசோதனைகளில் ஈடுபட்டனர். அந்த சிறுவன் சிரித்த முகத்துடன் எல்லா பரிசோதனைகளுக்கும் ஒத்துழைத்தான். அவனது டெஸ்ட் சமயங்களிலும், ஊசி மருந்தை செலுத்தவும் பெரும்பாலும் ஜோஷிதாவே உடன் இருந்தாள். அறுவை சிகிச்சைக்கு முன் கழிந்த ஒரு வாரத்தில் அந்த சிறுவன் தீதி என்றே சொந்தம் கொண்டாடத் தொடங்கியிருந்தான். 'உங்கள் ஊர் எது? அங்கே பெரிய கார் இருக்குமா? விளையாட பொம்மைகள் கிடைக்குமா?' என்று அவன் கேட்கும் குழந்தை கேள்விகளுக்கு பதில் சொல்லியபடியே வேலை பார்ப்பது ஜோஷிதாவுக்கும் சுவாரஸ்யமாக இருந்தது.

''நீ குணமானதும் உன்னை என்னுடன் லண்டன் அழைத்துப் போகிறேன்'' என்றாள் ஜோஷிதா.

''இப்போதெல்லாம் இவன் தினமும் உங்களைப் பற்றிதான் பேசுகிறான்'' என்றாள் அவன் அம்மா புன்னகையுடன்.

சிறுவனின் குண்டு கன்னத்தில் ஜோஷிதா முத்தமிட, ''என்ன சொல்கிறான் உன் பாய்ப்ரண்ட்?'' என்றாள் ஷீலா நாயர் அருகில் வந்து,

''என்னுடன் லண்டன் வருவதாகச் சொல்கிறான்.''

''ஹரிஷுக்கு சரியான போட்டிதான்'' என சிரித்தாள் ஷீலா நாயர்.

அடுத்து வந்த நாள் முழுவதும் ஜோஷிதாவின் மனம் முழுவதும் அந்த சிறுவனின் சிகிச்சையிலேயே

இருந்ததால் தான் அப்பாவிடமும் அடிக்கடி போன் செய்து கலந்தாலோசித்தாள். அந்த சிறுவன் ரிப்போர்ட்டுகளை மெயிலில் அனுப்பினாள். அவரும் நரம்பியல் நிபுணரின் வார்த்தைகளையே எதிரொலித்தார்.

அன்று ஜோஷிதா வழக்கம்போல் கிளம்புகையில் "இன்னிக்கு ஸன்டே. இன்னிக்கு கூடவா வேலை?" என்றான் ஹரிஷ்.

"டாக்டர்களுக்கு ஸன்டே, மன்டே எல்லாம் கிடையாது ஹரிஷ். அவர்களது விடுமுறையை நோயாளிகள் தான் தீர்மானிக்க வேண்டும்."

"என்னுடன் நீ வெளியே வருவதாகச் சொல்லி இரண்டு ஸன்டேக்கள் கழிந்து விட்டன."

"ஸாரி ஹரிஷ். நான் எதிர்பார்த்திராத கேஸ் இது. என்னுடைய வேலை. எல்லாம் முடிந்து விட்டது. இந்த ஆபரேஷனை வேறொரு டாக்டர்தான் செய்யப் போகிறார் என்றாலும்."

"அப்படியானால் நீ எதற்காகப் போக வேண்டும்?" என்றான் ஹரிஷ்.

"உனக்கு சொன்னால் புரியாது ஹரிஷ்" என்ற ஜோஷிதா திரும்பி காலண்டரைப் பார்த்தாள். "இன்று தேதி இருபத்தி மூன்று. நாளை ஆபரேஷன் இருபத்தி ஆறாம் தேதி உனக்கு வேலை இருக்கிறதா?"

"இல்லை. அப்படியே இருந்தாலும் உன்னைவிட எந்த வேலையும் எனக்கு முக்கியமில்லை" என்றான் ஹரிஷ் உருக்கமான குரலில்.

எதையும் மிகைப்படுத்துவதே இவனது வழக்கமாகி விட்டது என்ற சலிப்புடன் "சரி இருபத்தி ஆறாம் தேதி போகலாம்" என்றாள் ஜோஷிதா.



"அன்று ஞாயிற்றுக்கிழமைகூட இல்லையே! உன்னால் வர முடியுமா?" என்றான் ஹரிஷ் சந்தேகத்துடன்.

"இந்த ஆபரேஷனுக்கு பிறகு நான் டிஸ்பென்சரிக்குப் போகமாட்டேன்" என்றாள் ஜோஷிதா.

"அப்படியானால் நாம் இனி தினமும் வெளியே போகலாம்" ஹரிஷ் பேசி முடிக்கும் முன் ஜோஷிதா போய் விட்டிருந்தாள்.

திங்கள் அன்று பெற்றோர்களும் உறவினர்களும் கவலையுடன் சூழ்ந்திருக்க அந்த சிறுவன் சிரித்தபடியே ஆபரேஷன் தியேட்டருக்குள் நுழைந்தான். "தீதி நீங்களும் கூடவே இருப்பீங்களா?" என்றான் ஜோஷிதாவிடம்.

"நான், ஷீலா, டாக்டர் அங்கிள். இந்த சிஸ்டர்ஸ் எல்லோரும் இருப்போம்."

அத்துடன் சமாதானமானவன், மயக்க மருந்து நிபுணர் அனஸ்தீஷியாவைச் செலுத்த முற்படுகையில் "தீதி என்னை நினைவு வெச்சுக்குங்க. என்னை உங்களோடு லண்டன் கூட்டிட்டுப் போகணும்" என்றபடியே மயக்கமானான்.

தொடர்ந்த நான்கு மணி அறுவை சிகிச்சைக்குப் பிறகு அவன் மூளை நரம்பிலிருந்த கட்டி அகற்றப்பட்டது. தொடர்ந்து செலுத்தப்பட்ட மருந்துகளுக்குப் பிறகு நாடித்துடிப்பும், ரத்த அழுத்தமும் சீராக இருக்கவே, தீவிர சிகிச்சை கண்காணிப்பு பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டான். 'நாற்பத்தி எட்டு மணி நேரம் இதே போல் இருந்தால் பயப்பட வேண்டியதில்லை' என்ற மூளை நரம்பியல் நிபுணரின் வார்த்தைகளை கேட்ட உறவினர்கள் சற்று சமாதானம் அடைந்தனர். வீடு திரும்பிய ஜோஷிதா சூடான நீரில் குளித்து விட்டு விரைவிலேயே தூங்கிப் போனாள்.

இரவு மூன்று மணி வாக்கில் ஜோஷிதாவின் போன் ஒலித்தது. ஆழ்ந்த தூக்கத்திலிருந்த ஜோஷிதா புரண்டு படுத்தாள். போன் விடாது ஒலிக்கவும் கண்களை மூடிய படியே பட்டனை அழுத்தி ''ஹலோ'' என்றாள் தூக்கம் விலகாமல்.

''டாக்டர். இன்று காலை ஆபரேஷன் செய்த சிறுவனுக்கு பிட்ஸ் வந்து விட்டது. ட்யூட்டி டாக்டர் பார்த்துக் கொண்டிருக்கிறார். சீப் டாக்டருக்கு தகவல் சொல்லியிருக்கிறோம்.''

ஜோஷிதா சடாரென்று எழுந்து அமர்ந்தாள். ''எல்லாம் நன்றாகத் தானே இருந்தது?''

''மயக்கத்தில்தான் இருந்தான் டாக்டர். திடீரென உடம்பு தூக்கிப் போட்டது.''

''சரி இப்போது நான் வருகிறேன்'' என்றாள் ஜோஷிதா, இந்த நேரத்தில் எப்படி போவோம் என்ற யோசனையின்றி.

பாத்ரூம் போய் முகம் கழுவி, நைட்டியை மாற்றிக் கொண்டு வெளியே வருகையில் திரும்ப போன் மணியடித்தது.

''டாக்டர் நீங்கள் இப்போது வரவேண்டியதில்லை'' என்றாள் நர்ஸ்.

''சீப் டாக்டர் வந்து விட்டாரா? அவனுக்கு சரியாகி விட்டதா?''

''இல்லை டாக்டர். அவன் இறந்து விட்டான்.''

''ஓ! நோ'' என்றாள் ஜோஷிதா உரத்த குரலில். ''நீங்கள் சொல்வது உண்மையா?'' என்றாள் நம்ப முடியாமல்.

''உண்மைதான்'' என அந்த நர்ஸ் போனை வைக்கவும் சிரித்துக் கொண்டே ஆபரேஷனுக்கு வந்த அந்த



சிறுவனின் முகம் நினைவுக்கு வந்தது. 'லண்டன் அழைத்துப் போங்கள் என்றான் இறுதியாக. என் மீது எத்தனை நம்பிக்கை வைத்திருந்தான்? நான் அழைத்துப் போவேன் என்று உறுதியாக நம்பினான்.' ஜோஷிதாவுக்கு தான் குற்றமிழைத்தாற் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. ஜோஷிதாவுக்கு இதுவரை டாக்டர், நோயாளி என்ற உறவைத் தவிர யாரிடமும் அதிகம் பேசியதில்லை. தான் சிகிச்சை அளிக்கும் நோயாளி இறந்து போனால் தன் முயற்சி வீணாயிற்றே என்ற வருத்தமும், ஒரு உயிர் போயிற்றே என்ற இரக்கமும்தான் ஏற்படும். அக்கா என்றழைத்த இந்த சிறுவனிடம் முதன் முறையாக அன்பு ஏற்பட்டது. அந்த அன்பு புத்தியை மழுங்கச் செய்ய டாக்டராக இருந்தும் யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் மனம் துக்கத்தில் ஆழ்ந்தது.

சிறிது நேரத்தில் ஷீலா நாயர் போன் செய்து ''எல்லாம் முடிஞ்சு போச்சு ஜோஷிதா'' என்றதும் ''என்னால் தாங்க முடியல ஷீலா'' என்றாள் கண்களில் நீர் வழிய.

''நம்மால் முயற்சிக்க மட்டும்தானே முடியும்! ஆப்டர் ஆல் நாமும் மனிதர்கள்தானே! கடவுள் இல்லையே!'' என்றாள் ஷீலா நாயர்.

''எனக்கு தவறு செய்தாற் போலிருக்கிறது ஷீலா.''

ஷீலா நாயர் நினைவு வந்தவளாக சொன்னாள், ''நீ பார்த்த முதல் சைல்ட் டெத் இது. அதனால்தான் உடைந்துபோய் விட்டாய். போய் தூங்க முயற்சி செய் ஜோஷிதா. நாளை மாலை நான் உன்னை வந்து பார்க்கிறேன்'' என்றாள் ஷீலா.

ஜோஷிதா சோபாவில் தலை சாய்ந்து கண்களை மூடும் போது ஹால் கடிகாரம் ஐந்தடிக்கும் சத்தம் கேட்டது.

மனதை ஒருநிலைப் படுத்தி அசையாமல் இருந்தவள், ஒருவழியாய் உறங்கிப் போனாள்.

காலையில் காதருகே கேட்ட கலவையான சத்தத்தில் கண் விழித்தாள். சுவர் கடிகாரம் பதினொரு மணியைக் காட்டியது. அவளுக்கு எதிர் சோபாவில் அமர்ந்திருந்த ஹரிஷும் டி.வி. சீரியலில் ஆழ்ந்திருந்த கல்பனாவும் எழுந்து அருகே வந்தனர்.

''என்னாச்சு, ஜோஷிதா? ஏன் இங்கே வந்து படுத்திருக்கிறாய்?'' என்றான் ஹரிஷ் பதட்டத்துடன்.

''நைட் ரூம்ல நீ தூங்கப் போனதை நான் பார்த்தேன். பிறகு எப்படி ஹாலுக்கு வந்தாய்?'' என்றாள் கல்பனா.

''விடியற்காலையில் மருத்துவமனையிலிருந்து போன் வந்தது ஆன்ட்டி. எழுந்து போன் பேசியபடியே இங்கே வந்து உட்கார்ந்து அப்படியே தூங்கி விட்டேன் போலிருக்கிறது'' என்றாள் ஜோஷிதா.

''அவ்வளவுதானா? நாங்கள் மிகவும் பயந்து விட்டோம். நான் ஆபீசுக்கு விடுமுறை சொல்லி விட்டு நீ எழுந்திருக்கட்டும் என காத்திருந்தேன்'' என்றான் ஹரிஷ்.

''இதற்காக லீவ் போட்டாயா?'' என்றாள் ஜோஷிதா வியப்புடன்.

''பின்னே, என் கவலையைப் பற்றி உனக்கென்ன தெரியும்?'' என்றான் ஹரிஷ்.

'இவன் கவலையிலேயே என் வாழ்க்கை கழிந்து போகும்' என்று எண்ணியபடி ஜோஷிதா எழுந்து போய் குளித்துவிட்டு வந்தாள்.

கல்பனா சாப்பாட்டுத் தட்டையும் ஜூஸையும் தூக்கியபடி வர ''நானே வருவேனே ஆன்ட்டி!'' என ஜோஷிதா தட்டை வாங்கி சாப்பிடத் தொடங்கினாள்.



''நீ இன்னிக்கு வீட்டிலிருப்பதும் நல்லதுதான். நல்லா சாப்பிட்டு ரெஸ்ட் எடு. அப்போதுதான் நாளை ஊர் சுத்த தெம்பு இருக்கும்,'' என்றான் ஹரிஷ்.

''நாளையா? எங்கே போகணும்?'' என்றாள் ஜோஷிதா.

''நாளை இருபத்தி ஆறாம் தேதி. என்னுடன் வருவதாகச் சொன்னாயே?'' என்றான் ஹரிஷ்.

ஆனால் இன்று அந்த மனநிலையில் நான் இல்லை என்பதை சொல்ல முடியாமல் ஜோஷிதா தலையசைத்து வைத்தாள்.

மாலையில் ஷீலா நாயர் அவளைப் பார்க்க வந்திருந்தாள். ''உங்களுக்கு காபியா ஜூஸா? இந்த மிக்ஸர் தஞ்சாவூரிலிருந்து என் சித்தப்பா கொண்டு வந்தது. இந்த ஸ்வீட் நானே செஞ்சது.'' என கல்பனா தனது உபசாரத்தால் அவளை திணறடித்துக் கொண்டிருந்தாள். அவள் சற்று ஓயும் சமயம் கல்யாணசுந்தரமும் ஹரிஷும், மாறி மாறிப் பேசினார்கள். திருதிருவென விழித்தபடி அமர்ந்திருந்த ஷீலா நாயரைப் பார்த்ததும் ''ஷீலா, என் ரூமைப் பார்க்கலாம் வருகிறாயா?'' என்றாள் ஜோஷிதா.

''ஷ்யூர்.'' தப்பித்தால் போதும் என்ற நிலையில் உடனே எழுந்து கொண்டாள் ஷீலா நாயர். ஹரிஷ் குடும்பத்தினர் இங்கிதம் அறியாதவர்கள். அக்கறையை காண்பிக்கும் அளவுக்கு அனுசரணையாய் நடந்து கொள்வதில்லை. விசாலமான மனப்போக்கும், பெருந்தன்மையுமாய் இருக்கும் ஜோஷிதாவுக்கு இவர்களுடன் ஒத்துப் போகுமா என்ற கேள்வி எழுந்தது.

ஷீலா நாயரை ஒரு சேரில் அமருமாறு கைகாட்டிய ஜோஷிதா. ''அந்த பையன் இப்படிப் போய் விடுவான் என்று நான் நினைக்கவே இல்லை ஷீலா'' என்றாள் வருத்தத்துடன்.

"காலையில் அவன் பெற்றோர்கள் கதறிய கதறலில் மருத்துவமனையே ஆடிப் போய்விட்டது. ஒரு வழியாய் அவர்களை அடக்கி பார்மாலிட்டிஸை முடித்து அனுப்புவதற்குள் திணறிப் போய்விட்டோம். அவன் அம்மா என் கைகளை பிடித்தபடி 'உங்களை நம்பித்தானே என் மகனை ஒப்படைத்தேன்' என அழுகையில் எனக்கே மிகவும் கஷ்டமாக இருந்தது."

"ஆனால் நம்மால் என்ன செய்ய முடியும் சொல்?"

ஜோஷிதா கண்களை துடைத்தபடி தலைகுனிந்து அமர்ந்திருக்கவும் ஷீலா நாயர் சொன்னாள், "தினமும் ஏதாவது ஒரு உருவில் நாம் மரணத்தைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். புதிதாய் இதில் துவண்டு போக வேண்டியதில்லை. ஒரு மருத்துவர் மரணத்தைக் கண்டு பயப்பட ஆரம்பித்தால் நோயாளிகளை மரணத்திலிருந்து காப்பாற்ற முடியாது. சியர் அப் ஜோஷிதா. ஏதாவது புக்ஸ் படி. அல்லது சினிமா பார். வெளியே எங்கேயாவது போய் சுற்றி விட்டு வா."

ஷீலா அவள் கைகளைப் பற்றி எழுப்பினாள். "என் அறைக்கு வருகிறாயா போகலாம்?"

"வேண்டாம் ஷீலா. ஹரிஷ் நாளை எங்கோ கூட்டிப் போவதாக சொல்லி இருக்கிறான்."

"அப்புறம் என்ன? வருங்கால கணவனுடன் வெளியே செல்கையில் உலகமே புதிதாக தெரியப் போகிறது பார்!"

"நீயும் வருகிறாயா ஷீலா?"

"நானா?" ஷீலா கடகடவெனச் சிரித்தாள். "ஹரிஷ் கேட்டால் என்னை அடிக்க வருவான். காதலர்களுக்கிடையே நான் எதற்கு இடைஞ்சலாய்?"



"காதலர்கள் இல்லை ஷீலா. கணவன் மனைவியாகப் போகிறவர்கள்."

"இருக்கட்டுமே, என்ன வித்தியாசம்?"

"காதலர்கள் கட்டாயம் ஒருவரை ஒருவர் காதலிப்பார்கள். ஆனால் காதலே இல்லாமல் கூட கணவன் மனைவியாக முடியும்."

"ஓகே. கணவனாகப் போகிறவன் இவன்தான் என்று தெரிந்த பின் அவன் பேரில் காதல் ஏற்படுவது இயற்கை அல்லவா?"

"ஆனால் ஹரிஷிடம் எனக்கு அப்படி எதுவும் ஏற்படவில்லை ஷீலா."

ஷீலா சற்று யோசனைக்கு பிறகு சொன்னாள், "நீங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு பழகினால் நாளடைவில் பிரியம் தானாய் ஏற்படும்."

"இரண்டு மாதங்களுக்கு மேலாய் ஒரே வீட்டில் தினமும் பார்த்துக் கொண்டு பழகிக் கொண்டுதான் இருக்கிறோம். அவன் மீது அன்பு இல்லாமல் இல்லை. அது காதல்தானா என்று என்னால் சொல்ல முடியவில்லை."

"நல்ல சந்தேகம் உனக்கு. அழியாத காதலும், காவியங்களும் பிறந்த தேசத்தில் பிறந்தும் காதலை இனங்காணத் தெரியாமல் என்ன பெண் நீ!" என்றாள் ஷீலா நாயர் கிண்டலாக.

மேலும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு ஷீலா கிளம்புகையில் "தேங்க்ஸ் ஷீலா. நீ வந்தது எனக்கு எவ்வளவோ நிம்மதியாக இருக்கிறது" என்றாள் ஜோஷிதா.

இருவரும் அறைக்கதவை திறந்து கொண்டு வெளியே வருகையில் எதிர் சோபாவில் அமர்ந்திருந்த கல்பனா,

''ரொம்ப நேரம் பேசினீங்க போல இருக்கே!'' என்றாள் கேள்வியுடன்.

''ஆமாம். ஒரு நோயாளியைப் பற்றி பேசினோம்'' என்றாள் ஷீலா நாயர்.

''அதைத்தான் தினமும் மருத்துவமனையில் பேசுகிறீர்களே!'' என்றாள் கல்பனா.

அவள் கண்களில் நிழலாடிய சந்தேகத்துக்கு பதில் சொல்லாமல் ஷீலா நாயர் கிளம்பிப் போக, ஜோஷிதா தன் அறைக்குத் திரும்பிப் போனாள்.

26.11.2008.

காலை ஆறு மணிக்கு ஜோஷிதாவின் அறைக் கதவைத் தட்டி ''ரெடியா?'' என்றான் ஹரிஷ்.

''இப்போதே போக வேண்டுமா?'' என்றாள் ஜோஷிதா தூக்கம் கலையாத குரலில்.

''ஆமாம். எலிபெண்டா போக வேண்டும். அங்கிருந்து திரும்பி வந்து தாஜ் ஹோட்டலில் டின்னரை முடித்துக் கொண்டு இரவு சினிமாவுக்கு போய் விட்டுத்தான் வரப் போகிறோம். ஹோட்டலில் டின்னர் டேபிள் ரிசர்வ் செய்து விட்டேன். சினிமா டிக்கெட்டும் ரெடி. நீதான் இன்னும் ரெடியாகவில்லை'' என்றான் ஹரிஷ் உற்சாகத்துடன்.

''ஒரு பத்து மணிக்குக் கிளம்பலாமா?'' என்றாள் ஜோஷிதா சோம்பலுடன்.

''நேரக்கணக்கு நமக்கெதுக்கு ஜோஷிதா? நாம் சேர்ந்திருக்க எவ்வளவு நேரம் கிடைக்கிறதோ அவ்வளவு சந்தோஷம். விரைவாக கிளம்பினால் இன்னும் சில மணி நேரங்கள் உன்னுடன் அதிகமாகச் செலவிடலாம்.''

இந்த மாதிரி வசனம் பேச இவன் எங்கே கற்றுக் கொண்டிருப்பான் என்று நினைத்தபடி ஜோஷிதா ப்ளூ



ஜீன்சின் மேல் வெள்ளை நிற காட்டன் டாப்ஸை அணிந்தாள். பாஸ்போர்ட்டையும், விசாவும் ஹேண்ட் பேக்கில் வைத்துவிட்டு ''கான்சலேட்டில் ஒரு சின்ன வேலை இருக்கிறது ஹரிஷ். அதை முடித்துக் கொண்டு டிராவல் சுக்கும் போய் விட்டுப் போகலாம்'' என்றாள்.

அவள் சொன்னதை காதிலேயே வாங்காமல், ''ஜோஷிதா யு லுக் ப்யூட்டி புல் டுடே'' என்றான் அவள் மீது வைத்த கண்ணை எடுக்காமல். கல்பனாவிடமும், கல்யாணசுந்தரத்திடமும் சொல்லிக் கொண்டு வெளியே வருகையில் நினைவு வந்தவளாகக் கேட்டாள். ''பிரசாத் எங்கே அங்கிள்? இப்போதெல்லாம் பார்க்கவே முடிவதில்லையே!''

''அவனுக்கு செமஸ்டர் வரப் போகிறது. படிக்கவே நேரம் இல்லை'' என்றார் அவர் அவள் கண்களைப் பாராமல்.

காரை ஓட்டியபடியே ஹரிஷ் சொன்னான். ''ஒரே வீட்டில் இருந்தும் நாம் இருவரும் தனியாய் வெளியே செல்ல இத்தனை நாளாகியிருக்கிறது ஜோஷிதா. வேறு இடத்தில் வசிப்பவர்கள் கூட திருமணம் நிச்சயிக்கப் பட்டவுடன் எதாவது காரணத்தை ஏற்படுத்திக் கொண்டு அடிக்கடி சந்தித்துக் கொள்வார்கள்.''

ஜோஷிதா பதில் பேசாமல் கேட் வே ஆப் இந்தியாவை ஆர்வத்துடன் பார்த்தாள். சாதுவான அரபிக் கடலும், அதன் எதிரே கம்பீரமான தாஜ் ஹோட்டலும் பார்க்க பரவசமூட்டுவதாக இருந்தது. மும்பையின் அடையாள சின்னமாகக் காட்டப்படும் கேட் வே ஆப் இந்தியாவிலிருந்து மோட்டார் படகில் கடலில் பயணம் செய்தார்கள். பத்து கிலோ மீட்டர் தூரம் சென்றதும் எலிபெண்டா தீவு வந்தது.

கற்பாறைகள் கொண்ட அந்த தீவை சிற்பிகள் கலை மண்டபமாக மாற்றியிருந்தனர். தூண்கள், பிரகாரங்கள்,

சந்நிதிகள் எங்கும் சிவ புராணக் கதைகளை சிற்பியாக்கி யிருந்தனர்.

''எலிபென்டா என்றவுடன் நினைவுக்கு வருவது இந்த திரிமூர்த்தி சிற்பம்தான்'' என்றான் ஹரிஷ் எதிரிலிருந்த மூன்று முகமுடைய சிவனின் சிலையைக் காட்டி. ''இந்த முகத்தில் இடதுபுறமுள்ள முகம் சீற்றத்தைக் குறிக்கும் விதமாய் அச்சம் தருவதாய் இருக்கிறது. வலப்புறம் அமைந்த முகம் வாமதேவம் எனப்படும் பெண்மையின் மென்மையையும், படைப்பாற்றலையும் குறிக்கிறது. இடையிலுள்ள முகம் 'தத்புருஷம்' எனப்படும் காத்தல் தொழிலை குறிக்கிறது'' என்றான்.

''இத்தனை வருட கடல் காற்றிலும், உப்பு நீரிலும் முழுதும் சிதைந்து போகாமல் இவை இருப்பது ஆச்சரியம்தான்'' என்றாள் ஜோஷிதா. ஆனந்த நடனம் ஆடும் நடராஜர் சிலையை ரசித்தபடி.

''உண்மைதான். இங்கு படையெடுத்து வந்த மன்னர்கள் இந்த குகைக் கோயிலை அழிக்கப் பார்த்திருக்கிறார்கள். கடலும் தன் உப்புக் காற்றால் கரைத்துதான் பார்த்திருக்கிறது. இங்கே பார்த்தாயா? முகம் சிதைந்து துண்டாகிக் கிடந்தாலும் சில சிற்பங்கள் அழகுடன் மிளிர்வதை.''

''இந்த குகைக் கோயிலை உருவாக்கியவர்கள் சைவ மதத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும். இங்கு வைணவக் கடவுள்களின் சிலையே இல்லை'' என்றாள் ஜோஷிதா.

''இதை உருவாக்கியவர்கள் யார் என்று இதுவரை தெரியவில்லை. குப்தர்கள் காலத்தவையாக இருக்கலாம் என்ற யூகம் மட்டும் இருக்கிறது. அது சரி, உனக்கு



சைவம், வைணவம் பற்றி எல்லாம் கூட தெரிகிறதே!'' என்றான் ஹரிஷ் வியப்புடன்.

''என் பெற்றோர் தினமும் பூஜை செய்வார்கள். நம் மதத்தையும், கடவுளையும் பற்றிய கதைகளை சிறு வயதிலிருந்து சொல்லுவார்கள்.''

''நீயும் பூஜை செய்வாயா?'' என்றான் ஹரிஷ்.

''இல்லை'' என ஜோஷிதா தலையசைத்தாள். ''வீட்டில் இந்து மதமும் பள்ளியில் கிறிஸ்துவ மதமும் போதிக்கப்பட்டதாலும், பல நாடுகளை, பல மதங்களைச் சேர்ந்தவர்கள் நண்பர்களாக இருப்பதாலும் எம்மதமும் சம்மதம்தான் எனக்கு.''

''உனக்கு சிரமமே இல்லாத வாழ்க்கை முறை அமைந்து விட்டிருக்கிறது. அதனால்தான் ப்ரார்த்தனையின் அருமை தெரியவில்லை. கஷ்டம் ஏற்பட்டால்தான் கடவுளை அறிய முடியும்'' என்றான் ஹரிஷ் படபடப்பாக.

ஹரிஷின் குடும்பம் சம்பிரதாயங்களில் ஊறிப் போன இந்திய குடும்பம் என்பதால் ஹரிஷால் தன் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்பதை உணர்ந்த ஜோஷிதா கையிலிருந்த பாவ்பாஜியை விழுங்கி விட்டு புன்னகைத்தாள். ஹரிஷ் தன் பதிலை எதிர்பார்த்து இருப்பது தெரிந்தாலும், நடுத்தர வர்க்கத்து கட்டுப் பெட்டித்தனமும், தான் நினைத்ததே சரியென்று சாதிக்கும் குணமும் வளர்ப்பிலேயே படிந்து போன அவனிடம் வாதிட விரும்பாமல் ''போகலாமா?'' என்றாள் ஜோஷிதா.

திரும்ப கரையை நோக்கி பயணிக்கையில் மாலை நேர அரபிக் கடல் கொள்ளை அழகுடன் இருந்தது. ஆங்காங்கே தென்பட்ட சரக்குக் கப்பல்களையும், கடலுக்கு

நடுவே பெட்ரோல் எடுக்கும் பெட்ரோலிய நிறுவனங்களின் கட்டிடங்களையும் பார்த்துக் கொண்டிருந்தவளின் அருகே வந்த ஹரிஷ் "என்ன, திடீரென்று அமைதியாகி விட்டாய்?" என்றான் அவளிடம்.

நீரை கிழித்துக் கொண்டு சென்ற மோட்டார் படகினால் முகத்தில் தெறித்த உப்பு நீரை ஒரு விளையாட்டுத் தனத்துடன் சுண்டி விட்ட ஜோஷிதா "லவ்லி" என்றாள் ரசனையுடன். "இந்த மாலை நேரத்தில் இந்த கடல் எத்தனை அழகாய் ஜொலிக்கிறது பாரேன்!" என்றாள் அவனிடம்.

சுற்றிலும் பார்வையை ஓட்டிய ஹரிஷ் சொன்னான். "தினம் தினம் நான் கடலைப் பார்க்கிறேன். அதனால் புதிதாய் எதுவும் தெரியவில்லை."

"தினமும் பார்ப்பதால் அழகு குறைந்து விடுமா என்ன? நான் சிறு வயதிலிருந்து தேம்ஸ் நதியைப் பார்த்து வருகிறேன். ஒவ்வொரு நாள் பார்க்கும்போதும் அது ஒவ்வொரு அழகுடன் தெரியும். உலகின் எந்த மூலைக்குப் போனாலும் இயற்கையை மிஞ்சிய அழகு எதுவும் இல்லை. அதனால்தான் மனிதன் கூட இயற்கையோடு இணைந்து வாழும்போது அவன் வாழ்வே அழகாகி விடுகிறது."

"அதைப்பற்றி எல்லாம் எனக்குத் தெரியாது. என் வாழ்க்கையை அழகாக்க நீ என் கூட இருந்தால் போதும்" என்றான் ஹரிஷ் உணர்ச்சியுடன்.

"நான் மிக சாதாரணமானவள் ஹரிஷ்."

"இல்லை. தேவதை. எனக்காகவே கடவுள் அனுப்பிய தேவதை நீ. உலகில் உன்னைப் போல் ஒரு பெண் இதற்கு முன் பிறந்ததும் இல்லை. இனி பிறக்கப் போவதும் இல்லை."



ஹரிஷின் பேச்சு நாடகத்தனமாய் தெரிய படகிலிருந்து கிளம்ப தயாரானவர்களுடன் சேர்ந்து தானும் இறங்கத் தயாரானாள்.

இந்தியா கேட்டின் காம்பவுண்டு சுவர் மீது அமர்ந்து கடலிலிருந்து திரும்பி வரும் டூரிஸ்ட்டுகளை வேடிக்கைப் பார்த்தபடி ஐஸ்க்ரீம் சாப்பிட்டார்கள். அவர்களைச் சுற்றிலும் புறாக்களுக்கு தீனி போடுபவர்களை கவனித்தபடி, "இந்த புறாக்களைப் பார்க்கையில் லண்டனில் டிராஃபால்கர் ஸ்கொயர் நினைவு வருகிறது இல்லையா?" என்றாள் ஜோஷிதா மகிழ்ச்சியுடன்.

"இந்த இடம் மிக அழகாக இருக்கிறது. இங்கிருந்து எழுந்து கொள்ளவே எனக்கு மனம் இல்லை" என்றாள் ஜோஷிதா வரப் போகும் விபரீதத்தை அறியாமல்.

அவர்களைக் கடந்து சென்ற ஒருவர் அன்றைய தேதியை மறந்து போனவராக ஹரிஷிடம் கேட்டார். "எக்ஸ்யூஸ் மீ. இன்று தேதி என்னவென்று சொல்ல முடியுமா?"

"இருபத்தி ஆறு" என்றான் ஹரிஷ். அதன் முக்கியத்துவத்தை உணராமல்.



# 5

ஜோஷிதா மும்பையின் கடல் அழகை ரசித்துக் கொண்டிருந்த அதே நேரம் அதே கடலில் ஒரு பயங்கரம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

அல்ஹுசைனி எனும் மெகா சைஸ் கப்பல் கராச்சியிலிருந்து பத்து இளைஞர்களை சுமந்து கொண்டு மும்பை

நோக்கி வந்து கொண்டிருந்தது. அந்த இளைஞர்கள் வழி நெடுக பஞ்சாபி வாடை வீசும் இந்தியில் பேசிக் கொண்டே வந்தனர். அப்போது பைக்குள் இருந்த தின்பண்ட வகைகளை எடுத்து மென்றனர். கறுநீல நிற டீ ஷர்ட்டும் சாம்பல் நிற கார்கோ பேண்ட்டும் அணிந்திருந்தனர். ஆளுக்கொரு பையும், மொபைல் போனும் வைத்திருந்தனர். கப்பல் இந்திய பகுதியை நெருங்கியதும் அவர்கள் எழுந்து கடற்பகுதிகளை உற்று கவனித்தனர். அவர்கள் கப்பலுக்கு அருகே சிறிய மீன்பிடி கப்பல் சென்று கொண்டிருந்தது. இந்திய கொடி பறந்து கொண்டிருந்த அந்த கப்பலின் பெயர் குபேர் என எழுதப்பட்டிருந்தது. அல்ஹுஸைனி மெல்ல மெல்ல குபேரை நெருங்கியது. தங்கள் பொருட்களை முதுகில் கட்டிக் கொண்ட அந்த இளைஞர்கள் சட்டென்று குபேர் மீன்பிடி கப்பலுக்குத் தாவினார்கள். அடுத்த சில நிமிடங்களில் குபேர் கப்பலில் இருந்த நான்கு பேரும் இரத்த காயங்களுடன் கடலில் மிதந்தார்கள். படகை ஓட்டிய அமர்சிங் சோலங்கி மட்டும் உயிருடன் இருந்தார். மீன்பிடி கப்பலை தங்கள் வசமாக்கிக் கொண்ட இளைஞர்கள் கப்பல் ஓட்டுநர் சோலங்கியை கப்பலை மும்பை கடற்கரை நோக்கி செலுத்துமாறு கட்டளை இட்டனர். மும்பையை நெருங்கியதும் கடலில் சென்று கொண்டிருந்த சிறிய படகுகளை நோக்கிச் செல்லுமாறு கூறினர். குபேர் கப்பல் படகை நெருங்கியதும் படகில் இருந்தவர்களைத் தாக்கி இரண்டு படகுகளைக் கைப்பற்றினர்.

இரவு எட்டு முப்பது மணி.

ஜோஷிதா தாஜ் ஹோட்டலுக்கும் கேட் வே ஆப் இந்தியாவுக்கும் நடுவே செல்லும் விஸ்தாரமான சாலையில் கைகளை வீசி நடந்தாள். குல்பி ஐஸ் விற்பவனிடம்



இரண்டு ஐஸ் வாங்கி இரண்டு கைகளிலும் பிடித்தபடி மாறி மாறி சுவைத்தாள். தன் லண்டன் தோழிகளுக்கு சிறிய நினைவு பொருட்களை வாங்கினாள்.

''ஜோஷிதா டின்னருக்கு போகலாம்'' என்றான் ஹரிஷ் வாட்ச்சை பார்த்தபடி.

அதே நேரம்.

மும்பை கொலாபா கடற்கரை ஓர பத்வார் பூங்கா அருகே இரண்டு படகுகள் தரையிறங்கின. அதிலிருந்து இறங்கிய பத்து இளைஞர்கள் கடற்கரை மணலில் நடக்கத் தொடங்கினர்.

பழைய ப்ளாஸ்டிக் வியாபாரம் செய்யும் அனிதாவுக்கு அன்று கடையில் கூட்டம் இல்லாமல் போரடித்தது. கடலை வேடிக்கை பார்த்தவள் கண்ணில் அந்த இளைஞர்கள் பட்டார்கள். 'யார் இவர்கள்? நம்மூர் ஆட்கள் போலில்லையே! டூரிஸ்ட்கள் என்றால் எதற்காக மீன்பிடி படகில் வந்திருக்கிறார்கள்?' யோசித்தவள் எழுந்து அவர்கள் அருகில் சென்றாள்.

''யார் நீங்கள்? எங்கிருந்து வருகிறீர்கள்?''

''உன் வேலையைப் பார்'' என்றார்கள் அவர்கள் கடுமையுடன். அனிதா தலையை சொறிந்தபடி போய் தன் கடையில் அமர, அவர்கள் தனித்தனி குழுக்களாய் ஆளுக்கொரு திசையில் பிரிந்து சென்றனர்.

இரவு ஒன்பது முப்பது மணி.

தாஜ்மஹால் பேலஸ் ஹோட்டலின் பின்பக்கம் அமைந்துள்ள 'லியோபோல்ட் கஃபே (Leopold Cafe) உணவகம் வெளிநாட்டு பயணிகளால் நிரம்பி வழிந்தது. இரவு ஒன்பது மணி அந்த உணவகத்தின் பீக்ஹவர் என்பதால் ஒரு மேஜை கூட காலியின்றி நிறைந்திருந்தது.

''உனக்கு என்ன வேண்டும் ஹரிஷ்?'' என்றாள்
ஜோஷிதா மெனு கார்டை புரட்டியபடி.
''இன்று நீதான் என் முக்கிய விருந்தாளி. நீ விரும்
பினதைத்தான் நான் சாப்பிடப் போகிறேன்'' என்றாள்
ஹரிஷ்.
''நான் சாப்பிடப் போகிறேன்'' என்றான் ஹரிஷ்.
ஜோஷிதா பணிவுடன் காத்திருந்த வெய்ட்டரிடம்
ஆர்டர் செய்தாள். ''சீஸ் பீட்ஸா, ஸ்ஸ்வான் சிக்கன் சூப்
ரூ, பாஸ்தா.''

அதே நேரம்.

சத்ரபதி சிவாஜி இரயில் நிலையம்.

லக்கேஜை சுமந்தபடி பயணிகள் போவதும் வருவது
மாக பரபரத்துக் கொண்டிருந்தனர். அன்று வாயிலில்
மெட்டல் டிடக்டர் சோதனை எதுவும் இல்லை. அத
னால் பயணிகளுடன் சேர்ந்து அந்த இரண்டு இளைஞர்
களும் உள்ளே நுழைந்தார்கள். நேராக கழிவறைக்குச்
சென்றார்கள். துப்பாக்கிகளில் தோட்டாவை நிரப்பிக்
கொண்டு கையெறி குண்டுகளை எடுத்துக் கொண்டு
பதிமூன்றாவது நடைமேடையை நோக்கிச் சென்றார்கள்.
நடைமேடையில் இருந்த உணவகத்திற்கு எதிரே இருந்த
கூட்டத்தை நோக்கி கையெறி குண்டுகளை வீசினார்கள்.
உயிரைக் காப்பாற்றிக் கொள்ள பயணிகள் சிதறி ஓடி
னார்கள். சுவர்களில் இரத்தம் தெறித்தது. இரயில் நிலை
யத்தின் கடைகளில் இருந்தவர்கள் அப்படியே மேஜைக்கு
அடியே சுருண்டு கொள்ள, நிராயுதபாணிகளாய் நின்ற
பயணிகளின் உடலை தோட்டாக்கள் துளைத்தன.

டிரைடண்ட் ஹோட்டல்.

''நீங்கள் அமெரிக்கரா? பிரிட்டனிலிருந்து வந்திருக்
கிறீர்களா?''



அந்த இரு இளைஞர்களும் தங்கள் எதிரே இருந்த
வரைப் பார்த்துக் கேட்டார்கள். அவர்கள் பதில் சொல்லி
முடிப்பதற்குள் அந்த இளைஞன் கையிலிருந்த துப்பாக்
கியில் தோட்டாக்கள் வெடிக்கத் தொடங்கின. ஹோட்
டல் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு துப்பாக்கி வைத்துக்
கொள்ள அனுமதி இல்லாததால் அவர்களை எளிதாக
சுட்டுத் தள்ளிவிட்டு ஹோட்டலின் பார் பகுதியான
'ஓபியம் டென்' மற்றும் உணவகத்திற்குள் நுழைந்தனர்.
கொசு மருந்தடிப்பது போல் அங்கிருந்தவர்களை
அடித்துத் தள்ளிவிட்டு துப்பாக்கி முனையில் பதினாறு
பேரை இருபதாவது தளத்திற்கு அழைத்துச் சென்றனர்.

நாரிமன் ஹவுஸ். இரவு ஒன்பது நாற்பத்தி ஐந்து.

மும்பையின் கொலாபாவிலிருக்கும் பிரசித்தி பெற்ற
யூத குடியிருப்பு. ஹபாத் சென்டர் என்றும் சொல்வார்கள்.

நான்கு துப்பாக்கி இளைஞர்கள் அந்த குடியிருப்புக்
குள் நுழைந்தனர். ஆறு குடும்பங்களை சேர்ந்தவர்களை
சிறை பிடித்து விட்டு பொதுமக்களை நோக்கி சரமாரி
யாகச் சுட்டனர்.

தாஜ் ஹோட்டலின் இன்டீரியரை ரசித்த ஜோஷிதா
சொன்னாள். ''இந்த ஹோட்டலைப் பற்றி நான் லண்
டனிலேயே கேள்விப்பட்டிருக்கிறேன். ஊர் திரும்பும் முன்
நிச்சயமாக இங்கே வர வேண்டும் என்று நினைத்திருந்
தேன். நல்ல வேளை நீயே அதற்கு ஏற்பாடு செய்து விட்
டாய். இதன் அமைப்பு ஒரு வியாபார ஸ்தலம் போலவே
இல்லை. அரண்மனையைப் போல் இருக்கிறது.''

''அதற்குக் காரணம் இருக்கிறது ஜோஷிதா'' என்றான்
ஹரிஷ். ''இந்த பிரமாண்டம் ஒரு அவமானத்தில்
பிறந்தது. பிரபல தொழிலதிபர் ஜாம்ஷெட்ஜி டாட்டா

19ம் நூற்றாண்டில் ''வாட்ஸன்' ஹோட்டலுக்கு உண வருந்த போனபோது அவர் இந்தியன் என்பதால் வெளி யேற்றப்பட்டார். 'இதை விட உயர்வான ஒரு ஹோட் டலை கட்டி இந்த ஆங்கிலேயர்களை இந்திய ஹோட் டலை தேடி வந்து சாப்பிட வைக்கிறேன் பார்' என்று சூளுரைத்த டாடா 1903ல் வாட்ஸனை விட பல மடங்கு பெரிதான தாஜ் ஹோட்டலைக் கட்டினார்.''

''பெரிய மனிதர்களுக்கு ஏற்படும் அவமானங்கள் கூட இத்தனை பிரமாண்டமாய்த்தான் இருக்கும் போலிருக்கிறது'' என்றாள் ஜோஷிதா. பேரர் பரிமாறிய சூப்பை அருந்தியபடி, ரெஸ்ட்டாரண்டின் மெல்லிய மஞ்சள் நிற ஒளியில் தங்கமாய் மின்னியவளை ஹரிஷ் வைத்த கண் வாங்காமல் ரசித்தான்.

ஜோஷிதா இடது கையைத் தூக்கி மணியைப் பார்த் தாள். ஒன்பது நாற்பத்தி ஐந்து என்றது ரேடியம் எண்கள். நிச்சயதார்த்தத்தின்போது ஹரிஷ் அணிவித்திருந்த வைர மோதிரம் மணி பார்க்கையில் அடக்கமாய் ஜொலித்தது. ஜோஷிதாவின் வேலைக்கு இடையூறாய் இருக்கும், க்ளவுஸ் அணிய முடியாது என்பதால் அவள் மோதிரங் கள் அணிவதில்லை. அன்று ஹரிஷின் வற்புறுத்தலின் பேரில் அணிந்து வந்திருந்த மோதிரம் பழக்கமற்று விரலை உறுத்தியது.

''ஜோஷிதா...'' என்றான் ஹரிஷ் கிசுகிசுப்பான குரலில். ஜோஷிதா வியப்புடன் பார்க்க, ''இந்த நாள், இந்த நிமிடம்... இந்த நொடிக்காகவே நான் பிறந்திருப்பதாகத் தோன்றுகிறது. உன்னைப் போல் ஒரு தேவதை என் வாழ்க்கையில்...''

ஹரிஷின் கையிலிருந்த சூப் கிண்ணம் சிதறி அவன் மேலே வழிந்தது. படபடவென பட்டாசின் ஓசை



கேட்டது. இரண்டு இளைஞர்கள் உணவகத்தின் வாயிலில் நின்றபடி மின்னல் வேகத்தில் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டிருந்தார்கள். நிலைகுலைந்து போய் உணவருந்திக் கொண்டிருந்தவர்கள் உயிரைக் காப்பாற் றிக் கொள்ளும் அவசரத்துடன் ஆளுக்கொரு பக்கம் ஓடத் தொடங்கினார்கள். ஓடுகிற அவசரத்தில் திகைத்து நின் றிருந்த ஜோஷிதாவை சிலர் இடித்துத் தள்ளிக் கொண்டு ஓட, உணவு மேஜைக்கு அடியில் விழுந்தாள் ஜோஷிதா.

''ஜோஷிதா'' என குனிந்து அவளை எழுப்ப முயன்ற ஹரிஷின் தலைக்கு மேலே ஒரு புல்லட் பறந்தது. ஜோஷி தாவின் கைகளை விட்டு விட்டு அவன் ஓட ஆரம்பித் தான்.

காமா மருத்துவமனை.

நேரம்: ஒன்பது நாற்பத்தைந்து.

சத்ரபதி சிவாஜி இரயில் நிலையத்திற்கு வெகு அரு கில் பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருந்த மருத்துவமனைக் குள் நுழைந்த அந்த இளைஞர்கள் நோயாளிகள், உதவி யாளர்கள், மருத்துவர்கள் என சரமாரியாகத் தாக்கினார் கள். சில நிமிடங்களில் மருத்துவமனையிலிருந்து வெளியே வந்து சாலையில் சென்ற வாகனங்களை சுட்டுத் தள்ளி னார்கள். வாகனம் ஒன்றை கடத்தியவர்கள், அதில் ஏறிக் கொண்டு வழியில் சென்ற வாகனங்கள் மீது தாக்குதல் நடத்திக் கொண்டே சென்றனர். அருகில் சென்று கொண்டிருந்த போலீஸ் ஜீப் கண்ணாடியை துளைத்துக் கொண்டு சென்ற தோட்டாக்கள் உள்ளே இருந்த காவல் துறை அதிகாரிகளின் உயிரைக் குடித்தன.

அவர்கள், மும்பையின் தீவிரவாத எதிர்ப்பு படை தலை வரான 'ஹேமந்த் கார்க்கரே. என்கௌண்டர் ஸ்பெஷ

லிஸ்ட் விஜய் சலாஸ்கர். மும்பையின் நேர்மையான
காவல்துறை அதிகாரி 'அசோக் காம்தே.' சுட்டப்பட்ட
அதிகாரிகளை கீழே தள்ளி விட்டு போலீஸ் வாகனத்தை
எடுத்துச் சென்றனர் தீவிரவாதிகள். திடீரென அவர்கள்
வண்டி பஞ்சராகவே இறங்கி வழியில் வந்த வாகனத்தை
துப்பாக்கி முனையில் தடுத்து நிறுத்தினார்கள். அதி
லிருந்த மூன்று பெண்களும் நடுங்கியபடி இறங்க வாக
னத்தை எடுத்துக் கொண்டு புறப்பட முயற்சித்தனர்.
அவர்களை துரத்தியபடியே சென்ற அசிஸ்டெண்ட் சப்
இன்ஸ்பெக்டர் 'துக்காராம்' பாய்ந்து சென்று அந்த தீவிர
வாதியின் துப்பாக்கியை கெட்டியாகப் பிடித்துக் கொண்
டார். தீவிரவாதிகள் துப்பாக்கியை இயக்க, வெறும்
கையினாலேயே அவர்களுடன் போராடிய துக்காராமின்
நெஞ்சில் குண்டு பாய்ந்து முதுகில் வெளிவந்தன. துக்
காராம் அவர்களுடன் போராடிய அந்த இடைவேளை
யில் தீவிரவாதிகள் இருந்த வாகனத்தைப் பிடித்த போலீ
ஸார் அதில் ஒருவனை சுட்டுக் கொன்றதுடன் ஒருவனை
உயிருடன் பிடித்தனர்.

அவன் பெயர் 'அஜ்மல் கசாப்.'

தாஜ் ஹோட்டல்.

கேரளாவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்
கிருஷ்ணதாஸ் சக எம்.பி.க்களுடன் சாப்பிடுவதற்காக
தன் செயலாளர் சகிதம் அமர்ந்திருந்தார். அவர்
சாப்பிட்டுக் கொண்டிருந்த பீங்கான் தட்டை குண்டு
துளைத்துக் கொண்டு செல்லவும் அவசரமாக மேஜைக்கு
அடியே பதுங்கினார். அவருக்கு அருகிலிருந்த மேஜைக்
கடியில் இருந்த ஜோஷிதாவுக்கு கண்ணை இருட்டிக்
கொண்டு வந்தது. வெளியே என்ன நடக்கிறதென்றே



தெரியவில்லை. அவளைப் போல் மேஜைக்கு கீழே பதுங்கி
யிருந்தவர்கள் மெதுவாய் நகர்ந்து போகத் தொடங்க,
ஜோஷிதாவின் கை கால்கள் இயங்க மறுத்தன. அப்ப
டியே அமர்ந்திருந்த அவளை யாரோ கைப்பற்றி இழுத்
தார்கள்.

''வா.. வா.. சீக்கிரம்.''

ஜோஷிதா எழுந்து நிற்க, அவன் அவளை இழுத்துக்
கொண்டு ஓடினான். வெளியே நீச்சல் குளமும், அதன்
அருகே முட்புதர்களும் தெரியவே புதர்களின் பின்னே
அவன் ஜோஷிதாவுடன் மறைந்து அமர்ந்தான். சிறிது
நேரத்தில் ரெஸ்ட்டாரண்டிலிருந்து இன்னும் சிலரும்
ரத்தம் வழிய ஓடி வந்து முட்புதரின் பின்னே அடைக்கல
மானார்கள். விடாமல் துப்பாக்கி சத்தமும், அது நிற்கும்
போது குண்டடி பட்டவர்களின் முனகல் சப்தமும் கேட்டது.

ஜோஷிதா பயத்துடன் தன் அருகே இருந்தவனின்
தோளைப் பற்றினாள்.

''இப்படியே உட்கார்ந்திரு. அசையாதே!'' என்று
ஜோஷிதாவிடம் சொல்லி விட்டு அவன் குனிந்தபடியே
மீண்டும் ரெஸ்ட்டாரண்டிற்குள் ஓடினான். சில நிமிடங்
களில் ஒரு குழந்தையையும், இரண்டு பெண்களையும்
அழைத்து வந்து ஜோஷிதாவின் அருகில் அமர்த்தினான்.
இடதும் வலதுமாய் ஓடி இன்னும் சிலரைக் கொண்டு
வந்து சேர்த்த பின் மெதுவான குரலில் சொன்னான்.

''கவனமாகக் கேளுங்கள். நாம் அனைவரும் பத்திரமாக
இங்கிருந்து வெளியேற வேண்டுமானால் நான் சொல்
கிற படி கேட்க வேண்டும். சப்தம் எழுப்பாமல் தலையைக்
குனிந்து நகர வேண்டும். துப்பாக்கி சத்தம் அருகில் கேட்
டால் அப்படியே தரையில் படுத்துக் கொள்ள வேண்டும்.

யாரும் யாரையும் பெயர் சொல்லியோ, ஓசை எழு பியோ கூப்பிட முயற்சிக்கக் கூடாது. சரியா?''

உயிரைக் கையில் பிடித்தபடி எல்லோரும் சரி எ தலையசைத்தனர். பேண்ட் பாக்கெட்டில் ஒரு கையை வைத்தபடி மறுகையால் எல்லோரையும் வருமாறு சைகை செய்தான். முதுகை வளைத்து தலையை குனிந்த ஒருவர் பின் ஒருவராகச் சென்றனர். கண்ணுக்குத் தெரியாத ஊர்வலம் போல் அந்த வரிசை நகர்ந்தது. நீச்சகுளம் இருந்த பகுதியை தாண்டி உள்ளே நுழைந்ததும் எதிர்ப்பட்ட அறையில் எல்லோரையும் தள்ளி கதவை மூடினான் அவன். பீங்கான் ப்ளேட்டுகளும், கப் அண் சாஸர்களும், மேஜை படுக்கை விரிப்புகளுமாய் அந்த அறை நிரம்பி வழிந்தது. இது ஹோட்டலின் ஸ்டோர் ரூபமாய் இருக்கக் கூடும் என்று யூகித்தாள் ஜோஷிதா.

திடீரென்று ஒரு அலறல் சத்தம் கேட்டது. நெருக்கியடித்து நின்றிருந்த அவர்கள் அனைவரும் முகம் வெளுக்க ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். சில நிமிடங்களில் ஸ்டோர் ரூம் கதவு தட்டப்பட்டது. நின்றிருந்தவர்களுக்கு கை கால்கள் வெடவெடக்க, அந்த இளைஞன் சாவித் துவாரம் வழியாக வெளியே நின்றிருந்தவர்களைப் பார்க்க முற்பட்டான். கதவு பொறுமையின்றி உலுக்கப்படவே பயத்தில் கத்த முற்பட்ட குழந்தையின் வாயைப் பொத்தினாள் அதன் தாய். அந்த இளைஞன் பேண்ட் பாக்கெட்டிலிருந்த துப்பாக்கியை எடுத்து கதவுக்கு நேராய் பிடித்தபடி அதன் தாளை விலக்கினான். யுனிபாரம் அணிந்த ஹோட்டல் பணியாளர்கள் உள்ளே நுழைந்ததும் தன் துப்பாக்கியை பாக்கெட்டில் சொருகினான்.



''இங்கிருந்து இவர்கள் எல்லோரும் வெளியேற வேண்டும். வெளியே நிலவரம் எப்படியிருக்கிறது?'' என்றான் அவர்களிடம்.

அந்த பணியாளர்கள் முகத்தில் கவலை தெரிந்தது.

''ஹோட்டலை தீவிரவாதிகள் ஆக்ரமித்திருக்கிறார்கள். நுழைவாயில் வழியாகவும், ரெஸ்ட்டாரண்ட் மூலமாகவும் உள்ளே போய் எதிர்ப்பட்டவர்களை சுட்டுத் தள்ளிய படி மேல் தளத்திற்கு போய் இருக்கிறார்கள். மும்பை காவல் துறையும், தீவிரவாத எதிர்ப்புப் படையும் ஹோட்டலுக்கு வெளியே நிற்கிறது. தீவிரவாதிகளுடன் அவர்கள் போரிடுகிறார்கள்.''

''இப்போது கீழே யாரும் இல்லையே!''

''இல்லை.''

''இங்கிருந்து வெளியேறுவது எப்படி?''

சற்று யோசித்த பணியாளர்கள் ''லாபி வழியாய் செல்லலாம்'' என்றார்கள்.

''மேலே இருக்கும் தீவிரவாதிகள் சடாரென கீழே வந்து விட்டால்?'' என்றார் ஒரு பெரியவர் பயத்துடன்.

''துணிந்து எதாவது செய்துதான் ஆக வேண்டும். எல்லாவற்றிற்கும் பயந்து கொண்டிருந்தால் முடியாது. உயிர் பிழைக்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால் துணிந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.'' அந்த சீருடை பணியாள் சொல்ல அந்தப் பெரியவர் மேலும் தயங்கினார். பெரியவரின் தயக்கம் இன்னும் சிலரையும் தயங்க வைத்தது.

''இந்த அறையும் நமக்கு பாதுகாப்பானது அல்ல. எந்த நேரமும் இந்த அறையை உடைத்துக் கொண்டு தீவிரவாதிகள் உள்ளே நுழையலாம்'' என்றான் அந்த இளைஞன்.

அதன் பிறகு ஒரு நிமிடம் கூட யோசிக்காமல் எல்லோரும் கிளம்பினார்கள். முதலில் இரண்டிரண்டு பேராக லாபிக்குச் சென்று அங்கிருந்து பக்க வாயில் வழியாக வெளியேறுவதென முடிவு செய்யப்பட்டது. ஹோட்டல் பணியாளர் ஒருவருடன் குழந்தையும், அதன் தாயும் முதலில் வெளியே சென்றனர். கதவருகே நின்றபடி அந்த இளைஞன் இருவர் இருவராக அனுப்பிக் கொண்டிருந்தான். பெரியவர் முறை வந்த போது அவர் மறுபடி தயங்க, "உங்களுக்கு சொன்னால் புரியாதா? இந்த கட்டிடத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்தால் என்னாகும் என்று யோசியுங்கள்" என்றான் அந்த இளைஞன் கடுமையான குரலில். பெரியவர் ஓட்டமும் நடையுமாகச் செல்ல இறுதியில் ஜோஷிதாவும், அந்த இளைஞனும் எஞ்சினார்கள்.

தாஜ் ஹோட்டலின் லக்ஸரி ரூம் அது. அதன் கதவு படபடவெனத் தட்டப்பட்டது. உள்ளே இருந்தவர் வங்கி அதிகாரி ராமமூர்த்தி. ராமமூர்த்திக்கு பயத்தில் நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது. கட்டிலை இறுகப் பற்றியபடி அப்படியே அமர்ந்திருந்தார். சில நொடிகளில் துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்டது கதவு பிளந்தது. உள்ளே நுழைந்த தீவிரவாதிகள் ராமமூர்த்தியின் கைகளையும், கால்களையும் கயிறு கொண்டு கட்டினார்கள். "என்னை எதுவும் செய்து விடாதீர்கள். நான் இரத்த அழுத்த நோயாளி" என்ற ராமமூர்த்தியின் கோரிக்கையை அலட்சியம் செய்துவிட்டு செல்போனில் பேசத் தொடங்கினர்.

ஸ்டோர் ரூமில் இருந்தவர்கள் பதுங்கிப் பதுங்கி லாபிக்கு வந்தனர். லாபியில் மறைந்திருந்தவர்களை ஹோட்டல் பணியாளர்கள் பக்க கதவ வழியாக வெளி



யேற்றிக் கொண்டிருந்தனர். வெளியே வந்தவர்களை அதிரடிப் படையினர் எதிர் கொண்டு பாதுகாப்பான இடத்தில் தங்க வைத்தனர். குண்டடி பட்டவர்களின் சிகிச்சைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜோஷிதாவிடம் 'வா' என கையசைத்து விட்டு அந்த இளைஞன் முன்னால் நடந்தான். அவனைப் பின்பற்றி ஜோஷிதா அறையை விட்டு காலை எடுத்து வைத்ததும் அவர்களுக்கு மிக அருகில் துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்டது. தடதடவென ஷூக்களின் சப்தமும் கேட்க, அந்த இளைஞன் பின் வாங்கினான். பழையபடி ஸ்டோர் ருமிற்குள் நுழைந்து கதவைத் தாழிட்டான்.

கதவில் கண்ணையும், காதையும் வைத்தபடி அந்த இளைஞன் நின்று கொண்டிருந்தான். ஆட்கள் விரையும் ஓசையும், படபடவென்ற மெஷின் கன்னின் சீறலும் கேட்டது. வெளியே என்ன நடக்கிறது, இங்கிருந்து தப்பிச் சென்றவர்களின் நிலை என்ன என்பது புரியவில்லை.

ஜோஷிதா சுவரோரம் சரிந்து அமர்ந்தாள். அன்று காலையிலிருந்து அலைந்த அலைச்சலில், எதிர்பாராத கலவரத்தில், பசியில் மிகவும் துவண்டு போனாள். தூக்கமா, மயக்கமா என்று புரியாமல் எதுவோ கண்ணை மறைத்தது. இமைகள் தானாக ஒன்று சேர்ந்தன. தரையில் சரிந்து கண்களை மூடினாள்.

மேல் தளத்திலிருந்த ராமமூர்த்தியின் அறைக்கு மேலும் சில கைதிகள் கொண்டு வரப்பட்டனர்.

தீவிரவாதிகள் தங்கள் மெகா சைஸ் பையில் இருந்த உலர்ந்த பழங்களையும், பருப்புகளையும் அவ்வப்போது எடுத்து மென்று கொண்டே அடிக்கடி போனில் பேசுவதும், சுடுவதுமாய் இருந்தனர். வயிறு முட்ட சாப்பிடு

வதால் அசதி ஏற்படும். அதற்கு பதிலாக அவ்வப்போது சாப்பிடும் போது உடலுக்குத் தேவையான எனர்ஜி கிடைப்பதுடன் இயற்கை அழைப்பிற்கும் செவிசாய்க்க வேண்டியதில்லை. என்பதால் ஒரு பலூனை சுட்டு விளையாடும் குழந்தைகளின் குதூகலத்துடன் சாப்பிட்டபடியே மனிதர்களை சுட்டுக் கொண்டிருந்தனர். தாஜ் ஹோட்டலுடன் கூட டிரைடண்ட் ஹோட்டலும், நாரிமன் ஹவுசும் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுக்கு வந்திருந்தன. இம்மூன்று இடங்களிலும் இருந்த பொது மக்களை பிணையக் கைதிகளாக பிடித்து வைத்திருந்தனர்.

தீவிரவாதிகளுடன் துப்பாக்கி சண்டை நடத்திய காவல்துறை அவர்கள் வசம் பிணைக் கைதிகள் இருப்பது தெரிந்ததும் சற்று நிதானம் காட்டத் தொடங்கியது. தீவிரவாத எதிர்ப்புப் படையினரும் விரைந்து வந்து காவல் துறையுடன் சேர்ந்து கொண்டனர்.

ஜோஷிதாவை யாரோ உலுக்குவது தெரிந்தது. கண்களை அழுத்திய விழிகளைத் திறக்க முடியாமல் 'ம்' என்றாள் முனகலாக.

இப்போது பலமாக உலுக்கப்பட்டாள். ''ஏய்! நீ நன்றாகத்தானே இருக்கிறாய்? உனக்கு ஒன்றுமில்லையே!''

அந்த இளைஞனின் குரல் ஹிந்தியிலும், ஆங்கிலத்திலுமாகக் கேட்டது. ''ஐயம் ஓகே'' என்றாள் ஜோஷிதா. சொற்கள் வெளியே வராமல் தலை மட்டும் அசைந்தது.

அந்த இளைஞன் சுற்றிலும் தேடி கண்ணாடி ஜக்கிலிருந்த நீரை சரித்து ஜோஷிதாவின் முகத்தில் தெளித்தான். ஜில்லென்ற நீர் சடாரென முகத்தில் பட ஜோஷிதா கண்களைத் திறந்தாள்.

''ஓ! காட்'' என்றான் அந்த இளைஞன் நிம்மதிப் பெருமூச்சுடன். ''என்ன செய்கிறது உனக்கு?''



ஜோஷிதா முகத்தைத் துடைத்தபடி எழுந்து அமர்ந்தாள்.

அந்த இளைஞன் மறுபடி கேட்டான். ''ஆர் யு ஓகே நவ்?''

''எனக்கு பசிக்கிறது'' என்றாள் ஜோஷிதா.

''வாட்?''

''ஆமாம். எனக்கு ரொம்பப் பசிக்கிறது.''

அவன் விசித்திரமாக அவளைப் பார்த்தான். ''இப்போது நாம் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கிறோம். உயிர் பிழைத்துப் போவது பெரிய விஷயம்.''

''எப்படியும் போகிற உயிர், பசியுடன் ஏன் போக வேண்டும்? ஒருவேளை தப்பிச் செல்ல சந்தர்ப்பம் கிடைக்கும் போது பசியிலேயே என் உயிர் போய் விட்டால்?''

''சரியான கிறுக்குப் பெண் நீ'' என்றவன் அந்த அறை சாமான்களை விலக்கித் தேடினான்.

''என்ன பார்க்கிறாய்?''

''இது ஸ்டோர் ரூம் போல இருப்பதால் உணவுப் பொருட்கள் எதாவது ஸ்டோர் செய்யப் பட்டிருக்கிறதா என்று பார்க்கிறேன். கிடைத்தால் உன்னுடைய அதிர்ஷ்டம் தான்.''

''சரி, சீக்கிரமாய்த் தேடிப் பார்'' ஜோஷிதா அவனை விரட்டினாள்.

திரும்பி அவளை ஒரு பார்வை பார்த்தவன், ரேக்குகளிலும், அலமாரியிலும் அடுக்கப்பட்டிருந்த பொருட்களை விலக்கித் தேடினான். அலமாரிகளுக்கு நடுவே ஒரு கதவு தெரிய மெதுவாக விரல்களால் தள்ளினான். கதவு திறந்து கொண்டது. உள்ளே அறை இருட்டாகத் தெரிந்தது.

''உள்ளே யாராவது மறைந்திருக்கப் போகிறார்கள். ஜாக்கிரதை'' என்றாள் ஜோஷிதா.

''நீ இங்கேயே இரு'' என அவளை நிறுத்தி விட்டு அவன் மெதுவாக உள்ளே நுழைந்தான். அறையின் இருட்டு கண்களுக்குப் பழகியதும் சுவரைத் தடவி ஸ்விட்ச் பாக்ஸை கண்டு பிடித்தான். ஸ்விட்சைத் தட்டியதும் வீசிய ஒளி வெள்ளத்தில் அவன் கண்கள் விரிந்தன.

''வாவ்!'' என்றாள் சப்தமில்லாமல் அவனுக்குப் பின்னால் வந்து நின்ற ஜோஷிதா. அந்த அறை முழுக்க பார் பாராக ஐஸ்க்ரீம்களும், பழங்களும், கேக் வகைகளும் நிரம்பியிருந்தன. ஒரு தட்டு முழுக்க விதவிதமான ப்ரெட்கள் இருந்தன. வெண்ணெய் குவியலையும், சாஸ் வகைகளை ...ம் பார்த்த அந்த இளைஞன் ''இன்று உனக்கு கொஞ்சம் ...திர்ஷ்டம் இருக்கத்தான் செய்கிறது. சந்தேகமில்லை'' ...ன்றான் அவளிடம்.

''இத்தனை நேரம் உயிருடன் இருப்பதிலேயே என் ...திர்ஷ்டம் தெரிகிறதே!'' என்றாள் ஜோஷிதா.

''குண்டடி உன் மீது படும் வரை இந்த உணவுப் ...பாருட்கள் உன் உயிரைக் காப்பாற்றும், நிச்சயமாய்'' ...ன்றான் அவன்.

ஒரு பீங்கான் தட்டை எடுத்த ஜோஷிதா ப்ரெட் ...டயும், கேக் வகைகளையும் இடுக்கியால் எடுத்து தட் ...ல் வைத்தாள். பதப்படுத்தப்பட்ட மீன், மாமிச வகை ...ளைப் பார்த்தவள், ''பொரித்து வைத்திருந்தால் நன்றாக ...ருந்திருக்கும்'' என்றபடி மற்றொரு ப்ளேட்டில் பழங் ...ளும், நட்சும், கிண்ணத்தில் ஐஸ்க்ரீமுமாக சம்பிரதாய ...க சாப்பிட ஆரம்பித்தவளை அவன் தாங்க முடியாத ...யப்புடன் பார்த்தான். உயிர் போகிற நிலையிலும்,



தாங்க முடியாத பசியிலும் கூட தன் நளினத்தையும், நாசுக்கையும் இழக்காமல் செயல்படுவது இவளுக்குப் பிறவியிலேயே ஏற்பட்டதாயிருக்க வேண்டும் என்று தோன்றியது அவனுக்கு.

''நீயும் சாப்பிடு'' என்றாள் ஜோஷிதா ப்ளேட்டை அவனிடம் நீட்டியபடி.

''நீ எந்த நாட்டிலிருந்து வந்திருக்கிறாய்?'' என்றான் அவன் அதை கையில் வாங்காமல்.

''எதற்கு கேட்கிறாய்?''

''இந்தியர்களுக்கு உயிரை விட முக்கியமானது வேறு எதுவும் இல்லை.''

''எல்லா நாட்டிலும் அப்படித்தான்.''

''நீ சாவகாசமாய் விருந்து சாப்பிடுவதைப் பார்த்தால் உங்கள் நாட்டில் அப்படி இல்லை என்று தெரிகிறது.''

''ஏன்? உன்னைப் பார்த்தாலும்தான் உயிருக்கு பயந்தவன் போல் தெரியவில்லை'' என்றாள் ஜோஷிதா.

அவன் முகம் இறுகியது. ''உண்மைதான். உயிருக்கு பயந்தால் என்னால் வேலை பார்க்க முடியாது.''

''அப்படி என்ன வேலை செய்கிறாய்?'' என்றாள் ஜோஷிதா ஆர்வத்துடன்.

அவன் பதில் சீறலாக வந்தது. ''அது உனக்குத் தேவையில்லாத விஷயம்.''

தீவிரவாதத் தாக்குதலை சமாளிக்க டெல்லியிலிருந்து தேசிய பாதுகாப்புப் படையின் உதவியைக் கேட்டது மராட்டிய அரசு. அனுமதி வழங்கப்பட்டு கமாண்டோ படையும் தயார். ஆனால் வீரர்கள் உடனடியாக மும்பை செல்வதற்கு வசதியாக விமானம் எதுவும் இல்லை. மகாராஷ்ட்டிர மாநில தலைமைச் செயலாளர் ஜானி

உடனடியாக யோசித்து இந்திய கடற்படையின் மேற்குப் பிரிவான மார்கோஸின் உதவியைக் கேட்டார். உடனடியாக இரண்டு படைகள் அனுப்பப்பட்டன. ஒன்று தாஜ் ஹோட்டலுக்கும் இன்னொன்று டிரைடண்ட் ஹோட்டலுக்கும் சென்றது. கடற்படையினர் மீட்பு நடவடிக்கைகளில் இறங்கினர். ஆனால் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலின் வீரியம் கூடுதலாக இருந்தது. பகீரத முயற்சிகளுக்குப் பிறகு ஒரு வழியாக கமாண்டோ படையினர் டெல்லியிலிருந்து விமானம் பிடித்து மும்பைக்கு அனுப்பப்பட்டனர். வந்து சேர்வதற்கு ஒன்பது மணி நேரம் பிடித்தது.

ஜோஷிதா இருந்த அறைக்கு வெளியே நடமாட்டம் தெரிந்தது. ஏதோ பேச முற்பட்ட ஜோஷிதாவை 'ஷ்' ன்றான் அவன் உதட்டின் மீது விரல் வைத்து.

ஜோஷிதாவுக்கு வாயில் போட்ட ரொட்டித் துண்டு ர் தொண்டையில் விக்கின.

''தண்ணீர்... தண்ணீர் வேண்டும்...''

அவள் கை காண்பித்ததைக் கவனிக்காமல் அவன் வி துவாரத்தின் வழியே வெளியே நடமாட்டத்தைக் ண்காணித்தான்.

''விக்... விக்...''

ஜோஷிதா பெரிய சத்தத்துடன் விக்கவும், கதவருகே ரைந்த காலடி ஓசை தயங்கியது. அந்த இளைஞன் ஒரே டில் ஜோஷிதாவின் அருகே வந்து அவள் வாயைப் பாத்தினான். விக்கலுக்கும் அழுத்தமாய் பொத்திய வன் கரங்களுக்கும் இடையே ஜோஷிதா திணறத் தாடங்கினாள். கதவை யாரோ திறக்க முயற்சிக்கும் தம் கேட்டது. இருவரும் மூச்சுகூட விடாமல்



அமைதியானார்கள். சில நொடிகளில் கதவருகே தயங்கி நின்ற காலடி ஓசை தேய்ந்து மறைந்தது.

அவன் ஜோஷிதாவை எச்சரிக்கையுடன் பார்த்தபடி அவள் வாயிலிருந்த கையை விலக்கினான். இதழ்களை பற்களால் அழுத்தி ஜோஷிதா விக்கலை நிறுத்த முயன்றாள். அந்த இளைஞன் ஓடிச் சென்று அறை மூலையிலிருந்த பாட்டிலை எடுத்து வந்தான்.

''இதைக் குடி'' என்றான் பாட்டில் மூடியைத் திறந்து.

சற்றும் தயங்காமல் பாட்டிலில் இருந்ததை வாயில் சரித்தாள் ஜோஷிதா. ஒரு வழியாய் விக்கல் நின்ற போதும் தொண்டை எரிச்சலும், வயிற்று புரட்டலுமாய் இருக்கவே, ''எனக்கு குடிக்க என்ன கொடுத்தாய்?'' என்றாள் சந்தேகத்துடன்.

''கெடுதலாக எதுவுமில்லை. வெறும் ஷாம்பெய்ன் தான்.''

''மை காட். யு வார் சீட்டிங்'' என்றாள் ஜோஷிதா கலவரத்துடன். அவன் கடுமையுடன் அவளைப் பார்த்தான். ''உன்னை பாருக்கு அழைத்துப் போய் கூல்ட்ரிங்ஸ் என ஏமாற்றி நான் கொடுக்கவில்லை. நீ மிகவும் சிரமப்பட்டாய். அத்துடன் உன் விக்கல் நம் இருவரையும் காட்டிக் கொடுத்திருக்கும். ஆபத்துக்குப் பாவமில்லை என்பார்கள். ஆபத்து நேர செயல்களுக்கு விதிவிலக்கு உண்டு.''

டெல்லியிலிருந்து மும்பை வந்திறங்கிய கமாண்டோ படையினர் அவசரமாகத் திட்டம் வகுத்தனர். 'ஒவ்வொரு தளமாக செல்ல வேண்டும். அந்தந்த தளங்களில் இருக்கும் தீவிரவாதிகளுடன் மோதி, அவர்களை மூலைக்கு நகர்த்தி சென்று மோதலில் ஈடுபட வேண்டும்.

இடைப்பட்ட நேரத்தில் பயணிகள், பொதுமக்கள் அனை வரையும் பத்திரமாக வெளியேற்றி விட வேண்டும்.' கமாண்டோ படையின் உயர் அதிகாரி அருகில் இருந்த காவல்துறை அதிகாரியிடம் கேட்டார்.

''ஹோட்டலின் வரைபடம் எங்கே?''

ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ஹோட் டல் நிர்வாகத்திடம் கேட்டார்கள். யாரிடமும் இல்லை. தீவிரவாதிகளுக்கு எதிரான போராட்டம் சரியாக அந்த புள்ளியிலிருந்துதான் தொடங்கியது.

ஹோட்டலில் எத்தனை தளங்கள் உள்ளன? எந் தெந்த பக்கங்களில் எல்லாம் படிக்கட்டுகள் இருக் கின்றன? எங்கே பார் இருக்கிறது? உணவகம், எமர்ஜென்ஸி வழிகள் எங்கே? எதுவும் தெரியவில்லை கமாண்டோ படையினருக்கு. ஆனாலும் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டும். அபத்தமான, ஆபத்தான சூழல்.

அந்த இளைஞன் கையிலிருந்த வாட்ச்சில் மணி இரவு இரண்டாகி விட்டிருந்தது. ஹோட்டலில் சிக்கி யிருப்பவர்களை மீட்க அரசு என்ன நடவடிக்கை எடுத் திருக்கிறது என்று தெரியவில்லை. அந்த பெரியவரிடம் சொன்னது போல் இங்கு உண்மையாலுமே பாம் வைக் கப்பட்டிருக்கலாம். இந்த பெண்ணை எப்படியாவது இங்கிருந்து வெளியேற்றி விட்டால் நல்லது. சிறிது நேர யோசனைக்குப் பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவனாக மெதுவாகக் கதவைத் திறந்து வராண்டா வரை சென்று பார்த்தான். கண்ணுக்கெட்டிய தூரம் வரை யாரும் இல்லை.

வேகமாய் திரும்பி அறைக்கு வந்தவன் ஜோஷி தாவை எழுப்பினான்.



''ஏய் எழுந்திரு சீக்கிரம். வெளியே யாரும் இல்லை.''

..........

''ச்மிக்.. பாஸ்ட்.''

ஜோஷிதா முனகியபடி திரும்பிப் படுத்தாள். அவன் ஒரு அவசரத்துடன் உலுக்கினான். ''சீக்கிரம்... சீக்கிரமாய் போக வேண்டும். எழுந்து வா.'' அவளை எழுப்பி நிறுத் தினான். ஜோஷிதா நிற்க மாட்டாமல் கீழே சரிந்தாள். அவளின் முழு ஒத்துழைப்பு இருந்தால் தவிர இங்கிருந்து தூக்கிச் செல்வது கடினம் என்று உணர்ந்தவனாய் அவளை மீண்டும் சுவரில் சரித்து அமர வைத்தான்.

இப்போது சீக்கிரமாய் எதாவது முடிவெடுக்க வேண் டும். யார் கண்ணிலும் படாமல் அவன் உடனடியாக வெளியேறியே ஆக வேண்டும் என அனுபவம் மிக்க மூளை அறிவுறுத்தியது. துப்பாக்கியில் கையை வைத்த படி எச்சரிக்கையுடன் வெளியே வந்தான். திரும்பிக் கதவைச் சாத்த முற்பட்டவன் கண்ணில் சுவரோரம் தன்னை மறந்து சரிந்திருந்த ஜோஷிதா பட்டாள். சுருண்ட முடி முகத்தில் தவழ, அந்த பளிங்கு முகத்தில் தென்பட்ட குழந்தைத்தனம் அவன் மனத்தை தொட்டது. அவளுக்கு ட்ரிங்சை குடிக்கக் கொடுத்தது அவன்தான்.

சுயநினைவு இல்லாத நிலையில் இத்தனை அழகான பெண்ணுக்கு ஏதேனும் அசம்பாவிதம் நடந்தால் அதற்கு அவனும் தான் பொறுப்பு. உண்மை நெஞ்சை சுட, கால்கள் மேற்கொண்டு வெளியே செல்லத் தயங்கின. எப்போதும் ப்ராக்டிகலாக யோசித்து, எதைப் பற்றியும் கவலைப்படாமல் செய்து முடிக்கும் அவனுக்கு, வாழ்க் கையில் முதல் முதலாக அறிவுக்கும், உணர்ச்சிகளுக்கும் இடையே ஒரு போராட்டம் ஏற்பட்டது. வெகுவான

யோசனைக்குப் பிறகு, அவளுக்கு நினைவு திரும்பும் வரையாவது தான் கூட இருப்பது அவசியம் என்று தோன்ற மீண்டும் அறைக்குள் வந்து அவள் கண் விழிப்பதற்காக காத்திருக்கத் தொடங்கினான்.

கமாண்டோ படையினர் மெதுவாக ஹோட்டலுக்குள் நுழைந்தனர். உள்ளே தீவிரவாதிகள் எவரும் தென்பட வில்லை. திடீரென துப்பாக்கி சத்தம் கேட்டது. மறைந்து மறைந்து தீவிரவாதிகள் தாக்கத் தொடங்கினர். வரை படம் இல்லாததால் கமாண்டோ படையினருக்கு தலைகால் புரியாத தடுமாற்றம் ஏற்பட்டது. இதற்கு நேர் எதிராக தீவிரவாதிகள் ஹோட்டலின் ஒவ்வொரு அங்குலத்தையும் தெளிவாக அளந்து வைத்திருந்தனர். அதனால் தாக்குதல் நடத்திய மறுநொடி பாதுகாப்பான இடத்தில் பதுங்கிக் கொண்டனர். அவர்கள் ஜெரனைடு துண்டுகளை வீசியதால் கமாண்டோ படையினருக்கு சமாளிப்பது கஷ்டமாக இருந்தது.

நாரிமன் ஹவுஸில் ஏராளமான பிணைக் கைதிகள் தீவிரவாதிகளின் பிடியில் இருந்தனர். ஊடகங்கள் நொடிக்கு ஒரு முறை செய்தி வெளியிட்டு பதற்றத்தை அதிகரித்துக் கொண்டிருந்தன. நாரிமன் ஹவுஸில் ஹெலிகாப்டர் மூலம் மேல்தளத்துக்குச் சென்று இறங் கியது கமாண்டோ படை தொடர்ந்து துப்பாக்கி சூடு, தேடுதல் வேட்டை நடந்தது.

டிரைடண்ட் ஹோட்டலிலும் கமாண்டோ படையினர் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டிருந்தனர். உள்ளே இருந்தவர்கள் மெல்ல மெல்ல மீட்கப்பட்டுக் கொண் டிருந்தனர். அவ்வப்போது பிணங்களும் வெளியே கொண்டு வரப்பட்டன. டிரைடண்ட், தாஜ் இரண்டுமே



பல அடுக்குகளைக் கொண்ட ஹோட்டல்கள் என்பதால் தீவிரவாதிகள் எங்கெல்லாம் மறைந்திருக்கிறார்கள் என்ற முழுமையான விபரம் கிடைக்கவில்லை. இதனால் நிலைமையை சமாளிக்க மேலும் எழுபது கமாண்டோக் கள் மும்பை வந்திறங்கினர்.

ஜோஷிதா கண்களை விழித்துப் பார்த்தபோது விடிந்து வெகு நேரமாகி விட்டிருந்தது. இருக்கும் இடம் புரி யாமல் விழித்தவள் எதிரில் உறங்கிக் கொண்டிருக்கும் அந்த இளைஞனைப் பார்த்தாள். இரவு நடந்ததெல்லாம் நினைவு வர, 'இன்னும் இங்கேயா இருக்கிறோம்?' என்ற வியப்பு ஏற்பட்டது. இத்தனை நேரமாகியும் இந்த அறை யின் கதவு ஏன் தட்டப்படவில்லை? தங்களைக் காப்பாற்றவோ சுட்டுத் தள்ளவோ ஏன் இன்னும் யாரும் வரவில்லை? கூட இருந்தவர்கள் எல்லோரும் வெளி யேறிப் போக, எப்படி நானும், இவனும் மட்டும் சிக்கிக் கொண்டோம்?

துப்பாக்கியின் சத்தம் தொலைவில் கேட்டது. ஜோஷிதா சற்று துணிச்சலுடன் எழுந்து நின்றாள். இங்கிருந்து வெளியேறி விட வேண்டும். இங்கிருந்து நேராய் சென் றால் லாபி வரும். அங்கிருந்து பக்க வழியாய் வெளியே செல்ல வேண்டும் என்று முன்பு இங்கிருந்த பணியாளர் கள் சொன்னது நினைவுக்கு வந்தது. போய் பார்த்தால் என்ன என்று எண்ணியபடி ஜோஷிதா உறங்கிக் கொண் டிருந்த அந்த இளைஞனைப் பார்த்தாள். நல்ல உயரமும், உடற்கட்டுமாய் அவன் அந்த அறையையே நிறைத்த படி படுத்திருந்தான். நேரான மூக்கும், இறுகிய தசை களும் அயர்ந்த தூக்கத்திலும் அவன் கவனமாய் இருப்ப தான பிரேமையை ஏற்படுத்தின.

நேற்று இவன் இல்லை என்றால் ரெஸ்ட்டாரண்டி லேயே இறந்திருப்போம் என்ற எண்ணம் அவளைத் தயங்க வைத்தது. இந்த இடத்திலும் இரவு உணவு தேடித் தந்து என் ஆயுளை சில மணி நேரங்கள் நீடித்திருக்க உதவியிருக்கிறான் என்ற நன்றியுணர்வு அவள் காலை கட்டிப் போட்டது. பழையபடியே அமர்ந்து யோசிக் கையில் நிலைமையின் விபரீதம் புதிய சுவாரஸ்யத்தை ஏற்படுத்தியது.

சிறு வயதிலிருந்து ஜோஷிதாவின் வாழ்க்கை ஒரே சீராக இருந்தது. கிடைக்காத விஷயத்துக்கான ஏக்கங் களோ, சிக்கலான வாழ்க்கை முறையோ, வாழ்க்கையில் முன்னேற கடும் முயற்சியோ தேவைப்படாமல் அவ ளுக்கு விரும்பியவை எல்லாம் நிறைவாய் கிடைத்தன. டீன் ஏஜ் வயதில் தன்னுடன் படித்த தோழிகள் டேட்டிங் என்று சென்றபோதும், பெற்றோரின் பண்பட்ட வளர்ப்பு முறையினால் அவளுக்கு தன் ஆண் நண்பர்களிடம் நட்பைத் தாண்டிய ஈடுபாடு எதுவும் ஏற்படவில்லை. எனவே படிப்பு, வேலை, வீடு, சமயம் கிடைத்தபோது நண்பர்களுடன் பேசுவது என்றிருந்த ஜோஷிதாவின் வாழ்க்கையில் இந்தியா வந்ததிலிருந்து புதிய நிகழ்ச் சிகள் நடக்கத் தொடங்கின.

அதுவும் நேற்று இரவு நடந்த இந்த எதிர்பாராத சிக்கலி லிருந்து தான் எப்படி தப்புவது என்ற யோசனையும், எது வந்தாலும் கூட துணையிருக்கிறது என்ற ஆறுதலும் நிலைமையை மிகுந்த சுவாரஸ்யமாக்கியது.

சிறிது நேரத்தில் கண் விழித்த அந்த இளைஞன் எதிரில் தெரிந்த அவன் முகத்தைப் பார்த்ததும் ''மறுபடி யும் நீயா?'' என்றான் அலுப்புடன் ''இரவிலிருந்து உன் முகத்தை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''



''அதே நிலைதான் எனக்கும்.''

''ம்ஹூம். என் துரதிர்ஷ்டம். இன்று பாலிவுட்டில் எந்த நடிகையும் இங்கு டின்னர் சாப்பிட வரவில்லை போலும்!''

''நடிகைகளை பார்க்க வேண்டுமானால் நீ ஸ்டூடி யோக்களுக்குத்தான் போய் இருக்க வேண்டும். இங்கு எதற்காக வந்தாய்?''

''எனக்கு நடிகைகளைப் பார்க்க வேண்டும் என் றில்லை. குறைந்த பட்சம் ஒரு நடிகையேனும் கூட இருந்திருந்தால் இந்த சூழல் சற்று சுவாரஸ்யமாகலாம்.''

ஜோஷிதாவுக்கு சற்று முன் தான் இதே போல நினைத்தது நினைவுக்கு வர சிரிப்பு வந்தது. ''இல்லா தவர்களுக்காக ஏங்குவதை விட நாமே நேரத்தை சுவாரஸ்யமாக்கலாம்.''

''இந்த அறைக்குள் என்ன செய்வாய்?'' என்றான் அவன் அலட்சியத்துடன்.

''எதுவும் செய்ய முடியாதுதான். ஆனால் பேசிக் கொண்டிருக்கலாமே!''

''என்ன பேசுவது?''

''என்ன வேண்டுமானாலும் பேசலாம். முதலில் நம் பெயரைச் சொல்லி முறைப்படி அறிமுகம் செய்து கொள் ளலாம். என் பெயர் ஜோஷிதா. உன்னுடைய பெயர்?''

''அது உனக்கு தேவையில்லாதது'' என்றான் முகத் தில் அடித்தாற் போல்.

''இங்கிருந்து வெளியே சென்றவுடன் உனக்கும் எனக் கும் எந்த சம்பந்தமும் இருக்கப் போவதில்லை. அதனால் என் பெயரோ, ஊரோ உனக்கு அவசியமில்லை.''

''அவசியமில்லைதான். பின்னாளில் எப்போதாவது இந்த நிகழ்ச்சி நினைவுக்கு வரும்போது என்னை

ரெஸ்ட்டாரெண்டில் காப்பாற்றியது. இந்த அறையில் என்னுடன் அடைபட்டுக் கிடந்தது யார் என்றாவது எனக்குத் தெரிய வேண்டும் இல்லையா?''

''முதலில் பிழைத்துப் போனால்தான் ப்ளாஷ்பேக் பற்றி யோசிக்க முடியும்.''

''போயிருக்கலாம். உன்னால்தான் எல்லாம் வீணாயிற்று. சரியான தூங்கு மூஞ்சி.''

''உன்னை விடவா? இரவு நீ அப்படி மயங்கி விழாமல் இருந்திருந்தால் இந்நேரம் நான் என் வேலையைப் பார்க்க போயிருப்பேன்.''

''ரொம்பப் பேசாதே. நான் அப்படி மயங்கி விழ யார் காரணம் என்று யோசித்துப் பார்.''

''அந்த ஒரு காரணத்திற்காகத்தான் இன்னும் இங்கிருக்கிறேன்'' என்றான் அவன் எரிச்சலுடன்.

சிறிது நேர அமைதிக்குப் பிறகு ''எனக்கு பசிக்கிறது'' என்றாள் ஜோஷிதா.

''இதைத் தவிர உனக்கு எதுவுமே தெரியாதா?'' என்றான் அவன் கோபத்துடன். ''ஸ்டோர் ரூமில் இருக்கும் உணவுப் பொருட்களையும், மிச்சம் மீதியிருக்கும் ஷாம்பெய்னையும் காலி பண்ணிவிட்டு இன்று முழுவதும் இங்கேயே விழுந்து கிடக்கலாம் என்று ப்ளான் பண்ணியிருக்கிறாயா?''



## 6

கமாண்டோ படையினரின் தாக்குதல் தீவிரமாகவே, தீவிரவாதிகள் தாக்குதல் தொடராமல் தடுக்க தாஜ்



ஹோட்டலின் மேற்கூரை மீது குண்டுகளை வீசினார்கள். இதனால் மேற்கூரை பற்றி எரியத் தொடங்கியது.

நெருப்பின் ஜ்வாலையையும், ஒயர்கள் வெடிக்கும் ஓசையையும் துல்லியமாக உணர்ந்த அந்த இளைஞன் அவசரமாக எழுந்தான். ஓசைகளை கவனித்து கதவைத் திறந்து ''வா'' என்றான் அவளிடம். ஜோஷிதாவும் அவனும் சுற்றிலும் பார்த்தபடி மெதுவாய் நடந்தார்கள். சுவர்களின் மறைவிலும், சேரின் மறைவிலும் பதுங்கி லாபியை அடைந்தார்கள். யாரோ நடக்கும் சத்தம் கேட்கவே, சடாரென ஒரு சோபாவின் பின் மறைந்தவன், ஒரே இழுப்பில் ஜோஷிதாவையும் அருகே கொண்டு வந்தான். காலடி ஓசை அருகில் கேட்க இருவரும் மூச்சை இழுத்துப் பிடித்தவர்களாய் அசையாமல் இருந்தனர். அந்த இளைஞனின் பாக்கெட்டிலிருந்த துப்பாக்கி இப்போது அவன் கைக்கு வந்திருந்தது. அவனைப் பார்த்த ஜோஷிதாவுக்கு ஒரு ஹோட்டலில் சாப்பிட வருபவன், இத்தனை முன் எச்சரிக்கையாக துப்பாக்கியுடன் வருவானா? என அந்தச் சூழ்நிலையிலும் எண்ணத் தோன்றியது.

அந்த இளைஞன் சோபா இடைவெளியில் பார்த்த போது, ஹாலில் ஒருவன் மெஷின் கன்னுடன் நின்றிருப்பது தெரிந்தது. குறுக்கும், நெடுக்குமாய் இருமுறை நடந்தவன், சற்று முன் அவர்கள் தங்கியிருந்த ஸ்டோர் ரூம் வரை சென்று அதன் கதவைத் திறந்து பார்த்துவிட்டுத் திரும்பி வந்தான். ஜோஷிதா முதுகில் ஏதோ ஊர்ந்த உணர்வில் கைகளை அசைத்தாள். மிக மெல்லிய அந்த அசைவு போகத் திரும்பியவர்கள் கவனத்தை எப்படியோ எட்டியிருக்க வேண்டும். திரும்பி அவர்கள் இருந்த பக்கமாய் வந்தார்கள். உத்தேசமாய் சோபாவைக்

குறி வைத்து சுட்டார்கள். ஜோஷிதாவின் தலைக்கு மேல் குண்டுகள் சீறிப் பாய்ந்தன. ஜோஷிதா பயத்துடன் அவன் தோளைப் பற்றினாள். அவர்களின் இடதும், வலதுமாய் குண்டு மழை பொழிய இருவரும் இறுக அணைத்தபடி கல்லாய் சமைந்து போனார்கள்.

சிறிது நேரத்தில் துப்பாக்கியின் ஓசை நின்றது. அறையில் யாரும் இல்லை என்று அவர்கள் திருப்தியடைந்திருக்க வேண்டும். காலடிகள் விலகி படிகளில் ஏறிச் செல்லும் சத்தம் கேட்டது.

ஜோஷிதா சுயஉணர்வு பெற சிறிது நேரம் பிடித்தது. அந்த இளைஞன் மெதுவாக தலைதூக்கிப் பார்த்தபோது தோட்டாக்கள் இறைந்து கிடந்ததைத் தவிர அங்கே யாரும் இல்லை. மறுபடி யாராவது வருவதற்குள் போய்விட வேண்டும். தோள்பட்டையில் சுரீலென வலிக்கவே, தன்னை இறுகப் பற்றியிருந்த ஜோஷிதாவின் கரங்களை விலக்கினான். ஜோஷிதாவைப் பின் தொடருமாறு தலை அசைத்துவிட்டு அருகிலிருந்த சுவர் மறைவுக்குச் சென்றான். ஜோஷிதா மருட்சியுடன் அவன் தோளைப் பற்ற 'ஷ்...' என்றான் வலிக்கிற குரலில்.

தோளைப் பற்றியிருந்த ஜோஷிதாவின் கைகளில் இரத்தம் வழிந்தது.

''மை காட்'' ஜோஷிதா பதட்டத்துடன் தோளைப் பரிசோதித்தாள்.

''புல்லட் பாய்ந்திருந்தது. இரத்தம் வேறு வெளியேறிக் கொண்டிருக்கிறது. நீ உடனடியாய் சிகிச்சைப் பெற வேண்டும்.''

''பேசாதே'' என்றான் அவன் தாங்க முடியாத எரிச்சலுடன்.



''உண்மையைத்தான் சொல்கிறேன்'' என ஜோஷிதா சொல்லவும், அவன் சொன்னான். ''இதோ, இந்த வலது புறம் திரும்பினால் வெளியேறும் வாயில் இருக்கிறது. நீ சீக்கிரம் போ. போலீசும், கமாண்டோ படையும் ஹோட்டலைச் சுற்றி வளைத்திருப்பதால் நுழைவாயில் பகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டம் இருக்காது. நீ இங்கே இப்படி நிற்பது ஆபத்து. போய்விடு'' என்றான் அவசரமாக.

''நீ?''

''இங்கிருந்து எப்படி தப்பிச் செல்வதென எனக்குத் தெரியும். நீ போ.''

''ஆனால் இப்படி குண்டடி பட்டிருக்கிற நிலையில் எப்படிப் போவாய்? இத்தனை இரத்தம் வெளியேறுகையில் இன்னும் சில நிமிடங்களில் மயக்கமாகி விடுவாய். நீயும் இப்போதே என்னுடன் வந்துவிடு.''

''சுற்றிலும் போலீஸ் நிற்கிறது. என்னால் வர முடியாது. வேறு எதாவது வழியிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். நீ போ இங்கிருந்து.''

ஜோஷிதாவை பிடித்துத் தள்ளினான் அவன்.

''போலீஸார் நமக்கு உதவத்தான் செய்வார்கள். அவர்களைக் கண்டு ஏன் தயங்குகிறாய்?'' என்றாள் அவனை விட்டுக் கிளம்ப மனசில்லாமல்.

சோர்ந்திருந்த அவன் கண்களில் கோபம் பளிச்சிட்டது. ''சொன்னதைச் செய்'' என்றான் கடினமான குரலில்.

வேறு வழியின்றி ஜோஷிதா அங்கிருந்து நகர்ந்தாள். அவர்கள் மறைந்திருந்த இடத்திலிருந்து வாயில் ஒரு பத்தடி தூரம்தான் இருக்கும். அவள் அவனை திரும்பிப் பார்த்தபடியே நடந்தாள்.

21.11.2008 வியாழன்.

நாரிமன் ஹவுசில் அறுபது பிணைக் கைதிகளை மீட்டது கமாண்டோ படை. மொத்தம் ஆறு பேர் கொல்லப்பட்டிருந்தனர். அபு உமர் என்ற நசீர் மற்றும் இன்னொரு தீவிரவாதி இருவரும் கமாண்டோ படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

டிரைடண்ட் ஹோட்டலும் மெல்ல மெல்ல ஆபத்து நிலையில் இருந்து மீண்டது. இருநூற்று ஐம்பது பேர் மீட்கப்பட்டனர்.

தாஜ் ஹோட்டலில் அடைக்கப்பட்டிருந்த அனைத்து பிணைக் கைதிகளையும் விடுவித்த கமாண்டோ படையினர், தீவிரவாதிகளையும் சுட்டுக் கொன்றனர், தீயணைப்புப் படையினரும், காவல் துறையினரும் தாஜ் ஹோட்டலுக்குள் நுழைந்தனர்.

அவர்கள் நுழைந்த வேகத்தில் தயங்கி நின்றாள் ஜோஷிதா. நான்கு பேர் அவளை சூழ்ந்து கொள்ள மற்றவர்கள் ஹோட்டலுக்குள் விரைந்தனர்.

''யார் நீ? எப்படி இங்கு வந்தாய்?'' என்ற அவர்களின் கேள்விகளுக்கு பதில் சொன்ன ஜோஷிதாவின் பார்வை தன்னையும் அறியாமல் அந்த இளைஞன் மறைந்திருந்த சுவர் பக்கம் சென்றது. அங்கு தரையில் இரத்தம் கோலமிட்டிருப்பதைப் பார்த்தவள் திடீரென ஒரு முடிவெடுத்துச் சொன்னாள். ''என் நண்பனுடன் உணவருந்த வந்தேன். அவன் குண்டடி பட்டு ஆபத்தான நிலையில் இருக்கிறான்.''

''எங்கே உன் நண்பன்?''

''அதோ, அங்கே இருக்கிறான்.''

அங்கே விரைந்து சென்ற போலீசார், சோர்வில் கண்கள் மூடித் துவண்டிருந்த அந்த இளைஞனைச்



சுமந்து வந்தனர். ஹோட்டலுக்கு வெளியே தயாராய் நின்றிருந்த ஆம்புலன்சில் அவனைப் படுக்க வைத்தவர்கள், ''நீயும் இவனுடன் போ'' என்றார்கள் ஜோஷிதாவிடம்.

''நானா?''

''ஆமாம், உன் நண்பன் ஆபத்தில் இருக்கிறான். அவனுக்கு உன் உதவி தேவைப்படக்கூடும். அத்துடன் அவனுடைய, உன்னுடைய முகவரி எல்லாம் எங்களுக்கு வேண்டும்.''

போலீஸ் வாகனங்களும், பத்திரிகையாளர்களும், தொலைக்காட்சி நிருபர்களும் பொதுமக்களுமாய் ஏக பரபரப்புடன் இருந்தது அங்கே. கிட்டத்தட்ட தாஜ் ஹோட்டலிலிருந்து முந்நூறு பேர் வெளியேற்றப்பட்டனர். ஒவ்வொருவராக வர வர, தொலைக்காட்சி நிருபர்களும், கேமராக்களும் அவர்களை சூழ்ந்து கொண்டனர். ''உள்ளே எத்தனை பேர் இருந்தார்கள்? அவர்கள் உங்களைத் துன்புறுத்தினார்களா? எப்படித் தப்பித்து வந்தீர்கள்?'' என்ற அவர்களின் சரமாரி கேள்விகளுக்கு வெளியேறி வந்தவர்கள் பீதியுடன் பதிலளித்துக் கொண்டிருந்தார்கள். ஜோஷிதாவைப் பார்த்ததும் சிலர் ஆம்புலன்சின் அருகே வர, படுக்க வைக்கப்பட்டிருந்த அந்த இளைஞன் தன் காலால் ஆம்புலன்சின் கதவைச் சாத்தினான்.

''எதற்காக கதவை மூடினீர்கள்?'' என்றாள் உள்ளே இருந்த நர்ஸ்.

''யாருக்கும் நான் காட்சிப் பொருளாக விரும்பவில்லை'' என்றான்.

அவன் ''உன்னை இதற்காகத்தான் முதலிலேயே வெளியே சொன்னேன்'' என்றான் ஜோஷிதாவிடம் பற்களைக் கடித்தபடி.

''பர்ஸ்ட் எய்ட் பாக்ஸ் இருக்கிறதா?'' என்றாள் ஜோஷிதா அந்த நர்சிடம்.

''இருக்கிறது.''

''அந்த பாக்ஸை எடு. உடனடியாக ரத்தத்தை நிறுத்த வேண்டும்'' என்றாள் ஜோஷிதா.

''அதற்காகத்தான் மருத்துவமனைக்குப் போகிறோம். அங்கே டாக்டர்கள் பார்த்துக் கொள்வார்கள்'' என்றாள் அந்த நர்ஸ்.

''மருத்துவமனை போய் சேருவதற்குள் நிலைமை ஆபத்தாகலாம். உடனடியாக இவனுக்கு முதலுதவி அளிக்கப்பட வேண்டும். நானும் ஒரு டாக்டர் தான். நான் பார்த்துக் கொள்கிறேன்.''

அந்த நர்ஸ் முதலுதவி பெட்டியை எடுத்துக் கொடுக்க, படுத்திருந்த அந்த இளைஞன் சடாரென திரும்பினான்.

''இப்போ நீ என்ன சொன்னாய்?''

''முதலுதவி செய்ய வேண்டும் என்றேன்.''

''அதில்லை. நீ ஒரு டாக்டர் என்பது உண்மையா?''

''உண்மைதான். இதில் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.''

அவன் சில நிமிடங்கள் தீவிர யோசனையில் ஆழ்ந்தான்.

ஜோஷிதா இரத்தத்தில் நனைந்திருந்த அவன் சட்டையை விலக்கி பஞ்சினால் அவன் காயத்தை சுத்தம் செய்தாள். ''நல்லவேளை. குண்டு சதையை மட்டுமே துளைத்திருக்கிறது'' என்றாள் அவனிடம்.

பஞ்சையும், துணிகளையும் வைத்து இரத்தத்தை முடிந்தவரை நிறுத்தி கட்டு கட்டினாள். ஆம்புலன்சில் காலில் குண்டு பாய்ந்த ஒரு வெளி நாட்டுப்



பெண்மணியும் அதிர்ச்சியால் ஏற்பட்ட நெஞ்சு வலி யுடன் வாய் விட்டு அரற்றியபடி ஒரு பெரியவரும் உடன் இருந்தனர். ஜோஷிதா அந்தப் பெண்ணின் காயத்தையும் பரிசோதித்து கட்டுப் போட்டாள்.

பெரியவருக்கு தற்காலிகமாய் வலி குறைவதற்கான மருந்தைக் கொடுத்து அசையாமல் படுத்திருக்கும்படி சொன்னாள். ''நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. நாம் பாதுகாப்பான இடத்திற்கு வந்து விட்டோம். இனி எந்தக் கவலையும் இல்லை. மனசை அமைதிப்படுத்திக் கொண்டு தூங்கப் பாருங்கள்.''

அவள் பேசப்பேச பெரியவரின் பதட்டம் சற்றே தணிந்தது. கண்களை மூடி அசையாமல் படுத்தார்.

ஜோஷிதா ஆம்புலன்சின் கண்ணாடிக்கு வெளியே பார்த்தாள். வழக்கமாக மக்களால் நிரம்பி சுசகசக்கும் நகரம் இன்று திகில் கலந்த பரபரப்புடன் காணப்பட்டது. எந்த மூலையில் என்ன வெடிக்குமோ என்ற பயத்துடன் மக்கள் நடமாடினர். ஆம்புலன்சில் அவர்களுடன் அமர்ந்திருந்த போலீஸ் வயர்லெஸ்சில் தொடர்ந்து பேசியபடி இவர்களிடமும் கேள்வி கேட்டார். ''சொந்த ஊர் எது? ஹோட்டலுக்குள் அட்டாக் எப்படி நடந்தது? சுமாராய் அங்கு எத்தனை பேர் இருந்தார்கள்? இவர்கள் எப்படித் தப்பினார்கள்?'' என அவர் கேள்வி மேல் கேள்வியாய் கேட்க,

''மீடியாவிடமிருந்து தப்பி இவரிடம் மாட்டிக் கொண்டோம்'' அவன் மெதுவான குரலில் முணுமுணுத்தான்.

''உன் நண்பன் என்ன சொல்கிறான்?'' என்றார் அவர் ஜோஷிதாவிடம்.

''வலிக்கிறது என்கிறான்.''

''மருத்துவமனை அருகில்தான் இருக்கிறது'' என்றாள் நர்ஸ்.

ஆம்புலன்ஸ் வண்டி ஒரு கூட்டத்தில் தயங்கி நின்றது. ஒரு காரும், பஸ்சும் ஒரே நேரத்தில் திரும்ப முயற்சித்து முடியாமல் நிற்க, அவற்றிற்கு முன்னும் பின்னும் வாகனங்கள் அணி வகுக்க ஆரம்பித்தன. அந்த போலீஸ் அதிகாரி ஆம்புலன்சை விட்டு இறங்கி, போக்குவரத்தை ஒதுங்கச் செய்த கணத்தில் அந்த இளைஞன் தன் இருக்கையை விட்டு எழுந்தான். அருகிலிருந்த ஜோஷிதாவின் கைகளைப் பற்றியபடி அதிலிருந்து குதித்தான்.

''ஏய், இங்கே எதற்கு இறங்குகிறாய்? இன்னும் மருத்துவமனை வரவில்லை'' என ஜோஷிதா சொன்னதை காதில் வாங்காமல் அவள் கையைப் பற்றியபடி ஓடத் தொடங்கினான். ஆம்புலன்சிலிருந்த நர்ஸ் கத்தவும் முன்னாலிருந்த காரை நகர்த்துவதில் உதவிக் கொண்டிருந்த போலீஸ் அதிகாரி திரும்பிப் பார்த்தார். ஜோஷிதாவுடன் அந்த இளைஞன் விரைந்து செல்வதைப் பார்த்தவர், அவர்களை துரத்தத் தொடங்கினார். அவரை திரும்பிப் பார்த்த அந்த இளைஞன் அவர் அவர்களை நெருங்கும் முன் தன் பாக்கெட்டிலிருந்த துப்பாக்கியை எடுத்து ஜோஷிதாவின் கழுத்துக்கு குறி வைத்தான்.

''ஒரு அடி எடுத்து வைத்தாலும் இந்தப் பெண்ணின் உயிர் போய் விடும்.''

பட்டப் பகலில் நடுத் தெருவில் நடந்த அந்த எதிர்பாராத சம்பவத்தில் எல்லோரும் திகைத்துப் போனவர்களாய் நின்றிருக்க, போலீஸ் தன் ஒயர்லெஸ்சில் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு தகவல் கொடுத்து முடிப்பதற்குள் அந்த இளைஞன் ஜோஷிதாவுடன் மறைந்திருந்தான்.



ஜோஷிதா மிரட்சியுடன் அந்த அறையை மறுபடி பார்த்தாள். சின்ன அறை. அறையை அடைத்தபடி கட்டில், மெத்தை போர்வைகள். ஓரமாய் திவான் ஒன்று. மரத்தடுப்புக்கு பின்னே கேஸ் ஸ்டவ்வும் சில பாத்திரங்களும் இருந்தன. அறையின் ஓரமாய் டாய்லெட் இருந்தது.

ஒரு சேரில் அமர்ந்திருந்த அவன் ''ம் சீக்கிரம் செய்'' என்றான் அதட்டலாக.

''என்ன செய்ய வேண்டும்?''

''என் தோள் பட்டையிலிருக்கும் தோட்டாவை வெளியே எடுக்க வேண்டும்.''

''அதற்காகத்தானே மருத்துவமனைக்குச் சென்று கொண்டிருந்தோம்.''

''அங்கு ஆபரேஷன் செய்வதுடன், அநாவசிய கேள்வி கேட்பார்கள்.''

''அவர்கள் கேட்கும் அவசியமான கேள்விகளுக்கு பதில் சொல்வதில் உனக்கென்ன கஷ்டம்?''

''கேள்விகள் எனக்குப் பிடிக்காது. உன் கேள்வியையும் சேர்த்து.''

''நிர்பந்தங்கள் எனக்கும் பிடிக்காது. உன்னுடைய நிர்பந்தமும் கூட.''

''நீ ஒரு டாக்டர். நோயாளியைக் காப்பாற்றுவது உன் கடமை. இந்த பர்சில் வேண்டிய பணம் இருக்கறது. உன் பீஸாக எடுத்துக் கொள். எனக்கு சிகிச்சை செய்.''

''நான் பணத்துக்காக மட்டுமே இந்த தொழிலை தேர்ந்தெடுக்கவில்லை மிஸ்டர். நான் என் வேலையை செய்வதற்கு முன் நீ யார் என்று தெரிய வேண்டும்.''

''நான் யாராக இருந்தாலும், எப்படிப்பட்டவனாக இருந்தாலும் உன்னைப் பொறுத்தவரை ஆபத்தான நிலையில் இருக்கும் ஒரு நோயாளி. நோயாளியைக் காப்பாற்றுவது உண்மையான டாக்டரின் தொழில் தர்மம்.''

''உண்மைதான். ஆனால் போலீசை கண்டு ஒடும் நீ ஒரு குற்றவாளியாக இருந்தால்?''

''அப்படியே இருந்தாலும் ஒரு குற்றவாளியைக் குணப்படுத்திய பிறகுதானே சட்டமே தண்டிக்கிறது!''

ஜோஷிதா யோசனையில் ஆழ்ந்து போக, அவன் மேற்கொண்டு பேச முடியாதவனாய் அமர்ந்திருந்த நாற்காலியில் பின்னால் சரிந்தான்.

இயல்பிலேயே படிந்து போன மருத்துவ குணம் தலை தூக்க, ஜோஷிதா தான் இத்தனை நேரம் பேசியவற்றை மறந்து அவன் அருகில் சென்றாள். ''எனக்கு சில மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் வேண்டும்.''

அவன் எதிரிலிருந்த கப்போர்ட்டைக் காட்டினான். அதில் ஒரு மருத்துவமனையில் அவசரத்துக்குத் தேவையான எல்லா உபகரணங்களும் இருப்பதைப் பார்த்து வியந்தவளாய் ''இன்னும் சில மருந்துகள் வேண்டும். இங்கு மெடிக்கல் ஷாப் ஏதேனும் இருக்கிறதா?'' என்றாள் அவனிடம்.

''இருக்கும். ஆனால் நீ எதற்காகவும் வெளியே போகத் தேவையில்லை. இந்த கத்தியால் குண்டை வெளியே எடுத்து விடு. அஸ்தீஷியா தேவையில்லை. என்னால் வலி தாங்க முடியும்.''

''உன்னால் எதையும் தாங்க முடியும் என்று நன்றாகத் தெரிகிறது. ஆனால் ஆபரேஷன் முடிந்து தையல்



போடுவதற்கு நீடிலுடன் இன்னும் சில பொருட்களும் வேண்டும்.''

சோர்வுடன் கண்களை மூடியிருந்த அவன் ''எதுவும் வேண்டாம்'' என்றான் முணுமுணுப்பாக.

ஜோஷிதா கீழே கிடந்த அவன் பர்சை எடுத்துக் கொண்டு அந்த அறையை விட்டு வெளியே வந்தாள். இதே போல் வரிசையாய் எதிரும் புதிருமாய் அறைகளும் அவற்றில் குடித்தனங்களும் இருந்தன. இந்த குகையில் எப்படி வசிக்க முடிகிறது என்று எண்ணியபடி நடையில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த பெரியவரிடம் ''அங்கிள் இங்கே மெடிக்கல் ஷாப் எங்கே இருக்கிறது?'' என்றாள், ஜோஷிதா.

அவளையும், அவளது பிரிட்டிஷ் ஆங்கிலத்தையும் வியப்புடன் கவனித்து ''நீங்கள் யார்? இங்கே யார் வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள்?'' என்றார் அவர்.

தன்னை இழுத்து வந்தவனின் பெயர் கூடத் தெரியாத நிலையில், அந்தக் கேள்வி பூதாகரமாய் எழுந்து அவள் முன் நின்றது. அவள் பதில் சொல்வதற்குள் குடத்துடன் அவள் அருகே வந்த ஒரு பெண் ''ஜி யார் அது?'' என்றாள் ஜோஷிதாவை புதிராகப் பார்த்தபடி.

ஜோஷிதா அவளிடமும் மருந்து கடையைப் பற்றி விசாரித்தாள். ஜோஷிதாவின் ஆங்கிலம் புரியா விட்டாலும் மெடிக்கல் ஷாப் என்ற வார்த்தையைப் புரிந்து கொண்டு, அவள் விபரம் சொன்னாள். வேகமான அந்த ஹிந்தி தெரியவில்லை எனினும் அவள் கைகாட்டிய திசையில் ஜோஷிதா விரைந்தாள். அது மும்பையின் எந்தப் பகுதி என்று புரியாமல் ஒரே அடைசலாக இருந்தது. சுகாதாரமற்ற தெருக்களும், ஒழுங்கின்றி விரையும் வண்டிகளும் அவளை பயமுறுத்தின.

'இந்த நேரம் லண்டன் ப்ளைட்டில் அமர்ந்திருக்க வேண்டியவள் தெரியாத இடத்தில் தெரியாத ஆளுக்காக தெருவில் அலைவது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. எல்லாம் ஹரிஷால் வந்தது.

அவள் இந்தியா வருவதையே ஒரு திருவிழாவாக நினைத்துக் கொண்டாடியவன், நீ இல்லாமல் உயிர் வாழ மாட்டேன் என அவ்வப்போது கவிதை பேசி உருகியவன் தாஜ் ஹோட்டலில் துப்பாக்கியைப் பார்த்ததும் அவளை எப்படி மறந்து போனான் என்பது நம்ப முடியாததாக இருந்தது. ஹோட்டலில் தாக்குதல் நடந்த அறுபது மணி நேரமும் ஸ்டோர் ரூமில் அடைந்து கிடந்தபோது ஜோஷிதாவுக்கு அவ்வப்போது தோன்றத்தான் செய்தது. பொதுமக்களைக் காப்பாற்ற இந்த ஹோட்டல் பணியாளர்களும், முன்பின் தெரியாத இந்த இளைஞனும் உதவியதைப் போல தன் வருங்கால மனைவியைக் காப்பாற்ற ஹரிஷ் ஏன் எந்த முயற்சியும் செய்யவில்லை? ஒரு கோழையைப் போல் ஓடிப் போனான்?

இவனை நம்பி இங்கே வந்ததும், வாழ்க்கையை அமைத்துக் கொள்ள துணிந்ததும் எத்தனை முட்டாள்தனம்?

ஜோஷிதா மருந்துடன் திரும்பி வந்து பார்க்கையில் அவன் கீழே படுத்திருந்தான். ஜோஷிதா ஒரு இன்ஜெக்ஷனை அவனது புஜத்தில் சொருகியதும் பாதி கண்களைத் திறந்தான்.

''திரும்பி வந்துவிட்டாயா?'' என்றான் ஆச்சரியத்துடன்.

ஜோஷிதா அதற்கு பதில் சொல்லாமல் வேலையில் இறங்கினாள்.

நோயாளி விழித்துக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணம் அவளை தயங்க வைத்தது. அவன் வலியில் கை



கால்களை அசைத்தால், திரும்பினால் அதிக சேதம் ஏற்படலாம். அவனை அசையாமல் பிடித்துக் கொள்ள யாரையாவது கூப்பிடலாம் என்று எண்ணி எழுந்தவளின் கைகளைப் பற்றினான் அவன். சோர்ந்த நிலையிலும் அந்த கைகளுக்கு இருந்த வலு வியக்க வைக்க, ''உன் வேலையை கவனி'' என்றான் கடுமையான குரலில்.

அந்த குரல் அவளை கோபப்படுத்தினாலும் அவனது பலவீனம் அவளை இயங்க வைத்தது.

ஜோஷிதா அவன் கட்டைப் பிரித்து, காலில் குத்திய முள்ளையும் லாவகத்துடன் அவள் தோள்பட்டையிலிருந்த குண்டையும் அப்புறப்படுத்தி விட்டு தையல் போட்டு ஆன்டி பயாடிக் மருந்துகளை செலுத்தினாள். அவன் முகம் சுளிக்காமல், அசையாமல் அப்படியே படுத்திருந்தான்.

''வெரிகுட்'' என்றாள் அவள் ஒத்துழைப்புக்கிற்காக முகம் மலர்ந்து.

சற்று நேரத்தில் மருந்தின் வேகத்தில் அவன் உறங்கி விட, ஜோஷிதா தன் கைகளை சுத்தப்படுத்திக் கொண்டு தரையில் படுத்திருந்தவனை யோசனையுடன் பார்த்தாள். 'இவனை கட்டிலில் படுக்க வைக்க முடிந்தால் நன்றாக இருக்கும். யாரையாவது துணைக்கு அழைத்தாலும் அவன் கோபித்துக் கொள்ளக் கூடும். என்ன செய்வது?' என்று நினைத்தபடி அவள் நின்றிருக்கையில் பெகன்ஜி என்ற குரல் கேட்டது.

மருந்து கடைக்கு அவளுக்கு வழிகாட்டிய பெண்ணும், அவள் கணவனும் நின்றிருந்தார்கள்.

''நீங்கள் சாருக்கு உறவா? நாங்கள் எதிர் வீட்டில்தான் இருக்கிறோம். ஏதேனும் உதவி தேவை என்றால்

சொல்லுங்கள்'' என்றான் அந்தப் பெண்ணின் கணவன் அரைகுறை ஆங்கிலத்தில்.

''ஆமாம். நானே யாரிடமாவது உதவி கேட்க எண்ணியிருந்தேன். இவனை கட்டிலில் தூக்கி படுக்க வைக்க வேண்டும்.''

அப்போதுதான் கீழே படுத்திருந்தவனை உற்று கவனித்தவர்களாய் பதட்டத்துடன் அவன் அருகில் வந்தார்கள். ''சாருக்கு என்னவாயிற்று?'' என்றார்கள் தோளிலிருந்த கட்டைப் பார்த்து கவலையுடன்.

ஒரு நிமிடம் தயங்கிய ஜோஷிதா சொன்னாள். ''ஒரு ஆக்ஸிடன்ட் ஆகிவிட்டது.''

''பாவம்..'' என்ற அந்த பெண் ஹிந்தியில் ஏதோ சொல்லி புலம்ப அவர்கள் மூவரும் அலுங்காமல் அவனை கீழேயிருந்து தூக்கி கட்டிலில் படுக்க வைத்தனர்.

''நீங்கள் இவருக்கு உறவா?'' என அவர்கள் மீண்டும் கேட்கவும், ஜோஷிதா தலையசைத்து வைத்தாள்.

''இருங்கள். இதோ வருகிறேன்'' என்று வெளியே சென்ற அந்த பெண் சில நிமிடங்களில் மூடிய பாத்திரத்துடன் திரும்பி வந்தாள்.

''இதை சாப்பிடுங்கள். சாப்பிட்ட பின் அவருக்கும் கொடுங்கள்'' என பாத்திரத்தை டேபிள் மீது வைத்துவிட்டுத் திரும்பிப் போனாள்.

''பெகன்ஜி இப்போது இங்கு நிலைமை சரியில்லை. நீங்கள் புதிதாக இங்கே வந்திருக்கிறீர்கள் என நினைக்கிறேன். வீட்டை விட்டு தனியே எங்கும் போகாதீர்கள். ஏதாவது வேண்டுமென்றால் 'கபூர்' என்று எனக்கு ஒரு குரல் கொடுங்கள். என் மனைவி பெயர் தாராபாய். எங்கள் இருவரையும் எதற்காகவும் கூப்பிட நீங்கள்



தயங்க வேண்டியதே இல்லை. ஏனென்றால் கிரண் ஸார் எங்கள் உடன்பிறவா சகோதரனைப் போல. இப்போது கதவைத் தாழிட்டுக் கொள்ளுங்கள்'' என்று எழுந்து வெளியே போனான்.

ஜோஷிதா கதவைத் தாழிட்டு வந்து தரையில் அமர்ந்தாள். கிரண் நல்ல பெயர்தான். தனக்குள் புன்னகைத்தபடி தாராபாய் கொண்டு வந்து வைத்த பாத்திரத்தைத் திறந்தாள். சுக்கா ரொட்டியும், சப்ஜியும் பசிக்கு வெகு ருசியாக இருந்தன. கிரணுக்கு தனியாக எடுத்து வைத்துவிட்டு ஜோஷிதா பாத்திரங்களை மூடி வைத்தாள்.

அறை ஜன்னலுக்கு வெளியே அந்த தெரு இரைச்சலாகத் தெரிந்தது. பான்பராக்கைத் துப்பியபடியே ஆண்களும், வகிடிலிருந்து தலைவரை நீண்ட குங்குமம் அணிந்து தலையை முக்காடிட்டபடி பெண்களும் போய்க் கொண்டிருந்தனர். பளிர் நிறத்திலும், ஜிகினா வேலைப்பாடு நிறைந்த உடையிலும் இங்குள்ள பெண்கள் அழகாய் ஜொலித்தனர். சைக்கிள் ரிக்ஷாக்களும், ஆட்டோவும், கார்களும் செல்லும் அந்த தெருவில் பசுக்களும் கவலையின்றி திரிந்தன. ஹரிஷ் வீடு இருந்த பகுதி நகரின் மையப் பகுதியிலிருந்து தள்ளி இருந்ததாலும், அங்கு பெரும்பாலும் வசதியானவர்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதிகளே இருந்ததாலும் ஜோஷிதா இத்தனை நெருக்கத்தை இதுவரை பார்க்கவில்லை. வியப்புடன் சிறிது நேரம் தெருவை வேடிக்கைப் பார்த்தவள், பிறகு டி.வி.யை ஆன் பண்ணி சத்தம் குறைத்தாள்.

டி.வி. திரையில் பிரம்மாண்டமாய் தாஜ் ஹோட்டலும், மேற்புறம் புகை மூட்டமும் தெரிந்தது. நாரிமன்

ஹவுஸ், டிரைடண்ட் ஹோட்டல், காமா மருத்துவமனை, இரயில் நிலையம் அனைத்திலும் நடந்த கோர சம்பவங்களை அத்தனை சேனல்களும் போட்டி போட்டுக் கொண்டு ஒலிபரப்பின. எத்தனை பெரிய ஆபத்திலிருந்து தப்பினோம் என்றிருந்தது ஜோஷிதாவுக்கு. நாமும் பிணைக் கைதியாக்கப் பட்டிருந்தால்? அல்லது ஸ்டோர் ரூமிலிருந்து சரியான சமயத்தில் வெளியேற தவறியிருந்தால்? என்பதை நினைத்துப் பார்க்கவே உடல் சிலிர்த்தது. தூங்கிக் கொண்டிருக்கும் கிரணைப் பார்த்தவளுக்கு இவனால்தான் தப்பிப் பிழைத்தோம் என்ற நன்றியுணர்வு எழுந்தது.

செய்திகளைப் பார்த்தபடியே யோசனையில் மூழ்கியிருந்த ஜோஷிதா திடுமென நிமிர்ந்து அமர்ந்தாள். செய்தி வாசிக்கும் பெண் ஆங்கிலத்தில் கூறிக் கொண்டிருந்தார். "பொதுமக்களுடன் கலந்து தீவிரவாதிகளும் தப்பிச் சென்றிருக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. காயம்பட்டவர்களை போலீசார் உதவியுடன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் தோளில் குண்டு பாய்ந்த தீவிரவாதி ஒருவனும் அவனுடைய கூட்டாளியான ஒரு பெண்ணும் தப்பிச் சென்றுவிட்டனர். அவர்களை போலீசார் வலை வீசி தேடி வருகிறார்கள்.

செய்திகளுக்கு நடுவே தாஜ் ஹோட்டலிலிருந்து போலீஸார் கிரணை தூக்கிச் செல்வதையும், அவர்களுக்கு பின்னால் நடந்த ஜோஷிதாவின் முதுகுப்புறமும் தெரிந்தது. கிரண் தலை மறுபக்கம் திருப்பியிருந்ததால் அவன் முகம் தெளிவாகத் தெரியவில்லை.

எத்தனை பெரிய சிக்கலில் சிக்கிக் கொண்டோம் என்று ஜோஷிதாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அந்நிய



நாட்டில் தீவிரவாதி என்று முத்திரை குத்தப்பட்ட பின் அதிலிருந்து மீள்வது லேசான விஷயம் இல்லை.

ஜோஷிதாவுக்கு அப்போதுதான் அவளுடைய ஹேண்ட் பேக் நினைவுக்கு வந்தது. எம்பசிக்குப் போக வேண்டியிருந்ததால் அவள் ஹரிஷ் வீட்டிலிருந்து கிளம்பும்போது தன் பாஸ்போர்ட்டையும் கையோடு எடுத்து வந்திருந்தாள்.

அவளுடைய செல்போனும், லண்டன் திரும்புவதற்கான டிக்கெட்டும் ஹேண்ட் பேக்கில்தான் இருந்தது. உணவருந்தும் மேஜை மீதுதான் அவள் தன் ஹேண்ட் பேக்கை வைத்திருந்தாள். இந்த கலவரத்தில் அது யார் கையில் கிடைத்திருக்கும்? வேண்டாத கரங்களில் கிடைத்திருந்தால்?

அம்மாவுக்கும், அப்பாவுக்கும் இந்நேரம் தகவல் தெரிந்திருக்குமா? தப்பி ஓடிய ஹரிஷ் அவர்களிடம் என்ன சொல்லியிருப்பான்? ஜோஷிதா தீவிரவாதிகளிடம் அகப்பட்டுக் கொண்டாள் என்று சொல்லியிருப்பான். விடுவிக்கப்பட்டவர்களில் அவள் இல்லாததைக் கண்ட அம்மாவும் அப்பாவும் பயந்து போவார்கள். அதற்குள் தான் பத்திரமாக இருப்பதை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

கதவின் தாளை திறந்தவளுக்கு தன்னை அறியாமல் கால்கள் தயங்கின. 'போலீசார் என்னைத் தவறாக கணித்திருக்கும் இந்த நேரத்தில் யாராவது என்னை அடையாளம் கண்டு கொண்டால்?' கதவை மூடிவிட்டு ஜோஷிதா அப்படியே அமர்ந்தாள். இப்போது என்ன செய்வது? ஹரிஷ் வீட்டினரை தொடர்பு கொள்ளலாம் என்றால் கூட அவர்கள் போன் நம்பர் அவள் வசம் இல்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக கையில் ஒரு ரூபாய் கூட இல்லை. மாற்று துணி இலலை. கண்ணைக் கட்டி காட்டில் விட்டதைப் போலிருந்தது. ஒரு விளையாட்டை அனுபவிக்கும் த்ரில்லுடன் இத்தனை நேரம் இருந்தவளுக்கு நிலைமையின் விபரீதம் அப்போதுதான் புரிந்தது. 'அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு நாம் போனால் என்ன? போய் உண்மையை விளக்கிக் கூறினால் அவர்களே தவற விட்ட பாஸ்போர்ட், டிக்கெட்டைக் கண்டு பிடித்துத் தருவதுடன் அவள் லண்டன் போய் சேரவும் உதவி செய்வார்கள்.' யோசிக்க, யோசிக்க ஜோஷிதாவுக்கு அதுவே சரி என்று பட்டது.

ஜோஷிதா ஒரு முடிவுக்கு வந்தவளாய் எழுந்து மேஜை மேலிருந்த ஜக்கிலிருந்த நீரை சரித்துக் குடித்தபோது கட்டிலில் பெரிய முனகல் சப்தம் கேட்டது. கிரண் உடலை முறுக்கியபடி புரண்டு கொண்டிருந்தான். ஜோஷிதா அருகில் சென்று அவன் நாடியை பரிசோதிப்பதற்காக கையைப் பற்றினாள். கை அனலாய் சுட்டது. நெற்றியை தொட்டுப் பார்த்தாள். சூடு பறந்தது. முகம் ஜுரத்தில் தணலாய் ஜொலித்தது. இந்த நிலையில் இவனை மாத்திரையை விழுங்க வைப்பது சிரமம் என்றுணர்ந்தவளாய் உடனடியாக ஊசி மூலம் மருந்தை உள்ளே செலுத்தினாள். அவன் உடல் தூக்கிப் போட்டது.

ப்ரிட்ஜ்ஜிலிருந்த ஐஸ்க்யூப்களை மெல்லிய துணியில் சுற்றி ஜோஷிதா அவனுக்கு ஒத்தடம் கொடுத்தாள். ஜன்னலில் ஒரு கயிறை மாட்டி அதில் க்ளுக்கோஸ் பாட்டிலை தொங்க விட்டு அவன் உடலில் ஏற்றினாள். அவன் புரள்கையில் கையில் சொருகியிருக்கும் ட்யூபுகள் நகர்ந்து விடாமல் இருக்க, அவன் கையைப் பிடித்தபடி அசையாமல் அமர்ந்திருந்தாள். ஒரு மணி நேரத்தில்



அவன் ஜுரம் குறைந்து உடல் வியர்க்கத் தொடங்கியது. அலட்டல்கள் படிப்படியாக குறைந்து அவன் சீராக உறங்கத் தொடங்கவும், ஜோஷிதா சோர்வுடன் எழுந்தாள். அருகிலிருந்த திவானில் சாய்ந்தவள் களைப்பு மேலிட உடனே உறங்கிப் போனாள்.

காலை வெய்யில் சுரீலென முகத்தைத் தாக்க கட்டிலில் படுத்திருந்த கிரண் கண்களை விழித்தான். திரும்பிப் படுக்க நினைத்து வலதுபுறம் திரும்பியவனுக்கு சுரீலென வலித்தது. நடந்தது நினைவுக்கு வந்தவனாக சடாரென எழுந்து அமர்ந்தான். தன் அறையில் பாதுகாப்பாக இருக்கிறோம் என்பதை உணர்ந்தவன், திவானில் உறங்கிக் கொண்டிருந்த ஜோஷிதாவை நம்ப முடியாத வியப்புடன் பார்த்தான். 'இந்த பெண் ஏன் இன்னும் இங்கிருந்து போகவில்லை? நேற்று ஆபரேசனே செய்ய மாட்டேன் என்று கூறியவள் பிறகு எப்படி இங்கேயே தங்கிக் கொண்டாள்?

வெளிநாட்டிலிருந்து வந்திருப்பதாகச் சொன்னாள். இங்கே எங்கு தங்கியிருக்கிறாள் என்று தெரியவில்லை. ஒருவேளை இங்கே தங்கியிருக்கும் இடத்திற்குப் போக வழி தெரியவில்லையோ என்னவோ? இவள் பெயர் கூட ஏதோ சொன்னதாக நினைவு. இப்போது யோசிக்கையில் நினைவு வர மறுத்தது. சரி எழுந்தால் கேட்டுக் கொள்ளலாம்' என கட்டிலில் கையை ஊன்றி எழுந்தபோது புறங்கையில் சுருக் என்றது. ப்ளாஸ்டர் ஒட்டப்பட்டிருந்த தன் புறங்கையையும், ஜன்னலில் சுருட்டி தொங்க விடப்பட்டிருந்த காலி க்ளுக்கோஸ் பாட்டிலையும் வியப்புடன் பார்த்தபடி எழுந்து போய் பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டு வந்ததும் கதவு தட்டப்பட்டது.

"இப்போது எப்படியிருக்கிறீர்கள் கிரண்ஜி? உடம்பு தேவலையா?" என்றபடி கபூர் தேநீர் கோப்பைகளுடன் உள்ளே வந்தான்.

"எனக்கு உடல்நிலை சரியில்லாதது உனக்கெப்படித் தெரியும்? நேற்று நான் இங்கு வரும்போது வெளியே யாருமே இல்லையே!" என்றான் கிரண்.

"ஆனால் ஜோஷிதாவைப் பார்த்தோம். மருந்து கடைக்கு வழி கேட்டாள். இரவு ஜுரம் அதிகமாகவும் பதறிப் போனாள். ஊசியும் க்ளுக்கோசும் போட்டுவிட்டு ஜுரம் இறங்கும் வரை உங்கள் அருகிலேயே அமர்ந்திருந் தாள். மோசமான விபத்து ஏற்பட்ட போதும் உங்கள் உறவுப் பெண் டாக்டராக இருந்ததும், உங்கள் கூடவே இருந்ததும் பெரிய அதிர்ஷ்டம். அதனால்தான் உயிர் பிழைத்தீர்கள்."

கபூர் சொல்வதை கவனமாகக் கேட்டிருந்தவனுக்கு அவன் அவள் பெயரை சொன்னதும் 'நல்லவேளை நினைவு படுத்தினாய்' என்றான் மனதுக்குள்.

"இந்தப் பெண் உங்களுக்கு என்ன உறவு கிரண்ஜி? இதுவரை இங்கே வந்து நாங்கள் பார்த்ததே இல்லையே!" என்றான் கபூர் ஆர்வத்துடன்.

"கஸின்" என்றான் கிரண் ஒத்தை வார்த்தையில். தான் கொண்டு வந்த சூடான தேநீரை கோப்பையில் ஊற்றிக் கொடுத்தபடி, "இந்த விபத்து எப்படி நடந்தது ஸார்?" என்றான் கபூர்.

"ஜோஷிதா சொல்லியிருப்பாளே!" என்றான் கிரண் முன் ஜாக்கிரதையாக.

"ஆக்ஸிடன்ட் என்று சொன்னார்கள்."

"ஆமாம். பைக் ஸ்கிட் ஆகிவிட்டது" என்றான் கிரண் சாதாரணமாக.



"நல்லவேளை பெரிதாய் அடி இல்லை. ஜோஷி தாவும் அப்போது உடன் இருந்தார்களா? அல்லது தகவல் கேள்விப்பட்டு வந்தார்களா?" என்றான் கபூர்.

பேச்சை மாற்ற விரும்பிய கிரண். "நம்முடைய அடி சிறியதுதான் கபூர். மும்பை நகரே பெரிய விபத்தில் சிக்கியிருந்ததே!" என்றான் கபூரிடம்.

"ஆமாம் ஜி. இரண்டு நாளாய் நாங்கள் எல்லாம் ஆடிப் போய் விட்டோம். சமீப காலமாய் இந்த நகரம் தொடர் குண்டு வெடிப்பு, துப்பாக்கி சூடு சம்பவங்கள் என தீவிரவாத அச்சுறுத்தலில் சிக்கித் தவிக்கிறது. நாம் அமைதியை விரும்பும் மக்கள் நமக்கு ஏன் எதிரி கள் உருவாக வேண்டும்?" என்றான் கபூர் கவலையுடன்.

"இதற்கான காரணம் வரலாற்றின் பக்கங்களில் இருக் கிறது கபூர். நமக்கு சுதந்திரம் கிடைத்தபோதே போன சாக பிரச்சனைகளும் கிடைத்தன" என்றான் கிரண் முகவாயைத் தடவியபடி.

ஜோஷிதாவின் தூக்கம் கலையாமல் இருக்கும் பொருட்டு இருவரும் எழுந்து வந்து வராண்டாவில் அமர்ந்தனர். ஒரு சால்வை தோளில் போர்த்தியபடி கிரண் அங்கிருந்த பெஞ்சில் அமர, அவனுக்கு எதிரே படியில் அமர்ந்த கபூர் விட்ட பேச்சை தொடர்ந்தான்.

"ஆனாலும் இது அநியாயம் கிரண் ஸார். பாகிஸ் தானிடம் நாம் எந்த வம்புக்கும் போவதில்லை. அவர்கள் ஏன் நம்மை எப்போதும் தொல்லைப்படுத்த வேண்டும்?"

"நியாய அநியாயங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடு கிறது கபூர். நம் நாட்டின் ஒரு பகுதியை ஆக்கிரமிக்க பாகிஸ்தான் செய்யும் செயல்கள் நமக்கு தீவிரவாதம். அதே நடவடிக்கைகள் அவர்களுக்கு சுதந்திர போராட்டம்.

நம் நாட்டு குழந்தைகள் கான்வென்ட் யுனிபாரமில் ஈ பார் ஆப்பிள் என்று ரைம்ஸ் பாடிக் கொண்டிருக்கும்போது பாகிஸ்தான் குழந்தைகளுக்கும் இஸ்லாம், ஜிகாத், காஷ்மீர் எல்லாம் புரிந்து விடுகிறது.

ஏனென்றால் அங்கு படித்தவர்கள் சதவீதம் மிக குறைவு. உளவுத்துறைக்கும் ராணுவத்திற்கும் செலவிடுகிற தொகையில் பாதியளவு கூட அங்கு கல்விக்கோ, மனிதவள மேம்பாட்டிற்கோ ஒதுக்கப்படுவதில்லை. மதக்கல்வி போதிக்கும் மதரஸாக்கள் கூட இப்போது ஆயுத கோர்ஸ் ஆரம்ப பாடசாலைகளாக மாறிவிட்டன. ரிப்பன் வெட்டி கடையைத் திறப்பது போல் அந்த நாட்டு அரசியல்வாதிகளுக்கு என்ன பிரச்சனை வந்தாலும் முதல் வெட்டு ஜனநாயகத்துக்கு தான் விழும். நினைத்தால் டீ குடிப்பது போல நினைத்தால் ஜனநாயகத்தை கலைத்து விட்டு ராணுவ ஆட்சி கொண்டு வந்து விடுவார்கள். ஒவ்வொரு முறையும் ராணுவம் ஆட்சிக்கு வந்ததும் செய்கிற முதல் அறிவிப்பு காஷ்மீரை எப்படியும் கைப்பற்றி விடுவோம் என்பதுதான். வறுமையை ஒழிப்போம் என நம் அரசியல்வாதிகள் காலங்காலமாக சொல்கிற மாதிரி அவர்கள் காஷ்மீரை பிடிப்போம் என்று விடாது சொல்லி வருகிறார்கள்.

'பெட்ரிலகாவஸ்கி' என்ற சரித்திர ஆராய்ச்சியாளர் ஒருமுறை பாகிஸ்தான் நியூஸ் பேப்பரில் எழுதியிருந்தார்.

''மூன்று விஷயங்களைப் புரிந்து கொள்வதற்காக என் வாழ்நாளில் பெரும்பகுதியை செலவிட்டிருக்கிறேன். ஆனால் இன்றுவரை என் முயற்சி தோல்விதான். ஒன்று கடவுள். இரண்டாவது வறுமை. மூன்றாவது பாகிஸ்தான் பாலிடிக்ஸ்.''



கவனத்துடன் கேட்ட கபூர் குழப்பத்துடன் தலையசைத்தான். ''அவ்வளவு பெரிய ஆராய்ச்சியாளருக்கே புரியாதபோது. நாம் இப்படி புலம்புவதில் அர்த்தம் இல்லை.''

கிரணைப் பார்த்த அக்கம் பக்கத்தினர் அவனிடம் நலம் விசாரித்தார்கள்.

''இன்று வேலையில்லையா என்ன? கபூருடன் அட்டை அடிக்க உட்கார்ந்து விட்டாய்?''

''நம் கமாண்டோ படையினரின் சாகசத்தை டி.வி.யில் பார்த்தாயா?''

''உண்மையான ஹீரோக்கள் அவர்கள்தான்.''

''கொடூரமான தாக்குதல். தெளிவான திட்டங்கள். துல்லியமான செயல்பாடுகள் என கச்சிதமாக ப்ளான் பண்ணியிருக்கிறார்கள் பார்த்தாயா?''

''உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீல் ராஜினாமா செய்ய வேண்டும் என எதிர்கட்சிகள் மிரட்டுகின்றன.''

''அடுத்த உள்துறை அமைச்சர் ஒரு தமிழராக இருக்கலாம் என்கிறது காங்கிரஸ் வட்டாரம்.''

கிரணைச் சுற்றி அமர்ந்து நாட்டு நடப்பை விவாதித்தனர். பெரியவர் சோம்நாத்ஜி அவனைப் பார்த்து விட்டு அருகில் வந்தார்.

''வீட்டிற்கு விருந்தாளி வந்திருக்கிறார் போலிருக்கிறது'' என்றார் சிரிப்புடன்.

கிரண் பதில் பேசாது தலையசைத்தான்.

''வந்த நேரம் பார்த்து உனக்கு உடம்பு சரியில்லை போலும். அந்த பெண் நேற்று என்னிடம் மருந்து கடைக்கு வழி கேட்டாள்.''

இவள் இன்னும் எத்தனை பேரிடம் வழி கேட்டிருப்பாள் என்ற எரிச்சல் வந்தது அவனுக்கு.

"பெண் ரொம்ப அழகாய் இருக்கிறாளே! உனக்கு என்ன உறவு? பார்த்தால் நம்மூர் பெண் போல தெரியவில்லையே!" சோம்நாத்ஜி விடாது அவனது எரிச்சலில் எண்ணெய் வார்த்தார்.

"என் கஸின். வெளிநாட்டிலிருந்து ஊரைச் சுற்றிப் பார்க்க வந்திருக்கிறாள்."

"ஓ! அதனால்தான் உன்னையும் கொஞ்ச நாட்களாக காணோமா?"

கிரண் தலையசைத்து வைத்தான்.

"சரி, உனக்கு உடம்புக்கு என்ன வந்தது?" என்றார் திடீரென நினைவு வந்தவராக.

"பெரிதாக எதுவும் இல்லை. பைக்கில் போகும்போது தோள்பட்டையில் அடிபட்டு விட்டது."

"அடிக்கடி விபத்தில் மாட்டிக் கொள்வது உனக்கு வழக்கமாக போய் விட்டது. வாலிப வயதில் வேகம் இருப்பது இயல்புதான். ஆனாலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டாமா?"

"இந்த முறை ஆபத்தில்லை ஜி. ஏனென்றால் ஸாரின் கஸின் ஒரு டாக்டர்" என்றான் கபூர் புன்னகையுடன்.

"அப்படியா?" என்ற சோம்நாத்தின் கண்களில் தெரிந்த ஆர்வத்தைப் பார்த்த கிரண் அவர் ஜோஷிதா பற்றி அடுத்த கேள்வி கேட்கும் முன் எழுந்தான்.

"நான் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கணும்."

"செய்யுங்கள்" என பேசிக் கொண்டிருந்தவர்கள் எழுந்து கொள்ள,

கிரண் தன் அறைக்குள் சென்று கட்டிலில் சாய்ந்தான்.



ஜோஷிதா இன்னும் உறங்கிக் கொண்டிருந்தாள். தலையணையோ, போர்வையோ இல்லாமல் வானத்திலிருந்து தேவதை ஒருத்தி வானத்திலிருந்து தவறி தரையில் விழுந்து விட்டதைப் போல் கிடந்தாள். கிரண் தன் கட்டிலிலிருந்து ஒரு தலையணையை எடுத்து அலுங்காமல் அவள் தலைக்குக் கீழே வைத்தான். மெல்லிய போர்வையை கழுத்துவரை போர்த்து விட்டான். எசியை கூட்டி வைத்துவிட்டு அசதி கண்களை அழுத்த தானும் மறுபடி தூங்கிப் போனான்.

# 7

யாரோ விடாமல கதவைத் தட்டவும் ஜோஷிதா அலுப்புடன் எழுந்து போய் கதவைத் திறந்தாள்.

"என்ன, ரெண்டு பேரும் ஓரேயடியாய் தூங்கறீங்க?" என்றபடி தாராபாய் உள்ளே நுழைந்தாள். "முதலில் பல்லைத் துலக்கிக் கொண்டு சாப்பிடுங்கள். பிறகு தூங்கலாம்" என்றாள் உரிமையுடன்.

ஜோஷிதா பல் துலக்கி, முகம் கழுவி திரும்பி வந்த போது கிரண் எழுந்து அமர்ந்திருந்தான்.

தாராபாய் பரிமாறிய சூடான உணவை இருவரும் அமைதியாக சாப்பிட்டு முடித்தனர். களைப்பு நீங்கி புதிய தெம்பு வந்தவளாய் "மிக்க நன்றி" என்றாள் ஜோஷிதா மனப்பூர்வமாக.

தாராபாய் காலி பாத்திரங்களுடன் கிளம்பிப் போனதும் "இப்போது எப்படியிருக்கிறது?" என்றாள் ஜோஷிதா அந்த வேளைக்கான மருந்தைப் பிரித்தபடி.

''இதோ, இந்த டாக்டரின் தயவால் நன்றாக இருக் கிறேன்'' என்றான் கிரண்.

''உனக்கு யாரைப் பற்றியும் யோசிக்க வேண்டிய அவசியம் இல்லாததால் நன்றாகத்தான் இருப்பாய்'' என்றாள் ஜோஷிதா கடுப்புடன்.

''என்ன யோசிக்க வேண்டும் நான்?''

''என்னைப் பற்றி யோசித்திருக்க வேண்டும். ஒரு ஹோட்டலுக்கு டிபன் சாப்பிட வந்தவளை உன்னுடன் இழுத்து வந்து விட்டாய். இதனால் ஏற்பட்டிருக்கும் விளைவுகளைப் பார்த்தாயா? என்னுடைய பாஸ்போர்ட், செல்போன், கிரெடிட் கார்ட், டிக்கெட் என்று எதுவுமே என்னிடம் இல்லை. இந்த இடம், நீ எதுவும் தெரிய வில்லை. வேற்று கிரகத்தில் மாட்டிக் கொண்ட மாதிரி இருக்கிறது.''

''இது ரொம்ப முரண்பட்ட உதாரணம். என்னைப் பார்த்தால் வேற்று கிரகவாசி போலவா இருக்கிறது?''

''நிச்சயமாய். உன்னைப் பார்த்தால் மனிதனாகவே தெரியவில்லை.''

கிரண் புன்னகைத்தான்.

''சிரிக்காதே. உன் முகத்தைப் பார்க்கவே பிடிக்க வில்லை'' என்றாள் ஜோஷிதா கோபத்துடன்.

''பிறகு என் இன்னும் இங்கேயே தங்கியிருக்கிறாய்? நேற்று நான் மயங்கிய உடன் நீ வெளியே சென்றிருக் கலாமே! யார் தடுத்தது உன்னை?''

''என் மனதிலேயே ஊறிப் போன ஒரு மருத்துவருக்கே உள்ள பச்சாதாபம்தான் தடுத்தது. அதை உன்னால் புரிந்து கொள்ள முடியாது கிரண்.''



''என் பெயரை தெரிந்து கொண்டது பற்றி ரொம்ப சந்தோஷம். ஆனால் நீ ஒரு கடமை தவறாத டாக்டர் என்று புரிந்ததால்தான் உன்னை கட்டாயமாக இழுத்து வந்தேன். ஹோட்டலில் உன்னை நுழைவாயில் வழியாக வெளியேறச் சொல்லிவிட்டு நான் மறைந்து நின்றேன். உயிர் தப்பிக்கும் அந்த அவசரத்திலும் உன்னை என் நண்பன் என்று சொல்லி எனக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தது நன்றாக நினைவிருக்கிறது'' என்றான் கிரண்.

''இந்த சோப் எல்லாம் எனக்கு வேண்டாம். நீ ஏற்படுத்திய சிக்கலிலிருந்து நீதான் என்னை விடுவிக்க வேண்டும். உடனடியாக நான் ஊர்போய்ச் சேர வேண் டும். முதலாவதாக என் பெற்றோரிடம் நான் பத்திரமாக இருப்பதைத் தெரிவிக்க வேண்டும்.''

''இரண்டாவதாக சொன்னதை உடனே செய்யலாம்'' என்ற கிரண் எழுந்து போய் அலமாரியைத் திறந்து தன் செல்போனை எடுத்து வந்து அவளிடம் கொடுத்தான். ''இந்த போனில் எப்போது வேண்டுமானாலும் உன் பெற்றோரிடம் பேசலாம். ஆனால் முதலாவதாக நீ கேட்ட விஷயத்தைச் செய்ய இன்னும் சில நாள் ஆக லாம். ஏனென்றால் நீ தீவிரவாதிகளுடன் சம்பந்தப்பட் டவள் இல்லை என போலீசாருக்கு உறுதி படுத்தும் முன்பு நான் உடனடியாக செய்து முடிக்க வேண்டிய வேலைகள் சில இருக்கின்றன. அதுவரை நான் உன்னுடன் வெளியே வர முடியாது. உன் பெற்றோருடன் பேசும்போது கூட நலம் விசாரிப்புகளுடன் நிறுத்திக் கொள். என்னைப் பற்றியோ, என்னுடன் தங்கி இருப்பதாகவோ சொல்லத் தேவையில்லை.''

''சொல்லவே மாட்டேன். பயப்படாதே. உன்னைப் போல் முன் பின் தெரியாத ஒருவனுடன் தன் பெண் தங்கியிருப்பதைக் கேட்டு எந்த பெற்றோரும் சந்தோஷப்பட மாட்டார்கள்.''

கிரண் கொடுத்த போனில் தன் வீட்டு எண்ணை தொடர்பு கொண்ட ஜோஷிதா, இணைப்பு கிடைக்கக் காத்திருந்த அவகாசத்தில் ''நான் என் வீட்டினருடன் பேசுகிறேன்'' என்றாள் அவனிடம்.

''எனக்குத் தெரியுமே!'' என்றான் அவன்.

''அடுத்தவர் பேசும்போது கேட்பது அநாகரீகம்.''

''அப்படியா? யாராவது உன் பின்னால் வந்து நீ பேசுவதை கேட்டார்களா?'' என்றான் கிரண் வியப்புடன்.

அவனை முறைத்த ஜோஷிதா, போனில் அப்பாவின் குரல் கேட்டதும் ''அப்பா'' என்றாள் உரத்த குரலில். உணர்ச்சி வசத்தில் குரல் நடுங்கியது.

''ஜோஷி... ஜோஷிதா. நீ எங்கே இருக்கிறாய்? எப்படியிருக்கிறாய்?'' பரசுராமனின் குரல் பதறியது.

''நான் நன்றாக இருக்கிறேன் அப்பா'' என ஜோஷிதா முடிக்கும் முன் கணவனின் கையிலிருந்த போனை பறித்த கீதா ''ஜோஷிதா உண்மையாலுமே நீதானே பேசுகிறாய்? உனக்கு ஒன்றுமில்லையே!'' என்றாள் பதட்டத்துடன்.

''நான் பாதுகாப்பாக இருக்கிறேன். எனக்கு காயமோ, ஆபத்தோ எதுவும் இல்லை'' என அவள் பலமுறை சொன்ன பிறகே அவர்கள் சமாதானமானார்கள்.

''நீயும் ஹரிஷும் டின்னருக்குப் போகும் முன்பு உன்னிடம் பேசியதுதான். பிறகு மூன்று நாளாய் உன்னிடமிருந்து போன் இல்லை. அப்பாவும் நானும் ரொம்ப



பிஸியாக இருந்ததால் டி.வி. கூட பார்க்கவில்லை. அங்கு நடந்த விஷயம் தெரியவில்லை. இன்று காலை தான் ஹரிஷ் போன் செய்து, நடந்த தீவிரவாத தாக்குதலில் நீ காணாமல் போய் விட்டதாகவும், எங்கே இருக்கிறாய் என்ற தகவலே தெரியவில்லை என்றும் சொன்னான். ஜோஷிதா, அதைக் கேட்டதிலிருந்து எங்கள் உயிர் எங்களிடம் இல்லை. நாங்கள் இப்போது இந்தியா கிளம்பிக் கொண்டிருக்கிறோம்.''

''அதற்கு அவசியம் இல்லை அப்பா. நானே விரைவில் அங்கே வந்து விடுவேன்.''

''இப்போது நீ எங்கே இருக்கிறாய்? ஹரிஷை வந்து அழைத்துப் போகச் சொல்கிறேன்'' என்றார் பரசுராமன்.

''வேண்டாம். நான் ஏற்கனவே அவர்கள் வீட்டிலிருந்து வெளியே சென்று ஷீலாவுடன் தங்கிக் கொள்வதாகத்தான் இருந்தேன். என்னுடைய பாஸ்போர்ட் கிடைத்ததும் நான் கிளம்பி வந்து விடுகிறேன். ஷீலாவிடம் மட்டும் நான் பாதுகாப்பாக இருப்பதைத் தெரிவியுங்கள்'' என்றாள் ஜோஷிதா.

''ஜோஷிதா, ஹரிஷ் வீட்டினருடன் உனக்கு ஏதாவது பிரச்சனையா?'' என்றாள் கீதா கவலையுடன்.

''அப்படி எதுவும் இல்லை. எனக்கு பிரைவஸி வேண்டும்'' என்ற ஜோஷிதா அவர்கள் கவலை தீரும் விதமாய் பேசிவிட்டு போனை வைத்தாள்.

''இந்த டிரஸ் ரொம்ப லூஸா இருக்கே!'' என்றாள் ஜோஷிதா தாராபாயிடம்.

''சல்வார் கமீஸ் இப்படித்தான் இருக்கும்'' என்றாள் தாராபாய்.

''எனக்கு ஜீன்சும், ஸ்கர்ட்டும் போட்டே பழகி விட்டது. இதையும் டைட்டாக தைத்தால் என்ன?''

தாராபாய் சிரித்தாள். ''இந்திய உடைகள் தளர்வாகத் தான் இருக்கும். இந்த உடை உங்களுக்கு மிகவும் அழகாய் இருக்கிறது.''

தாராபாய் வீட்டு கண்ணாடியில் முன்னும் பின்னுமாய் பார்த்து ''நானும் அப்படித்தான் நினைக்கிறேன்'' என்றாள் ஜோஷிதா. ''ஆனால் இந்த துப்பட்டா இல்லாவிட்டால் இன்னும் வசதியாக இருக்கும்.''

தாராபாய் மறுபடி சிரித்தாள். ''துப்பட்டாவே அசௌகரியம் என்றால் நீங்க எப்படி புடவை கட்டப் போறீங்க? நான் வேறு உங்களுக்கு புடவை எல்லாம் வாங்கி வைத்திருக்கிறேன்.''

கிரண்தான் தாராபாயிடம் பணம் தந்து ஜோஷிதாவுக்கு மாற்றிக் கொள்ள உடைகள் வாங்கி வரச் சொன்னான். அவள் போன பிறகு ஜோஷிதா சொன்னாள் ''இதற்காக நான் உனக்கு நன்றி சொல்லப் போவதில்லை. ஏனென்றால் மாற்று உடைக்குக் கூட வழியில்லாத நிலையில் என்னை நிற்க வைத்தது நீதான்.''

''உன் நன்றி எல்லாம் எனக்கு வேண்டாம். எனக்கு சிகிச்சை அளித்ததற்கு பீஸாக வைத்துக் கொள்.''

''நோயாளியிடம் இப்படியெல்லாம் பீஸ் வாங்கும் நிலை வரும் என்று நான் நினைக்கவே இல்லை.''

''இந்த புடவைகளை மாற்றி விட்டு நீங்கள் அணிகிற மாதிரி பேண்டும் டாப்சும் வாங்கலாமா?'' என்ற தாராபாயின் குரலில் கலைந்து அவள் கையிலிருந்த புடவையைப் பார்த்தாள் ஜோஷிதா.

நல்ல சிவப்பில் கை வேலை செய்யப்பட்டிருந்த ஷிபான் புடவை ஒன்றும் நீல நிறத்தில் மென்மையாய் வழுக்கிய கிரேப் சில்க்கும் கண்ணைப் பறித்தது.



''ரொம்ப அழகாக இருக்கிறது தாராபாய். இருக்கட்டும். நான் இரண்டொரு சமயங்களில் விசேஷ தினங்களில் புடவை அணிந்திருக்கிறேன்'' என்ற ஜோஷிதாவிற்கு கடைசியாக அவளது நிச்சயதார்த்த புடவையை அணிந்தது நினைவு வந்தது.

ஒரு பெருமூச்சுடன் நின்றிருந்தவளின் கண்களில் கபூர் இரண்டு பேருடன் பேசியபடி உள்ளே நுழைவது பட்டது.

''பெகன்ஜி உங்களை அடையாளமே தெரியவில்லை. இந்த உடையில் அருகில் வரும்வரை யாரோ என்றிருந்தோம்'' என்றான் கபூர் உரத்த குரலில். கூட இருந்தவர்களை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தான். ''இவன் இஸ்மாயில். சிறு வயதிலிருந்து என் பள்ளித் தோழன். இவன் சலீம் மொகமத். இஸ்மாயிலின் தங்கை பாத்திமாவின் கணவன். நாங்கள் மூவரும் சிறு வயது தோழர்கள்.''

''கிரணையும் உங்களுக்கு சிறு வயதிலிருந்தே தெரியுமா?''

''தெரியும். ஆனால் அவர் சிறு வயதில் இங்கே இல்லை. இந்த வீடு மட்டும் அவர்களுக்கு இங்கிருந்தது. அடிக்கடி வந்து போவார். நாலைந்து வருடங்களாகத்தான் இங்கே வசிக்கிறார். அவசரம் என்றால் உடனே உதவி செய்வார். தாராபாயை நான் காதலித்தபோது ஸார்தான் எங்களுக்குத் திருமணம் செய்து வைத்து குடித்தனம் வைக்க சாமான் வாங்கி தந்து நிறைய உதவி செய்தார்.''

சலீம் மொகமத் தோல் கம்பெனியில் வேலை செய்வதாகச் சொன்னதும்

''மிஸ்டர் இஸ்மாயில் நீங்கள் எங்கே வேலை செய்கிறீர்கள்?'' என்றாள் ஜோஷிதா.

''ஹார்பரில்'' என்றான் இஸ்மாயில்.

''ஹார்பரில் என்ன வேலை?''

''கப்பல் கன்டெய்னரிலுள்ள சரக்குகளை கரைக்கு கொண்டு வருவது. சுருக்கமாகச் சொன்னால் கூலி வேலை.''

''செய்கிற வேலையில் எதுவும் கேவலமானது இல்லை இஸ்மாயில். உழைத்து பிழைப்பதில் தலை குனிய வேண்டியதில்லை'' என்றாள் ஜோஷிதா.

அவளை நிமிர்ந்து பார்த்த இஸ்மாயில் ''இதை எப்போதும் நான் நினைவில் வைத்துக் கொள்கிறேன்'' என்றான் சிரிப்புடன்.

''வெரிகுட்'' என்றாள் ஜோஷிதா தானும் புன்னைகைத்து.

அப்போதுதான் உள்ளே நுழைந்து ஏதேச்சையாக இருவர் முகங்களையும் பார்த்த கிரணின் கண்கள் ஒரு நிமிடம் சுருங்கி இயல்பாயின.

பத்திரிகைகளும் தொலைக்காட்சியும் தொடர்ந்து தாக்குதல் சம்பவத்தின் பின்னணியை அலசி ஆராய்ந்தன. தினமும் புதிது புதிதாக தகவல்கள் வெளிவந்தன. தீவிரவாதத் தாக்குதலில் இறந்த காவல் துறையினர் மற்றும் இராணுவத்தினருக்கு இந்தியா முழுவதிலுமிருந்து மக்கள் வீரவணக்கமும் அஞ்சலியும் செலுத்தினர். அவர்கள் குடும்பத்தினர் கண்ணீர் ததும்பிய கண்களுடன், துக்கத்தை அடக்கிய கம்பீரத்துடன் நாட்டுக்காக தங்கள் குடும்பத்தினர் தன் உயிரை அர்ப்பணித்ததற்கு பெருமையடைவதாக பேட்டியளித்தார்கள். தேசியக்கொடி போர்த்தப்பட்டு துப்பாக்கி குண்டுகள் முழங்க உடல் அடக்கம் செய்யப்பட்டபோது வழிந்த கண்ணீரையும் மீறி அவர்கள் முகத்தில் தெரிந்த



பெருமிதத்தைப் பார்த்த ஜோஷிதாவின் உடல் சிலிர்த்தது.

''இத்தனை அருமையான குழந்தைகளையும், குடும்பத்தையும் விட்டு விட்டு உயிரை விட நேர்வது எத்தனை பரிதாபம்?'' என்றாள் ஜோஷிதா டி.வி.யிலிருந்து கண்ணை எடுக்காமல்.

''தன்னலமற்றவர்களின் தியாகத்தால்தான் இந்த நாடும், நாட்டு மக்களும் ஜீவித்திருக்க முடிகிறது'' என்றான் கிரண்.

''தியாகம் செய்ய அதிகாரிகள் தயாராய் இருப்பது பாராட்டப்பட வேண்டிய விஷயம்தான். ஆனால் இத்தனை திறமையான அதிகாரிகளின் உயிரைக் காப்பாற்றுவது அரசாங்கத்தின் கடமை அல்லவா?''

''போர், தீவிரவாதம் எது நடந்தாலும் இரண்டு பக்கமும் உயிர் இழப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாதது'' என்றான் கிரண்.

''தவிர்த்திருக்கலாம். ஒரு நாட்டின் உளவுத்துறையும், காவல் துறையும் சிறந்த முறையில் செயல்பட்டு ஒருங்கிணைப்புடன் செயலாற்றி இருந்தால் இத்தகைய சம்பவம் ஏற்படாமல். இத்தனை உயிர் பலியாகாமல் தவிர்த்திருக்கலாம்'' என்றாள் ஜோஷிதா.

''தினமும் எல்லாச் செய்திகளிலும் இதுதான் பேச்சு,'' என்றான் கிரண் அலுப்புடன். ''ஒரு சம்பவம் நடந்து முடிந்த பிறகு அதற்கு பல கோணங்களிலிருந்து, பல இடங்களிலிருந்து விமர்சனங்கள் வரும். ஆனால் இன்று உலகம் முழுவதும் தீவிரவாதம் கிளை விரித்திருக்கிறது. அமெரிக்கா உட்பட்ட நாடுகள் கூட அதற்குத் தப்பவில்லை என்பதுதான் நம் கண் முன் தெரிந்த உண்மை.''

"உண்மைதான். ஆனால் அமெரிக்காவில் டுவின் டவர் இடிக்கப்பட்டதற்கு பிறகு பெரிய அளவில் தாக்குதல் சம்பவம் எதுவும் நிகழவில்லை. பாதுகாப்பு துறையில் விழுந்திருந்த ஓட்டைகளை அடைத்து விட்டு எதிரிகள் மீது போர் தொடுக்கத் தயாராகி விட்டது அமெரிக்கா. ஆனால் தொடர் தீவிரவாத பலிகளுக்குப் பிறகும் இந்தியா என்ன செய்து கொண்டிருக்கிறது? ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டும் எதிரியைத் தண்டிக்க அடுத்த நாட்டின் உதவியை எதிர் பார்த்துக் கொண்டும் இருக்கிறது.

கிரணைப் பார்க்க அங்கே வந்த கபூர் சொன்னான்.

"பெஞ்ஜி அஜ்மல் கசாப் எனும் தீவிரவாதி உயிருடன் பிடிபட்டிருக்கிறான். தாக்குதல் நடந்த இடங்களைக் கண்டறிந்து வரைபடம் தயாரித்து தந்த லஸ்கர் இ தொய்பா தீவிரவாதிகள் பாகீம் அன்சாரி, அபாபுதீன் அஹ்மத் ஆகியோரும் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றனர். குற்றவாளிகள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்று இந்தியா ஆதாரத்துடன் நிரூபித்திருக்கிறது. தாக்குதலுக்கு மூளையாக இருந்து செயல் பட்ட தீவிரவாதிகள் 'ஜாகி உர் ரகுமான், லக்வி, யுசூப் முஜ்ஜாமில் உள்ளிட்ட முப்பத்தி ஐந்து பேர் தலைமறைவு குற்றவாளிகளாகக் காட்டப்பட்டு அவர்களை கைது செய்து இந்தியாவிடம் ஒப்படைக்கும்படி பாகிஸ்தானுக்கு கோரிக்கை விடப்பட்டிருக்கிறது."

"இந்திய பாராளுமன்றத்தில் தாக்குதல் நடந்தபோது அதனுடன் தொடர்புடையவர்களை அரசாங்கம் இதே போல் கைது செய்தது. ஆனால் அவர்களுக்கு வழங்கப் பட்ட தண்டனையை நிறைவேற்ற முடிந்ததா? சம்பவத்தில் இறந்து போன காவல்துறையினரின்,



ராணுவ வீரர்களின் மனைவிகள் குற்றவாளிகளை தண்டிக்கும்படி போராட்டம் நடத்தினர். அரசு தங்களுக்கு வழங்கிய விருதை திருப்பி அனுப்பினர். இருந்தாலும் அவர்களை எதுவும் செய்ய முடியவில்லை என்பதுதான் உண்மை" ஜோஷிதா படபடத்தாள்.

"எத்தனை குற்றவாளிகள் தப்பித்தாலும் பரவா யில்லை. ஒரு நிரபராதி கூட தண்டிக்கப்பட்டு விடக் கூடாது என்ற கருணை அடிப்படையில் செயல்படும் இந்திய சட்டங்களால் நேர்ந்தது இது" என்றான் கபூர்.

"இந்தியாவின் இயலாமைக்கு இதையே காரணமாக பல வருஷங்களாகச் சொல்லி வருகிறார்கள். ஆனால் சந்தர்ப்ப வசத்தால் குற்றவாளி என்று முத்திரை குத்தப் பட்ட எத்தனையோ நிரபராதிகள் இந்திய சிறைகளில் இருக்கத்தானே செய்கிறார்கள்?

ஜோஷிதாவின் கேள்விக்கு பதில் வராமல் போகவும் அவளே கிண்டலாகச் சொன்னாள். "அஜ்மல் கசாப்கூட மரண தண்டனை விதிக்கப்பட்டு அதை நிறைவேற்றும் முன் வயதாகி அவன் சிறையிலேயே இயற்கையாக இறந்து போகலாம். ஒரு ஜனநாயக நாட்டில் எதுவும் சாத்தியம்."

ஜோஷிதாவின் வார்த்தைகள் அறைவது போலிருந்தாலும் அதிலிருந்த உண்மை மனதைக் குத்தியது. வேறு நாட்டில் பிறந்து வளர்ந்தாலும் இந்தியாவைப் பற்றி அவள் துல்லியமாகத் தெரிந்து வைத்திருப்பது கிரணுக்கு ஆச்சரியமாக இருந்தது.

கபூர் வாங்கி வந்திருந்த சமோசாவையும், கச்சோடியையும் சாப்பிட்டபடி மூவரும் பேசிக் கொண்டிருந்தனர். கபூர் எழுந்து தன் வீட்டிற்குப் போனதும் 'சோ?' என்றாள் ஜோஷிதா தலையைச் சாய்த்து.

''என்னது?'' என்றான் கிரண் ஒன்றும் புரியாமல்.

''நன்றாகச் சாப்பிடுகிறாய். பேசுகிறாய். முகத்தில் களைப்பு தெரியவில்லை. உனக்கு குணமடைந்து விட்டது. இல்லையா?''

''அப்படித்தான் நினைக்கிறேன்'' என்றான் கிரண்.

''ஆனால் வேறு யாரைப் பற்றியும் நினைப்பதில்லை. அப்படித்தானே!''

''யாரைப் பற்றி நினைக்க வேண்டும் என்கிறாய்?''

''என்னைப் பற்றி நினைக்க வேண்டும்.''

கிரண் முறுவலித்தான். ''உன்னைப் பற்றி நான் ஏன் நினைக்க வேண்டும்? நான் உன் கணவனா? அல்லது காதலனா?''

''இரண்டும் இல்லை. திருடன். கடத்தல்காரன். பொறுக்கி'' என்றாள் கட்டுப்படுத்த முடியாத கோபத்துடன்.

கிரண் பெரிதாய் சிரிக்கவும், ஜோஷிதா தன் அருகில் கிடந்த பெரிய தலையணையைத் தூக்கி அவன் மீது வீசினாள். அது சரியாக கிரணின் தோளில் பட்டு கீழே விழுந்தது. கிரண் புன்னகை மாறாமல் விரல்களால் தோளைப் பற்றினான். அழுத்திய இடத்திலிருந்து விரல் வழியே இரத்தம் கசிந்தது.

'மை குட்நெஸ்' என்ற ஜோஷிதா அவன் அருகில் வந்து விரல்களை விலக்கினாள். ''நல்லவேளை, தையல் பிரியவில்லை என முணுமுணுத்தவள், கவனமாய் மருந்து போட்டு ப்ளாஸ்ட்டரை ஒட்டினாள்.

''லண்டனில் மருத்துவர்கள் பணக்காரர்களாக இருப்பது ஏன் என்று இப்போதுதான் தெரிகிறது'' என்றான் கிரண்.



''ஏன்?''

''சும்மாயிருப்பவனை அடித்துக் காயப்படுத்தி நீங்களே வைத்தியம் பார்த்து அதற்கு பீசும் வாங்கி விடுவீர்கள் போலும்.''

''அடேயப்பா, இதுவரை அப்படி எத்தனை முறை பீஸ் கொடுத்தாய்?''

''உனக்கு எவ்வளவு வேண்டுமோ, சொல் கொடுக்கிறேன்.''

''நான் பீஸாகக் கேட்பது பணத்தை அல்ல. இங்கிருந்து எந்தப் பழியும் இல்லாமல் நான் சுதந்திரமானவளாய் கிளம்பிப் போக வேண்டும். அது உன்னால் முடியுமா? முடியாதா?''

''நிச்சயம் முடியும். நீ முதலில் உன் பேக் தொலைந்தது பற்றி காவல் நிலையத்தில் கம்ப்ளைன்ட் பண்ண வேண்டும். அன்று ஹோட்டலில் நடந்த சம்பவத்தைத் தெரிவிக்க வேண்டும்.''

''அதற்கு ஏன் காத்திருக்க வேண்டும்? இப்போதே போலீஸ் ஸ்டேஷன் போகலாமே!''

''எனக்குத் தெரிந்த அதிகாரியிடம் உன்னை ஒப்படைப்பது நம் இருவர் பாதுகாப்புக்கும் நல்லது. அல்லது தேவையற்ற கேள்விகளுக்கும் விசாரணைகளுக்கும் ஆளாக வேண்டியிருக்கும்.''

''இருக்கட்டுமே! நடந்ததை உள்ளபடி சொல்வோம்.''

''இந்த நாட்டைப் பற்றி உனக்குத் தெரியாது ஜோஷிதா. குற்றவாளியைக் கண்டு பிடிக்க முடியவில்லை எனில் புகார் கொடுக்க வந்தவனையே குற்றவாளியாக்கி விடுவார்கள். போலீஸ் ஆம்புலன்சிலிருந்து இறங்கி ஓடிய நம்மை துரத்திப் பிடிக்க முடியாமல் தீவிரவாதிகள்

லிஸ்ட்டில் சேர்த்து விட்டார்களே. அது போலத்தான் நடக்கும்.''

''இத்தனைக்கும் காரணம் நீதான். ஒழுங்காக மருத்துவமனைக்கு போய் ட்ரீட்மென்ட் எடுத்திருந்தால் நீயும் சிரமமின்றி குணமடைந்திருப்பாய். நானும் என் வழியில் போயிருப்பேன்.''

''நான் மட்டுமல்ல நீயும்தான் காரணம். ஒரு அழகான டாக்டரின் கையால் குணமடைய வேண்டுமென்று நோயாளி ஆசைப்படுவது சகஜம்தானே!''

அவன் கண்களில் மின்னிய குறும்பைப் பார்த்த ஜோஷிதா கேட்டாள்.

''நீ ஏன் போலீஸை தவிர்க்கிறாய்? தவறு செய்பவர்கள்தானே பயப்பட வேண்டும்?''

கிரண் முகத்திலிருந்த சிரிப்பு மறைந்தது. ''பலமுறை நீ இதே கேள்வியைக் கேட்டு விட்டாய்'' என்றான் இறுக்கமான குரலில்.

''ஆனால் ஒரு முறை கூட நீ பதில் சொல்லவில்லை.''

''உனக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை.''

ஜோஷிதா பதில் சொல்வதற்குள் தாராபாயின் குரல் கேட்டது. ''எத்தனை நேரம் இப்படியே பேசிக் கொண்டிருப்பீர்கள்? பிரியமானவர்களுடன் பேசும்போது நேரம் போவது தெரியாதுதான். அதற்காக உடம்பு சரியில்லாதபோது தூங்கி ஓய்வெடுக்க வேண்டாமா?''

அந்த வேகமான ஹிந்தி புரியாமல் ''என்ன சொல்கிறாள்?'' என்றாள் ஜோஷிதா கிரணிடம்.

''பெரிதாய் ஒன்றுமில்லை. படுத்துத் தூங்கச் சொல்கிறாள்.''



''இதையா இத்தனை நேரம் பேசினாள்?''

''எதற்கும் சந்தேகப்படுவதே உன் வழக்கமாகி விட்டது'' என்றான் கிரண் எரிச்சலை மறைக்காத குரலில்.

''எல்லாவற்றையும் மறைப்பதே உனக்கு வழக்கமாகி விட்டது'' என்றாள் ஜோஷிதா அதே குரலில்.

''சரிதான். மறுபடி பேச ஆரம்பித்து விட்டீர்களா?'' என்றாள் தாராபாய் முகவாயில் கை வைத்தபடி.

மழை வரும் போல் வானம் இருட்டாக இருந்தது. கிரண். வேகமாக நடந்து கொண்டிருந்தான். வீட்டைச் சுத்தம் செய்து கடைக்குப் போய் வரும் பெண் இன்று விடுமுறை எடுத்துக் கொண்டதால் அவனே கடைக்குப் போக வேண்டியிருந்தது. அவன் தெருமுனை திரும்புவதற்குள் அவர்கள் காம்பவுண்டில் குடியிருக்கும் மூன்றாவது வீட்டு கங்கா அவனைப் பார்த்து விட்டாள். அவளது வாய்க்கு சிக்காதவர்கள் அங்கு யாருமே இல்லை. எனவே கிரண் விரைவாக காலை எட்டிப் போடுகையில் கங்கா ஒரே எட்டில் அருகில் வந்து உரிமையுடன் அவன் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''கிரண் எப்படியிருக்கிறாய்? கொஞ்ச நாட்களாய் உன்னை வெளியிலேயே காணோம்! உடம்பு சரியில்லை என்று கேள்விப்பட்டேன். இப்போது பரவாயில்லையா?''

''நன்றாக இருக்கிறேன் ஆன்ட்டி. விசாரித்ததற்கு நன்றி. வரட்டுமா?''

''என்ன அவசரம்? நானும் வீட்டிற்குத்தானே போகிறேன். சேர்ந்தே போகலாம்'' பேசியபடியே கங்கா கூட நடந்தாள்.

''உனக்கு விருந்தாளி வந்திருக்கிறார்களாமே! என் கண்ணிலேயே காட்டவில்லையே நீ!''

''சொந்தக்காரப் பெண் ஆண்ட்டி. ஊர் சுற்றிப் பார்க்க வந்திருக்கிறாள்.''

''அப்படியா? அவள் வீட்டை விட்டு வெளியே வருவதையே காணோமே. பிறகு எப்படி ஊரைப் பார்க்க முடியும்?''

''எனக்கு உடம்பு சரியில்லை இல்லையா? அதனால் அவளை அழைத்துப் போய் காண்பிக்க முடியவில்லை.''

''அடப்பாவமே. இத்தனை தூரம் வந்துவிட்டு அந்தப் பெண் வீட்டிலேயே முடங்கிக் கிடக்கிறாளா? ஆமாம், உன்னுடைய வீட்டில் ஒரே அறைதானே இருக்கிறது. எப்படிச் சமாளிக்கிறாய்?'' என்றாள் கங்கா அப்பாவித்தனமாய் விழிகளை விரித்து.

'ஒரு ஆணும் பெண்ணும் ஒரே இடத்தில் இருந்தால் அவர்கள் ஒன்றாகப் படுத்தார்களா என்பதைத் தெரிந்து கொள்ள இவர்களெல்லாம் ஏன் இப்படித் துடிக்கிறார்கள்?' கிரண் கடுமையுடன் பேச வாய் திறந்தபோது கங்காவின் சிநேகிதி ஒருத்தி அவளுடன் வந்து சேர்ந்து கொண்டாள். அவள் ஏதோ கதையைப் பேச ஆரம்பிக்கவும் கிரணை விட்டு நகர மனசில்லாமலே கங்கா நகர்ந்து போனாள்.

'முதலில் சர்வீசுக்கு கொடுத்த வாடகை பைக்கை எடுக்க வேண்டும். தாராபாய் கூட வீட்டில் இல்லை. ஜோஷிதா தனியாக இருப்பாள்' என்று வேகமாய் நடக்கையில் தான் அடுத்தவர்களுக்காக கவலைப்படுவது இதுவே முதல் முறை என்ற நினைவு வந்தது. கிரண் மறுப்புடன் தலையசைத்தான். இந்தப் பெண்ணை பாதுகாப்பதே



வேலை என்றால் வேறு எதிலும் கவனம் செலுத்த முடியாது. விரைவில் அவளை இங்கிருந்து அனுப்பும் வழியைப் பார்க்க வேண்டும். இந்த நேரம் பார்த்து சாமாஸாரை பார்க்க முடியவில்லை. இவன் சந்திக்க வேண்டும் என்று அனுப்பிய தகவலுக்கு இன்னும் அவரிடமிருந்து பதில் வரவில்லை. இந்த பெண்ணை இன்னும் எத்தனை நாள் தன்னுடன் தங்க வைக்க முடியும்? ஜோஷிதாவாக இருப்பதால் நிலைமை ரசாபாசமின்றி செல்கிறது. இதே இடத்தில் வேறொரு பெண் இருந்திருந்தால் சுத்தி ரகளை செய்து அவனை அசிங்கப்படுத்தியிருப்பாள். கங்காவை போன்றவர்களின் கண்ணிலும் வாயிலும் விழும் முன் அவளை பத்திரமாக அவளது இடத்தில் கொண்டு சேர்க்க வேண்டும்.

வீட்டை அடைந்து கதவைத் தட்ட கையை தூக்கு கையில் கதவு தானாய் திறந்தது.

''ஹாய்'' என்றாள் ஜோஷிதா. ''ஷாப்பிங் அனுபவம் எப்படியிருந்தது?''

''ம். நான் மார்க்கெட்டிற்கு போனது என் வாழ்வில் இதுதான் முதல் முறை.''

''உன் பெற்றோர்கள் எங்கேயிருக்கிறார்கள் கிரண்?'' என்றாள் ஜோஷிதா யோசனையுடன்.

''இரண்டு பேருமே இப்போது இல்லை. அம்மா என் சிறு வயதிலேயே இறந்து விட்டார்கள். முகம் கூட என் நினைவில் இல்லை. அப்பா இரண்டு வருடங்களுக்கு முன்னால்தான் இறந்தார். ஆனால் அவர் இருந்தபோது கூட நாங்கள் இருவரும் சேர்ந்து அதிகம் வசித்ததில்லை. எங்களது வேலை அதற்கான வாய்ப்பைத் தரவில்லை. சிறு வயது விடுதியிலும், பிறகு ஊர் ஊராக

சுற்றுவதிலும் கழிந்ததால் நெருங்கிய சொந்தங்களை கூட அவ்வளவாகத் தெரியாது. இப்போதைக்கு என் உறவெல்லாம் கபூர், தாராபாய், சோம்நாத்ஜி. இந்த சந்தி நிவாஸ்சில் குடியிருப்பவர்கள். லேட்டஸ்ட் வரவாக நீ!" என்றான் சுட்டி விரலை நீட்டி.

"சேச்சே! கண்ட ரவுடி பயல்களுக்கெல்லாம் நான் உறவில்லை" ஜோஷிதா தோள்களைக் குலுக்கினாள்.

"ஆமாமாம். லண்டனில் குயின் எலிசபெத் உனக்கு உறவாமே?" என்றான் கிரண் கிண்டலாக.

"ஆமாம். நான் அரச பரம்பரைதான். அதற்கென்ன இப்போது?" என்றாள் ஜோஷிதா இல்லாத சட்டை காலரைத் தூக்கி விட்டபடி.

ஜன்னல் வழியாய் உள்ளே நுழைந்த சூரிய ஒளி ஜோஷிதாவின் நிறத்தை தங்கமாய் மாற்றியிருந்தது. ஷாம்பு குளியலில் பளபளத்த பட்டுக் கூந்தல் லேசாய் கலைந்து பறந்தது. இயல்பிலேயே ரோஜா நிறம் பெற் றிருந்த இதழ்களும், அதில் பளீரிட்ட வெண் பற்களும், பெரிய கண்களும் அந்த அழகின் அரசி அவள்தான் என்று சாட்சியம் கூறின.

அவன் பார்வையை உணர்ந்து "என்ன விஷயம்?" என்றாள் ஜோஷிதா.

"இல்லை அரசி இளவரசிக்கெல்லாம் என்ன சமைப் பது என்று யோசித்துக் கொண்டிருந்தேன்."

"கிரண் எனக்கு சமையல் கற்றுத் தருகிறாயா?" என் றாள் ஜோஷிதா. ஆர்வத்துடன். "ரொம்ப நாட்களாய் சமையல் பழக வேண்டும் என்று நினைத்துக் கொண்டே இருந்தேன். அதற்கான நேரமோ, அவசியமோ இல்லாத தால் கற்றுக் கொள்ள முடியவில்லை. இப்போதுதான்



வீணடிக்க நிறைய நேரம் இருக்கிறதே. உருப்படியாக ஏதாவது செய்யலாம்."

கிரண் அவளுக்கு காய்கறி வெட்டவும் சப்பாத்திக்கு மாவு பிசையவும் கற்றுக் கொடுத்தான். அவள் தேய்த்த கோணல் மாணலான சப்பாத்திகளை அப்படியே தவா வில் பரத்தினான்.

"குழந்தைகள் பொம்மை பிஸ்கெட் சாப்பிடுகிற மாதிரி நாமும் பொம்மை சப்பாத்தி சாப்பிடுவோம்" என்றான் திருப்பி விட்டபடி.

தட்டில் சூடான சப்பாத்தியுடன் சப்ஜியும் ரெய்த் தாவும் சேர்த்து சாப்பிடுகையில் "வாவ்! வெரி நைஸ்" என்றாள் ஜோஷிதா. "தாராபாய் சமையலை விட இது எவ்வளவோ பெஸ்ட். இனிமேல் தினமும் நீயே சமைத்து விடு."

"உன்னைப் போல் சாப்பாட்டு ராமியை நான் பார்த்த தில்லை. தாஜ் ஹோட்டலில் உயிர் போகிற நிலையில் கூட சாப்பாடு வேண்டுமென்றுதானே அடம் பிடித்தாய்? உன்னை ஹோட்டலுக்குள் நுழைந்ததும் எதேச்சையாக நான் பார்த்த போது கூட நீ சூப் சாப்பிட்டுக் கொண் டிருந்தாய்."

ஜோஷிதாவுக்கு சிரிப்பு வந்தது. "நீ சொன்ன பிறகு தான் எனக்குத் தெரிகிறது. உண்மையில் உன்னைப் பார்த்த பிறகுதான் நான் இப்படி சாப்பிடத் தொடங்கி யிருக்கிறேன் என்று நினைக்கிறேன். கல்பனா ஆன்ட்டி வீட்டில் தங்கியிருந்தபோது என்னை எப்பவும் சாப்பிடச் சொல்லி வற்புறுத்திக் கொண்டே இருப்பார்கள். உண வின் அருமை அது. கிடைக்காத போதுதான் தெரிகிறது."

வெளியே தாராபாயின் குரல் கேட்டது.

''அவருக்கு எப்போது திருமணம் ஆனது கிரண்?''

''நான்கு வருடம் இருக்கும்.''

''அவர்களுக்கு குழந்தைகள் இல்லையா?''

''நல்லவேளை, தாராபாய் முன்பு நீ இதைக் கேட்டிருந்தால் அவளைத் தேற்றுவது பெரும்பாடாகி இருக்கும். எப்பவும் குழந்தைக்காக கோவிலைச் சுற்றுவதும் பூஜை பண்ணுவதுமாய் இருப்பாள். ரொம்ப வெகுளித்தனமான பெண்.''

''உண்மைதான். இல்லாவிட்டால் டாக்டரையோ, புருஷனையோ சுற்றாமல் கோவிலைச் சுற்றுவாளா?''

கிரண் வாய்விட்டுச் சிரித்தான். பளீரென்று மின்னிய வரிசைப் பற்கள் முகத்திற்கே தனி கவர்ச்சியைக் கொடுத்தது. ''கிரண், நீ வாய்விட்டுச் சிரித்து இப்போது தான் பார்க்கிறேன்'' என்றாள் ஜோஷிதா வியப்புடன்.

நண்பர்களோ, உறவினர்களோ அதிகம் இல்லாத அவனது கடினமான வாழ்க்கை முறையில் நினைத்ததைப் பகிர்ந்து கொள்ளவும், கூட பேசிச் சிரிக்கவும் ஆட்களே இருந்ததில்லை. இதற்கு முன் கடைசியாக எப்போது சிரித்தோம் என்று யோசித்தான். நினைவு வரவில்லை.

முகம் சுருங்க அமர்ந்திருந்த கிரணைப் பார்த்த ஜோஷிதா, 'இப்போது தவறாக என்ன சொன்னோம்?' என்று யோசித்தாள்.

''கிரண்'' என்றாள் சத்தமாக.

திரும்பிப் பார்த்தவன் ''சாப்பிட்டு முடிச்சாச்சா?'' என கை கழுவ எழுந்து போனான்.

ஜோஷிதாவின் கையிலிருந்த குழந்தை தன் சிவந்த இதழ்களை முறுக்கி அழலாமா என்று யோசித்தது. ''ஹவ் ஸ்வீட்'' என்றாள் ஜோஷிதா கீழே விட மனமில்லாமல்.



''ஆமாம். ரொம்ப சமத்து. பிறந்ததிலிருந்து வீட்டில் எல்லோரையும் நிற்க விடாமல் வேலை வாங்குகிறாள்'' என்றாள் பாத்திமா தாய்க்கே உரிய பெருமையுடன்.

''குழந்தை அப்படியே பாத்திமாவை உரிச்சி வெச்சிருக்கு'' என்றாள் தாராபாய்.

ஒரு ட்ரேயில் பொரித்த மீனும், மசாலா டீயும் கொண்டு வந்த பாத்திமாவின் அம்மா ''எடுத்துக்கங்க'' என்றாள் இருவரிடமும்.

தன் அறையிலிருந்து வெளியே வந்த இஸ்மாயில் தாராபாயுடன் ஜோஷிதாவை தன் வீட்டில் எதிர்பாராத திகைப்பில் ஒரு விநாடி பேசத் தோன்றாமல் நின்றிருந்தான்.

''உங்கள் வீடு தேடி வந்திருக்கிறோம். மரியாதைக்காகவாவது வாங்கன்னு கூப்பிட மாட்டீங்களா இஸ்மாயில்?'' என்றாள் ஜோஷிதா சிரிப்புடன்.

''ஐயம் ஸாரி. எங்க வீட்டுக்கு நீங்க வருவீங்கன்னு எதிர்பார்க்கல. அதனால்தான்'' என்றான் இஸ்மாயில்.

''ஏன் வரமாட்டேன்?''

''தீப்பெட்டி சைஸ் இருக்கும் இந்த மாதிரி வீடுகளுக்கு உங்களைப் போல பணக்காரர்கள் வர விரும்ப மாட்டார்கள்.''

''அது உன்னுடைய காம்ப்ளெக்ஸ் இஸ்மாயில். என் சிநேகிதி ஷீலா நாயர் இந்தியாவில் வாழும் வசதியற்றவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காகவே லண்டனில் பார்த்து வந்த பெரிய மருத்துவமனை வேலையை ரிசைன் பண்ணி விட்டு இந்தியா வந்தாள். அவளது அழைப்பின் பேரில்தான் நானும் வந்தேன்.''

''வெளிநாட்டுக்காரர்கள் இந்திய குடிசைகளை ஏழ்மையை படம் எடுத்து அவார்ட் வாங்குவதும், உங்களைப் போன்றவர்கள் சேவை செய்ய வந்து மெடல் வாங்கிக் குத்திக் கொள்வதும் பேஷனாகி விட்டது'' என்றான் இஸ்மாயில் கசப்புடன்.

''நீ ஏன் எல்லாவற்றையும் குதர்க்கமாகவே பார்க்க வேண்டும்?''

''அடிபட்டவனின் பார்வை அப்படித்தான் இருக்கும்'' என்றான் இஸ்மாயில்.

''மதவாதமும், வகுப்பு வாதமும் அரசின் ஆதரவுடனே தலை விரித்தாலும் நாட்டில் வறுமையை எப்படி ஒழிக்க முடியும்? ஓட்டுக்காக தேசத்தின் கொள்கையை பறக்க விட்ட அரசியல்வாதிகளும் சில நூறு ரூபாய்க்காக தங்கள் ஓட்டுகளை அடகு வைக்கும் மக்களும் இருக்கும் வரை இந்த நாடு இப்படித்தான் இருக்கும்.''

''இஸ்மாயில் நீ ஒரு பழமொழி கேள்விப்பட்டிருக்கிறாயா? ஆயிரம் கோயில்களை உடை. மசூதியை இடி. தேவாலயங்களை தகர்த்துவிடு. ஆனால் ஒரு மனிதனின் மனதை மட்டும் காயப்படுத்தி விடாதே! இந்த வார்த்தைகளில் எத்தனை உண்மை இருக்கிறது பார்த்தாயா?'' என்றாள் ஜோஷிதா.

''இது உங்கள் நாட்டு பழமொழியா தீதி. மதத்தைக் காக்க மனிதனை பலி கொடுப்பதுதான் மும்பையின் சமீபத்திய தத்துவம்'' என்றான் அங்கு வந்த சலீம் மொகபத்.

''இஸ்மாயில்'' என்றபடியே அங்கு வந்த அவன் அம்மா ''ஜோஷிதாவையும், தாராபாயையும் வீடு வரை சென்று விட்டு வா. இருட்டத் தொடங்கி விட்ட சமயம்



பெண்கள் தனியாகப் போக வேண்டாம்'' என்றாள், மகனிடம்.

''ஆமாம். நீ போய் வா இஸ்மாயில். நான் குழந்தையைப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று சலீம் உள்ளே போக, ஜோஷிதாவும் தாராபாயும் இஸ்மாயிலுடன் கிளம்பினார்கள்.

கிரண் சக்தி நிவாஸ்சின் கேட் அருகே நின்று கொண்டிருந்தான்.

''என்ன விஷயம் கிரண்? வாயிலிலேயே நிற்கிறாய்!'' என்றார் சோம்நாத்ஜி.

''ஜோஷிதா இஸ்மாயிலின் தங்கை குழந்தையைப் பார்க்க போயிருக்கிறாள் ஜி. அதுதான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''

''தனியாகவா போயிருக்கிறாள்?''

''இல்லை. தாராபாய் உடன் இருக்கிறாள்.''

''பிறகு ஏன் கவலைப்படுகிறாய்? தாராபாய் மும்பையையே வித்து புடவையில் முடிந்து விடுவாளே!''

வாயிலைப் பார்த்தபடியான சேரில் கிரண் சோம்நாத்ஜியின் அருகில் அமர்ந்தான்.

கேட்டைப் பிடித்தபடி கங்காவின் பெண் லத்திகா தன் தோழிகளிடம் பேசிக் கொண்டிருந்தாள். இறுக்கமான உடையைச் சுற்றி அணிந்திருந்த துப்பட்டா அலட்சியமாய் மேலே புரண்டு கொண்டிருந்தது. கிரணைப் பார்த்தபடியே தன் தோழிகளிடம் மிகையாய் சிரித்துக் கொண்டிருந்தாள்.

''இந்தப் பெண்ணைப் பார்த்தாயா?'' என்றார் சோம்நாத்ஜி திடீரென்று ''யாரை?'' என்றான் கிரண் திடுக்கிட்டு.

"இந்த கங்காவின் பெண்ணை. கங்கா மற்றவர் வீட்டுப் பிரச்சனையை அலசும் நேரத்தில் கொஞ்சம் ஒதுக்கி தன் பெண்ணையும் கவனிக்கலாம்."

"ஜி உங்கள் பார்வை ரொம்பவும் கூர்மை" என்றான் கிரண் முறுவலுடன்.

"என்ன செய்வது. உன்னை மாதிரி வயசு பையன்களுக்குத்தான் பார்வையே மழுங்கிப் போச்சே! இல்லை என்றால் இத்தனை வயசு வரை தனியாக இருப்பாயா?"

கிரண் பதில் பேசாமல் இருக்கவும், "சொல்லு கிரண். உன் பெற்றோர் இருந்திருந்தால் இந்த நேரம் உனக்கு ஒரு பெண்ணைப் பார்த்து முடித்திருப்பார்கள். நம் ஜோஷிதா கூட நல்லப் பெண்ணாகத் தெரிகிறாள். நீ ஏன்..." பெரியவர் முடிக்கும் முன் கிரண் குறுக்கிட்டான்.

"நீங்களாக ஏதும் கற்பனையில் இறங்காதீர்கள். அந்த பெண் ஊரைச் சுற்றிப் பார்க்க வந்திருக்கிறாள். விரைவில் இங்கிருந்து கிளம்பி விடுவாள்" என்ற கிரண் வீட்டிற்கு வந்துவிட்ட ஜோஷிதாவையும் தாராபாயையும் பார்த்துவிட்டு எழுந்தான்.

ஜோஷிதாவிடம் ஒரு தலையசைப்புடன் திரும்பிச் செல்லும் இஸ்மாயிலைப் பார்த்ததும் "இஸ்மாயில் உள்ளே வராமலே போகிறானே!" என்றார் சோம்நாத்ஜி.

"அவனுக்கு ஏதாவது வேலையிருக்கும். எங்களுக்கு துணைக்கு வந்தான்" என்றாள் ஜோஷிதா.

சோம்நாத்ஜி தீவிர முக பாவத்துடன் தலையசைத்தார். "எனக்குத் தெரியும். பெண்களைத் தனியே விட அவனுக்கு மனசிருக்காது. 2006-ம் ஆண்டு நடந்த குண்டு வெடிப்பு கலவரத்தில் திருமணமாகி ஒரு வாரமே ஆன மனைவியை இழந்தான். அதற்கு முன்பாக 1992



டிசம்பரில் நடந்த இனக் கலவரத்தில் இஸ்மாயிலின் குடும்பத்தினர் 'ஷாகா' என்றழைக்கப்படும் சிவசேனா படையினரால் கண் மூடித்தனமாக தாக்கப்பட்டனர்."

"காவல்துறைக்கு தெரிவிக்கவில்லையா அங்கிள்?"

"காவல்துறை வாகனங்களையும் மதவாதிகள் தீ வைத்து எரித்தனர். வாக்காளர் பட்டியலை கையில் எடுத்துக் கொண்டு, எந்தெந்த இடங்களில் முஸ்லிம்கள் இருக்கின்றனரோ அந்த வீட்டிற்குள் புகுந்து அங்கிருந்தவர்களை அடித்து உதைத்தனர். இஸ்மாயிலின் கண் எதிரே அவனது பத்து வயது தம்பி தீயிட்டுக் கொளுத்தப்பட்டான். விரைந்து வந்த தீயணைப்பு படை வேனையும் கல் வீசித் தாக்கினர். கண் முன் அந்த குழந்தை எரிந்து சாம்பலானதை பார்த்து இஸ்மாயில் அழக்கூட முடியாத நிலையில் உயிருக்குப் பயந்து ஓட வேண்டியிருந்தது. அவன் பெற்றோரும், தங்கையும் வெளியூர் சென்றிருந்ததால் அன்று உயிர் பிழைத்தனர்."

ஜோஷிதா திகைப்புடன் கேட்டுக் கொண்டிருந்தாள். இஸ்மாயிலின் புன்னகை அற்ற முகத்திற்கு காரணம் இதுதான் போலும். இந்த வயதில் இத்தனை இழப்புகள் அவனுக்கு நேர்ந்திருக்க வேண்டாம். ஜோஷிதா இஸ்மாயிலுக்காக வருத்தப்பட்டாள்.

கிரணும் அவளும் வீட்டிற்குள் நுழைந்ததும் சொன்னாள். "இந்த நகரத்தில் ஒவ்வொருவரின் பின்னாலும் பெரிய கதை இருக்கும் போலிருக்கிறது."

"அந்த கதை உனக்குத் தேவையில்லாதது. நாளை உன் ஊருக்குப் போய் சேர்ந்ததும் இந்த வீடும், சம்பவங்களும் உன்னைப் பொறுத்தவரை ஒரு கனவு. அவ்வளவுதான். விழித்தவுடன் கண் மறைகிற விஷயத்

திற்காக தேவையில்லாமல் அலட்டிக் கொள்ளாதே'' என்ற கிரண் சற்று இடைவெளி விட்டு சொன்னான். ''நாளை அசிஸ்டன்ட் கமிஷனர் சர்மாவை போய்ப் பார்க்கப் போகிறோம். அவரிடம் உன்னை ஒப்படைத்து விட்டால் என் வேலை முடிந்தது. இங்கே யாரிடமும் எதுவும் சொல்லாமல் கிளம்பி வர வேண்டும். தெரிந்ததா?'' என்றான் கண்டிப்பான குரலில்.

அந்தக் குரலுக்கு பணிந்து போக விரும்பாமல் ஜோஷிதா பதில் பேசாமல் இருக்க, அவள் முகத்தைப் பார்த்த அவன் தொடர்ந்தான். ''உடனடியாய் பாஸ்போர்ட்டுக்கு வழி செய்து கொண்டு கிளம்பிப் போகிற வழியைப் பார். மதர் தெரஸாவாக உன்னை கற்பனை செய்து கொண்டு வீணான பிரச்சனைகளில் மாட்டிக் கொள்ளாதே.''

ஜோஷிதா கோபத்துடன் சொன்னாள். ''என் சொந்த விஷயத்தில் நீ தலையிடத் தேவையில்லை.''

''உன் நல்லதுக்கு சொன்னேன்'' என்றான் அலட்சியத்துடன்.

''உன்னால் எனக்கு நேர்ந்ததெல்லாம் சிரமங்கள்தான். நீ என்னை விட்டுப் போனாலே நல்லதுதான்.''

''இந்த ஒரு இரவு மட்டும் சகித்துக் கொள். நாளையிலிருந்து என்னைப் பார்க்க வேண்டிய தேவை இருக்காது.''

இரவு ஜோஷிதாவிற்கு வெகு நேரம் உறக்கம் வரவில்லை. நாளை இங்கிருந்து எங்கே போவது? ஹரிஷ் வீட்டிற்குப் போய் அங்கிருந்து லண்டன் கிளம்பலாம். பழையபடி அதே மருத்துவமனையில் சகல வசதிகளுடன் பணிபுரியலாம். பெற்றோர் தன்னை கன்வின்ஸ்



பண்ணி ஹரிஷ் தன்னை விட்டு ஓடியதற்குக் காரணம் சொல்லி அவனுக்கே திருமணம் செய்து வைக்கலாம். லண்டனின் புராதன தெருக்களில் படகுகளில் ஹரிஷுடன் பவனி வரலாம். கற்பனைகள் மனதுக்கு மகிழ்ச்சியைத் தராததால் ஜோஷிதா மேற்கொண்டு எதையும் யோசிக்கப் பிடிக்காமல் கண்களை மூடினாள். ஏசியின் மெல்லிய உறுமல் துல்லியமாகக் கேட்டது. இங்கே வந்த புதிதில் வெறும் தரையிலேயே படுத்துறங்கிய நேரங்கள் நினைவுக்கு வந்தன. இப்போது யோசிக்கையில் கிரணின் கடுமையிலும் ஒரு கண்ணியம் இருந்தால்தான் இருவரும் ஒரே அறையில் தங்குவது சாத்தியமானது என்று தோன்றியது. ஜோஷிதா திரும்பி கிரணைப் பார்த்தாள். அவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். வழக்கமாக இறுக்கத்துடன் காணப்படும் முகத்தசைகள் இளகி முகம் மென்மையாகத் தெரிந்தது. அறையின் மங்கலான விளக்கொளியில் மிக வசீகரமாய் தெரிந்தவனைப் பார்த்த ஜோஷிதாவின் இதழ்களில் தன்னையறியாமல் புன்னகை மலர்ந்தது.

காலையில் ஜோஷிதா எழும்போது கிரண் கிளம்பி வெளியே போயிருக்க தாராபாய் கதவைத் தட்டி விட்டு உள்ளே வந்தாள்.

''வா தாராபாய். என்ன விஷயம்?'' என்றாள் ஜோஷிதா புன்னகையுடன்.

தாராபாய் பதில் பேசாமல் இருக்கவும், ''உன் முகம் ஏன் இப்படியிருக்கிறது? இரவு தூங்கவில்லையா?'' என்றாள் ஜோஷிதா.

தாராபாயின் கண்கள் கலங்கின. ''இந்த பாத்திமாவுக்கு திருமணம் ஆகி சரியாக பதினொரு மாசம்தான்

ஆகிறது. அந்த கடைசி விட்டு சாராவுக்கு கூட மணமாகி ஒரு வருடம்தான் ஆகிறது. எல்லோரும் ஆளுக்கொரு குழந்தையை கொஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வளவு ஏன் நம் தெருமுனை ரிக்ஷா ஸ்டாண்டில் ரிக்ஷா ஓடும் சோட்டாவாலா மனைவி கூட திருமணமாகி பத்தாவது மாதம் குழந்தை பெற்று விட்டாள்.''

ஜோஷிதா ஆதரவுடன் அவள் தோள்களைப் பற்றினாள். ''நீ இப்படி நீளமாய் லிஸ்ட் போட்டு கவலைப்படும் அளவிற்கு உனக்கு ரொம்ப வயதாகி விடவில்லை தாராபாய். நீங்கள் இருவரும் நல்ல ஆரோக்கியமாக இருக்கும்போது இத்தனை கவலைப்பட வேண்டியதில்லை. நீயும் சூரும் ஒரு நல்ல டாக்டரைப் போய்ப் பாருங்கள். சில சமயம் மிகச் சிறிய காரணங்களால் கூட கருத்தரிப்பது தள்ளிப் போக நேரிடலாம். ஆரம்பத்திலேயே கவனித்தால் எளிதாக சரி செய்துவிட முடியும்'' என்ற ஜோஷிதா என்னென்ன காரணங்களால் குழந்தை பிறப்பு தள்ளிப் போகக் கூடும். அதற்கு என்ன சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும் என சுருக்கமாக விளக்கினாள்.

ஆர்வத்துடன் கேட்டுக் கொண்ட தாராபாய் ''நீங்கள் சொல்கிறபடி இன்று மாலையே டாக்டரைப் போய்ப் பார்க்கிறேன். கடவுள் அருளால் கர்ப்பமானால் முதல் ஸ்வீட் உங்களுக்குத்தான்'' என்றபடி கிளம்பிப் போனாள்.

தாராபாய் போன சில நிமிடங்களில் சோம்நாத்ஜி உள்ளே வந்தார்.

''வாங்க அங்கிள்'' என ப்ரிஜ்ஜிலிருந்த கூல்ட்ரிங்சை டம்ளரில் நிரப்பி அவரிடம் கொடுத்தாள் ஜோஷிதா. ட்ரிங்சை குடித்தபடி அறையைச் சுற்றிலும் பார்த்த



சோம்நாத்ஜி சொன்னார். ''ஒற்றை ரூம்தான் என்றாலும் ஒரு பெண் இருந்தால் அந்த வீட்டிற்கே ஒரு களை வந்து விடுகிறது. கிரண் இங்கே வசித்த போதும் அவன் எப்போது வருகிறான் போகிறான் என்று யாருக்கும் தெரியாது. நீ வந்த பிறகுதான் அடிக்கடி வீட்டில் இருக்கிறான். அவனை திருமணம் செய்து கொள்ளும்படி நானும் கொஞ்ச நாளாய் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். பதிலே சொல்லாமல் நழுவி விடுவான். நீ அவனுக்கு உறவு என்பதால் அவனைப் பற்றித் தெரிந்திருக்கும் என்று கேட்கிறேன். கிரண், எந்தப் பெண்ணையாவது காதலிக்கிறானா?'' என்றார் சோம்நாத்ஜி.

ஜோஷிதாவுக்கு சிரிப்பு வந்தது. கிரணைப் பற்றியே முழுசாக எதுவும் தெரியாத போது அவன் காதலியைப் பற்றி அவளுக்கு என்ன தெரியும்? உண்மையில் அவனைப் பார்த்தால் ஒரு பெண்ணை காதலிப்பவனாகவே தெரியவில்லை. அந்தக் கூர்மையான கண்களில் காதல் சொட்டுவதையும் கடினமான இதழ்களில் இனிமையாகப் பேசி அவன் காதலிப்பதையும் கற்பனை செய்யக்கூட முடியாததால் ''இல்லைஜி எனக்குத் தெரிந்து அப்படி எதுவும் இல்லை'' என்றாள் ஜோஷிதா.

சோம்நாத்ஜி ஒரு பெருமூச்சுடன் சொன்னார். ''அவன் அப்பா எத்தனை பெரிய காவல்துறை அதிகாரி தெரியுமா? வரதாபாய், ஹாஜி மஸ்தான், யூசுஃப் படேல் போன்ற மும்பையின் அன்டர்கிரவுண்ட் முதலைகளுக்கு பெரும் சவாலாக இருந்தவர். அந்த நிழலுலக ஆட்களாலேயே சுடப்படுவார் என்று யார் நினைத்தார்கள்? அவர் சடலம் கூட கிடைக்காததால் இன்னமும் அவர் சுடப்பட்டாரா கடத்தப்பட்டாரா என்பது காவல் துறை வட்டாரத்தில் புதிராகவே இருக்கிறது.''

ஜோஷிதாவுக்கு தலை சுற்றுவது போலிருந்தது. கிரணின் அப்பா காவல்துறை அதிகாரியாய் இருப்பார் என்றோ அவருக்குப் பின் இப்படி ஒரு கதை இருக்கும் என்றோ அவள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

''அந்த நாட்களில் கிரணின் அப்பா கைப்பற்றிய கடத்தல் பொருட்கள், ஒடுக்கிய கடத்தல்காரர்கள், நடத்திய துப்பாக்கி சூடுகள் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் மிகவும் பிரபலம். மிக நேர்மையான அதிகாரி. அவருடைய மகன் கிரண் என்பதே எனக்கு ரொம்ப நாட்களுக்குப் பிறகுதான் தெரிந்தது'' என்ற சோம்நாத்ஜி பிறகு வேறு விஷயங்களைப் பேசத் தொடங்கினார்.

கிரண் இருட்டத் தொடங்கிய சமயம்தான் வீட்டிற்கு வந்தான். ''நீ ரெடியா?'' என்றான் உள்ளே நுழைகையிலேயே.

ஜோஷிதா அங்கு வரும்போது அணிந்திருந்த அதே நீல நிற ஜீன்சும் வெள்ளை டாப்சும் அணிந்திருந்தாள். ''நான் எப்பவோ ரெடி'' என்றாள் முடியை விரல்களால் ஒதுக்கியபடி.

''சரி வா போகலாம்'' என அவன் கிளம்பவும். அவன் முகத்திலிருந்த களைப்பைப் பார்த்த ஜோஷிதா ''சாப்பிடுகிறாயா கிரண்? அல்லது டீ வேண்டுமா?'' என்றாள்.

எதுவும் வேண்டாம் என்று தலையசைத்து விட்டு பைக்கைக் காம்பவுண்டிற்குள் நிறுத்தி விட்டு நடந்தவனின் பின்னே சென்றாள். தெருமுனை ஸ்டாண்டிலிருந்த சோட்டாவாலா அவர்களைப் பார்த்துவிட்டு எழுந்து ஓடி வந்தான்.

''ரிக்ஷா வேணுமா சாப்?''



கிரண் ஜோஷிதாவுடன் ஆட்டோ ரிக்ஷாவில் ஏறி அமர்ந்தான். ''பைக்கிலேயே போயிருக்கலாமே'' என்ற ஜோஷிதாவின் கேள்விக்கு பதில் சொல்லாமல் வெளியே வெறித்தான்.

மும்பையின் நெரிசலான தெருக்களையும், மக்கள் கூட்டத்தையும், மிட்டாய் வாசனையையும், நெற்றியில் குங்குமம் தரித்த காவி உடைகளையும், போஸ்ட்டர்களில் சிரிக்கும் பாலிவுட்டின் கவர்ச்சி நட்சத்திரங்களையும் மிகுந்த ஆர்வத்துடன் வேடிக்கை பார்த்தபடி ஜோஷிதா வர. கிரண் அதற்கு நேர்மாறாய் மிகுந்த பரபரப்புடன் இருந்தான். அடிக்கடி ஆட்டோவின் முன்புற கண்ணாடி வழியாய் தெருவைப் பார்த்தான்.

''சாப் எங்கே போக வேண்டும்?'' என்றான் சோட்டாவாலா.

''இடதுபுறம் திரும்பு'' என்றான் கிரண். ஆட்டோ இடதுபுறம் திரும்பவும்.

''ஒரு யு டர்ன் அடித்து வலதுபுறமாய் போ'' என்றான்.

ஆட்டோ வலதுபுறம் திரும்பியதும் ''நேராய் போ'' என்றான். சோட்டாவாலா நேராய் ஆட்டோவை செலுத்த ''சீக்கிரம் இடதுபுறம் திருப்பு'' என்றான். ஆட்டோ இடதுபுறம் திரும்புகையில் ஒரு பைக் ஆட்டோவை உரசியபடி சென்றது.

''எப்படிப் போறான் பாரு சாப்'' என்றான் சோட்டாவாலா கோபத்துடன்.

''சரி வண்டியை எடு'' என்றான் கிரண் அவசரத்துடன். சோட்டாவாலா இரண்டு அடி நகர்வதற்குள் எதிரில் ஒரு பைக் அவன் சக்கரத்தில் முட்டி நின்றது. ''கண்ணு குருடா உனக்கு?'' சோட்டாவாலா கத்த ஆரம்பிக்கவும்.

அவர்களைச் சுற்றி ஒரு கூட்டம் கூடியது. ''ஸாரி தெரியாம வந்துட்டோம்'' என பைக்கில் வந்தவர்கள் திரும்பிச் செல்ல முற்பட, ''என் ஆட்டோ டேமேஜ் ஆனதற்கு ரிப்பேர் செலவை எடுத்து வை'' என சோட்டா வாலா அவர்களிடம் பணம் கறப்பதில் மும்முரமானான்.

அவர்கள் பாக்கெட்டிலிருந்த பணத்தை எண்ணியும் பாராமல் அவன் கையில் திணித்து விட்டு விரைந்தார்கள்.

''வேணுமின்னே இடிச்சிட்டு பணங்குடுக்காம ஓடப் பாத்தா நடக்குமா? அதுவும் என் கிட்ட? என்ன சாப், நான் சொல்றது கரெக்ட்தானே!'' பேசியபடியே சோட்டா வாலா திரும்பிப் பார்த்தபோது பின்னிருக்கையில் காலியாக இருந்தது.

வெளிச்சம் சிறிதும் இல்லாத இருளான அந்தத் தெருவில் ஜோஷிதா கிரணின் பின்னால் ஓடிக் கொண்டிருந்தாள். தூரத்தில் யாரோ ஓடி வருவது மசமசப்பாகத் தெரிந்தது. மும்பை மக்கள் பசுக்களை காமதேனுவாகக் கருதி உணவளித்து சுதந்திரமாகத் திரிய விட்டதன் பலனாக தெருவெங்கும் சாணம் சிதறிக் கிடந்தது. அந்த சாணத்திலும் வீட்டிலிருந்து தெருவில் கொட்டப்பட்டு பறந்து கிடந்த குப்பைகளிலும் கால் பதிய ஜோஷிதா அருவெறுப்பில் தன்னையறியாமல் ஒதுங்கி நின்றாள். ஓடிக் கொண்டே பின்னால் திரும்பிப் பார்த்த கிரண் அவள் நிற்பதைப் பார்த்ததும் விரைந்து அருகில் வந்து ''நிற்க நேரமில்லை, வா என்னுடன்'' என்றான் தூரத்தே பார்வையை ஓட்டியபடி.

''இந்த அழுக்கும், குப்பையும்... என்னால் கீழே கால் வைக்க முடியாது'' என்றாள் ஜோஷிதா.



மேற்கொண்டு அவளை பேச விடாமல் முரட்டுத் தனமாய் அவளைப் பற்றி இழுத்துக் கொண்டு ஓடினான். தூரத்தில் தெரிந்த உருவம் இப்போது சற்றே அருகே வர இருவர் ஓடிவருவது நன்றாகத் தெரிந்தது. ஜோஷிதாவும் தன்னையறியாத பதட்டத்துடன் கிரணின் வேகத்திற்கு ஈடு கொடுத்து ஓடினாள். பழக்கமற்ற செருப்பு காலை தட்டிவிட கிரணின் வேகமான இழுப்பில் செருப்பில் உதறி விட்டு ஓடினாள். சில அடி தூரம் சென்றதும் அந்த தெரு இரண்டாகப் பிரிந்தது. தெருவிளக்கின் வெளிச்சம் பளீரென வீசியது. கிரண் கண் இமைக்கும் நேரத்தில் ஜோஷிதாவுடன் தெருவில் வரிசையாய் நின்றிருந்த கார்களின் பின்னே மறைந்தான். கார் சக்கரங்களின் இடைவெளியில் இரண்டு ஜோடி கால்கள் தெரியவும் ஜோஷிதாவின் இதயம் ஒருமுறை நின்று துடித்தது. சத்தமின்றி அந்த கால்கள் நிற்குமிடத்திற்கு எதிர்ப்புறமாய் இன்ச் பை இன்ச்சாக ஜோஷிதாவும் கிரணும் நகர்ந்தார்கள். திடீரென அவர்களுக்கு அருகில் துப்பாக்கி வெடித்தது. கிரண் அனிச்சையாய் ஜோஷிதாவின் வாயைப் பொத்தினான். சில நிமிடம் மௌனமாக ஜோஷிதாவின் இதயம் துடிக்கும் சத்தம் நன்றாகக் கேட்டது. எதிர் திசையில் இருந்தவர்கள் இவர்கள் இருக்கும் பக்கமாய் வருவது தெரிய, ஜோஷிதா பதற்றமானாள். சாலையின் ஒளி வெள்ளம் அவர்கள் எழுந்து ஓடுவதை காட்டிக் கொடுத்து விடும். பின்னால் நகர்ந்து செல்ல இடமில்லாமல் அந்தத் தெரு அத்துடன் முடிந்திருந்தது. அவர்கள் ஒவ்வொரு காராய் கடந்து வந்து கொண்டிருந்தார்கள். ஏதாவது செய்ய வேண்டும்... செய்ய வேண்டும்.

கிரண் பரபரத்துக் கொண்டிருக்கையில் அவனுக்கு உதவி செய்ய வந்தது போல் ஒரு திருமண ஊர்வலம்

அருகிலிருந்த மண்டபத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. ''ஜோஷிதா தயாராய் இரு. நான் சொல்லும் போது எழுந்து ஓட வேண்டும்'' என்றான் கிரண் அவள் காதருகே.

அவர்கள் இருந்த இடத்திற்கு அருகே இரு நிழல்கள் தரையில் விழுந்தன. ஜோஷிதா கிரணின் சட்டையைக் கொத்தாகப் பற்றினாள்.

கிரண் சலனமற்ற முகத்துடன் தங்களை நெருங்கும் ஆரவாரத்தை கவனித்தான். குதிரையில், மலர்களால் அலங்கரிக்கப்பட்டு மாப்பிள்ளை வர பெரிய தட்டுகளை ஏந்தியபடி காக்ரா சோளியணிந்த முக்காடிட்ட பெண்கள் குதூகலமாய் பாடியபடி வந்தார்கள். டோலக்கும், டான்சும் அமர்க்களப்பட்டது. ஜோஷிதாவின் பின்னால் யாரோ நெருங்கவும், ஜோஷிதா பயத்துடன் கிரணை அழைக்க முற்பட்ட விநாடியில் கிரண் அவளை இழுத்துக் கொண்டு ஊர்வலத்தில் புகுந்தான். யாரும் கவனிக்காதபடி இயல்பாக நிகழ்ந்து விட்ட அந்த நிகழ்ச்சியிலிருந்து ஜோஷிதா மீளும் முன் ஒரு வயதான பெண்மணி அவளிடம் திருமணத்தைப் பற்றி ஏதோ சொன்னாள். ஜோஷிதா தன்னை சமனப்படுத்திக் கொள்ள முடியாமல் கிரணை திரும்பிப் பார்க்க, கிரண் கல்யாண பாட்டிற்கு அபிநயித்து டான்ஸ் ஆடிக் கொண்டிருந்தான். இந்த திருமணத்தில் கலந்து கொள்வதற்காகவே கிளம்பி வந்தவனைப் போல் தென்பட்ட அவனை ஜோஷிதா அதிசயத்துடன் பார்த்தாள். அவள் பார்வையை உணர்ந்த கிரண் அவன் அருகில் வந்து ''அடிக்கடி இப்படிப் பார்க்காதே. சிரித்த முகத்துடன் நேராய் நட'' என அவள் தோளை அணைத்துக் கிசுகிசுத்தான்.

இரகசியம் பேசுகையில் காதருகே உரசிய இதழ்கள் குறுகுறுப்பை ஏற்படுத்தின. தோளில் பதிந்த கையின்



இதமான வெப்பம் திகைப்பை ஏற்படுத்தியது. சில நிமிடங்கள் முன்பு காருக்கு பின்புறம் நெருக்கத்தில் அமர்ந்திருந்த போதும், கிட்டத்தட்ட ஒரு மாதம் தனியறையில் தங்கி இருந்த போதும் ஏற்படாத வினோத உணர்வு இத்தனை கும்பலுக்கும் வெளிச்சத்துக்கும் நடுவே ஏற்பட்டது ஆச்சரியமாக இருந்தது. கும்பல் நகர்ந்து மண்டப வாயிலுக்கு வந்ததும் ஆரவாரம் அதிகமானது. குதிரையிலிருந்து இறங்கிய மாப்பிள்ளைக்கு ஆரத்தியும் கேலியும் அமர்க்களப்பட்டது.

கிரண் எதேச்சையாய் திரும்புவது போல் திரும்பிப் பார்க்கையில் தெரு காலியாகத் தெரிந்தது. புருவத்தைச் சுருக்கி அவன் யோசித்த நொடியில் 'ஆவோ ஜி, ஆப் ஆயியே' என திருமண வீட்டினர் வரவேற்கும் விதமாய் அவன் கைகளைப் பற்றினர். பழகிய பாவனையில் அவன் எல்லோரிடமும் தலையசைத்து சிரிக்க, ஜோஷிதா மிரள மிரள விழித்தபடி நின்றிருந்தாள். அவளைக் கவனித்த கிரண் ''ஜோஷிதா'' என்றான் அழுத்தமான குரலில்.

அந்த குரலில் அவள் கலைந்து திரும்ப, கிரண் இயல்பாய் அவள் இடையை அணைத்தபடி உள்ளே சென்றான். ஜோஷிதாவிற்கு ஒரு புதிய உலகத்திற்குள் நுழைவதான பிரேமை ஏற்பட்டது. மண்டபத்தைச் சுற்றி வந்து பூ ஜோடனைகளையும் விளக்கு அலங்காரங்களையும் ரசித்து ஒரு மணி நேரம் செலவழித்த பின்னர் மெதுவாய் நழுவி வெளியே வந்தார்கள்.

ஆள் நடமாட்டமில்லாத தெரு ஒரு பயத்தை ஏற்படுத்தியது. வேகமாக நடந்தவன் ஒரு ஆட்டோவை நிறுத்தி அதில் ஏறி அமர்ந்தான். வரும் போது ஆட்டோவில் நடந்த நிகழ்ச்சிகளின் நினைவில் ஜோஷிதாவுக்கு மறுபடி பயம் ஏற்பட்டது. ஆட்டோவை யாரோ

பின் தொடர்வதான பிரேமையில் அவனைப் பற்றியிருந்த விரல்கள் நடுங்கின.

''ஜோஷிதா!'' என்றான் கிரண் அவள் விரல்களைத் தன் இரு கைகளிலும் பொத்தியபடி.

''எனக்கு... பயமா இருக்கு கிரண்'' என்றாள் ஜோஷிதா தன் இதழ்களால் பற்களைக் கடித்தபடி.

மழையில் நனைந்த புறாவாய் படபடத்த அவளைப் பார்க்கையில் கிரண் மனம் தானாய் நெகிழ்ந்தது. சம்மந்தமில்லாத பிரச்சனைகளில் சிக்கிக் கொண்டு அவள் பரிதவிப்பது பச்சாதாபத்தை ஏற்படுத்த, அவள் தலையில் சமாதானமாய் கையை வைத்தான் கிரண். ஜோஷிதாவின் தலை தானாய் அவன் தோளில் சாய, கிரணின் உதடுகள் மென்மையாய் அவள் உச்சியில் பதிந்தன. ஜோஷிதா தன் பயத்தை மறந்து போனாள். பாதுகாப்பான இடத்திற்கு வந்து விட்டதான உணர்வு எழுந்தது. அசையக்கூட மாட்டாமல் அப்படியே அமர்ந்திருந்தவர்கள் ஆட்டோ டிரைவரின் குரலில் கலைந்தார்கள். ஆட்டோ சக்தி நிவாசின் வாயிலில் நின்றிருந்தது. ஆட்டோவிலிருந்து இறங்கிய போதுதான் தான் எங்கே போவதற்காக இங்கிருந்து கிளம்பினோம் என்பது ஜோஷிதாவிற்கு நினைவு வந்தது.



# 8

தன் எதிரே நின்று கோபத்துடன் கத்தியவளைப் பார்த்ததும் எழுந்த சிரிப்பை உள்ளுக்குள் அடக்கியபடி கிரண் பதில் சொல்ல முற்பட்டான்.



''உன்னை உண்மையிலேயே காவல் நிலையத்திற்கு அழைத்துப் போகத்தான் கிளம்பினேன். என்னை நம்பு ஜோஷிதா.''

''நம்ப மாட்டேன். நிச்சயம் நம்பமாட்டேன். நீ ஒரு திருடன். தீவிரவாதி. வெளியே சென்றால் முகமறியாத மனிதர்கள் உன்னைத் துரத்துகிறார்கள். போலீசைக் கண்டால் நீ மறைந்து கொள்கிறாய். உன்னுடன் ஒரு நிமிடம் கூட என்னால் இருக்க முடியாது. நான் இப்போதே போகிறேன். அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு வழி கேட்டுச் செல்வது பெரிய விஷயம் அல்ல. நானே போய் நடந்ததைச் சொல்லப் போகிறேன்.''

''போய் சொல். ஆனால் அதை காலையில் போய் சொல். இப்போது இரவு மணி இரண்டு. இந்த சமயத்தில் காவல் நிலையத்திற்கு என்றாலும் பெண்கள் தனியாகச் செல்வது நல்லதல்ல.''

''இனி நீ சொல்லும் எதையும் நான் கேட்பதாக இல்லை.''

ஜோஷிதா வந்த வழியே திரும்ப முற்பட கிரண் வழிமறித்தான்.

''என்னை நம்ப வேண்டாம். விடிந்ததும் சோம்நாத்ஜி அல்லது கபூர் யாரையாவது உன்னுடன் அனுப்பி வைக்கிறேன். இன்று இரவு மட்டும் இங்கே தங்கியிரு.''

''முடியாது. உன்னைப் போல் ஒரு அயோக்கியனுடன் இரவைக் கழிப்பது என்னால் முடியாத காரியம்.''

''அயோக்கியனா?'' கிரணின் கண்கள் கோபத்தில் நெருப்பாய் ஜொலித்தன.

''இத்தனை நாட்கள் என்னுடன் தங்கியிருந்த பிறகுமா அயோக்கியன் என்கிறாய்?''

''ஆமாம். எத்தனை நாட்கள் ஆன போதும் நீ நல்லவன் இல்லை. என்னை இரகசியமாக மறைத்து

வைத்திருக்கும் ஒருவன் எப்படி நல்லவனாக இருக்க முடியும்?''

''ஒரு அயோக்கியன் எப்படி நடந்து கொள்வான் என்பதை நீ இன்று தெரிந்து கொள்ளத்தான் போகிறாய்'' என்ற கிரண் ஒரு கையால் அவள் வாயைப் பொத்தி மறு கையால் அவளைத் தூக்கி தோளில் போட்டான். அவள் திமிறத் திமிற காம்பவுண்டிற்குள் நுழைந்து தன் வீட்டை அடைந்தவன் அவள் கத்தத் தொடங்கும் முன் கதவைத் தாழிட்டான்.

''என்னை எதுக்குடா தூக்கிட்டு வந்த?'' ஜோஷிதா அருகிலிருந்த பொருட்களைத் தூக்கி அவன் மீது வீச கிரண் தன் சட்டையைக் கழட்டி கட்டிலில் வீசினான்.

''வேண்டாம் கிரண். கிட்ட வராதே'' ஜோஷிதா பின்னால் நகர்ந்தாள். பேண்டைச் சுற்றியிருந்த பெல்ட் டைக் கழட்டி கிரண் கீழே வீசினான்.

''கிரண் நீ என்ன செய்கிறாய் என்று முதலில் யோசித் துப் பார்.''

கிரண் அழுத்தமான காலடிகளுடன் அவளை நெருங் கினான்.

ஜோஷிதா சுற்றிலும் பார்த்தாள். ஏ.சி.க்காக அடைக் கப்பட்ட துவாரங்கள் சவுண்ட் ப்ரூப்பாகவும் செயல் பட்டு சத்தத்தை வெளியே கசிய விடாமல் செய்திருந் தது. அதனால் வீடுகள் நெருக்கமாக இருந்த போதும் சத்தினால் வெளியே கேட்காது. ஆறடிக்கு மேல் உயர மும், செதுக்கின சிலையைப் போல் இறுகிய உடலுமாய் இருக்கும் இவனைத் தாண்டிச் செல்வது சாத்தியமா? இவனுடன் எதற்காக சண்டை போட்டோம் என்ற கவலை எழுந்தது.



''கிரண் நான் உனக்கு சிகிச்சை அளித்திருக்கிறேன். ஆபத்தான நிலையில் உன் உயிரைக் காப்பாற்றி இருக் கிறேன் என்பதையாவது நினைத்துப் பார்.''

கிரண் மிக அருகில் நெருங்கி நின்றான்.

ஜோஷிதாவிற்கு பின்னால் சுவர் முதுகில் இடித்தது. அதற்கு மேல் நகர வழியில்லை என்றானதும் ஒரு நிமிடம் என்ன செய்வதென புரியாமல் மலைத்தாள். போராடி அவனைக் காயப்படுத்த மனமற்று ''ப்ளீஸ், போய் விடு கிரண்'' என்றாள் தணிவாக.

கிரண் அவள் சொன்னது காதிலேயே விழாதவனாக அவளை நோக்கி குனிந்தான். முகத்தோடு முகம் உரசியது. அவன் மூச்சுக் காற்று அனலாய் முகத்தில் பட்டது. அவனது வெற்றுத் தோள்களில் அவள் உடல் உரச ஜோஷிதாவின் கண்கள் தன்னையறியாமல் மூடின. கண நேர உணர்ச்சியால் உந்தப்பட்டு அவளை இழுத்து அணைக்கப்போன கிரண் திடுக்கிட்டாற்போல் தன் நினைவுக்கு வந்தான். அவன் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறான்? அவனா இப்படி ஒரு பெண்ணைப் பாழ்படுத்தும் காரியத்தைச் செய்யப் போகிறான்? அவள்தான் கோபத்தில் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் அவனுக்கு அறிவு எங்கே போயிற்று!

அவளை அணைத்திருந்த கிரணின் கைகள் நழுவின. சடாரென விலகினான்.

ஜோஷிதா கண்களைத் திறந்தபோது கிரண் கட்டிலின் மீதிருந்த சட்டையை அணிந்து கொண்டிருந்தான். ப்ரிட் ஜைத் திறந்து ஐஸ் வாட்டரைக் குடித்தவன் அப்படியே நின்றிருந்த ஜோஷிதாவின் அருகில் வந்தான்.

''இத்தனை நாள் நான் நல்லவனாகத்தான் நடந்து கொண்டிருக்கிறேன் என்பதை இப்போது தெரிந்து

கொண்டிருப்பாய். கதவைத் தாழிட்டுக் கொள்'' என்றவன் அவளை திரும்பியும் பாராமல் வெளியேறினான்.

கதவைத் தாழிட்டுக் கொண்டு படுத்த ஜோஷிதாவுக்கு கிரண் நல்லவனா, இல்லையா என்பதைவிட தன்னுடைய மனமே தனக்கு புதிதாய் குழப்பியது. கிரண் மீது அத்தனை சந்தேகமும், கோபமும் இருந்த போதும் அவன் அருகில் நெருங்கியதும் ஏன் அமைதியாகிப் போனேன்! ஆட்டோவில் வரும்போது கூட அவன் அணைப்பில் இருப்பது மிகவும் பாதுகாப்பாக தோன்றியதே! ஒரு கெட்டவனிடம் எப்படி பாதுகாப்பாக உணர முடியும்? எல்லாவற்றிற்கும் மேலாக அவன் என்னை தொடவும் அணைக்கவும் அவனுக்கு துணிச்சல் எங்கிருந்து வந்தது? திருமணம் நிச்சயம் செய்திருந்த போதும் ஹரிஷ் தனக்கு நெருக்கத்தில் அமரக் கூட தயங்கியது நினைவு வந்தது.

அவ்வப்போது அவன் ஆர்வத்துடவன் பார்க்கும் பார்வைகளே எரிச்சலை ஏற்படுத்திய போது, கிரண் அத்தனை நெருங்கிய போதும் ஏன் அடித்துக் காயப்படுத்த மனம் வரவில்லை? இத்தனை நாளில் என் புத்தி பிசகி விட்டதா என்ன? ஜோஷிதா மிகவும் குழம்பிப் போனாள்.

வெகு நேர யோசனைக்குப் பிறகு மனதில் ஒரு தீர்மானம் ஏற்பட்டது. 'எது எப்படியிருந்தாலும் முதலில் இங்கிருந்து கிளம்பிவிட வேண்டும். தொடர்ந்து இங்கே இருப்பது வீணான குழப்பங்களையும், பிரச்சனைகளையும் உண்டாக்கும். விடிந்ததும் கிளம்பிவிட வேண்டும். இனி எதற்காகவும் தாமதிப்பதில் அர்த்தம் இல்லை.' தனக்குள் முடிவு செய்த பிறகு ஜோஷிதாவுக்கு உறக்கம் வந்தது.



மறுநாள் காலையிலும் கிரண் வராததால் ஜோஷிதா தானே காவல் நிலையத்துக்கு போவதென முடிவு செய்தாள். கதவைத் தாழிட்டு விட்டு வெளியே வருகையில் கபூர் சேட் அருகே நின்றிருந்தது கண்ணில் பட்டது. சாவியை அவனிடம் கொடுத்துவிட்டுப் போகலாம் என்ற எண்ணத்துடன் அவனை நெருங்கி,

''தாராபாய் எங்கே கபூர்?'' என்றாள் ஜோஷிதா.

''கோவிலுக்குப் போய் இருக்கிறாள் பெகன்ஜி'' என்ற கபூர்,

''சோம்நாத்ஜியை வேறு காணோம்'' என்றான் கவலையுடன்.

''அவர் எங்கே போயிருக்கிறார்?'' என்றாள் ஜோஷிதா.

''பென்ஷன் வாங்க போயிருக்கிறார். வழக்கமாய் நான் அல்லது சலீம் கூட போவோம். எங்களால் முடியாத போது சோட்டாவாலா அவனது ரிக்ஷாவில் அழைத்துப் போவான். இன்று நானும் சலீமும் போகவில்லை. யாருடன் போனார் என்று தெரியவில்லை. சோட்டாவாலாவும் நேற்றே வெளியூர் போவதாகச் சொன்னான்.''

''சோம்நாத்ஜியின் குடும்பத்தினர் யாரும் அவருடன் இல்லையா?'' என்றாள் ஜோஷிதா.

''இல்லை'' என்றார் கபூர் பெருமூச்சுடன். ''அவர் மனைவி சில வருடங்களுக்கு முன்புதான் இறந்தார்கள். அவர்களுக்கு குழந்தைகள் இல்லை. அதனால்தானோ என்னவோ பழகியவர்களிடம் பாசத்தைக் கொட்டி தங்கள் குழந்தையாகவே பாவித்தார்கள். இந்த சக்தி நிவாஸ்சில் ஜியின் மனைவி கையால் சாப்பிடாத குழந்தைகளே இல்லை. நான், இஸ்மாயில், சலீம் எல்லோரும் எங்கள் வீட்டை விட அவர் வீட்டில் இருந்த நேரம்தான் அதிகம்.''

இங்கு வந்ததிலிருந்து தன்னிடமும் அவர் பிரியம் காட்டி பேசியது நினைவுக்கு வர ஜோஷிதா ஒப்புதலாய் தலையசைத்தாள்.

"சரி நீங்கள் உள்ளே செல்லுங்கள் பெகன்ஜி. நான் தெருமுனை வரை போய் பார்த்துவிட்டு வருகிறேன்" என்றான் கபூர் அவளிடம்.

"இல்லை கபூர். நான் வெளியே போக வேண்டும்" என்றாள் ஜோஷிதா.

"தனியாகவா? கிரண் சாப் கூட இல்லை போலி க்கே! அவர் வந்த பிறகு செல்லுங்கள். அல்லது சற்று நரம் பொறுத்தால் நான் கூட வருவேன்" என்றான் பூர்.

அவனது கரிசனத்தில் மனம் நெகிழ்ந்த ஜோஷிதா ங்கு கிரணுக்கும் எனக்கும் எந்த உறவும் இல்லை என்று ரிந்தால் இவனது ரியாக்ஷன் எப்படியிருக்கும் என்று ான்றியது. இருவரும் நின்று கொண்டிருக்கையி யே தெருவில் சிலர் பரபரப்பாக ஓடுவது தெரிந்தது. ர் யாரையோ கேட்க, "நம் தெருவில் ஒரு விபத்து. ர் ஒன்று ப்ரேக் பிடிக்காமல் நடந்து செல்பவர்கள் மீது ாதி விடவே ஒரு கலாட்டாவாய் இருக்கிறது" ன்றார்கள்.

தானும் போய் பார்க்க முற்பட்ட கபூரை நிறுத்தி சற்று தாலைவில் தடுமாறியபடி வந்து கொண்டிருப்பவரை ட்டினாள் ஜோஷிதா.

"நம் ஜியைப் போலில்லை?"

"அவரேன்தான்" என அவர் அருகில் ஓடிய கபூர் ரத்தம் வழிய தள்ளாடியவரை அருகில் இருந்தவர்கள் தவியுடன் தூக்கி வந்து நடையில் இருந்த நீள



பெஞ்சில் கிடத்தினான். காம்பவுண்டில் வசிப்பவர்கள் அவரைச் சுற்றி கூடினார்கள். "அடப் பாவமே எப்படி அந்த விபத்தில் சிக்கினார்?"

"தனியாக எங்கே போனார்?"

"மண்டை உடைந்திருக்கிறது போலும் இரத்தம் வழிகிறது."

ஆளுக்கு ஆள் பேச, ஜோஷிதா அவர்களை விலக்கிக் கொண்டு சோம்நாத்ஜியின் அருகில் சென்றாள். "எல்லோரும் விலகி நில்லுங்கள்" என்றவள், ஜியின் காயத்தை பரிசோதித்து கபூரிடம் சில மருந்துகளை எழுதித் தந்து வாங்கி வரச் சொன்னாள். அடிபட்ட இடத்தைச் சுத்தம் செய்து மண்ணோ, கண்ணாடி சிதறல்களோ இல்லை என்று உறுதி செய்து கொண்டு தையல் போட்டு இன்ஜக்ஷன் செய்தாள். முனகக் கூட சக்தியற்று பரிதாப மாகத் துவண்டு கிடந்தவரைப் பார்த்தபடி அமர்ந்திருக் கையில் "பெகன்ஜி, இவர்கள் உங்களைப் பார்க்க வேண்டும் என்கிறார்கள்" என்றான் கபூர் இருவரைக் காண் பித்து. முழங்காலில் இரத்தம் வழிந்த ஒரு சிறுவனை யும், வலது காதை பொத்தியபடி நின்றிருந்த பெண்ணை யும் புரியாமல் பார்த்த ஜோஷிதாவிடம், "இவர்கள் அடுத்த காம்பவுண்டில் வசிப்பவர்கள். தெருவில் நடந்து வந்தவர்கள் மீது அந்த கார் மோதியிருக்கிறது. சோம்நாத் ஜியுடன் சேர்ந்து இவர்களும் கீழே விழுந்திருக்கிறார்கள். இங்கே டாக்டர் இருப்பதாக கேள்விப்பட்டு உங்களிடம் சிகிச்சைக்கு வந்திருக்கிறார்கள்."

"என்னால் முதலுதவி செய்ய முடியும் கபூர். சிகிச்சை அளிக்க முடியாது. இன்றோ, நாளையோ நான் இங்கிருந்து போய் விடப் போகிறேன். அதனால் வேறு டாக்டரை பார்க்கச் சொல்."

அந்தப் பெண் ஜோஷிதா சொன்னதைக் கேட்டதும் சடாரென அவள் கால்களைப் பற்றி கெஞ்ச ஆரம்பித்தாள். "முடியாது என்று சொல்லாதீர்கள். ஜி. என் கணவன் வேறு ஊரில் இல்லை. என்னால் எங்கும் போக முடியாது. வலி உயிர் போகிறது."

"கபூர், ப்ளீஸ் எழுந்திருக்கச் சொல்" என்றாள் ஜோஷிதா திகைப்புடன்.

"மருத்துவர்கள் கடவுளுக்குச் சமம் பெகன்ஜி. உயிர்களைக் காப்பாற்றும் வேலையை கடவுள் உங்களுக்குத்தான் கொடுத்திருக்கிறார். மறுக்காதீர்கள்" என்றான் கபூர். அவனுடன் இன்னும் சிலரும் சேர்ந்து கொள்ள, ஜோஷிதா அவர்களுக்கு சிகிச்சை அளிக்கத் தொடங்கினாள். அவர்கள் போன பிறகு மேலும் சிலர் அடிபட்ட காயத்துடன் வந்தார்கள். தொடர்ந்த இருபது நிமிடங்களில் சக்தி நிவாஸின் வாகனங்கள் நிறுத்தும் இடம் மினி டிஸ்பென்ஸரியாக மாறிப் போனது. யார் வீட்டிலிருந்தோ ஜோஷிதாவுக்கு உட்கார நாற்காலியும், டேபிளும் கொண்டு வந்து போட்டார்கள். ஒரு டேபிள் பேனும், தண்ணீர் கூஜாவும் கூட அருகில் வந்தது. மாலையில் வீடு திரும்பிய கிரண், "இதென்ன கூட்டம்?" என்றான் வியப்புடன்.

கோவிலிலிருந்து வீடு திரும்பி ஜோஷிதாவின் அசிஸ்டென்டாய் மாறியிருந்த தாராபாய் பெருமையுடன் சிரித்தாள். "டாக்டரம்மாவைப் பார்க்க ஏகக் கூட்டம். சமாளிக்கவே முடியல."

"நல்லவேளை நம்ம தெருவில் விபத்துன்னு தெரிஞ்சதும் உங்க டாக்டர் அம்மா எங்க இருக்காங்களோன்னு பயந்து போனேன்" என்றான் கிரண் நிம்மதியுடன்.

மருந்து சீட்டில் குனிந்து எழுதிக் கொண்டிருந்த ஜோஷிதாவின் கை ஒரு கணம் தயங்கி பிறகு தொடர்ந்தது.



அன்று அந்தத் தெருவில் நடந்த விபத்து பலரைக் காயப்படுத்தியது மட்டுமல்லாமல் ஜோஷிதாவின் வாழ்வை அவளே எதிர்பாராத விதமாய் திருப்பி விட்டது. அந்த பகுதியிலிருந்தவர்கள் தினமும் ஜோஷிதாவை நாடி வரத் தொடங்கினார்கள். காலையில் அவள் தூங்கி விழிக்கும் முன்பே டாக்டரைப் பார்க்கவென்று, ஒரு கூட்டம் வாயிலில் கூடத் தொடங்கியது. திடீர் நர்ஸாகவும், கம்பவுண்டராகவும் பொறுப்பேற்றுக் கொண்ட கபூரும் தாராபாயும் கூட்டத்தை ஒழுங்கு படுத்தி வரிசையில் அமர வைப்பார்கள். மாலை நேரங்களில் சலீமும் கூட வந்து உதவுவான். சோம்நாத்ஜியின் உடல் நிலை விரைவில் குணமடையவும், அவரும் உற்சாகத்துடன் அவர்களுடன் சேர்ந்து கொண்டார். அவர் வீட்டில் வாயிற்புறம் பார்த்த ஒரு அறையை ஜோஷிதாவுக்கு ஒதுக்கிக் கொடுக்க யாரும் எதுவும் திட்டமிடாமலேயே அங்கு ஒரு மருத்துவமனை செயல்பட ஆரம்பித்தது.

தன் தொழிலில் இருந்த ஈடுபாட்டால் ஜோஷிதா வேலையில் முழுமையாக ஒன்றிப் போனாள். பெற்றோரிடம் பேசும்போது மட்டுமே ஊர் திரும்ப வேண்டும் என்ற எண்ணம் வரும். பின் அடுத்தடுத்த வேலைகளில் அந்த எண்ணம் மறைந்து போகும். தான் வாழப் போகும் வீட்டு மனிதர்கள் என்றாலும் ஹரிஷ் குடும்பத்தினரிடம் ஏற்படாத நெருக்கம் இங்கு வசிப்பவர்களிடம் ஏற்பட்டது. கிரண் அவளை இயல்பாக நடத்தியது சொந்த வீட்டில் இருப்பதைப் போன்ற உணர்வைத் தந்ததால் 'என் பணி மருத்துவம். அதை எங்கே செய்தால் என்ன?' என்றும் தோன்றியது.

யோசனைகளுடனே தலையை வாரிக் கொண்டிருந்த ஜோஷிதாவுக்கு ஏதோ வித்தியாசம் தெரிந்தது. 'தினமும்

தலை வாருகிற போதெல்லாம் நினைவுக்கு வந்து பிறகு மறந்து விடுகிறது. இங்கு வந்ததிலிருந்து தலை வாருகிற போது வைர மோதிரத்தில் முடி சிக்கும். பிரித்து விட்டு ஜோஷி தலையை வாருவாள். இப்போது மோதிரத்தைக் காணோம். திருமண நிச்சயதார்த்த மோதிரம். எங்கே போயிருக்கும்? எங்காவது கழற்றி வைத்தேனா?"

ஜோஷிதா வீடு முழுக்கத் தேடினாள். இரண்டே அறைகள் கொண்ட வீட்டை எத்தனை முறை தேடினாலும் பலன் எதுவும் இல்லை. ஜோஷிதாவுக்கு திடீரென நினைவு வந்தது. சர்மா சாரை சந்திக்கவென்று கிளம்பிப் பாதி வழியில் ஆட்டோவை விட்டு இறங்கி ஓடிய அன்றுதான் தொலைந்திருக்க வேண்டும். ஓட முடியாமல் தயங்கி நின்றபோது கிரண் முரட்டுத்தனமாய் கையைப் பற்றி இழுத்துப் போனபோது நழுவியிருக்கலாம். அப்போதிருந்த பதட்டத்தில் மோதிரத்தைப் பற்றி யோசிக்கவே தோன்றவில்லை. தன் போக்கில் உடைகளை கலைத்துப் போட்டிருந்தவளின் அருகே வந்த கிரண், ''என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்றான் வியப்புடன்.

''என்னுடைய மோதிரத்தைக் காணோம். தேடிக் கொண்டிருக்கிறேன்.''

''மோதிரமா? எப்போதிருந்து காணோம்? ஆனால் இங்கே காணாமல் போக வழியே இல்லையே! வேலைக்காரப் பெண்மணி ரொம்ப நல்லவர். இதுவரை எந்தப் பிரச்சனையும் இல்லை'' என்றான் கிரண்.

''இங்கே காணாமல் போனதாக நான் சொன்னேனா?''

''பிறகு? ஒருவேளை லண்டனில் தொலைத்து விட்டு இங்கே வந்து தேடுகிறாயா?'' என்றான் கிரண் கிண்டலாக.



ஜோஷிதா அவனை முறைத்தாள். ''உன்னால்தான் என் மோதிரம் போயிற்று. சர்மா சாரை பார்க்கவென்று அழைத்துப் போய் இரவில் தெருத் தெருவாய் அலைய விட்டாயே, அந்த சமயத்தில் தான் காணாமல் போயிற்று.''

''ஆப்டர் ஆல் மோதிரம்'' என்றான் கிரண் அலட்சியத்துடன். ''அன்றைய ஆபத்து மோதிரத்துடன் போனதே என்று சந்தோஷப்படு.''

அவனது அலட்சியம் அவளை உசுப்ப, ஜோஷிதா சொன்னாள், ''அது ஆப்டர் ஆல் மோதிரமல்ல. ஸ்பெஷல் ரிங். என் திருமண நிச்சயதார்த்த மோதிரம்.''

கிரணின் கண்கள் லேசாக சுருங்க, ''நிச்சயதார்த்த மோதிரமா உண்மையாகவா சொல்கிறாய்?'' என்றான் நம்ப மாட்டாமல்.

''நான் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.''

''அப்படியானால் உன் வருங்கால கணவன் எங்கே இருக்கிறான்? அவனை ஏன் நீ இன்னும் சந்திக்காமல் இருக்கிறாய்? குறைந்த பட்சம் ஒரு போன் செய்திருந்தால் கூட அவன் உன்னைப் பார்க்க ஓடி வந்திருப்பானே! ஏன் வரவில்லை? நீயும் இத்தனை நாளில் அவனைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசியதில்லையே! பிறகு எப்படி நீ சொல்வதை நம்புவது?''

''யார் நம்பாவிட்டாலும் நீ நம்பித்தான் ஆக வேண்டும். ஏனென்றால் நீ முதன் முதலாக என்னை சந்தித்த அன்று அவன் என்னுடன்தான் இருந்தான்.''

''அப்படி என்றால்?''

''அன்று தாஜ் ஹோட்டலுக்கு டின்னருக்கு அவன்தான் என்னை உணவருந்த அழைத்துப் போனான்.''

''வாஹ்!...'' கிரண் மெல்லிய குரலில் விசில் அடித்தான். ''உணவருந்த அழைத்து வந்த ஹீரோ பிறகு

மணந்து கொள்ளப் போகும் பெண்ணை விட்டு விட்டு எங்கே காணாமல் போனான்?''

''அன்றைய கலவரத்தில் யாரும் யாரையும் கவனிக்க முடியாத சூழ்நிலை. என்ன நடக்கிறதென்று எனக்குப் புரியவே முழுதாய் ஐந்து நிமிடம் ஆனது.''

''சோ, தான் உயிர் பிழைக்க, கூட வந்தவளை விட்டு விட்டு ஓடி விட்டான். பரவாயில்லை, நல்ல துணிச்சலான ஆளைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள்.''

ஜோஷிதாவுக்கு அவமானத்தில் முகம் சிவந்தது. ''எல்லோரும் உன்னைப் போல் ரௌடியாக இருக்க முடியுமா என்ன? நல்லவர்கள் இந்த உலகில் பயந்துதான் வாழ வேண்டியிருக்கிறது.''

''அந்த நல்லவனுக்குக் கூட வந்த பெண்ணை காப்பாற்ற முடியாமல் போனதுடன், அதன் பிறகும் அவளைத் தேடி தொடர்பு கொள்ள முடியாமல் போனதும் உன் துரதிர்ஷ்டம்தான்'' என்றான் அனுதாபம் தொனிக்கும் குரலில்.

''உண்மையிலேயே நான் துரதிர்ஷ்டசாலிதான் இல்லை என்றால் உன்னுடன் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்குமா?'' என்றாள் ஜோஷிதா கோபத்துடன்.

''நீ இத்தனை வருத்தப்பட வேண்டியதில்லை. உன்னை நான் விலங்கு போட்டு வைத்திருக்கவில்லை. எப்போது வேண்டுமானாலும் நீ இங்கிருந்து போகலாம். உன்னை தடை செய்ய நான், உட்பட யாருக்கும் எந்த அதிகாரமும் இல்லை.''

ஜோஷிதாவின் கண்கள் நிறைந்தன. எதிர்பார்க்காத தருணத்தில் தூக்கி எறியப்பட்டாற்போல் மனம் துடித்தது. எந்த உரிமையில் இங்கே தங்கியிருக்கிறேன்? கிளம்பும் போதெல்லாம் நடந்த எதிர்பாராத சம்பவங்களை



சாக்காக வைத்துக் கொண்டு இங்கேயே தங்கி விட்டது முட்டாள்தனமில்லையா? அதுவும் இன்று அவனாகச் சொல்லும் வரை அவளுக்கு உறைக்கவில்லையே!

ஜோஷிதா தன்னை சமாளித்துக் கொண்டு புன்னகைத்தாள். ''என்னை நீயாக அனுப்பி வைக்கிறேன் என்றதால் வேறு எதைப் பற்றியும் நினைக்காமல் இருந்து விட்டேன். உரிமையில்லாத ஒரு இடத்தில் இருப்பது தவறுதான் கிரண். நான் நாளை இங்கிருந்து போய் விடுகிறேன்.''

ஜோஷிதா அவனை திரும்பிப் பார்க்காமல் வெளியே செல்ல, கிரண் ஒரு நிமிடம் சிலையாய் நின்றிருந்தான். அடுத்த நிமிடம் அலட்சியத்துடன் சட்டையை மாற்றிக் கொண்டு வெளியே கிளம்பினான். அவனது அவசர உலகில் கடினமான பணியில் பந்த பாசங்களுக்கு இடமே இல்லை. நல்லவேளை ஒரு சிநேகம் சிக்கலில்லாமல் விலகியது என்றான் நிம்மதியுடன்.

ஆனால் என்னதான் அலட்சியப்படுத்தினாலும் தான் சொன்னதைக் கேட்டதும் சடாரென வாடிப் போன ஜோஷிதாவின் முகம் அன்று முழுவதும் நினைவில் வந்து கொண்டே இருந்தது.

சோம்நாத்ஜி தன் வீட்டிற்கு வெளியே நோயாளிகளுக்காக போடப்பட்டிருந்த பெஞ்சை நகர்த்தி விட்டு ஓடிக் கொண்டிருந்த பேனை நிறுத்தினார். வீட்டில் தனிமையில் இருந்து கொண்டு எதிர்ப்படுபவர்களை இழுத்து வைத்துப் பேச்சு கொடுப்பவருக்கு தன் வீட்டு வாயிலில் தினமும் கூடும் கூட்டமும், சலசலவென்ற பேச்சு சத்தமும் மிகவும் பிடித்திருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக மனிதர்களின் துன்பத்தைத் தீர்க்கும்

பணியில் உதவுகிறோம் என்ற திருப்தி இருந்தது. தன் வாழ்வின் இறுதிக் காலங்களை பயனுள்ளதாகக் கழிப்பதற்கு உதவிய ஜோஷிதாவுக்கு மனதில் நன்றி கூறியபடி டிஸ்பென்ஸரியின் கதவை சாத்த முற்பட்டார். அறையின் அரை குறை இருளில் மேஜை மீது தலை சாய்த்து கண்களை மூடியிருந்த ஜோஷிதாவைப் பார்த்ததும் திடுக்கிட்டார். வேகமாக அவள் அருகில் சென்றவர், ''ஜோஷிதா உடம்பு சரியில்லையா என்ன?'' என்றார் கவலையுடன்.

ஜோஷிதா 'இல்லை' என தலையசைத்தாள். ''என் உடம்புக்கு எதுவும் இல்லை.''

''அப்ப மனசுக்கு எதாவது இருக்கும்.''

ஜோஷிதா பதில் பேசாமல் இருக்கவும், ''எங்கிட்ட சொல்லு ஜோஷிதா, உன் மனசு என்ன சொல்லுதுன்னு'' என்றார் சோம்நாத்ஜி உரிமையுடன். ஜோஷிதா என்ன சொல்லுவாள்? அவளுக்கும் கிரணுக்கும் உள்ள உறவின் விசித்திரத்தைச் சொல்வதா? அல்லது சற்று முன் தன் பெற்றோருடன் பேசியதைச் சொல்வதா? ஜோஷிதா எதுவும் சொல்லத் தோன்றாமல் அப்படியே அமர்ந்திருந்தாள்.

அன்று கிரணிடம் வீட்டை விட்டுப் போவதாக சொன்ன பிறகுதான் ஜோஷிதாவிற்கு எங்கே போவது என்று தோன்றியது. ஷீலா நாயர் ஒரு கான்பரன்ஸிற்காக லண்டன் வந்திருப்பதாகவும், தன்னை வந்து சந்தித்து, உன்னைப் பற்றி விசாரித்தாள் என்றும் அவள் அம்மா அவளிடம் சொல்லியிருந்தாள். எனவே மும்பையில் இப்போது ஹரிஷ் வீட்டினரைத் தவிர அவளுக்குத் தெரிந்தவர்கள் யாரும் இல்லை. அவர்களது எதிர்கால



வாழ்க்கையைப்பற்றி என்ன முடிவெடுப்பதாக இருந்தாலும் இப்போது உடனடியாய் சில நாட்கள் தங்க அவளுக்கு ஒரு இடம் தேவை.

ஜோஷிதா தன் பெற்றோர்களுக்கு போன் செய்தாள். போனை எடுத்து மகளிடம் ஆவலுடன் நலம் விசாரித்த கீதாவிடம் ''ஹரிஷ் வீட்டு நம்பர் தருகிறீர்களா அம்மா?'' என்றாள் ஜோஷிதா.

கீதா தயங்கவும், ஏதோ விஷயம் இருப்பதை உணர்ந்து ''என்னம்மா?'' என்றாள் ஜோஷிதா.

''ஹரிஷ் வீட்டிலிருந்து யாரும் நம்முடன் அவ்வளவாய் பேசுவதில்லை ஜோஷிதா. நீ அந்த வீட்டிற்கு மருமகளாய் போயிருக்க வேண்டியவள்தான். ஆனால் இப்போது நீ போய் நின்றால் எந்த அளவுக்கு வரவேற்பார்கள் என்று தெரியவில்லை.''

''அம்மா புரியும்படியாய் சொல்லுங்கள்'' என்றாள் ஜோஷிதா பொறுமையின்றி.

மீண்டும் ஒரு நொடி தயக்கத்திற்குப் பின் கீதா சொன்னாள். ''ஜோஷிதா ஹரிஷ் குடும்பத்தவர்கள் ரொம்ப ஆச்சாரமானவர்கள் என்று நமக்கு முன்பே தெரியும் இல்லையா? திருமணமானதும் லண்டனிலேயே வசிக்கப் போகும் உன்னை அவர்கள் ஆச்சாரம் எந்த விதத்திலும் பாதிக்காது என்பதால் நாங்கள் அதைப் பற்றி யோசிக்காமல் திருமணத்தை உறுதி செய்தோம்.''

''இதெல்லாம் தெரிந்த விஷயம்தானே! விஷயத்தைச் சொல்லுங்கள்'' என்றாள் ஜோஷிதா இடையில் குறுக்கிட்டு.

''ஜோஷிதா நீ ஹரிஷ் வீட்டில் தங்கியிருந்த சமயத்தில் உன் வெளிப்படையான பேச்சும், உன் வேலையை

செய்ததில் உனக்கிருந்த சுதந்திர மனோபாவமும் அவர்கள் மனதில் ஒரு நெருடலை ஏற்படுத்தியிருக்கிறது. அதற்கு சிகரம் வைத்தாற் போல் தங்கள் வீட்டிற்கு மருமகளாகப் போகும் பெண் திடீரென காணாமல் போனதும், இத்தனை நாட்கள் அறிமுகமற்ற இடத்தில் எங்கேயோ தங்கியிருப்பதையும் அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தங்கள் உறவினர்களுக்கு மத்தியில் பெரிய அவமானம் ஏற்பட்டு விட்டதாகக் கருதுகிறார்கள்.''

''ஹரிஷ் என்ன நினைக்கிறான்?'' என்றாள் ஜோஷிதா விஷயத்தைத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன்.

''அவன் பெற்றோர்களின் வார்ப்பில் வந்தவன் அவன். அவர்களுடைய எண்ணத்தைத் தான் அவனும் பிரதிபலிக்கிறான்.''

''ஓ...'' என்ற ஜோஷிதா மௌனமானாள்.

''ஜோஷி'' என்றாள் கீதா ஆதங்கத்துடன். திருமணம் நிச்சயிக்கப்பட்டு விட்ட நிலையில் மகள் தன் எதிர்கால கணவனை விரும்பத் தொடங்கியிருப்பாள் என்ற நினைவில் அந்த தாய் மனம் துடித்தது.

''ஜோஷிதா எதற்காகவும் மனதைத் தளர விடாதே! உடனே கிளம்பி இங்கே வா'' என்றாள் கீதா.

தாயின் மனம் புரிந்த ஜோஷிதா வாய்விட்டுச் சிரித்தாள். ''ஹரிஷ் இப்படித்தான் இருப்பான் என்று எனக்குத் தெரியும். மாறாக அவன் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டிருந்தால்தான் நான் ஆச்சரியப்பட்டிருப்பேன். ஆனால் அம்மா, நான் இப்படி அறிமுகமற்ற இடத்தில் தங்கியிருப்பதற்கு ஹரிஷின் சுயநலம்தான் காரணம் என்பது ஏன் அவர்களுக்குப் புரியவில்லை. ஒரு



ஆபத்து வந்ததும் கூட இருந்தவளை விட்டு விட்டு ஓடிப் போனான். பிறகும் என்னைத் தேட முயற்சிக்கவில்லை. அந்த இக்கட்டான நிலையில கிரணும், ஹோட்டல் பணியாளர்களும் என்னைப் போல் பலரைக் காப்பாற்றினார்கள். அவர்களுக்கு சக மனிதர்களிடம் இருந்த மனிதாபிமானம் மணக்கப் போகிறவனுக்கு இல்லை பார்த்தீர்களா? ஹரிஷ் வீட்டினர் என்னைத் தேர்ந்தெடுக்கக் காரணமே அவன் எளிதாக லண்டனில் செட்டில் ஆகலாம் என்பதற்காகத்தான். லண்டன் வந்த பிறகு நானே அவனை மறுக்க எண்ணியிருந்தேன். இப்போது அவர்களாக விலகிக் கொண்டதற்கு மகிழ்ச்சியடைய வேண்டும் நாம்.''

''எப்படியோ ஜோஷிதா, உன்னுடைய மகிழ்ச்சிதான் எங்கள் சந்தோஷம்'' என்றாள் கீதா கரகரத்த குரலில்.

எல்லோரும் இருந்தும் யாரும் இல்லாத நிலை மனதை அழுத்தியது. ஜோஷிதா பர்சைத் திறந்து பார்த்தாள். இங்கே அவளிடம் வைத்தியம் பார்க்க வருபவர்கள் தங்களிடம் இருக்கிற பணத்தைக் கொடுத்து விட்டுப் போவார்கள். ஒரு சிலர் வீட்டில் தயாரித்த இனிப்பு வகைகளையும், அவர்களே வேலைப்பாடு செய்த எம்ப்ராய்டரி, கல் ஒட்டிய ஆடைகளையும் பரிசாகத் தருவதுண்டு. இவை எதுவுமே தர முடியாமல் இலவசமாக சிகிச்சை பெற்றுக் கொள்பவர் பலர். எனவே ஜோஷிதாவிடம் கையிருப்பு பணம் போதிய அளவில் இல்லை. அவள் இங்கு பயன்படுத்தி வந்த கிரடிட் கார்டுகளும் ஹோட்டலில் ஹேண்ட் பேக்குடன் போய் விட்ட நிலையில் இங்கு தனியாக அறை எடுத்து தங்கவும், உண்ணவும் எவ்வளவு செலவாகக் கூடும்? சிறு வயதிலிருந்தே இயல்பாக அமைந்து போன சொகுசான வாழ்க்கை

முறையினால் பணத்தேவை, பற்றாக்குறை என்ற வார்த்தைகளையே அறியாத ஜோஷிதா கொஞ்சம் மிரண்டு கூடப் போனாள். பெற்றோர்களை பணம் அனுப்ப சொல்லலாம் என்றால் இங்கு அவளுக்கு பேங்க் அக்கவுண்டோ, நிரந்தர முகவரியோ கூட கிடையாது. அன்று முழுவதும் வழக்கமான வேலையில் ஈடுபட்ட போதும் 'அடுத்து என்ன செய்வது? எங்கே போவது?' என்ற கேள்வி பூதாகரமாய் எழுந்து அவளை மிரட்டியது.

அதனால் சோம்நாத்ஜி கேட்டதும் முதலில் அவருக்கு என்ன பதில் சொல்வதென்று புரியாமல் திகைத்தாள். பிறகு ''பெரிசா எதுவுமில்லை அங்கிள். லேசான தலை வலி, அவ்வளவுதான்'' என்றாள்.

''அவ்வளவுதானே! ஒரு தலைவலிக்கேவா இப்படி சோர்ந்து போவது? நான் ஜிஞ்சர் டீ போட்டுக் கொடுக்கிறேன் பார். தலைவலி எல்லாம் பறந்து போய்விடும்'' என்ற சோம்நாத்ஜி நிமிடத்தில் டீ தயாரித்து சூடான பீங்கான் கோப்பையில் ஊற்றித் தந்தார். பதில் பேசாது வாங்கிக் குடித்துவிட்டு 'தேங்க்யூ ஜி'' என்று வீட்டிற்கு வந்த ஜோஷிதா டி.வி.யை ஆன் பண்ணிவிட்டு சோபாவில் சாய்ந்து அமர்ந்தாள். எதிலும் மனம் போகாமல் யோசித்தபடி அமர்ந்திருந்தவள் சிறிது நேரத்தில் அப்படியே உறங்கிப் போனாள.

வழக்கம் போல் அன்றும் தாமதமாக வீடு திரும்பிய கிரண் உள்ளே டி.வி. சத்தம் கேட்டதும் கதவைத் தட்டினான். தாழிடாத கதவு அவன் தட்டியதும் திறந்து கொண்டது. 'இத்தனை நேரமாகியும் கதவைக் கூடத் தாழிடாமல் அப்படி என்ன டி.வி. நிகழ்ச்சிகள் முக்கியமாகி விட்டன. எத்தனை தரம் சொன்னாலும் இந்தப் பெண்ணுக்குப்



பாதுகாப்பைப் பற்றிய அக்கறையே இல்லையே' என்று நினைத்தபடியே உள்ளே நுழைந்தான். ஹாலில் டி.வி. ஓடிக் கொண்டிருக்க, அதன் எதிரில் அமர்ந்திருந்த ஜோஷிதா தூங்கிப் போயிருந்தாள். ஒற்றை சோபாவில் அவள் தலை சாய்த்து உறங்கிய விதத்தில் ஒரு குழந்தைத் தனம் தெரிந்தது. நெற்றியில் புரண்ட முடியை அவனையும் அறியாது கைகள் விலக்கின. பின் ஒரு பூங்கொத்தைப போல் அவளை அலுங்காமல் அள்ளிச சென்று படுக்கையில் விட்டான். படுக்கையில் இயல்பாய் புரண்ட ஜோஷிதா அவன் சட்டையை கொத்தாய் பற்றியபடி உறக்கத்தில் ஆழ்ந்தாள். தலையணையை அணைத்தபடி உறங்கும் பழக்கம் போலும். நெஞ்சில் பதிந்த பளிங்கு முகம் கிரணின் மனதில் இனம் புரியாத உணர்வுகளை ஏற்படுத்தியது. ஒரு நிமிடம் கண்களை மூடியவன் பிறகு தன்னை சமாளித்துக் கொண்டு மெதுவாக தன் சட்டையிலிருந்து அவள் விரல்களை விடுவித்தான். போர்வையை கழுத்து வரை போர்த்தி விட்டான். டி.வி.யை அணைத்து இரவு விளக்கை எரிய விட்டவன் உடை மாற்றிக் கொண்டு ஜோஷிதா வழக்கமாய் தூங்கும் தீவானில் சாய்ந்தான். அதில் ஜோஷிதாவின் வாசனை வீசுவதாய் தோன்ற மனம் கிளர்ந்தது. இதமாய் கண்கள் மூடின. அன்று இரவு உணவையே மறந்து போனவர்களாய் இருவரும் வேறு வேறு மன நிலையில் உறங்கிப் போனார்கள்.

ஜோஷிதா காலையில் எழும்போது சமையலறையில் பாத்திரங்கள் உருளும் சத்தம் கேட்டது. அவசரமாக எழுந்தவள் அப்போதுதான் கட்டிலில் படுத்திருந்ததை உணர்ந்தாள். கிரண் வழக்கமாய் படுக்கும் கட்டிலையும்

போர்வையையும் பார்த்தவளுக்கு எப்போது இதில் படுத்தோம் என்ற யோசனை வந்தது. இரவு சோபாவில் அமர்ந்து டி.வி. பார்த்தபடியே உறங்கி விட்டிருக்க வேண்டும். கிரண் எழுப்பி இதில் படுக்க வைத்திருக்க வேண்டும். நினைக்கவே கூசிய ஜோஷிதா எழுந்து போய் பல் துலக்கி விட்டு வரவும் கிரண் காபி கோப்பையை டேபிள் மீது வைத்தான்.

''முதலில் சூடா காபி குடிச்சிட்டு இன்னிக்கு என்ன மெனுன்னு சொல்.''

ஜோஷிதாவுக்கு இன்று தான் போய் விடுவதாகச் சொல்லியிருந்தும், இரவு இவன் என்னைத் தொட்டு தூக்க நேர்ந்ததே என்ற சங்கடமுமாக அவனை நிமிர்ந்தே பாராமல் காபியைக் குடிக்க முற்பட்டாள்.

''ஜோஷி, உனக்கு இன்று சாப்பிட என்ன வேண்டும்?'' என்றான் கிரண் மீண்டும்.

ஜோஷி என்ற அழைப்பு மனதைத் தொட, ''ஏதாவது...'' என்றாள் ஜோஷிதா சிரத்தையின்றி.

''ஓகே, சென்னா பட்டூரா சில நிமிடங்களில் தயாராகி விடும். நீ குளித்து விட்டு வா. அல்லது சாப்பிட்டு விட்டுக் குளித்தாலும் சரி'' என்றான் கிரண் புன்சிரிப்புடன்.

ஜோஷிதா காலியான காபி கப்பைக் கழுவி வைத்து விட்டுப் போய் குளித்துத் தயாராகி வரவும், சூடான வெண்ணெய் முறுகலுடன் பட்டூராவும் சென்னாவும் டேபிளில் காத்திருந்தது. உண்மையில் மிகவும் சுவையாக இருந்த போதும் ஜோஷிதாவிற்கு சாப்பிட முடியாமல் தொண்டையை அடைத்தது. ஒரு டம்ளர் நீரைக் குடித்து விட்டு மேற்கொண்டு சாப்பிட முற்பட்டவளின எதிரே அமர்ந்து சாப்பிட்ட படியே கிரண் சொன்னான்.

''இன்னிக்கு சென்னா பட்டூரா சூப்பர். இல்லையா? நான் இவ்வளவு நன்றாய் சமைப்பேன்னு எனக்கே



இப்பதான் தெரியும்'' கிரண் சரளமாகப் பேசிக் கொண்டு போவதைப் பார்க்க ஜோஷிதாவுக்கு வியப்பாக இருந்தது. பொதுவாக கிரண் கலகலப்பானவன் அல்ல. எதையும் பகிர்ந்து கொள்ளும் விருப்பம் இல்லாதவன் என்பதால் அவனிடம் பேச்சு குறைவாகவும், செயல் அதிகமாகவும் இருக்கும். ஜோஷிதாதான் வழக்கமாய் அதிகம் பேசுவாள், கேள்வி கேட்பாள். அவன் பேசும்போது வார்த்தைகளில் அழுத்தம் தொனிப்பதையும், அதில் மீற முடியாத கட்டளை இருப்பதையும் பார்த்து ஜோஷிதா பலமுறை வியந்திருக்கிறாள். எனவே அவனது இன்றைய பேச்சுக்கு நாம் இங்கிருந்து போய்விடப் போகிறோம் என்பதுதான் காரணமாய் இருக்கக் கூடும்.

''நீ சரியாக சாப்பிடவே இல்லையே!'' என ஜோஷிதா மறுக்க, மறுக்க அவள் தட்டில் பரிமாறிய கிரண் ஏதோ நினைவு வந்தவனாக வாய்விட்டுச் சிரித்தான். அந்த வரிசைப் பற்களையும், கவர்ச்சியான சிரிப்பையும் பார்த்தபடி அவள் செயலற்று அமர்ந்திருக்கையில் சொன்னான். ''இன்னிக்கு நைட் ஞாபகமா உன் படுக்கையில் உட்கார்ந்து டி.வி. பார். ஏன்னா நேத்தே என் கை ரெண்டும் வீங்கிப் போச்சு. சினிமாவில் சர்வ சாதாரணமாக கதாநாயகர்கள், ஹீரோயினை தூக்குவதைப் பார்த்து மிக எளிதாக நினைத்திருந்தேன். அது எவ்வளவு பெரிய பொய்னு நேத்துதான் தெரிஞ்சுது.''

''கவலைப்படாதே கிரண். இனி உனக்கு அந்த சிரமம் இருக்காது. நான்தான் இன்று போய்விடப் போகிறேனே!'' என்றாள் ஜோஷிதா.

உணவை எடுத்த அவன் கைகள் ஒரு நொடி தயங்கின. ''சோ, நீ இங்கிருந்து போகப் போவதாய் முடிவு செய்துவிட்டாயா?'' என்றான் கேள்விக் குறியுடன்.

''ஆமாம். உறவோ, உரிமையோ இல்லாத இடத்தில எத்தனை நாள் தங்க முடியும்?''

''அதனால்தான் உறவை தேடி கிளம்பி விட்டாயா?''

ஏனோ பெற்றோரின் நினைவில் கண்கள் நிறைய, ஜோஷிதா மெதுவாக தலையசைத்தாள்.

''நீ படித்த பெண். சுதந்திரமாய் வளர்க்கப்பட்டவள். தன்மானம் என்பது கொஞ்சமாவது இருக்கும் என்று நினைத்தேனே?'' என்றான் கிரண் இறுகிய குரலில்.

இத்தனை நாட்கள் இவன் வீட்டில் தங்கியிருந்ததை சொல்கிறான் என்ற நினைவில் ''அது இருப்பதால்தான் இப்போது போய் விட முடிவு செய்தேன்'' என்றாள் ஜோஷிதா.

''உன்னை விட்டு ஓடிப் போனவனின் காலில் போய் விழுவதா தன்மானம்?'' என்றான் கிரண் குத்தலாக.

அந்த குத்தல் முள்ளாக தைக்க, ''ஓடிப் போனான் என்று எப்படித் தெரியும்? கலவரத்தில் காணாமல் கூட போயிருக்கலாம்'' என்றாள் விட்டுக் கொடுக்காமல்.

''இருக்கலாம். காணாமல் போனவன் கலவரம் ஓய்ந்த பிறகு கூட உன்னைத் தேடவோ, உன்னைப் பற்றி போலீ ஸில் தகவல் தெரிவிக்கவோ கூட மறந்து போயிருக் கலாம். நம்மை நம்பி வெளிநாட்டில் இருந்து வந்த பெண் என்னவானாள் என்ற தவிப்பு கூட அவனுக்கு இல்லாமல் இருக்கலாம். அப்படித்தானே?''

''என்னை மணந்து கொள்ளப் போகிறவன் என்ன செய்கிறான் என்பது எங்கள் இருவர் சம்பந்தப்பட்ட விஷயம் கிரண். உனக்கு அது தேவையில்லாதது.''

''உண்மைதான். எனக்கு சம்பந்தமில்லாத விஷயங் களில் செலவழிக்க எனக்கு நேரமும் இல்லை. ஆனால்



உயிருக்கு ஆபத்தான நிலையில் என்னை காப்பாற்றி இருக்கிறாய். அதனால் சொல்கிறேன். தானாக வலிய வரும் பெண்ணிடம் ஆண்களுக்கு மரியாதை ஏற்படாது. இத்தனை உயர்வான வேலையை செய்யும் உனக்கு அது சரியும் அல்ல.''

''உன் அட்வைஸுக்கு நன்றி. தேவைப்படும் போது நினைவில் வைத்துக் கொள்கிறேன்'' என்றாள் ஜோஷிதா.

கிரண் அதற்கு மேல் ஒரு வார்த்தை பேசாமல் எழுந்து கையை கழுவி துடைத்தபடி வெளியே சென்றான்.

காலி பாத்திரங்களை ஸிங்க்கில் போடுகையில் கிரண் ப்ளேட்டில் இருந்த சென்னா பட்டூராவை பார்க்கையில் ஜோஷிதாவுக்கு வருத்தமாக இருந்தது. இன்று எத்தனை ஆர்வத்துடன் உணவை தயார் செய்து விட்டு அவளை சாப்பிட அழைத்தான்! அவள் வாயை திறக்காமல் இருந் திருக்கலாம்! ஜோஷிதா துக்கத்துடன் வீட்டை ஒதுக்கு கையில் தாராபாய் கதவைத் தட்டி விட்டு உள்ளே வந்தாள்.

ஜோஷிதாவுடன் சேர்ந்து பெட்ஷீட்டை மடித்து, சமையலறையை சுத்தம் செய்தபடியே தாராபாய் தானும், கபூரும் லேடி டாக்டரிடம் டெஸ்ட்டுக்கு கொடுத்திருப் பதைப் பற்றிய விபரங்களை எல்லாம் சொன்னாள்.

''கவலைப்படாதே தாராபாய். உனக்கு உன்னைப் போலவே அழகான குழந்தை பிறக்கப் போகிறது பார்?' என்றாள் ஜோஷிதா ஆறுதலாக.

''அப்படி பிறந்தால் முதல் ஸ்வீட் உங்களுக்குத்தான்'' என்றாள் தாராபாய்.

''அப்படியானால் உன் ஸ்வீட்டை இப்போதே கொடுத்து விடு. ஏனென்றால் உன் குழந்தை பிறக்கும்

சமயம் நான் என் ஊருக்கு போயிருப்பேன்'' என்றாள் ஜோஷிதா.

''போகக் கூடாது'' என்றாள் தாராபாய் உரிமையுடன். ''உங்களை நாங்கள் போக விட மாட்டோம்.''

''வேறு என்ன செய்ய முடியும் தாராபாய்? இது என் வீடோ, நாடோ இல்லை. விருந்துக்கு வந்த இடத்தில் நிரந்தரமாக தங்க முடியுமா என்ன?''

''ஏன் முடியாது? வந்த இடத்தில் புதிதாக உறவுகளும், உரிமையும் ஏற்படுமாயின் அங்கேயே இருந்து விடத்தானே தோன்றும்? கபூரும் நானும் உங்களை எங்கள் உடன்பிறப்பாகத்தான் நினைக்கிறோம். சோம்நாத்ஜி வார்த்தைக்கு வார்த்தை பேத்தி என்கிறார். உங்களிடம் வரும் நோயாளிகள் தெய்வமாகவே கொண்டாடுகிறார்கள்.'' தாராபாய் சொல்லிக் கொண்டு போக ஜோஷிதா இடைமறித்தாள்.

''இத்தனை புகழ்ச்சி அவசியமில்லை தாராபாய். என்னுடைய இந்த உறவுகள் எதிர்பாராத சூழ்நிலையால் ஏற்பட்டவை. நிரந்தரமாய் இங்கே தங்க வேண்டுமானால் அதற்கு பலமான காரணங்கள் இருக்க வேண்டும்.''

''இத்தனை நாளாய் உங்களுக்கு கிரண்ஜி மீது பிரியம் ஏற்பட்டிருக்கும் என்று நினைத்தேன். எங்களுக்கெல்லாம் நீங்கள் இருவரும் மணந்து கொள்ள வேண்டும் என்பதுதான் ஆசை. 'அவர்கள் ரொம்ப படித்தவர்கள். பெரிய குடும்பத்தை சேர்ந்தவர்கள். இந்த விஷயத்தை எல்லாம் நீ அவர்களிடம் பேசக் கூடாது' என்று கபூர் சொல்லும். எத்தனை அறிவாளியாக இருந்தாலும் எல்லோரும் ஒரு நாள் திருமணம் செய்து கொண்டுதானே



ஆக வேண்டும்! தனக்கு பொருத்தமான துணையை சந்திக்கும்போது உடனே மணந்து கொண்டு இளமையில் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டாமா?''

தாராபாய் இத்தனை நாள் பழகிய உரிமையில் கேட்க, ஜோஷிதா தனக்கு மிக அந்தரங்கமான விஷயத்தை சம்பந்தப்பட்டவனிடம் மட்டுமே பேச வேண்டும் என்ற எண்ணத்துடன் ஜோஷிதா பதில் பேசாமல் இருக்க, தாராபாய் தொடர்ந்து பேசினாள்.

''உங்க நாடு ரொம்ப பணக்கார நாடு. நீங்க வசதியாவே வாழ்ந்து பழகினவங்கன்னு கிரண்ஜி ஒரு முறை சொன்னார். அதனால் உங்களுக்கு இங்கே தங்க பிடிக்கவில்லையோ என்னவோ? ஆனால் தீதி கிரண்ஜி நல்ல பணக்காரர்தான். மலபார் ஹில்சில் அவருக்கு சொந்தமாக பெரிய பங்களா இருக்கிறது. அங்கு இரண்டு கார்கள் நிற்பதை நானே பார்த்திருக்கிறேன். வெளியே தொலைவு போகும் போது அந்த காரை உபயோகிப்பதாக கபூர் சொல்லும். அவருடைய அந்தஸ்திற்கு இங்கு வசிக்க வேண்டியதே இல்லை. ஏனோ தெரியவில்லை அத்தனை பெரிய வீட்டையும் அவருக்கு சொந்தமான அபார்ட்மென்ட்டையும் விட்டுவிட்டு இங்கே தங்கியிருக்கிறார்.''

தாராபாய் சொல்வதை உன்னிப்பாய் கவனித்துக் கொண்டிருந்த ஜோஷிதா. ''கிரண் என்ன வேலை பார்க்கிறான்? உனக்குத் தெரியுமா தாராபாய்?'' என்றாள் ஆர்வத்தை அடக்க முடியாமல்.

தாராபாய் உதட்டை பிதுக்கி தலையை அசைத்தாள். ''இந்த மூளைக்கு பெரிய விஷயம் எல்லாம் புரியாது தீதி. ரொம்ப படித்தவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

மற்ற எதுவும் தெரியாது. அதுசரி, நீங்கள் அவருடைய உறவினராக இருந்து கொண்டு இதையெல்லாம் கேட்காமலா இருந்தீர்கள்?''

''ஓ... கேட்டிருக்கிறேனே!'' என்றாள் ஜோஷிதா சமாளிப்புடன்.

''அதானே பார்த்தேன்...'' என தாராபாய் ஏதோ சொல்ல வர, வாயிற்புறம் யாரோ கூப்பிடும் குரல் கேட்டது. கங்காவின் பெண் லதிகா நின்றிருந்ததைப் பார்த்த தாராபாய் ''என்ன விஷயம் லதிகா?'' என்றாள் அவளிடம்.

''சும்மாதான். உங்களை பார்க்க வந்தேன்'' என்றாள் லதிகா பெரிய சிரிப்புடன், கண்கள் அந்த வீட்டை சுற்றி வர ஜோஷிதாவைப் பார்த்து புன்னகைத்தாள். ''உள்ளே வாங்களேன்'' என்றாள் ஜோஷிதா மரியாதை நிமித்தம்.

லதிகா உடனே உள்ளே வந்து அவர்கள் எதிரில் அமர்ந்தாள்.

''இன்னிக்கு நீங்க இன்னும் நோயாளிகளை பார்க்கலையா?'' என்றாள் ஜோஷிதாவிடம்.

''இதோ கிளம்பிக் கொண்டே இருக்கிறேன்'' என ஜோஷிதா சொன்னதை காதில் வாங்காதவளாய் ''வீட்டில் கூட யாரையும் காணோமே!'' என்றாள் தொடர்ந்து.

''வேலைக்கார பெண் இன்று விடுமுறை. கிரண் வெளியே போய் இருக்கிறான்'' என்றாள் ஜோஷிதா.

''அப்படியா? எனக்கு அவசர வேலை இருக்கிறது. பிறகு வருகிறேன்'' என அவள் அவசரமாய் எழுந்து செல்லவும், ''என்ன இந்தப் பெண் எதற்காக வந்தாள் என்றே தெரியவில்லையே!'' என்றாள் ஜோஷிதா வியப்புடன்.

''உங்களுக்குத் தெரியவில்லையா? அந்தப் பெண் கிரண்ஜியைத் தேடி வந்திருக்கிறாள். அவள் பார்வை



அலைபாய்ந்ததை கவனிக்கவில்லையா? சற்று முன்பு கூட நான் என் வீட்டு வாயிலில் நின்றிருக்கும்போது லதிகா என்னைப் பார்த்தாள். அப்போது பேசாதவள் நான் இங்கிருப்பது தெரிந்ததும் என்னைப் பார்க்கிற சாக்கில் வந்திருக்கிறாள்.''

''கிரணுடன் பேச வேண்டும் என்றால் அவன் இங்கிருக்கும் போது வந்து பேசலாமே!'' என்றாள் ஜோஷிதா புரியாமல்.

''சாதாரணமாய் பேச நினைப்பவர்கள்தான் அப்படி பேசுவார்கள். காதலிக்கத் தொடங்குபவர்கள் ஆரம்பத்தில் நேரடியாய் பேச மாட்டார்கள். காதல் வந்தால்தான் கள்ளத்தனமும் வந்துவிடுகிறதே!''

ஜோஷிதாவுக்கு தூக்கி வாரிப்போட்டது. ''என்ன கிரண் காதலிக்கிறானா?'' என்றாள் அதிர்ச்சியுடன்.

''சேச்சே...'' தாராபாய் அவசரமாய் மறுத்தாள். ''கிரண் இதுவரை இவளிடம் ஒரு வார்த்தை கூட பேசியதில்லை. ஆனால் அவருடைய கம்பீரத்திலும், கவர்ச்சியிலும் இங்கு இவளைப் போல் சில பெண்களுக்கு மயக்கம் உண்டு. எப்படியாவது அவர் கவனத்தை கவர அவர்கள் முயற்சிப்பதை நான் பார்த்திருக்கிறேன்.''

''அப்ப, இந்த ஏரியா ஹீரோ கிரண்தான்னு சொல்லு!'' என்றாள் ஜோஷிதா புன்னகையுடன்.

''அதிலென்ன ஆச்சரியம் உங்களுக்கு? படிப்பும், பர்சனாலிட்டியுமாய் ஒரு பையன் இருந்தால் அவனை பெண்கள் சுற்றி வரத்தான் செய்வார்கள். ஏனோ உங்களுக்குத்தான் அவரிடம் ஈடுபாடு வரவில்லை. அருகிலேயே இருப்பதால் அவருடைய அருமை தெரியவில்லை போலும்!''

ஜோஷிதா மனதிற்குள் புலம்பினாள். 'கிரண் தீவிரவாத கும்பலுடன் தொடர்புடையவனாய் இருப்பான் என்ற சந்தேகம் இருந்தாலும் கூட அவனை பிரிந்து போக வருத்தமாகத்தான் இருக்கிறது. என் பிறப்பையும் வளர்ப்பையும் மறந்து போய் இப்படி ஒரு பந்தத்தில் சிக்கிக் கொண்டேனே! இத்தனைக்கும் அவனுக்கு தன் மீது விருப்பம் இல்லை என்பது தெரிந்த பின்பும்...' ஜோஷிதா மனதை கட்டுப்படுத்தினாள். தாராபாயின் வார்த்தைகள் அவள் மனதில் சலசலப்பை ஏற்படுத்தியது.

''கிரண் இயல்பிலேயே கடினமானவன் தாராபாய். அவன் மனதில் மென்மையான உணர்வுகளுக்கு இடமே இல்லை'' என்றாள் ஜோஷிதா.

''நீங்கள் சொல்வது முழுக்க உண்மையில்லை தீதி. இதுவரை கிரண்ஜியைத் தேடி உறவிலோ, நட்பிலோ எந்த பெண்ணும் வீடுவரை வந்ததில்லை. இங்கும் அவர் எந்த பெண்ணுடனும் பேசி யாரும் பார்த்ததில்லை. பல சமயங்களில் ஏதேதோ காரணங்களை கூறிக் கொண்டு அவரிடம் ஒட்ட முற்பட்டவர்களை முரட்டுத்தனமாய் விலக்கியிருக்கிறார். அவமானப்படுத்தியிருக்கிறார். லதிகா போன்றவர்கள் கூட தங்கள் ஆசையை அவரிடம் நேரடியாக சொல்ல முடியாததற்கு அந்த முரட்டுத்தனம்தான் காரணம். ஆனால் உங்களை அவர் கவனமாய் நடத்துவதை, பொறுப்பாய் கவனித்துக் கொள்வதை பார்க்கையில் உங்கள் மீது அவருக்கு இருக்கும் பிரியம் வெளிப்படையாக தெரிகிறது.''

ஒரு மிகப் பெரிய கலவரத்தில், வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் பெண்ணுடன் போலீஸ் கண்ணில் மண்ணை தூவி விட்டு கிரண் தலைமறைவாகி



விட்டான். ஊரெல்லாம் போலீஸ் எங்களை தேடுகையில் எனக்கு எது நேர்ந்தாலும் அது அவனைத்தான் பாதிக்கும். என்னை பாதுகாத்தால்தான் அவன் சிக்கலின்றி தப்பிக்க முடியும். அவனது சுயநலத்திற்கு தாராபாய் காதல் என்னும் வர்ணம் பூசி அழகாக்க முயற்சிக்கிறாள்.

ஜோஷிதா பேச்சை மாற்ற விளையாட்டாக சிரித்தாள்.

''எனக்கு ஸ்வீட் கேட்டேன். அதை தராமல் ஏதோ பேசி என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா தாராபாய்?''

''ஸ்வீட்தானே! இதோ பால்பேடா எடுத்து வருகிறேன்'' என தாராபாய் எழுந்து சென்றதும் ஜோஷிதா ஏதோ யோசனையில் ஆழ்ந்தாள். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவளாக கதவைப் பூட்டிவிட்டு வெளியே வந்தாள்.



# 9

கிரண் தன் கம்ப்யூட்டரில் இருந்த விபரங்களை கையிலிருந்த போட்டோக்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான். கவனமாக பரிசீலித்துக் கொண்டிருந்தவன் போன் ஒலிக்கவும் ''யெஸ்'' என்றான் அலட்சியமாக. எதிர்முனையில் பேசியவன் சொன்னதைக் கேட்டதும் அந்த அலட்சியம் பறந்து போக, நிமிர்ந்து அமர்ந்தான்.

''ஸார். நீங்க சொன்னபடி பாந்த்ராவில் அந்த வீட்டை கண்காணித்தோம். அந்த வீட்டில் கணவன், மனைவி இரண்டு மகன்கள் என்று மொத்தம் நான்கு பேர். அதில் மூத்தமகனுக்குத்தான் லண்டனில் பெண்ணை நிச்சயம் செய்திருக்கிறார்கள். சமீபத்தில் அந்தப் பெண் இந்தியா

வந்து இவர்கள் வீட்டில் தங்கியிருக்கிறாள். இருபத்தி ஆறாம் தேதி தாஜ் ஹோட்டலுக்கு தன் வருங்கால கணவனுடன் சாப்பிடப் போனவள் பிறகு வீடு திரும்பவில்லை.''

''அவர்கள் பெண்ணை காணோம் என்று புகார் கொடுத்திருக்கிறார்களா?''

''இல்லை ஸார். எந்த காவல் நிலையத்திலும் இதுவரை அவர்கள் புகார் பதியப்படவில்லை. அதுமட்டுமின்றி அந்த பையனுக்கு கல்யாண ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது.''

''நீ சொல்வது உண்மையா?'' என்றான் கிரண் நம்ப முடியாமல்.

''உண்மைதான் ஸார். அந்த பையனுக்கு மும்பையிலேயே அவர்கள் உறவில் பெண்ணை பேசி முடித்து நாளன்று திருமணம் நடக்கப் போகிறது.''

''ஓ.கே,'' என தொடர்பை துண்டித்த கிரணால் மேற்கொண்டு தன் வழக்கமான வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை. நாளை வேறொரு பெண்ணை மணக்கிறவனை நம்பியா ஜோஷிதா வீட்டை விட்டுக் கிளம்பத் தயாரானாள்? இத்தனை நாளில் அவளைப் பார்த்தால் காதலில் உருகுபவளாகத் தெரியவில்லையே! திடீரென அவன் நினைவு எப்படி வந்தது? ஒருவேளை பழக்கமற்ற காரணத்தால் நமக்குத்தான் அவள் மனதில் இருந்த காதலை இனங்காண தெரியவில்லை போலும். ஜோஷிதா ஆர்வத்துடன் தேடிப் போகையில் அவளை மணக்க இருப்பவன் வேறொரு பெண்ணை திருமணம் செய்து கொள்வதை அவள் வேதனையும், கண்ணீருமாய் பார்க்கிற காட்சி அவன் மனத்திரையில் ஓடியது.



உலகம் முழுவதும் வன்முறையும், விபத்தும், ஏழ்மையும், பூகம்பமும், நாடுகளுக்கிடையே போரும் பெருகி வருகையில் சராசரி மக்கள் திருமணம், குழந்தை பிறப்பு போன்ற விஷயங்களில் அதீத ஈடுபாடு காட்டுவது அறியாமை என்ற எண்ணம் கொண்டவன் கிரண். தாராபாய் ஒரு குழந்தைக்காக படும் கவலையையும், அலைச்சலையும் பார்க்கும்போது ஜோஷிதாவிடம் சொன்னான்.

''ஜோஷிதா இதே நகரத்தில் பலமுறை தீவிரவாத தாக்குதல்கள் நிகழ்ந்திருக்கின்றன. அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்கள், ஷாப்பிங் சென்றவர்கள், அவ்வளவு ஏன் தங்கள் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் கூட தீவிரவாதத்துக்கு பலியாகி இருக்கிறார்கள். எத்தனை குழந்தைகள்! வயிற்றில் குழந்தையுடன் கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள், கை வேறு கால்வேறாக சிதறியிருக்கிறார்கள்! பச்சிளங் குழந்தைகள் கூட தீயில் கருகி பார்க்கவே கோரமாக இருக்கும். 2006ல் இரயில் குண்டுவெடிப்பு நடந்த போது நான் மாஹிம் ரெயில் நிலைய பிளாட்பாரத்தில் நின்றிருந்தேன். கண்முன்னே இரயில்பெட்டி வெடித்து சிதற அதிலிருந்தவர்கள் கருகிய பொம்மைகளாய் தூக்கி எறியப்பட்டு சதை துணுக்குகள் என் உடலிலும் முகத்திலும் தெறித்தன. உயிர்வாழ்வதே நிலையற்ற இந்த சூழலில் தாராபாய் போன்றவர்கள் எந்த தைரியத்தில் குழந்தை பெற்றுக் கொள்ள துடிக்கிறார்கள்?''

ஜோஷிதா புன்னகைத்தாள். ''மருத்துவ தொழிலிலும் தினமும் பிறப்பையும், இறப்பையும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம் கிரண். பிறந்தவர்கள் எல்லோரும் சாகத்தான் வேண்டும். அதற்காக பிறக்கவே வேண்டாம்

என்றால் உலகமே பாலைவனமாகத்தான் இருக்கும். பிறப்புக்கும் இறப்புக்கும் இடையேதான் வாழ்க்கையின் சுவாரஸ்யம் அடங்கி இருக்கிறது கிரண். வாழ்க்கையை புரிந்து கொள்ள வாழ்ந்துதான் பார்க்க வேண்டும்.''

''மனித வாழ்க்கை அத்தனை சுவாரஸ்யம் நிறைந்தது என்றால் ஏன் யாரும் அனுபவித்து வாழ்வதில்லை? தவமிருந்து பெற்ற பிள்ளைகள் பெற்றோரை வீட்டை விட்டு விரட்டுவதும், காதலித்து மணந்தவர்கள் விவாகரத்து செய்து கொள்வதும் சகோதர சண்டைகளும் நிரம்பியதுதான் சுவாரஸ்யமான வாழ்க்கையா?''

''உன் பார்வை ஏன் இத்தனை கோணலாகிப்போனது கிரண்? நல்ல விஷயங்களே உன் கண்களுக்கு தோன்றாதா? எல்லா குடும்பங்களுமே நீ சொல்வது போல் இருந்தால் இங்கு மிருகங்கள் மட்டும்தான் வாழ முடியும். எந்த விஷயத்தையும் உள்ளார்ந்த பிரியத்துடன் அணுகினால் அந்த விஷயம் அற்புதமானதாகி விடும். மனித உறவுகளும் அப்படித்தான்.''

ஜோஷிதாவின் பேச்சிலும் செயலிலும் காணப்படும் தெளிவும், சாத்வீகமும் அவனை எப்போதும் ஆச்சரியப்படுத்தும். அது அவளுடைய வேலையை முழு ஈடுபாட்டுடன் செய்வதால் ஏற்பட்ட ஒன்று என்று தோன்றும். மற்ற விஷயங்களில் காணப்படும் தெளிவு அவளது திருமண விஷயத்திலும் இருக்குமா என்று யோசித்தபடி அவளிடமிருந்த தன் செல்நம்பருக்கு டயல் செய்தான். வெகு நேரம் ரிங்டோன்போன பிறகும் யாரும் எடுக்காததால் கபூரின் வீட்டு நம்பருக்கு டயல் செய்தான். போனை எடுத்த கபூரிடம் ஜோஷிதாவை கூப்பிடச் சொன்னான்.

கபூர் சில நிமிடங்களில் திரும்பி வந்து ''ஜோஷிதா வீட்டில் இல்லை'' என்றான். ''இன்று டிஸ்பென்சரிக்கு



கூட லீவுதான். சற்று முன்புதான் பெகன்ஜி இஸ்மாயிலுடன் பேசியபடி செல்வதை சோம்நாத்ஜி பார்த்ததாக சொல்கிறார். அவர்கள் வந்ததும் உங்களுடன் பேசச் சொல்கிறேன்'' என்றான் கபூர்.

இஸ்மாயில் என்ற பெயரை கேட்டதும் கிரணின் புருவங்கள் உயர்ந்தன. ஜோஷிதா எதற்கு இஸ்மாயிலை கூட அழைத்துப் போனாள்? நிஜமாகவே தன்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் அவள் கிளம்பிப் போய் விட்டாள் என்பதை அவனால் நம்ப முடியவில்லை. பலவாறாக யோசித்தபடி வீட்டிற்கு வந்ததும் வெறிச்சோடிய அறை மனதை சங்கடப்படுத்தியது. ஜோஷிதா கடிதம் எதுவும் எழுதி வைத்து விட்டு போயிருப்பாளோ என்ற எதிர்பார்ப்பில் அறையை குடைந்தான். அவளுக்கு பயன்படுத்த கொடுத்த செல்போன் டேபிள் மீதிருந்தது. அவளது உடைகள் வரிசை கலையாமல் கப்போர்டில் அணிவகுத்தன. வீட்டில் கையிருப்பாக எப்போதும் இருக்கும் பணமும் கைத் தொடாமல் இருந்தது. கட்டிய துணியுடன் கிளம்பி இருக்கிறாள். ஹரிஷ் வீட்டினரால் புறக்கணிக்கப்படும் போது திரும்பி ஊருக்கு போகவும் வழியில்லாமல் என்ன செய்வாள்? சே! கிரண் தன் செய்கையை நினைத்து மனம் நொந்தான். தன் போக்கில் போயிருக்க வேண்டியவளை இழுத்து வந்து எப்படிப்பட்ட நிலைமைக்கு ஆளாக்கி விட்டேன்! இஸ்மாயில் அவளுடன் பாந்த்ரா வரை சென்றிருப்பானா என்று தோன்றவும் இஸ்மாயிலின் நம்பருக்கு டயல் செய்தான். ஸ்விட்ச் ஆப் என்றிருக்கவே இப்போதைக்கு காத்திருப்பதைத் தவிர வேறுவழியில்லை என்று புரியவே அலுப்புடன் தீவானில் சாய்ந்தான். ஜோஷிதா வழக்கமாய் உறங்கும் அந்த படுக்கையில் இன்னும் அவளது

வாசம் மிச்சமிருப்பதாக தோன்றியது. கண்களை மூடி தலையணையில் முகம் புதைக்கையில் இனந்தெரியாத உணர்வொன்று மனதை கலக்கியது.

மதியம் மூன்று வாக்கில் இஸ்மாயிலுக்கு போன் செய்த போது அவனே போனை எடுத்து தான் வீட்டி லிருப்பதாக சொன்னான்.

''ஜோஷிதா எங்கே?'' என்றான் கிரண் தன் அவசரத்தை காண்பிக்காமல்.

''தெரியவில்லையே! எதற்கு என்னை கேட்கிறீர்கள்?'' என்றான் இஸ்மாயில் புரியாமல்.

''நீ ஜோஷிதாவுடன் வெளியே போனதாக கேள்விப்பட்டேன்.''

''அது காலையில். நான் இந்த வழியாய் போகும்போது உங்கள் வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள். என்னைப் பார்த்து விட்டு வேலைக்கு போகிறாயா? என்றார்கள். நான் ஆமாம் என்றதும் என்னுடன் பேசியபடியே நடந்து வந்தார்கள். பிறகு என் வேலையைப் பார்க்க நான் போய்விட்டேன். இன்னும் அவர்கள் வீடு வந்து சேரவில்லையா? உங்களிடம் கூட சொல்லாமலா போனார்கள்?'' என்றான் இஸ்மாயில்.

அவன் கேள்விகளை புறக்கணித்து ''ஜோஷிதாவுடன் நீ எதுவரை நடந்து போனாய்?'' என்றான் கிரண்.

''இரயில் நிலையம் வரை போனோம். எனக்கு ஜோகேஸ்வரி வரை போக வேண்டியிருந்தது. ஜோஷிதா எங்கே போக கிளம்பினார்கள் என்று என்னிடம் சொல்லவில்லை. அந்த கும்பலுக்குள் எந்த இரயிலில் ஏறினார்கள் என்றும் நான் பார்க்கவில்லை'' என்றான் இஸ்மாயில்.

''உன் தகவலுக்கு நன்றி இஸ்மாயில்'' என கிரண் தொடர்பை துண்டித்தான்.



அடுத்து அரைமணி நேரத்தில் அவன் எதிர்பார்த்த தகவல் வந்தது. ''காலையிலிருந்தே ஹரிஷ் வீட்டிற்கு அந்தப் பெண் வரவில்லை ஸார். எதற்கும் இரவு வரை காத்திருந்து பார்க்கலாமா?''

''செய்யுங்கள்'' என்று உத்திரவிட்டு போனை வைத்தவனுக்கு ஒரு நிமிடம் அடுத்து என்ன செய்வது என்று புரியவில்லை. இந்த பெண் ஏன் இப்படி செய்தாள்? அவளை எங்கே போய் தேடுவது? ஏதாவது வேண்டாத கைகளில் சிக்கியிருந்தால்? ஜோஷிதா சென்றிருக்கக் கூடிய இடம் என்று யூகிக்கக் கூட முடியாத போது தேடலை எங்கிருந்து ஆரம்பிப்பது என்று அவனுக்கு குழப்பமாக இருந்தது. தன் செல்போனில் தகவல்களையும், குறிப்புகளையும் அனுப்பிவிட்டு அவன் வெளியே விரைகையில் எதிர்பட்ட தாராபாய் ''தீதி எங்கே?'' என்றாள் அவனிடம்.

விடை தெரியாத அந்த கேள்வி அவனை மருட்ட, ''நிச்சயம் அழைத்து வருவேன்'' என்றான் உறுதியுடன்.

ஜோஷிதா தன் எதிரே நின்றிருந்த அந்த ரிக்ஷாவாலாவை குழப்பத்துடன் பார்த்தாள். ''போலீஸ் ஸ்டேஷனுக்குத்தானே போகணும்! வாம்மா நான் கூட்டிட்டு போறேன்'' என்றான் கொச்சையான ஆங்கிலத்தில்.

ஜோஷிதா கிரண் வீட்டை விட்டு கிளம்பி வருகையில் வழியில் இஸ்மாயிலை சந்தித்தாள். தனியாக காவல்நிலையம் செல்வதை விட இஸ்மாயிலின் துணை பாதுகாப்பாக இருக்கும் என்ற எண்ணத்தில் அவனுடன் பேசியபடியே நடந்தாள். ஆனால் இஸ்மாயில் ஏதோ அவசரத்தில் இருப்பவனைப் போலிருந்தான். ஜோஷிதாவின் கேள்விகளுக்கு அரைகுறையாய் பதிலளித்தான்.

''என்னுடன் காவல்நிலையம் வரை துணைக்கு வருவாயா இஸ்மாயில்?'' என்றதும் ''எதற்கு?'' என்றான் திடுக்கிட்டு.

''என்னுடைய பாஸ்போர்ட் தொலைந்து போய் விட்டது. அதைப் பற்றி ஒரு கம்ப்ளைட் கொடுக்கணும்'' என்றாள் ஜோஷிதா.

இஸ்மாயில் பதில் எதுவும் சொல்லாமல் நடந்தான். அவன் காவல் நிலையத்திற்குதான் செல்கிறான் என்ற எதிர்பார்ப்புடன் ஜோஷிதாவும் உடன் நடந்தாள். இரயில் நிலையத்திற்குள் அவன் சென்றதும் ''போலீஸ் ஸ்டேஷனுக்கு இரயிலில் போக வேண்டும் போலும் என்றெண்ணியவளாக கூடவே போன ஜோஷிதா நெருக்கி பிழிந்த கூட்டத்திற்கு பயந்து ஒதுங்கிய வேளையில் இஸ்மாயில் காணாமல் போனான். ஜோஷிதா நின்ற இடத்திலிருந்து கண்களால் அவனை துழாவிய போது மிகுந்த இரைச்சலுடன் மின்சார இரயில் வந்து நின்றது. நின்ற இரயிலிருந்து கசங்கி கீழே உதிர்ந்தவர்களும் முண்டியடித்து ஏற முற்பட்டவர்களுமாய் அந்த ப்ளாட் பாரம் நிமிடத்தில் கலவரபூமியாய் மாறியது. ஒரு பெட்டியில் இஸ்மாயிலின் தலை தெரிவதைப் பார்த்த ஜோஷிதா கைகளை அசைத்து ''இஸ்மாயில்'' என சப்தமிட்டாள். அந்த இரைச்சலுக்கு நடுவே அவள் குரல் அவனை எட்டவில்லை போலும். அவன் திரும்பியே பார்க்கவில்லை. இரயில் கிளம்பும் சத்தம் கேட்கவும் ஜோஷிதா அங்கிருந்து நகர முற்பட்டாள். அசுர வேகத்துடன் பெட்டியில் ஏற முற்பட்ட கூட்டம் அவளை நகர விடாமல் முன்னே தள்ளியது. தன் வசமின்றி முன்னே நகர்த்தப்பட்ட ஜோஷிதா சில நொடிகளில் இரயில் பெட்டிக்குள் மூச்சு கூட விட முடியாமல் பிரமிப்புடன்



நின்றிருந்தாள். எங்கே போவதற்காக கிளம்பி, எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்று திகைப்பாக இருந்தது. அவள் பயணத்தை அவளுக்கு சம்பந்தமில்லாத வர்கள் நடத்தி செல்வது இது இரண்டாம் முறை. முதல் முறை கிரண் அவளை தன்னுடன் இழுத்துச் சென்றான். இரண்டாம் முறையாக இந்த மக்கள் கூட்டம் ப்ளாட் பாரத்தில் நின்றவளை இரயிலில் ஏற்றியிருக்கிறது. யோசிக்கையில் அவளுக்கு வேடிக்கையாக கூட இருந்தது. தன்னை சுற்றிலும் ஒரு சுவாரஸ்யத்துடன் பார்க்கத் தொடங்கினாள்.

ஒரு கையால் கம்பியை பிடித்துக் கொண்டு மறுகையில் ''ஹிண்டு'வை எட்டாக மடித்து வைத்து கொண்டு படிப்பவர்கள், ஒரு கால் படியிலும் ஒரு கால் வெளியிலுமாய் தொங்கிக் கொண்டு இயர் போனை மாட்டிய படி காதலியுடன் ஸ்வீட் நத்திங்ஸ் பேசும் காதலர்கள், ஐ பாட்டில் பாட்டுக்கு தலையசைத்தபடி தற்காலிக சிரமத்தை மறப்பவர்கள். அன்றைய சமையலுக்கு இரயிலில் காய்கறி விற்பவனிடம் காய் வாங்கி அங்கேயே வெட்டி தயார் செய்கிற குடும்பத் தலைவிகள், அரசியலையும் ஷேர்மார்க்கெட்டையும் அலசுகிற நடுத்தர வயசு ஆண்கள், ஹிருத்திக்ரோஷனையும் சல்மான் கானையும் விமர்சித்து விட்டு அடுத்த நொடியே கேம்பஸ் இன்டர்வியூ பற்றி கவலைப்படும் கல்லூரி மாணவ, மாணவிகள், ஜீன்ஸை எந்த பக்கம் கிழித்துக் கொள்வது இப்போது பேஷன்? என மண்டையை உடைத்துக் கொள்ளும் டிஸைனர்கள் என பலவிதமான ஆர்வங்களையும் ஆற்றல்களையும் கொண்ட அபூர்வ நகரத்தை ஜோஷிதா அங்கே பார்த்தாள். அடுத்தவரைப் பற்றி கவலைப்படாத, அக்கறை காட்டாத அலட்சிய போக்கு

மும்பையின் பொதுவான குணமாக இருப்பதை கவனித்தாள். சமீபத்தில் 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' மேகஸின் 'மும்பை உலகிலேயே மிகவும் மரியாதை இல்லாத நகரம்' என்று வர்ணித்திருந்தது நினைவுக்கு வந்தது. அப்போது இந்த விஷயத்தை மறுத்து வாதிட்ட மும்பைவாசிகள் ஒரு விஷயத்தைத்தான் கூறினார்கள். 'மும்பை ஒரு வணிக நகரம். எப்போதும் ஓடிக் கொண்டே இருக்கும். ராட்சஸ இயந்திரத்தைப் போல இங்கேயிருப் பவர்கள் எல்லோரும் இதனுடன் சேர்ந்து ஓட வேண் டும். கொஞ்சம் தயங்கி நின்றாலும் பின்னால் வருபவர் கள் உங்களை சுலபமாக நசுக்கி தேய்த்து விட்டு போய் விடுவார்கள். எப்போதும் ஓடிக் கொண்டிருக்கும் ஒரு நகரத்தில் சகமனிதர்களுக்கு மரியாதை தருவதா முக் கியம்? இத்தனை பேரும் பிழைக்க மும்பை வழிவிட் டிருக்கிறதே, அது போதாதா?'

இந்த வாதத்தை படித்த போது ஜோஷிதா அசந்து பானாள். கொஞ்சமும் மனிதத்தன்மையே இல்லாமல் ப்படி ஒரு வாதமா, உண்மையில் மக்கள் இப்படிக் கூட ருப்பார்களா என்று. இன்று கண் எதிரே பார்க்கும் போது ான் தான் படித்த விஷயம் உண்மை என்று புரிந்தது.

இரயில் ஏதோ ஒரு நிலையத்தில் நின்றது. குனிந்து ன்னல் வழியாய் பெயர் பலகையை பார்க்க முற்படு கயில், பின்னாலிருந்து இடித்து தள்ளிக் கொண்டு றங்கிய கும்பல் அவளை வெளியே தள்ளியது. ப்ளாட் ாரத்தில் வந்து விழுந்த ஜோஷிதாவுக்கு நிலைமையின் சம்பாவிதத்தில் சிரிப்பு வந்தது. மும்பை இரயிலில் பணம் செய்ய வேண்டுமெனில் ப்ளாட்பாரத்தில் ன்றால் போதும் போலும். ஒரு வழியாய் சுதாரித்துக் காண்டு எழுந்து நின்ற ஜோஷிதா நினைவு வந்தவளாக



இஸ்மாயிலை தேடினாள். அவனை காணவில்லை. இரயிலிலிருந்து இறங்கினானா இல்லையா என்று கூட தெரியவில்லை. என்ன செய்யலாம் என்று யோசிக்கையில் இன்னொரு இரயில் வந்து ப்ளாட்பாரத்தில் நிற்கவும் ஜோஷிதா அவசரமாய் அந்த கும்பலுக்கு பயந்து வெளியே வந்தாள். திடீரென ஒரு சோர்வு அவளை ஆட்கொண்டது. பழக்கமற்ற கும்பலும், சத்தமும் மனசையும் உடலையும் அசர வைத்தது. சுரத்தின்றி நின்றிருந்தவளை மொய்த்த ரிக்ஷாக்காரர்கள் ''ரிக்ஷா வேணுமா? எங்கே போகணும்?'' என்றார்கள் ஹிந்தியிலும் ஆங்கிலத்திலுமாய்.

''போலீஸ் ஸ்டேஷன் போகணும்'' என்றதும் எல்லோருக்கும் முன்னால் ''நான் கூட்டிட்டு போறேன். உட்காரும்மா'' என்றான் லுங்கியும், பான்பராக்குமாய் இருந்த அந்த நடுத்தர வயசுக்காரன்.

ஜோஷிதா அவனுடன் செல்ல மற்ற ரிக்ஷாக்காரர்கள் சிரித்தபடி அவனிடம் ஏதோ சொன்னார்கள். அவன் காவி பற்கள் அத்தனையும் காட்டியபடி ரிக்ஷாவை கிளப்பினான். பரட்டை தலையும், கிழிந்த டிராயருமாய் ''அம்மா... காசு போடுங்கம்மா'' என தமிழில் கையேந்தியபடி ரிக்ஷா கூடவே ஓடி வந்த சிறுவனை விரட்டினான்.

''போ... போ... அப்பால...''

''உனக்கு மட்டும் இன்னிக்கு விருந்து கிடைச்சதுல்ல. என்னை ஏன் விரட்டற?'' என்றான் சிறுவன் முறைப்புடன்.

''டேய்..'' என ரிக்ஷாக்காரன் மிரட்டவும், ''தம்பி, இங்கே வா'' என்றாள் ஜோஷிதா அந்த சிறுவனிடம்.

''ஓ! தமிழா?'' என்றான் ரிக்ஷாக்காரன் உற்சாகத்துடன்.

அந்த சிறுவன் ஜோஷிதாவின் அருகில் ஓடி வரவும், ''நீ ஸ்கூலுக்கெல்லாம் போறதில்லையா?'' என்றாள் ஜோஷிதா அவனிடம்.

''அட, போர் அடிக்காதம்மா. முடிஞ்சா காசு போடு, இல்லாட்டி நடையை கட்டு''என்றான் சிறுவன் அலட்சியத்துடன்.

ஜோஷிதா தன் பர்ஸிலிருந்து பத்து ரூபாய் நோட்டை எடுக்கும் முன் அந்த சிறுவன் பாய்ந்து நோட்டை பிடுங்கிக் கொண்டு ஓடினான்.

ஜோஷிதாவுக்கு ஷீலாநாயர் மும்பையின் நிழலுலகத்தைப் பற்றி சொன்னது நினைவுக்கு வந்தது. உழைத்து உண்பதே கௌரவம் என்று கற்பிக்காத பெற்றோர்களாலும் சிரமப்படாமல் பணத்தை அள்ள விரும்பும் இந்த சிறுவனைப் போன்றவர்களாலும் தான் நிழலுலகம் இயங்குகிறது போலும். பத்து ரூபாயை பறித்துக் கொண்டு ஓடும் இந்த சிறுவன் வளர்ந்த பிறகு பத்து லட்சம் ரூபாய்க்காக கடத்தல் தொழில் செய்வான். மக்கள் தொகை பெருக்கத்தை காரணம் காட்டியே நாட்டில் பஞ்சத்தையும் வறுமையையும் ஒழிக்க முயலாத அரசாங்கமும் இதற்கு ஒரு காரணம். யோசித்தபடி கண்களை மூடி அமர்ந்திருந்த ஜோஷிதா ''இறங்குமா. இடம் வந்தாச்சு'' என்ற ரிக்ஷாக்காரனின் குரலுக்கு கலைந்து இறங்கினாள்.

சுற்றிலும் பார்த்தவள் ஏதோ வித்தியாசத்தை உணர்ந்து ''போலீஸ் ஸ்டேஷனுக்குத்தானே போக சொன்னேன்'' என்றாள் அவனிடம்.

''நீ ஏன் அங்க போகணும்? இங்க இருந்தா போலீசே உன்னை தேடி வரும்'' என்றான் ரிக்ஷாக்காரன்.



''என்னா வேலு, செம ஐட்டம் கொண்டு வந்திருக்க. என்ன இருந்தாலும் உன்னுடைய சாமர்த்தியம் யாருக்கும் வராது போ'' என்றபடி வாட்டசாட்டமாய் வந்து நின்றான் ஒருவன்.

''பின்னே, வேலு கண்ணுல ஒரு புறா பட்டப்புறம் அதை பறந்துப் போக விடுவேனா? இன்னிக்கு பிரியாணிதான் உனக்கு'' என்றான் ரிக்ஷாக்காரன் பெரிய குரலில் சிரித்தபடி.

அவர்கள் பேசும் வார்த்தை புரியாமல் ''ஏன் இங்கே நிறுத்தியிருக்கிறீர்கள்? கிளம்புங்கள் போகலாம்'' என்றாள் ஜோஷிதா ரிக்ஷாக்காரனிடம்.

இருவரும் கைகளைத் தட்டி சத்தமாய் சிரித்தார்கள். ''நீ திரும்பி போறதுக்கா வேலு உன்னை இவ்வளவு தூரம் கூட்டி வந்திருக்கிறான்!'' என்றான் அந்த தடியன்.

சூழ்நிலையின் விபரீதம் புரிந்து ஜோஷிதா அவசரமாய் ரிக்ஷாவிலிருந்து இறங்கினாள். அந்த இடம் வித்தியாசமாய் இருந்தது. அடுக்கடுக்காய் சந்தும் பொந்துமாய் வீடுகள் இருந்தன. மட்டமான பாப்பூமும், விரசமான சினிமா பாடல்களும் வயிற்றை புரட்டின. வீட்டு வாயிலில் மேலாடையை நழுவ விட்டபடி நின்றிருந்த பெண்கள், வழியில் போகிற ஆண்களை கை தட்டி அழைத்து வம்பு செய்தனர். அரவாணிகள் மிகையான லிப்ஸ்டிக்கும் ரோஸ்பவுடரும், மல்லிகை பூவுமாய், தூக்கி சொருகிய சேலையும், ஆண்களின் பாக்கெட்டுக்குள் கை விட்டு பணத்தை தேடிக் கொண்டிருந்தனர். தவறான இடத்திற்கு வந்திருக்கிறோம் என்பது ஜோஷிதாவுக்கு புரிந்தது. தனியாக எங்கும் போக வேண்டாம் என்ற கிரணின் எச்சரிக்கையை மீறியதன் பலன் கண்

முன்னே தெரியவும் ஜோஷிதா பயந்து போனாள். இங்கிருந்து எப்படி வெளியே முடியும் என பார்வையிட்டாள். இந்த தெருவில் அவளையே பார்த்தபடி நின்றிருப்பவர்கள் எல்லாம் இவர்களது ஆட்களாகத்தான் இருக்க வேண்டும்.

''என்னா வேலு, புது மாடு மிரளுதா?'' என்றாள் உள்ளேயிருந்து வந்த குண்டான பெண்.

''ஆமா அக்கா. வெளிதேசம் வேற. ரொம்பத்தான் மிரளுது'' என்றான் வேலு.

''அதுக்காக தெருவிலேயே நிக்க வெச்சிருப்பியா? உள்ளே கொண்டு போய் அடைச்சி வை. நம்ம ட்ரீட்மெண்ட்ல ரெண்டு நாள்ல தானா வழிக்கு வரும்.''

''ஏதோ உங்க சாமர்த்தியத்தாலதான் எங்க பொழப்பு நடக்குது'' என்றான் ரிக்ஷாக்காரன் தலையை சொறிந்தபடி.

''சரி.. சரி.. மேலே கொண்டு வாங்க..'' என அந்த குண்டு பெண் உள்ளே திரும்பி செல்ல வேலுவும், தடியனும் ஜோஷிதாவின் கைகளை பிடித்தார்கள்.

''விடு என்னை'' ஜோஷிதா கைகளை உதறினாள்.

''சும்மா பிலிம் காட்டாத பாப்பா. வீணா அடம் புடிச்சா உன் உடம்பு தான் புண்ணாகும்'' என்றான் வேலு.

''ச்சீ, உன்னை நம்பித்தானே ரிக்ஷாவில் ஏறினேன்? நம்பி வருகிறவர்களை படுகுழியில் தள்ளும் நீயும் ஒரு மனிதனா?'' ஜோஷிதா கோபத்துடன் குரலை உயர்த்தவும் ''ச்சு சும்மா சத்தம் போடாதே'' என்றான் அந்த தடியன். ''இந்த தெருவில் தினமும் இந்த மாதிரி குறைந்தது பத்து பேரையாவது பிடித்து வருவார்கள். நீ பேசுகிற வசனம் எல்லாம் இங்கே எல்லோருக்கும் ஏற்கனவே மனப்பாடமாகி விட்டது. வா பேசாமல்.''



''சும்மா பேசி நேரத்தை வீணடிக்காதே. எனக்கு சவாரி போகணும்.'' என்றான் வேலு கடுப்புடன்.

அந்த நேரம் போலீஸ் உடையுடன் ஒருவர் அவர்களை கடந்து போக, ஜோஷிதா அவர் பின்னால் ஓடினாள். ''சார் என்னை இங்கே ஏமாற்றி அழைத்து வந்து ஏதேதோ பேசுகிறார்கள். ப்ளீஸ் இங்கிருந்து என்னை காப்பாற்றுங்கள்.. ப்ளீஸ்...'' ஜோஷிதா பதட்டத்துடன் அவரை கேட்கவும், வேலுவும் தடியனும் ஆர்ப்பாட்டமாய் சிரித்தார்கள்.

''இன்னா சார், மாச கடைசியில வந்திருக்க?'' என்றான் தடியன் போலீசிடம்.

''ஊருக்கு போயிருந்தேன்'' என்ற போலீஸ், ''இதென்ன நடுத்தெருவில் விளையாட்டு காண்பிக்கிறீர்கள்? பெண்ணை பத்திரமாய் உள்ளே கொண்டு போங்க'' என்றான் அவர்களிடம்.

ஜோஷிதா அதிர்ச்சியுடன் பார்க்க, வேலு சொன்னான். ''போலீஸ்காரங்கள்ள பாதிபேர் இங்க கஸ்டமராவும், மாமூல் வாங்கவும் வருவாங்க. அதனால்தான் உங்கிட்ட சொன்னேன் போலீஸ் ஸ்டேஷன் போக வேண்டாம். போலீசே நம்ம இடத்துக்கு வரும்னு.''

சிரித்தபடி அந்த போலீஸ் தன் வழியில் செல்ல, ''சிணுங்கியது போதும். வா போகலாம்'' என மறுபடி இருவரும் அவள் கைகளைப் பற்ற ஜோஷிதா துடித்து பின் வாங்கினாள். ''இது சரிவாராது'' என தடியன் ஜோஷிதாவை அனாயசமாக தூக்கி தோளில் போட்டபடி நடந்தான். ஜோஷிதா கையால் அவன் முதுகில் ஓங்கி அடித்தாள். வேலு அவள் கைகளை பிடித்துக் கொள்ள, கால்களால் தடியனின் வயிற்றிலும் கால்களிலும் விடாது உதைத்தாள். இருளடைந்த ஒரு வீட்டின் குறுகலான

தாழ்வாரத்திற்குள் அவன் காலடி எடுத்து வைக்கவும் ஜோஷிதா ஆக்ரோஷத்துடன் அவனை கடித்தாள். கடித்த இடத்தில் இரத்தம் துளிர்க்க அவனையறியாமல் பிடி நழுவியது. வீட்டு வாயிலை அடைந்ததும் வேலு பின் தங்கி விட்டதால், தடியன் சுதாரிக்கும் முன் ஜோஷிதா மின்னலாய் பாய்ந்து வெளியே ஓடினாள். உரத்த குரலில் யாரோ கத்தும் சத்தம் கேட்டது. காலடி ஓசைகளும் கூச்சலும் பின்தொடர்வது தெரிந்தாலும் ஜோஷிதா திரும்பியும் பார்க்காமல் எதிர்பட்டவர்களை இடித்துத் தள்ளிக் கொண்டு ஓடினாள். தப்பித்தே ஆக வேண்டும் என்ற வெறியுடன் ஓடியவளை எதிரே வந்த யாரோ பிடிக்க, ''விடு என்னை...'' என ஆவேசத்துடன் விடுவித்துக் கொள்ள போராட ஆரம்பித்தாள்.

''ஜோஷி... இங்கே பார்... ஜோஷி... என்னைப் பார் ஜோஷிதா...'' என்ற குரல் சில நிமிடங்களுக்கு பிறகே அவளுக்கு புரிந்தது. 'நிஜமாகவே இது கிரணா? இவன் எப்படி இங்கே வந்திருக்க முடியும்? இது பிரம்மைதான்' என்று எண்ணியவள், பின்னால் காலடி சத்தம் நெருங்குவதை உணர்ந்து ஓட முற்பட்டாள். ஆனால் அவளை இழுத்து அணைத்துக் கொண்ட கிரண் ''நான் இருக்கிறேன். பயப்படாதே ஜோஷி'' என்றான் காதருகே.

உணர்ச்சி கொந்தளிப்பில் சிக்கித் தவித்த ஜோஷிதா சட்டென மயக்கமானாள்.

கிரண் கவலையுடன் கட்டிலில் சுருண்டிருந்த ஜோஷிதாவை பார்த்தான். ஜுரம் அனலாய் கொதித்தது.

''ஏய்... என்னை விடு..''என்றாள் ஜோஷிதா கண்களை திறக்காமல். கிரண் அவள் கைகளை இறுக்கமாக பற்றினான். ''ஜோஷிதா... இங்கே பார்...'' என்றான் தோள்களை தட்டி.



ஜோஷிதா கண்களை திறக்காமலே படுக்கையில் முன்னும் பின்னுமாக உருண்டாள். ''எனக்கு பயமா இருக்கு'' என்றாள் உளறலாய்.

''ஜோஷி... நான் உன் கூடவே இருக்கிறேன். இங்கே பார்...'' என கிரண் பேசிய எதுவும் அவள் காதில் விழவேயில்லை. மேற்கொண்டு ஏதோ பேசப்போன கிரண் கபூர் டாக்டருடன் உள்ளே வரவும் எழுந்து நின்றான்.

ஜோஷிதாவை பரிசோதித்த டாக்டர் ''டெம்ப்ரேச்சர் அதிகமாக இருக்கிறது. என்றாலும் ப்ளூ, வைரஸ் மாதிரி தெரியவில்லை. எங்காவது அடிபட்டு கொண்டார்களா?'' என்றார் முழங்கையில் இரத்தம் கட்டியிருப்பதையும், சிராய்ப்புகளையும் பார்த்து.

முழுதாக மறைக்க முடியாமல் ''மும்பைக்கு பழக்கமில்லாத பெண். தனியாக கிளம்பிப் போய் வழி தெரியாமல் அலைந்து அடிபட்டுக் கொண்டு வந்திருக்கிறாள்'' என்றான் கிரண்.

''மும்பை பழகினவர்களையே மிரட்டும். புதிதாக வந்திருப்பவர்களை துணையுடன் அனுப்ப வேண்டாமா?'' என்றபடி டாக்டர் ஒரு ஊசியை செலுத்தி விட்டு சில மாத்திரைகளை எழுதிக் கொடுத்துவிட்டு போனார். கபூர் கிரணிடம் பணத்தை வாங்கிக் கொண்டு போய் டாக்டரை வழியனுப்பி வைத்துவிட்டு மருந்துகளை வாங்கி வந்தான். தன் தம்பி வீட்டிலிருந்து திரும்பி வந்திருந்த தாராபாய் ''காலைல கூட சிரிச்சி பேசிட்டு இருந்தாங்களே! லேசா தலைவலின்னு கூட சொல்லல. திடீர்னு எப்படி முடியாம போச்சு?'' என்றாள் அங்கலாய்ப்பாக.

கிரண் இறுகிப் போய் அமர்ந்திருக்க, ''வெளிநாட்டு காரங்களுக்கு நம்ம ஊர் வெய்யிலும், தூசியும் ஒத்துக்

காதுன்னு சொல்வாங்களே எங்கிட்ட கூட சொல்லாம எதுக்கு அந்த வெய்யில்ல தனியா போகணும்?'' தாராபாய் புலம்பியபடியே இருக்க கிரண் ஜோஷிதாவின் மீது பதிந்திருந்த பார்வையை கூட திருப்பாமல் அமர்ந்திருந்தான். அவனைப் பார்த்த தாராபாய், ''காய்ச்சலும், தலைவலியும் சகஜமா வர்றதுதான். சீக்கிரம் சரியாய்டு வாங்க. கவலைப்படாதீங்க ஜீ'' என்றாள் ஆறுதலாக.

சிறிது நேரம் கூடவே அமர்ந்திருந்த தாராபாய் செய்ய முன் வந்த உதவிகளை மறுத்து கிரண் ஜோஷிதாவை தானே பார்த்துக் கொள்வதாக கூறிவிட்டதால் தேவைப்பட்டால் கூப்பிடும்படி சொல்லிவிட்டு எழுந்து போனாள்.

ஊசி மருந்து உள்ளே சென்றிருந்ததால் ஜோஷிதாவுக்கு நன்றாக வியர்க்க தொடங்கியிருந்தது. அருகிலிருந்த டவலால் கிரண் அவள் முகத்தை துடைத்தான். புரள்வதும், முனகுவதும் குறைந்து ஜோஷிதா அமைதியாய் உறங்க முற்பட்டாள். கிரண் ப்ரீட்ஜ்ஜை திறந்து தண்ணீரை குடித்து விட்டு வந்து அவள் அருகில் அமர்ந்தான். காலையில் அவன் செய்த சென்னா பட்டூராவையும் அவள் சரியாக சாப்பிடவில்லை. கடைசியாக நேற்று இரவு சாப்பிட்டதுதான் என்ற எண்ணத்தில் மனம் கரைந்தது.

ஜோஷிதாவை தேட கிளம்பி எங்கே தேடுதென்று புரியாமல் அவன் சுற்றிக் கொண்டிருந்த போதுதான் அந்த தகவல் வந்தது. மாதுங்கா இரயில் நிலையத்திலிருந்து ஒரு பெண்ணை ரிக்ஷாக்காரன் ஒருவன் கிராண்ட் ரோடு அழைத்துச் சென்றதாக. சிவப்பு விளக்கு பகுதியான காமத்திபுரவுக்கு வெளியூரிலிருந்து வந்திறங்கும் பெண்களை ஏமாற்றியோ, நைசாக பேசியோ



அழைத்து போய் விற்றுவிடுவது அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சிதான். எனவே அது ஜோஷிதாவாக இருக்கக் கூடும் என சற்றும் எதிர்பார்க்காத கிரண் உள்ளுணர்வின் உந்துதலாலோ என்னவோ, எங்கங்கோ சுற்றியலைந்த பின்பு கிராண்ட் ரோட் பக்கமாய் வந்தான். தொலைவில் ஒரு பெண் ஓடுவதும், இருவர் துரத்துவதும் வரி வடிவமாய் தெரிய, அத்தனை தொலைவில் இருந்த போதும் அது ஜோஷிதாதான் என்று அவனால் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. பதட்டத்துடன் காரை ஓரமாய் நிறுத்தி விட்டு இறங்கி ஓடினான். ஆனால் ஜோஷிதா யாரையும் பார்க்காமல் கண் மூடித்தனமாய் ஓடிக் கொண்டிருக்க, கிரண் அடுத்த தெருவில் நுழைந்து நேர் எதிராய் சென்று ஜோஷிதாவின் எதிரில் வந்து நின்றான். ஆனால் அவனை நிமிர்ந்தும் பார்க்காமல் தாண்டிக் கொண்டு ஓட முற்பட கிரண் மிகுந்த சிரமப்பட்டே அவளை நிறுத்த வேண்டியிருந்தது. பிறகு ஒரு வழியாய் அவனை அடையாளம் கண்டு கொண்டவள் அப்படியே மயங்கி அவன் கைகளில் சரிந்தாள். கிரண் வாரி எடுத்து தோளில் போட்டுக் கொண்டு திரும்பவும், ஜோஷிதாவை துரத்திய இருவரும் வழிமறித்தனர்.

''பெரிய ஹீரோன்னு நெனைச்சயா? மரியாதையா இறக்கி விட்டுட்டு போ'' என்றான் தடியன்.

கிரண் அவனை அலட்சியப்படுத்தி விட்டு மேலே நடந்தான். ''வாயால சொன்னா கேட்க மாட்டியா?'' என அழுத்தமாய் கிரணின் தோளை பற்றிய தடியன் மறு நிமிடம் பெரிய சத்தத்துடன் தன் கைகளில் வழிந்த இரத்தத்தை பார்த்து அலறத் தொடங்கினான். கிரண் துப்பாக்கியில் வழிந்த புகையை ஊதி விட்டு வேலுவை

குறி பார்க்க ''சார்... சார்... தங்கச்சியை நீங்க கூட்டிட்டு போங்க சார்'' என அவன் விலகி வழிவிட்டான்.

ஜோஷிதாவை ஒரு பார்வை பார்த்த வண்ணம் கிரண் அடுப்பை பற்ற வைத்து குழைவாய் சாதமும், ரசமும் தயார் செய்தான். மெதுவாய் அவளை எழுப்பி உட்கார வைத்து சாதத்தில் ரசத்தை கரைத்து கொடுத்தான். கிரண் வற்புறுத்தலுக்காக இரண்டு வாய் சாப்பிட்டவள் பிறகு வேண்டாம் என்று தலையசைத்தாள்.

''இன்னும்...'' என கிரண் அவள் அருகே சாதத்தை கொண்டு செல்ல ஜோஷிதாவுக்கு குமட்டியது. அவசரமாய் கட்டிலிலிருந்து எழ முற்பட்டவள் உடல் பலகீனத்தினால் அதை உடனே செய்ய முடியாமல் அப்படியே வாந்தி எடுத்தாள். அவளை ஒரு கையால் பிடித்திருந்த கிரணின் சட்டை முழுவதும் ஈரமானது. கிரண் அவளை மெதுவாக குளியலறைக்கு அழைத்துப் போய் முகம் கழுவி, உடை மாற்றி வரச் செய்தான். ஜோஷிதா நைட்டி அணிந்து, முகத்தை துடைத்துக் கொண்டு வருவதற்குள் படுக்கை விரிப்புகளை மாற்றி கிரண் இடத்தை சுத்தம் செய்திருந்தான்.

''கிரண் ஸாரி. ஐ யம் வெரி ஸாரி'' என்றாள் ஜோஷிதா வருத்தத்துடன்.

''எதற்கு?''என்றான் கிரண் புரியாமல்.

''சிறு பிள்ளைத்தனமாக நடந்து கொண்டு உன்னை சிரமப்படுத்தியதற்கு. சிரமப்படுத்தியதோடு இல்லாமல் உன் மீதே வாயிலெடுத்து என்னையும் அறியாமல் அசிங்கம் செய்து விட்டேன்.''

''கரெக்ட். உனக்கே தெரியாததால்தான் இப்படி நடந்தது. உடல் நலம் கெடுவது எல்லோருக்கும்



நேர்வதுதான்'' என்ற கிரண் தானும் சென்று குளித்து உடை மாற்றி வந்தான்.

''உன்னை சாப்பிட வற்புறுத்தியதும் உள்ளதும் சேர்ந்து வெளியே வந்து விட்டது. இப்போது உனக்கு எப்படி இருக்கிறது ஜோஷிதா?'' என்றான் கிரண்.

''தலையை வலிக்கிறது'' என்றாள் ஜோஷிதா சோர்வுடன்.

''இந்த மாத்திரைகளை சாப்பிட்டு விட்டு படுத்துக் கொள்'' என சூடான ஹார்லிக்சுடன், மாத்திரைகளை பிரித்து கொடுத்தான். பாதி கப் ஹார்லிக்ஸையும், மருந்தையும் விழுங்கி விட்டு ஜோஷிதா படுத்துக் கொள்ள போர்வையை கழுத்து வரை போர்த்தி விட்டான்.

''எனக்கு கண்ணை மூடி தூங்கவே பயமா இருக்கு கிரண். யாரோ துரத்தற மாதிரியே இருக்கு'' என்றாள் ஜோஷிதா கலங்கிய குரலில்.

கிரணின் கரங்கள் தன்னையறியாமல் அவள் தலையை வருடின. ''நான் கூடவே இருக்கிறேன். எதைப் பற்றியும் யோசிக்காமல் தூங்கு ஜோஷி'' என்றான் மிருதுவான குரலில்.

ஜோஷிதா அவன் புறமாய் திரும்பிப் படுத்து அவன் கைகளைப் பற்றினாள்.

''நிஜமாய் இங்கிருந்து போய் விட மாட்டாயே!''

''நிச்சயமாய் போக மாட்டேன். தூங்குடா'' என்றான் கிரண். தன் விரல்களை இறுகப் பற்றியிருந்த அவள் கைகளை உள்ளங்கையில் பொத்தியபடி அப்படியே அமர்ந்திருந்தான். சிறிது நேரத்தில் ஜோஷிதா உறங்க ஆரம்பிக்கவும் எழுந்து போய் பெரிய விளக்கை அணைத்து விடிவிளக்கை எரிய விட்டான். தானும் ஒரு

கப் ஹார்லிக்ஸ் குடித்து விட்டு வந்து அவள் அருகில் அமர்ந்தான். இரவெல்லாம் ஜோஷிதாவுக்கு உடல் சூடாவதும், பின் குறைவதுமாக இருந்தது. விடியற்காலையில் வெப்பம் குறைந்து டெம்ப்ரேச்சர் நார்மல் ஆக, அதுவரை அவள் அருகிலேயே அமர்ந்திருந்த கிரண் பின்னால் சாய்ந்து அமர்ந்து தூங்கிப் போனான்.

காலையில் பாத்திரத்தில் பாலை வாங்கிக் கொண்டு கிரண் வீட்டு கதவைத் தட்டிய தாராபாய் மணியடித்தும் கதவு திறக்காததால பயத்துடன் வீட்டை சுற்றி வந்து ஜன்னல் வழியாய் உள்ளே பார்த்தாள். கட்டிலில் ஜோஷிதாவும் அவள் கைகளை பிடித்தபடி நாற்காலியில் உட்கார்ந்தவாறே கிரணும் உறங்குவதை பார்த்தவள் ஒரு புன்னகையுடன் தன் வீட்டிற்கு திரும்பி போனாள்.

''போனவுடன் வந்து விட்டாயே என்ன விஷயம்?'' என்றான் கபூர் வியப்புடன்.

''தூங்குபவர்களை எழுப்பி தொல்லை பண்ண வேண்டாம் என்று வந்து விட்டேன்'' என்றாள் தாராபாய்.

''சரிதான். உனக்கு கூட இங்கிதம் தெரிகிறதே!'' என்றான் கபூர் கிண்டலாக.

''பின்னே, என்னையும் உன்னை மாதிரி நினைச்சியா?'' என்றாள் தாராபாய் பதிலுக்கு.

''காலங்காத்தால களை கட்டுதே என்ன விஷயம்?'' என்றாள் அந்த வழியாய் போன கங்கா.

தாராபாய் அடுப்பை பற்றி வைத்து பாலை காய்ச்ச ஆரம்பித்தாள். இரண்டு நாளில் ஜோஷிதாவின் உடல் சரியாகி விட்டது. படபடப்பு, பயம் எல்லாம் போய் பழைய நிலைக்கு வந்திருந்தாள். அடிக்கடி எங்கே என்றே தெரியாமல் மறைந்து போவதும், இரவு வெகுநேரம்



கழித்து வருவதும், சில சமயம் வராமலே இருப்பதுமாய் இருக்கும் கிரண் இரண்டு நாளாய் ஜோஷிதாவை விட்டு நகராமல் அருகிலேயே இருந்தான். சூப்பும் ஜூஸும், நேரத்துக்கு சத்தான உணவுமாய் தந்து கருத்தாய் கவனித்துக் கொண்டான். பார்வையிலும், பேச்சிலும் முரடனாய் தெரியும் இவனுக்குள் இத்தனை மென்மையும் இருக்கிறதா என ஜோஷிதாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. பீங்கான் கிண்ணத்தில் வெஜிடபிள் சாலடை பரிமாறிய படியே கிரண் சொன்னான்.

''யோசிப்பதை எல்லாம் பிறகு செய்யலாம். இதை சாப்பிடு முதலில்.''

''என் அவசர புத்தியினால் உன்னை மிகவும் சிரமப் படுத்தி விட்டேன்'' என்றாள் ஜோஷிதா மன்னிப்பு கோரும் குரலில்.

''ஜுரமும், தலைவலியும் எல்லோருக்கும் வருவது தான். இதில் என்ன சிரமம்!'' என்றான் கிரண் சாதாரணமாக.

''நான் ஜுரத்தைப் பற்றி சொல்லவில்லை. ஜுரம் வருவதற்கு முன்னால் நடந்ததைப் பற்றி சொல்கிறேன்.''

''இறந்த காலத்தைப் பற்றி பேசி எந்த பயனும் இல்லை ஜோஷிதா.''

''அப்படியானால் வருங்காலத்தைப் பற்றி பேசும்படியாய் எதாவது சொல்'' என்றாள் ஜோஷிதா ஆர்வத்துடன்.

''திறமைசாலியான, அழகான, வசதியான டாக்டருக்கு வருங்காலத்தில் என்ன குறை இருக்கப் போகிறது? நிச்சயம் உன் வருங்காலம் மிக பிரமாதமாய் இருக்கப் போகிறது ஜோஷிதா. லண்டனின் அதிநவீன மருத்துவமனையின் புகழ் பெற்ற டாக்டர் ஆகப் போகிறாய்.

உன்னைப் போலவே மருத்துவம் படித்த கண்ணியமும் மேல்தட்டு நாசுக்கும் நிறைந்த கணவனுடன், பிரிட்டிஷ் ஆங்கிலத்தில் பாப்கார்னாய் பொரியும் குழந்தை களுடன் உன் வாழ்வு அருமையாக இருக்கப் போகிறது. ஆனால் அப்போது எங்கள் நினைவு உனக்கு நிச்சயம் இருக்காது.'' கிரண் பேசிக் கொண்டே போக, ஜோஷி தாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

கிரண் திடுக்கிட்டான். ''ஜோஷிதா எதற்காக அழு கிறாய்? நான் தவறாக எதையும் சொல்லிவிட வில்லையே!'' என்றான் டவலால் அவள் கண்களை துடைத்தபடி.

''நான் இங்கிருந்து போய்விட்டால் நீ கூட என்னை மறந்து விடுவாயா கிரண்?''

''மறக்க முயற்சி செய்வேன்'' என்றான் கிரண் சற்றும் தயங்காமல்.

ஜோஷிதா எட்டி அவன் சட்டையை கொத்தாக பற்றி னாள். ''நீ நிச்சயம் மறந்து போவாய். எனக்குத் தெரியும். உனக்கு மனசுன்னு ஒண்ணு இருந்தாத்தானே!'' என்றாள் ஆத்திரத்துடன்.

கிரண் நிதானமாக தன் சட்டையை பற்றியிருந்த அவள் கைகளை விலக்கினான். ''ரொம்ப உணர்ச்சிவசப் படாதே ஜோஷிதா. ஏற்கனவே உனக்கு உடல்நிலை சரியில்லை. நாம் பிறகு பேசலாம்.''

''பிறகு சந்தர்ப்பமே கிடைக்காமல் போகலாம் கிரண். நழுவ விட்ட நேரங்களைப் பற்றி நிதானமாக யோசித்து பயன் இல்லை. அந்த சிவப்பு விளக்கு பகுதியில் என்னை தேடி நீ மட்டும் வராமல் இருந்திருந்தால்?



என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை'' சொல்லும்போதே ஜோஷிதாவின் உடல் நடுங்கியது.

''நல்லபடியாக திரும்பி வந்து இப்போது பாதுகாப்பான இடத்தில் இருக்கிறாய் ஜோஷிதா. நடந்ததையே நினைத்துக் கொண்டிருந்தால் மனவருத்தம்தான் மிஞ்சும்.'' என்றான் கிரண் ஆறுதலாக.

''இந்த நாட்டில் ஏன் பெண்களை இத்தனை கேவல மாக நடத்துகிறார்கள் கிரண்? என்னைப் போல் ஒரு ஆண் தனியாக கிளம்பிப் போனால் அவனை யாரும் எதுவும் செய்துவிடமாட்டார்கள் இல்லையா? பெண் என்பதால் நான் எதில் தாழ்ந்து போனேன்?''

''இது நீ பெண் என்பதால் மட்டும் நடந்த சம்பவம் அல்ல. அப்பாவிகளையும், பலவீனமானவர்களையும் பலமுள்ளவர்கள் அழிக்கப் பார்ப்பது எல்லா இடத்திலும் நடப்பதுதான். பிச்சை எடுப்பதற்காக குழந்தைகளை கடத்துவதும், உடல் உறுப்புகளை திருடுவதற்காக ஆண் களை கடத்தும் கும்பலும் இருக்கத்தான் செய்கிறது. மும்பையை பொறுத்தவரை விபசாரத்தை அரசாங்கம் அங்கீகரித்திருப்பதால் இத்தனை வெளிப்படையாக தொழில் நடக்கிறது. அதற்காக மற்ற நாடுகளில் இல்லை என்று சொல்ல முடியாது.''

''லண்டன் இப்படி இல்லை. அதை என்னால் உறுதியாக சொல்ல முடியும்'' என்றாள் ஜோஷிதா.

''உலகின் பல நாடுகளை காலனி ஆதிக்கத்திற்கு உட்படுத்தி அதன் செல்வ வளங்களை எல்லாம் கொள்ளை யடித்த ஒரு நாடு சுபிட்சமாக இருப்பதில் வியப்பென்ன இருக்கிறது?'' என்றான் கிரண் ஏளனமாக.

அவனையே கவனித்துக் கொண்டிருந்த ஜோஷி தாவுக்கு கிரணின் வாரப்படாத தலையும், இரண்டு நாள்

ஷேவ் பண்ணாத தாடையும், தூக்கமின்றி சிவந்த கண்களும் கூட அவனுக்கு மிகுந்த கவர்ச்சியை அளிப்பதாய் தோன்றியது. தன்னையறியாமல் அவன் கைகளைப் பற்றினாள். கிரண் பேச்சை நிறுத்தி விட்டு திரும்பிப் பார்த்தான்.

''என்ன ஜோஷிதா? பசிக்கிறதா? ப்ரெட் இருக்கிறது. வேறு ஏதேனும் வேண்டுமா?'' என்றான் கிரண்.

''எது கேட்டாலும் தருவாயா கிரண்?''

''தரக் கூடியதாக இருந்தால் தருவேன்'' என்றான் கிரண் ஜாக்கிரதையாக.

ஜோஷிதாவுக்கு திடீரென்று அலுப்பாக இருந்தது. எத்தனை நாளைக்கு இந்த கண்ணாமூச்சி ஆட்டம் என்று சலிப்பேற்பட்டது. தலையணையில் பின்னால் சாய்ந்து கண்களை மூடினாள். கிரண் அருகிலேயே இருப்பதை உணர்ந்தும் அவள் வெகுநேரம் கண்களை திறக்கவேயில்லை.

''பேட்டி'' என்ற குரலுக்கு ஜோஷிதா கண்களை திறந்து பார்த்தபோது சோம்நாத்ஜியும், சலீமும், தாராபாயுடன் உள்ளே வந்தனர்.

''திடீரென்று இப்படி படுத்துவிட்டாயே பேட்டி! நாங்கள் எல்லாம் ரொம்ப கவலைப்பட்டு போனோம்'' என்றபடி சோம்நாத்ஜி வந்து அவள் அருகில் அமர்ந்தார்.

''இப்போதெல்லாம் டாக்டருக்கு வேலை அதிகமாகி விட்டது. நம் ஆட்கள் அவர்களை ஓய்வெடுக்கவே விடுவதில்லை'' என்றான் சலீம்.

''அதெல்லாம் இல்லை. யார் கண்ணாவது பட்டிருக்கும். நான் திருஷ்டி சுற்றி போடுகிறேன்'' என்றாள் தாராபாய்.



''சுத்தி போடுவதாய் இருந்தால் கிரண்ஜிக்கும் சேர்த்து சுத்திப் போடு. நாலுநாளில் எப்படி போய் விட்டார் பார்!'' என்றான் சலீம்.

''ஆமாம். உதவி செய்ய வந்த என்னைக் கூட அனுமதிக்காமல் தீதியை முழுக்க அவரே கவனித்துக் கொண்டார். உடல்நலமில்லாதவர்களை கண் விழித்து பார்ப்பதுடன், அவர்களுக்கு சமைத்துக் கொடுப்பது என பழக்கமற்ற வேலைகளில் களைத்துப் போய்விட்டார்'' என்றாள் தாராபாய்.

''சாதாரண காய்ச்சலுக்கே கிரண் இத்தனை பதறிப் போவான்னு நான் நினைக்கல. கிரணுக்கு மோசமான விபத்துகளும், இரத்தகாயங்களும் ஏற்பட்டபோது கூட அவன் பெரிசா அலட்டி நாங்க பார்த்ததில்லை. ஜோஷிதாவின் உடம்பு தேறும்வரை கிரண் இருந்த இடத்தை விட்டு நகரவில்லை'' என்றார் சோம்நாத்ஜி.

எல்லோரும் பேசுவதை கேட்டபடி ஜோஷிதா கிரண் மீதிருந்த பார்வையை திருப்பாமல் அமர்ந்திருக்க, கிரண் நாசுக்காய் பேச்சை மாற்றினான்.

மேலும் இரண்டு நாள் ஓய்வுக்கு பிறகு ஜோஷிதா தன் இயல்பான சுறுசுறுப்புடன் செயல்பட ஆரம்பித்தாள். தன் பெற்றோருக்கு போன் செய்து வழக்கம் போல் நலம் விசாரித்தபோது அவள் அம்மா தயங்கியபடியே சொன்னாள். ''ஜோஷிதா ஹரிஷுக்கு வேறொரு பெண்ணுடன் திருமணம் ஆகிவிட்டது.''

''அப்படியா?'' என்றாள் ஜோஷிதா சாதாரணமாக.

''ஜோஷி இதற்காக நீ வருத்தப்படக் கூடாது உனக்கு முன்கூட்டியே தெரிந்திருப்பது நல்லது என்றதால்தான் இந்த விஷயத்தை சொன்னேன்.''

''என்னை மணந்து கொள்ளப் போகிறவன் ஆபத்தான நிலையில் என்னை விட்டுவிட்டு ஓடிய போது ஏற்படாத வருத்தம் இப்போது எப்படி மம்மி ஏற்படும்? நான் நிகழ்காலத்தில் வாழ்பவள் மம்மி. ஹரிஷ் என்னுடைய இறந்தகாலம்.''

''ஜோஷி யு வார் பிர்லியண்ட்'' என்றாள் கீதா நிம் மதியுடன்.

''உங்க ஊரில் என்ன விசேஷம்?'' என்றான் அப் போதுதான் உள்ளே வந்த கிரண்.

''எங்க ஊரில் எதுவும் இல்லை. உங்க ஊரில்தான் விசேஷமாம்'' என்றாள் ஜோஷிதா.

''என்ன விஷயம்?''

''ஹரிஷுக்கு, அதாவது எனக்கு நிச்சயம் செய்யப் பட்ட மாப்பிள்ளைக்கு திருமணமாகி விட்டதாம்.''

கிரண் பதில் பேசாமல் இருக்கவும், ''இப்போது உனக்கு ரொம்ப சந்தோஷம், இல்லையா?'' என்றாள் ஜோஷிதா.

''இதில் எனக்கென்ன சந்தோஷம் இருக்கப் போகிறது?'' என்றான் கிரண்.

''நீ என்னை அங்கே போக வேண்டாம் என்று தடுக்க வில்லை?''

''யோசித்து பேசு ஜோஷிதா. உன்னை மதிக்காத வனிடம் வலியப் போய் காலில் விழ வேண்டாம் என்று தான் சொன்னேன். மற்றபடி நான் எப்படி உன்னை தடுக்க முடியும்?''

''ஆமாம். உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? நீ எனக்கு எந்த வகையில் உறவு? அல்லது நட்பு? நான், என்னுடைய பழக்கங்கள், எல்லாம் வேறு. நீ உன் வீடு, விருப்பங்கள் வேறு. ஏதோ எதிர்பாராத



தருணத்தில் சந்திக்க நேர்ந்தது என்பதைத் தவிர நம்மிருவருக்கும் இடையே எந்த பந்தமும் இல்லை. இனி இதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள் வேன். உன்னை எந்த சங்கடத்துக்கும் உள்ளாக்க மாட்டேன்'' என்றாள் ஜோஷிதா குரல் கரகரக்க.

கிரண் அடிபட்டவனாக அவளைப் பார்த்தான். ''ஜோஷிதா நான் சொன்னதை நீ...''

''நான் சரியாக புரிந்து கொண்டேன் கிரண். ப்ளீஸ் எனக்கு ஒரே ஒரு உதவி மட்டும் செய். உன் காவல் துறை நண்பர் சர்மாவை சந்திக்கவும், நான் லண்டன் போகவும் ஏற்பாடு செய்தால் மிகவும் நன்றியுள்ளவளாக இருப்பேன்.''

''நன்றி என்ற பெரிய வார்த்தை எல்லாம் தேவை யில்லை ஜோஷிதா. உனக்கு உதவ வேண்டிய கடமை எனக்கிருக்கிறது.''

''தேங்க் யு'' என்ற ஜோஷிதா அதற்கு மேல் எதுவும் பேசாமல் கையிலிருந்த ரிமோட்டால் டிவியின் வால் யூம்மை அதிகரித்தாள். தீவிரவாத தாக்குதலில் உயி ருடன் பிடிபட்ட தீவிரவாதி அஜ்மல் கசாப் பற்றிய செய்திகள் ஒலிபரப்பானது. பாகிஸ்தானின் பரித்கோட் கிராமத்தை சேர்ந்தவன் என்றும் அவனது குடும்ப விபரங்களையும் ஆங்கில புலனாய்வு பத்திரிகை வெளிப்படுத்தியதை செய்தி வாசிப்பாளர் பெரிய குரலில் சொல்லிக் கொண்டிருந்தார். சத்ரபதி சிவாஜி இரயில் நிலையத்தில் பதிவான காட்சிகள் ஒளிபரப்பப் பட்டன. கையில் பிடித்த துப்பாக்கியுடன் அலட்சிய சிரிப்புடன் இரு இளைஞர்கள். அவர்களில் ஒருவன் இறந்து போக, பிடிபட்டவனை க்ளோசாக காட்டினார்கள்.

அஜ்மல் கசாப் இருபத்தி இரண்டு அல்லது மூன்று வயது இளைஞன். இவன் வயது பையன்கள் எல்லாம் அடுத்து வேலையில் சேரலாமா, மேற்படிப்பு படிக்கலாமா என யோசித்துக் கொண்டிருப்பார்கள். பஸ் நிலையத்தில் தினமும் சந்திக்கும் பெண்ணிடம் காதலை சொல்ல சந்தர்ப்பத்திற்கு காத்திருப்பார்கள். வீட்டு சாமான் வாங்க அம்மா தரும் பணத்தில் திருட்டு தம் அடிக்க மிச்சம் பிடிப்பார்கள். அப்பாவிடம் நோட்டுக் வாங்கவென்று அடம்பிடித்து வாங்கிய காசில் நண்பர்களுடனோ, தங்கள் கேர்ல் ப்ரண்டுடனோ சினிமாவுக்கு போவதும், நியூ இயர் பார்ட்டிகளில் பீர் அடிப்பதுதான் இந்திய இளைஞர்கள் செய்யும் அதிகபட்ச தவறுகள். தீபாவளி பட்டாசிற்கே பயப்படுவர்கள்தான் இங்கு அதிகம். ஆனால் இந்த பாகிஸ்தானிய இளைஞனின் மனோபாவம் சிறுவயதிலேயே கருணையற்று போயிருக்க வேண்டும். வறுமையில் வாடும் இவர்களுக்கும் இதுவும் பிழைப்பதற்கான ஒரு வழி. அசைவம் சாப்பிடுகிறவர்களுக்க வேண்டியது நாக்கின் சுவை தானே தவிர ஆட்டின் உயிரைப் பற்றிய கவலை இல்லை. அதைப் போலத்தான் இந்த இளைஞர்களும், ஆடானால் என்ன? மனிதன் ஆனால் என்ன? தன் உயிர் போகாத வரை யாரைப் பற்றியும் கவலை இல்லை.

செய்திகளில் ஆழ்ந்து போயிருந்த ஜோஷிதா கிரணிடம் கேட்டாள்.

''குற்றவாளியை உயிருடன் பிடித்து, தாக்குதலுக்கான ஆதாரங்களையும் சேகரித்த பின் சம்பந்தப்பட்ட தீவிரவாத குழுக்கள் மீது தாக்குதல் நடத்தாமல் ஏன் இந்தியா பாக்ஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது?''



''இந்தியாவின் பலம், பலவீனம் இரண்டுமே ஜனநாயகம்தான்'' என்றான் கிரண். ''அமெரிக்கா போன்ற வல்லரசு நாடு ஒருமுறை தீவிரவாதத்தை ருசி பார்த்ததுமே பொங்கி எழுந்து எந்த நாட்டுக்குள் வேண்டுமானாலும் அத்து மீறி நுழைய முடிகிறது. தங்கள் நாட்டு இராணுவத்தை நிரந்தரமாக வேறு நாட்டில் நிறுத்த முடிகிறது. இதற்கு சம்மந்தமே இல்லாத அடுத்த நாட்டு அதிபரை அவன் நாட்டிலேயே கைது செய்து தூக்கில் போட முடிகிறது. ஆனால் இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகள் தங்களை நோக்கிப் பாயும் தீவிரவாத சக்திகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு கூட உலக நாடுகளின் உதவியை கோர வேண்டியுள்ளது. தங்கள் படைபலத்தை இந்தியா உபயோகிக்கும் போது போர் மூண்டால் அது நாட்டு பொருளாதாரத்தில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. போருக்காகவும், போருக்குபின் ஏற்படும் பஞ்சத்தை சமாளிக்கவும் பெரும் நிதி தேவைப்படும். எப்போதும் பற்றாக்குறை பட்ஜெட் தயாரிக்கும் எங்களது அரசியல் தலைவர்களால் இத்தகைய அதிகப்படி பொருள் இழப்பை எப்படி சமாளிக்க முடியும்?''

''பாகிஸ்தான் இந்தியாவை விட சிறிய நாடு. பெரிய தொழிற்புரட்சியோ, பொருளாதார வளர்ச்சியோ இல்லாத அந்த நாட்டில் இராணுவத்திற்கும், தீவிரவாத குழுக்களுக்கும் பணம் எங்கிருந்து வருகிறது?'' என்றாள் ஜோஷிதா.

''பாகிஸ்தானில் பல்வேறு தீவிரவாத அமைப்புகள் இருக்கின்றன ஜோஷிதா'' என்றான் கிரண்.

''லஸ்கர் ஈ தொய்பா'' பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றாள் ஜோஷிதா.

1990 ஆம் ஆண்டு பேராசிரியர் ஹஃபீஸ் முகமது சயீத் என்பவரால் தொடங்கப்பட்டதுதான் லஸ்கர் அமைப்பு. காஷ்மீரை இந்தியாவிடமிருந்து பிரித்து பாகிஸ்தானை சுற்றியுள்ள அனைத்து இஸ்லாமிய மாகாணங்களையும் ஒருங்கிணைத்து பரிபூரண இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை நிறவ வேண்டும் என்பதுதான் அதன் லட்சியம். இந்திய ராணுவத்தின் பாதுகாப்பு படையும், காஷ்மீரில் வசிக்கும் இந்துக்களும்தான் அதன் இலக்குகள். பாகிஸ்தான் தொழிலதிபர்களிலுடம், துபாய், சவூதி போன்ற மத்திய கிழக்கு தேசங்களிலும் லஸ்கர் நிதி திரட்டுகிறது. பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. இந்தியாவில் மேற்கொண்ட பல நாசகாரியங்களுக்கு லஸ்கரை கருவியாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

''ஹிஸ்புல் முஜாகிதீன்' என்ற அமைப்பிற்கு 'காஷ்மீர் பிரஸ் இன்டர்நேஷனல்' என்ற செய்தி நிறுவனமும், BANNAT UL ISLAM என்ற பெண்கள் படை பிரிவும் கூட இருக்கிறது. இதற்கு அமெரிக்க முஸ்லீம்களிடமிருந்து நிதி கிடைக்கிறது.''

''ஹர்கத் உல் அன்சார். ஜெய்ஷ் ஏ முகம்மது. அல் உமர் முஜாகிதீன், தெரிக் உல் முஜாகிதீன், அல்பகர், அல்ஜிகாத், காஷ்மீர் ஜிகாத் படை, மஹஸ் ஏ ஆஸாதி, முஸ்லீம் ஜன்டஸ் படை போன்ற வலுவான பதினாறு தீவிரவாத இயக்கங்கள் இருக்கின்றன. இவை அனைத்துமே பாகிஸ்தான் ராணுவத்திடம்தான் பயிற்சி பெறுகின்றன. கட்டை பஞ்சாயத்து. போதை மருந்து கடத்தில், நில ஆக்கிரமிப்பு என பலவழிகளில் நிதி திரட்டுவதுடன், சில எண்ணெய் எடுப்பு நிறுவனங்கள் தம் லாபத்தில் சில சதவீதங்களை நன்கொடையாக இந்த அமைப்புக்கு தருகின்றன.''



''கசாப்புக்கு எப்போது தண்டனை கிடைக்கும்?'' என்றாள் ஜோஷிதா ஆர்வத்துடன்.

கிரண் கசப்புடன் சிரித்தான். ''இங்கு என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். 1994ல் 'மௌலானா மசூத் அசார்' என்ற முக்கிய தீவிரவாதி காஷ்மீரில் இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டான். 1999ல் பாகிஸ்தான் தீவிரவாதிகள் இந்திய விமானத்தை கடத்தினார்கள். அவர்கள் கோரிக்கைக்காக இந்திய அரசு 'மசூத் அசாரை' இராஜ மரியாதையுடன் அனுப்பி வைத்தது. மசூத் அசாருடன் விடுவிக்கப்பட்ட 'முஷ்டாக் அகமது சர்கார்' தான் 'அல்உம்மா' அமைப்பின் தற்போதைய தலைவர். ஒரு நாட்டின் காவல்துறை, உளவுதுறை, இராணுவம், கமாண்டோ படை என நாட்டை பாதுகாக்கும் அத்தனை துறையிலும் பணியாற்றுபவர்கள் அதீத உழைப்பாலும், உயிர் தியாகத்தாலும் ஒரு குற்றவாளியை பிடிக்கிறார்கள். இதில் எதையுமே செய்யாத அரசியல்வாதிகளின் கோழைத்தனத்தால் அத்தனை வீரர்களின் முயற்சியையும் வீணாக்கி விடுகிறார்கள்.''

கிரண் பேசி முடித்ததும் அங்கே கனத்த மௌனம் நிலவியது.



## 10

கிரணின் செல்போன் விடாது சிணுங்கியது. கிரண் குளியலறையில் இருந்தான். அவனது போனை தொடக்கூடாது என முதல் நாளே கடுமையுடன் எச்சரித்திருந்தான். எனவே பேசுவது யாராய் இருக்கக் கூடும் என்ற

ஆர்வமும், அவன் திட்டுவான் என்ற பயமுமாய் ஜோஷிதா டேபிள் அருகே சென்றாள். அவள் அருகே சென்றதும் போன் சத்தம் நின்று போகவும், ஜோஷிதா 'சே!' என்றாள் ஏமாற்றத்துடன். அவள் திரும்பிப் போய் தலையை வாரத் தொடங்கவும் போன் மறுபடி ஒலித்தது. ஜோஷிதா ஒரே பாய்ச்சலாய் போன் அருகே செல்கை யில் குளியலறை கதவு சடாரென திறந்தது. ஜோஷிதா அசையாமல் நிற்க, கிரண் போனுடன் வீட்டுக்கு வெளியே சென்றான். இந்த போன் வந்தால் உடனே கிரண் கிளம்பி போய்விடுவான். ஜோஷிதா யோசனையுடன் நின் றிருக்க, உள்ளே வந்த கிரண்,

''ஜோஷிதா, நான் கொஞ்சம் வெளியே போக வேண்டி யிருக்கிறது. கதவை தாழிட்டுக் கொள்''என்றபடி கால் களில் ஷூவை மாட்டினான்.

''நீ எப்போது திரும்பி வருவாய் கிரண்?''

''வேலை முடிந்ததும் வருவேன்'' என்றான் கிரண்.

''வேலை எப்போது முடியும்?''

''அதெப்படி சொல்ல முடியும்?''

''ஏன் முடியாது? எந்த வேலையாய் இருந்தாலும் ஏதாவது ஒரு சமயத்தில் முடிந்துதான் ஆக வேண்டும் இல்லையா?''

''என் வேலைக்கு நேரங்காலமே கிடையாது'' என்ற கிரண் அவள் மறுபடி கேட்கத் தொடங்கும்முன் அவசர மாக சொன்னான். ''என்ன வேலை என்று கேட்காதே. நான் ஏற்கனவே உனக்கு சொல்லியிருக்கிறேன். என்னால் சொல்ல முடியாது.''

''நீ சொல்லாட்டியும் என்னால கெஸ் பண்ண முடியுது'' என்றாள் ஜோஷிதா.



அவளை வியப்புடன் பார்த்த கிரண் ''சொல்லேன். உன் கெஸ் சரியானு பார்க்கலாம்'' என்றான் ஆர்வத்துடன்.

''நீ நேற்றைக்கு பட்டியலிட்டு சொன்னாயே அந்த தீவிரவாத இயக்கங்கள் எதோடயாவது தொடர்பிருக் கலாம் என்று தோன்றுகிறது.''

ஜோஷிதா சொல்லி முடித்ததும் அவளையே பார்த்த படி நின்றிருந்த கிரணின் கண்கள் பளபளத்தன. மெது வாக அவள் அருகே வந்து ஜோஷிதா அமர்ந்திருந்த நாற்காலியின் இருபுறமும் கைகளை ஊன்றி குனிந்தான்.

''ஒருவேளை, உன் யூகம் உண்மைதான் என்றால் என்ன செய்வாய் ஜோஷிதா?''

அவனது அண்மை .வழக்கம் போல் படபடப்பை ஏற்படுத்த ஜோஷிதா பதில் பேசாமல் அமர்ந்திருந்தாள். கிரண் தொடர்ந்து பேசினான்.

''உடனே இங்கிருந்து போய் விடுவாயா? இவனுடன் இத் தனை நாள் வசிக்க நேர்ந்ததே என்று அவமானப்படுவாய் இல்லையா? இனி என் முகத்திலேயே விழிக்கக் கூடாது என்று முடிவெடுப்பாய். என்னை சந்திக்க நேர்ந்ததற்கு ரொம்ப வருத்தப்படுவாய். அப்படித்தானே ஜோஷிதா?''

தன் அருகே நெருங்கியிருந்த கிரணின் கண்களை பார்த்த ஜோஷிதா 'இல்லை' என தலையசைத்தாள். தன் உள்ளங்கைகளால் அவன் முகத்தைப் பற்றினாள். கன்னங்களின் சொரசொரப்பு கைகளை குறுகுறுக்க வைத்தது. மனசிலிருந்து யோசனையின்றி வார்த்தைகள் வெளியே வந்தன. ''உன்னை என்னால் எப்படி வெறுக்க முடியும் கிரண்? நீ யாராய் இருந்தாலும், எந்த சூழ் நிலையில் இருந்தாலும் இந்த முகத்தை என்னால் வெறுக்க முடியவே முடியாது.''

மனம் நெகிழ்ந்து போனதை மறைக்க கிரண் சட்டென விலகினான். இதுவரை அனுபவித்து அறியாத விதமாய் என் மேல் அன்பு செலுத்தும் முதல் பெண் இவள் என்ற உணர்வில் கண்கள் பனிக்க, ஓ! இவள் நம்மை பலவீனமாக்கப் பார்க்கிறாள் என்ற பயம் எழுந்தது. ஜோஷிதாவை நிமிர்ந்தும் பாராமல் ''பை'' என்றபடி வெளியே விரைந்தான்.

இஸ்மாயில் லுங்கியை இழுத்து விட்டபடி அந்த தகரபெட்டியின் மீது அமர்ந்தான். தரையிலும், கோணிப் பையின் மீதுமாய் இன்னும் நான்கு பேர் அவனுடன் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு எதிரே ஒரு தலைவனுக்கு உரிய தோரணையுடன் அலிகார் நின்றிருந்தான்.

''இன்னிக்கு கப்பல் வருது. சரக்கு எடுக்க யார் போறது?'' என்றான் உருதுவில்.

''நான் போகிறேன்'' என்றான் இஸ்மாயில்.

''குட். ஆனால் சமீபத்திய தாக்குதலுக்கு பிறகு போலீஸ் கெடுபடி அதிகமாகி விட்டது ஜாக்கிரதை'' என்றான் அலிகார்.

எத்தனை பெட்டிகள்? எங்கே சேர்க்க வேண்டும்? செக்போஸ்டில் யார் நிற்கிறார்கள் என்ற விபரத்தை தணிந்த குரலில் அலிகார் விளக்கினான். கவனமாக கேட்ட இஸ்மாயில் ''இந்த முறை ரமாநாயக் ஆட்களால் பிரச்சனை இருக்காதே!'' என்றான் அலிகாரிடம்.

''கண்டிப்பாக இருக்காது. போன முறை நம்முடன் போட்டிக்கு வந்த அவன் ஆளை நடுத்தெருவில் வைத்து காலி பண்ணிய பிறகு அவன் எப்படி வருவான்? இன்னும் கொஞ்சநாள் ரமாநாயக் அடக்கியே வாசிப்பான்'' என்றான் அலிகார் ஏளன சிரிப்புடன்.



கூட நின்றிருந்தவர்களும் சேர்ந்து சிரிக்க ''அப்படி சொல்ல முடியாது அலிகார். பழி வாங்கும் எண்ணத்தில் முன்பை விட வேகமாக செயல்படவும் கூடும்'' என்றான் இஸ்மாயில்.

அலிகாரின் சின்ன கண்கள் குரூரத்துடன் ஜொலித்தன. ''தாவூத் பாய், சோட்டா ஷகீலின் வலது கையாய் இருந்த என் மீது கை வைக்க மும்பை போலீசே பயப்படும். அந்த ரமாநாயக் நேற்று முளைத்தவன். அவனால் என்ன செய்து விட முடியும்? ஒதுங்கிப் போனால் பிழைப்பான். மறுபடி போட்டிக்கு வந்தால் அரபிக்கடலில் மிதப்பான். நீ போய் வேலையை கவனி.''

இஸ்மாயில் ஒப்புதலுடன் தலையசைத்து விட்டு கோணிப்படுதாவை விலக்கினான். படுதாவின் மறுபக்கம் வசிக்கும் அந்த பெங்காலி குடும்பம் பொரித்த மீனை பங்கு போடுவதில் முனைந்திருந்தது. இஸ்மாயிலை நிமிர்ந்து பார்த்து விட்டு மறுபடி சாப்பிடுவதில் மும்மரமானார்கள். இஸ்மாயில் புன்னகைத்துக் கொண்டான். அலிகார் நல்ல இடமாகத்தான் தேர்ந்தெடுக்கிறான். மதுபான விடுதிகளிலும், பொது இடங்களிலும் சி.ஐ.டி., சி.பி.ஐ., கண்காணிப்பு இருக்கும். இது போன்ற 'சால்' எனப்படும் குடியிருப்பு பகுதிகளை அவர்களுக்கு கண்காணிக்க தோன்றாது. நான்கிலிருந்து ஐந்துமாடிகள் கொண்ட இந்த குடியிருப்பில் எங்கு திரும்பினாலும் கொத்து கொத்தாக கட்டிடங்கள். ஒவ்வொரு மாடியிலும் குறைந்தது பத்திலிருந்து இருபது குடும்பங்கள் வசிக்கும். கணவன், மனைவி, குழந்தை குட்டிகள் சிலவற்றில் தாத்தா பாட்டிகள் என ஒவ்வொரு குடும்பமும் ஒரு பொந்திற்குள் ஒளிந்திருக்கும். ஒரே அறை. அங்கேயே சமையல். அங்கேயே தூக்கம். அங்கேயே வாழ்க்கை.

இரண்டு குடித்தனங்களுக்கு நடுவே துணித்திரைதான் இருக்கும். திரையை இழுத்து விடாமல் போனால் நீங்கள் உடை மாற்றுவதை குறைந்தது பதினைந்து பேராவது வேடிக்கை பார்ப்பார்கள். இது போன்ற இடத்தில் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என்று யாரும் நினைத்து கூட பார்க்க மாட்டார்கள். கோணிப் பை திரைக்கு பின்புறம் ஆயுத கடத்தலையும், தீவிரவாதத்தையும் திட்டமிடுகிறார்கள் என்பது அங்கு குடியிருப்பவர்கள் கனவிலும் கருதாத விஷயம். ஆனால் மும்பையில் அந்நிய சக்தியின் ஊடுருவலால் நடந்த நாச வேலைகள் பலவற்றிற்கு உதவி செய்தது இந்த 'சால்'கள் (CHAWL) தான்.

யோசனையுடன் குறுகலான படியின் வழியாக இறங்கிய இஸ்மாயிலின் கண் முன் தீ கொழுத்து விட்டு எரிந்தது. ''அண்ணா எங்களை காப்பாத்து'' என கதறிய தம்பி தங்கைகளின் குரல் கேட்டது. கரிகட்டைகளாய் தரையில் கிடந்த சடலங்களை போலீஸார் பூட்ஸ் காலால் ஒதுக்கி அடையாளம் காட்ட சொன்னார்கள். இஸ்மாயில் ஆத்திரத்துடன் சுவரில் குத்தினான். ''இந்தியாவில் பிறந்ததை தவிர நாங்கள் என்ன குற்றம் செய்தோம்? அப்பாவி மக்கள் துன்பப்படும் போது காப்பாற்ற முன் வராத எந்த நாடும், நாட்டு மக்களும் நன்றாக வாழக் கூடாது. வாழ விட மாட்டேன்.''

தெருவுக்கு வந்ததும் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு இஸ்மாயில் நடக்க ஆரம்பித்தான். இரண்டடி தூரம் செல்வதற்குள் யாரோ அவனை அழைக்கும் குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான். பைக்கில் அமர்ந்திருந்த கிரண் ''ஹலோ, என்ன இந்தப் பக்கமாய்'' என்றான் யதார்த்தமாக.



''ஒரு நண்பனைப் பார்க்க வந்திருந்தேன். நீங்கள் இங்கே என்ன விஷயமாய் வந்தீர்கள்?'' என்றான் இஸ்மாயில்.

''நான் அலுவலக வேலை விஷயமாய் டோரிவல்லி போயிருந்தேன். திரும்பி வரும்போதுதான் உன்னைப் போல் இருக்கிற மாதிரி இருக்கே என்று நினைத்தபடியே வந்தேன். கடைசியில் நீயேதான். சரி வா போகலாம்'' என்றான் பில்லியனைக் காட்டி.

''எனக்கு வேறு பக்கம் போக வேண்டியிருக்கிறது. நான் வீட்டிற்கு வரவில்லை'' என்றான் இஸ்மாயில்.

''அப்படியா? சரி நீ போகிற இடத்தில் விட்டு விட்டுப் போகிறேன். வா.''

''உங்களுக்கெதற்கு சிரமம்?''

''ஒரே தெருவில் வசிக்கிறோம். ரொம்ப நாள் பழக்கம். இது கூட செய்ய மாட்டேனா? சீக்கிரம் ஏறு இஸ்மாயில்'' என்றான் கிரண் ஹேன்டிலை திருகியபடி.

''என் நண்பன் காரில் வந்து அழைத்துப் போவதாகச் சொன்னான். அவனுக்காகக் காத்திருக்கிறேன்'' என்றான் இஸ்மாயில்.

''அப்படியா? சரி நான் வருகிறேன்'' என கிரண் அவனிடம் விடைபெற்று கிளம்பிப் போனான்.

'இவன் எங்கே இங்கே வந்தான்?' என முணுமுணுத்த இஸ்மாயில் கிரணின் பைக் கண்ணிலிருந்து மறையும் வரை காத்திருந்தான். கிரண் தெருமுனை திரும்பி பத்து நிமிடங்கள் கழித்து வழியில் சென்ற ஆட்டோவை கை காட்டி நிறுத்தி அதில் ஏறி அமர்ந்தான். மெயின் ரோட்டை ஒட்டிய பங்க் கடையில் கூல்ட்ரிங்க்ஸ் குடித்துக் கொண்டிருந்த கிரண், தெருவிலிருந்து வந்து மெயின்

ரோட்டின் கும்பலில் கலந்த ஆட்டோவையும், அதி லிருந்த இஸ்மாயிலையும் வியப்புடன் பார்த்தான்.

தன் கைகளைப் பற்றியபடி குதித்து விளையாடிய குழந்தையை ஜோஷிதா மகிழ்ச்சியுடன் பார்த்து புன் னகைத்தாள். கீழே விழுந்ததில் அடிபட்டு வலியும் வீக்க மும் கதறியபடி ஜோஷிதாவிடம் வந்தவள், தற்போது குணமான பின்னும் அடிக்கடி வந்து போய்க் கொண் டிருந்தாள்.

''தீதி, நாளையிலிருந்து இரண்டு நாளைக்கு எனக்கு ஸ்கூல் லீவ். என் வீட்டிற்கு வர்றீங்களா?'' என்றாள் ஜோஷிதாவிடம்.

''எதற்காக உனக்கு லீவ்?''

''ஹோலி பண்டிகை அக்கா. தெரியாதா உங்களுக்கு?''

''ம்ஹூம். தெரியாதே.''

ரொம்ப நல்லா இருக்கும். அம்மா நிறைய.. நிறைய ஸ்வீட்ஸ் தருவாங்க. கலர் பவுடரைப் பூசி விளையாடு வோம். ஹோலி பாட்டும், டான்சும் ஆடுவோம். வர்றீங் களா எங்க வீட்டிற்கு?''

''பார்க்கலாம்'' என்றாள் ஜோஷிதா.

''அதெல்லாம் முடியாது. நீங்கள் கட்டாயம் வரணும்'' என்றாள் அடம் பிடிக்கும் குரலில்.

குழந்தையின் குண்டு கன்னங்களைத் தொட்டு முத்தமிட்ட ஜோஷிதா,

''ப்ரீயா இருந்தா வரேன்'' என்றாள் சமாதானமாக.

''ஓகே. வரும்போது உங்க ப்ரண்ட்சையும் கூட்டிட்டு வாங்க'' என்றாள் பெரிய மனுஷியாய்.

''என்னுடைய ப்ரண்ட்சா?''



''ஆமாம். தாராபாய், சோம்நாத் தாத்தா எல்லோரை யும்.''

ஜோஷிதா கலகலவென்று சிரித்தாள். ''பரவாயில் லையே. எனக்கு நல்ல ப்ரண்ட்ஸைதான் செலக்ட் பண்ணியிருக்க.''

உள்ளே வந்த கிரணுக்கு ஜோஷிதாவும், அந்த சிறுமியும் சிரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் முகம் தானாய் மலர்ந்தது. ஜோஷிதாவின் ரோஸ் நிற இதழ்களில் மின்னிய சிரிப்பால் கவரப்பட்டவனாய் அவர்கள் அருகே செல்லவும் ''அக்கா இவர் யார்?'' என்றாள் சிறுமி ஜோஷிதாவிடம்.

''நீயே சொல்லு பார்க்கலாம்'' என்றாள் ஜோஷிதா.

''ம்...'' என யோசித்தபடி அவனை அந்த அசாத்திய உயரத்தை, இறுகின உடற்கட்டையும் பார்த்த சிறுமி ''உங்க எனிமி. சரியா?' என்றாள்.

ஒரு நிமிடம் திகைத்துப் பின் வாய்விட்டுச் சிரித்தபடி ''சரிதான்'' என்றாள் ஜோஷிதா.

கிரண் கடுப்புடன் அந்தப் பெண்ணை அதட்டினான். ''தினமும் இங்கே உனக்கு என்ன வேலை? போய் படி. போ.''

''நான் ஒண்ணும் உங்களைப் பார்க்க வரல. அக்காவைப் பார்க்கத்தான் வந்தேன்.''

''அக்கா தங்கைன்னு சொல்லிட்டு இங்க யாரும் வரக் கூடாது. தெரியுமா?''

''அதை நீங்க சொல்ல வேண்டாம். அக்கா சொல்லட் டும். இந்த வீடு அக்காவுடையதும்தான். இல்லையா அக்கா?''

உரிமை கொண்டாடும் சிறுமியிடம் மறுக்க மனம் வராமல் ஜோஷிதா அமைதியானாள். ஒரு நிமிடம்

ஜோஷிதாவின் முகத்தைக் கூர்ந்து பார்த்த கிரண் "உண்மையாகவா சொல்கிறாய்? நீ சொல்வது போல இந்த வீட்டில் உன் அக்காவுக்கு உரிமை இருக்கிறது என அவர்களே சொன்னால் ஒத்துக் கொள்கிறேன்" என்றான் சீரியசாக.

"அக்கா, ஆமாம் என்று சொல்" என சிறுமி பரபரக்க ஜோஷிதா அமைதியாகச் சொன்னாள். "இந்த நாட்டில் சில மாதங்கள் தங்கியிருக்க வந்த விருந்தாளி நான். அப்படியிருக்க, இங்கிருக்கும் வீட்டிற்கு எப்படி உரிமை கொண்டாட முடியும்?"

ஜோஷிதா சொல்வதைப் புரியாமல் விழித்த சிறுமி, அவள் அம்மா அழைக்கும் குரல் கேட்கவே 'பை அக்கா' என்றபடி ஓடிப் போனாள். "ஜோஷிதா" என்றழைத்த கிரணுக்கு பதில் சொல்லாமல் ஜோஷிதா தன் கையிலிருந்த புத்தகத்தில் ஆழ்ந்து போனாள்.

இஸ்மாயில் தூரத்தில் புள்ளியாய் தெரிந்த வெளிச்சத்தை உற்றுப் பார்த்தான். "பறவை வந்தாச்சு" என்றான் அருகில் இருந்தவனிடம். படகை ஓட்டிக் கொண்டிருந்தவன் துடுப்பு வலிப்பதை நிறுத்தினான். அன்று அமாவாசை என்பதால் அரபிக் கடல் சீற்றத்துடன் இருந்தது. படகு வேகமாக ஆடியது. இஸ்மாயிலும் படகை ஓட்டியவனும் வெளிச்சப் புள்ளி அருகே நெருங்குவதை கண்டார்கள். இஸ்மாயில் பெட்டியை கைகளில் எடுத்துக் கொண்டான். சில நிமிடங்களில் இஞ்சின் அணைக்கப்பட்ட ஒரு மோட்டார் படகு அவர்கள் அருகே வந்து நின்றது. அதில் இருந்தவன் "சலாம் அலேக்கும் இஸ்மாயில் பாய்" என்றான் தலை தாழ்த்தி.

"அலேக்கும் சலாம். என்ன முபாரக்ஜி நீங்கள் வந்திருக்கிறீர்கள்? உங்கள் மகன் எங்கே?" என்றான் இஸ்மாயில் வியப்புடன்.



"அவன் வேறு இடத்திற்குப் போயிருக்கிறான். ஒரு வேளை எனக்கு வயதாகி விட்டதாக நினைக்கிறாயா இஸ்மாயில்?"

"சேச்சே! நீங்கள் அனுபவஸ்தர். ஐம்பது வருடமாய் தொழில் செய்பவர். மனசில் துணிச்சல் உள்ளவர்களுக்கு வயதே ஆவதில்லை."

முபாரக் சிரித்தார். "நன்றாக சொன்னாய் இஸ்மாயில். வாழ்க்கையில் நிறைய அனுபவித்து விட்டேன். சாகும் முன் என் பிறப்பின் கடமையைச் செய்ய ஆசைப்படுகிறேன். உலகம் முழுவதும் இஸ்லாத்தின் கீழ் வரவேண்டும். உலக மக்கள் எல்லோரும் நடிகனின் மக்களாக வேண்டும். எல்லார் கையிலும் குர்ஆன் இருக்க வேண்டும். இதற்கான அஸ்திவாரத்தைப் போடாமல் நான் ஓயப் போவதில்லை."

"உங்கள் ஆசை ஒரு நாள் நிச்சயம் நிறைவேறும்" என்ற இஸ்மாயில் அத்துடன் அந்தப் பேச்சை விடுத்து பிஸினெஸ் பேசத் தொடங்கினான். "இந்த முறை இரண்டு பெட்டிகள்தான் கிடைத்தது முபாரக்."

"இத்தனை சிரமம் எடுத்து வருகிறோம். எப்படி இரண்டு பெட்டிகளுக்காக வர முடியும்? அலிகாரிடம் சொல். அடுத்த முறை கூடுதல் பெட்டிகள் வேண்டும்."

"இதற்கே மிகுந்த சிரமமாகி விட்டது முபாரக்ஜி. இப்போதெல்லாம் மும்பையில் கெடுபிடி அதிகம்."

"கெடுபிடியா? இப்போது வருகிற வழியில் நாங்கள் எந்த செக்கிங்கையும் சந்திக்கவில்லையே!" என்றான் முபாரக் ஏளனத்துடன். போதை பொருட்களும், பணமும் பரஸ்பரம் கைமாறின. பெட்டிகளைத் திறந்து சரி பார்த்த பின்னர் இருவரும் எதிர் எதிர் திசையில் கிளம்பினார்கள்.

இஸ்மாயிலின் படகு சிறிது தூரம் சென்றதும் கடற்படையின் ரோந்து படகு கண்ணில் பட்டது. இஸ்மாயிலும் படகோட்டியும் விளக்கை அணைத்து விட்டுப் படகினுள் கவிழ்ந்து படுத்துக் கொண்டனர்.

ரோந்து படகு அவர்களைத் தாண்டிப் போனதும் படகோட்டி எழுந்து சத்தமின்றி துடுப்பு வலிக்கத் தொடங்கினான். கரையை நெருங்க நெருங்க காற்றின் வேகம் அதிகரித்து சுழன்று அடித்தது. ''புயல் ஆரம்பிக்கும் போலிருக்கிறது'' என்றான் படகோட்டி.

இஸ்மாயில் பெட்டிகளில் இருந்த பணத்தை பிளாஸ்டிக் பையில் சுற்றி அப்படியே தன் உடலின் மீது வைத்து பெல்ட்டால் இறுகக் கட்டினான். அதற்கு மேல் பனியன் அணிந்து, லுங்கியும் சட்டையும் அணிந்தான். சிறிது நேரத்தில் மழை சடசடவென தூறத் தொடங்கியது. படகோட்டி தன் முழுத்திறமையையும் காட்டி படகைத் திருப்ப முயற்சி செய்து கொண்டிருந்தான். மழையிலும், காற்றின் வேகத்திலும் தள்ளாடிக் கொண்டிருந்த படகு உயரமாக எழுந்த அலையின் வேகத்தில் தடாலெனக் கவிழ்ந்தது. இதை எதிர்பார்த்துக் காத்திருந்த இஸ்மாயில் சிறிதும் தாமதிக்காமல் நீந்தத் தொடங்கினான்.

மழையிலும், காற்றிலும் போராடி கை ஓயத் தொடங்கும்போது கரை கண்ணுக்குத் தென்பட்டது. விடியலின் ரேகைகள் தெரியத் தொடங்கும்போது மழையும் காற்றும் ஓய்ந்தது. சோர்ந்து போன கைகால்களை சிரமத்துடன் அசைத்துக் கரையைத் தொட்டு இஸ்மாயில் மணலில் விழுந்தான். தன் ஆர்ப்பாட்டத்தை எல்லாம் இரவே முடித்துக் கொண்டு சாதுவான அலைகள் கரைக்கும் நீருக்குமாய் அவனை உருட்டி விளையாடின. எழ முடியாமல் கிடந்த அரை மணி நேரத்திற்குப் பிறகு



அவன் அருகே காலடி ஓசைகள் கேட்டன. மீன் பிடிக்கக் கிளம்பியவர்கள் அவனை புரட்டிப் பார்த்தனர்.

''நம்ம ஆளாத் தெரியலையே?''

''எங்கிருந்து வந்திருப்பான்? இந்த ஊரா, வெளியூர்காரனா?''

தங்களுக்குள் பேசியபடி இஸ்மாயிலின் கன்னத்தைத் தட்டி, வயிற்றை அமுக்கி முதல் உதவி செய்ய முயன்றார்கள்.

''தம்பி... தம்பி... நீ இங்கேயா இருக்கிறாய்?'' கும்பலிலிருந்து திடீரென்று ஒரு அழுகைக் குரல் கேட்டது. முப்பது வயது மதிக்கத்தக்க ஒருவன் ஓடி வந்து இஸ்மாயிலை கட்டிக் கொண்டான்.

''இவன் யார்? உனக்கு உறவா?'' விசாரித்தவர்களிடம் கண்களை துடைத்தபடி சொன்னான். ''என் தம்பிதான் காதலிச்ச பெண்ணை வீட்ல ஒத்துக்கலன்னு இப்படிக் கடல்ல வந்து விழுந்துட்டான்.''

''அடப்பாவமே! பையன் விரும்பிய பெண்ணையே கட்டி வைக்க வேண்டியதுதானே! இவ்வளவு தூரம் விட்டுட்டிங்களே! நல்ல காலம் பையன் பிழைச்சான். பத்திரமாய் கூட்டிட்டுப் போய் அந்தப் பெண்ணையே கல்யாணம் பண்ணி வை.''

அறிவுரை கூறிவிட்டு அந்த மீனவர்கள் கலைந்து போக, அரை மயக்கத்திலிருந்த இஸ்மாயிலை எழுப்பி நிறுத்தினான் அவன். தோள்களை அணைத்து அவனை நடக்கச் செய்தவன் கும்பலை விட்டு விலகி சிறிது தூரம் வந்ததும் ''பொருள் பத்திரமா இருக்கா?'' என்றான் இஸ்மாயிலிடம்.

''இடுப்பில்'' என்றான் இஸ்மாயில்.

நிற்காமல் நடந்தபடியே இஸ்மாயிலின் பெல்ட்டைத் திறந்து பிளாஸ்டிக் உறையை எடுத்தவன், கண் மூடித் திறப்பதற்குள் தன் சட்டைக்குள் பத்திரப்படுத்தினான். பின் ஒருவருக்கொருவர் திரும்பியும் பார்க்காமல் இடதும் வலதுமாய் பிரிந்து போனார்கள்.

சரியாக ஒரு மணி நேரம் கழித்து அந்தக் கடற்கரை அருகே போலீஸ் ஜீப் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய காவலர்கள் கரை பக்கமாய் போய் சில மீனவர்களை அழைத்து வந்தனர். ஜீப்பின் முன்புறம் அமர்ந்திருந்த அந்தத் தலைமை அதிகாரி கீழே இறங்கினார். சிவந்த நிறமும், உயரமுமா ஆஜானுபாகுவாய் இருந்த அவர் தோள்பட்டையில் வரிசையாய் ஜொலித்த ஸ்டார்கள் அவர் பதவியை பறையறிவிக்க, பேட்சிலிருந்த பிளாஸ்டிக் எழுத்துகள் அவர் எம்.சர்மா, அஸிஸ்டன்ட் கமிஷனர் என்றன. தன் முன்னால் பணிவுடன் நின்றிருந்தவர்களிடம் சர்மா கேட்டார். ''இன்று காலையில் இங்கு படகு எதாவது கரை ஒதுங்கியதா? பழக்கமற்ற ஆட்களின் நடமாட்டம் தெரிந்ததா?''

''அப்படி எதுவும் இல்லை சார்'' என அவர்கள் தலையசைக்க, ஒரு பெண் சொன்னாள். ''படகு எதுவும் பார்க்கவில்லை சார். தற்கொலைக்கு முயற்சி செய்து பிழைத்துக் கொண்ட ஒருவன் இங்கே கரை ஒதுங்கினான். கடைசியில் அவன் அண்ணன் வந்து அழைத்துப் போனான்.''

''தற்கொலைக்கு முயற்சித்தானா? அவனை யார் காப்பாற்றியது?''

''யாரும் காப்பாற்றவில்லை சார்.''

''கடலில் விழுந்தவன் யாரும் காப்பாற்றாமல் எப்படி உயிரோடு கரை ஒதுங்கினான்?''



அந்தக் கேள்வியை எதிர்பார்க்காமல் அவர்கள் விழிக்க, அவன் இந்த இடத்தில்தான் கரை ஒதுங்குவான் என்று அவன் அண்ணனுக்கு எப்படித் தெரியும்? அதுவும் அவன் விழுந்து கிடந்த சிறிது நேரத்திலேயே சரியாக எப்படி அங்கு வந்தான்?''

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு பதில் பேச முடியாமல் இருக்க, சர்மா மீண்டும் கேட்டார். ''அவர்கள் இருவரும் எப்படி இருந்தார்கள்? பெயர் சொல்லிக் கூப்பிட்டுக் கொண்டார்களா?''

''இல்லை. பெயர் எதுவும் சொல்லவில்லை'' என்றவர்கள் இஸ்மாயில் மற்றும் அவனை அழைத்துப் போனவனின் அங்க அடையாளங்களை விவரித்தார்கள்.

''நாங்கள் முன்பே எச்சரித்தபடி விழிப்போடு இருங்கள். புதிய ஆட்களைப் பார்த்தால் எங்களுக்குத் தகவல் தெரிவிக்க தயங்க வேண்டாம். உங்கள் தகவலுக்கு தகுந்த வெகுமதி தரப்படும்.''

''சார், நாங்கள் இந்நாட்டு குடிமக்கள்தான். நாட்டை பாதுகாக்கிற பொறுப்பு எங்களுக்கும் இருக்கிறது. எங்களுக்கு தெரியும் தகவல்களை உடனே உங்களுக்குச் சொல்லுவோம்'' என்றான் மீனவர்களில் இளையவனாக இந்த ஒருவன்.

''வெரி குட்'' என அவனைத் தட்டிக் கொடுத்த சர்மா ''இவர்கள் சொன்ன அடையாளங்களை வைத்து கம்ப்யூட்டரில் படம் வரைந்து நம்மிடம் இருக்கும் குற்றவாளிகளின் படத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கச் சொல்லுங்கள்'' என கான்ஸ்டபிள்களுடன் பேசியபடியே ஜீப்பில் ஏறி அமர்ந்தார். அதே நேரம் அவர் செல்போன் சிணுங்க, போனை எடுத்து ''ஹலோ கிரண்'' என்றார்.

சக்தி நிவாஸின் நுழைவாயில் அருகே அன்று வழக்கத்தை விட நோயாளிகள் கூட்டம் குறைவாகவே இருந்தது. பண்டிகையை வரவேற்கிற மூடில் இருந்த மக்கள் தற்காலிகமாக தங்கள் உடல் உபாதைகளை மறந்திருந்தனர். ஜோஷிதாவுக்கு அன்று வேலை அதிகம் இல்லாததால் கரும்பு ஜூஸ் குடித்தபடி சோம்நாத்ஜியிடம் அரட்டை அடித்துக் கொண்டிருந்தாள். கங்காவின் பெண் லதிகா சல்வார் கமீஸின் துப்பட்டாவை விரல்களால் சுருட்டியபடி வீட்டிற்கும் வாயிலுக்குமாய் அலைந்து கொண்டிருந்தாள். அணிந்திருந்த இறுக்கமான டாப்ஸின் கழுத்து அபாயகரமாய் கீழே இறங்கியிருந்தது. துப்பட்டா மறைக்க வேண்டிய இடத்தைப் பற்றி கவலையில்லாமல், அவள் கைகளில் பறந்து கொண்டிருந்தது. ஸ்லீவ்லெஸ் டாப்சிலும், முட்டி தெரியும் கவுனிலும் கூட பாந்தமாய் தெரியும் லண்டன் தோழிகளின் நினைவு வந்தது ஜோஷிதாவுக்கு. கோதுமை நிற முகத்தில் பளீரென்ற சிவப்பு லிப்ஸ்டிக் மின்ன வெளியே செல்லத் தயாரான இந்தப் பெண் ஏன் இத்தனை நேரம் கிளம்பாமல் இங்கேயே நிற்கிறாள், என்ற கேள்வி எழுந்தது ஜோஷிதாவுக்கு. சில நிமிடங்களில் அதற்கு பதில் சொல்வது போல் கிரண் உள்ளே நுழைந்தான். லதிகா ஆவலுடன் அவன் பார்வையில் படும் இடத்தில் வந்து நின்றாள். கிரணோ அவளைக் கவனிக்காதவனாய் தன் வேக நடையுடன் அவளைத் தாண்டிக் கொண்டே செல்ல, சோம்நாத்ஜி கிரணைக் கூப்பிட்டார்.

''உன்னைப் பார்க்கவே முடிவதில்லையே கிரண். என்ன விஷயம்?'' என்றார் உரிமையுடன்.

''விஷயம் எதுவும் இல்லை அங்கிள். வேலை அதிகம்'' என்றான் கிரண்.



''இந்த வயதில் இப்படி வேலை பார்ப்பது உடம்புக்கும் மனசுக்கும் நல்லதில்லை மகனே. இப்போது உனக்கு பார்க்கவும் பழகவும் நிறைய விஷயங்கள் இருக்கின்றன. அதைச் செய் முதலில்.''

''அங்கிள் நீங்கள் பேசுவது எதுவுமே எனக்குப் புரியவில்லை'' என்றான் கிரண் பொறுமையிழந்து.

''நான் பேசினால் புரியாதுதான். ஜோஷிதா நீயாவது சொல் புரிகிறதா என்று பார்ப்போம்'' என்றார் சோம்நாத்ஜி.

''நான் என்ன சொல்வது?'' என்றாள் ஜோஷிதா திகைப்புடன்.

சோம்நாத்ஜி சிரித்தார். ''இன்னும் எத்தனை நாள் இந்த கண்ணாமூச்சி விளையாடுவீர்கள்? சீக்கிரம் கண்களைத் திறந்து ஒருவரை ஒருவர் கண்டு பிடியுங்கள்.''

கிரண் பதில் சொல்ல முடியாமல் ஜோஷிதாவைப் பார்க்க ஜோஷிதா லதிகாவைப் பார்க்க, லதிகா கிரணையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கங்கா பூஜை கூடையுடன் வீட்டிற்குள்ளேயிருந்து வெளியே வந்தாள். அம்மா வருவதைப் பார்த்ததும் லதிகா தன்னை சரிப்படுத்திக் கொண்டு பதவிசாக நின்றாள். தலையிலிருந்து உடல் முழுவதும் மூடிய துப்பட்டாவும், பணிவான புன்னகையுமாய் நின்றிருந்த மகளை கங்கா பெருமையுடன் பார்த்தாள். சோம்நாத்ஜியுடன் அமர்ந்திருந்த இருவரையும் ஒரு பார்வை பார்த்தவள், ''என்ன ஜி, சாவகாசமாய் உட்கார்ந்திருக்கீங்க?'' என்றாள் அவரிடம்.

''ஆமாம் கங்கா. இந்த வயதில் நான் வேறு என்ன செய்ய முடியும் சொல்!''

''அதுக்காக எப்பவும் பிஸியா இருக்கவங்களை தொல்லை பண்ணணுமா?''

சோம்நாத்ஜியை முந்திக் கொண்டு கிரண் பதில் அளித்தான். ''ஜி எனக்கு அப்பா மாதிரி. அவருடன் செலவழிக்க நேரம் இல்லையே என்ற வருத்தம்தான் எனக்கு.''

''இதற்காக ஏன் வருந்த வேண்டும். நம்ம லதிகா வீட்டில்தானே இருக்கிறாள். தினமும் இங்கே வந்து பேசிக் கொண்டிருக்க சொல்கிறேன்'' என்றாள் கங்கா.

''வேண்டாம் கங்கா'' என்றார் சோம்நாத்ஜி அவசரமாக. ''எனக்கு இப்படி வந்து உட்கார்ந்தாலே பொழுது போய் விடும். வயசு பெண்ணை எதற்கு அலைய விடுகிறாய்?''

''அதுவும் சரிதான்'' என்றாள் கங்கா. ''என் பெண் அப்பாவி. கபடு சூது தெரியாது. வந்த இடத்தில் வசதியாக உட்கார்ந்து கொள்ளும் சாமர்த்தியம் அவளுக்கு கொஞ்சமும் கிடையாது'' என்றாள் ஜோஷிதாவைப் பார்த்தபடி.

கிரண் சூடாகப் பேச வாயைத் திறப்பதற்குள் சோம்நாத்ஜி சொன்னார்.

''நீ கோவிலுக்குப் போகிறாய் போலிருக்கிறதே! மழை வரும் போலிருக்கிறது. இன்று கோவிலில் கூட்டமும் அதிகம் இருக்கும். சீக்கிரம் போய் வா'' என்றார் அவளிடம்.

அதற்கு மேல் அங்கு நிற்க வழியின்றி கங்கா மகளுடன் கிளம்பிப் போனதும் ''அந்தம்மா எப்படிப் பேசுகிறார்கள் பார்த்தீர்களா ஜி?'' என்றான் கிரண் சோம்நாத்ஜியிடம்.

''கங்காவின் வாய் மும்பை முழுக்க பிரபலம். அவள் பேசும் வம்புகளை அவளே கூட நம்ப மாட்டாள். எனவே நாம் இதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை'' என்றார் சோம்நாத்ஜி.

''அவர்கள் பேசியதில் தவறு என்ன இருக்கிறது அங்கிள்? சம்பந்தமில்லாத இடத்தில் வந்து மாதக் கணக்காக



தங்கியிருந்தால் எல்லோரும் பேசத்தான் செய்வார்கள்'' என்றாள் அதுவரை பேசாமலிருந்த ஜோஷிதா.

''அதற்காக?'' என்றான் கிரண் அவளையே பார்த்து.

''என்னை என் ஊருக்கு அனுப்பி வையுங்கள். எனக்கு என் பெற்றோரையும் பார்க்க வேண்டும் போலிருக்கிறது'' என்றாள் ஜோஷிதா கரகரத்த குரலில்.

''நேற்று சர்மா சாரிடம் உன் விஷயம் பேசி விட்டேன் ஜோஷிதா. விரைவில் நீ கிளம்ப ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்'' என்ற கிரண் இருவரிடமும் விடை பெற்று அங்கிருந்து நகர்ந்தான்.

கிரண் போன பிறகு சில நிமிட மௌனத்திற்குப் பிறகு சோம்நாத்ஜி சொன்னார். ''சற்று முன் கிரண் என் அப்பா மாதிரி என்று என்னைப் பற்றிச் சொன்னது பொய்யில்லை ஜோஷிதா. என் மனைவி நோய்வாய்பட்ட போது நானே ஆச்சரியப்படும் வகையில் எங்களுக்கு உதவி செய்தான். உன்னையும் அவனையும் பற்றி நான் நிறைய ஆசைகள் வைத்திருக்கிறேன். ஆனால் உன்னை உன் நாட்டிற்குப் போக வேண்டாம் என்று சொல்லும் உரிமை எனக்கில்லை. பிரிவு அன்பை வளர்க்கும் என்பார்கள். ஆனால் வெகு நாள் பிரிந்திருந்தால் அந்த அன்புக்கே அர்த்தம் இல்லாமல் போய்விடும். உனக்கு சொல்ல வேண்டியதில்லை ஜோஷிதா. நீயே நல்ல முடிவாய் எடு'' என்றார் சோம்நாத்ஜி.

''முடிவு என் ஒருத்தி கையில் மட்டும் இல்லை ஜி'' என்றாள் ஜோஷிதா.

இஸ்மாயில் கண்களைத் திறக்க முடியாமல் படுத்திருந்தான். உடம்பெங்கும் விட்டுப் போவது போல் வலித்தது. தலை பாரமாய் கனத்தது.

''இஸ்மாயில் இந்த பன்னையாவது சாப்பிடு'' என்றாள் அவன் அம்மா கவலையுடன். டீயில் ஊறிய பன் அப்படியே தொடப்படாமல் கிடந்தது. ''இப்ப ஜுரம் குறைந்திருக்கிறதா?'' என்றாள் பாத்திமா அம்மாவிடம்.

''கொஞ்சம் கூட குறையல. புரண்டு புரண்டு வலியில முனகறான். யா, அல்லா நல்லா இருந்த புள்ளை இப்படி படுத்துட்டானே!'' என்றாள் அவன் அம்மா மகளிடம்.

''நம்முடைய கை வைத்தியமும், கடையில் வாங்கித் தந்த மருந்துகளும் பலிக்கவில்லை. டாக்டரிடம்தான் போக வேண்டும். என் கணவர் கூட ஊரில் இல்லை. கை குழந்தையுடன் நாம் இருவரும் என்ன செய்வோம்?'' என்றாள் பாத்திமா துக்கத்துடன்.

''எங்காவது பயந்திருப்பான். தர்காவில் மந்திரித்து கயிறு வாங்கி வரலாம்'' என்றாள் அவள் அம்மா.

''வாழ்க்கையில் மிக பயங்கரமான நிகழ்வுகளை எல்லாம் இந்த குடும்பம் சந்தித்திருக்கிறது. அதை விட பயப்படும்படியாய் இனி என்ன இருக்கிறது?'' என்றாள் பாத்திமா கண்க்ளில் நீர் வழிய.

இருவரும் கவலையுடன் ஒத்தடம் கொடுத்தபடி இஸ்மாயிலின் அருகே அமர்ந்திருந்தனர். நேரம் ஆக ஆக இஸ்மாயிலின் உடல் உதற ஆரம்பித்ததும் அவன் அம்மா பயந்து போனாள். இடுப்பில் குழந்தையுடன் அம்மாவும் தானுமாக இஸ்மாயிலை மருத்துவமனைக்கு அழைத்துப் போக முடியாது என்கையில் இப்போது என்ன செய்வது என்று யோசித்த பாத்திமாவுக்கு சட்டென ஜோஷிதாவின் நினைவு வந்தது.

பாத்திமா போன் செய்த முப்பது நிமிடங்களில் ஜோஷிதா கபூருடன். இஸ்மாயிலின் வீட்டிற்கு வந்தாள்.



இஸ்மாயிலைப் பார்த்ததும் அங்கேயே சிகிச்சை அளிக்க முடியாது என்றுணர்ந்தவளாக கபூர், மற்றும் அவன் அழைத்து வந்த இரண்டு ஆட்கள் உதவியுடன் இஸ்மாயிலை தன் டிஸ்பென்ஸரியில் அட்மிட் செய்தாள்.

''ஜுரம் அதிகமாகத்தான் இருக்கிறது. அத்துடன் தோள்பட்டையில் நன்றாக அடிபட்டிருக்கிறது. எக்ஸ்ரே எடுக்க வேண்டும். கைக்குழந்தையுடன் நீங்கள் இங்கே அலைய வேண்டியதில்லை. நான் பார்த்துக் கொள்கிறேன். சோம்நாத் அங்கிளும், கபூரும் கூட இருக்கிறார்கள். நீங்கள் இருவரும் வீட்டிற்குக் கிளம்புங்கள்'' என்றாள் இஸ்மாயிலின் அம்மாவிடம்.

பாத்திமாவை தனியே வீட்டில் விட மனமில்லாமல், இஸ்மாயிலை விட்டுப் போகவும் பிடிக்காமல் அவன் அம்மா அழுதபடியே வீட்டிற்குப் போய் சேர்ந்தாள்.

இஸ்மாயிலுக்கு இன்ஜெக்ஷனும், சலைனும் ஏற்றி விட்டு டெம்பரேச்சர் செக் பண்ணியபடி ஜோஷிதா அவன் அருகில் அமர்ந்திருந்தாள். ஊசி போட்டதும் ஜுரம் குறைவதும் அடுத்த ஒரு மணி நேரத்தில் அதிகமாவதும் இருந்தது. ''இஸ்மாயிலுக்கு எப்படியிருக்கு பேட்டீ?'' என்றார் சோம்நாத்ஜி அவளிடம்.

''ஜுரம் அதிகமாகத்தான் இருக்கிறது அங்கிள். இப்படியே இருந்தால் பிட்ஸ் வந்துவிடும்'' என்ற ஜோஷிதா அவனது லேப் டெஸ்ட்டுக்கு ஏற்பாடு செய்தாள். ''ஜுரம் சற்று குறைந்த பிறகுதான் எக்ஸ்ரேக்கு அழைத்துப் போக முடியும்'' என்ற ஜோஷிதாவிடம் ''இவன் அம்மா ஒரு இதய நோயாளி. சலீமும் ஊரில் இல்லை. நல்ல வேளையாக இவனை இங்கே அழைத்து வந்து விட்டாய் பேட்டீ'' என்றார் சோம்நாத்ஜி.

இஸ்மாயிலுக்கு இரவு முழுவதும் காய்ச்சல் குறையவே இல்லை. ஜோஷிதா சொன்னதன் பேரில் கபூர் டவலை நீரில் நனைத்து அடிக்கடி அவனுக்கு போர்த்தி விட்டான். இஸ்மாயில் வலியில் துடித்தான். காய்ச்சலில் திணறினான். தாங்க முடியாமல் வாய்விட்டுக் கதறினான். சோம்நாத்ஜி அவ்வப்போது படுக்கையில் சாய்வதும், எழுந்து வந்து இஸ்மாயிலை பார்ப்பதுமாய் இருக்க, ஜோஷிதாவும் கபூரும் உணவைக் கூட மறந்து போனவர்களாய் இரவு முழுவதும் அவன் அருகிலேயே அமர்ந்திருந்தனர்.

விடியற்காலையில் தாராபாய் கொண்டு வந்து கொடுத்த சுக்கு காபியை பருகிக் கொண்டிருக்கையில் வீடு திரும்பிய கிரண் அங்கிருந்தவர்களையும் படுத்திருந்தவனையும் பார்த்து ''இஸ்மாயிலுக்கு என்னாச்சு?'' என்றான் வியப்புடன்.

கபூர் நடந்ததை அவனிடம் சொல்ல, பேச்சுக் குரல் கேட்டு முகத்தைச் சுருக்கியபடி மெதுவாய் திரும்ப முயற்சித்த இஸ்மாயில் சுரீலென்ற வலியில் கத்தினான்.

''தோள்பட்டையில் ப்ராக்சர் ஆகியிருக்கும் போலிருக்கிறது. இங்கே அருகே எக்ஸ்ரே எடுக்குமிடம் எதாவது இருக்கிறதா?'' என்றாள் ஜோஷிதா.

''இரண்டு தெரு தள்ளிப் போனதும் ஒரு லேப் இருக்கிறது'' என்ற கிரண் இஸ்மாயிலுக்கு எக்ஸ்ரே எடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தான். அன்றைய காலை உணவை தாராபாய் எல்லோருக்கும் தயார் செய்து தந்தாள். மாலையில் டெஸ்ட் ரிப்போர்ட்டுகள் வந்தது. இஸ்மாயிலுக்கு ஜோஷிதா சொன்னபடி எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அதற்கு டிராக்ஷன், போட்டு மருந்து



கொடுத்து படுக்க வைக்கையில் ''என்னால் உங்களுக்கெல்லாம் சிரமம்'' என்றான் இஸ்மாயில் சங்கடத்துடன்.

''சின்ன வயசிலிருந்து பழகறோம். இப்படி பிரிச்சிப் பேசலாமா?'' கபூர் உரிமையுடன் அதட்டினான்.

சோம்நாத்ஜியின் வீட்டில் தனி அறை ஒன்றில் இஸ்மாயிலை படுக்க வைத்திருந்தனர். நான்கு நாட்கள் வலியும், ஜுரமும் குளிருமாக இரவு பகலாய் அவஸ்தை பட்ட பின் இஸ்மாயில் ஐந்தாம் நாளிலிருந்து சற்று தேறத் தொடங்கினான். நாலு நாளாய் அவன் கண் விழிக்கும் நேரமெல்லாம் ஜோஷிதாவோ, கபூரோ அவன் அருகில் இருந்தனர். தாராபாய் அவன் வயிறு வாடாமல் பார்த்துக் கொண்டாள். இரண்டொரு நாளில் சலீம் ஊரிலிருந்து திரும்பி வந்து வீட்டிற்கு அழைத்துப் போகிறேன் என்றபோது ''இது வீடில்லையா சலீம்? எங்கள் மீது உனக்கு அவ்வளவு அவநம்பிக்கையா?'' என்றார் சோம்நாத்ஜி.

''உங்களைச் சிரமப்படுத்தக் கூடாது என்றுதான் சொன்னேன்'' என்ற சலீம் மேற்கொண்டு எதுவும் பேசாமல் இஸ்மாயிலின் அருகில் போய் அமர்ந்தான்.

பான்பராக்கை மென்று கொண்டிருந்த அலிகார் புதிதாக வெள்ளையடிக்கப்பட்டிருந்த அந்த சுவரில் எச்சிலைத் துப்பிவிட்டு, ''இஸ்மாயில் எங்கேடா போய் தொலைந்தான்?'' என்றான் எரிச்சலுடன்.

''அவனுக்கு அடிபட்டிருக்கு பாய்'' என்றான் கரீம்.

''யார் அடித்தது?''

''யாரும் இல்லை. அன்றைக்கு சரக்கு மாத்த போன போது படகு கவிழ்ந்து தூக்கி எறியப்பட்டதில் கடல் பாறையிலோ, கரை ஓர கற்கள் மரம் எதிலாவது

மோதியிருக்க வேண்டும். வலது தோள்பட்டையில் எலும்பு முறிவாம். படுக்கையில் கிடக்கிறான்'' என்றான் கரீம்.

''த்தூ... இதை சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை? கடலுக்கு அடியிலும், வானத்திற்கு மேலும், பூமிக்குக் கீழும் போகத் தெரியாதவன் இயக்கத்தில் இருக்க வேண்டியதில்லை. நீந்தி கரை சேர முடியாமல் கையை முறித்துக் கொண்டவன் சுற்றி நின்று தாக்கும் எதிரிகளிடம் எப்படி தாக்குப் பிடிப்பான்?'' என்றான் கோபத்துடன்.

''இஸ்மாயில் அதிக அனுபவம் இல்லாததால் தடுமாறி விட்டான். அப்படியும் சரக்கை பத்திரமாக எடுத்து வந்திருக்கிறான் என்பதை நினைத்துப் பாருங்கள்'' என்றான் கரீம்.

''புதிதாகத் தொழிலுக்கு வந்தவன். எதற்கும் இஸ்மாயில் மீது ஒரு கண் வைத்திருங்கள்'' என்ற அலிகார் தன் அடுத்த நடவடிக்கையை விளக்கத் தொடங்கினான்.

கட்டிலில் படுத்திருந்த இஸ்மாயிலுக்கு உடல் வலித்தது. வாய் கசந்து உமிழ்நீர் சுரந்தது. திரும்ப முடியாமல் தோள்பட்டை கட்டு வலித்தது. எழ முயற்சித்த போது தலை கிர் என்று சுற்றியது. வாயிலிருந்து உமிழ் நீர் எச்சிலுடன் கலந்து ஒழுகியது. இஸ்மாயில் வேதனையுடன் முகம் சுளித்தபோது யாரோ அவன் வாயைப் பஞ்சினால் மென்மையாகத் துடைத்தார்கள். அத்துடன் அவனுக்கு முன் ஒரு பேசினும் நீட்டப்பட்டிருக்க இஸ்மாயில் பேசினில் வாயைச் சுத்தம் செய்தான்.

''ஆல்ரைட் அப்படியே படுத்திரு இஸ்மாயில்'' என்ற ஜோஷிதாவின் குரல் கேட்டதும் அவளையும், அவள்



கையிலிருந்த பேசினையும் பார்த்த இஸ்மாயிலுக்கு தூக்கி வாரிப் போட்டது.

''என்னை... என்னை மன்னித்து விடுங்கள். என்னால் வேகமாக எழுந்திருக்க முடியவில்லை'' என்றான் நாக்குழற.

''எனக்குத் தெரியும். உடல்நிலை சரியில்லாத போது எப்படி வேகமாகச் செயல்பட முடியும்?'' என்றாள் ஜோஷிதா.

''அதற்காக நீங்கள் இந்த வேலையைச் செய்ய வேண்டியதில்லை'' என்றான் இஸ்மாயில் பதைப்புடன்.

''இங்கு நோயாளிகளை அட்மிட் செய்வதில்லை என்பதால் உதவிக்கு நர்ஸ் யாரும் இல்லை. தாராபாயும் கோவிலுக்குப் போயிருக்கிறாள்.''

''இருந்தாலும்'' என பேச முற்பட்ட இஸ்மாயிலிடம் ''அதிகம் பேசினால் களைத்துப் போவாய். உனக்கு முழு ஓய்வு வேண்டும். அதனால்தான் உன் வீட்டினரைக் கூட தினமும் ஒருமுறை மட்டும் வந்து பார்த்து விட்டுப் போகச் சொல்லியிருக்கிறேன்.''

இஸ்மாயிலுக்கு உறக்கம் வரவில்லை எனினும் ஜோஷிதாவின் சொல்படி கண்களை மூடினான். மூடிய கண்களுக்குள் அவன் பார்த்துப் பழகிய அத்தனை பேரும் வலம் வந்தார்கள். அவன் இங்கு வந்து பத்து நாட்கள் ஆகிறது. சொந்த வீட்டில் இருப்பது போல் இருக்கிறது. எல்லோரும் நன்றாக கவனித்துக் கொண்டார்கள். ஜோஷிதாவைப் போல் நர்ஸ் வேலையும், ஆயா வேலையும் சேர்த்து பார்க்கும் டாக்டர் வேறு எங்காவது இருக்கிறார்களா என்று தெரியவில்லை. வெளி தேசத்திலிருந்து வருகிறவர்கள்தான் எப்போதும் சேவை செய்கிறார்கள்.

மதர் தெரஸா மாதிரி, ருக்மணி அருண்டேல், அன்னி பெசன்ட் மாதிரி. உள்ளூரில் சகோதரர்களாய் பழகுபவர்கள் அல்ப காரணங்களுக்கு எதிரியாகி விடுகிறார்கள். ஜாதி, மதம் என்ற சொற்கள் சராசரி மனிதனை வெறியூட்டுகின்றன. அந்த வெறி தரும் போதையில் அவர்கள் செய்வது எதுவும் தவறில்லை. இஸ்மாயிலின் கண் முன் தீ எரிந்தது. ''அண்ணா... அப்பா... காப்பாற்று... ஐயோ எரிகிறது.'' என்ற கூக்குரல்கள் காதைத் துளைத்தன. சுற்றி நின்று வேடிக்கை பார்த்தபடி ஒரு கும்பல் வெறி சிரிப்பு சிரித்தது. இஸ்மாயில் கத்துகிறான். ''விடாதீர்கள்.. திருப்பி அடியுங்கள். கெஞ்சாதே.. கதறாதே.. தாக்கு.. திருப்பித் தாக்கு.. கண்ணில் படுகிற வரை எல்லாம் அடி.. கொல் பயந்து அலற வை'' இஸ்மாயிலுக்கு நரம்புகள் துடித்து நின்றன. உடல் நடுங்கியது. தலை ஓரிடத்தில் நிற்காமல் ஆடியது. அடிபட்ட கை கட்டிலில் இடித்து சுரீலென்றது.

''அம்மா...'' என வாய்விட்டுக் கத்தியவனை யாரோ உலுக்கினார்கள். இஸ்மாயில் கண்களைத் திறந்தான். அவன் எதிரே நின்றிருந்த கிரண்,

''ஜுரம் கூட இல்லை போலிருக்கே! எதற்காக கத்தினாய்?'' என்றான் அவனிடம்.

இஸ்மாயில் ஒன்றுமில்லை என தலையசைக்க, கிரண் ஒரு சேரை இழுத்துப் போட்டு அவன் அருகில் அமர்ந்தான். இஸ்மாயில் துணுக்குற்றான். ''எப்படி அடிபட்டது? எங்கே போயிருந்தாய்?'' என எல்லோரையும் போலக் கேள்வி கேட்கத் தொடங்கி விடுவானோ என்று பயந்தபோது பெரிய டம்ளர் நிறைய ஆரஞ்சு ஜூஸுடன் கபூர் உள்ளே வந்தான்.



''மிச்சம் வைக்காமல் குடித்துவிட வேண்டும்'' என்றான் இஸ்மாயிலிடம்.

''ஏற்கனவே என்னால் உனக்கு கஷ்டம். அத்துடன் தினமும் சூப்பும் ஜூஸுமாக ஏன் செலவு செய்கிறாய்?'' என்றான் இஸ்மாயில் வருத்தத்துடன்.

அதெல்லாம் கவலையே படாதே. கவனித்துக் கொள்கிறது மட்டும்தான் என் வேலை. செலவெல்லாம் கிரண் சாருடையது'' என்றான் கபூர்.

சங்கடத்துடன் ஏதோ சொல்ல முற்பட்ட இஸ்மாயிலை கிரண் இடைமறித்தான். ''நாங்கள் புதியவர்கள் இல்லை இஸ்மாயில். அவசரத்திற்கும் ஆபத்திற்கும் உதவா விட்டால் நாம் மனிதர்களே இல்லை. அதனால் எதையும் யோசிக்காமல் விரைவாக குணமாக முயற்சி செய்.''

கிரண் பொதுவாக கபூருடன் சில நிமிடங்கள் பேசி விட்டு எழுந்து செல்ல இஸ்மாயில் தனக்குள் கேள்வி கேட்டான், ''மனிதர்கள் எல்லோரும் ஏன் ஒரே மாதிரி இருப்பதில்லை?''

''இவர் மிஸ்டர் நிதின் சர்மா. அசிஸ்டெண்ட் போலீஸ் கமிஷனர். இது மிஸ் ஜோஷிதா'' கிரண் இருவரையும் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தான்.

''உங்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். சந்தித்ததில் மிகவும் சந்தோஷம்'' என்றாள் ஜோஷிதா புன்னகையுடன்.

அந்த அழகான முகத்தையும், சிரிப்பையும் கவனித்த சர்மா சொன்னார்.

''ஆனால் எனக்கு சந்தோஷம் இல்லை ஜோஷிதா.''

''ஏன்?'' என்றாள் ஜோஷிதா திகைப்புடன்.

"உன்னால் கிரணின் வாழ்க்கை நல்லபடியாக செட்டில் ஆகப் போகிறது என்று எதிர்பார்த்தேன். நீ போய் விடப் போகிறாய் என்றதும் வருத்தமாக இருக்கிறது."

ஜோஷிதா திரும்பி கிரணைப் பார்த்தாள். இருவர் விழிகளும் ஒரு நொடி சந்தித்து மீண்டன. கிரணின் கண்களில் எந்த உணர்ச்சியும் தெரியாமலிருக்கவே ஜோஷிதா தன் சஞ்சலப்பட்ட மனதை அடக்கினாள்.

"யாருடைய வாழ்க்கையும் யாருடனும் முடிந்து விடுவதில்லை சார். மனிதர்கள் தனித்தன்மை வாய்ந்தவர்கள்" என்றாள் ஜோஷிதா.

"உண்மைதான். தனித்தன்மை வாய்ந்த இருவர் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு இணையும் போதுதான் நல்ல தாம்பத்யம் உருவாகிறது" என்றார் சர்மா இருவரையும் பார்த்து.

பதவிக்குரிய கம்பீரத்துடன் தன் தந்தை வயதிலிருந்த சர்மாவுடன் வாதிட மனமின்றி ஜோஷிதா அமைதியானாள். "சார், நாம் வந்த வேலையை கவனிப்போம்" என்றான் கிரண்.

"ஓ.கே." என்ற சர்மா அவளைப் பற்றிய விபரங்களை விசாரித்துவிட்டு சொன்னார். "உன்னுடைய ஹேன்ட் பேக் அன்றைய கலவரத்தில் யார் கையில் கிடைத்ததோ தெரியாது. வேலையாட்கள் யாராவது எடுத்திருந்தால் அதிலிருந்த பணத்தை எடுத்துக் கொண்டு பாஸ்போர்ட்டை அலட்சியமாக எங்காவது போட்டிருக்கலாம். அப்படியிருந்தால் புதிய பாஸ்போர்ட்டிற்கு விண்ணப்பிக்கலாம். அப்போதும் எப்படி தொலைந்தது? ஏன் இத்தனை நாளாய் கம்ப்ளைன்ட் தரவில்லை? என பல கேள்விகள் எழும். அதையும் கூட ஒரு வழியாய்



சமாளிக்கலாம். ஆனால் உன் பாஸ்போர்ட் காவல் துறையினர் கையில் கிடைத்திருந்தால் இரகசியமாக உன்னை பற்றிய விசாரணையில் இந்நேரம் இறங்கியிருப்பார்கள். இத்தனை நாளாய் யார் கண்ணிலும் படாமல் எங்கே மறைந்து போனாய் என்பது போன்ற கேள்விகளை சமாளித்தாக வேண்டும். கொஞ்சம் தாமதமாகலாம். ஆனால் உன்னை பத்திரமாய் ஊருக்கு அனுப்பி வைக்க வேண்டிய பொறுப்பு என்னுடையது" என்றார் சர்மா.

"தேங்க் யூ. ஆனால் அன்று கிரண் என்னை முரட்டுத்தனமாய் இழுத்துப் போயிருக்கா விட்டால் இத்தனை கேள்விகளுக்கும் அவசியமே இருந்திருக்காது" என்றாள் ஜோஷிதா குற்றம் சாட்டும் குரலில்.

"உண்மைதான். உணவு மேஜைக்கு அடியில் துளைக்கும் தோட்டாக்களுக்கு மத்தியில் விழுந்து கிடந்தவளை காப்பாற்றாமல் இருந்திருந்தால் இன்று கேள்வி கேட்க நீயும் இருந்திருக்க மாட்டாய்" என்றான் கிரண் கோபமாக.

"இன்னொரு விஷயம் நடந்திருந்தால் கூட இதற்கு அவசியம் ஏற்பட்டிருக்காது" என்றார் சர்மா குறுக்கிட்டு.

"என்ன விஷயம்?" என்றார்கள் இருவரும் ஒரே குரலில்.

"உங்கள் இருவருக்கும் இடையே தீவிரமான அன்பு ஏற்பட்டிருந்தால் கூட இந்த பாஸ்போர்ட்டை தேட வேண்டிய அவசியமே இல்லாமல் போயிருக்கும்" என்றார் சர்மா.

"மென்மையான மனசிருப்பவர்கள்தான் அன்பு செலுத்தவும், அதை பெறவும் முடியும். எப்போதும்

முரட்டுத்தனமும் முன் கோபமுமாய் இருப்பவர்கள் வெறுப்பைத் தவிர எதை சம்பாதிக்க முடியும்? ஆனால் என்னுடைய ஆச்சரியம் என்னவென்றால் உங்களைப் போல நேர்மையான போலீஸ் ஆபீசருக்கு கிரணைப் போன்ற நிழல் மனிதனிடம் என்ன நட்பிருக்க முடியும் என்பதுதான்'' என்றாள் ஜோஷிதா.

கிரண் சட்டென்று சர்மாவைப் பார்க்க, ஒரு பார்வை பரிமாற்றத்திற்கு பிறகு சர்மா சொன்னார், ''கிரண் அப்பா ஒரு போலீஸ் அதிகாரி என்பதால் வந்த நட்புதான் இது.''

''லாஜிக் கரெக்ட்டாகத்தான் இருக்கிறது'' என ஜோஷிதா தலையசைக்க, ''சர்மா, உங்களுக்கு குடிக்க என்ன வேண்டும்?'' என்றான் கிரண்.

''ஒரு லெமன் டீ கிடைக்குமா?''

''ஏன் கிடைக்காது? பேசிக் கொண்டிருங்கள் வருகிறேன்'' என கிரண் டீ தயாரிப்பில் இறங்கினான். திரும்பி அவனைப் பார்த்த சர்மாவின் கண்களில் கனிவு தெரிந்தது. ''கிரணைப் போன்ற ஆண்களைப் பார்ப்பது அபூர்வம் ஜோஷிதா. பெரிய மனோ உறுதியும், நேர்மையும் உடையவன்,'' என்றார் அவளிடம்.

''இரகசிய வேலைகளில் ஈடுபடுபவன் நேர்மையானவனா?'' என்றாள் ஜோஷிதா அவரிடம்.

''அவன் நேர்மையைப் பற்றி அவன் அனுமதி இல்லாமல் என்னால் சொல்ல முடியாது. ஆனால் நீ யாருமற்ற சூழலில் தனிமையில் அவனுடன் தங்கியிருந்தும் நீ நீயாகவே இருக்கிறாய் என்பதே அவன் நேர்மைக்கு சாட்சி.''

அவர் சொன்னது உண்மைதான் என்றாலும் அவளிடம் பேசுபவர்கள் எல்லோரும் சொல்லி வைத்தாற் போல் கிரணைப் புகழ்கிறார்கள்.



இவர்களுக்கெல்லாம் மனசுக்குள்ளேயே ஒரு அனுமானம் ஏற்பட்டுப் போயிருக்க வேண்டும், என்று நினைத்த ஜோஷிதாவுக்கு திடீரென்று தன் வாழ்க்கை மிகவும் சிக்கலாக போய்விட்டதாக தோன்றியது. லண்டனில் வசித்த இந்திய குடும்பங்களிலிருந்து பெண் கேட்ட போதும் தன் பெற்றோர் அவர்கள் விருப்பப்படி ஹரியை தேடிப் பிடித்தார்கள். கடைசியில் அவர்கள் விரும்பியபடி நடக்கவில்லை என்றாலும் தன் விருப்பமும் ஏன் நிறைவேறவில்லை? கிரணுக்கு ஏன் அவளை பிடிக்காமல் போக வேண்டும்? தன் அழகு, அந்தஸ்து, படிப்பு எல்லாவற்றையும் ஒரு நிமிஷம் மறந்து போய் ஜோஷிதா ஒரு சராசரி பெண்ணாய் மனம் குமைந்து போனாள்.



## 11

''தீதி சித்தி விநாயகர் கோவில் போகலாம் வருகிறீர்களா?'' என்றாள் தாராபாய்.

''தினமும்தான் கோவிலுக்குப் போகிறாய். இன்று ஞாயிற்றுக்கிழமை ஒரு நாளாவது அவருக்கு ஓய்வு கொடேன்'' என்றாள் ஜோஷிதா.

''இந்த ஒருநாளில் அவர் இத்தனை நாள் நான் வேண்டியதை மறந்து போய்விட்டால்?''

''அப்படி மறக்கிற கடவுள் எப்படி கொடுக்கிறவராக இருக்க முடியும்?''

''நிச்சயம் கொடுப்பார். ஒருநாள் பாருங்கள் உங்களுக்கும் எனக்கும் விரும்பியது கிடைக்கப் போகிறது.''

''நான் எதையும் வேண்டுதல் வைக்கவே இல்லை தாராபாய்.''

''தெரியும். அதனால்தான் உங்களுக்காக நான் வேண்டிக் கொண்டிருக்கிறேன்.''

''என்னவென்று?''

''ம்ஹூம். நிறைவேறிய பிறகு சொல்கிறேன்.''

தாராபாயின் குழந்தைத்தனமான பிடிவாதத்திற்கு சிரித்தபடியே ஜோஷிதா அவளுடன் கிளம்பினாள். அவள் வந்த புதிதில் கிரண் பணம் கொடுத்து தாராபாய் வாங்கி வந்த சிவப்பு நிற பாந்தினி சில்க் புடவையை உடுத்திக் கொண்டு வந்ததும், அவளைப் பார்த்த தாராபாயின் கண்கள் அகன்றன. ''இந்த புடவை உங்களுக்கு எத்தனை அழகா இருக்கு? எங்கண்ணே பட்டுடும் போலிருக்கு. வந்தவுடன் சுத்தி போடணும்?''

''ஆனால் எனக்கு கூச்சமா இருக்கு தாராபாய்.''

''புடவை கட்டறதுக்கு யாராவது கூச்சப்படுவார்களா? இதோ கிரண்ஜியையே கேட்போம்'' என நடைபாதையில் அப்போதுதான் வந்து கொண்டிருந்த கிரணை அழைத்தாள். ''இங்கே கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்கள். தீதி இன்று மிக அழகாக இல்லை?''

திரும்பிப் பார்த்த கிரணுக்கு ஜோஷிதாவை அடையாளம் கண்டு கொள்ள சிறிது நேரமாகியது. புடவையின் நிறம் அவள் சரும நிறத்தை பளீரென்று மின்ன வைக்க, நளினமும் குழைவுமாய் நின்றிருந்தவளை பார்த்தவனுக்கு பார்வையை விலக்கிக் கொள்ள முடியவில்லை.

கிரணின் வெட்கமற்ற பார்வையை உணர்ந்த கூச்சத்துடன் அங்கிருந்து நகர முற்பட்ட ஜோஷிதாவின் கைகளைப் பற்றி ''என்ன ஜி, நான் சொல்வது சரிதானே!'' என்றாள் தாராபாய் விடாமல்.



கிரணுக்கு அருகிலிருந்த பொருட்கள் அனைத்தும் மறைந்து போய் ஜோஷிதா மட்டுமே கண்ணுக்குத் தெரிந்தாள். அவள் அருகே செல்ல இரண்டடி எடுத்து வைத்தவன் மடாரென எங்கோ முட்டிக் கொண்டான். நெற்றி சுரீலென்றது. தேய்த்து விட்டபடி நிமிர்கையில் கலகலவென்ற சிரிப்புடன் லதிகா நின்றிருந்தாள்.

''பார்த்து வரக்கூடாதா?'' என்றாள் சிரிப்பு மாறாமல்.

இவள் மீதா முட்டிக் கொண்டோம் என்ற திகைப்புடன் ''ஸாரி, வெரி ஸாரி'' என்றான் கிரண்.

வழக்கம் போல் சல்வார் கமீஸின் துப்பட்டா நழுவியிருக்க, ''நெற்றி வீங்கி விட்டது போலிருக்கே!'' என சுவாதீனமாய் லதிகா அவன் நெற்றியை வருடினாள்.

''வெட்கம் கெட்டவள்'' தாராபாய் முணுமுணுத்தாள்.

''பெரிதாய் ஒன்றுமில்லை. நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான் கிரண் அவஸ்தையாக.

''ம்ஹூம். அப்படியே விட்டால் இரத்தம் கட்டிப் போகும். கொஞ்சம் மஞ்சளை அரைத்துப் போட்டால் சரியாகும். வாருங்கள் என்னுடன்'' என்றாள் அவன் கைப்பற்றி.

ஜோஷிதாவை பார்த்தபடியே கிரண் கைகளை விடுவித்துக் கொள்ள முயலவும் ''டாக்டரம்மா வைத்தியம் பாக்கலேன்னு நினைக்கிறீங்களா? அவங்க எங்கோ கிளம்பிட்ட மாதிரியிருக்கு. அதுவுமில்லாம இதற்கெல்லாம் அவங்களை எதுக்குத் தொந்தரவு செய்யணும்? கை வைத்தியம் எப்பவுமே ஆபத்தில்லாதது'' என்றாள் லதிகா.

அதற்குமேல் அங்கே நின்று வேடிக்கை பார்க்க விரும்பாமல் ''தாராபாய் வா போகலாம்'' என ஜோஷிதா

முன்னே நடந்தாள். ஜோஷிதாவின் ரவிக்கை வெளிப்படுத்திய முதுகின் செழுமையும், இடுப்பின் வளைவும் ஆளை அசரடிக்க, ''வெகு நேரம் வெளியே சுத்த வேண்டாம். சீக்கிரமாய் வந்து விடுங்கள்'' என்றான் கிரண்.

தாராபாய் சரியென தலையசைக்க, லதிகாவின் கைகளுக்குள் இருந்த அவன் விரல்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு ஜோஷிதா தாராபாயை தொடர்ந்தாள்.

''இஸ்மாயில், முழுதாய் குணமடைந்து விட்டாயா?'' என்றான் கரீம்.

''உன் எதிரில் முழுசாக நிற்கையில் என்ன சந்தேகம் உனக்கு?''

''பார்ப்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறாய். ஆனால்...''

''மனம் உடலை விட நன்றாக இருக்கிறது கரீம். இத்தனை நாட்கள் வெறுமனே படுத்திருந்து வீணடித்து விட்டேன். எதாவது வேலை வேண்டும்.''

''சரி வா, அலிகாரை போய் பார்க்கலாம்'' என்ற கரீம் குவாலிஸ் காரில் ஏறி அமர்ந்தான்.

''அலிகார் இப்போது எங்கேயிருக்கிறான்?'' கேட்டபடி இஸ்மாயில் அவன் அருகில் அமர்ந்தான்.

''தாராவி.''

மாஹிம் கடற்கரையில் நீண்டு விரிந்து கிடந்த, ஆசியாவிலேயே பெரிய குப்பமான தாராவியில் கரீம் வண்டியை நிறுத்தினான். சுமார் ஒரு மில்லியனுக்கு மேல் மக்கள் வசிக்கும் அந்த குப்பம் எப்போதும் போல் இஸ்மாயிலை திணற வைத்தது. கரீம் இறங்கி நடக்க, இஸ்மாயில் பின் தொடர்ந்தான். விநோத சத்தங்கள் காதைத் துளைத்தன. வீடு தவறாமல் டி.வி.யில் சினிமா பாடல்கள் அலறின. வீட்டு வாயிலில் சாக்கடை ஆறாக



ஓடியது. குழந்தைகள் எழுப்பும் கூக்குரல்கள், சின்னச் சின்ன சச்சரவுகள், பெரிய அடிதடி சண்டைகள். இடதும் வலதுமாய் இரண்டு பக்கமும் செல்லும் இரயில்வே பாதையின்று விடாது கேட்கும் இரயில் சத்தங்கள் என இரைச்சல் மயமாக இருந்தது.

''இங்கே எப்படி வசிக்கிறார்கள்?'' என்றான் இஸ்மாயில் அடக்க முடியாமல்.

''உனக்குத் தெரியாதா? மும்பையில் தாராவியைத் தவிர எங்கே தங்க வேண்டுமானாலும் குதிரை கொம்பு வாடகை கொடுக்க வேண்டியிருக்கும். இந்தியாவில் காதலின் எடுத்துக் காட்டாக தாஜ்மகால் சுட்டிக் காட்டப்படுவதைப் போல ஏழ்மையை, வறுமையை எடுத்துக் காட்ட சொன்னால் சற்றும் யோசிக்காமல் தாராவியை நோக்கி கை நீட்டலாம். இந்தியாவில் நடக்கும் அத்தனை தொழில்களும் இந்த குடிசையில் இருக்கிறது. சாராயம் விற்பவர்கள், கள்ளக் கடத்தல், பாலியல் தொழில் செய்பவர்கள், சினிமா துறையில் இருப்பவர்கள், துறைமுகத்தில் சரக்கு எடுக்கும் கூலிகள் என சகல விதமான மனிதர்களையும் இங்கே பார்க்கலாம். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த தமிழர்கள் இங்கு தொன்னூறு சதவீதம் பேர்.''

இருவரும் பேசியபடியே வலது கோடியிலிருந்த குடிசைக்குப் போய் சேர்ந்தனர். அங்கு ஒரு தகர பெட்டியின் மீது அமர்ந்திருந்த அலிகாரை பார்த்த இஸ்மாயில் ''நல்ல இடம் பார்த்தார்கள் சந்திப்பதற்கு'' என்றான் கரீமிடம்.

''நாம் கார்பரேட் கம்பெனி மீட்டிங் நடத்தவில்லை. ஸ்டார் ஹோட்டல்களில் ஏசி அறை புக் பண்ணுவதற்கு. இரகசிய பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் இதுபோல

மக்களோடு மக்களாய் கலந்துதான் திட்டம் தீட்ட முடியும்'' என்றான் கரீம் கடுமையான குரலில்.

''சலாம் அலேக்கும் இஸ்மாயில். இப்போது எப்படியிருக்கிறாய்?'' என்றான் அலிகார் உற்சாகத்துடன்.

''நன்றாக இருக்கிறேன்'' என்றான் இஸ்மாயில் சலாமிட்டு.

வழக்கம் போல் அலிகாரைச் சுற்றி ஆட்கள் நின்றிருந்தனர்.

''அடுத்த வாரத்தில் கணேஷ் சதுர்த்தி வரப் போகிறது இல்லையா? விழா கொண்டாடுகிறேன் என்ற பெயரில் நம் இனத்தினரை சீண்டுவார்கள். 1992 டிசம்பர் 6 பாபர் மசூதி இடிப்பு நினைவிருக்கிறதா? அன்றைய தினத்தில் நம் மதத்தினர் எத்தனை பேர் உயிரிழந்தார்கள். வீடு வாசல் இழந்து அநாதையானார்கள்! பெற்றோரை இழந்து இன்னும் அழுது கொண்டிருக்கும் குழந்தைகள் எத்தனை பேர்! ஒவ்வொரு விழாவும், பண்டிகையும் நம்மை தாக்குவதற்காக கொண்டாடப்படுகிறது. இதற்கெல்லாம் நாம் பதில் கொடுக்க வேண்டாமா? உன் தாயை, சகோதரியை மானபங்கப் படுத்தியவனை சும்மா விடலாமா?''

''மாட்டோம். நிச்சயம் விட மாட்டோம்'' என்றார்கள் எல்லோரும் ஆக்ரோஷத்துடன்.

''இஸ்லாத்தில் பிறந்த ஒவ்வொருவனின் கடமை இது. நம் இனத்தை அவமதிக்க அனுமதிக்க மாட்டோம். இந்த உலகை அல்லாவின் அருட் கொடையின் கீழ் கொண்டு வருவோம்'' அலிகார் ஒரு மணி நேரம் பேசினான். கேட்டுக் கொண்டிருந்தவர்கள் உணர்ச்சிப் பிழம்பானார்கள். அடுத்த வாரம் அவர்கள் செயல்பட வேண்டியதைத்



திட்டமிட்ட பின் அவர்கள் கலைந்து செல்கையில் நடையில் புதிய உத்வேகம் ஏற்பட்டிருந்தது. கண்களுக்கு முன் மாயத்திரை ஒன்று தோன்றி பார்வையை மறைத்தது.

கிரண் தனக்களிக்கப்பட்ட சிறிய அசைன்மென்ட் ஒன்றை முடித்து விட்டு ரிலாக்ஸாக அமர்ந்திருந்தான். இரண்டு மாதங்களாய் இரவு பகல் பாராமல் பாடுபட்ட வேலை நிறைவேறியது என்பதில் மனசு லேசானது. இப்படி மனசு லேசாவது எப்போதாவது ஒரு முறைதான் நடக்கும். ஏனென்றால் ஒரு அசைன்மென்ட் முடிந்த உடனே சில சமயம் அடுத்தது தயாராக இருக்கும். மறுபடி ஓட வேண்டும். இந்த ஓட்டத்திற்கு முடிவே இல்லையா என இப்போது யோசிக்கையில் தோன்றியது. ஏன் உலகம் அமைதியாய் இல்லை? ஆறாய் ஓடும் இரத்தத்தைப் பார்த்த பிறகும் மனிதன் ஏன் வன்முறையில் ஈடுபடுகிறான்? சுயநலமும், பேராசையும் அற்றதாய் உலகம் இருந்தால் எப்படியிருக்கும்? கிரண் கண்களை மூடினான். மூடிய கண்களுக்குள் ஜோஷிதா வந்தாள். வன்முறையற்ற ரம்மியமான உலகம் என்னைப் போலத் தான் இருக்கும் என்றாள். அழகாக, கண்களுக்கும் மனதுக்கும் குளுமையாக இருக்கும். இனிமையாக பேசி இதமாக நடந்து கொள்ளும். கருணையுள்ளதாய் இருக்கும். கிரண் யோசனையுடனே கண்களைத் திறந்தான்.

அவன் மனதில் வந்த ஜோஷிதா எதிரில் நின்றிருந்தாள். ''உடம்பு சரியில்லையா உனக்கு? இந்த நேரத்தில் படுத்திருக்கிறாய்?'' என்றாள் அவனிடம்.

''சரியான அழுகுணி டாக்டர் நீ. படுத்திருந்தால் உடம்பு சரியில்லை என்று அர்த்தமா? எனக்கு மனசு சரியில்லை டாக்டர்.''

ஜோஷிதா பதில் பேசாமல் இருக்கவும், கிரண் கேட்டான். ''என் மனசுக்கு ஒரு வைத்தியம் சொல் ஜோஷிதா.''

ஜோஷிதா கோபத்துடன் அவனைப் பார்த்தாள். லதிகாவுடன் அவன் கை கோர்த்து நின்றது இன்னும் நினைவை விட்டு அகலாமல் இருந்தது. எனவே ''பார்க்கிற பெண்களின் பின்னால் எல்லாம் செல்கிற மனசு எப்படி சரியான மனசாய் இருக்கும்?'' என்றாள்.

''என்ன சொல்கிறாய்?'' என்றான் கிரண் புரியாமல்.

''என்னிடம் நடிக்காதே கிரண். அது எனக்குப் பிடிக்காது.''

''நடிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. இத்தனை நாளில் உனக்கே இது தெரிந்திருக்க வேண்டும்.''

''இல்லை. தினமும் பார்க்கும் போதுதானே ஒவ்வொன்றாய் தெரிகிறது.''

''அப்படி என்ன தெரிந்து கொண்டாய் சொல்லேன்?''

ஜோஷிதா என்னவென்று சொல்லுவாள்? இன்னொரு பெண் உன்னைத் தொட்டுப் பேசுவது பிடிக்கவில்லை என்று இன்னும் சில நாளில் இங்கிருந்து கிளம்பப் போகும் அவள் எப்படிச் சொல்ல முடியும்? அவள் அமைதியாய் இருக்கவும், கிரண் அவள் அருகே வந்தான்.

''ஜோஷிதா வெகு நாட்களுக்குப் பிறகு எனக்கு அபூர்வமாய் சிறிது ஓய்வு கிடைத்திருக்கிறது. எதையாவது பேசி என்னை மூட் அவுட் செய்யாதே'' என்றான் தணிவாக.

உள்ளதைச் சொன்னால் உடம்பு எரியுமா? என்று நினைத்தபடி ஜோஷிதா நின்றிருக்க, ''நாம் எங்காவது வெளியே போகலாமா ஜோஷிதா?'' என்றான் கிரண் ஆர்வத்துடன். ஜுகு பீச் போய்விட்டு, எதாவது



ரெஸ்ட்டாரண்டில் சாப்பிட்டு விட்டு வரலாம். நீயும் இங்கு வந்ததிலிருந்து எங்கும் போகவில்லையே!''

''எதற்காக என்னைக் கூப்பிடுகிறாய் கிரண்? இன்று லதிகா வீட்டில் இல்லையா?''

''லதிகாவா?''

''கங்காவின் பெண், உனக்கு சரியான கம்பெனியாய் இருக்காது?''

''முட்டாள்தனமாகப் பேசாதே ஜோஷிதா'' கிரண் அதட்டினான்.

''ஆமாம். உனக்கு அவளைத் தவிர எல்லோரும் முட்டாள்களாகத்தான் தெரியும்.''

லதிகாவுடன் மோதிக் கொண்ட எதேச்சையான சம்பவத்தை கிரண் மறந்தே போய் விட்டிருந்தான். உயர்ந்த பண்பாட்டுடன் மென்மையாக பேசி, நாசுக்காய் நடந்து கொள்ளும் ஜோஷிதா இன்று தன் நிலை இறங்கி பேசுவதாகத் தோன்ற கிரணுக்கு வருத்தம் ஏற்பட்டது.

''உன்னிடமிருந்து இதை நான் எதிர்பார்க்கவில்லை ஜோஷிதா'' என்றான் அவளிடம்.

''நானும்தான்'' என்றாள் ஜோஷிதா அழுத்தமாக.

காதல் கண்ணை மறைக்கும் போது எந்தப் பெண்ணும் நிலை குலைந்து தான் போவாள் என்பதை அறிய கிரண் குழப்பத்துடன் அவளைப் பார்த்தான்.

அடுத்து வந்த நாட்கள் இருவருக்கும் மௌனத்திலேயே கழிந்தது. கிரண் அவளிடம் பேச முற்பட்ட போதெல்லாம் ஜோஷிதா அவனைத் தவிர்க்க முற்பட்டாள். அவள் பிஸியாக இருந்ததால் அது சுலபமாகவும் இருந்தது.

இடையில் நிதின் சர்மா இரண்டு முறை வந்து போனார். ''உனக்கு குட் நியூஸ் ஜோஷிதா. உன் ஹேண்ட் பேக் போலீஸ் கையில் கிடைக்கவில்லை. ஹோட்டலுக்கு சாப்பிட வந்தவர்களிடம் கூட போய் இருக்கலாம். அன்று உன்னுடன் வந்தவர்களே கூட எடுத்துப் போய் இருக்கலாம்'' என்றார் சர்மா.

''என்னுடன் வந்தவர்கள் எடுத்துப் போயிருந்தால் என் பாஸ்போர்ட்டைப் பார்த்ததும் அதைத் திருப்பித் தந்திருப்பார்களே!'' என்றாள் ஜோஷிதா.

''நீ இங்கே இருப்பது அவர்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது.''

''பிறகெப்படி உன்னிடம் தர முடியும்?''

''உண்மைதான்'' என்ற ஜோஷிதா தயக்கத்துடன் ஹரிஷ் வீட்டு முகவரியைச் சொன்னாள். ''பாஸ்போர்ட் பற்றி மட்டும் விசாரியுங்கள். என்னைப் பற்றிய தகவல்கள் எதுவும் சொல்ல வேண்டியதில்லை'' என்றாள் ஜோஷிதா.

சர்மா சென்றதும் கிரண் சொன்னான். ''நீ இருக்கும் இடம் தெரிந்தால் ஹரிஷ் மனைவியை விட்டு விட்டு உன்னைப் பார்க்க ஓடி வந்து விடுவான் இல்லையா?''

கோபத்துடன் அருகிலிருந்த தலையணையைத் தூக்கி அவன் மீது வீசினாள் ஜோஷிதா.

அடுத்த முறை சர்மா வந்தபோது சொன்னார், ''உன் விஷயம் டிபார்ட்மென்டில் யார் காதுக்கும் போய் விடாமல் இரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்று கிரண் கேட்டுக் கொண்டதால் சின்ன விஷயத்திற்கும் நானே அலையும்படி இருக்கிறது'' என்றார்.

''நன்றி ஸார்'' என்றாள் ஜோஷிதா மனப்பூர்வமாக.



''இந்த நன்றியை கொஞ்சம் உன் ரூம் மேட்டிற்கும் பகிர்ந்து கொடு'' என்று சிரித்த சர்மா சொன்னார். ''நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் ஜோஷிதா வீட்டை விட்டு தனியாக எங்கும் போகாதே.

புதியதாக ஆட்களைச் சந்தித்தால் கிரணுக்கோ எனக்கோ உடனே தகவல் கொடு.''

''அப்படி யார் வரப் போகிறார்கள்?'' என்றாள் ஜோஷிதா குழப்பத்துடன்.

''யாரும் இல்லை. உன் பாதுகாப்பிற்காகச் சொன்னேன்'' என்றார் சர்மா சமாதானமாக.

''எனக்கு இப்போது மும்பை நன்றாகப் பழகி விட்டது ஸார். ஹிந்தி கூட பேச வருகிறது.''

''மும்பை இந்த வீட்டிற்கு வெளியேயும் இருக்கிறது ஜோஷிதா. ஜாக்கிரதை'' என்றபடி சர்மா கிளம்பிப் போனார்.

சர்மாவின் எச்சரிக்கையை யோசித்த ஜோஷிதாவுக்கு கிரணுடன் ஒரு இரவில் தான் ரிக்ஷாவில் போனபோது துரத்தியவர்களின் நினைவு வந்தது. கிரணைப் போல இரகசியத் தொழில் செய்பவர்களுக்கு எதிரிக்கு பஞ்சமா என்ன? என்று நினைத்தாள் பெருமூச்சுடன்.

''இஸ்மாயில், அலிகார் சொன்னது நினைவில் இருக்கிறதா?'' என்றான் கரீம்.

இஸ்மாயில் நினைவிருப்பதாகத் தலையசைத்தான்.

''நீ இயக்கத்தில் சேர்ந்த பிறகு நடக்கப் போகும் பெரிய ஆபரேஷன் இது. கவனமாய் இருக்க வேண்டும். செய்ய வேண்டியதை அப்படியே மனப்பாடம் செய்து கொள். எந்தக் காரணத்திற்காகவும் எழுதி வைத்துக் கொள்ளாதே.''

''மறக்க மாட்டேன் கரீம்.''

''இன்னொன்றும் நினைவில் வைத்துக் கொள். 'டோங்ரி, முகமது அலி ரோடு பைதோனி' என்று நம் ஆட்கள் அதிகம் உள்ள இடங்களை தவிர்க்க வேண்டும். முஸ்லீம்கள் குறைவாக நடமாடும் இடங்களான BSE, மஸ்ஜித் பந்தர் முக்கியமாய் சிவசேனா, ஆர்.எஸ்.எஸ். கட்டிடங்களை கவனி. தாதர், ஏர்போர்ட், ஸ்டாக் எக்சேஞ் என்னுடைய கண்காணிப்பில் இருக்கும். சந்தேகம் இருந்தால் இப்போதே கேட்டு விடு. மறுபடி எல்லாம் முடிந்த பிறகுதான் சந்திக்க முடியும்.''

''கரீம் நீ சொன்ன இடத்திலெல்லாம் ஏற்கனவே தாக்குதல்கள், குண்டு வெடிப்புகள் நடந்திருக்கின்றன. மீண்டும் அதே இடங்களை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்?''

''இந்த இடங்கள் வீழ்ந்தால் இந்தியா வீழ்ந்ததாக அர்த்தம். ஆனால் எத்தனை நிலை குலைந்தாலும் உடனே புத்துயிர் பெற்று விடுவது மும்பையின் சிறப்பம்சம்'' என்ற கரீம் இன்னும் சில விஷயங்களை இஸ்மாயிலுக்கு விளக்கி விட்டுப் பிரிந்து போனான்.

மும்பை காவல் நிலையத்தில் தன் சக அதிகாரிகளுடன் டிஸ்கஷனில் ஈடுபட்டிருந்த அஸிஸ்டென்ட் கமிஷனர் சர்மா, தன் முன் சல்யூட் அடித்த இன்ஸ்பெக்டர் காம்லாலை தலையசைத்து வரவேற்றார்.

''என்ன சொல்கிறான் நேற்று பிடிபட்டவன்?'' என்றார் காம்லாலிடம்.

''அவன் பெயர் கலித் பெல்வான். 1970லிருந்து கடத்தல் தொழிலில் ஈடுபட்டிருக்கிறான். அறுபது வயதாகிறது.''

''பொருள் எங்கே கைமாறியதாம்?''



''துபாயிலிருந்து மாஸ்லாவுக்கு வந்து ஜெக்காடி, பிஜூ கடற்கரை பகுதிகள் வழியாக மும்பைக்குள் கொண்டு வந்திருக்கிறார்கள்.''

கற்கள், பாறைகள் நிறைந்த அந்தப் பகுதிகளுக்கு செல்வது மிகவும் கடினம். சரக்கு பரிமாற்றம் செய்யவே முடியாது என்றுதான் இதுவரை நினைத்திருந்தார்கள். அங்கேயே சரக்கை மாற்றுவது என்றால்..'' நிதின் சர்மா எழுந்தார் ''வா போய் பார்க்கலாம்.''

லாக்கப்பில் இருந்த கலித் பெல்வான் தன் அனுபவத்தில் இது போன்ற லாக்கப்களையும், அதிகாரிகளையும் நிறைய பார்த்து விட்டதான சவகாசத்துடன் எழுந்து நின்றான். அவனை ஒரு நாற்காலியில் அமரச் சொன்ன சர்மா அவன் எதிரில் அமர்ந்தார்.

''ம்.. சொல்லு.. சரக்கு மாற்றத்தில் உன்னுடைய வேலை என்ன?''

''ஏஜென்ட்.''

சரக்கு மாற்றும் தொழிலில் பல ஏஜென்ட்டுகள் இருப்பார்கள். கடத்தல் பொருட்கள் மும்பைக்குள் நுழைய வேண்டுமென்றால் இந்த ஏஜென்டுகள் தங்கள் ஆட்களை கடலுக்குள் அனுப்புவார்கள். நடுக்கடலில் ஒரு கப்பலிலிருந்து இன்னொரு கப்பலுக்கு சரக்கு பரிமாற்றம் நடக்கும். அதன் பிறகு சரக்கை கொண்டு வந்த கப்பல் தன் வழியே திரும்பிப் போய்விடும். சரக்கு எடுத்த கப்பல் கடற்கரைக்கு வரும்போது படகுகளில் குறிப்பிட்ட இடங்களில் சரக்கை இறக்கும். சரக்கு இறக்கும் இடத்தில் ஏஜென்ட் வேறு நபராக இருப்பார். கலித் பெல்வான் இப்படி ஒரு ஏஜென்ட்.

''சரக்கு பெட்டிகளில் என்ன இருக்கிறது?'' என்றார் சர்மா.

''இரசாயன பொருட்கள்.''

''இரசாயனமா?'' சர்மா விறைப்பானார். ''பெட்டியிலிருந்த பொருட்களை பரிசோதனை கூடத்திற்கு அனுப்பியாயிற்றா?'' என்றார் ராம்லாலிடம் -

''ஆயிற்று ஸார். இன்னும் ரிசல்ட் வரவில்லை.''

''கலித். நீங்கள் எத்தனை வருடமாக தொழிலில் இருக்கிறீர்கள்?''

''கிட்டத்தட்ட நாற்பது வருடம்.''

''இத்தனை வருடங்களாய் இந்த மும்பை நகரம் உங்கள் தொழிலுக்கு இடமளித்து, உணவளித்து பணத்தை வாரி வழங்கியிருக்கிறது. அந்த நகரத்தை நாசமாக்கும் வேலையில் நீங்கள் ஈடுபடலாமா? முன்பு வரதாபாய் என்றொரு தமிழ்நாட்டுக்காரர், உங்கள் தொழில்தான் சட்ட விரோதமானதுதான். ஆனால் மனசாட்சிக்கு துரோகம் பண்ணவில்லை. கஸ்டம்ஸ் கண்ணில் மண்ணைத் தூவினாலும் மும்பையின் செழிப்பிற்கு ஒரு வகையில் உதவியாக இருந்தார். மேல்மட்ட நெருக்கடியால் அவரை ஒரு முறை காவல்துறை கைது செய்து சில நாட்கள் சிறையில் வைத்திருந்தது. அப்போது அவர் மனைவிக்கு சிறைச்சாலைக்கு அருகிலேயே வீடு குடியமர்த்தி வீட்டிலிருந்தே தினமும் அவருக்கு உணவு வர ஏற்பாடு செய்து கொடுத்தது மும்பை காவல்துறை. அதற்குக் காரணம் கடத்தலில் இருந்தாலும் அவரிடமிருந்த நேர்மை.''

''வரதாபாயைத் தெரியாதவர்கள் உண்டா?'' என்றான் கலித் பெல்வான் மரியாதையுடன். 1977லிருந்து 1983 வரை ஒற்றை ஆளாக மும்பையை கட்டி வைத்திருந்தவர் ஆயிற்றே!''

''சரி எதற்காக இப்படிச் செய்தீர்கள்? இன்னும் சரக்கு எங்கெங்கெல்லாம் கை மாறியிருக்கிறது?'' என்றார் சர்மா.



''வழக்கமான சரக்கு என்றுதான் நினைத்தேன். விபரீதமாக எதுவும் தெரியவில்லை. டிகிஜெட்டி, ஷெகாடி கிராமம் பகுதிகளில் சரக்கை இறக்கினோம்.''

சர்மா உடனடியாக ஷெகாடி கிராமத்தைச் சுற்றி வளைக்க உத்தரவிட்டார். கடற்கரை ஓரங்களை கண்காணிக்கவும், கடற்படையினரின் ரோந்து பணியை தீவிரப்படுத்தவும் தன் மேலதிகாரிகளிடம் பேசி ஏற்பாடு செய்தார். மீண்டும் கலித் பெல்வானிடம் திரும்பி வந்து ஒரு கேள்வி கேட்டார்.

''இந்த சரக்கை அனுப்பியிருப்பது யார்?''

''டி - கம்பெனி.''

கலித்பெல்வான் சொன்ன பதிலில் ராம்லால் கையிலிருந்த வயர்லெஸ் நழுவியது. சர்மா கூட திகைத்துப் போனார். ஏனென்றால் உலகில் நடக்கும் எழுபத்தி ஐந்து சதவீத கடத்தல் நெட் வொர்க் தாவூத் இப்ராஹிமின் 'D Company' மூலமாகத்தான் நடக்கிறது. மிரள வைக்கும் கடத்தல் நெட் வொர்க் அது. முறைப்படி, முறையில்லாமல் நடத்தப்படும் ஏராளமான சர்வதேச நிறுவனங்கள் தாவூதுக்கு சொந்தம். ஆயுதம், போதை பொருட்கள், தங்கக் கடத்தல், ரியல் எஸ்டேட் அவனது முக்கிய தொழில்கள். டி கம்பெனி உலக அளவில் அரசியல் பலம் கொண்டது. மத்திய ஆசிய குடியரசு ஒன்றில் இயங்கும் குறிப்பிட்ட விமான கம்பெனியை 'டி கம்பெனி' தான் பணம் கொடுத்து ஆரம்பிக்கச் சொன்னதாகவும் தகவல் உண்டு 1993 மும்பை குண்டு வெடிப்பு சம்பவத்தின் முக்கிய குற்றவாளியான அவன் பாகிஸ்தானின் செல்லப் பிள்ளை. துபாயில் வெள்ளை மாளிகை. பாகிஸ்தானில் செல்வந்தர்கள் வசிக்கும் Chiffon ஏரியாவில் ஆறாயிரம் சதுர அடியில் அரசு ஒதுக்கிய

பிரம்மாண்டமான பங்களா, கூப்பிட்ட குரலுக்கு ஓடி வரும் அழகிகள் என ராஜபோக வாழ்க்கை வாழ்ந்தாலும் இதுவரை எந்த போலீசாலும் அவனை நெருங்க முடியவில்லை என்பதுதான் நிஜம்.''

''சார், தாவூத் மீண்டும் பெரிய தாக்குதலுக்குத் திட்டமிட்டிருக்கிறான் போலிருக்கிறதே!'' என்றான் ராம்லால்.

''தாக்குதலோ, இயக்கமோ நடத்தும் அளவிற்கு தாவூத் கொள்கை பிடிப்புள்ளவன் அல்ல. பணத்திற்காக எதையும் செய்யத் தயாராய் இருக்கும் ஒரு தாதா. அவ்வளவுதான். அவனது பணபலத்தை, ஆள் பலத்தை பாகிஸ்தான் உளவுத்துறை பயன்படுத்திக் கொள்கிறது. அவனது கடத்தலுக்கு தங்கள் நாட்டில் இராஜபாதை அமைத்துக் கொடுத்து, அவனது நெட் வொர்க்கை இந்தியாவில் தாங்கள் செய்யும் நாச வேலைக்கு பயன்படுத்திக் கொள்கிறது. இப்போதும் டி கம்பெனி மூலமாக பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. தான் இந்த பார்சலை அனுப்பியிருக்கிறது.''

சர்மா அடுத்து பரபரப்பாகச் செயல்படத் தொடங்கினார். மாலை வரை அவரது தொலைபேசி விடாமல் பிசியாக இருந்தது. காவல்துறை வாகனங்கள் நிற்காமல் ஓடிக் கொண்டிருந்தன. வயர்லெஸ் அலறிக் கொண்டே இருந்தது. கிட்டத்தட்ட இரவாகும் சமயம் பெரும்பான்மை ஏற்பாடுகள் முடித்து விட்டோம் என்ற நிம்மதியுடன் சேரில் சாய்ந்து அமர்ந்து மசாலா டீயை பருகியவர் நினைவு வந்தவராக போன் செய்து ''ஹலோ கிரண்'' என பேச ஆரம்பித்தார்.

சோம்நாத்ஜி ஈஸி சேரில் சாய்ந்தபடி தடிமனான மகாபாரதத்தை படித்துக் கொண்டிருந்தார்.



''ஜி, இன்னும் எத்தனை முறைதான் இதைப் படிப்பீர்கள்?'' என்றான் கபூர் கேலியாக.

''ஒவ்வொரு முறை படிக்கும் போதும் புதிது புதிதாக அர்த்தம் தெரிகிறது கபூர். நீயும் படித்துப் பார்'' என்றார் சோம்நாத்ஜி.

''மகாபாரதத்திலும் சூது, சண்டை, போட்டி, பொறாமை எல்லாம் இருக்கிறது ஜி. இதிகாச காலத்திலேயே மனிதனின் மனோபாவம் எத்தனை சுயநலம் மிக்கதாய் இருந்திருக்கிறது பாருங்கள்!''

''பொதுவான ஒரு நீதியை உலகிற்கு உணர்த்துவதற்காக சில பேரை வைத்து கடவுள் ஆடிய விளையாட்டுதான் இதிகாசங்கள் கபூர். நாம் எல்லோரும் பகடைக் காய்கள். ஆடுவதும், நகர்த்துவதும், ஆட்டத்திலிருந்து நம்மை விலக்குவதும் அவன்தான்.''

''எதுவுமே நம் கையில் இல்லை எனில் எதற்காக ஓட வேண்டும்? இத்தனை கோபமும், மகிழ்ச்சியும் எதற்கு? வருங்காலத்தைப் பற்றிய கனவுகளும், சேமிப்பும் எதற்கு?''

சோம்நாத்ஜி புன்னகையுடன் கபூரின் தோளைத் தட்டிக் கொடுத்தார். ''அதெல்லாம் இந்த ஜென்மம் எடுத்ததற்கான கடமைகள் கபூர். இந்த பூமியில் இருக்கும் வரை நாம் கடமைகளை புறக்கணிக்க முடியாது.''

''என்ன ஜி, கீதோபதேசம் நடக்கிறது போலிருக்கிறதே!'' என்றபடி அவர்கள் அருகில் வந்து அமர்ந்தான் சலிம்மொகமத்.

''கீதையை உபதேசம் பண்ணினவன் கிருஷ்ணன். உபதேசம் பெற்றவன் அர்ஜுனன். நாங்கள் அத்தனை பெரியவர்கள் இல்லை; என்றாலும் கீதையின் ஒரு

துளியையாவது புரிந்து பின்பற்ற முயன்றால் பிறந்ததற்கான பலன் கிடைத்து விடும்'' என்றார் சோம்நாத்ஜி.

''உண்மைதான். கீதையும் குர்-ஆனும், பைபிளும் சத்தியத்தையே போதிக்கின்றன. மக்கள் மதங்கள் கூறும் கருத்துகளை மறந்து விட்டு அதன் சம்பிரதாயங்களில் மூழ்கிப் போகிறார்கள்'' என்றான் சலீம்.

''இன்று நீ வேலைக்குப் போகவில்லையா சலீம்?'' என்றான் கபூர்.

''இன்று எனக்கு விடுமுறை. உங்களைப் பார்த்து நாளாயிற்றே என்று வந்தேன்.''

''இஸ்மாயில் இப்போது எப்படியிருக்கிறான்?'' என்றார் சோம்நாத்ஜி.

''அல்லாவின் கிருபையாலும், உங்கள் உதவியாலும் மிகவும் நலமாக இருக்கிறான். அவனுக்கு வேலை நிறைய இருப்பதால் சரியாக வீட்டில் இருப்பதில்லை. நானே அவனைப் பார்த்து பத்து நாட்கள் ஆயிற்று.''

''முடியாமல் படுத்து எழுந்த உடம்பு ஓய்வில்லாமல் அலைந்தால் என்னவாகும்? நீயாவது சொல்லக் கூடாதா?'' என்றார் சோம்நாத்ஜி.

''அவன் யோசிக்க நேரமின்றி இருந்தால்தான் பழைய விஷயங்களை நினைக்காமல் இருக்க முடியும்'' என்றான் சலீம் மொகமத்.

நல்ல பெண்ணாகப் பார்த்து திருமணம் செய்து வையுங்கள். பிறகு எதைப் பற்றியும் நினைக்காமல் வீட்டிலேயே விழுந்து கிடப்பான்'' என்றான் கபூர் சிரித்தபடி.

''முடியவே முடியாது என்கிறான். அவன் அம்மாவும், பாத்திமாவும் பல முறை அழுது, மிரட்டியும் பார்த்து விட்டார்கள். கல்யாணப் பேச்சையே எடுக்கக் கூடாது என்கிறான்.''



''இருக்கட்டும். அவன் மனதுக்குப் பிடித்த பெண்ணைப் பார்த்தால் அவனே இறங்கி வரப் போகிறான், நம் கிரண்ஜி மாதிரி'' என்றான் கபூர்.

''கிரண்ஜிக்கு கல்யாணமா? பெண் யார்?'' என்றான் சலீம் ஆர்வத்துடன்.

''இன்னும் கல்யாணம் பேசவில்லை. ஆனால் பெண் நம் டாக்டர் தீதியாக இருக்க வேண்டும் என்பது எங்களது ஆசை.''

''ஆஹா...'' என்றான் சலீம் சந்தோஷத்துடன். பொருத்தமான ஜோடி. அழகு, குணம், படிப்பு என இதைவிடப் பொருத்தமான ஜோடி இருக்கவே முடியாது.''

வராண்டாவில் அமர்ந்திருந்த அவர்களைப் பார்த்துவிட்டு கங்கா அருகில் வந்தாள்.

''சலீம், உன் அம்மாவும் அப்பாவும் நாக்பூர் போய் விட்டார்களாமே, பாத்திமாவுடன் எதுவும் பிரச்சனையா?'' என்றாள் ஆவலுடன்.

''கங்காவிற்கு இன்றைய பொழுதுக்கு விஷயம் கிடைத்து விட்டது'' என கபூர் முணுமுணுக்க, ''நாக்பூரில் என் சித்தப்பாவிற்கு உடல்நலமில்லை என பார்க்கப் போயிருக்கிறார்கள். அடுத்த வாரம் வந்து விடுவார்கள். நீங்கள் நலமா மாதாஜி?'' என்றான் சலீம் மொகமத்.

''ஹும், இந்த ரெண்டுங்கெட்டான் பெண்ணுக்கு ஒரு கல்யாணத்தை பண்ணாமல் நான் எப்படி நல்மாக இருக்க முடியும்?'' என்றாள் கங்கா பெருமூச்சுடன்.

''பெண்ணுக்கென்ன ஜி, லதிகாவின் அழகிற்கு போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள் பாருங்கள்'' என்று சலீம் சொன்னதும் கங்காவின் முகம் மலர்ந்து போனது.

''நீ சொல்கிறபடியே நடக்கட்டும்'' என்றாள் மகிழ்ச்சியுடன்.

''கணேஷ் கி ஜே!''

உற்சாக குரல்கள் ஊரெல்லாம் உரத்துக் கேட்டன. எல்லா வீடுகளிலும் வைத்து பூஜிக்கப்பட்ட விநாயகர் அரபிக் கடலில் கரைய போய்க் கொண்டிருந்தார். வண்டிகளில் கும்பல் கும்பலாய் விநாயகர் சிலைகள் தங்கள் வீட்டைக் கடந்து செல்வதை ஜோஷிதா ஆர்வத்துடன் கவனித்தாள். ஒரு பகுதியிலேயே இத்தனை சிலைகள் என்றால் மும்பை முழுவதும் எத்தனை விநாயகர் இருக்கும்? அவை மொத்தமாய் கடலில் மிதக்கையில் கடல் முழுக்க விநாயகர் விஸ்வரூபம் எடுத்தாற்போல் எத்தனை அழகாக இருக்கும்? ஜோஷிதாவுக்கு அதை நேரில் பார்க்கும் ஆசை வந்தது.

கிரண் வீட்டில் இல்லை. இந்த ஒரு வாரமாய் அவனை சரியாகப் பார்க்கவே முடியவில்லை. அவன் சகஜமாகப் பேச முற்பட்ட போதெல்லாம் அவள் பேசாமல் விலகிப் போய்க் கொண்டிருந்ததால் அவர்களுக்குள் சுமூகமான பேச்சு வார்த்தை இல்லாமல் இருந்தது. எனவே இப்போதும் கிரணிடம் கேட்கத் தோன்றியதை கட்டுப்படுத்திக் கொண்டு ஜோஷிதா தாராபாயை அழைத்தாள்.

''பீச்சுக்குப் போய் பார்க்கலாம். வருகிறாயா தாராபாய்?'' எப்போதும் கடவுள் சம்பந்தமான விஷயங்களுக்கு குதித்துக் கொண்டு கிளம்பும் தாராபாய் தன் வழக்கத்திற்கு மாறாய் தயங்கினாள். ''முன்பெல்லாம் என் பெற்றோருடன் நானே போய் கடலில் விட்டிருக்கிறேன் தீதி. ஆனால் இப்போதெல்லாம் அது போன்ற சூழ்நிலை இல்லை.''



''நாம் போய் கடற்கரையில் நின்று பார்த்துவிட்டு திரும்பி விடலாம். கபூரும் நம்முடன் வரட்டும்.''

தாராபாய் மீண்டும் தயங்க, ''தாராபாய் நான் லண்டன் போய் விட்டால் இதையெல்லாம் பார்க்கவே முடியாது. கணேஷ் சதுர்த்தி மும்பையில் எத்தனை பிரபலம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதை ஒரு முறையாவது பார்த்து விட வேண்டும். ப்ளீஸ் என்னுடன் வா தாராபாய்'' என ஜோஷிதா வற்புறுத்தவும் அதற்கு மேல் மறுக்க மனமின்றி தாராபாயும், கபூரும் கிளம்பினார்கள்.

''கிரண்ஜியிடம் சொல்லி விட்டீர்களா?'' என்ற கபூரின் கேள்விக்கு ஜோஷிதா பொதுவாய் தலையசைத்து வைத்தாள்.

மூவரும் தெருவில் இறங்கி நடக்கையில் கண்ணுக்கு எட்டியவரை காவி உடைகளின் நடமாட்டம் தெரிந்தது. ''சாமி நகர்வலம் கூட இப்போதெல்லாம் அரசியல் கட்சிகளின் ஊர்வலம் போலாகி விட்டது'' என்றான் கபூர்.

பஜன்களை பாடியபடி மக்கள் சாரிசாரியாகப் போய்க் கொண்டிருந்தனர்.

இஸ்மாயில் தான் நின்றிருந்த இடத்திலிருந்து திரும்பிப் பார்த்தான். காவி வேஷ்டியும், ஜிப்பாவும் அணிந்து தாடியை மழித்திருந்த கரீமை அடையாளம் கண்டு கொள்ளவே கடினமாக இருந்தது. கரீம் கூட்டத்துடன் சேர்ந்து பாடியபடியே போய்க் கொண்டிருந்தான். இஸ்மாயில் தன் தலையில் கட்டியிருந்த காவி முண்டாசை சரி செய்தபடி காத்திருந்தான். ஊர்வலம் மசூதியைத் தாண்டுகையில் குரல்கள் உரத்துக் கேட்டன. ''கணேஷ் கி, ஜே... கணபதி பப்பா மோரியா' டோலக்கு சத்தம் காதைக் கிழித்தது. மசூதியின் முன் நின்று ஆட்டமும்

பாட்டுமாய் விநாயகர் சுற்றி வர, தர்காவின் அருகில் நின்றிருந்த அலிகார் ஆள் ஒருவன் கூட்டத்தை நோக்கி சிறிய கல்லை வீசினான்.

''யாரோ கல் எறிகிறார்கள்'' என்ற குரலில் ஆட்டமும் பாட்டும் நின்றன. கூட்டத்தில் கலந்து விட்டிருந்த கரீமும், இஸ்மாயிலும் தன் சகாக்களுடன் சரமாரியாக கற்களை வீசத் தொடங்கினர். அவர்களைப் பார்த்து ஊர் வலத்தில் சென்றவர்கள் சிலரும் கற்களை வீசி மக்கள் சிதறி ஓடினார்கள்.

சிறிது நேரம் வரை யார் யார் மீது கல்லெறிகிறார்கள் என்பதே புரியாத நிலை. வேடிக்கை பார்க்க வீட்டு வாயிலில் நின்றிருந்தவர்கள் கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே ஓடினர். கடைகளின் ஷட்டர்கள் இழுத்து விடப்பட்டன. கலவரத்தைத் திட்டமிட்டவர்கள் வேறாக இருந்தாலும் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கும் அசாத்திய துணிச்சல் வந்தது. ஒரு ஆஞ்சநேயர் கோவில் தகர்க்கப்பட்டது. பதிலுக்கு ஒரு மசூதி தீயிடப்பட்டது. கோவில் இடிப்பதைத் தடுக்க வந்தவர்கள் பிடித்துத் தள்ளப்பட்டனர். தள்ளாட்டத்தில் கீழே விழுந்த ஒருவருக்கு நெற்றியில் அடிபடவும் இந்துக்களை முஸ்லீம்கள் அடித்து நொறுக்குவதாக செய்தி பரவியது. இந்துக்களுக்காக ஆதரவு என்ற பெயரில் பாரதிய ஜனதா, சிவசேனா, விசுவஹிந்து பரிஷத், பஜ்ரங்தள் உள்ளிட்ட அமைப்பைச் சேர்ந்தவர்கள் களத்தில் இறங்கினார்கள். 'இரத்தத்திற்கு இரத்தம்' என்ற குரலைக் கேட்ட மண்ணின் மைந்தர்கள் கண்ணில் பட்ட முஸ்லீம்களையும், முஸ்லீம் வீடுகளையும் தீக்கிரையாக்கினர். திருப்பித் தாக்கியவர்களின் மண்டை உடைந்து இரத்தம் ஆறாகப் பெருகியது. மக்கள் பீதியில் உறைந்தார்கள்.



ஜோஷிதாவும், தாராபாயும், கபூரும் இன்னதென்று உணர்ந்து கொள்வதற்கு முன்பே கூட்டத்தில் அகப்பட்டு ஆளுக்கொரு பக்கமாய் பிரிந்து போனார்கள். தடிகளையும் இரும்புக் கம்பிகளையும் கையில் ஏந்தியபடி ஓடிய கும்பலிலிருந்து வெளியேற முடியாமல் ஜோஷிதாவும் சேர்ந்து ஓட ஆரம்பித்தாள். சாலையின் இறுதி வரை ஓடியவள், அதற்கு மேல் போக வழியின்றி சுற்றிலும் பார்த்தாள். வீடுகள், கடைகள் அனைத்து அடைக்கப்பட்டு ஒதுங்க இடமின்றி போகவே, சாத்தியிருந்த ஒரு வீட்டின் கதவைப் பதட்டத்துடன் தட்டினாள். வெகு நேரம் தட்டியும் யாரும் திறக்கவில்லை என்றாலும் அவள் தட்டுகிற சத்தம் கேட்டு ஒரு கும்பல் அவளை நெருங்கியது.

''இது உன் வீடா? நீ இந்துவா, முஸ்லீமா?'' என்றான் கும்பலுக்கு தலைவனைப் போலத் தென்பட்டவன். கூர்மையான அவன் கண்களையும், வளைந்த மீசையையும் பார்த்தபடி என்ன பதில் சொன்னால் இவர்களிடமிருந்து தப்பலாம் என்று ஜோஷிதா யோசிக்கையில், ''யாரா இருந்தா என்ன? ஓங்கிப் போடு. தலைப்பு செய்திகளில் அடிபட்டவர்கள் எண்ணிக்கையில் ஒருவர் அதிகமாகட்டும்'' என்றான் ஒருவன்.

''அதுவும் சரிதான்'' என அவர்கள் மிக அருகில் வர ஜோஷிதா கண்களை இறுக மூடி பயத்துடன் சுவரில் ஒட்டினாள். முன்னால் நின்றிருந்தவன் தன் கையிலிருந்த இரும்பு தடியை ஓங்க, 'கடைசியில் என் கதை இப்படி தெருவிலா முடியப் போகிறது? ஸாரி கிரண், ஒரு வாரமாய் உன்னிடம் பேசாமல் இருந்ததற்கு' என ஜோஷிதா மனதிற்குள்ளேயே பதைக்க, ''அதோ... அதோ ஒருவன் என்னை தாக்கி விட்டு ஓடுகிறான்.

பிடியுங்கள்...'' என்ற குரல் பெரிய அலறலாகக் கேட்டது. குரல் அவர்களுக்குப் புரிந்திருக்க வேண்டும். எனவே கும்பல் ஜோஷிதாவை விட்டு விட்டு குரல் கொடுத்தவன் காட்டிய திசையில் ஓடத் தொடங்கியது. ஜோஷிதா கண்களைத் திறந்து பார்க்கையில் இவளையே பார்த்தபடி நின்றிருந்த அந்த குரலுக்குரியவன் வேகமாய் நடந்து சென்று கும்பலுடன் சேர்ந்து கொண்டான். காவி உடையும், தலைப்பாகையும் அணிந்திருந்த அவனை எங்கோ பார்த்திருக்கிறோம் என்று தோன்றியது. நன்றாகத் தெரிந்தவன்தான். ஆனால் யாரென்று உடனே நினைவு வரவில்லை. அதைப் பற்றி மேற்கொண்டு யோசிக்க நேரமின்றி ஏதோ கூக்குரல்கள் அருகே கேட்கவே ஜோஷிதா அருகிலிருந்த சந்துக்குள் புகுந்து ஓடினாள். மெயின் ரோட்டை அடைந்ததும் போலீஸ் தலைகள் கண்ணில் பட்டன. அவர்களிடம் விபரம் தெரிவித்து போலீஸ் உதவியுடன் வீடு போய் சேரலாம் என்றெண்ணி ஜோஷிதா போலீஸ் ஜீப்பை நெருங்கினாள். அவள் நெருங்கும் சமயம் போலீஸ் ஜீப் மீது கல் ஒன்று வந்து விழுந்தது. உடனே போலீசார் தடியடி பிரயோகத்தில் இறங்கினர். கண்ணீர் புகை குண்டுகளும் வீசப்பட்டன. ஜோஷிதா மீண்டும் இடிந்து போனாள்.

கிரண் கபூர் சொன்னதைக் கேட்டு இடிந்து போனான். நகரம் முழுவதும் கலவரம் தலை விரித்தாடுகையில் ஜோஷிதா எங்க போய் அகப்பட்டுக் கொண்டிருப்பாள்? அங்கங்கே போலீஸ் ஜீப்பே பற்றி எரிகையில் யாரிடம் சொல்லி எப்படித் தேடுவது? மும்பையில் குண்டு வெடிப்பு நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டு அனுப்பி வைத்த வெடிமருந்து பார்சல்களை உளவுத்துறை அளித்த தகவல்களின் அடிப்படையில் போலீஸார்



கைப்பற்றி அழித்தனர். அதற்காக இரவு பகல் பாராமல் இரண்டு மாதம் அலைந்த சர்மா இன்றுதான் நான்கு நாள் விடுமுறையில் சொந்த ஊர் போயிருந்தார். எனவே கிரண் தனக்குத் தெரிந்த வேற சில அதிகாரிகளைத் தொடர்பு கொள்ள முயற்சித்து முடியாமல் சோர்ந்து போனான். வெளியே தன் அனுமதியில்லாமல் போக வேண்டாம் என்று சொல்லியிருந்தும் ஜோஷிதா ஏன் இப்படிச் செய்தாள்? கிரண் அடுத்து என்ன செய்வதென்ற குழப்பத்திலும், கவலையிலும் ஆழ்ந்திருக்க தாராபாய் அழுதபடியே புலம்பினாள்.

''பாவி, என்னால் வந்தது. நான் கூட்டி போயிருந்திருக்கக் கூடாது. இப்ப எங்க தவிக்கறாங்களோ, என்னவோ?''

ஜோஷிதா தான் இருக்குமிடத்தை சுற்றிலும் பார்த்தாள். மூன்று புறமும் பைபர் ஷீட்டுகள், நடுவே துணியால் மறைக்கப்பட்ட ஒரு அறை. ஓரமாய் மண்ணெண்ணெய் அடுப்பும், சில அலுமினியப் பாத்திரங்களும் இருந்தன. உடைந்து போய் கல் வைத்து முட்டுக் கொடுக்கப்பட்ட மேஜையின் மீது சிறிய டி.வி. ஒன்று இருந்தது.

''கொஞ்சம் சாப்பிடுகிறாயா பேட்டீ?'' என அவள் அருகே அலுமினிய குவளை நிறைய சூடான கஞ்சியை வைத்தார் அந்த முதிய பெண்மணி. கஞ்சியில் துளித் துளியாய் இறைச்சித் துண்டுகள் மிதந்தன. ஜோஷிதாவுக்கு பயத்தில் மரத்துப் போன பசி இப்போது தெரிந்தது. கஞ்சியை வேகமாகக் குடித்து முடிக்கையில் மனம் நன்றியால் நிறைந்தது.

உண்மையில் இந்த பெண்மணியும், அவர் கணவரும் இல்லை என்றால் இன்று அவள் தப்பி பிழைத்திருக்கவே

முடியாது. எங்கே செல்வதென்று தெரியாமல் இலக்கின்றி ஓடிக் கொண்டிருந்தவளை நிறுத்தி விசாரித்தார்கள். அந்த பெண்மணி அணிந்திருந்த பர்தாவை கழட்டி அவளை அணிய வைத்து, இரண்டு பக்கமும் கைகளைப் பற்றியபடி நடந்தார்கள்.

எதிர்ப்பட்ட கும்பல் ஒன்று பெரியவரை இனங்கண்டு கொண்டு ''யார் இது?'' என்றார்கள் அவரிடம்.

''என் மனைவியின் தங்கை பெண் சாயிரா பானு. புனேயிலிருந்து வந்திருக்கிறாள்'' என்றார் பெரியவர்.

அவர்கள் விலகி வழிவிடவும் இருவரும் தங்களுடன் ஜோஷிதாவை அழைத்து வந்தனர்.

பெரியவர் டி.வி.யை ஆன் செய்தார். மும்பை முழுவதும் பதட்டம் பரவியிருப்பதால் நகரில் குறிப்பிட்ட இடங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாகவும், மத்திய மும்பை, தாராவி, மாஹிம் பகுதிகளில் பதட்டம் தொடர்ந்து நீடிப்பதாகவும், விமான நிலையம், ஹார்பர், இரயில் நிலையங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் கூறின. கூடவே உடைந்தும் எரிந்தும் கிடந்த வாகனங்களும் வீடுகளும், கோவில் மற்றும் மசூதிகளும், வெறிச்சோடிய தெருக்களும் திரையில் தெரிந்தது. மொத்த சேதம் எவ்வளவு என மதிப்பீட்டாளர்கள் கணக்கிட்டார்கள். இழப்பீடு தரப்படும் என அரசாங்கம் உறுதியளித்தது. அந்நிய நாட்டு சதி என அரசியல்வாதிகள் பேட்டியளித்தார்கள்.

பெரியவர் சலிப்புடன் டி.வி.யை அணைத்தார்.

''எப்போதும் ஏதாவது ஒரு பயங்கரத்தை எதிர்நோக்கியிருக்கும் சூழலில் இந்த நகரத்தில் உங்களால் எப்படி



நிம்மதியாக வசிக்க முடிகிறது?'' என்றாள் ஜோஷிதா அவரிடம்.

''இது எங்களுக்கு பழகிப் போய்விட்டது பேட்டி. மும்பை நகரம் விவசாயத்தைக் கைவிட்டு தொழில் நகரமாக மாறத் தொடங்கியபோதே கடத்தலும், தாதாக்களும், கூலிப்படையும் ஏற்பட்டு விட்டது. ஆனால் யூசுப் படேல், ஹாஜி மஸ்தான் போன்ற தாதாக்கள் கடத்தல் செய்வதுடன், கடைக்காரர்களிடம் மாமூல் வசூலிப்பார்கள். வெடிமருந்து கடத்தலை செய்ததில்லை. வெளிநாட்டவருடன் கூட்டு சேர்ந்ததில்லை. தாதாக்கள் மக்களிடம் பிரிவினையைத் தூண்டி விடாமல் தங்கள் தொழிலை மட்டும் பார்த்தார்கள். அதுவும் வரதாபாய் என்று சொல்லப்படும் வரதராஜ முதலியார் எளிய மக்களின் பாதுகாவலராகவே இருந்தார்.''

''ஆமாம். டைரக்டர் மணிரத்னம் வரதாபாயின் வாழ்க்கையை தமிழில் படமாக எடுத்தார். நானும் அந்தப் படத்தைப் பார்த்திருக்கிறேன். 'காட்பாதர்' என்ற ஆங்கில நாவல்கூட அவரைப் பற்றி எழுதப்பட்டது தான்'' என்றாள் ஜோஷிதா கேள்விப்பட்டதை நேரில் கேட்கும் உற்சாகத்துடன்.

''மாதுங்கா மார்க்கெட்டில் நான் கடை போட்டிருந்த போது தினமும் அங்கே வருவார். கடைசி கடையின் டிரங் பெட்டிதான் அவரது வாகனம். கையில் 'டிப்ள மோட்' விஸ்கி இருக்கும். வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டை, வெள்ளை செருப்புதான் எப்போதும்.''

''அந்த சினிமாவில் வருகிற மாதிரி வரதாபாய் சுடப்பட்டு இறந்தாரா?'' என்றாள் ஜோஷிதா ஆர்வத்துடன்.

''இல்லை. 1983ல் பவார் என்றொரு இன்ஸ்பெக்டர் வரதாபாயை கைது செய்து அவர் மீது வழக்கு தொடர்ந்தார். அவருக்கு எதிராக சாட்சி சொல்ல யாரும் வரவில்லை. என்றாலும் போலீஸ் தன்னை துணிச்சலாகக் கைது செய்ததில் உடைந்து போன வரதாபாய் மும்பை வாசத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு சென்னைக்குக் கிளம்பிப் போனார். அங்கே சாந்தோம் என்ற இடத்திலிருந்த அவர் வீட்டில் மாரடைப்பால் இறந்து போனார். அப்போது அவருக்கு வயது அறுபத்தி ஏழு.''

''மாதுங்காவில் இருந்த உங்கள் கடை என்னவாயிற்று? நீங்கள் ஏன் இந்த மாதிரி இடத்தில் வசிக்கிறீர்கள்?'' என்றாள் ஜோஷிதா.

பெரியவரின் முகத்தில் சோகம் படர்ந்தது. ''1992 டிசம்பர் 6 அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது நடந்த இனக் கலவரத்தில் என் கடை சூறையாடப்பட்டது. நிறைமாத கர்ப்பிணியான என் மருமகள் இரும்புக் கம்பியால் குத்தப்பட்டு வயிற்றில் குழந்தையுடன் இறந்து போனாள். இதோ என் மனைவி மீது வீசப்பட்ட ஆசிட் பல்பு பட்டு தொடை சதை பொசுங்கிப் போனது. என் மகன் மனைவியை பறி கொடுத்து, வியாபாரத்தையும் இழந்து இடிந்து போய் விட்டான். அப்போதிருந்து யாருடனும் சரியாகப் பேசுவதில்லை. எப்போது எங்கே போகிறான் வருகிறான் என்பதே தெரியாது. இந்தக் கலவரத்தில் எங்கே சிக்கியிருக்கிறானோ என்று பார்க்கத்தான் நாங்கள் வெளியே கிளம்பி வந்தோம். வந்ததற்கு உன்னைக் காப்பாற்ற முடிந்தது.''

அந்த வயதான தம்பதிகளின் சோகம் அவளையும் தாக்கவே, மௌனமாக அமர்ந்திருந்த போது தடுமாறிய படி யாரோ உள்ளே நுழைந்தார்கள். அந்தச் சின்ன



அறையில் வருபவர்களுக்கு வழிவிட ஜோஷிதா எழுந்திற்கையில் அவன் பொத்தென்று கீழே விழுந்தான். மஞ்சள் நிற விளக்கின் மங்கிய ஒளியில் இவனை எங்கோ பார்த்திருக்கிறோம் என்று ஜோஷிதா யோசிக்க, அந்த தம்பதிகள் அவனை உலுக்கினார்கள். ''கரீம்.. கரீம்.. என்னவாயிற்று உனக்கு?''

அவன் அந்த பெரியவர்கள் மகன் என்று தெரிந்து கொண்ட ஜோஷிதா குனிந்து அவன் நாடித்துடிப்பை பரிசோதித்தாள். சீராக இருக்கவும் எங்காவது அடிபட்டிருக்கிறதா என்று புரட்டிப் பார்த்தாள். தலையில் அடிபட்டு வீங்கியிருந்ததுடன் இடது காலில் வெட்டுக்காயம் தெரிந்தது.

''நான் ஒரு டாக்டர். அதனால் பயப்படாதீர்கள்'' என ஜோஷிதா மண் பானையிலிருந்த நீரை முகத்தில் தெளிக்கவும், அவன் லேசாகக் கண்களைத் திறந்தான். தனக்கு நேராய் குனிந்திருந்த ஜோஷிதாவைப் பார்த்ததும் மிரட்சியுடன் எழுந்து அமர்ந்தான். கரீமின் அம்மா கஞ்சியை சுட வைத்து எடுத்து வந்து அவனை வற்புறுத்தி குடிக்க வைத்தாள். ''கரீம், இப்படி அடிபட்டு வந்திருக்கிறாயே! எங்கே போயிருந்தாய்?'' என அவன் அப்பா வருத்தத்துடன் கேட்கையில் ஜோஷிதாவுக்கு சட்டென நினைவு வந்தது. இன்று ஒரு வீட்டின் முன் அவள் பயத்தில் ஒதுங்கியிருந்தபோது இந்துவா முஸ்லீமா என்று கேட்டு அவளை அடிக்கத் தடியை ஓங்கியவன் இவன்தான். மிக அருகில் பார்த்ததால் அந்தக் கூர்மையான கண்களும், வளைந்த மீசையும் நன்றாக நினைவில் இருந்தது. யாரோ ஒருவன் இவனை குரல் கொடுத்து அழைத்திருக்காவிட்டால் இந்நேரம் ஜோஷிதா உயிருக்கு போராடிக் கொண்டிருப்பாள்.

இத்தனை சாதுவான பெற்றோர்களுக்கு இவ்வளவு குரூரமாய் ஒரு மகனா? பெரியவர் சற்று முன் இவன் மனைவியைப் பற்றி சொன்னது நினைவுக்கு வந்தது. மனைவியை கொன்றதற்கு பழி வாங்கக் கிளம்பியிருக் கிறான் போலும்!

கரீமின் தலையை வருடிய அவன் அம்மா ''உடல் சுடுகிறதே!'' என்றாள் கவலையுடன்.

ஜோஷிதா பெரியவரிடம் சில மருந்துகளை எழுதிக் கொடுத்தாள்.

''இந்த மருந்தை வாங்கி வாருங்கள். பெரிய காயம் எதுவு மில்லை. எனவே இந்த மருந்திலேயே குணமாகி விடும்.''

உடனே வெளியே கிளம்பிப் போன பெரியவர் நினைவு வந்தவராக திரும்பி வந்து தன் மனைவியிடம் என்னவோ கேட்கவும், அந்தப் பெண்மணி அடுப்பின் அருகே இருந்த பாத்திரங்களை உருட்டி விட்டு முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வந்து மகன் அருகே அமர்ந்தார். கண்களில் கலக்கமும், கண்ணீரு மாக அந்த பெரியவர்களைப் பார்த்ததும் ஜோஷிதாவின் மனம் உருகியது. பெரியவரின் அருகே சென்றவள், ''ஜி, நீங்கள் தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாது. இதை உபயோகித்துக் கொள்ளுங்கள்'' என தன் கழுத்திலிருந்த மெல்லிய செயினைக் கழட்டி அவர் கையில் வைத்தாள்.

பெரியவர் கண்டிப்பாக முடியாது என்று மறுக்க, ''என்னை யார் என்று தெரியாத போதும் உங்கள் மகளாக நினைத்து என் உயிரைக் காப்பாற்றினீர்கள். அந்த உரிமையில் தருகிறேன். ஆபத்து சமயத்தில் ஒருவருக் கொருவர் உதவிக் கொள்ளா விட்டால் நாம் பிறந்து என்ன பயன் சொல்லுங்கள்!''



பெரியவர் அப்போதும் தயங்க, ''இது கடன்தான். பணம் வந்ததும் எனக்குத் திருப்பி தந்து விடுங்கள்'' என்றாள் ஜோஷிதா.

வேறு வழியின்றி அவர் கிளம்பிப் போகவும், ''கவலைப் படாதீர்கள் மாதாஜி. உங்கள் மகன் சரியாகி விடுவான்'' என்றாள் ஆறுதலாக.

பெரியவர் போய் வெகுநேரம் ஆகத் தொடங்கவும், கரீம் வலி தாங்காமல் முனக ஆரம்பித்தான். ''இங்கே மருந்து கடைகள் அருகில் இல்லையா மாதாஜி?'' என் றாள் ஜோஷிதா அவன் தாயிடம்.

''இருக்கிறது அம்மா. கர்ப்பூவினால் கடைகள் மூடி யிருக்கும். வெகுதூரம் போயிருப்பார்'' என்றார் அவர்.

மண்பானை தண்ணீரில் டவலை நனைத்து இரு வரும் அவனுக்கு ஒற்றி எடுத்த பின்பும் பெரியவர் வரவேயில்லை. ''நான் போய் பார்த்து விட்டு வருகிறேன்'' என்று ஜோஷிதா கிளம்பவும் அந்தப் பெண்மணி சொன் னார். ''நீயே ஊருக்குப் புதுசு. எங்கே போனார் என்று தெரியாமல் எங்கே போய் தேடுவாய்? அத்துடன் நகையைப் பணமாக மாற்றுவது இந்த சமயத்தில் லேசான காரியம் அல்ல.''

அவர் வார்த்தைக்காக மேலும் அரைமணி நேரம் பொறுத்த ஜோஷிதா கரீமின் உடலில் சூடு பறக்கவும், இனி தாமதிக்க முடியாது என்று எழுந்து வெளியே வந்தாள். வழியில் மருந்து கடையோ, பெரியவரோ தென்படுகிறார்களா என பார்த்துக் கொண்டே சிறிது தூரம் நடந்தவள் மெயின் ரோட்டை அடைந்ததும் பிரேக் போட்டது போல் நின்றாள். மெயின் ரோட்டில் ஒரு போலீஸ் வேன் அருகே பெரியவர் போலீசுடன்

வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தார். அவசரமாக அவர்கள் அருகே சென்ற ஜோஷிதா, ''என்ன பிரச்சனை?'' என்றாள் பெரியவரிடம்.

''எனக்குத் தெரிந்த ஒருவரின் வீட்டிற்குப் போய் நகையை அடகு வைத்து விட்டுப் பணத்தை வாங்கிக் கொண்டு வந்து கொண்டிருந்தேன். சந்தேகப்படும்படி நடமாடுபவர்களை கைது செய்து கொண்டிருந்த போலீஸார் என்னையும் பிடித்து வேனில் ஏறச் சொன்னார்கள். மகனுக்கு உடம்பு சரியில்லை. மருந்தை வாங்கித் தந்துவிட்டு வந்து விடுகிறேன் என்றால் கேட்க மறுக்கிறார்கள்'' என்றார் கண்ணில் நீர் வழிய.

ஜோஷிதா அருகிலிருந்த காவலரிடம் ஆங்கிலத்தில் சொன்னாள். ''இவர் மிகவும் நல்லவர். எந்த வம்புக்கும் போக மாட்டார். நிஜமாகவே இவரது மகனுக்கு உடம்பு சரியில்லை. நான்தான் மருந்து வாங்கி வரச் சொன்னேன். மற்றபடி இத்தனை வயதானவர் எப்படி கலவரத்தில் ஈடுபட முடியும் சொல்லுங்கள்!''

ஜோஷிதாவின் அழகான ஆங்கிலத்தையும், உயர்மட்ட தோரணையையும் பெரியவரின் பழசாகிப் போன லுங்கியையும் மாறி மாறிப் பார்த்த அந்த கான்ஸ்டபிள் ஜோஷிதாவிடம் மரியாதையுடன் சொன்னார். ''உங்களுக்குத் தெரியாது மேடம். இங்கு நடக்கும் கலவரங்களை பின்னால் இருந்து இயக்குவது இந்த மாதிரி பெரிசுகள் தான்.''

அவர்கள் பேசிக் கொண்டிருக்கையிலேயே ஒரு ஜீப் வந்து நிற்க கான்ஸ்டபிள் விறைப்பானார். அங்கிருந்த போலீசின் சல்யூட்டை ஏற்றபடி ஜீப்பிலிருந்து இறங்கிய நிதின் சர்மாவை பார்த்த ஜோஷிதா நிம்மதியுடன் அவர் அருகே சென்றாள். அவளைப் பார்த்த சர்மா வியப்புடன்



தலையசைத்தார். ''ஜோஷிதா நீ இங்கேயா இருக்கிறாய்? கிரண் எனக்கு எத்தனை முறை போன் செய்து விட்டான் தெரியுமா? இங்கே என்ன செய்கிறாய்?'' என்றார் அவளிடம்.

ஜோஷிதா விஷயத்தைச் சொன்னதும் ''சரி நீயும் இவரும் ஜீப்பில் ஏறுங்கள். நானே டிராப் பண்ணுகிறேன்'' என்ற சர்மா காவலர்களிடம் சில உத்தரவுகளைப் பிறப்பித்து விட்டு வந்து ஜீப்பில் அமர்ந்தார். வழியில் மூடியிருந்த ஒரு மருந்து கடையைத் திறக்கச் சொல்லி தேவையானதை வாங்கிக் கொண்டு வந்தார்கள். வீட்டிற்குப் போனதும் ஜோஷிதா கூட வந்த சர்மாவைக் கூட மறந்து போய் தன் சிகிச்சையை ஆரம்பித்தாள். சர்மா அவள் அருகில் வந்து கரீம் முகத்தைப் பார்த்தவர் ஏதோ யோசனையில் ஆழ்ந்தார்.

சலைனும், க்ளுக்கோசும் இறங்க, செலுத்தப்பட்ட ஊசி மருந்துகளில் கரீம் ஒரு மணி நேரம் கழித்து கண் விழித்தான். அதிசயமாய் அந்த ஒரு மணி நேரமும் சர்மா ஜோஷிதாவுடனே இருந்தார். கரீம் கண் விழித்ததும் ஜோஷிதாவின் அருகில் இருந்த சர்மாவைப் பார்த்ததும் அவன் முகம் வெளுத்தது. கரீமின் முகத்தைப் பார்த்த ஜோஷிதா புரிந்து கொண்டவளாகச் சொன்னாள். ''சர்மா சார் எனக்குத் தெரிந்தவர். எனவே மருந்து வாங்கப் போன எங்களை டிராப் பண்ணுவதற்காக வந்தார்.''

அந்த பதிலில் சமாதானமாகாமல் கரீம் தன் பார்வையைத் திருப்பினான். அவன் அப்பா ஜோஷிதாவிடம் சொன்னார், ''என் அப்பா ஒரு சுதந்திரப் போராட்டத் தியாகி மகளே! காந்தியின் பின்னால் தண்டி யாத்திரை போனவர். சிறு வயதில் நானும் அவருடன் போயிருக்கிறேன். பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிந்தபோது

தனிநாடு அமைக்க பாகிஸ்தான் முஸ்லிம்களுக்கெல்லாம் அழைப்பு விடுத்தது. எங்கள் உறவினர்களில் பலர் போனபோதும் என் அம்மாவும், அப்பாவும் சாகும்வரை நாங்கள் இந்தியர்கள்தான் என்பதில் உறுதியாக இருந்தார்கள். இறுதியில் இந்த மண்ணில் தான் உயிரை விட்டார்கள். அந்நியர் ஆண்டபோது எல்லோரும் இந்தியர்களாய் இருந்தோம். இன்று நம்மை நாமே ஆளும் போது இந்து, கிறிஸ்துவன், முஸ்லீம் என அந்நியர்களாகிப் போனோம்?'' என்றார் துக்கத்துடன்.

காவல் துறையிடம் அகப்பட்ட வேதனை இவருக்கு இன்னும் மறையவில்லை என்றுணர்ந்த ஜோஷிதா ஆறுதலாய் அவர் தோளில் கை வைத்தாள். ''மிகப் பெரிய வன்முறை சம்பவம் நடந்திருக்கும்போது எல்லோரையும் விசாரிக்க வேண்டியது காவல்துறையின் கடமை. அவர்கள் அதைத்தான் செய்தார்கள்.''

''ஜோஷிதா கிளம்பு. உன்னை வீட்டில் விட்டு விட்டுப் போகிறேன்'' என்ற சர்மா கரீமின் அப்பாவின் தோளில் கை போட்டு எதையோ பேசியபடி வெளியே சென்றார். கரீம் அம்மாவிடம் அவனுக்குக் கொடுக்க வேண்டிய மருந்துகளைப் பற்றிய விபரம் சொல்லி விட்டு அவனுக்கு தான் வாங்கி வந்த ஹார்லிக்ஸை கலந்து தருமாறு கூறினாள். அவர் எழுந்து போய் ஸ்டவ்வைப் பற்ற வைக்கவும், கரீமிடம் திரும்பி அவசரமாகப் பேசினாள். ''கரீம் உன் வீட்டில் ஏற்கனவே வன்முறைக்கு இரண்டு பலி கொடுத்தாயிற்று. மூன்றாவதாக யாரும் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்வது உன் பொறுப்பு. ஒரு வன்முறை நடக்கும்போது அதற்கு ஆளானவனை மட்டுமல்ல, சில சமயம் ஆரம்பித்தவனையே கூட பாதிக்கும். இன்று மாலையில் நீ ஓங்கிய



இரும்புத் தடி என் தலை மீது இறங்கியிருந்தால் இப்போது உனக்குத் தேவைப்படும் மருத்துவ உதவி கிடைக்காமல் போயிருக்கக் கூடும்.''

கரீம் தூக்கிவாரிப் போட்டவனாய் எழுந்து அமர்ந்தான். தன்னை அவள் அடையாளம் கண்டு கொண்டாள் என்பது திகைப்பை ஏற்படுத்தியது. பேச வாய் வராமல் அவன் அமர்ந்திருக்க, ஜோஷிதா சொன்னாள். ''உன் பெற்றோர்கள் எவ்வளவு நல்லவர்கள் பார்த்தாயா கரீம்? முன்பின் அறிமுகமில்லாத பெண்ணுக்கு அடைக்கலம் கொடுத்து தங்களிடம் இருக்கிற உணவை பகிர்ந்து கொடுத்து பாதுகாக்கிற பெருந்தன்மையில் பத்தில் ஒரு பங்காவது அவரது மகனான உனக்கு இருக்க வேண்டாமா? சந்தேகத்தின் பேரில் போலீஸ் விசாரித்ததையே பொறுத்துக் கொள்ள முடியாத உன் அப்பாவால் தன் மகன் குற்றவாளி என்பது தெரிந்தால் தாங்கிக் கொள்ள முடியுமா என்று யோசித்துப் பார்.''

கரீமின் அம்மா அருகில் வரவும் எழுந்து கொண்ட ஜோஷிதா, அவன் பெற்றோருக்குப் பலமுறை நன்றி கூறி விட்டு சர்மாவுடன் கிளம்பினாள். தெருவெங்கும் வெறிச்சோடிக் கிடந்தது. சற்று முன் பாட்டும் டான்சுமாய் வண்டிகளில் எடுத்து வரப்பட்ட விநாயகர் சிலைகள் தெருவில் அநாதையாய் கிடந்தன.

''கிரணுக்கு நீ என்னுடன் வருவதாகத் தகவல் சொல்லிவிட்டேன்'' என்றார் சர்மா அவளிடம். ''நான் விடுமுறையில் நேற்றே கிளம்பி இருக்க வேண்டியவன், என் மகனுக்கு உடல்நிலை சரியில்லாததால் பயணத்தை ஒரு நாள் தள்ளிப் போட்டேன். அதற்குள் கலவரம் என்பதால் உடனே டியூட்டியில் சேர வேண்டியதாகி

விட்டது'' சர்மா பேசிக் கொண்டே போக, கிரணுக்கு தகவல் சொல்லாத தன் முட்டாள் தனத்தை நினைத்து ஜோஷிதா மனம் நொந்தாள். காணாமல் போய் அவனை அலைய வைப்பது இது இரண்டாவது முறை. கிரண் ரொம்ப கோபித்துக் கொள்ளப் போகிறான் என்ற பயத்துடன் ஜோஷிதா வீட்டு வாயிலில் இறங்கினாள்.

சர்மா விடைபெறக் கூட நேரமின்றி வேகமாகக் கிளம்பிப் போக, ஜோஷிதா இருண்ட காரிடாரில் மெதுவாக நடந்து போய் அழைப்பு மணியை அழுத்தினாள். பதில் இல்லாது போகவும், கதவைத் தொட கதவு தானாகத் திறந்து கொண்டது. ஜோஷிதா உள்ளே நுழைந்து கதவைத் தாழிட்டுத் திரும்பியதும் அவள் எதிரே நின்றிருந்த கிரண், கடுமையான குரலில் சொன்னான், ''உன் இஷ்டப்படி போய் விட்டு நினைத்த நேரம் திரும்பி வர இது ஹோட்டலோ, லாட்ஜோ இல்லை ஜோஷிதா.''

''என் இஷ்டப்படிப் போகவில்லை. கபூர் துணையுடன் சாமி ஊர்வலத்தை வேடிக்கை பார்க்கப் போனேன்'' என்றாள் அடங்கிய குரலில்.

''ஏற்கனவே ஒரு ஆபத்திலிருந்து தப்பிப் பிழைத்து வந்திருக்கிறாய். சர்மாவும் நானும் உன்னை அனுமதியின்றி செல்ல வேண்டாம் என பலமுறை எச்சரித்திருக்கிறோம். அப்படியிருந்தும் உனக்கு இந்த துணிச்சல் எப்படி வந்தது?''

கிரண் முகம் இறுகியிருக்கவும் ஜோஷிதா சொன்னாள், ''நான்தான் சொன்னேனே கபூருடன்.''

''என்னிடம் ஏன் சொல்லவில்லை?''

ஜோஷிதா அமைதியாக, ''சொல்லு என்னிடம் ஏன் சொல்லவில்லை?'' என்றான் கிரண் கடுமையாக.



ஜோஷிதா பொறுமை இழந்தாள். அவள் சொல்வதை அவன் காது கொடுத்துக் கேட்க மறுக்கிறான் என்ற கோபத்தில் சொன்னாள், ''எனக்கு அனுமதி தர நீ யார்?''

அந்தக் கேள்வியில் சிறிது நேரம் அறைக்குள் அமைதி நிலவியது. அழுத்தமான காலடிகள் அவளை நெருங்கின. ''இந்த சந்தேகம் உனக்கு அடிக்கடி வருகிறது இல்லையா? இன்று நான் யார் என்பதை உனக்குச் சொல்லுகிறேன்'' என்றான் கிரண்.

கிரணின் அண்மையை உணர்ந்தும் ஜோஷிதா அசையாமல் நின்றாள்.

அவன் கைகள் தன் இடுப்பை வளைத்தபோதும், இதழ்கள் முகமெங்கும் பதிந்த போதும் கூட விழிகளைத் திறக்காமல், நகராமல் நின்றாள். கிரண் அவளைத் தூக்கிச் சென்று படுக்கையில் விட்ட போதும், நெருங்கி அணைத்த போதும் தான் பிறந்து இத்தனை நாள் இவனுக்காகவே காத்திருந்ததான உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. எனவே கிரண் அவள் முகம் நோக்கி குனிந்தபோது ஜோஷிதா புன்னகையுடனே அவனை ஏற்றுக் கொண்டாள்.

வெகு நாட்களாய் அவர்களுக்குள் நடந்து வந்த கண்ணா மூச்சி ஆட்டம் அன்றுடன் முடிந்து போய் தாம்பத்தியத்தின் புதிய விளையாட்டொன்று ஆரம்பமானது.



## 12

காலையில் கண் விழித்த ஜோஷிதாவுக்கு உலகமே மிக அழகாக, இனிமையாகத் தெரிந்தது. எப்போதும் இறுக்கமான முகத்துடன், கடுமையாக பேசும் கிரண்

இத்தனை அன்பையும் எங்கே வைத்திருந்தான் என்று வியப்பாக இருந்தது. சிரிப்பும் விளையாட்டுமாய் அவளையே சுற்றி வந்தவனிடம் ஜோஷிதா கேட்டாள்.

''கிரண் உண்மையிலேயே இது நீதானா என்று சந்தேகமாக இருக்கிறது. ஒரு நாள் இரவில் ஒருத்தர் சுபாவம் இப்படி மாறி விடுமா?''

''ம்.. அது ஒரு கதை. என்றோ ஒரு நாள் எதிர்பாராமல் தொடங்கி நேற்றைய இரவில் முழுமையடைந்த கதை'' என்றான் கிரண் பெருமூச்சுடன்.

''என்ன கதை அது, சொல்லேன்!''

''ஒரு பெண்ணைக் காப்பாற்றப் போய் நானே மீள முடியாமல் சிக்கிக் கொண்ட கதை.''

''நான் வேண்டுமானால் உனக்கு உதட்டுமா?''

''எதற்கு?''

''மீள்வதற்கு?''

''என்ன செய்வாய்?''

''சிக்கிக் கொண்ட பெண்ணிடமிருந்து விடுபட வேண்டுமானால் வேறொரு பெண்ணிடம் சிக்கலாம். உதாரணமாக லதிகா.''

''ஜோஷி'' என்றான் கிரண் திகைப்புடன். ''லதிகாவிடம் நான்...'' அவன் சொல்லும் முன் ஜோஷிதா குறுக்கிட்டாள்.

''எனக்குத் தெரியும் கிரண். உன் மீதுள்ள அதிகப்படி அன்பினால் ஏற்பட்ட பொறாமையில் நான் சீப்பாக நடந்து கொண்டேன். ஐ யம் ஸாரி.''

''ஸாரி, தேங்க்ஸ் என்ற வார்த்தைக்கெல்லாம் நமக்கிடையே அர்த்தமே இல்லை'' என்றான் கிரண் அவளை முத்தமிட்டு.



மதியம் திறந்திருந்த ஜன்னல் வழியாக சமையல் அறைக்குள் நின்றிருந்த ஜோஷிதாவை பார்த்துவிட்ட தாராபாய் கையிலிருந்த கோதுமை பாத்திரத்தைப் போட்டு விட்டு ஓடி வந்தாள்.

''நீதி எப்போது வந்தீர்கள்? எங்களை எல்லாம் பயப்பட வைத்து விட்டீர்கள் பார்த்தீர்களா? கதவு மூடியே கிடந்ததால கிரண்ஜிகூட வீட்டில் இல்லை போலிருக்கிறதே, யாரைக் கேட்பது என தவித்துக் கொண்டிருந்தேன். என் வயிற்றில் பாலை வார்த்தீர்கள்'' என்றாள் படபடப்பாக.

குரல் கேட்டு எட்டிப் பார்த்த கிரண், ''என்ன தாராபாய், என் பொண்டாட்டி என்ன சொல்கிறாள்?'' என்றான் அவளிடம்.

தாராபாய் தான் கேட்டதை நம்ப முடியாத வியப்புடன் ஜோஷிதாவைப் பார்த்தாள். மலர்ந்து சிவந்திருந்த முகம் உண்மையைச் சொல்ல, அருகில் வந்து நெற்றியை வழித்து முத்தமிட்டாள். ''இதை கேட்கத்தான் இத்தனை நாளாய் காத்திருந்தோம். என் ப்ரார்த்தனை பலித்தது'' என்ற தாராபாய் நினைவு வந்தவளாகச் சிரித்தாள். ''காணாமல் போன பெண்ணைக் கண்டு பிடித்துக் கல்யாணம் கட்டி கூட்டி வருவதை சினிமாக்களில்தான் பார்த்திருக்கோம். உங்கள் கதை அதையும் மிஞ்சி விட்டது. நான் போய் சூரிடம் சொல்கிறேன்'' என்று விரைந்தாள்.

''இந்த ஸ்வீட்டுடன சேர்ந்தே விஷயத்தைச் சொல்'' என அவள் கையில் இனிப்பு பாக்கெட்டைத் திணித்தான் கிரண்.

''தாராபாய் நமக்கு திருமணம் நடந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறாள் கிரண். எனக்குக் கூட

நாம் திருமணம் செய்து கொண்டால்தான் திருப்தியா
இருக்கும்.''

''செய்யலாம். அதற்கு முதலில் உன் பெற்றோரை
வரவழைக்க வேண்டும்'' என்று கிரண் சொன்னா

''என்னைப் பொறுத்தவரை திருமணம் என்பது ஒ
சம்பிரதாயம். அவ்வளவுதான். என் வாழ்க்கையில் வந்
முதல் பெண் நீ. கடைசி பெண்ணும் நீதான். எப்போது
நீ... நீ மட்டும்தான்.''

ஜோஷிதாவுக்கு அந்த வார்த்தைகளில் வாழ்ந்
முடிந்த திருப்தி ஏற்பட்டது.

ஜோஷிதாவும் கிரணும் மரீன் ட்ரைவ்வில் நின்றிரு
தார்கள். நீலக்கடலும் அதற்குக் கரை கட்டினாற் போ
வரிசையாய் நின்ற உயர்ந்த கட்டிடங்களும், கடற்கரை
யில் பறந்து திரிந்த புறாக்களும் மிக அழகாக இருந்தன
ஒரு சாக்கோ பாரை சுவைத்தபடியே நடந்த ஜோஷிதா
கடல் காற்றில் படபடத்த புடவையைச் சமாளிக்க மு
யாமல் திணறுவது கிரணுக்கு வேடிக்கையாக இருந்தது
அவன் சிரிப்பதைப் பார்த்த ஜோஷிதா ''இதற்காகத்தான்
நான் புடவை கட்ட மறுத்தேன். கட்டாயப்படுத்தி கட்ட
சொல்லிட்டு சிரிக்கவா செய்யற?'' என சிணுங்கினாள்

கறுப்புப் புடவைக்கு நடுவே பளீரிட்ட இடையை
அணைத்தபடி, ''புடவைதான் வசதி ஜோஷி'' என்றான்
கிரண்.

''உனக்குத்தானே! நன்றாக தெரிகிறது எனக்கு''
ஜோஷிதா அவன் கைகளை விலக்கினாள்.

''இத்தனை அழகான பெண் அருகில் இருக்கையில்
யாரால் விலகி நடக்க முடியும்?'' என கிரண் மீண்டும்
அவளை அணைத்தபடி நடக்க, ''கிரண் இது பப்ளிக்



ப்ளேஸ்'' என்றாள் ஜோஷிதா அவனுக்கு நினைவுறுத்தும் விதமாக.

''சோ. வாட்?''

இவனுக்கு எப்படிச் சொல்வது என்று ஜோஷிதா யோசிக்க, ''ரொம்ப யோசிக்காதே ஜோஷி. என்னை விட பெஸ்ட் சாய்ஸ் உனக்கு இந்தியாவிலேயே இல்லை'' என்றான் கிரண் பெருமையுடன்.

''ரொம்ப அலட்டிக்காதே. அதோ அந்த பானிபூரி விற்பவன் கூட உன்னை விட அழகாகத்தான் இருக்கிறான்.''

திரும்பி அவனை ஒரு பார்வை பார்த்த கிரண், ''உன் ஆசையை கெடுப்பானேன், அந்த பானிபூரிக்காரனிடம் உனக்காக நானே பேசுகிறேன்'' என தள்ளுவண்டியை நோக்கி நடந்தான்.

''என்ன பேசப் போகிறாய்?'' என்றாள் ஜோஷிதா.

''அவனுக்கு உன்னைப் பிடித்திருக்கிறதா என்று கேட்கப் போகிறேன்.''

''கிரண் பைத்தியமா உனக்கு?''

கிரண் பதில் சொல்லாமல் நடக்க, ஜோஷிதா அவன் கைகளை இறுகப் பற்றினாள். ''இந்த விளையாட்டு விபரீதத்தில் முடியக் கூடும் கிரண். வேண்டாம்.''

அவன் நிற்காமல் நடக்க, ''ஒரு ஜோக் ஆக சொன்ன விஷயத்தை சீரியஸ் ஆக்காதே'' என்றாள் ஜோஷிதா கூடவே நடந்தபடி. கிரண் தள்ளுவண்டியை நெருங்கியதும் இறுக அவனை அணைத்தபடி சொன்னாள். ''நோ கிரண்.''

கிரண் திரும்பி அந்த கடைக்காரனிடம் சொன்னான் ''ஏக் ப்ளேட் பானிபூரி.''

''அச்சா சாப்'' என அவன் குட்டி பூரிக்குள் ஆலு மசாலாவைத் திணிக்க, கிரண் தன்னை அணைத்திருந்த

ஜோஷிதாவிடம் சொன்னான். ''இது பப்ளிக் ப்ளேஸ் தான். ஆனால் உன்னைப் போல் நான் கைகளைத் தட்டி விட மாட்டேன். நீ எவ்வளவு நேரம்னாலும் என்னை கட்டிப் பிடிச்சிக்கலாம்.''

ஜோஷிதா அப்போதுதான் தன் நிலை உணர்ந்து விலகினாள். ''ராஸ்கல், என்னையா ஏமாத்தற?'' என அவனை அடிக்க முற்பட, கிரண் அவளிடமிருந்து விடுபட்டு ஓடினான். இருவரும் அலையில் ஓடி, புறாக்களை துரத்தி சிறு குழந்தைகளாய் மாறிப் போனார்கள். ஜோஷிதா கடைசியில் மூச்சு வாங்க ஓர் இடத்தில் அமர்ந்து விட கிரணும் அவள் அருகில் அமர்ந்தான்.

வானம் நன்றாக இருட்டியிருக்கிறது. பௌர்ணமி நிலவு மேலே எழும்பி இருக்க, அரபிக் கடல் புதுவித அழகுடன் ஜொலித்தது. நிலவின் ஒளியில் உருக்கி வார்த்த தங்கச் சிலையாய் ஜோஷிதா மின்ன, கிரண் விழிகளை அசைக்காமல் அவளையே பார்த்தான்.

ஜோஷிதா தன் நெற்றியால் எதிரில் இருந்தவனை முட்டினாள். ''என்னடா புதுசா பாக்கற?'' என்றாள் கொஞ்சலாக.

''தினமும் நீ புதுசா தெரியற'' என்றான் கிரண்.

''ஹேய், குடும்ப வாழ்வில் நுழையும் புதிதில் எல்லா ஆண்களும் பெண்களிடம் சொல்லும் டயலாக் இது'' என்றாள் சிரிப்புடன்.

''அப்படியா? அப்ப நமக்கு டயலாக்கே வேண்டாம்'' என்ற கிரண் அவளை இறுக அணைத்து முத்தமிட்டான்.

உரிமையுடன் அவன் தோளில் சாய்ந்த ஜோஷிதா, ''கிரண் உன்னிடம் இத்தனை மென்மையை நான் எதிர்பார்க்கவில்லை'' என்றாள் கரைந்து போனவளாய்.



''ஒரு ஆணின் கடுமை எல்லாம் தனக்கு விருப்பமான பெண்ணை சந்திக்கும் வரை தான் ஜோஷி.''

''உண்மைதான். எனக்கு திருமணமே நிச்சயித்திருந்த போதும் ஹரிஷுடன் தனிமையை நாடியதே இல்லை. ஆனால் அறிமுகமற்ற உன்னுடன் ஒரே அறையில் தங்க நேர்ந்தபோது எனக்கு எந்தத் தயக்கமும் ஏற்படவில்லை'' என்றாள் ஜோஷிதா.

''ஆனால் உன் பாஸ்போர்ட் இரண்டு நாளில் கைக்கு வந்து விடும் என்று சர்மா சொன்னார். வந்ததும் நீ கிளம்பத்தான் வேண்டும் இல்லையா?''

ஜோஷிதா அவனை நெருங்கி அமர்ந்தாள். ''நான் உன்னை விட்டு எப்படிப் போவேன் கிரண்? நீ என்னிடம் கடுமையாக நடந்து கொண்ட போதே உன்னைப் பிரிய முடியாமல் தவித்தேன். இப்போது எப்படிப் போவேன்.''

''போய்த்தான் ஆக வேண்டும். வெளிநாட்டு பாஸ்போர்ட்டுடன் குறுகிய கால விசாவுடன் நீ எத்தனை நாள் இங்கிருக்க முடியும்? அதுவுமில்லாமல் உன் பெற்றோரிடமும் நம்மைப் பற்றி நீ சொல்ல வேண்டும். சொல்லிவிட்டு நிரந்தரமாக இங்கே இருப்பதற்கான ஏற்பாட்டுடன் விரைவில் திரும்பி விடலாம்'' என்றான் கிரண்.

''சே! உனக்கு மனசு என்ற ஒன்று இல்லவே இல்லை. மனிதாபிமானமற்ற செயல்களில் ஈடுபடுவதால்தான் ஈவிரக்கமின்றி என்னையும் போக வேண்டுமென்று உன்னால் சொல்ல முடிகிறது'' என்றாள் ஜோஷிதா கோபத்துடன்.

''உண்மைதான்'' என்றான் கிரண் வருத்தத்துடன். ''எனக்கு மனிதாபிமானம் இருந்திருந்தால் உன்னுடைய

வாழ்க்கையை வீணடித்திருக்க மாட்டேன். என்னுடைய வேலையில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் ஆபத்துகளையும், அபாயங்களையும் தெரிந்த பின்பும் அதே சுழலுக்குள் உன்னையும் இழுத்துக் கொள்ளும் அளவிற்கு என் புத்தி பேதலித்துதான் போய்விட்டது. உன்னைப் பார்த்த நாளாய் அறிவுக்கும் உணர்ச்சிக்கும் நடந்த போராட்டத்தில் ஒரு நொடியில் அறிவை உணர்ச்சி தோற்கடித்து விட்டது. அதன் பலன் உன்னுடைய எதிர்காலம் சவாலான பாதையில் திரும்பி விட்டது."

கரகரத்த குரலில் கிரண் பேச ஜோஷிதா அவன் கன்னங்களைப் பற்றினாள். "இன்பமோ, துன்பமோ இனி வரும் காலம் நம்முடையது கிரண். இதில் என்னுடையது என்று தனியாக எதுவும் இல்லை. நான் விபரமறியாத பெண் இல்லை. என் வாழ்க்கை உன்னுடன் என்பது நான் தெரிந்தே எடுத்த முடிவுதான். நீ என்னை ஏமாற்றி உபயோகித்துக் கொள்ளவில்லை. எனவே இதில் நீ வருத்தப்பட எதுவும் இல்லை."

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு கிரண் தன் முகத்தைப் பற்றியிருந்த கரங்களைப் பற்றியபடி சொன்னான். "எப்படியிருந்தாலும் நான் உனக்கு நல்ல கணவனாக இருப்பேன். என் உயிர் உள்ளவரை உன் நிழலைக்கூட யாரும் நெருங்க முடியாது" என்றான் உணர்ச்சி வசப்பட்டு.

மனம் கிளர்ந்து போனதை வெளிக்காட்டாமல் ஜோஷிதா சிரித்தாள். "சும்மா டயலாக் விடாதே கிரண். என்னை நெருங்கக் கூடியவர்கள் யார் இருக்கிறார்கள் இங்கே?"

பேச்சு வாக்கில் கடற்கரை வெறிச்சோடியதைப் பார்த்த கிரண், "மை காட், பதினொரு மணியாகி விட்டது ஜோஷி. கிளம்பு போகலாம்" என்றான் எழுந்து நின்று.

வாகனங்கள் நிறுத்துமிடம் கிட்டத்தட்ட காலியாகி விட்டிருந்தது. பாவ்பாஜி ஐஸ்கிரீம் வண்டிகள் சத்த



மின்றி வீடு திரும்பிக் கொண்டிருந்தன. இவர்கள் கார் அருகே நின்றிருந்த பைக்கை ஒருவன் ஸ்டார்ட் செய்ய முயன்று கொண்டிருந்தான். இரவின் அழகான அமைதி அந்த சூழ்நிலைக்கு தனி கவர்ச்சியைக் கொடுக்க, ஜோஷிதா உல்லாசத்துடன் கிரண் இடுப்பை வளைத்தாள். "எனக்கு டூயட் பாடணும் போலிருக்கு கிரண்."

"அப்ப வா. சீக்கிரம் வீட்டிற்குப் போய்விடலாம்" கிரண் சத்தமாகச் சிரித்தபடி கார் கதவை திறந்த வேகத்தில் அருகில் நின்றிருந்த பைக்கில் கதவு உரசவும் "ஸாரி" என்றான் கிரண் பைக்காரனிடம்.

அவன் நிமிர்ந்தே பார்க்காமல் தன் வேலையில் இருக்கவும், "நான் உதவட்டுமா உங்களுக்கு?" என்றான் கிரண் இயல்பாக.

அவன் தேவையில்லை என தலையசைக்கவும், கிரண் மேற்கொண்டு எதுவும் கேட்காமல் வந்து காரில் அமர்ந்தான். சுற்றி வந்து ஏறப்போன ஜோஷிதா காரின் ஹெட்லைட் வெளிச்சத்தில் பைக்காரனின் முகம் தெரிய "கரீம்" என்றாள் தன்னையறியாமல்.

அவன் நிமிர்ந்து கூடப் பார்க்காமல் இருக்கவே, "கரீம் இப்போது உன் உடல்நிலை சரியாகி விட்டதா? உன் பெற்றோர் நலமா?" என்றாள் அவன் அருகில் சென்று.

ஜோஷிதா அருகில் நிற்பதை பொருட்படுத்தாதவனாய் அவன் தன் பைக்கை கிளப்பிக் கொண்டு போக, ஜோஷிதா திகைத்துப் போனாள்.

அவள் காரில் அமர்ந்ததும் "யார் அவன்? உனக்குத் தெரியுமா?" என்றான் கிரண் வியப்புடன்.

"தெரியும்" என்ற ஜோஷிதா கலவரத்தின்போது நடந்த விஷயங்களை சொன்னாள். "அன்று என்னை

கரீம் தாக்க வந்தபோது அவன் கூட்டாளி ஏதோ சொல்லி அவன் கவனத்தைத் திருப்பியதால்தான் நான் தப்பித்தேன். இப்போது யோசிக்கையில் இவன் கூட்டாளி நம் இஸ்மாயில் போலவே இருந்தான். இஸ்மாயிலாக இருந்தால் அவன் எப்படி காவி உடையில் இருக்க முடியும்? இவர்களுடன் அவனுக்கு என்ன வேலை?''

''நீ சொல்வது உண்மையா ஜோஷிதா? பயத்தில் குழம்பி எதையும் தவறாகச் சொல்லவில்லையே!'' என்றான் கிரண் அவளிடம்.

''நிச்சயமாக இல்லை. இஸ்மாயிலையும், கரீமையும் எனக்கு நன்றாக அடையாளம் தெரியும்.''

கிரண் எதுவும் பேசாமல் அமைதியானான். கார் மலபார் ஹில்ஸ் நோக்கி விரைந்தது.

''முட்டாள்'' என்றான் அலிகார் கோபத்துடன். எதிரில் கரீம் தலைகுனிந்து நின்றிருந்தான்.

''இயக்கத்தில் நீ சேர்ந்து ஆறு வருடமாகிறது. இதுவரை பெரிய ஆபரேஷன்களில் கூட இலக்கு தவறியதில்லை. புதிய ஆட்களை அறிமுகப்படுத்தி இயக்கத்தைப் பலப்படுத்தியவனும் நீதான். உன்னால் இந்த சிறிய வேலையை முடிக்க முடியவில்லை என்றால் வெட்கமாக இல்லை?''

''சற்று இருட்டிய பிறகு பாம் செட் பண்ணலாம் என நான் சமயம் பார்த்து காத்திருந்தேன். அந்தக் கார் அருகில் போலீஸ் நடமாட்டமும் இருந்தது. கூட்டம் குறைந்த சமயம் நான் வேலையை முடிப்பதற்குள் அவர்கள் வந்து விட்டார்கள்.''

அலிகாரின் பார்வை கரீமை துளைத்தது. ''நீ சால்ஜாப் சொல்கிற ஆள் இல்லையே! வேறு ஏதேனும் விஷயம் இருக்கிறதா?''



''அப்படி எதுவும் இல்லை. எப்போதாவது இந்த மாதிரி தவறுவது சகஜம் தானே'' என்றான் கரீம்.

''குறி தவறினால் பரவாயில்லை. இலக்கை விட்டு விலகிப் போவதுதான் ஆபத்து.''

''இனி சரியாகப் பார்த்துக் கொள்வேன்'' என்றான் கரீம்.

அலிகார் முஸஃபராபாத்தில் இராணுவ பயிற்சி பெற இயக்கத்திலிருந்து செலக்ட் ஆனவர்களைப் பற்றி சொன்னான். இந்தியா முழுவதிலுமிருந்து நாற்பது பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். பாகிஸ்தான் ஆக்ரமிப்பு காஷ்மீரிலும், பாகிஸ்தானின் வடமேற்கு மாகாணங்களில் உள்ள பயிற்சி முகாம்களிலும் பயிற்சி அளிக்கப்படும். பாகிஸ்தானின் ஓய்வு பெற்ற சிறந்த இராணுவ வீரர்களாலும், உளவுத் துறையாலும் அளிக்கப்படும் இந்த பயிற்சி உங்களை சிறந்த செயல் வீரர்கள் ஆக்கும். நம் குழுவிலிருந்து கரீமும், இஸ்மாயிலும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள்.''

அலிகார் சொல்லி முடித்ததில் கூட்டத்தில் மெல்லிய கரவொலி எழுந்தது. கரீம், இஸ்மாயில் இருவரும் தலை தாழ்த்தி ''அல்லாவின் புகழ் ஓங்குக.'' என்றார்கள் ஒரே குரலில்.

அலிகார் பெருமையுடன் அவர்களைத் தட்டிக் கொடுத்தான். ''இதுவரை உள்ளூரில் இயக்கத்திற்காக வேலை செய்த நீங்கள் இனி உலக அளவில் புகழ்பெறப் போகிறீர்கள். கடமையைச் செய்யுங்கள். உங்கள் குடும்பத்தை இயக்கம் பார்த்துக் கொள்ளும்.''

அவர்கள் விடைபெற்றுக் கிளம்புகையில் அலிகார் கும்பலிலிருந்த ஒருவனிடம் சொன்னான். ''நேற்று கரீம் முடிக்க தவறிய வேலையை நீதான் முடிக்க வேண்டும்.''

வெளியே நடந்த கரீம் நின்றான். "ஒருமுறை தவறு நேர்ந்து விட்டது அலிகார். நானே செய்கிறேன்."

"நீ இராணுவ பயிற்சிக்குத் தயாராகிற வேலைகளை கவனி. வேறு எதிலும் தலையிட வேண்டாம்" என்றான் அலிகார் உத்தரவிடும் குரலில்.

திரும்பி நடக்கையில் இஸ்மாயில் கேட்டான். "நீ எடுத்த வேலையில் தோல்வியே இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாயிற்றே! நேற்று ஏன் வேலையை முடிக்கவில்லை?"

கரீம் பதில் பேசாமல் இருக்கவும் "சொல்லு கரீம்" என்றான் மறுபடி.

"அந்த காரில் வந்தவனுடன் ஒரு பெண் இருந்தாள். அவள் ஒரு சமயம் என் உயிரைக் காப்பாற்றியதுடன், போலீசிடமிருந்தும் என்னைக் காப்பாற்றினாள். அன்று அவள் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் நான் இரும்பு கம்பிகளுக்கு பின்னால் கிடந்திருப்பேன். என் அப்பா அவமானத்தில் உயிரை விட்டிருப்பார்."

"கரீம், நம் இயக்கத்தில் சென்டிமென்ட்டுக்கு இடம் இல்லை என எனக்கு சொல்லிக் கொடுத்தவனே நீதான். ஆயுதத்தைக் கையில் எடுத்த பின் எதிராளிக்காக ஒரு நொடி தாமதித்தாலும் அது உன்னையே அழித்து விடும் என்பது தெரியாதா உனக்கு?"

"எதிராளி யார் என்பதைப் பொறுத்துதான் அடுத்த மூவ் என்ன என்பதை தீர்மானிக்க வேண்டும்."

"உனக்கு தீர்மானிக்கிற உரிமையை யார் கொடுத்தார்கள் கரீம்? கட்டளைக்குக் கீழ்ப்படிவதுதானே நம் வேலை?"

கரீம் ஒரு நொடி மௌனமானான். "கேள்வி கேட்கவோ, முடிவெடுக்கவோ நமக்கு உரிமை இல்லைதான். ஆனால்



இஸ்மாயில் இதே தவறைத்தானே நீயும் முன் ஒரு முறை செய்தாய்?"

"நானா?"

"ஆமாம். கணேஷ் சதுர்த்தி தினத்தன்று இரத்தன் பஜார் பகுதியில் கலவரத்தை உருவாக்கி கண்ணில் படுபவர்களைத் தாக்க சொல்லி நமக்கு உத்தரவு. அங்கு ஒரு குறுகிய தெருவின் வீட்டு சுவரில் ஒட்டியபடி பயந்து போய் நின்ற ஒரு பெண்ணை உனக்கு நினைவிருக்கிறதா?"

இஸ்மாயில் திகைப்புடன் 'இருக்கிறது' என தலையசைத்தான்.

"அந்தப் பெண்ணின் கதை அன்றுடன் முடிந்திருக்க வேண்டியது உன்னால் அன்று தப்பித்தாள்."

"என்னாலா?"

"எனக்குத் தெரியும் இஸ்மாயில். நீ எங்கள் கவனத்தைத் திருப்பி வேறு திசையில் ஓட வைத்தாய். அதனால் அந்தப் பெண் அன்று நம்மிடமிருந்து தப்பினாள். அப்படி தப்பியதால்தான் இன்று நான் தப்பிப் பிழைக்கவும் உதவி செய்தாள்."

"கரீம் உனக்கு ஜோஷிதாவை தெரியுமா?" என்றான் இஸ்மாயில் ஆச்சரியத்துடன்.

கரீம் சுருக்கமாய் நடந்ததைச் சொல்ல, "ஜோஷிதா வந்த காருக்கு ஏன் பாம் வைக்கச் சொன்னார்கள்?" என்றான் இஸ்மாயில் புரியாமல்.

"ஜோஷிதாவை அல்ல. அவள் உடன் வந்தவனைக் கொல்ல சொல்லித்தான் உத்தரவு."

"உடன் வந்தது யார்?"

"கிரண்."

இஸ்மாயில் அதிர்ந்து போனான். "கிரணுக்கும் நம் இயக்கத்திற்கும் என்ன சம்பந்தம்?"

"யாருக்கு தெரியும்?" என்ற கரீம் "இயக்க நடவடிக்கைகளை நாம் இப்படி விவாதிப்பது தெரிந்தால் அடுத்த நிமிடம் உயிருடன் இருக்க மாட்டோம். எனவே இந்தப் பேச்சை இத்துடன் விட்டு விடலாம்" என்றான் முடிவாக.

"ஆனால் அலிகார் இந்த அசைன்மென்டை வேறு ஆளிடம் கொடுத்திருக்கிறான்" என்றான் இஸ்மாயில் கவலையுடன்.

"நம்மால் முடிந்தது, நீ ஒரு முறையும், நான் ஒரு முறையும் அந்த பெண்ணின் உயிரைக் காப்பாற்றி விட்டோம். அதற்கு மேல் அல்லா விருப்பப்படிதான் நடக்கும்" என்றான் கரீம்.

மலபார் ஹில்சின் அந்த வீடு சுற்றியிருந்த அமைதியின் நடுவே கம்பீரமாய் நின்றது. பளிங்கும், கிரானைட்டும் இழைக்கப்பட்ட தரையிலும், கடைந்தெடுத்த பர்னிச்சர்களிலும் பணக்காரத்தனம் தெரிந்தது.

வீட்டைச் சுற்றிலும் ஓடிய லானின் பச்சைக்குக் கரை கட்டினாற் போல் டேலியாக்கள் தலையசைத்துச் சிரித்தன. ஜோஷிதா இதுவரை பார்த்திருந்த மும்பையின் பரபரப்பு, கசகசப்பு ஏதுமின்றி அமைதியாய் இருந்த அந்த இடத்தை வியப்புடன் பார்த்தாள்.

"இங்கே மும்பையில் இருப்பது போலவே தெரியவில்லை. இந்த வீடு யாருடையது கிரண்?" என்றாள் ஜோஷிதா.

"உன்னுடையதுதான்" என்றான் கிரண் புன்சிரிப்புடன்.

"விளையாடாதே கிரண். உண்மையைச் சொல்."

"உண்மைதான் ஜோஷி. என்னுடையது எல்லாமே உன்னுடையதும்தானே!"

"வாவ்! உன்னுடைய வீடா இது?" என்றாள் நம்ப முடியாமல். கிரண் செல்லமாக அவள் தலையில் தட்டினான். "இப்போதுதானே சொன்னேன்!"



"ஸாரி.. ஸாரி.. நம் வீடு. ஓகேவா? இவ்வளவு பெரிய வீட்டை விட்டு விட்டு எதற்காகச் சக்தி நிவாஸின் ஒற்றை அறையில் இருந்தாய்?"

"அதற்கு பல காரணங்கள். முதலாவது என் பெற்றோர் போன பிறகு இந்த பெரிய வீட்டில் அவர்களது இழப்பும், என் தனிமையும் மிகவும் பெரிதாகத் தெரிந்தது."

ஜோஷிதா மிகுந்த அனுதாபத்துடன் அவன் தலையைக் கோதினாள். "இனி உனக்கு அந்த எண்ணமே வரக்கூடாது. ஆயுசுக்கும் நான் கூட இருப்பேன்."

"உன்னைக் கூட முதலில் அழைத்து வந்தபோது இங்குதான் தங்க வைக்க எண்ணியிருந்தேன். ஆனால் நானும் கூடவே இருக்க முடியாத சூழ்நிலையில் உனக்கு பாதுகாப்பில்லை என்பதால் அங்கேயே தங்க நேர்ந்தது. இத்தனை வசதியான வீடு இருந்தும் உன்னை சிரமப்படுத்த வேண்டியிருக்கிறதே என்று வருந்தவே செய்தேன்."

"போடா பூல்" என்றாள் ஜோஷிதா அவன் தோளைத் தட்டி "அந்த அறை தான் என் சொந்தம். இந்த வீட்டில் தங்க நேர்ந்திருந்தால் எங்கோ ஒரு மூலையில் ஆளுக்கு ஒரு அறையில் இருந்து கொண்டு நம் இருவருக்கும் அடுத்தவர் முகமே மறந்து போயிருக்கும். அந்த ஒற்றை அறைதான். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஒன்றாகத் தூங்க வைத்து, சாப்பிட வைத்து, பேச வைத்து ஒருவரை ஒருவர் தவிர்க்க முடியாத சூழ்நிலையை உண்டாக்கியது. இந்த வீடு எத்தனை அழகாய் இருந்தாலும் அந்த ஒற்றை அறைக்கு ஈடாகாது" என்றாள் உணர்ச்சி வசப்பட்ட குரலில்.

"உண்மைதான் ஜோஷி. நீலகுழல் விளக்கில் நீ பளிங்கு சிலையாய் துயிலுவதையும், அறை எங்கும் பரவியிருக்கும் உன் வாசனையையும் நுகர்ந்தபடி நான்

பல நாள் விழித்துக் கிடந்திருக்கிறேன்" என்றான் கிரண் கண் நிறைய காதலுடன்.

"கிரண் என் பள்ளிப் பருவத்திலிருந்தே என் தோழிகள் காதலைப் பற்றி பேசுவதைக் கேட்டும், பார்த்தும் வந்திருக்கிறேன். ஆனால் இப்படி மூளையையே மழுங்கடித்து, ஆளை புரட்டிப் போடும் உணர்வுதான் காதல் என்று அவர்கள் யாரும் சொன்னதில்லை."

"சொல்லியிருக்க மாட்டார்கள். ஏனென்றால் கிரணின் அன்பைப் பற்றி அவர்களுக்கு எப்படித் தெரியும்?" என்றான் கிரண்.

இறந்த காலமும் நிகழ் காலமும் கண் முன் படமாக விரிய, அந்த களிப்பில் மூழ்கிப் போன அவர்கள் எதிர் காலம் ஒன்றிருப்பதை மறந்தே போனார்கள்.

"ஜி சௌக்கியமா?" என்ற இஸ்மாயிலைப் பார்த்து மகிழ்ச்சியுடன் அவன் கைகளைப் பற்றினார் சோம்நாத்ஜி.

"எத்தனை நாளாயிற்று உன்னைப் பார்த்து! வீட்டில் எல்லோரும் நலமா? பாத்திமாவின் குழந்தை எப்படியிருக்கிறான்?"

இஸ்மாயிலின் முகத்தில் ஒரு மென்மையான புன்னகை படர்ந்தது. "வெகு சுட்டி. ஒரு இடத்தில் நிற்பதில்லை. எப்பவும் ஓட்டமும் சிரிப்பும்தான். அம்மாவுக்கும், பாத்திமாவுக்கும் நிற்க பொழுதில்லை."

"இருக்கட்டும்" என்றார் சோம்நாத்ஜி திருப்தியுடன். "குழந்தையும் கடவுளும் ஒன்று. இருவரும் கூட இருக்கையில் எத்தகைய பாரமும் மறைந்து போகும். நீயும் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டால் உன் அம்மாவுக்கு உன்னைப் பற்றிய கவலையும் தீரும்?"



"கல்யாணமா? நான் அந்த விஷயத்தை எல்லாம் கடந்து விட்டேன் ஜி."

"இதெல்லாம் சும்மா. கிரணைப் போன்ற முரட்டு பையனே விழுந்து விட்ட பிறகு நீ எத்தனை நாள் தாக்குப் பிடிப்பாய் பார்க்கலாம்" என்றார் சோம்நாத்ஜி கேலியாக.

தொடர்பை விடாமல் இஸ்மாயில் கேட்டான். "கிரண்ஜி எங்கே ஜி? டாக்டர் கூட இல்லை போலிருக்கிறதே!"

"ஆமாம். இருவரும் கிரணின் மலபார் ஹில்ஸ் வீட்டிற்குப் போய் இருக்கிறார்கள். இங்கே ஓய்வே இல்லாத வேலை. பாவம், இரண்டு நாள் ஓய்வெடுத்து விட்டு வரட்டும்" என்றார் சோம்நாத்ஜி.

டி.வி.யில் செய்திகள் ஓடிக் கொண்டிருந்தன. கரீம் அம்மா தந்த மசாலா டீயை குடித்தபடி தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான். பாராளுமன்ற கூட்டத் தொடர். ஆளுங்கட்சியின் சாதனைகள், எதிர் கட்சியினரின் கண்டனம் எல்லாம் முடிந்து அஜ்மல் கசாப்பின் வழக்கறிஞர் மாற்றப்பட்டதாகத் தெரிவித்த செய்தியை கேட்ட அவன் அப்பா சொன்னார், "இவனுக்கு எதற்காக வக்கீல்? அரசாங்கம் ஏன் இவனை பாதுகாக்கவும், வழக்கு நடத்தவும் நம் வரிப்பணத்தை வீணடிக்கிறது? கைது செய்ததும் தகவல்களை அறிந்து கொண்டு நடுத்தெருவில் நிற்க வைத்து சுட்டுத்தள்ள வேண்டாமா?"

"இது ஜனநாயக நாடு வாப்பா. குற்றவாளிக்கும் தன் பங்கு நியாயத்தை எடுத்துச் சொல்ல சந்தர்ப்பம் தர வேண்டும்."

"ஒன்றுமறியாத அப்பாவி மக்களை கொன்று குவித்த போது அவர்களிடம் நியாயம் கேட்டுக் கொண்டா கொன்றார்கள்?"

''ஒரு வன்முறைக்கு பின்னால் வலுவான ஒரு காரணம் இருக்கும் வாப்பா. தன் குடும்பத்தையோ, தான் சார்ந்திருக்கும் மத நம்பிக்கைகளையோ தாக்கும்போது சாமான்யமானவர்கள் கூட திருப்பி அடிக்கத்தான் செய்வார்கள்.''

''எவன் ஒருவன் தன் எதிரிக்கு மன்னிப்பை வழங்குகிறானோ, அவனுக்கு அல்லா ஆசி நல்குவார்'' என்கிறது திருக்குர்ஆன். ஒழுக்க நெறிகளை மனிதன் பின்பற்றுவதற்காக ஏற்பட்ட மதம் என்ற அமைப்பு மனிதனின் ஒழுக்க மீறல்களுக்கு காரணமாய் அமைந்து விடக் கூடாது.''

பழுத்த இஸ்லாமியரான தன் தந்தை வாயிலிருந்து வந்த வார்த்தைகள் கரீமுக்கு அதிர்ச்சியளித்தது. ''இயலாமையின் மறுபெயர்தான் மன்னிப்பு வாப்பா. திருப்பி தாக்க வலு இல்லாதவன் தன் இயலாமையை மறைக்க மன்னிப்பதாகச் சொல்வான். பாபர் மசூதி இடிக்கப்பட்ட தினத்தில் நடந்த கலவரத்தில் நம் வீட்டினரையும், உறவினர்களையும் பலி கொடுத்ததை மறந்து விட்டீர்களா?''

கரீமின் வாப்பா சோகத்துடன் பெருமூச்செறிந்தார். ''என்னால் எப்படி மறக்க முடியும் கரீம்? எதையும் மறக்கவில்லை. மன்னிக்கத்தான் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். பதிலுக்கு பதில் என்று போனால் கடைசியாய் வென்றவன் என்று எவனுமே இங்கிருக்கப் போவதில்லை. மிருகங்கள் கூட பசித்தால் மட்டுமே வேட்டையாடுகின்றன. பழி உணர்ச்சி அவற்றிடம் இல்லை, மனிதன் மிருகங்களை விட கீழான நிலைக்குச் செல்லும் போதுதான் பழி உணர்ச்சி ஏற்படுகிறது. பழி வாங்குதல் நம் மதம் அல்ல கரீம்,''

மீனை சுத்தம் செய்தபடியே அவர்கள் பேச்சை கேட்டுக் கொண்டிருந்த கரீமின் அம்மா எழுந்து போய் ஒரு கவரை எடுத்து வந்து கரீமிடம் கொடுத்தார். கவரைப்



பிரித்த கரீம் அதிலிருந்த மெல்லிய தங்கச் சங்கிலியைப் பார்த்ததும் ''என்ன இது?'' என்றான் வியப்புடன்.

''அன்று கலவரத்தில் நம் வீட்டில் இருந்தாளே, அந்தப் பெண்ணுடையது. நீ அடிபட்டு வந்த அன்று எங்களிடம் மருந்து வாங்கக் கூட காசு இல்லாததைப் புரிந்து கொண்டு தன் கழுத்திலிருந்த செயினைக் கழட்டிக் கொடுத்தாள். நீ ஜுரம் இறங்கி கண் விழிக்கும் வரை இங்கிருந்து நகரவேயில்லை. அந்தப் பெண்ணின் முகவரியைக் கூட கேட்டுக் கொள்ளவில்லை. என்றாவது பார்க்க நேர்ந்தால் கொடுத்துவிட வேண்டும் என அடகிலிருந்து மீட்டு வைத்திருக்கிறோம். கருணை கடந்த காலத்தை மாற்றுவதில்லை மகனே! எதிர்காலத்தை விரிவாக்குகிறது'' என்றார் அவன் அம்மா.

கரீம் கண்முன் ஜோஷிதாவும் கிரணும் கலகலவெனச் சிரித்தபடி கடற்கரை மணலில் நடந்து வந்தார்கள். அந்த கிரண் ஜோஷிதாவின் கணவனாகவோ காதலனாகவோ இருக்கக்கூடும். அவனது இயக்கம் தனிப்பட்ட முறையில் யார் மீதும் கை வைப்பதில்லை. கிரண் யாரோ முக்கியமான ஆளாக இருக்க வேண்டும். அவர்களை நம்மால் காப்பாற்ற முடிந்தால்? யோசித்த கரீம் இறுதியில் தலையை அசைத்தான். நம்மால் முடியாது என்பதோடு இயக்கத்துக்குத் தெரிய வந்தால்? அவனையும் அறியாமல் பயத்தில் உடல் சிலிர்த்தது.

மழை மெல்லிய சரமாய் பூமியை நனைத்துக் கொண்டிருந்தது. சுற்றிலுமிருந்த பூச்செடிகள் கழுவி விடப் பட்டாற்போல் பளபளத்தன. வேகமான ஊதல் காற்றிற்கு உடல் சிலிர்த்த ஜோஷிதா அருகிலிருந்த கிரணுடன் ஒட்டிக் கொண்டாள். அன்றைய தினசரியைப் புரட்டிக் கொண்டிருந்த கிரண் ''என்ன ஜோஷி?'' என்றான் திரும்பிப் பார்த்து.

"குளிருதுடா. ஹீட்டரைப் போடு" என்றாள் ஜோஷிதா வெடவெடத்த குரலில்.

"குளிர்தானே! அதுக்கு ஹீட்டர் எதுக்கு? உன் குளிர் இப்ப போய்டும் பார்" என ஆசைக் கணவனாய் அவன் உருவாக்கிய வெப்பத்தில் ஜோஷிதா கரைந்து போனாள்.

உன் முரட்டுத்தனம் எப்பவும் உன்னை விட்டுப் போகாது" என்றாள் சில நிமிடங்கள் கழித்து.

"எதுக்கு போகணும்? என் பொண்டாட்டிக்கு இந்த முரடனை ரொம்பப் பிடிச்சிருக்கே!" என்றான் அவள் காதருகே முத்தமிட்டு.

"நீ முரடன் மட்டுமல்ல. சரியான திருடனும் கூட" ஜோஷிதா கண்களைத் திறக்காமல் முணுமுணுத்தாள்.

அவர்களது அந்தரங்க தனிமையில் சற்றும் நாசுக்கின்றி அவன் செல்போன் அலறியது. எதிர் முனை குரலைக் கேட்ட கிரண் சட்டென விறைப்பானான். குறுக்கே பேசாமல் கேட்டவன் கடைசியில் 'டன்' என்ற ஒற்றை வார்த்தையுடன் போனைத் துண்டித்தான். வேகமாக உள்ளே சென்று சில நிமிடங்களில் வெளியே கிளம்பத் தயாராய் திரும்பி வந்தவனை ஜோஷிதா வியப்புடன் பார்த்தாள்.

"எனக்கு அவசர வேலை வந்திருக்கிறது ஜோஷி. நான் உடனே கிளம்பியாக வேண்டும். நீ இங்கு தனியே இருப்பது பாதுகாப்பில்லை. அதனால் நம் பழைய இடத்திற்கே போய்விடு. நீ திரும்பிப் போக நான் ஏற்பாடு செய்துவிட்டுப் போகிறேன்."

ஜோஷிதாவின் முகத்தில் சட்டென ஒரு வேதனை படர்ந்தது. "கிரண் என் அறிமுகம் உனக்குள் அன்பை மலரச் செய்ததைப் போல நம் அன்பு உன்னைத் தவறான வழியில் செல்ல விடாது என்று நம்பியிருந்தேன்."



கிரண் புரியாத பார்வை பார்த்தான். "என்ன சொல்கிறாய் ஜோஷி?"

"இதற்கு முன்பும் உனக்கு இதே போல போன் வரும். நீ உடனே கிளம்பிப் போவாய். சில சமயம் அகால வேளையில் திரும்பி வருவாய். அல்லது வராமலும் இருப்பாய். இதுவரை நீ என்ன வேலை பார்க்கிறாய் என்று என்னிடம் சொன்னதில்லை. ஆனால் உன்னை நம்பி என் வாழ்க்கையையே ஒப்படைத்திருக்கும் இந்த நேரத்தில் நீ தவறான வழியில் செல்லக்கூடாதே என்று என் மனம் பதைக்கிறது."

கிரண் இதழ்களில் ஒரு புன்னகை படர்ந்தது. கலக்கத்துடன் அமர்ந்திருந்தவளின் அருகே வந்து முகத்தைப் பற்றி மென்மையாக முத்தமிட்டான். "நீ எதையும் யோசித்துக் கவலைப்படக்கூடாது ஜோஷி. தவறான யாரையும் நீ விரும்பவில்லை. என்னைப் பற்றி நீ நினைத்து மகிழும் நாள் விரைவில் வரும். அதுவரை கலங்காமல் காத்திரு."

கிரணின் வார்த்தைகள் கல்லில் செதுக்கிய சிற்பமாய் மனதில் பதிய ஜோஷிதா அசையாமல் இருந்தாள்.

விடைபெற்று வாயில் வரை சென்ற கிரண், செல்ல மனம் இல்லாதவனாய் மறுபடி திரும்பி உள்ளே வந்தான். "பலமுறை உன்னை தனியே விட்டு விட்டு நான் போயிருக்கிறேன். ஆனாலும் இன்று ஏனோ உன்னை பிரிந்து போகவே மனசில்லை" என்றவன் அவள் கைகளை இறுகப் பற்றினான். "நான் சொல்வதை நினைவில் வைத்துக் கொள் ஜோஷி. எதற்கும் கலங்காதே. கவலைப்படாதே. இப்போது சர்மா கார் அனுப்புவார். அதில் கிளம்பி நம் பழைய வீட்டிற்குப் போய்விடு. என்னால் போன் செய்ய முடியுமா என்பது கூட சந்தேகம்தான். வேலை முடிந்ததும் ஓடி வந்து விடுவேன். எனக்காக காத்திரு ஜோஷி. வரட்டுமா?"

'சரி' என தலையசைத்த ஜோஷிதாவுக்கு கண்களில் நீர் திரண்டது. அதை அவன் பார்க்கும் முன் குனிந்து அவன் இதழ்களில் முத்தமிட்டாள்.

கிரண் திரும்பி திரும்பிப் பார்த்தபடியே வாயிலைக் கடந்து வெளியே சென்று மறைந்து கண்ணை மறைத்த நீர் திரையிடையே மங்கலாகத் தெரிந்தது.

கிரண் சென்று வெகு நேரம் வரை ஜோஷிதா சுய உணர்வின்றி அப்படியே அமர்ந்திருந்தாள். சில நிமிடங்களோ, சில மணி நேரங்களோ சென்றபின் காலிங் பெல்லின் சத்தத்திற்கு உணர்வு பெற்றவளாய் எழுந்து போய் கதவைத் திறந்தாள்.

இஸ்மாயில் மறக்காமல் தன் கையடக்கத் துப்பாக்கியால் பேண்ட் பாக்கெட்டில் சொருகினான். பர்சை எடுத்துக் கொண்டு கிளம்பியவன் நினைவு வந்தவனாக அம்மாவிடம் சொன்னான், ''இன்னும் சில நாட்களில் நான் வேலை விஷயமாக வெளியூர் செல்ல வேண்டியதிருக்கும். சலீமை இங்கேயே தங்கிக் கொள்ளச் சொல்.''

''திரும்பி வர எத்தனை நாளாகும்?'' என்றாள் அவன் அம்மா.

''சரியாகத் தெரியவில்லை. வேலை முடியும் வரை இருக்க வேண்டியிருக்கும்.''

''இங்கிருக்கும் போதே வேலை, வேலை என்று நேரத்துக்கு சாப்பிடுவதில்லை. தூங்குவதில்லை. வெளியூரில் இப்படி அலைந்தால் உன்னை யார் அங்கு கவனித்துக் கொள்வார்கள்?'' என்றாள் தாய்க்கே உரிய கவலையுடன்.

தாயின் அக்கறையில் மனம் நெகிழ்ந்த இஸ்மாயில் சொன்னான், ''நான் இன்னும் சிறுபிள்ளை இல்லை மா. என்னை கவனித்துக் கொள்ள எனக்குத் தெரியும்.''



''எத்தனை வளர்ந்தாலும் தாய்க்குப் பிள்ளை குழந்தைதான். நீ எங்கே இருந்தாலும் உன்னைப் பற்றிய கவலை இருக்கத்தான் செய்யும்'' என்றாள் அவன் அம்மா.

இந்த அம்மா அன்பால் விலங்கு போட முயற்சிக்கிறாள் என்று நினைத்த இஸ்மாயில் தலையசைத்து விட்டு வெளியே வந்தான்.

இஸ்மாயில் மலபார் ஹில்ஸ் வந்து சேர்ந்தபோது இருட்டத் தொடங்கியிருந்தது. சோம்நாத்ஜி சொன்ன அடையாளத்தைக் கொண்டு வீட்டைத் தேடினான். பங்களாக்கள் நிறைந்த அந்த பகுதி மிக அமைதியாய் இருந்தது. இடதும் வலதுமாய் தெருவை இரண்டு முறை சுற்றி வந்தவன் யோசனையுடன் ஒரு பங்களாவின் எதிர்புறமிருந்த மரத்தின் அடியில் நின்றான். இங்கே எதற்காக நிற்கிறோம். என்ன செய்யப் போகிறோம் என்று புரியவில்லை என்றாலும் உள்ளுணர்வின் உந்துதல் அவனை இங்கே கொண்டு வந்து சேர்த்தது.

கரீம் தனக்கு முன்னால் சிக்னலில் நின்றிருந்த வெள்ளை நிற குவாலிஸை ஏதேச்சையாகப் பார்த்தான். அந்த வண்டி அவனுக்கு பழக்கமானது. அதன் டிரைவிங் சீட்டில் அமர்ந்திருந்தவன் கரீமைப் பார்த்த பார்வையில் கவனம் தெரிந்தது. புரிந்து கொண்ட கரீம் சிக்னலில் பச்சை விழுந்ததும் குவாலிஸைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் வேகம் எடுத்தான். இன்று முக்கியமான ஆள் யாரையோ கணக்கு முடிக்கப் போகிறார்கள். யாராக இருக்கும் என்று யோசித்தபடி தெருவோர கடை ஒன்றில் பைக்கை நிறுத்தி லஸ்ஸி சொன்னான். தீவிரவாத குழுக்கள் பணத் தேவைக்காக கடத்தலிலும் ஈடுபடும் போது உள்ளூர் மாபியா கும்பல்களுடன் மோதல் ஏற்படுவது வழக்கம்தான். ஆனால் இன்றைய தேதியில்

கடத்தல் தொழிலில் தாவூத் இப்ராஹிமுக்கு எதிரிகளே இல்லை. மும்பையின் முக்கிய இடங்களான கொலபா, கிராபோர் மார்க்கெட், பெண்டி பஜார், பாந்த்ரா, ஓஷிவாரா வெர்சோவா போன்ற இடங்களிலிருக்கும் தாவூதின் சொத்துக்கள் கையகப்படுத்த முடியாத நிலையில் அதை ஏலமிட நீதிமன்றம் உத்தரவிட்டும், சொத்துக்களை வாங்கும் தைரியம் யாருக்கும் இல்லை. எனவே இன்று குவாலிஸ் தேடிப் போவது யாராவது அரசு அதிகாரியாகவோ மதத் தலைவராகவோ இருக்க வேண்டும்.

சிறிய மண் பானையில் வந்த லஸ்ஸியை ரசித்துப் பருகுகையில் எதிர் பிளாட்பாரத்தில் வெள்ளை குவாலிஸ் வந்து நின்றது. பிளாட்பார பான் கடையிலிருந்து ஒரு பான்பராக்கை மென்றபடி நடந்து வந்து குவாலிசின் பின்புறம் ஏறி அமர்ந்தவனைப் பார்த்த கரீம் திடுக்கிட்டான். நஸிம் மாலிக்.

கரீம் அன்று செய்யத் தவறிய வேலையை அலிகார் நஸிமிடம் தான் ஒப்படைத்திருந்தான். நஸிம் இன்று அதற்காகத்தான் செல்கிறான் போலும். கரீம் எழுந்த வேகத்தில் கையிலிருந்த மண் பானை கீழே விழுந்து உடைந்து சிதறியது.

கதவைத் திறந்த ஜோஷிதா தன் எதிரே நின்றிருந்த நிதின் சர்மாவை வியப்புடன் பார்த்தாள். போலீஸ் சீருடையின்றி வெள்ளை சட்டையும், கறுப்பு பேண்டுமாய் ''ஹலோ ஜோஷிதா'' என்றார் சர்மா.

''நீங்கள் வருவதாக கிரண் சொல்லவேயில்லையே?'' என்றாள் ஜோஷிதா.

''உன்னை நம்பிக்கையான டிரைவருடன் காரில் அனுப்பி வைக்குமாறு சொன்னான். இந்த நிமிஷத்தில் எனக்கு என்னை விட நம்பிக்கையானவர்கள் யாரும் இல்லை. அதனால் நானே வந்தேன்.''



கிரணின் வார்த்தைக்கு சர்மா கொடுத்த முக்கியத்துவம் அவளை யோசனையில் ஆழ்த்தியது. அவள் முகத்தைப் பார்த்த சர்மா சொன்னார், ''ரொம்ப யோசித்தால் ரொம்பக் குழப்பம் வரும். உன் யோசனையை என்னிடம் சொல். பதில் தர முடியுமா என்று பார்க்கிறேன்.''

''கண்டிப்பாக இதற்கு நீங்கள் பதில் சொல்லத்தான் வேண்டும். உங்களைத் தவிர யாருமே நம்பிக்கையானவர் இல்லை என்று நினைக்கும் நீங்கள் கிரணை மட்டும் எப்படி நம்புகிறீர்கள்?'' ஜோஷிதா அவர் முகத்திற்கு நேராகக் கேட்க, சர்மா கம்பீரமான குரலில் சொன்னார்.

''நூறு சதவீதம் நம்புவேன். ஏனென்றால் இந்திய உளவுத் துறையின் தலை சிறந்த செயல் அதிகாரியான கிரண் சாவ்லாவை நம்பாதவர்கள் யார் இருக்க முடியும்? நான் மட்டுமல்ல இந்த நாட்டின் பாதுகாப்பே அவனைப் போன்ற அதிகாரிகளை நம்பித்தான் இருக்கிறது.''

ஜோஷிதாவுக்கு அதிர்ச்சியில் கையில் பிடித்திருந்த செல்போன் நழுவியது. அது கீழே விழும் முன் கேட்ச் பிடித்த சர்மா சொன்னார், ''கிரண் சற்று முன் பேசிய போது என் மனைவி ஜோஷிதாவை பத்திரமாக அனுப்பி வைப்பது உங்கள் பொறுப்பு என்றான்.

''நீங்கள் இருவரும் கணவன் மனைவி என்றான போதும் சொல்லாதது அவனது தவறில்லை ஜோஷிதா. ஒரு நாட்டின் இரகசியம் காக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் மனைவியிடம், ஏன் பெற்ற தாயிடம் கூட உண்மையைச் சொல்லக்கூடாது என்பது எழுதப்படாத விதி.''

''எனக்குத் தெரியும்'' என்றாள் ஜோஷிதா கண் கலங்க. கிரணைப் பற்றி தெரிந்ததால் ஏற்பட்ட பெருமிதமும், அவசியமாக சந்தேகப்பட்டு அவனை வருத்தப்பட வைத்தோம் என்ற கழிவிரக்கமும் அவளை அலைக்கழித்தன. கிரணிடம் ஒரே ஒரு வார்த்தை பேச வேண்டும். 'என்னை மன்னித்து விடு. உன் அருமை தெரியாமல் பேசிவிட்டேன்' என்று சொல்ல வேண்டும். ''கிரணுடன் உங்களால் தொடர்பு கொள்ள முடியுமா சார்?'' என்றாள் சர்மாவிடம்.

சர்மா மறுப்புடன் தலையசைத்தார். ''அவனாக தொடர்பு கொண்டால்தான் உண்டு.''

கிரணைச் சந்தித்த நாளிலிருந்து நடந்த சம்பவங்கள் மனக்கண் முன் ஓடின. அப்போது புரியாத பல விஷயங்கள் இப்போது புரிந்தன. தாஜ் ஹோட்டலில் இருந்தவர்களை தப்பிக்க விட்டு அவன் பின் தங்கியது, காமிராக்களின் கண்ணில் படாமல் வெளியேறியது. உளவறிய வந்தவன் காயம் பட்டால் கூட வெளியே சொல்ல முடியாது என்ற நிலையில் அவனுக்கு வைத்தியம் பார்க்க ஜோஷிதாவை இழுத்து வந்தது, எல்லாமே அவன் வேலையின் ஒரு பகுதியாகத்தான். ஆபத்தான வேலை என்றாலும் நாட்டிற்காக தன்னலம் கருதாமல் பாடுபடும் கிரண் கிடைத்தது அவளது அதிர்ஷ்டம்தான்.

''ஜோஷிதா'' என்ற சர்மா அவள் கவனத்தைக் கலைத்தார். ''இரவாகப் போகிறது. இங்கு வெகு நேரம் தாமதிக்க வேண்டாம். உடனே கிளம்பு'' என்றார் கட்டளையிடும் குரலில்.

அந்த குரலுக்குக் கட்டுப்பட்டு ஜோஷிதா சில நிமிடங்களில் தயாராகினாள். ''ஜோஷிதா, இப்போது நீ இந்தியாவுக்கு டூரிஸ்ட் விசாவில் வந்திருக்கும் என்.ஆர்.ஐ. டாக்டர் மட்டுமல்ல. மிஸஸ் கிரண் சாவ்லா. நீ குடி



யிருக்கும் வீட்டில் யாருக்கும் கிரண் பற்றிய முழு விபரம் தெரியாது. இதுவரை கிரண் அவர்களிடம் பழகி வந்த அதே முறையில் நீயும் பழக வேண்டும். கிரணின் மனைவி என்பதால் அவனது இரகசியம் காக்கும் பொறுப்பும் கடமையும் உனக்கிருக்கிறது.''

ஜோஷிதாவிற்குள் புதிய பொறுப்பு ஒன்று அமர்ந்து கொள்ள, ''நிச்சயம் நீங்கள் சொல்கிறபடி செய்வேன்'' என்றாள் ஜோஷிதா.

''அது மட்டும் போதாது. என்னைப் போன்ற போலீஸை நம்பிக்கூட எதையும் வெளிப்படையாய் பேசாதே. சில சமயங்களில் அது எதிர்மறை விளைவையே ஏற்படுத்தும். உளவுத்துறை, காவல்துறை, இராணுவம், அதிரடிப்படை என எல்லாமே நாட்டைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவைதான் என்றாலும் பல சமயங்களில் அவை தனித்துதான் செயல்படும்.''

ஜோஷிதா புரிந்து கொண்டவளாக தலையை அசைத்தாள். இருவரும் கதவைப் பூட்டிக் கொண்டு வருகையில் சர்மா சொன்னார். ''கிரண் ரொம்பத் துடிப்பான, எனக்கு பிரியமான பையன். அவன் வாழ்க்கையில் நீ வந்தது எனக்கு மிகவும் சந்தோஷம்'' என்றார் மனப்பூர்வமாக.

இருவரும் லானில் இறங்கி காரை நோக்கி நடந்தார்கள்.

குவாலிஸைப் பின் தொடர்ந்து மலபார் ஹில்சின் மேலே ஏறிய கரீம் கமலா நேரு பார்க்கைத் தாண்டிச் செல்கையில் அங்கிருந்த கூட்டத்தையும், பார்க்கிங்கில் நிறைந்திருந்த வாகனங்களையும் பார்த்ததும் நினைவு வந்தவனாக தன் வண்டியை பார்க்கிங்கில் நிறுத்தி விட்டு காவலாளியிடம் ரசீது வாங்கிக் கொண்டு வெளியே வந்தான். சாலையின் இடதும் வலதுமாய் பிரிந்த பாதையில் குவாலிஸ் எந்தப் பக்கம் சென்றதென தெரியாமல்

ஒரு நிமிடம் திகைத்தவன் பி.என்.கிராஸ் லேன் என்று எழுதியிருந்த சந்திற்குள் நுழைந்து ஜெயின் மந்திரையும், அதன் அருகிலிருந்த பள்ளியையும் கடந்து வலது பக்கம் திரும்பி வாக்கேஸ்வர் ரோட்டில் நடந்தான். ராஜ்பவனை மேம்போக்காகப் பார்த்தபடி நடக்கையில் பனோரமா அப்பார்ட்மென்ட் எதிரே குவாலிஸ் கார் நின்றிருந்தது. அருகில் யாரும் இல்லை. என்றாலும் சமீபத்திலேயே நஸிமும், ஓடி வந்து காரைக் கிளப்பும் தொலைவில் டிரைவரும் இருக்கிறார்கள் என பழகிய மூளை எச்சரித்தது. டிரைவர் ஏற்கனவே கரீமை வழியில் பார்த்திருந்தான் என்பதால் எதிர் திசையில் விலகி நடந்தான். ஒரு ஐஸ்கிரீம் வண்டியின் பின்னே ஓடிய குழந்தைகளுடன் சேர்ந்து ஒரு கையில் குவாலிஸின் டிரைவர் பேப்பர் படிக்கும் பாவனையில் நின்றிருப்பது பின்புறமாகத் தெரிந்தது. மழை முழுதாக நின்று போயிருந்தாலும் காற்றில் குளிர் மிச்சமிருந்தது. தெருவிளக்குகள் மங்கலாக எரிந்தன. வழியிலிருந்த மரங்கள் மறைந்து செல்ல வசதியாக இருந்தன. பார்த்தபடியே வந்த கரீம் ஒரு பங்களாவின் வாயிலில் நின்றிருந்த காரைப் பார்த்ததும் நின்றான். அது கிரணுடைய கார். தன்னை பாம் செட் பண்ண சொன்னது இந்த காரில்தான். அப்படியானால் இது கிரணுடைய வீடாக இருக்க வேண்டும். நஸிம் மாலிக்கும் அருகில்தான் இருக்கிறான் என்ற கவனத்துடன் அந்த மரத்தின் பின்னே மறைந்து நின்றான்.

இஸ்மாயிலுக்கு ஒரே இடத்தில் நின்று போரடித்தது. எதிரே இருந்த கிரணின் வீட்டில் நடமாட்டமே இல்லை. காரை இங்கே நிறுத்தி விட்டு கிரணும் ஜோஷிதாவும் எங்காவது போயிருக்கக் கூடும். இன்னும் சில நிமிடம் பார்த்துவிட்டு கிளம்பி விடலாம் என்று அவன் முடி



வெடுத்த போது ஒரு கார் வேகமாக வீட்டினுள் நுழைந்தது. அதிலிருந்து இறங்கிய கமிஷனர் நிதின் சர்மாவைப் பார்த்த இஸ்மாயில் யாரோ வீடு கட்டுவதற்காக அங்கே கொட்டி வைத்திருந்த கற்குவியலின் மீது ஏறி நின்று கவனித்தான்.

நஸிம் மாலிக் உட்கார்ந்திருந்த மரத்தின் மீதிருந்து பார்க்கையில் நிதின் சர்மா உள்ளே செல்வது தெரிந்தது. "வார்ரே. வா... கமிஷனரும் இப்போது இங்கேயே வந்து விட்டாரா? இரண்டு கதையும் ஒரே வேகத்தில் முடியும்'' என்றான் சத்தமின்றி. நிதின் சர்மா மும்பை காவல் துறையின் நேர்மையான அதிகாரி. நிழல் உலகின் நிரந்தர எதிரி. இவரைப் போன்ற ஆபீசர்களும், அவருக்கு உயிரை பணயம் வைத்து தகவல் தரும் உளவுத்துறையும் வெற்றிகரமாக இருக்கும் வரையில் தங்களால் இங்கே எதையும் சாதிக்க முடியாது. நஸிம் கிரணையும் சர்மாவையும் எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

கிரண் வீட்டிற்கு இடது புறம் காத்திருந்த இஸ்மாயிலும், வலதுபுறம் காத்திருந்த கரீமும் பொறுமையை இழக்கத் தொடங்கினார்கள். சர்மா வீட்டினுள் சென்று ஒரு மணி நேரமாயிற்று. அடுத்து என்ன செய்யலாம் என்று அவர்கள் யோசிக்கையில் ஜோஷிதாவும், சர்மாவும் வீட்டிற்குள்ளிருந்து வெளியே வந்தார்கள். போர்டிகோவில் அவர்கள் ஏறிச் செல்லத் தயாராய் கார் நின்றிருந்தது. நஸிம் மரத்திலிருந்து கீழே குதித்தான். காம்பவுண்டு சுவர் ஓரமாய் குவிந்திருந்த கற்குவியலை நோக்கி ஓடினான். அங்கிருந்து போர்டிகோ அவனுக்கு வசதியான தூரத்தில் இருந்தது. காலுக்குக் கீழே உருண்ட கற்கள் பாதங்களை இடறுவதைப் பொருட்படுத்தாமல் வேகமாக ஓடி அங்கே நின்றிருந்த உருவத்தின் மீது முட்டிக்

கொண்டான். ''யாரது?'' என்ற குரல் அவனுக்குப் பழக்க மானதாகத் தெரிந்தாலும் விசாரிக்க நேரமில்லை என்ப தால் அந்த உருவத்தை ஒரே தள்ளாகத் தள்ளி விட்டு பாக்கெட்டிற்குள்ளிருந்த கையெறி குண்டை வெளியே எடுத்தான். அதே சமயம் கீழே விழுந்த உருவம் நஸிம் மாலிக்கின் காலை இடறி விடவே கூரான கற்கள் நஸிமின் உடலை பதம் பார்த்தன. நஸிம் வேகமாக எழுந்து இரு ளில் நின்றிருந்தவனை ஒரு குத்து விட, அவன் திருப் பித் தாக்க, தொலைவில் சென்ற ஒரு வாகனத்தின் மங்க லான ஒளி அவர்கள் மீது விழுந்தது.

''இஸ்மாயில் நீயா?'' என்றான் நஸிம் மாலிக் வியப் புடன். ''உனக்கு இங்கே என்ன வேலை?''

''நீ கிரணுக்காகத்தானே இங்கு வந்தாய்? கிரண் இங்கில்லை. வா. திரும்பிப் போய் விடலாம்.''

''கமிஷனரை நம் தலைமை குறி வைத்து வெகு நாளாயிற்று இஸ்மாயில். இன்று எதிர்பாராமல் அதற் கான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.''

''ஆனால் கமிஷனர தனியாய் இல்லை நஸிம் மாலிக். அவருடன் ஒரு பெண்ணும் இருக்கிறாள்.''

''அதனால்?''

''சம்பந்தமே இல்லாமல் அவள் எதற்காக பலியாக வேண்டும்?'' நஸிம் மாலிக் கடுமையுடன் சொன்னான். ''நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்பது தெரி கிறதா? உனக்கு சம்பந்தமில்லாத விஷயங்களில் தலை யிட்டால் விசாரணையின்றி கொல்லப்படுவாய், என்ப தாவது நினைவிருக்கிறதா? விலகிப்போ'' என்ற நஸிம் அதற்கு மேல் அவனிடம் பேசி நேரத்தை வீணடிக்காமல் குண்டை வீசத் தயாராக இஸ்மாயில் ஒரே பாய்ச்சலில் அவன் கையைத் தட்டி விட்டான். குண்டு உருண்டு



போய் இருட்டில் எங்கோ மறைய, நஸிம் தாமதிக்காமல் இடுப்பிலிருந்த துப்பாக்கியை உருவி போர்ட்டிகோவை நோக்கி சுடத் தொடங்கினான். அதே சமயம் நஸிம் மாலிக் கின் முதுகில் குண்டு பாய நஸிம் சுருண்டு விழுந்தான். திகைப்புடன் தன்னிடமிருந்த செல்போன் ஒளியில் பின்னால் பார்த்த இஸ்மாயில் ''கரீம் நீயா?'' என்றான் வியப்புடன். ''எதற்காக நஸிம் மாலிக்கைக் கொன்றாய்?''

''அவன் சுடுவதைத் தடுக்க எண்ணினேன். அதற்குள் சுட்டு விட்டான். சரி வா. வீட்டினுள் போய் பார்க்கலாம்'' என்றான்.

இருவரும் உள்ளே விரைந்தார்கள். போர்ட்டிகோவில் ரத்த வெள்ளத்தில் காருக்கருகே சர்மா விழுந்து கிடக்க, ஜோஷிதா பயத்துடனும், அதிர்ச்சியுடனும் அழுது கொண்டிருந்தாள்.

''பெகன்ஜி சர்மா சார் பிழைக்க சந்தர்ப்பம் இருக் கிறதா?'' என்றான் கரீம் அவளிடம்.

''இல்லை. என்னை பாதுகாப்பாக அழைத்துப் போவதாக சொன்னவர் ஒரேயடியாகப் போய் விட்டார்'' என்றாள் ஜோஷிதா அழுகையுடன்.

''சரி நீங்கள் கிளம்புங்கள்'' என்றான் இஸ்மாயில்.

ஜோஷிதா அப்போதுதான் நினைவு வந்தவளாக இரு வரையும் பார்த்து கண்களை அகல விரித்தாள். ''நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்? ஒருவேளை நீங்கள் இரு வரும்தான் சர்மா சாரை.''

''இல்லை தீதி. இல்லை. நாங்கள் கொல்லவில்லை. உங்களைக் காப்பாற்றத்தான் நாங்கள் வந்தோம். எங்களை நம்புங்கள்'' என்றான் இஸ்மாயில்.

''வாயில் கேட் அருகே யாரோ ஓடி வருவது தெரிய

''நஸிம் மாலிக்கின் டிரைவர் என்று நினைக்கிறேன். நீ

பெகன்ஜியை அழைத்துக் கொண்டு உடனே கிளம்பு
இஸ்மாயில்'' என்றான் கரீம்.
''நீ?'' என்றான் இஸ்மாயில் தயக்கத்துடன்.
''நான் சமாளித்துக் கொள்வேன். நீ கிளம்பு முதலில்.''
காலடி ஓசை அருகே நெருங்க இஸ்மாயில் பேச நேர
மின்றி ஜோஷிதாவை இழுத்துக் கொண்டு வீட்டின்
பின்புறமாக ஓடினான். உயரம் குறைந்த காம்பவுண்ட்
சுவரில் ஏறிக் குதித்து, ஜோஷிதாவையும் குதிக்க சொன்ன
இஸ்மாயில் அங்கிருந்த படியே வீட்டைப் பார்த்தான்.
கரீம் தன் கையிலிருந்த துப்பாக்கியில் கீழே கிடந்த
சர்மாவின் உடலை சுட்டுக் கொண்டிருந்தான். நஸிம்
மாலிக்கின் டிரைவர் அவனை நெருங்கி ''நஸிமை கொன்
றது நீதானா?'' என்று கேட்பதும் கரீம் வெறி பிடித்தாற் போல
டிரைவரை சுட பிஸ்டலை அழுத்துவதும் தெரிந்தது. டிரைவர்
மின்னல் வேகத்தில் கீழே குனிந்து கொண்டு அவன்
மறுபடி சுடுவதற்குள் தன் துப்பாக்கியால் கரீமை சுட்டான்.
நெஞ்சில் குண்டு பாய கீழே விழுந்த கரீம் வானத்தைப்
பார்த்துச் சொன்னான். ''வாப்பா ஆசைப்படி நான் வாழ
வில்லை. ஆனால் அவர் விரும்பியபடி இறக்கிறேன்.''
கத்த வாயைத் திறந்த ஜோஷிதாவை இஸ்மாயிலின்
கரங்கள் அழுத்தமாக மூடின.

அந்த அறையில் ஊசி விழுந்தால் கேட்கும்படியான
அமைதி நிலவியது. அலிகார் இன்னும் தன் யோசனையி
லிருந்து மீளாதவனாய் அமர்ந்திருந்தான். திட்டமிட்டு
பல வருடங்களாய் மூளை சலவை செய்து இயங்க
வைத்த இயக்கத்தில் எங்கோ ஒரு ஓட்டை விழுந்
திருக்கிறது. கிரண் கதையை முடிக்கச் சொல்லி நஸிம்
மாலிக்கை அனுப்பி வைத்தான். இப்போது நஸிம், கரீம்,



கமிஷனர் சர்மா என மூன்று பேரும் இறந்து போயிருக்
கிறார்கள். கரீம் எதற்காக அங்கே போனான்? சர்மா
எப்படி அங்கு வந்தார்? கிரண் என்னவானான் என்ற
கேள்விகளுக்கு இன்னும் விடை தெரியவில்லை.
நஸிம் சென்ற காரின் டிரைவர், நஸிம் வெகு நேரமாய்
திரும்பி வராததைக் கண்டு தான் போய் பார்த்தபோது
காம்பவுண்டு சுவர் அருகே நஸிம் மாலிக் குண்டு காயத்
துடன் இறந்து கிடந்ததாகவும், வீட்டினுள் சர்மாவை கரீம்
வெறி பிடித்தாற்போல் சுட்டதாகவும், தன்னை நோக்கி
சுட வந்தவனை தற்காப்புக்காக தான் சுட்டதாகவும் கூறி
னான். கரீமிடம் கமிஷனரை முடிக்கும் வேலையை ஒப்
படைக்கவே இல்லாதபோது அவன் ஏன் இதில் இறங்கினான்?
கிரண் சமீப காலமாய் அவர்கள் இயக்கத்திற்கு பெரிய
தலைவலியாய் இருந்தான். அவர்கள் திட்டங்கள் பல
செயல்படுத்தும் முன்பே முறியடிக்கப்பட்டன. சரக்கு
வந்து இறங்கும் இடங்களில் முக்கிய ஆட்கள் திடீர்
திடீரென காணாமல் போயினர். அலிகாருக்கு தலைமை
இடத்திலிருந்து எச்சரிக்கை வந்தது. ''உளவுத்துறை
உங்களை கண்காணிக்கத் தொடங்கி விட்டது. எச்சரிக்கை
யாக இருங்கள்.''

அலிகார் அப்போதிருந்தே தீவிர வேட்டையில்
இறங்கினான். காவல் துறையிலும், உளவுத்துறையிலும்
அவனுக்கு உதவி செய்யக் கூடிய அதிகாரிகள் மூலமாய்
விசாரித்தபோது கிரண் மீது சந்தேகம் எழுந்தது. எனவே
அவன் மீது எப்போதும் ஒரு கண் வைத்திருந்தான்.
அவர்கள் இயக்கம் கோளாவிலும் மும்பையிலும் இந்
தியாவின் சில இடங்களிலிருந்தும் அங்குள்ள மக்களின்
வறுமையை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு இளைஞர்
களை இயக்கத்தில் சேர்க்கும் வேலையைச் செய்து

வந்தது. அதைத் தெரிந்து கொண்ட கிரண், அதை முறியடிக்கும் முயற்சியாலும் இயக்கத்தையே செயல்பட முடியாமல் செய்யவும் திட்டமிட்டு செயலில் இறங்கியிருந்தான். இதற்கு மேல் தாமதிக்க முடியாது என்பதால், கிரணை உடனடியாக முடித்துவிடச் சொல்லி உத்தரவிட்டான். இப்போது எல்லாமே குழப்பத்தில் வந்து நிற்கிறது.

''இஸ்மாயில்'' என்றான் அலிகார் தன் எதிரில் நின்றிருந்தவனிடம்.

''கரீம் உனக்கு நன்றாகத் தெரிந்தவன் இல்லையா? அவன் எதற்காக மலபார்ஹில்ஸ் போனான் என்று உனக்குத் தெரியுமா?''

''தெரியாது'' என்றான் இஸ்மாயில். ''கரீமை நான் பார்த்து நான்கு நாட்கள் ஆகின்றன.''

என்ன நடந்திருக்கக்கூடும் என்று ஆளுக்கு ஆள் யூகத்தில் இறங்க, இஸ்மாயிலுக்கு கரீமின் நினைவில் துக்கம் தொண்டையை அடைத்தது. ஒரு நாள் தன்னைக் காப்பாற்றிய பெண்ணைக் காப்பாற்ற உயிரையே விட்ட அவன்தான் உண்மையான லட்சியவாதி. அவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அவன் பெற்றோர்களுக்கு இந்த தகவல் தெரிவிக்கப்பட மாட்டாது. இனி அவர்களது நிலை என்னவாகும்? இஸ்மாயிலின் கண் முன் கரீமின் குடும்பமும் தன் குடும்பமும் மாறி மாறி நிழலாடியது.



## 13

ஜோஷிதா காலண்டரில் அன்றைய தேதியைச் சொருகினாள். தினமும் கண் விழித்ததும் எழும் ஆயாசம்



இப்போதும் ஏற்பட்டது. திங்கள் போய் ஞாயிறு வருவதும், ஞாயிறு கடந்து மறுபடி திங்கள் வருவதுமாக நாட்கள் கடிகார முட்களாய் சுற்றி மாதங்களை நகர்த்தின. தீவிரவாதத் தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவு விழாவை இந்தியா கொண்டாடி முடித்து விட்டது. தாக்குதலுக்கு பலியான அப்பாவி பொதுமக்களுக்கும் உயிர் விட்ட நேர்மையான காவல்துறை அதிகாரிகளுக்கும் மலர்தூவி மரியாதை செலுத்தி போட்டோக்களுக்கு போஸ் கொடுத்து அரசியல்வாதிகள் தங்கள் கடமைகளை முடித்துக் கொண்டனர். தாக்குதலில் உயிர் இழந்த காவல்துறை அதிகாரிகளின் மனைவிகள் நீதி கேட்டு அரசாங்கத்தின் ஒவ்வொரு கதவாய் தட்டிக் கொண்டிருக்கிறார்கள். உயிருடன் பிடிபட்ட ஒரே தீவிரவாதியின் உயிர் மட்டும் அரசாங்கத்திற்கு விலை மதிப்பில்லாதது. அவனைப் பாதுகாக்க பல கோடி ரூபாய்களை செலவு செய்து கொண்டிருக்கிறது. தன் அருமையை உணர்ந்த அவனும் தினமும் மட்டன் பிரியாணி கேட்டும், நான் அவனில்லை என கிண்டல் செய்தும் ஜனநாயகத்தை உருட்டி விளையாடுகிறான். குற்றவாளிகளை பாதுகாக்க காட்டும் தீவிரத்தை நாட்டுக்காக உழைக்கும் அதிகாரிகளிடம் காண்பிக்காத ஒரு அரசாங்கத்தில் கிரணைப் போன்றவர்கள் உயிரைக் கொடுத்து வேலை பார்ப்பது முட்டாள்தனமான காரியம்.

''இதோ வந்து விடுகிறேன்'' என கிரண் அவளிடம் விடைபெற்று போய் ஒன்னரை வருடங்கள் ஆயிற்று. அவனிடமிருந்து சின்ன தகவலைக் கூட காணோம்.

'கிருஷ்ணா தர்' என்ற எழுத்தாளரின் ''மிஷன் டு பாகிஸ்தான்'' என்ற புத்தகம் ஜோஷிதாவுக்கு நினைவு வந்தது. இந்தியாவுக்காக உளவு பார்த்த உளவாளியைப்

பற்றிய புத்தகம் அது. அந்த உளவாளி யார் என்பதை இத்தனை நாள் வரை ஆசிரியர் சொல்லவே இல்லை. 2002-ம் ஆண்டு பாகிஸ்தான் ஜெயிலில் நபி அஹமத் என்ற பெயரில் இறந்து போன ரவீந்திரகௌஷிக் என்ற இந்தியர்தான் அந்த உளவாளி என இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை இப்போதுதான் அறிவித்தது. பதினெட்டு ஆண்டுகள் பாகிஸ்தான் ஜெயிலில் சித்திரவதைப்பட்ட வரை இந்தியா கண்டு கொள்ளவே இல்லை. இறப்பதற்கு மூன்று நாட்கள் முன்பு தன் தாய்க்கு எழுதிய கடிதத்தில், ''நான் இதே வேலையை அமெரிக்காவிற்காக செய்திருந்தால் கைது செய்யப்பட்ட மூன்றே நாட்களில் வெளியே வந்திருப்பேன்'' என மனம் நொந்து அழுதிருந்தார். அவர் தியாகத்திற்குப் பிரதியாய் இந்திய அரசாங்கம் அவர் தாய்க்கு மாதம் ஐநூறு ரூபாய் அனுப்பி நன்றிக் கடன் தீர்த்துக் கொள்கிறது என்றறிந்ததும் ஜோஷிதா அதிர்ந்து போனாள். இத்தனை சுயநலம் மிக்க சமூக அமைப்பு கொண்ட அரசாங்கத்தில் கிரண் பணியாற்ற வேண்டுமெனில் அவனது இரத்தத்திலேயே ஊறிப் போன தேசபக்தியும், அவன் தந்தையின் வழி வந்த கடமை உணர்ச்சியும்தான் காரணமாய் இருக்க முடியும். கிரண் இப்போது எங்கே, எப்படி இருக்கிறான் என்பதை அவளால் கற்பனை செய்யக்கூட முடியவில்லை. சர்மா இறந்த விபரம் அவனுக்குத் தெரிந்திருக்கும். எப்போதும் என் பாதுகாப்பைப் பற்றி கவலைப்படுபவன் சர்மாவும் இல்லாத நிலையில் என்னை ஏன் தொடர்பு கொள்ளவில்லை? சமயங்களில் அவன் வேலை என்று கிளம்பிப் போய் நாட்கணக்கில் வராமல் இருந்ததுண்டு. வருடக் கணக்கில் செய்ய வேண்டிய வேலைகளும் உண்டு என அவள் சர்மா மூலம் அறிந்திருந்தாள்.



எங்கிருந்தாலும் அவன் நலமாக இருப்பதாக ஒரு தகவல் வந்தால் அதுவே போதும் என மனம் தவித்தது.

சில மாதங்களுக்கு முன் அவளைப் பார்க்கவென்று லண்டனிலிருந்து கிளம்பி வந்திருந்த அவள் பெற்றோர் கூட அவளைப் பார்த்ததும் கலங்கித்தான் போனார்கள். மெலிந்த உருவமும், ஜீவனைத் தொலைத்த முகமுமாய் மகளைப் பார்த்த அவள் அம்மாவின் அடிவயிறு சுருண்டது. பெற்றவரைப் பார்த்ததுமே கண் கலங்கிய மகளை அணைத்துக் கொண்டு இங்கே அவளை அனுப்பி வைத்த தங்கள் முட்டாள்தனத்தை நொந்து கொண்டார் பரசுராமன்.

மகளை தங்களுடன் வந்து விடும்படி அவர்கள் வற்புறுத்தியபோது ஜோஷிதா கண்டிப்பாக அவர்களுடன் செல்ல மறுத்தாள். ''இதுதான் என் வீடு அப்பா. கிரண் தான் என் கணவன். என்னை காத்திருக்கச் சொல்லி விட்டு போனவன் கண்டிப்பாக ஒரு நாள் திரும்பி வருவான். அதுவரை அவனுக்காக இங்கே நான் இருக்கத்தான் போகிறேன்.''

''ஜோஷி, உன்னுடைய மகிழ்ச்சிதான் எங்களுக்கு முக்கியம். நீ கிரணை மணந்து கொண்டு இந்தியாவிலேயே செட்டில் ஆவதாக முடிவெடுத்தால் நாங்கள் மறுக்கப் போவதில்லை. ஆனால் எங்கே என்றே தெரியாமல், எப்போது வருவான் என்றும் புரியாமல் இருக்கும் ஒருத்தனுக்காக நீ உன் வாழ்க்கையை வீணடித்துக் கொள்வதில் ஏதேனும் அர்த்தம் இருக்கிறதா? யோசித்துப் பார் ஜோஷி'' என்றான் அம்மா தணிவாக.

அங்கு தங்கியிருந்த நாட்களில் அவளது பெற்றோர் எத்தனையோ முறை எடுத்துச் சொல்லி மகளின் மனதைக் கரைக்க முயற்சித்தனர். ஜோஷிதா எதற்கும் அசைந்து கொடுக்காமல் போகவே, அவர்கள் கிளம்பும்

நாளன்று கண்களில் வழிந்த நீரைத் துடைத்தபடி ''உன்னை இங்கே தனியாக விட்டு விட்டு நாங்கள் அங்கே எப்படி இருப்போம்?'' என கலங்கினார்கள்.

''என்னிடம் அன்பு காட்ட மனிதர்களும், என்னை நம்பி குணமடைய, நோயாளிகளும் காத்திருக்கிறார்கள் அம்மா. நான் எப்படி தனியாவேன்'' என்றாள் ஜோஷிதா.

தாராபாய் கபூர், சோம்நாத்ஜி இன்னும் கண்ணில் பட்டவர்களிடமெல்லாம் மகளைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு அவர்கள் கண் கலங்க கிளம்பிப் போனார்கள்.

ஜோஷிதா இப்போது மும்பையின் குடிசைப் பகுதிகளில் மிகவும் பிரபலம். காலையில் வீட்டில் இருந்த க்ளினிக்கில் நோயாளிகளைப் பார்த்துவிட்டு மாலையில் குடிசைப் பகுதிகளுக்கு சென்று பணியாற்றுவாள். லண்டனிலிருந்து திரும்பி வந்த அவளது தோழி ஷீலா நாயர் சிறிது காலம் இவளுடன் சேர்ந்து பணி செய்தாள். பிறகு இராணுவ மருத்துவமனையில் பணிபுரியும் டாக்டர் ஒருவரை மணந்து கொண்டு அவருடன் இராணுவ மருத்துவமனைக்கு வேலை பார்க்கப் போய் விட்டாள்.

இப்போது ஜோஷிதா அரசு மருத்துவமனையில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற நர்ஸ் ரோஸியின் துணையுடன் வேலை பார்த்தாள். ரோஸி சிறு வயதிலேயே நர்ஸ் ஆக ஆசைப்பட்டாள். ஆனால் அவள் பெற்றோர் வற்புறுத்தி மணம் செய்து வைத்தார்கள். திருமணமான சில மாதங்களிலேயே கணவன் இறந்து போய்விட மருத்துவ சேவையை கிறிஸ்துவின் சேவையாகவே எண்ணி முழு மனதுடன் ஏற்றுக் கொண்டாள். ஒரு மருத்துவ முகாமில் ஜோஷிதாவைச் சந்தித்தவள் தானாகவே போய் அவளுடன் இணைந்து கொண்டாள்.

ஜோஷிதாவும் ரோஸியும் சத்ரபதி சிவாஜி டெர்மினல்சுக்கு அருகிலிருந்த நடைபாதை வாசிகளின் இருப்பிடத்



திற்கு செல்கையில் சாக்கடை நாற்றம் குடலைப் புரட்டியது. அவர்களால் தற்காலிகமாக நோயாளிகளை குணப்படுத்த முடிந்ததே தவிர நோய் வராமல் தடுக்க சுத்தத்தையும், சுகாதாரத்தையும் செயல்படுத்த முடியவில்லை. அளவுக்கு அதிகமான மக்கள் தொகையும், இடப்பற்றாக்குறையும். ஒருவர் விடும் மூச்சுக்காற்றை மற்றவர் சுவாசித்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் சுத்தம் எங்கிருந்து வரும் என்ற அவர்களின் கேள்விக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை. சல்வாரின் துப்பட்டாவால் முகத்துடன் மூக்கையும் மறைத்தபடி நோயாளிகளை கவனிக்கத் தொடங்கினார்கள். கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் எல்லோரையும் கவனித்து விட்டு கிளம்ப முற்படுகையில் அழுக்கான உடையும், பரட்டைத் தலையுமாய் ஒரு சிறுமி அவர்கள் அருகே வந்தாள்.

''டாக்டர், அங்கே ஒரு தாத்தாவும் பாட்டியும் உடல்நலமில்லாமல் படுத்து கிடக்கிறார்கள். அவர்களால் எழக்கூட முடியவில்லை. நீங்கள் வந்து அவர்களைப் பார்க்க முடியுமா?'' என்றாள் ஜோஷிதாவை அண்ணாந்து பார்த்தபடி.

''வா பார்க்கலாம்'' என சிறுமியுடன் ஜோஷிதாவும், ரோஸியும், அவளுடன் நடந்தார்கள். பிளாஸ்டிக் படுதாவும், தார் பாயும் கட்டப்பட்டிருந்த பல வீடுகளைக் கடந்து சாக்கடை ஓரத்தில் கோணிப் பையால் மறைக்கப்பட்டிருந்த இடத்தில் நின்ற சிறுமி மெதுவாக கோணித் திரையை விலக்கினாள். சிறுநீரின் நாற்றம் குப்பென குடலைப் புரட்டியது. முனகியபடி படுத்திருந்த இருவரு பேச்சுக்குரல் கேட்டதும் ''யாரது?'' என்றார்கள் கண்களைத் திறக்காமல்.

''பாட்டி, உங்களைப் பார்க்க டாக்டர் வந்திருக்காங் என்றாள் சிறுமி.

''வலியில்லாம சீக்கிரம் செத்துப்போக ஒரு ஊசி போடுங்க. உங்களுக்கு புண்ணியமாப் போகும்'' என்றார் அந்த கிழவர். அவர் மனைவியின் விசும்பல் ஒலி அவர் வார்த்தைகளை அங்கீகரித்தது. ஜோஷிதா அவர்களை நெருங்கி ''உங்களுக்கு என்ன உடம்பிற்கு? ஜுரம் இருக்கிறதா? எங்கேனும் வலிக்கிறதா?'' என்றாள்.

பதில் வராமல் போகவும் அந்தப் பெண்மணியின் உடலை மெதுவாக புரட்டிப் பரிசோதிக்க முற்பட்ட ஜோஷிதா திடுக்கிட்டாள். ''நீங்கள்... நீங்கள்... கரீமின் பெற்றோர் தானே?''

அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள ஜோஷிதா சொன்னாள், ''என்னை நினைவில்லையா உங்களுக்கு? நான் ஜோஷிதா. ஒன்னரை வருடங்களுக்கு முன் ஒரு கணேஷ் சதுர்த்தி கலவரத்தின் போது உங்கள் வீட்டில் தங்கியிருந்தேன்.''

பெரியவர் நினைவு வந்தவராக தலையசைத்தார்.

''நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்? இத்தனை நாளாய் எங்கே இருந்தீர்கள்? முன்பு நீங்கள் தங்கியிருந்த இடத்தில் நான் போய் பார்த்தபோது நீங்கள் இல்லை. அருகிலிருந்தவர்களுக்கும் விபரம் தெரியவில்லை'' என்றாள் ஜோஷிதா.

''எங்களுக்கே தெரியவில்லை பேட்டி. ஒரு நாள் என் மகன் அனுப்பி வைத்ததாகச் சொல்லிக் கொண்டு இஸ்மாயில் என்பவன் எங்களை வந்து சந்தித்தான். எங்கள் மகன் வேலை விஷயமாக வெளியூர் போயிருப்பதாகச் சொன்னான். அடுத்த நாளிலிருந்து யார் யாரோ வந்து கரீம் பற்றி விசாரித்தார்கள். வீட்டிலிருந்த பெட்டி படுக்கை எல்லாம் கலைத்துத் தேடினார்கள். நீங்கள் யார் என்ற எங்கள் கேள்வியையும் அவர்கள் பொருட்படுத்த



வில்லை. நாங்கள் பயந்து போயிருந்தபோது இஸ்மாயில் எங்களை அழைத்துப் போய் வேறு இடத்தில் குடியமர்த்தினான். அவ்வப்போது செலவுக்கு பணமும் கொடுத்துப் போனான். சமீபத்தில் பெய்த புயல் மழையில் நாங்கள் தங்கியிருந்த இடத்தை வெள்ளம் சூழ்ந்ததும், அங்கிருந்த மக்களோடு வெளியேறி இங்கே வந்து விட்டோம். நாங்கள் இங்கிருப்பது தெரியாததால் இஸ்மாயிலையும் பார்க்க முடியவில்லை.''

கரீம் இறந்து போனதை இஸ்மாயில் இவர்களுக்கு தெரிவிக்கவில்லை என்று புரிந்து கொண்ட ஜோஷிதா ''உங்களுக்கு உடம்புக்கு என்ன செய்கிறது ஜி?'' என்றாள் வாஞ்சையுடன்.

இருவரும் பேசாமல் இருக்கவே, ''கால் வலிக்கிறதா? தலை சுத்தலா? சொல்லுங்கள்!'' என்றாள் அவர்களிடம்.

''நீ சொன்னவை எல்லாம் சாதாரண நோய்கள் மகளே! எங்களுக்கு வந்திருப்பது மிகப் பெரிய வியாதி'' என்றார் பெரியவர்.

''என்னவென்று சொல்லுங்கள்'' என்றாள் ஜோஷிதா விடாமல்.

''உழைக்கத் தெம்பின்றி, கையில் பணமின்றி, பாதுகாக்க யாருமில்லாத அநாதைகளுக்கு பசிதான் பெரிய பிணி மகளே! நாங்கள் உணவருந்தி ஐந்து நாட்கள் ஆயிற்று'' என்றார் தளர்ந்து போன குரலில்.

மும்பை வந்ததிலிருந்து ஏழ்மையின் எத்தனையோ முகங்களைப் பார்த்துப் பழகிப் போன ஜோஷிதாவுக்கு அந்த முதியவர்கள் முகத்தில் தெரிந்த களைப்பையும் பலவீனத்தையும் பார்க்க முடியாமல் கண் கலங்கியது. அடுத்து எந்த கேள்வியும் கேட்காமல் ஜோஷிதா ஆம்புலன்சுக்கு தகவல் சொல்ல, ரோஸி க்ளுக்கோசை

கரைத்து இருவரையும் குடிக்க வைத்தாள். அருகிலிருந்தவர்கள் உதவியுடன் இருவரையும் சுத்தப்படுத்தி வாங்கி வந்த உடையை அணிவித்து சக்தி நிவாஸ் முழுவதும் வேடிக்கைப் பார்க்க ஜோஷிதாவின் வீட்டிற்கு கரீமின் பெற்றோர் குடியேறினர். இரண்டு நாள் சத்தான உணவும் ஓய்வுமாய் இருந்ததில் மூன்றாவது நாள் புதிய தெம்புடன் எழுந்து அமர்ந்தார்கள். ஐந்தாம் நாள் நன்றி கூறப் போகக் கிளம்பியவர்களிடம் ''எங்கே போவீர்கள்?'' என்றாள் ஜோஷிதா.

அந்த ஒற்றைக் கேள்வி தங்கள் நிராதரவான நிலையை கண் முன் கொண்டு வர, இருவரும் கலங்கினார்கள்.

''போவதற்கு இடமில்லை என்றாலும் வாழ்வதற்கு உயிர் இருக்கிறது இல்லையா? அது போகும் வரை வாழ்ந்துதானே ஆக வேண்டும்!'' என்றார் பெரியவர் விரக்தியான குரலில்.

''இப்போது நீங்கள் திரும்பிப் போனால் மீண்டும் பழைய நிலைமைக்குதான் போக வேண்டியிருக்கும். இங்கேயே இருந்து விடுங்கள்'' என்றாள் ஜோஷிதா.

பெரியவர் மறுப்புடன் தலையசைத்தார். ''உயிருக்குப் போராடும் ஆட்டுக்குட்டியை கருணைக் கொலை செய்யச் சொல்லி மகாத்மாவே சொல்லியிருக்கிறார். பசியிலும், தள்ளாமையிலும் நாங்கள் விழுந்து கிடந்தபோது யாராவது கருணைக் கொலை செய்து இந்த வாழ்க்கையிலிருந்து விடுவிக்க மாட்டார்களா என்று நினைத்ததுண்டு. துன்பப்படுபவர்களைக் கொல்வது மட்டும் கருணைக் கொலை அல்ல. கருணை காட்டி தன்மானத்தை இழந்து வாழ வைப்பதும் கருணைக் கொலைதான். உன் கருணையால் எங்களை கொன்று விடாதே மகளே!''

ஜோஷிதா வாஞ்சையுடன் அவர் கைகளைப் பற்றினாள். ''நீங்கள் விபரீதமாக எதையோ நினைக்கிறீர்கள்.



என்னுடன் இருப்பதால் உங்கள் தன்மானத்திற்கு எந்தவித பாதிப்பும் வந்து விடாது. ஏனென்றால் நானும் உங்களைப் போல் உறவுகளைப் பிரிந்து தனிமையில் இருக்கிறேன். என்னுடன் எனக்கு உதவியாக இருங்கள் என்றுதான் கேட்கிறேன்.''

பெரியவர் யோசனையில் மூழ்கியிருக்கவும் ஜோஷிதா தொடர்ந்து பேசினாள். ''உங்களைக் கட்டாயப்படுத்த எனக்கு எந்த உரிமையும் இல்லை. நீங்கள் என்னுடன் இருந்தால் என் பெற்றோருடன் இருப்பதைப் போல் உணர்வேன். சும்மா இருக்க வேண்டாம் அங்கிள். மருத்துவப் பணிகளில் நீங்கள் எனக்கு உதவலாம்.''

''ஆஹா'' என்றார் பெரியவர். ''தேசத்தை அந்நியரிடமிருந்து விடுவிக்க காந்தியின் பின்னால் சென்றவன், மக்களை நோயிலிருந்து விடுவிக்க உன்னுடன் வருகிறேன்'' என்றார் உணர்ச்சி வசப்பட்டு. இந்த பெரியவரின் இரத்தத்தில் ஊறிப்போன தேசபக்தியும், நேர்மையும் தான் கரீம் தீவிரவாத கும்பலில் சேர்ந்த போதும் இறுதியில் நேர்மையாக நடந்துகொள்ள வைத்தது. தன் உயிரைக் கொடுத்து என்னைக் காப்பாற்றிய அந்த தியாக மனப்பான்மை தன் தந்தையிடமிருந்துதான் அவனுக்கு வந்திருக்க வேண்டும். அன்றைய நினைவில் ஜோஷிதாவுக்கு கண்கள் பனித்தன.

சோம்நாத்ஜி தன் வீட்டு முன்னறையில் கடைசி நோயாளியை அனுப்பி விட்டு அயர்வாக அமர்ந்திருந்த ஜோஷிதாவின் அருகில் வந்து அமர்ந்தார்.

''நாளுக்கு நாள் கூட்டம் அதிகமாகிறது பேட்டீ'' என்றார் அவளிடம்.

''ஆமாம். நோய்களும் கூட பெருகிக் கொண்டே வருகின்றதே?'' என்றாள் ஜோஷிதா.

''கிரணிடமிருந்து தகவல் வந்ததா?'' என்றார் சோம்
நாத்ஜி. ஜோஷிதா இல்லை என தலையசைக்கவும்.
''கிரணிடமிருந்து இதை நான் எதிர்பார்க்கவில்லை''
என்றார் சோம்நாத்ஜி. ''என்னதான் வேலை அதிகம்
என்றாலும் தகவல் தொடர்பு பெருகி விட்ட இந்த காலத்
தில் ஒரு போன் கூடவா செய்ய முடியாது? ரொம்ப பொறுப்
பானவன் இப்படி நடந்து கொள்வது வியப்பாக இருக்கிறது.''
''நீங்களே சொன்ன மாதிரி பொறுப்பானவன் என்பதால்
வராமலிருக்க தகுந்த காரணங்கள் இருக்கக் கூடும் ஜி.''
''உன்னைப் போல பொறுமையும், சகிப்புத் தன்மை
யும் உள்ள பெண்ணை நான் பார்த்ததே இல்லை பேட்டி.
நீயும் கிரணும் வாழப் போகும் மணவாழ்க்கைப் பற்றி
நானே நிறைய கற்பனை செய்திருந்தேன். உங்களிடமும்
பேசியிருக்கிறேன். ஆனால் இன்றைய சூழலில் உன் வாழ்க்
கையும் முக்கியமானது பேட்டி. தகவலே இல்லாமல் திரும்பி
வருவானா என்றே தெரியாத ஒருவனுக்காக நீ இங்கே
இருந்து இத்தனை சிரமப்படுவதை விட உன் பெற்றோ
ரிடம் கிளம்பிச் செல்வதுதான் சரி என்று தோன்றுகிறது.''
ஜோஷிதா மறுப்புடன் தலையசைத்தாள். ''கிரண்
என்னைக் காத்திருக்கச் சொல்லிவிட்டு போனான் ஜி.
வந்து பார்க்கும்போது நான் இல்லை என்றால் வருத்தப்
பட மாட்டானா? நான் காத்திருக்கிறேன் ஜி.''
சோம்நாத்ஜி கண்களில் துளிர்த்த நீரை துடைத்தபடி
சொன்னார். ''இப்போது இந்த நகரம் தீவிரவாத அச்சுறுத்
தலில் சிக்கித் தவிக்கிறது மகளே! எந்த நேரமும் அபா
யத்தை எதிர் நோக்கும் மனநிலை வந்து விட்டது. எல்
லோருக்கும் தற்காப்பு உணர்ச்சி அதிகமானதால் மனிதாபி
மானம் குறைந்து விட்டது. நானோ, கபூரோ எத்தனை நாள்
உன்னைப் பாதுகாக்க முடியும் என்று தெரியவில்லை''
என்றார் கவலையுடன்.



ஜோஷிதா ஏதோ சொல்ல வாயைத் திறக்கையில்
சரீயின் அம்மா காய்கறி கூடையுடன் இவர்களைப்
பார்த்துப் புன்னகைத்தபடி கடந்து போனாள். கறுப்பு
பர்தா கண்ணுக்கு மறையும் வரை பார்த்துக் கொண்
டிருந்த சோம்நாத்ஜி கேட்டார். ''இவர்கள் இங்கேயே
தங்கியிருக்கப் போகிறார்களா ஜோஷிதா?''
''ஆமாம். அவர்களுக்கென்று யாரும் இல்லை.''
''யாருமே இல்லாமல் எத்தனையோ பேர் இங்கு
வாழத்தான் செய்கிறார்கள். நம்மால் முடிந்த உதவியை
அவர்களுக்கு செய்யலாமே தவிர கூடவே வைத்துக்
கொள்வது சரியில்லை ஜோஷிதா?''
''ஏன் சரியில்லை?''
''இத்தனை நாளில் உனக்கு விபரம் புரியவில்லையா?
இங்கு வசிப்பவர்கள் எல்லோரும் இந்துக்கள். பெரும்
பான்மை இந்துக்கள் வசிக்கும் இடத்தில் ஒரு இஸ்லா
மியர் வசிக்க நேர்ந்தால் அது பல பிரச்சனைகளை ஏற்
படுத்தி விடும்.''
''இன்று உங்களுக்கு நிறைய நேரம் இருக்கிறது
போலிருக்கிறதே!'' என்ற குரல் கேட்டு இருவரும்
திரும்பிப் பார்த்தாள். அவர்களுக்கு எதிரே கங்காவும் சக்தி
நிவாஸில் வசிக்கும் சிலரும் நின்றிருந்தார்கள்.
''என்ன விசேஷம் கங்கா? எல்லோரும் ஒன்றாக
வந்திருக்கிறீர்கள்?'' என்றார் சோம்நாத்ஜி.
''விசேஷத்துக்கு என்ன குறை? நம் காம்பவுண்டில்
தான் தினம் ஒரு விசேஷம் நடக்கிறதே!'' என்றாள் கங்கா
நிஷ்டூரத்துடன்.
''புரியும்படி சொல்.''
''டாக்டர் ஜி வீட்டிற்கு புதிதாக வந்திருக்கிற விருந்
தாளிகள் யார்? இன்னும் எத்தனை நாள் அவர்கள்
இங்கே இருப்பார்கள்?'' என்றாள் கங்கா.

''அடுத்த வீட்டிற்கு வந்த விருந்தாளிகளைப் பற்றி
கேள்வி கேட்க நமக்கு உரிமை இல்லை கங்கா'' என்றார்
சோம்நாத்ஜி கண்டிப்புடன்.

''எங்களை பாதிக்கும் விஷயத்தைப் பற்றி நாங்கள்
எப்படி கேட்காமல் இருக்க முடியும்?'' என்றார்கள்
அவளுடன் நின்றிருந்தவர்கள்.

''உங்களுக்கு என்ன பாதிப்பு?''

''இப்போதுள்ள சூழ்நிலையில் வேற்று மதத்தினரை
நம்முடன் தங்க அனுமதிக்கலாமா? அவர்களுக்கு எத்
தனையோ தொடர்புகள் இருக்கலாம்.''

''வயதானவர் எப்படி சதியில் ஈடுபட முடியும்?
யோசித்துப் பேசுங்கள்'' என்றார் சோம்நாத்ஜி.

''இந்தப் பெரியவர்களை கருவியாகப் பயன்படுத்தி
நம்மிடையே கலவரம் உண்டாக்க யாரேனும் முயற்சிக்
கலாம். இவர்களின் பின்னணியை நாம் முழுதாக
அறிந்து கொள்வது சிரமம்'' என்றார் ஒருவர்.

ஜோஷிதாவுக்கு அவர்களது பயம் முழுக்க தவறானது
இல்லை என்று தோன்றியது. இந்த பெரியவர்கள் அப்
பாவிகள்தான் என்றாலும் கரீம் கும்பலை சேர்ந்தவர்
களோ, காவல் துறையோ கரீம் பற்றி கிளற ஆரம்பித்
தால் இங்கே வசிப்பவர்களுக்கு அது பெரிய தலைவலி
யாய் இருக்கும். எனவே தனக்குள் ஒரு முடிவுக்கு
வந்தவளாக ஜோஷிதா சொன்னாள், ''இந்தப் பெரியவர்
காந்திஜியின் சீடர். சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற
குடும்பம் அவருடையது. அவரைப் பற்றி தவறாக
நினைப்பதே பெரிய பாவம். இருந்தாலும் என்னால்
உங்களுக்கு எந்த சஞ்சலமும் ஏற்பட வேண்டாம். நான்
விரைவில் அவர்களுக்கு வேறு ஏற்பாடு செய்கிறேன்.''

''எப்படியோ இங்கிருந்து போனால் சரி'' என்றாள்
கங்கா மெதப்புடன். அவளுடன் வந்திருந்தவர்கள்



கலைந்து போக யோசனையுடன் அமர்ந்திருந்த ஜோஷி
தாவை ''என்ன செய்யப் போகிறாய் மகளே?'' என்றார்
சோம்நாத்ஜி.

''தெரியவில்லை ஜி. என்றாலும் அவர்களை என்னால்
விட முடியாது. பெரியவர்களும் அவர் மகனும் வெவ்
வேறு சமயங்களில் என் உயிரைக் காப்பாற்றி இருக்
கிறார்கள். அதை இந்த ஜென்மத்தில் மறக்க முடியாது
என்னால்'' என்றாள் ஜோஷிதா உணர்ச்சி வசப்பட்டு.

''இஸ்மாயிலை கேட்டுப் பார்க்கலாம்'' என்றார் சோம்
நாத்ஜி. ஜோஷிதா, மலபார் ஹில்சிலிருந்து பாதுகாப்
பாக இஸ்மாயில் அவளை இங்கு கொண்டு வந்து
சேர்த்த பிறகு அவனை சந்திக்கவே இல்லை. அவர்கள்
குடும்பமும் இங்கிருந்து போரிவல்லி போய் விட்டார்
கள். ஜோஷிதா ஓரிருமுறை போன் செய்த போதும்
அவனிடம் பேச முடியாததால் தன்னை தவிர்க்கிறான்
என்பதைப் புரிந்து கொண்டு மேற்கொண்டு அவனிடம்
பேச அவள் முயற்சிக்கவில்லை. இஸ்மாயிலின் பெற்
றோர் இங்கிருப்பது அவனுக்குத் தெரிய வேண்டியது
அவசியம் என்று தோன்ற, ''இஸ்மாயிலுக்கு தகவல்
சொல்லுங்கள் ஜி'' என்றாள் ஜோஷிதா.

''சலீம் மொகமத் எனக்கு அடிக்கடி போன் செய்வான்.
நான் சொல்கிறேன்'' என்றார் சோம்நாத்ஜி.

ஜோஷிதா முகத்தை கழுவித் துடைத்தபடி வந்து
தரையில் அமர்ந்தாள்.

''மாதாஜி, என்ன சமைத்திருக்கிறீர்கள்? எனக்கு ரொம்ப
பசிக்கிறது. மூன்று பேரும் சாப்பிடலாம், வாருங்கள்''
என்றாள் சிரித்தபடி. வெறும் தண்ணீரில் கழுவியதும்
பளபளக்கும் அந்த முகத்தையும் கருணை நிரம்பிய
அவள் விழிகளையும் பார்த்த பெரியவர்கள் இருவரும்
சொல்ல வந்ததைச் சொல்ல முடியாமல் திணறினர்.

கரீமின் அம்மா எழுந்து போய் உணவை எடுத்து வந்து பரிமாற பெரியவரும் ஜோஷிதாவும் பேசியபடியே சாப்பிட்டனர். உணவு முடிந்ததும் பெரியவர் கனத்த அமைதிக்குப் பின் சொன்னார். ''நாங்கள் இங்கு தங்கியிருப்பது சக்தி நிவாஸ் வாசிகளுக்கு பிடிக்கவில்லை பேட்டீ. அவர்களைச் சொல்லியும் தவறில்லை. சகோதரர்களாய் பழகியவர்கள் எதிர் எதிராய் நிற்க வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். நாங்கள் வாழ்ந்து முடிந்தவர்கள். மகனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை மட்டும் அடி மனதில் இல்லை என்றால் எப்போதோ எங்கள் உயிர் போயிருக்கும். எங்களுக்காக நீ எந்த சிக்கலிலும் மாட்டிக் கொள்ளக் கூடாது. தெரிந்தோ தெரியாமலோ கூட நாங்கள் அதற்குக் காரணமாய் இருக்க மாட்டோம்.''

''யார் காரணமாகவும் சிக்கல் ஏற்படாது. யோசித்து முடிவெடுக்கலாம் பிதாஜி. அவசரப்படாதீர்கள்'' என்றாள் ஜோஷிதா.

அன்று மாலையில் நோயாளிகளைப் பார்த்துவிட்டு ரோஸிக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டு ஜோஷிதாவும் பெரியவரும் வீடு திரும்புகையில் ''பிதாஜி, சில மருந்துகள் வாங்க வேண்டும். வழக்கமான மருந்து கடைக்கு போய்விட்டுப் போகலாம்'' என்றாள் ஜோஷிதா.

ஜோஷிதாவின் நிழலாகவே மாறிப் போன பெரியவர், ''கடையில் கூட்டம் அதிகமாக இருக்கும். நான் வாங்கிக் கொண்டு வருகிறேன். அது வரை இங்கே உட்கார்ந்திரு பேட்டீ'' என மருந்து சீட்டை வாங்கிக் கொண்டு போனார்.

க்ரவுண்ட் ப்ளோரில் போடப்பட்டிருந்த சலவைக்கல் பெஞ்சில் ஜோஷிதா அமர்ந்தாள். பெற்றோர் ஷாப்பிங்கில் இருக்க, அவர்களுடன் வந்திருந்த குழந்தைகள் வேலையாட்கள் மேற்பார்வையில் விளையாடிக் கொண்டிருந்தன. குழந்தைகளை அதட்டியபடி ஆயாக்கள்



சாவகாசமாக வெற்றிலையை மென்று கூச்சமே இல்லாமல் வழி எங்கும் துப்பிக் கொண்டிருந்தனர். ஜோஷிதாவுக்கு அருவெறுப்பாக இருந்தது. எத்தனைதான் ஒரு நகரம் வளர்ச்சியடைந்தாலும் நவீனத்துவம் பெற்றாலும் தனிமனித பொறுப்புணர்ச்சி இல்லை எனில் பெருநோயையும், போழிவையும்தான் சந்திக்க வேண்டியிருக்கும். ஜோஷிதா சிந்தனைகளில் மூழ்கியிருந்த போது யாரோ அருகில் அமர்வது தெரிந்தது.

பெரியவர் வந்து விட்டார் போலும் என்றெண்ணிய ஜோஷிதா எதிர்பாராமல் இஸ்மாயிலைப் பார்த்ததும் வியப்புடன் புன்னகைத்தாள். ''உன்னைப் பார்த்து வெகு நாள் ஆயிற்று இஸ்மாயில். உன் வீட்டில் எல்லோரும் நலமா?''

''உங்களிடம் பேச வேண்டும் என சில நாட்களாக முயற்சிக்கிறேன் தீதி. இன்றுதான் தனியாக கிடைத்தீர்கள்.''

''என்னிடம் பேசுவதில் என்ன சிரமம்? வீட்டிற்கு வந்திருக்கலாமே நீ?'' என்றாள் ஜோஷிதா.

இஸ்மாயில் சுற்றிலும் ஒரு பார்வை பார்த்துவிட்டு சொன்னான். ''நான் உங்களைப் பார்க்க வருவதோ, கரீமின் பெற்றோர் உங்களுடன் தங்கியிருப்பதோ உங்கள் பாதுகாப்பிற்கு நல்லதில்லை தீதி.''

''நீ எப்போதிருந்து இஸ்மாயில் மற்றவர் பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பித்தாய்?''

இஸ்மாயில் கேள்விக்குறியுடன் பார்க்க, ஜோஷிதா கேட்டாள். ''நாட்டில் பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்குவதுதானே உனக்கிடப்பட்டிருக்கும் வேலை. அப்படியிருக்கையில் என் பாதுகாப்பைப் பற்றிய கவலை உனக்கு எப்படி வந்தது?''

ஒரு நிமிடம் அமைதியான இஸ்மாயில் சொன்னான், ''அல்லா எனக்கு உயிரைக் கொடுத்து பூமிக்கு

அனுப்பினார். இரண்டாவதாக எனக்கு உயிர் கொடுத்தவர் நீங்கள்'' என்றான் உணர்ச்சியுடன்.

''இல்லை இஸ்மாயில். உன்னை குணப்படுத்த மட்டும் தான் என்னால் முடியும். உயிரை உருவாக்கும் சக்தி நம் யாருக்கும் இல்லை. நீயே சொன்ன மாதிரி இந்த உலகின் ஒரே கடவுள் அல்லா. அவர்தான் உயிர்களை உருவாக்கினார் என்பது உண்மையானால் அவர் உருவாக்கிய உயிரை அழிக்கும் உரிமை உனக்கு எங்கிருந்து வந்தது இஸ்மாயில்.''

''அனுபவங்களிலிருந்து வந்தது'' என்றான் இஸ்மாயில்.

''உங்கள் கண் முன்னே உங்கள் உடன் பிறப்புகள், பிஞ்சு குழந்தைகள், நடக்க முடியாத முதியவர்கள் கதறக் கதற கருகியதைப் பார்த்திருந்தால் இந்தக் கேள்வி கேட்டிருக்க மாட்டீர்கள். அன்று அத்தனை பேரின் உயிரைப் பறிக்கும் அதிகாரத்தை அவர்களுக்கு எந்தக் கடவுள் தந்தது?''

ஜோஷிதா தன்னையறியாமல் அவன் கைகளைப் பற்றினாள். கண்கள் சிவந்து முகம் தணலாய் ஜொலித்த இஸ்மாயிலிடம் சொன்னாள்,

''தனக்கு ஏற்பட்ட துன்பம் அடுத்தவர்களுக்கு ஏற்படக் கூடாது என்று நினைப்பதுதான் மனிதாபிமானம் இஸ்மாயில். தன்னை விட அடுத்தவன் அதிகம் துயரப்பட வேண்டும் என்று நினைப்பது மிருகத்தனம்.''

''ஒரு சராசரி மனிதனாய் இருப்பவன்தான் அடுத்தடுத்து அடி விழும் போது, தொடர்ந்து இழப்பு ஏற்படும்போது மிருகமாகி விடுகிறான். உங்களுக்கு இது புரியாது தீதி.''

''இஸ்மாயில் இங்கே பார்'' என்றாள் ஜோஷிதா அவன் முகத்தைப் பார்த்து ''உனக்கு நேர்ந்த அநியாயத்தால் நீ செய்யும் வன்முறையை நியாயப்படுத்தாதே இஸ்மாயில். உன் குடும்பத்தில் நேர்ந்த துக்கம் உன்னை மட்டும் பாதிக்கவில்லை. உன் குடும்பத்தினரையும்தான்



பாதித்தது. அதற்காக அவர்கள் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு அலையவில்லை. அவர்களுக்கு இன்னும் சக மனிதர்கள் மீது நம்பிக்கை இருக்கிறது.

அந்த நம்பிக்கைதான் உன் மதத்தைச் சேராத கபூரையும், தாராபாயையும், சோம்நாத்ஜியையும் உன்னை அவர்கள் வீட்டில் தங்கியிருக்க வைத்து சேவை செய்ய வைத்தது. இஸ்மாயில் உனக்கு ஒன்று தெரியுமா? எனக்கு இந்த நாட்டில் கிரணை விட முக்கியமானவர்கள் நெருக்கமானவர்கள் யாரும் இல்லை. இப்போது கிரண் என்னுடன் இல்லாத நிலையிலும் நான் இந்த நாட்டை விட்டுப் போகவில்லை. ஏன் தெரியுமா? உயிருக்கு ஆபத்தான நிலையில் நான் இருந்த போது கரீம் உயிரைக் கொடுத்து என்னைக் காப்பாற்றினான். நீ அங்கிருந்து காப்பாற்றி பாதுகாப்பாய் அழைத்துப் போனாய். உங்கள் இருவரின் உதவியும் தியாகமும்தான் என்னை இங்கிருந்து நகர விடாமல் கட்டிப் போட்டிருக்கிறது. உன் அடிமனதின் ஈரத்தை மூளையை சலவை செய்து உலர வைக்க முயற்சிக்கிறார்கள். நீ பிறந்த மண் பெற்ற தாய்க்கு சமம் இல்லையா? உன் தாய் கோபத்தில் அடித்தால் அதற்காக அடுத்தவன் தாயை அடிக்க அனுமதிப்பாயா? யோசித்துப் பார் இஸ்மாயில்.''

ஜோஷிதா தன் வழக்கத்திற்கு மாறான படபடப்புடன் பேசினாள்.

இஸ்மாயில் பதில் பேசாமல் தொலைவை வெறித்தான்.

மருந்து கடையிலிருந்து கரீமின் அப்பா வெளியே வருவதைப் பார்த்ததும் ''நான் போகிறேன்'' என்றான் இஸ்மாயில்.

''அவர் உன்னைப் பார்க்கத் துடித்துக் கொண்டிருக்கிறார் இஸ்மாயில். அவரைச் சந்தித்து விட்டுப் போ'' என்றாள் ஜோஷிதா.

''அவர் என்னைப் பார்த்தவுடன் கேட்கப் போகும் கேள்விகளுக்கு என்னிடம் பதில் இல்லை தீதி. வருகிறேன்'' என்ற இஸ்மாயில் மேற்கொண்டு நிற்காமல் அங்கிருந்து விரைந்தான்.

''யார் இஸ்மாயிலா? அவனைப் பார்த்து விட்டுத்தான் வேகமாக வந்தேன். அதற்குள் போய் விட்டானா?'' என்றார் பெரியவர் ஏமாற்றத்துடன்.

''கரீம் பற்றி அவனிடம் விசாரிக்க எண்ணியிருந்தேன். மர்ஹூம்'' என்றார் பெருமூச்சுடன்.

இந்தக் கேள்விக்கு பயந்துதான் இஸ்மாயில் ஓடிப் போனான் என்று எண்ணிய ஜோஷிதா ''அவனுக்கு எதாவது அவசர வேலை இருக்கும் பிதாஜி. நேரம் கிடைக்கும் போது உங்களைப் பார்க்க வருவான்'' என்றாள் சமாதானமாக.

''இந்த கரீம் வயதான காலத்தில் எங்களை தவிக்க விட்டு விட்டு ஒரு வார்த்தை சொல்லாமல் அப்படி என்ன வேலை பார்க்கப் போனான்?'' என்றார் பெரியவர் கண் கலங்க.

இந்த முதியவரின் துக்கத்திற்கு நானும் ஒரு காரணம் என்ற குற்றவுணர்வு ஜோஷிதாவின் மனசை பிசைந்தது. ''என்னை உங்கள் சொந்த மகளாக நினையுங்கள் பிதாஜி. எதற்காகவும் வருந்தாதீர்கள்'' என்றாள் அவரிடம்.

பெரியவர் துக்கத்துடன் தலையசைத்தார். ''வயதான காலத்தில் பூமிக்கு பாரமாய் நாட்களைக் கடத்தாமல் எங்கள் வாழ்க்கையை நீதான் மகளே அர்த்தமுள்ளதாக்கி இருக்கிறாய். அல்லா அருளால் உன் எதிர்காலம் பிரகாசமாகட்டும்'' என்றார் மனப்பூர்வமாக.

வீட்டிற்குள் வரும்போது எதிரில் வந்த கபூர் அவளிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். ஜோஷிதாவின் மருத்துவப் பணியை பாராட்டி அரசு ஜோஷிதா தங்க குவார்ட்டர்ஸ் ஒதுக்கியிருப்பதாக கடிதம் சொன்னது. எதிர்பாராத



அங்கீகாரமும், கரீம் பெற்றோரின் வீட்டுப் பிரச்சனை தீர்ந்து விட நிம்மதியுமாக ஜோஷிதா புன்னகைத்தாள்.

நாட்கள் வேகமாக உருண்டன. மும்பையில் வெய்யிலும் மழையும் மாறி மாறி அடித்தது. தென்னிந்திய நடிகைகள் பாலிவுட்டை நோக்கி படை எடுத்தார்கள். மும்பை புதுமுகங்கள் சென்னைக்கு விமானம் ஏறினார்கள். டி.வி.யில் கிரிக்கெட் பார்க்கும் கூட்டம் ஒரு பக்கமும், சீரியல் பார்க்கும் கூட்டம் ஒரு பக்கமுமாய் வீடுகளில் டி.வி.யின் இரைச்சல் விடாது கேட்டுக் கொண்டிருந்தது. குண்டு கொண்டாட்டங்களும் அதைத் தொடர்ந்த வெடிப்புகளும் எப்போதும்போல் இருந்தன. மற்றபடி மும்பையில் பெரிதாய் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. ஆனால் ஜோஷிதா நிறைய மாறியிருந்தாள். நடையில் ஒரு நிதானமும் கம்பீரமும் வந்து விட்டிருந்தது. செயல்களில் தீர்க்கம் ஏற்பட்டிருந்தது. முன்பு கொச்சையான ஹிந்தி பேசியவள் இப்போது அங்கேயே பிறந்து வளர்ந்த லாவகத்துடன் ஹிந்தியும் மராத்தியும் பேசினாள். தோற்றமும் பேச்சும் மாறியிருந்ததைப் போல் மனதில் உறுதியும் கூடியிருந்தது. சோம்நாத்ஜி தளர்ந்து போனவராய் காணப்பட்டார். வயதின் தள்ளாமையுடன் கிரணின் நினைவும் ஜோஷிதாவின் நிலையும் அவரைப் பெரிதும் பாதித்திருந்தன. தனக்குப் பிறகு இந்தப் பெண்ணுக்கு யார் பாதுகாப்பு என்ற கவலை மனதை அழுத்தியது.

ஜோஷிதாவின் பெற்றோர் மேலும் இரண்டு முறை வந்து போய் விட்டார்கள். ஒவ்வொரு முறையும் மகளை உடன் அழைத்துச் செல்லும் தீர்மானத்துடன் வந்தவர்கள், கண் கலங்க மகளை விட்டு விட்டு திரும்பிப் போனார்கள்.

''என்ன ஜி காலையிலேயே உறக்கமா? இரவில் சரியாகத் தூங்கவில்லையா?'' என்றபடி தாராபாய் வந்து அவர் அருகில் அமர்ந்தாள்.

''என் தூக்கம் போய் பல நாளாகி விட்டது. என் மனைவி இறந்தபோது மனதளவில் துறவறம் வந்து விட்டதாகத்தான் நினைத்தேன். ஆனால் பழகியவர்கள் மீது வைத்த பாசம் இன்னும் என்னை பந்தத்திலிருந்து விடுபட முடியாமல் அழுத்துகிறது'' என்றார் சோர்வுடன்.

''நாங்கள் எல்லோரும் உங்களை பெரிய துணையாய் நம்பியிருக்கையில் எங்களை விட்டு எப்படி விடுபட முடியும்?'' என்றபடி கபூரும் வந்து சேர்ந்து கொள்ள, ''இப்போதெல்லாம் உன்னைப் பார்க்கவே முடியவில்லையே கபூர்! என்ன செய்கிறாய்?'' என்றார் சோம்நாத்ஜி அவனிடம்.

''வேலை அதிகம் ஜி. களைத்துப் போய் வீட்டிற்கு வந்தால் கோவிலுக்குப் போகணும். நேர்த்தி செய்யணும் என இவள் வீட்டிலேயே என்னை இருக்க விடுவதில்லை. அதனால் சில சமயம் ஓய்வு கிடைக்கும்போது கடையிலேயே தூங்கி விடுகிறேன்.''

தாராபாயின் கண்களில் நீர் நிறைந்தது. ''நான் என்ன செய்வேன்? மருத்துவர் எங்களுக்கு இயற்கையான முறையில் குழந்தை பிறக்க எண்பது சதவீதம் சான்ஸ் இல்லை என்று சொல்லி விட்டார்கள். மீதி இருபது சதவீதம் பலிக்க வேண்டுமானால் கடவுள் அருளால் ஏதேனும் அற்புதம் நிகழ வேண்டும். அதைப் புரிந்து கொள்ள வேண்டாமா?''

''புரிந்து கொள்ளாமல் இல்லை. மந்திரத்தில் மாங்காய் விழுவது சாத்தியம் இல்லை என்று நீதான் புரிந்து கொள்ளவில்லை.''

''ஏன் இத்தனை வருடப் பூஜைக்குப் பலன் என்று ஏதேனும் இருந்தால் மந்திரத்தில் மாங்காய் விழுந்தே தீரும்'' என்றாள் தாராபாய்.



கபூர் அவளுக்கு பதில் சொல்வதற்குள் யாரோ ஓங்கரிக்கும் சத்தம் கேட்டது. தாராபாய் எழுந்து போய் பார்த்தாள். காம்பவுண்டை ஒட்டி இருக்கும் குழாயடியே கங்காவின் பெண் லதிகா முகத்தை கழுவித் துடைத்தபடி எதிரே வந்தாள்.

''லதிகா உடம்பு சரியில்லையா உனக்கு?'' என்றாள் தாராபாய் அவளை நெருங்கி.

'இல்லை' என்று தலையசைத்துவிட்டு அடுத்த கேள்வி கேட்கும் முன் லதிகா உள்ளே விரைந்தாள்.

''கங்காவின் பெண்ணுக்கு உடல் நலமில்லை போலிருக்கிறது. வாந்தி எடுத்துக் கொண்டிருக்கிறாள்'' என்றாள் தாராபாய் கணவனிடம்.

''ஆமாம். நானும் சில நாளாய் பார்க்கிறேன். அந்தப் பெண் முகம் வெளுத்து சோர்ந்து போயிருக்கிறாள். எப்பவும் குதித்துக் கொண்டு நடப்பவள் இப்போது நடக்கவே தெம்பில்லாதவள் போலிருக்கிறாள். ஜோஷிதாவைப் பார்க்கச் சொல்ல வேண்டும்'' என்றார் சோம்நாத்ஜி.

''கங்கா பாவம் தனியாக இந்தப் பெண்ணை வைத்துக் கொண்டு என்ன செய்வாள்? பெண்ணுக்கு படிப்பும் வரவில்லை. நாலைந்து வருடங்களாய் வரன் தேடுகிறாள். பணம், நகை என வருகிறவர்கள் எல்லாம் சக்திக்கு மீறி வரதட்சணை கேட்பதில் எந்த இடமும் அமையவில்லை'' என்றாள் தாராபாய் அனுதாபத்துடன்.

சற்று யோசனைக்குப் பிறகு கபூர் சொன்னான். ''எனக்கு தெரிந்த பையன் ஒருத்தன் இருக்கிறான். ரொம்ப நல்லவன். பெற்றோர் இல்லை. தங்கைகளுக்கு திருமணம் முடித்து வைத்து அதிலிருந்த சுமையை உணர்ந்ததால் பத்து பைசா செலவின்றி பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்கிறான்.''

''நல்ல இடமாகத்தான் தெரிகிறது. பையன் பெயர் என்ன?'' என்றாள் தாராபாய் ஆர்வத்துடன்.

''ஜோசப்.''

''கிறிஸ்துவர்களா?'' தாராபாயின் முகம் விழுந்து போனது.

''இப்போது இதை எல்லாம் யாரும் பார்ப்பதில்லை. இன்று வாழ்ந்து நாளை முடிந்து போகிற வாழ்க்கையில் நிலைத்து நிற்பது அன்பைத் தவிர வேறு எதுவும் இல்லை'' என்றான் கபூர் உறுதியான குரலில்.

''அது சரி, கங்கா அதற்கு ஒத்துக் கொள்ளணுமே!'' என்றாள் தாராபாய்.

''கங்காவிடம் நான் பேசுகிறேன். வேறு வழியில்லாத சூழ்நிலையில் அவள் இதற்கு ஒத்துக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை'' என்றார் சோம்நாத்ஜி.

சோம்நாத்ஜியின் நம்பிக்கை வீண் என்பது அன்று இரவு சக்தி நிவாஸ் முழுவதும் ஒலித்த கங்காவின் உரத்த குரலில் தெரிந்தது.

''உங்களுக்கு வயசானதும் புத்தி பிசகிப் போச்சா ஜி? என் குடும்பத்தைப் பற்றி தெரியுமா உங்களுக்கு? என் அப்பா காசியிலேயே பிறந்து வளர்ந்து அங்கேயே உயிரை விட்ட பண்டிதர். என் அம்மா சாகும் வரை கங்கை நீரைத் தவிர வேறு எதையும் குடித்ததில்லை. அதனால் தான் எனக்கும் அந்த புண்ணிய நதியின் பெயரை வைத்தார்கள். என்னைப் போய் வேறு மதத்துக்காரனிடம் சம்மந்தம் வைத்துக் கொள்ளச் சொல்ல உங்களுக்கு என்ன துணிச்சல்?''

''அவன் மதத்தைப் பார்க்காதே கங்கா. மனசைப் பார். திருமணத்திற்குப் பின் அவன் மதம் மாறச் சொல்லவில்லை. எதையும் எதிர்பார்க்கவில்லை.''

''மதம் மாறச் சொல்லவும், சொல்லாமலிருக்கவும் அவன் யார்? என் பரம்பரை என்னவென்று என் ஊரில் போய் கேட்டுப் பாருங்கள். கங்கா அந்த கங்கை மாதிரி. உயிரை விட்டாலும் விடுவேனே தவிர மானத்தை



இழக்க மாட்டேன். என் பெண்ணும் அப்படித்தான். நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்'' கங்கா தொடர்ந்து பேசுமுன் இவர்களை வேடிக்கை பார்த்தபடி நின்றிருந்த பக்கத்து வீட்டுக்காரன் சொன்னான். ''உனக்கு விருப்பமில்லை எனில் விட்டு விடு கங்கா. சோம்நாத்ஜியிடம் எதற்கு சண்டை போடுகிறாய்?''

''வேடிக்கை பார்க்க வந்தாய் அல்லவா? உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ. என் விஷயத்தில் தலையிடாதே'' என்ற கங்காவை யாரோ இடைமறித்தார்கள்.

''நமஸ்தே மாதாஜி'' என்ற குரலில் கங்கா சண்டையை நிறுத்தினாள். சிவந்த நிறமும், உயரமுமாய் ஒரு இளைஞன் புன்னகையுடன் கைகளைக் கூப்பியபடி நின்றிருந்தான். ''யார்?'' என்றாள் கங்கா வியப்புடன்.

''நீங்கள்தானே மிஸஸ் கங்கா விஸ்வநாத். உங்களைத்தான் பார்க்க வேண்டும்'' என்று என்றான் அவன்.

தன் கணவரின் பெயரும் தெரிந்து வைத்திருக்கிறான் என்ற குழப்பத்துடன் கங்கா சொன்னாள், ''உண்மையிலேயே நீங்கள் யார் என்று எனக்குத் தெரியவில்லை. இத்தனைக்கும் யாரையாவது ஒரு முறை பார்த்தால் லேசில் மறக்காது எனக்கு.''

''இருக்கலாம். ஆனால் நீங்கள் என்னைப் பார்த்திருக்க முடியாது. உங்கள் கணவர் மிஸ்டர் விஸ்வநாத்தின் ஒன்று விட்ட அத்தை பேரன் நான். சூரத்திலிருந்து வருகிறேன்.''

''ஆமாம். சூரத்தில் என் கணவரின் உறவினர்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் இருக்கும் போது அடிக்கடி சூரத் போவார். நான் அதிகம் போனதில்லை'' என்றாள் கங்கா.

''நீங்கள் வரவில்லை என்றாலும் என் பாட்டி அடிக்கடி உங்களைப் பற்றிச் சொல்வார். விஸ்வநாதரும் விசாலாட்சியும் மாதிரி இருக்க வேண்டியவர்கள் நீங்கள். சித்தப்பா பொறுப்பில்லாமல் உங்களை விட்டுவிட்டுப்

போய் விட்டதையும் ஒரே பெண்ணுடன் நீங்கள் கஷ்டப்படுவதையும் சொல்லி வருத்தப்படுவார்கள்.

"எங்களைப் பற்றி நினைத்துப் பார்க்கவாவது ஆளிருக்கிறதே!" என்றாள் கங்கா கண்களைத் துடைத்தபடி.

"என்ன இருந்தாலும் பாசம் விட்டுப் போகுமா?" என்றான் அவன் உரிமையுடன்.

"சரி. இப்போது நீ என்ன விஷயமாக வந்திருக்கிறாய்?" என்றான் கங்கா அவனிடம்.

"எனக்கு இங்கே ஒரு கம்பெனியில் வேலை கிடைத்திருக்கிறது சாச்சி. நல்ல சம்பளம். தங்குவதற்கு இடம் தேடிக் கொண்டிருந்த போது பாட்டிதான் சொன்னார்கள், வெளியே தங்கி செலவழிப்பதை விட கங்கா சாச்சி வீட்டில் அந்தப் பணத்தை கொடுத்துவிட்டு தங்கிக் கொண்டால் இருவருக்கும் உதவியாக இருக்கும் என்று."

யார் அந்த பாட்டி என்ற யோசனையுடன் கங்கா சொன்னாள்.

"நீ சொல்வது உண்மைதான். நம் வீட்டிலேயே நீ தங்கிக் கொள்ளலாம்."

அவன் முகம் மலர்ந்து "நன்றி சாச்சி. என் பொருட்கள் டாக்ஸியில் இருக்கிறது. எடுத்து வருகிறேன்" என வெளியே விரைந்தான்.

சோம்நாத்ஜி சற்று முன் கங்கா பேசியதை எல்லாம் மறந்து போனவராகச் சொன்னார், "அவசரப்பட்டு முடிவெடுக்காதே கங்கா. இதற்கு முன் பார்த்திராத ஒருவன் உன் உறவினன் என்றால் அதை உடனே நம்பி விடலாமா? பெண்கள் தனியாக இருக்குமிடத்தில் பழக்கமற்ற ஆண் பிள்ளையை தங்க அனுமதிப்பது சரியல்ல."

கங்கா சோம்நாத்ஜியை வெட்டி விடுவது போல் பார்த்தாள். "கங்கா எப்பவும் தனின்னு நினைச்சீங்களா? எங்களுக்கும் உறவு சொந்தம் எல்லாம் உண்டுன்னு தெரிஞ்சதும் தாங்கிக்க முடியல. இல்லையா?" என்றவள்



வெட்டி படுக்கையுடன் வந்த இளைஞனுடன் நடந்தபடி கேட்டாள். "உன் பெயர் என்ன?"

"ஹரிதாஸ்" என்றான் அவன்.

# 14

ஜோஷிதா ஆறாவது முறையாக தன் ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்தாள். வழக்கத்திற்கு மாறாக ஸ்கூட்டர் நகர மறுத்து அடம் பிடித்தது. கபூர் வீட்டில் இல்லை. வாட்சைப் பார்த்தாள். வழக்கத்தை விட நேரமாகி விட்டிருந்தது. சோட்டாவாலாவின் ரிக்ஷாவிலாவது போயாக வேண்டும். நோயாளிகள் நேரமாக ஆக பொறுமை இழந்து முணுமுணுக்கத் தொடங்கி விடுவார்கள். இவள் போனதும் ஒரே சமயத்தில் கும்பலாகச் சுற்றி நிற்பார்கள். ரோஸியும், பெரியவரும் அவர்களை சமாளிப்பதற்குள் திணறிப் போவார்கள். ஜோஷிதா ஸ்கூட்டரை ஓரமாக நிறுத்தி விட்டு சோட்டாவாலாவின் ரிக்ஷா நிற்கிறதா என தெருக்கோடியை எட்டிப் பார்த்தாள். அவனைக் கூப்பிட வாயைத் திறக்கையில் "ஹலோ" என்றபடி அவள் அருகில் வந்து நின்றான் ஹரிதாஸ்.

"நான் ஹரிதாஸ். கங்கா ஆன்ட்டி வீட்டுக்கு வந்திருக்கிறேன். நண்பர்கள் சுருக்கமாக ஹரி என்று கூப்பிடுவார்கள். என்னால் உங்கள் ஸ்கூட்டரை சரி செய்ய முடியும் என்று நினைக்கிறேன்" என்றான் அழகான ஆங்கிலத்தில்.

தாராபாய் கங்காவின் திடீர் விருந்தாளியைப் பற்றி சொல்லியிருந்தது நினைவு வர "ஷ்யூர்" என்றாள் ஜோஷிதா.

"சாவியைக் கொடுங்கள்."

ஜோஷிதா ஸ்கூட்டர் சாவியைக் கொடுத்ததும், ஒயரைப் பிடுங்கி, எதையோ கழற்றி மாட்டி இரண்டு நிமிடங்களில் ''ஸ்டார்ட் பண்ணுங்கள்'' என்றான் அவளிடம்.

ஜோஷிதா தொட்டதும் ஸ்கூட்டர் ஸ்மூத் ஆக ஸ்டார்ட் ஆகவும் தேங்க் யூ ஹரி'' என்றாள் மகிழ்ச்சியுடன்.

''நான்தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்'' என்றான் ஹரிதாஸ்.

''எதற்கு?''

''ஒரே வார்த்தையில் என்னை நண்பனாக ஏற்றுக் கொண்டதற்கு? அந்த வார்த்தைகளில் பிரத்யேக அர்த்தம் எதுவும் புலப்படாததால் ''ஓகே பை'' என ஜோஷிதா கிளம்பிப் போனாள்.

அவள் கண் மறையும் வரை ஹரிதாஸ் பார்வையை விலக்கத் தோன்றாமல் நின்றிருந்தான்.

ஜோஷிதாவுக்கு அரசாங்கம் ஒதுக்கியிருந்த குவார்ட்டர்சில் கரீமின் பெற்றோர் தங்கியிருந்தனர். கரீமின் அப்பா காலையில் சக்தி நிவாஸில் இயங்கும் ஜோஷிதாவின் கிளினிக்கிற்கு வந்து விடுவார். மதியம் ஸ்கூட்டரில் ஜோஷிதா அவருடன் குவார்ட்டர்சிற்கு போய் சாப்பிட்டு விட்டு மாலையில் ரோஸியுடன் சேர்ந்து வைத்தியம் பார்க்கப் போவார்கள். கூட்டம் அதிகமாக இருக்கும் சமயம் கரீமின் அம்மா மதிய சாப்பாட்டை எடுத்து வருவார். சக்தி நிவாஸிலேயே மூவரும் சாப்பிட்டு ஓய்வெடுத்த பின் கிளம்புவதும் உண்டு. அன்று மாலை வேலை முடிந்து திரும்புகையில் களைத்துப் போனவளாய் தென்பட்ட ரோஸியைப் பார்த்ததும் ஜோஷிதா சொன்னாள், ''இனி நீங்கள் வீடு போய் சமைக்க வேண்டும் இல்லையா? இன்று என்னுடன் வந்து விடுங்கள். ஆன்ட்டி நன்றாக சமைத்துக் கொடுத்தனுப்புவார்கள். தாராபாயும் ஸ்வீட், பிரசாதம் என்று தினமும் எதையாவது கொண்டு வந்து தருவாள்'' என்றாள்.



''வேண்டாம் அம்மா. இந்தக் கிழவியின் சவகாசம் வேலையுடன் நிற்கட்டும். இப்போதே உன்னைச் சுற்றி இயலாதவர்கள்தான் இருக்கிறார்கள். எங்களை எல்லாம் விதியின் கைகளில் விட்டு விட்டு நீ உன் எதிர்காலத்தை நல்ல முறையில் அமைத்துக் கொள்ள வேண்டும்.''

''என் எதிர்காலத்தையும் விதிதான் நிர்ணயிக்க வேண்டும் ரோஸி'' என்றள் ஜோஷிதா.

''இல்லை. உன் எதிர்காலம் உன் கையில்தான் இருக்கிறது. இன்னும் வாழ வேண்டிய நாட்கள் அதிகம் இருக்கிறது. தனிமையிலேயே வாழ்நாள் முழுவதும் கழிப்பதென்பது வயதான காலத்தில் பாரமாகப் படும்.''

''என்னுடைய இளமை பருவத்தில் வயதின் வேகமும் சுறுசுறுப்பும் இருந்த போது தனிமை பெரிதாக தோன்றவில்லை. இப்போது வயதான பிறகு வெறிச்சோடி கிடக்கும் வீடு விரக்தியைத் தருகிறது. இளமையில் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள மட்டுமல்ல முதுமையில் தளர்ந்து விடாமல் தாங்கிப் பிடிக்கவும் ஒரு துணை அவசியம் மகளே!''

வயதின் உரிமையிலும், இத்தனை நாள் பழகிய பந்தத்திலும் டாக்டர், நர்ஸ் என்ற உறவை மீறி ஏற்பட்ட பாசத்துடன் ரோஸி வற்புறுத்தலாக சொன்னாள்.

ஜோஷிகா பொதுவாக புன்னகைத்தாள். ''என் வாழ்க்கை விசித்திரமானது ரோஸி. என் பெற்றோர் எனக்காக தேர்ந்தெடுத்த பையனுடன் என் திருமணம் நடக்கவில்லை. நானாக விரும்பி பழகியவனும் இதோ வருகிறேன் என்று போய்விட்டான். இந்த மக்களுக்கும் எனக்கும் ஏதோ ஜென்மாந்திர உறவு இருக்கிறது ரோஸி. இவர்களுக்காகவே என்னை விதி லண்டனிலிருந்து இழுத்து வந்திருக்கிறது.''

''கிரண் பற்றி எதாவது தகவல் உண்டா?'' என்றாள் ரோஸி தயக்கத்துடன். ஜோஷிதா 'இல்லை' என தலையசைத்தாள்.

ரோஸி நினைவு வந்தவளாக கேட்டாள். ''இன்று பெரியவர் வரவில்லையா?''

''அந்த ஆண்டிக்கு உடல்நலமில்லை என்பதால் நான் தான் வர வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்.''

''அவர்களுக்கு உதவி செய்வதில் தவறில்லை. ஆனால் எந்த உதவியும் ஒரு அளவுடன் இருக்கட்டும். ஏனென்றால் உதவி செய்பவர்களுக்கு உபத்திரவம் தருவதே சமூகத்தின் வேலையாகி விட்டது'' என்றாள் ரோஸி.

''என்ன ரோஸி, இன்று தத்துவம் பேச தொடங்கிவிட்டீர்கள்?'' என்றாள் ஜோஷிதா.

''வாழ்க்கையின் அனுபவித்திலிருந்து தான் தத்துவங்கள் பிறக்கின்றன. என் வயது அனுபவத்தை பேசும். உன் வயது அனுபவிக்க ஆசைப்படும்.''

''எனக்கு அனுபவம் என்றால் என்ன என்றே புரியவில்லை ரோஸி. சொல்லப்போனால் நமக்கு நடந்தவை, நடப்பவை எல்லாமே சம்பவங்களின் தொடர்ச்சிதான். அதிலிருந்து கற்றுக் கொள்வதுதான் அறிவு. அறிவில்லாதவன் அறுபது வயது வாழ்ந்தாலும் அனுபவமில்லாதவனாய் தான் இருப்பான்.''

''உண்மைதான். உனக்கு இந்த வயதில் இருக்கும் கருணையும், அறிவும் எல்லோருக்கும் சாத்தியம் இல்லை'' என்றாள் ரோஸி.

ரோஸியை இரயில் நிலையத்தில் விட்டுவிட்டு ஜோஷிதா குவார்ட்டர்சிற்கு போன போது கரீமின் அம்மா வாயிலேயே அமர்ந்திருந்தாள். ஜோஷிதாவிடம் நுரை பொங்கும் பில்டர் காபியை கொடுத்தவளிடம் ''பிதாஜியை உங்களுக்கு துணைக்கு இருக்க சொன்னேனே எங்கே போனார்?'' என்றாள் ஜோஷிதா.

''அவர் இஸ்மாயிலை பார்க்கப் போயிருக்கிறார்.''



''இஸ்மாயிலையா?''

''ஆமாம். அவனிடம் கரீம் பற்றிய தகவல் உண்டா? கரீம் வேலை முடிந்து எப்போது வருகிறான் என்று தெரிந்து கொண்டு வருவதற்காக போயிருக்கிறார்.''

மகனைத் தேடி அவர்கள் தவிப்பது ஜோஷிதாவின் மனதை உருக்கியது. ஈர கண்களை அடிக்கடி துடைத்தபடி வாயிலையே பார்த்திருக்கும் அந்த பெண்மணியைப் பார்க்கையில் தினமும் இவர்கள் படும் துயரத்திற்கு மகன் வரப் போவது இல்லை என்று தெரிந்தால் சில நாள் அழுகையுடன் முடிந்து விடுமே என்று கூட தோன்றியது. பெரியவர் வந்ததும் சொல்லிவிட வேண்டியது தான் என்ற முடிவுடன் ஜோஷிதாவும் அவருக்காக காத்திருந்தாள். வெகுநேரம் கழித்து வந்த பெரியவர் ஆர்வத்துடன் தன்னை பார்த்த மனைவியிடம் உதட்டை பிதுக்கி தலையை அசைத்தார்.

''இஸ்மாயிலை பார்க்கவே முடியவில்லை. அவன் அம்மாவும் தங்கையும் தான் வீட்டில் இருந்தார்கள். வருகிற நேரம் தான் என்றார்கள். மாலை வரை காத்திருந்தும் ஏனோ இஸ்மாயில் வரவே இல்லை.''

''வருவான். ஒரு நாள் கரீமுடன் கண்டிப்பாக வருவான். அப்போது கேட்க வேண்டும். ஏன் அடிக்கடி எங்கள் கண்ணில் படாமல் போகிறாய் என்று'' என்றார் கரீமின் அம்மா.

''அந்த நம்பிக்கையில் தான் நானும் காத்திருக்கிறேன். இல்லை என்றால் உன் கைகளைப் பிடித்தபடி என்றோ அரபிக்கடலில் இறங்கி இருப்பேன்'' என்றார் பெரியவர் உடைந்த குரலில்.

''கவலைப் படாதீர்கள். நல்லதே நடக்கும்'' என்றாள் ஜோஷிதா சற்று முன் தான் நினைத்ததை மறந்து போனவளாய்.

மூவரும் பேச முடியாத மௌனத்தில் ஆழ்ந்து போக ''ஹலோ அங்கிள்'' என்றபடி ஹரிதாஸ் உள்ளே வந்தான்.

ஜோஷிதாவைப் பார்த்ததும் ''இன்று டாக்டரம்மாவைக்
கூட வீட்டில் பார்க்க முடிகிறதே!'' என்றான் வியப்புடன்.
''இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? விலங்கு
களைத் தான் ஜூவில் பார்க்க வேண்டும். நான் மனுஷி
தானே! வீட்டில் இல்லாமல் வேறு எங்கே இருப்பேன்?''
என்றாள் ஜோஷிதா.

''நீங்கள்தான் மனுஷி என்று சொல்லிக் கொள்கிறீர்
கள். தேவதை அம்சம் என்றும், கருணையின் வடிவம்
என்றும் வெளியே பலவாறாக சொல்கிறார்கள். அதனால்
எனக்கு எப்பவுமே நீங்கள் இருக்கிறீர்களா, பறக்கிறீர்களா
என்று சந்தேகம்.''

ஜோஷிதா அவன் புகழ்ச்சிக்கு பதில் சொல்லாமல்
அவன் கையிலிருந்த பையை பார்த்தாள். ''உங்களுக்கு
காய்கறி எல்லாம் வாங்கி வந்து விட்டேன்'' என கரீமின்
அம்மாவிடம் பையை கொடுத்து விட்டு காபி உபசாரங்
களை மறுத்து விட்டு ஹரிதாஸ் கிளம்பிப் போனான்.

ஜோஷிதா யோசனையுடன் பெரியவரைப் பார்த்தாள்.
''ஹரிதாஸ் எப்படி இந்த வீடுவரை வந்தான்? கங்காவின்
உறவினன் என்ற நிலையில் அவன் நம்மிடம் அதிக
உரிமை எடுத்துக் கொள்வது போலில்லை?''

''இல்லை பேட்டீ. இந்த பையன் கங்காவுக்கு நேர் எதிர்.
மிகவும் கலகலப்பானவன். காம்பவுண்டில் எல்லோருக்கும்
வலிய சென்று உதவி செய்வது அவனது சுபாவம். வந்த
புதிதில் அவனை சந்தேகத்துடனே கவனித்த சோம்நாத்ஜி
யிடம் கூட ப்ரண்ட் ஆகிவிட்டான்.''

ஜோஷிதா அத்துடன் அவனை மறந்து போனாள்.

ஜோஷிதா மேம்பாலத்தின் ஓரமாய் நடந்து கொண்
டிருந்தாள். மேலே இருந்து பார்க்கையில் கீழே விரையும்
மின்சார இரயில்களும், இரயில் பாதை ஓரம் நெடுக
விரிந்திருந்த படுதா கட்டிய குடிசைகளும் அருகிலேயே
வானளாவ எழுந்து நின்ற கம்பீரமான கட்டிடங்களுமாய்



மும்பை வழக்கம் போல ஆச்சரியப்படுத்தியது. பொருளா
தார ஏற்றத்தாழ்வில் இத்தனை பெரிய இடைவெளி
வேறு எந்த நாட்டிலாவது இருக்குமா என்பது சந்தேகம்
தான். இத்தனை கலாச்சார மக்களையும், பொருளாதார
ஏற்றத்தாழ்வுகளையும் இணைக்கும் விஷயம் ஒன்று
உண்டென்றால் அது சினிமா தான். அரசியலையும்,
மதத்தையும் தாண்டி மக்களால் நேசிக்கப்படுபவர்கள்
மும்பையின் சினிமா நட்சத்திரங்கள் தான். தங்கள்
அபிமான நட்சத்திரங்களை திரையில் பார்த்து தற்காலிக
மாய் தங்கள் கவலைகளை மறந்து போவார்கள். பொது
வாக மும்பை மக்கள் உற்சாகமானவர்கள். எந்த நிகழ்ச்சி
யானாலும் ஆட்டமும் பாட்டமுமாய் கொண்டாடி தீர்த்து
விடுவார்கள். ஜோஷிதாவுக்கு தானும் கிரணும் தங்களை
துரத்திய கும்பலிடமிருந்து தப்பிக்க ஒரு திருமண
கூட்டத்திற்குள் நுழைந்ததும் அந்த சூழ்நிலையில் ஒரு
கணம் தங்களை மறந்து போனதும் நினைவுக்கு வந்தது.
கிரண் யார் என்று புரியாததால் ஏற்பட்ட குழப்பமும்,
தயக்கமும் இருந்த போதும் அவனுடன் இருக்க நேர்ந்த
நாட்கள் எத்தனை ரம்மியமானவை! தான் இறக்கும்
போது கூட நினைவில் நிற்கப் போவது அந்த நினை
வுகள் தான் என்ற எண்ணத்தில் ஜோஷிதாவுக்கு
தன்னையறியாமல் கண்கள் கலங்கின.

ஜோஷிதா துப்பட்டா முனையால் நாசுக்காக கண்
களை துடைத்து விட்டு நடக்கையில் ''ஜோஷிதா நானும்
உங்களுடன் வரலாமா?'' என்று கேட்டபடி ஹரிதாஸ்
அவள் அருகில் வந்தான்.

''என்னுடனா? நான் இன்று ஸ்கூட்டர் கொண்டு
வரவில்லையே!'' என்றாள் ஜோஷிதா இவன் எங்கிருந்து
வந்தான் யோசித்தபடி.

''தெரியும். அதனால்தான் உங்களைப் பார்த்ததும்
நாம் இருவரும் ஒரு டாக்ஸி பிடித்து போகலாமா என்று
கேட்க நினைத்தேன்.''

''ஓ. போகலாம்'' என்றாள் ஜோஷிதா.

வழியில் சென்ற டாக்ஸியை நிறுத்தி அதில் ஏறி அமர்ந்ததும் ''உங்கள் வேலை எப்படிப் போகிறது?'' என்றாள் ஜோஷிதா சம்பிரதாயமாக.

''வேலை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். பட் அது எந்த அளவு வெற்றிகரமானது என்பதை பொறுத் திருந்துதான் பார்க்க வேண்டும்'' என்றான் ஹரிதாஸ்.

சாமி ஊர்வலம் ஒன்று அவர்களை கடந்து போனது. காவி உடையும், பெரிய முழக்கத்துடன் நடந்த கூட்டத்தைப் பார்த்ததும் ஜோஷிதாவின் உடல் தன்னையறியாமல் சிலிர்த்தது. சற்று நேரத்தில் பரபரப்புடன் சிலர் அவர்கள் காரைத் தாண்டி ஓட ஆரம்பிக்க, ''என்ன நடக்கிறது அங்கே?'' என்றான் ஹரிதாஸ் பின்னால் திரும்பி பார்த்தபடி.

''ஒட்டு மொத்த இந்தியாவின் பிரதிநிதியாய் தங்களை கருதிக் கொள்ளும் ஒரு அமைப்பினர் சாமி ஊர்வலத் தையும் அரசியல் கட்சி கூட்டமாக்கி விட்டனர். கட்சி தலைவரின் படத்திற்கு பதிலாக கடவுள்களின் படத்தை பயன்படுத்துகின்றனர்'' என்றாள் ஜோஷிதா.

''யார் இப்படி எல்லாம் செய்கிறார்கள்? அந்த இயக் கத்தை தடை செய்ய முடியாதா?'' என்றான் ஹரிதாஸ்.

''தாராளமாக முடியும். ஆனால் அந்த இயக்கத் தலைவர் இப்போது ஒரு அரசியல்வாதி. கார்டூனிஸ்டாக வாழ்க் கையை தொடங்கி, 'மார்மிக்' என மராத்திய மொழியில் பத் திரிகை ஆரம்பித்து, மராட்டியர் அல்லாதவர்களை கடுமை யாக விமர்சித்து அதன் மூலம் அப்பாவி மக்களின் ஆத ரவைப் பெற்று பதவிக்கு வந்தவர். மராட்டியம் மண்ணின் மைந்தர்களுக்குத்தான் என்று கூறி சாதாரண மக்களின் இன உணர்வை அரசியலாக்கி ஆதாயம் தேடியவர்.''

''சிவசேனா கட்சி தலைவர் பால்தாக்கரேவைப் பற்றியா சொல்கிறீர்கள்?'' என்றான் ஹரிதாஸ்.

ஜோஷிதா ஆமாம் என தலையசைத்தாள்.



சிறிது நேர மௌனத்திற்கு பிறகு ''நீங்கள் சினிமா யுக்கு போவதுண்டா?'' என்றான் ஹரிதாஸ் திடீரென்று.

''இங்கு வந்த புதிதில் இரண்டொரு படங்கள் பார்த் திருக்கிறேன். இப்போது டிவி பார்க்கக் கூட நேரமில்லை.''

''உங்களது தொடர்ச்சியான வேலை சுமையை குறைக்க சினிமா பெரிய உதவி செய்யும். எனவே விரும்பி பார்க்கா விட்டாலும் மூளைக்கு ஓய்வு கொடுப்பதற்காவது நல்ல படங்களை தேர்ந்தெடுத்து பார்ப்பது நல்லது.''

மருத்துவ ரீதியாக ஹரிதாஸ் சொன்னதிலிருந்து உண்மை புரிந்ததால் ''யெஸ், நீங்கள் சொல்வது சரிதான்'' என்றாள் ஜோஷிதா.

''அப்படியானால் இப்போது ஒரு படத்திற்கு போகலாம். வருகிறீர்களா?'' என்றான் ஹரிதாஸ் ஆர்வத்துடன்.

முன்னேற்பாட்டுடன் தான் டாக்ஸி பிடித்திருப் பானோ என்ற சந்தேகத்துடன் ஜோஷிதா பார்க்க, ஹரிதாஸ் அவசரமாக சொன்னான். ''நான் திட்டமிட்டு எதையும் செய்யவில்லை. என் அலுவலக நண்பருடன் சினிமா போவதாக திட்டமிட்டிருந்தோம். அவனுக்கு அவசர வேலை என்று டிக்கெட்டை என்னிடம் கொடுத்து விட்டு போய் விட்டான். சரி நாமாவது போகலாம் என்று கிளம்பினேன். வழியில் ஏதேச்சையாக உங்களைப் பார்த்ததும் கூப்பிடத் தோன்றியது.''

இவனை எந்த அளவு நம்பலாம் என்ற யோசனை யுடன் ஜோஷிதா கேட்டாள். ''என்ன படத்திற்கு போகி றீர்கள்?''

ஹரிதாஸ் உற்சாகத்துடன் சொன்னான், ''முன்பே வந்த படம் தான். அப்போது நான் பார்க்கவில்லை. அமி தாப் சிறுவயதிலேயே கிழவனாக மாறிவிடும் நோயுள்ள வராக வருகிறார். படம் பெயர் 'ப்பா' அபிஷேக்பச்சனும் இதில் நடித்திருக்கிறார். இதற்கான மேக்கப் போடுவதற்கு அமிதாப் ரொம்ப மெனக்கெட்டிருக்கிறார்.''

ஜோஷிதா சாலையில் விரையும் வாகனங்களை, நெருக்கமான அடுக்குமாடி கட்டிடங்களை வெறித்தபடி சொன்னாள். ''சிலருக்கு மேக்கப் போடாமல், நோய் எதுவும் இல்லாமலே மனசு மட்டும் கிழடாகி விடுகிறது. அதைப் பற்றிய படம் எதாவது வந்திருக்கிறதா என்ன?''

ஜோஷிதாவை ஒரு நிமிடம் உற்றுப் பார்த்த ஹரிதாஸ் தன் வழக்கமான புன்னகையுடன் சொன்னான். ''உங்களைத் தவிர வேறு யாரையும் அப்படி சினிமாவில் கூட பார்க்க முடியாது. எல்லோரும் உங்களைப் போல துறவி மாதிரி இருந்தால் வாழ்க்கையில் என்ன சுவாரஸ்யம் இருக்கும்? ஜோஷிதா இத்தனை நாள் பழக்கத்தில் சொல்கிறேன். இத்தனை அழகை வைத்துக் கொண்டு நீங்கள் இப்படி பிடிப்பின்றி ஏன் இருக்க வேண்டும்? பொது சேவையில் ஈடுபடுபவர்கள் தங்களுக்கென்று ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்வது தவறில்லையே!''

''நிச்சயம் தவறில்லை. ஆனால் நான் துறவியாகி விட்டதாக யார் சொன்னது ஹரிதாஸ்? எனக்கென்று ஒரு வீடு இருக்கிறது. கணவர் வெளியூரில் இருக்கிறார். மனம் நிறைய ஆசைகள், எதிர்பார்ப்புகள் எல்லாம் இருக்கிறது.''

''நிறைவேறாத ஆசைகளிலும் எதிர்பார்ப்புகளிலும் வாழ்க்கையை வீணடிக்கப் போகிறீர்களா?''

கங்கா நம்மைப் பற்றி இவனிடம் ஏதோ வம்பளத்திருக்க வேண்டும் என்ற அனுமானத்தில் இறுகிய குரலில் ஜோஷிதா சொன்னாள், ''என் வாழ்க்கை என்னுடையது. அதை விமர்சிக்கும் உரிமை உங்களுக்கில்லை ஹரிதாஸ்.''

''உண்மைதான். ஒரு நண்பனாக நினைத்து தான் சொன்னேன்.'' ஹரிதாஸ் முணுமுணுத்த போது டாக்ஸி வீட்டு வாயில் நின்றிருந்தது.

டாக்ஸி கட்டணத்தை டிரைவரின் கையில் திணித்து விட்டு ஜோஷிதா இறங்கிப் போனாள்.

ஜோஷிதா தன் வீட்டிற்கு செல்கையில் வழியில் காரிடாரில் நின்றிருந்த கும்பல் அவளைக் கண்டதும் விலகி



வழிவிட்டது. நடுவில் கரீமின் அம்மா அமர்ந்திருக்க, அவர் மடியில் கங்காவின் பெண் லதிகா கண்மூடி சரிந்திருந்தாள்.

''மாதாஜி, என்னவாயிற்று?'' என்றாள் ஜோஷிதா அவரிடம்.

''எனக்கு தெரியவில்லை பேட்டி. எப்போதும் போல் உனக்கு மதிய உணவு சமைத்து எடுத்து வந்தேன். நீ பேங்க்குக்கு போயிருப்பதாக கரீமின் அப்பா சொல்லவும் சாப்பாட்டை வீட்டிற்குள் வைப்பதற்காக வந்த போது எதிரில் வந்த லதிகா நடக்க முடியாமல் தடுமாறினாள். அருகில் போய் பார்ப்பதற்குள் கீழே விழுந்து விட்டாள். முகத்தில் தண்ணீர் தெளித்ததும் கண் விழித்தாள். ஆனால் எழ மாட்டாமல் சோர்ந்து போய் கிடக்கிறாள்'' என்றார் அவர்.

லதிகாவை எழுப்பி அங்கிருந்தவர்கள் உதவியுடன் ஜோஷிதாவின் வீட்டில் படுக்க வைத்தார்கள். ''இந்த பெண்ணுக்கு கொஞ்ச நாட்களாக முடியவில்லை தீதி. இவள் அம்மா ஜாதகம் பார்ப்பதும், கோவிலுக்கு போவதுமாய் இருக்கிறாள்'' என்றாள் தாராபாய்.

முகம் வெளுத்து, கன்னங்கள் ஒட்டிப் போய் சோகையாய் கிடந்த லதிகாவை ஜோஷிதா சற்றே கவலையுடன் பார்த்தாள். தாராபாய் அங்கு நின்றிருந்தவர்களை அனுப்பி விட்டு கதவைத் தாழிட்டாள். குனிந்து லதிகாவின் நாடித்துடிப்பைப் பார்த்த ஜோஷிதா, ''லதிகாவின் அம்மா எங்கே?'' என்றாள் தாராபாயிடம்.

''காலையிலேயே எங்கோ கிளம்பிப் போனாள்'' என்ற தாராபாய் சூடான பாலில் பாதாம் கலந்து லதிகாவிடம் கொடுத்ததும் லதிகா அவசரமாய் எழுந்து வாஷ்பேஸினுக்கு ஓடினாள்.

''சர்க்கரை அதிகம் சேர்க்காமல் புளிப்பாய் லெமன் ஜூஸ் கொடு தாராபாய்'' என்றாள் ஜோஷிதா.

தாராபாய் கொடுத்த ஜூஸை குடித்து விட்டு வியர்வையில் நனைந்த முகத்தைத் துடைத்தாள் லதிகா.

''சின்ன பெண்ணுக்கு இத்தனை பலவீனம் எங்கிருந்து வந்தது?'' என்றார் கரீமின் அம்மா அங்கலாப்புடன்.

''மனம் பலவீனத்திற்கு இடமளித்தால் உடலும் பலவீனமாகத்தான் செய்யும்'' என்றாள் ஜோஷிதா.

தலையை குனிந்தபடி அமர்ந்திருந்த லதிகாவின் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

''எதுக்கு அழணும்? உடம்புக்கு வர்றது சகஜம் தான். டாக்டர் தீதி மருந்து கொடுத்தால் எல்லாம் சரியாய்டும்'' என்றாள் தாராபாய் வெகுளியாக.

அந்த கனிவான பேச்சையும் உபசரிப்பையும் தாங்கிக் கொள்ள முடியாதவளாய் லதிகா எழுந்து சென்று ஜோஷிதாவின் கரங்களைப் பற்றினாள். ''நான் தவறு செய்து விட்டேன். பெரிய தவறு செய்து விட்டேன். என்னைக் கொன்று விடுங்கள்'' என்றாள் பெரிய கதறலுடன்.

ஜோஷிதா மிதமிஞ்சிய இரக்கத்துடன் அவள் தலையை வருடினாள். ''நெருப்பைத் தொட்டால் சுடும் என்றறியாமல் அதன் கவர்ச்சியில் மயங்கி கையை சுட்டுக் கொண்ட சிறு குழந்தையின் மனோபாவம்தான் இது. ஆனால் இந்த சமூகத்தில் பெண்களை பரந்த மனப்பான்மையுடன் யாரும் அணுகுவதில்லை. இந்த நாட்டு கலாச்சாரத்தின் ஒட்டு மொத்த வடிவமாகத்தான் இங்கு பெண்கள் அடையாளம் காட்டப் படுகிறார்கள். அப்படியிருக்கையில் நீ முன் யோசனையுடன் இருந்திருக்க வேண்டும்.''

''யோசிக்க தெரியவில்லை தீதி. மூளை மரத்துப் போயிற்று. எனக்கு தினமும் லிப்ஸ்டிக்கும், பவுடரும், சென்ட்டுமாக வாங்கி கொடுத்தான்.

உலக அழகிகள் எல்லாம் எனக்கு ஈடில்லை என்றான். அந்த பரிசிலும் புகழ்ச்சியிலும் நான் புத்தி மாறிப் போனேன்'' லதிகா முகத்தை பொத்தியபடி விசும்பினாள்.

கங்கா தன் மகள் வெகுளி என்ற நினைவில் அவளிடம் எதையுமே பகிர்ந்து கொள்ளாத நிலையில் லதிகா



மனதளவில் தனிமைப் படுத்தப்பட்டதை எவனோ தன் சுயநலத்திற்காக பயன்படுத்திக் கொண்டிருக்கிறான்.

''கடைசி பீரியட் எப்போது வந்தது?'' என்றாள் ஜோஷிதா.

''ஆறு மாதமாகிறது என்று நினைக்கிறேன்.''

தாராபாயும், கரீமின் அம்மாவும் சிலையாய் சமைந்திருக்க, ''ஓ. கடவுளே!'' என்றாள் ஜோஷிதா அலுப்புடன். ''இத்தனை நாட்கள் ஏன் பேசாமல் இருந்தாய்?''

''எனக்கு... எனக்கு... பயமாக இருந்தது.''

நிலைமை கைமீறி போய்விட்ட நிலையில் என்ன செய்வது என்ற யோசனையில் ஜோஷிதா இருக்க, கங்கா படபடவென அவர்கள் வீட்டுக் கதவைத் தட்டினாள்.

உள்ளே வந்ததும் ''லதிகா எப்படியிருக்கிறாய்? மயங்கி விழுந்தாயாமே! யார் கண்பட்டதோ? திருஷ்டி சுற்ற வேண்டும். வா போகலாம்'' என்றாள் வேகமாக.

தாராபாய் ஒரு டம்ளரில் ஜில்லென்ற நீரை நிரப்பி கங்காவிடம் கொடுத்தாள். ''இதை குடித்து விட்டு பேசுங்கள்.''

கங்கா அவளை திரும்பியும் பார்க்காமல் மகளை உலுக்கினாள்,

''எழுந்து வா போகலாம்.''

லதிகா அசையாமல் அமர்ந்திருக்க, ''என் பெண்ணை என்ன சொன்னீர்கள்? அவள் ஏன் இங்கு வந்து உட்கார்ந்திருக்கிறாள்?'' என்றாள் கோபத்துடன்.

''அவளுக்கு உடம்பு சரியாய் இல்லை'' என்றாள் ஜோஷிதா.

''ஆமாம். சுபாஷ் கடையில் வாங்கிய சமையல் எண்ணெய் இவளுக்கு ஒத்துக் கொள்ளாமல் வாந்தி எடுத்தாள். நாலு நாள் தொடர்ந்து பத்திய சாப்பாடு கஷாயமும் சாப்பிட்டால் சரியாகிவிடும்'' என்றாள் சாதாரணமாக.

மகளிடம் கங்கா கொண்டிருந்த அசாத்திய நம்பிக்கை அவள் மீது பரிதாபத்தை ஏற்படுத்தியது. ''பொறுமையாக கேளுங்கள் கங்காஜி. லதிகாவிற்கு ஏற்பட்டிருப்பது

சாதாரண அஜீரணம் அல்ல'' ஜோஷிதா மேற்கொண்டு சொல்ல முடியாமல் தயங்க, ''என் மகளுக்கு என்ன வாயிற்று?'' என்றாள் கங்கா பதட்டத்துடன். ஜோஷிதா உடனே பதில் சொல்லாமல் இருக்கவும், கங்கா அவளை உலுக்கினாள். ''ஒரு டாக்டராக இருந்து கொண்டு எதையும் மறைக்கக் கூடாது. உண்மையை சொல்லுங்கள்.''

ஜோஷிதா மேலும் அவள் பொறுமையை சோதிக்காமல் சொன்னாள், ''உன் பெண் கர்ப்பமாக இருக்கிறாள். ஆறு மாதமாகிறது.''

கங்கா தன் காதில் விழுந்ததை நம்பமாட்டாத அதிர்ச்சியுடன் கத்தினாள். ''இல்லை. நான் நம்ப மாட்டேன். நான் உங்களைப் பற்றி ஏதோ பேசியதற்கு பழி வாங்குவதற்காக இப்படி சொல்லுகிறீர்கள்!''

கங்காவின் குரலில் கதவருகே ஓரிரு தலைகள் தெரிய தாராபாய் அவசரமாக ஓடி கதவைத் தாழிட்டாள். ''என்ன தைரியம் இருந்தால் என்னிடம் இந்த வார்த்தை சொல்வீர்கள்! மனசாட்சியே இல்லாமல் இப்படி ஒரு டாக்டரா? கல்யாணமாகாத பெண்ணைப் பார்த்து இந்த வார்த்தை சொல்கிறீர்களே. இதனால் அவள் வாழ்க்கையே சீரழிந்து விடும் தெரியுமா?''

ஜோஷிதா அமைதியாய் கைகளை கட்டிக் கொண்டு நின்றிருந்தாள். ஆத்திரத்துடன் பேசிக் கொண்டிருந்த கங்காவை தாராபாய் அதட்டினாள்.

''சம்பந்தமில்லாமல் டாக்டர் தீதியை ஏன் பேசுகிறாய் கங்கா? உன் பெண்ணையே கேட்டுப் பார்?''

''இவர்கள் சொல்வது பொய் என்று முகத்திற்கு நேராக சொல்லி விட்டு எழுந்து வா லதிகா'' என்றாள் மகளிடம்.

தலைகுனிந்து கண்களில் நீர்வழிய அமர்ந்திருந்த லதிகா நிமிரவேயில்லை. மகளை கலக்கத்துடன் பார்த்தாள் கங்கா.

''சொல் லதிகா'' என்றதும் ''டாக்டர் தீதி சொன்னது சரிதான்'' என்றாள் லதிகா அழுகையினூடே.



அடுத்த நொடி கங்கா மகளின் முகத்திலும், முதுகிலும் வெறிபிடித்தாற் போல் மாறிமாறி அடித்தாள். யார் தடுத்தும் கேட்காமல் கை ஓயும் வரை அடித்தாள். அவள் கழுத்தைப் பிடித்து நெறிக்க முற்பட்டாள். ''செத்து ஒழி!''

வீட்டிலிருந்த மூவரும் மிகுந்த சிரமப்பட்டு லதிகாவை கங்காவின் கரங்களிலிருந்து விடுவித்தனர்.

''சத்தம் போடாதீர்கள் கங்காஜி. உங்கள் அழுகையே எல்லோருக்கும் விஷயத்தை தெரியப்படுத்தி விடும்'' என்றாள் ஜோஷிதா.

''எப்படியும் தெரியத்தான் போகிறது. மறைக்கக் கூடிய தப்பையா செய்திருக்கிறாள்? படுபாவி...'' கங்காவின் அழுகையும், புலம்பலும் ஓய்வதாக இல்லை என்றதும் ஜோஷிதா வலுக்கட்டாயமாக ஒரு மாத்திரையை நீருடன் விழுங்கச் செய்தாள். சிறிது நேரத்தில் கங்கா தன்னையறியாமல் உறங்கிப் போனாள்.

''லதிகா, எப்படியிருக்கிறாய்?'' என்றாள் ஜோஷிதா அவள் நாடித்துடிப்பை சரிபார்த்தபடி.

லதிகா பதில் பேசாமல் தலையை அசைத்தாள். ஒன்பது மாத வயிறு கட்டியிருந்த சேலைக்கு மேலே பருத்து தெரிந்தது. முகம் வெளுத்து களைத்திருந்தாலும் உடலில் ஒரு மினுமினுப்பு தெரிந்தது.

''பலவீனமா தெரியற. டானிக் எல்லாம் சாப்பிடறீயா?'' என்றாள் ஜோஷிதா. லதிகா அலுப்புடன் தலையை அசைத்தாள். ''எப்படியும் நான் விரும்பாத ஒரு சுமை. அது வளர்ந்தாலும், வயிற்றிலேயே போனாலும் ஒன்று தான்.''

''லதிகா வயிற்றில் குழந்தையுடன் இந்த வார்த்தைகளை பேசக்கூடாது. எப்படியானாலும் அது ஒரு உயிர். உன்னில் பாதி.''

''இல்லை. என்னுடையதில்லை. எவனோ ஏமாற்றி வயிற்றில் ஏற்றிய சுமைக்கு நான் எப்படி பொறுப்பாக முடியும்?'' என்றாள் தீர்மானமான குரலில்.

"ஆனாலும் துணிச்சல் அதிகம் இவளுக்கு" என்றாள் கங்கா கோபத்துடன். "நீயும் சம்மதித்து நடந்த விஷயத்திற்கு நீதானே பொறுப்பாக முடியும்?"

"நான் காதலித்து கர்ப்பமுறவில்லை. ஏற்கனவே திருமணமான ஒருவனின் பேச்சில் மயங்கி ஏமாந்து போனேன். தவறு என்றால் அதற்கு அவனும் தான் காரணம். தண்டனை மட்டும் எனக்கா?" லதிகா சீறினாள்.

"வேறு வழியில்லை. பெண்ணாக பிறந்தாலே தண்டனை தான். உன் அப்பன் பொறுப்பின்றி வீட்டை விட்டு ஓடிய பிறகும் உன்னை என்னால் விட முடிந்ததா? பெண் பொதி சுமக்க படைக்கப்பட்டவள்" என்றாள் கங்கா துயரக்குரலில்.

"என்னால் முடியாது" என்றாள் லதிகா திட்டவட்டமாக.

"பிறகு, என்ன செய்யப் போகிறாய்?"

"பிறந்ததும் தூக்கி அரபிக் கடலில் எறிந்து விட்டு என் வேலையை பார்க்கப் போவேன்."

"இந்த திமிர்தான் உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியிருக்கிறது." என்றாள் கங்கா நிஷ்டூரத்துடன்.

"இல்லை. இந்த நிலைக்கு நீதான் காரணம்?"

கங்கா ஆக்ரோஷமாய் அடிக்க கையை உயர்த்த ஜோஷிதா இருவரையும் அடக்கினாள். "இப்போது இந்த பேச்சு தேவையில்லை. லதிகா, நீ நன்றாக சாப்பிட்டு உடம்பை கவனித்துக் கொண்டால்தான் சிரமமின்றி பிரசவிக்க முடியும்" என்றவள் கங்காவை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வெளியே வந்தாள். "இப்போது அவளிடம் வார்த்தையாட வேண்டாம் கங்காஜி. விளைவுகளை அறியாமல் நடந்த விபரீதத்தினால் மிகுந்த மனஉளைச்சலில் இருக்கிறாள். இந்த சமயம் அவள் நல்ல உடல் நலத்துடன் பிரசவிக்க வேண்டும் என்பதை மட்டும் மனதில் வையுங்கள்" என்றாள் ஜோஷிதா.

'சரி'யென தலையாட்டிய கங்காவுக்கு ஜோஷிதா மட்டும் இல்லை எனில் அன்று தங்கள் கதி என்னவாகி



யிருக்கும் என்ற நினைவில் கண்கள் நிறைந்தன.

தனித்தே வாழ்ந்த போதிலும் ஊர்வம்பு பேசுவதை தவிர எந்த கெட்ட பழக்கமும் இல்லாமல் ஒழுக்கமான பெண்மணியாக இருந்த கங்காவினால் நடந்து போன விஷயத்தை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. சக்தி நிவாஸ் முழுவதும் செய்தி பரவும் போது தன்னால் தலை நிமிர்ந்து நடக்க முடியுமா? கணவனின் உறவினன் என்று வந்திருக்கும் ஹரிதாஸ் தாயும் மகளும், இத்தனை நாளாய் இந்த வாழ்க்கைதான் வாழ்ந்தீர்களா? என்று காரித்துப்ப மாட்டானா? வெகுநேரம் யோசித்த கங்கா இருவரும் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியே இல்லை என்ற முடிவுக்கு வந்தாள். கங்காவின் முடிவு தெரிந்தோ என்னவோ ஜோஷிதாவும், தாராபாயும் அவளைத் தனியே விடவேயில்லை.

"அடுத்து என்ன செய்வதென யோசித்தீர்களா?" என்றாள் ஜோஷிதா.

கங்கா வெற்றுப் பார்வையாய் பார்க்கவும், "தெரிந்தோ, தெரியாமலோ சிலருடைய வாழ்க்கையில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடக்கத்தான் செய்கின்றன. தெருவில் செல்கையில் சில சமயம் நம் அஜாக்கிரதையினால் விபத்து நேரிடுவதில்லையா? அது போலத்தான் இதுவும். நடந்ததை மறந்து விட்டு நடக்க வேண்டியதைப் பார்ப்போம்."

"நடக்க இனி பாக்கி என்ன இருக்கிறது? உன் வீட்டில் இந்த பிழைப்புதான் நடந்ததா என எல்லோரும் கைகொட்டி சிரிப்பதைக் கேட்டு சாக வேண்டியதுதான் பாக்கி" என்றாள் கங்கா நெஞ்சில் அறைந்து கொண்டு.

இப்போதுள்ள மனநிலையில் கங்காவால் முடிவெடுக்க முடியாது என்பதை உணர்ந்தவளாய் ஜோஷிதா தாராபாயிடமும், கரீமின் அம்மாவிடமும் தாழ்ந்த குரலில் ஏதோ பேசினாள். பிறகு ஒரு முடிவெடுத்தவளாக சொன்னாள், "கங்காஜி லதிகா இனியும் இங்கே இருந்தால் விஷயம் எல்லோருக்கும் தெரிந்து போய்விடும்."

"இல்லை இல்லை யாருக்கும் தெரியாது. நானே அவனை கொன்று விடுவேன்'' என்றாள் கங்கா ஆவேசத்துடன்.

''பதட்டப்படாமல் கேளுங்கள். ஹரிதாஸைத் தவிர உங்களுக்கு நெருக்கமானவர்கள் என்று யாராவது இருக்கிறார்களா?''

''அந்த கடவுளைத் தவிர யாரும் இல்லை'' என்றாள் நெஞ்சைப் பிடித்தபடி.

''கங்காஜி உங்களுக்கு உதவ நாங்கள் இருக்கிறோம். நான் சொல்கிறபடி செய்யுங்கள். நாளை அத்தியாவசியமான சில துணிமணிகளுடன் ஊரிலிருந்து உறவினர் வீட்டு விசேஷத்துக்கு போவதாக சொல்லி கிளம்புங்கள். என்னுடைய குவார்ட்டர்சில் இருக்கும் பெரியவரும், மாதாஜியும் உங்களை நன்றாக கவனித்துக் கொள்வார்கள். சில நாட்கள் அங்கிருந்து விட்டு லதிகாவை உறவினர் வீட்டில் விட்டு விட்டு வந்திருப்பதாக சொல்லி நீங்கள் இங்கே திரும்பி விடுங்கள். இங்கிருந்து வேண்டும் போது போய் பார்த்துக் கொள்ளலாம்.''

கங்காவுக்கு இதெல்லாம் சாத்தியமா என்ற திகைப்பு எழுந்தாலும் வேறு வழியும் தெரியாததால் ஜோஷிதா சொன்னதற்கெல்லாம் தலை அசைத்தாள். சத்தியத்திற்கு கட்டுப்பட்டாற் போல் தன் கணவனிடம் கூட விபரம் சொல்லவில்லை என்பதால் கங்கா ஊருக்கு கிளம்புகையில் சோம்நாத்ஜியுடன் சேர்ந்து கபூரும் ஆச்சரியப்பட்டான்.

''இத்தனை வருஷமா இல்லாம என்ன திடீர் பயணம்? அதுவும் உங்கள் வீட்டில் விருந்தாளி தங்கியிருக்கையில்?''

கங்கா அதற்கு படபடக்காமல் பதிலளிப்பதையும், லதிகா வழக்கத்திற்கு மாறான அமைதியுடன் தாயின் பின்னே செல்வதையும் எல்லோரும் வியப்புடன் வேடிக்கைப் பார்த்தார்கள்.

ஜோஷிதா சொன்னது போல் கரீமின் பெற்றோர் லதிகாவை அருமையாய் கவனித்துக் கொண்டார்கள்.



கங்காவால்தான் தாங்கள் சக்தி நிவாஸிலிருந்து வெளியேற நேர்ந்தது என்பதை காண்பித்துக் கொள்ளாமல், கேலி பேச சந்தர்ப்பம் கிடைத்தும் அதை செய்யாமல் ஓடி ஓடி உதவும் அவர்களின் பெருந்தன்மை கங்காவின் மனதை அறுத்தது.

வெளிநாட்டிலிருந்து வந்து தனியே வசிக்க நேர்ந்த போதும் ஜோஷிதாவிடமிருந்த கண்ணியமும், ஒழுக்கமும், தன் கூடவே இருந்த பெண்ணுக்கு ஏன் இல்லாமல் போயிற்று என்ற ஆதங்கத்தை அவளால் அடக்கவே முடியவில்லை.

பாத்திமாவின் குழந்தை துறுதுறுவென வீடு முழுதும் ஓடியது. குழந்தையின் கூடவே ஓடிய சலீம் மொகமத் ஆர்ப்பரித்தான். ''என் பையன் எத்தனை சுறுசுறுப்பு பாத்தியா? இவனுடன் பிறந்த என் நண்பனின் மகன் இப்போதுதான் தத்தித் தத்தி நடக்கிறான்.''

''ஆமாம். உங்கள் மகன் ஓடுகிற வேகத்துக்கு ஒரு நாள் எவரெஸ்ட் மீது ஏறி விடுவான்'' என்றாள் பாத்திமா கேலியாக.

''ஏன் ஏறாமல்? ஒரு நாள் ஏறிப் போய் நம் இந்திய கொடியை நடப் போகிறான் பாரேன்'' என்றான் சலீம் மொகமத் தகப்பனுக்கே உரிய கர்வத்துடன்.

குளித்து தலை துவட்டியபடியே வந்த இஸ்மாயில் சொன்னான், ''அத்தனை சிரமப்பட்டு மலை ஏறுகிறவன் நம் அல்லாவின் பெயரை அல்லவா பொறிக்க வேண்டும்?''

''மதங்கள் உலகெங்கிலும் பரவியிருக்கின்றன. ஆனால் நாம் பிறந்த நாடுதான் நாம் யார் என்பதை உலகிற்கு சொல்லும் அடையாளம். இஸ்லாத்தை பின்பற்றும் பிற நாடுகள் இருக்கின்றன. இருந்தாலும் இந்தியாவில் நம் பக்கத்து வீட்டில் வசிக்கும் ஒரு இந்துவையோ, கிறிஸ்துவனையோ தான் என் நாட்டுக்காரன் என்ற உணர்வுடன், சகோதரத்துவத்துடன் பார்க்க முடியும்'' என்றான் சலீம்மொகமத்.

"சொந்த நாட்டில் பிறந்த மண்ணில் ஒரு புழுக்களைப் போல் நசுக்கப்பட்டோமே அதற்கு பிறகும் இந்த மண்ணின் அடையாளம் நமக்கெதற்கு?" என்றான் இஸ்மாயில் அழுத்தமாக.

"ஒரு வன்முறை நடக்கையில் சாதிமத பாகுபாடின்றி அதனால் எல்லோரும் தான் பாதிக்கப்படுகிறார்கள். மும்பையில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் ஏற்பட்ட மோதலில் பல சர்ச்சுகள் தகர்க்கப்பட்டன. கிறிஸ்துவர்கள், சீக்கியர்கள் என பல மதத்தவர் உயிரிழந்தனர். ஒரே மதம், ஒரே மொழியை கொண்ட பாகிஸ்தானிய முஸ்லீம்களும் பாதுகாப்பற்ற சூழலில் தான் வசிக்கிறார்கள்" என்றான் சலிம்மொகமத்.

"சில நாட்களுக்கு முன் பேப்பரில் படித்தேன். கேரளாவைச் சேர்ந்த படித்த வேலையில்லாத இளைஞர்கள் சிலர் தீவிரவாத இயக்கத்தில் சேர்ந்து விட்டிருக்கிறார்கள். காஷ்மீர் எல்லை பகுதியில் ஊடுருவ முயன்ற அவர்களை சுட்டுக் கொன்ற நம் இராணுவத்தினர் உடலை சோதனையிடும் போதுதான் அவர்கள் இந்தியர்கள் என்று தெரிந்தது. இறந்தவர்களின் பெற்றோருக்கு தகவல் கொடுத்த போது 'தாய்நாட்டிற்கு துரோகம் செய்தவன் எங்கள் மகன் அல்ல' என உடலை வாங்க மறுத்து விட்டார்கள். எத்தனை வைராக்கியம் பார்த்தாயா அண்ணா?" என்றாள் பாத்திமா.

"இதில் என்ன வைராக்கியம் பாத்திமா? இப்படிப்பட்ட பிள்ளைகள் இறந்தால் தாய்க்கு ஒரு சொட்டு கண்ணீர் கூட விழாது. தாயற்றவன் மட்டும் அநாதை அல்ல. தாய்நாட்டுக்கு எதிராய் செயல்பட்டு இறப்பவன் கூட அநாதை பிணம் தான்."

இஸ்மாயிலின் அம்மா குரலில் இருந்த தீவிரத்திற்கு அவனுக்கு உடம்பு ஒரு முறை தூக்கி வாரிப்பட்டது.

ஜோஷிதாவுக்கு அன்று காலையில் எழும்போதே சோர்வாக இருந்தது. நாள் முழுக்க வேலையில் கரைந்து



போனாலும் இரவின் தனிமையில் மனம் தளர்ந்து போவதை தடுக்க முடியவில்லை. நான் ஏன் இப்படி இருக்கிறேன்? தனிமையில் அநாதையாக கிடக்கிறேன்? நான் மதர் தெரஸா அல்ல. சேவைக்காக வாழ்க்கையை துறக்கும் மனப்பக்குவம் எனக்கு இல்லை. அடிமனதில் இன்னும் ஆசைகளும், ஏக்கங்களும் இருக்கத்தான் செய்கின்றன. தினமும் கண் விழிக்கையில் கிரண் காபியுடன் வந்து எழுப்ப மாட்டானா என்ற எதிர்பார்ப்புடனே ஒவ்வொரு நாளும் கழிகிறது. அவனது சீண்டல்களும், பதிலாய் ஏற்படும் சண்டைகளும், இறுதியில் தன்னை சரிகட்டி விடும் அவனது சாகசமும் கண்முன் படமாய் விரிகிறது. கடைசியாக அவனுடன் கழித்த சில நாட்களின் நினைவில் அவனது வெம்மைக்காக உடல் ஏங்கத்தான் செய்கிறது. அவனுக்கும் இந்த தவிப்பும், ஏக்கமும் நிச்சயம் இருக்கத்தான் செய்யும். ஆனால் ஏன் தொடர்பின்றி இருக்கிறான்? ஒருவேளை எதிரிகள் கையில் அகப்பட்டுக் கொண்டிருந்தால் அவன் நரக வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கக் கூடும். ரேஸில் அடிபட்ட குதிரையை சுட்டுத் தள்ளுகிற மாதிரி தங்களுக்கு பயனில்லை என்றதும் அரசாங்கம் அவனை கைகழுவி விட்டதா? கிரண் எதிரி நாட்டில் சித்திரவதை அனுபவிப்பது போன்ற நினைவில் ஜோஷிதாவின் விழிகளிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது. டேபிள் மீது முகத்தை பதித்து வெகுநேரம் அழுது கொண்டிருந்தவள் "ஜோஷிதா" என்ற குரலில் தலைநிமிர்ந்தாள்.

"எத்தனையோ நோயாளிகளின் வலியையும், வருத்தத்தையும் தீர்த்து வைப்பவர், நீங்கள் இப்படி வேதனைப்படலாமா?" என்றான் ஹரிதாஸ் வருத்தத்துடன்.

ஜோஷிதா முகத்தை துடைத்துக் கொண்டு தன்னை சரிபடுத்திக் கொள்ள முயற்சி செய்தாள்.

"என்னை நம்புங்கள் ஜோஷிதா. உங்கள் கவலை என்னவென்று சொல்லுங்கள். என்னால் உதவ முடியுமா

என்று பார்க்கிறேன்'' என்றான் ஹரிதாஸ் உருக்கமான குரலில்.

''எனக்கு... எனக்கு.... கிரணைப் பார்க்க வேண்டும் ஹரிதாஸ். அவன் எங்கே இருக்கிறான்? என்ன செய்கிறான் என்று தெரிய வேண்டும்.''

''ஓ! அதுதான் உங்கள் கவலையா?''

''கிரண் யார் என்று உங்களுக்கு தெரியாதில்லையா? கிரண்''...

''தெரியும்'' என்றான் ஹரிதாஸ். ''இங்கு வந்ததிலிருந்து நான் நிறைய கேள்விப்பட்டேன். ஜோஷிதா ஒரு விஷயம் சொல்லட்டுமா? கிரண் சிறு பையன் இல்லை. அவன் இங்கு வர நினைத்தால் எப்போதோ வந்திருக்கலாம். ஒரு வேளை திரும்பி வர பிரியமின்றி எங்காவது போய் செட்டில் ஆகியிருக்கலாம்.''

''புரியாமல் பேசாதே ஹரிதாஸ். கிரணின் வேலை சூழ்நிலை ஆபத்தானது. அதனால் அவன் வர முடியாமல் எங்காவது இருக்கக் கூடும்.''

''ஒரு வேளை... வேலை ஏற்படுத்திய ஆபத்தினால் அவன் இல்லாமல் கூட போயிருக்கலாம்.''

''ஹரிதாஸ்''... என்றாள் ஜோஷிதா உரத்த குரலில். முகம் சிவந்து, நெஞ்சு பதற, ஆத்திரத்தை அடக்கியபடி ஜோஷிதா சொன்னாள்.

''இது போல் இனி ஒரு முறை அபத்தமாக என்னிடம் பேசாதே.''

''மனிதன் அபத்தம் என்று நினைக்கிற விஷயங்கள் அர்த்தமுள்ளதாய் மாறக் கூடிய சூழ்நிலைகளும் ஏற்படும் ஜோஷிதா.''

''கண்டிப்பாக எனக்கு அப்படி நேராது.''

''உண்மையை எதிர்கொள்ள பயந்து நீ நினைப்பதே உண்மை என மனதில் பதிய வைக்க முயற்சிக்கிறாய். எத்தனை முயற்சித்தாலும் ஒரு நாள் நிஜத்தை எதிர் கொள்ளத்தான் வேண்டும்.''



''உளராதே ஹரிதாஸ். கிரண் கண்டிப்பாக வருவான்.''

''வராவிட்டால்? யோசித்துப்பார். அப்போது உன் நிலை என்ன?''

ஜோஷிதா ஒரு நொடி கூட யோசிக்கவில்லை. உடனே சொன்னாள், ''என் நிலை இதே தான் ஹரிதாஸ். அவனுக்காக காத்திருப்பேன். வயதாகி, தலை வெளுத்து, தோல் சுருங்கி, கண்பார்வை மங்கி கடைசி மூச்சு நிற்கும் வரை காத்திருப்பேன்.''

ஹரிதாஸ் குரலை செருமி சரிபடுத்திக் கொண்டு சொன்னான்.

''வாழ்க்கை சினிமா அல்ல ஜோஷிதா. கதாநாயகனுக்காக நாயகி காத்திருப்பதை காண்பித்து முற்றும் போட்டு விட முடியாது. நீ வாழ்வின் ஆரம்ப கட்டத்தில் இருக்கிறாய். உன் நாட்கள் மிக நீளமானவை.''

''என் தனிப்பட்ட வாழ்க்கை என்னுடையதில்லை ஹரிதாஸ். அது கிரணுடையது. அவன் திரும்பி வந்தால் ஒரு இனிமையான வாழ்க்கை எனக்கு கிடைக்கும். இல்லை என்றால் மருத்துவபணியே என் முழுநேர பணியாக இருக்கும்.''

ஹரிதாஸின் கண்கள் பனித்தன. இத்தனை ஆழமான அன்பை இணைய விடாமல் தடுக்கும் விதியின் விளையாட்டு குரூரமானது என்று தோன்றியது.

மருத்துவமனை தொட்டிலில் கண்கள் மலர கிடந்த குழந்தையை பார்த்ததும் ஜோஷிதா மகிழ்ந்து போனாள். ரோஜா நிறமும், சுருள் சுருளாய் முடியுமாய் இருந்த குழந்தையை கையில் ஏந்தியவள். ''லதிகா உன் குழந்தை உன்னைப் போலவே எத்தனை அழகு பார்த்தாயா?'' என்றாள் அவளிடம்.

லதிகா பதில் பேசாமல் முகத்தை திருப்பிக் கொள்ள கங்காவும், கரீமின் அம்மாவும் சொன்னார்கள், ''குழந்தை முகத்தையே அவ இன்னும் பாக்கல. நாங்களும், டாக்டர்

களும் எத்தனையோ வற்புறுத்தியும் பால் கொடுக்க மறுக்கிறாள். குழந்தையின் கத்தலை தாங்க முடியாமல் பவுடர் பால் கரைத்து கொடுத்தோம்.''

ஜோஷிதா லதிகாவின் அருகில் சென்று மிருதுவாக அவள் தலையை வருடினாள். ''உன் கோபத்தையும், வெறுப்பையும் எதுமறியாத இந்த அப்பாவி குழந்தையிடம் காட்டக் கூடாது லதிகா. நீ செய்த தவறுக்கு குழந்தையை பட்டினி போடுவது நியாயம் இல்லை. குழந்தை முகத்தை ஒரு முறை பார். உனக்கு ஒரு துணை வந்து விட்டது. இனி இந்த குழந்தையை அடிப்படையாக கொண்டே உன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.''

லதிகா பதில் பேசாமல் குலுங்கி அழுதாள். ஜோஷிதா வெகுநேரம் அவளை சமாதானப் படுத்த முயற்சி செய்த பின் கங்காவிடம் சொன்னாள், ''குழந்தை முகத்தைப் பார்த்து அவளே மாறி விடுவாள். தாய்ப் பாசத்தை விட வலிமையானது இந்த உலகில் எதுவும் இல்லை. இப்போது அவளை தொல்லை செய்யாதீர்கள்.''

கங்கா வாயே திறக்காமல் தலையசைக்கையில் கங்காவா இது? என்ற பரிதாபம் எழுந்தது ஜோஷிதாவுக்கு.

கரீமின் அப்பா குழந்தையை கொஞ்சிக் கொண்டிருப்பதை பார்த்தபடி ஜோஷிதா வீட்டிற்கு கிளம்பினாள்.

அடுத்து சில நாள் எப்போதும் போல் செல்ல, ஹரிதாஸ் ஒரு நாள் திடீரென்று ஊருக்கு கிளம்பினான். ''நீங்கள் இங்கு பார்த்த வேலை முடிந்து விட்டதா ஹரிதாஸ்?'' என்றாள் ஜோஷிதா.

''முடிந்து விட்டது'' என்று ஹரிதாஸ் சொன்னான். கங்கா சாச்சி வீட்டில் இல்லை. அதனால் நேரில் டைபெற முடியவில்லை. இத்தனை நாள் என்னை வனித்துக் கொண்டதற்கு நன்றி தெரிவித்ததாக சால்லுங்கள். அத்துடன்... கிரணைப் பற்றிய தகவல் டைத்தால் உங்களுக்கு சொல்லுகிறேன்'' என்றான்.



''தேங்க்யு'' என்றாள் ஜோஷிதா மிகுந்த மகிழ்ச்சியுடன். ஹரிதாஸ் கிளம்பிப் போனதும் சோம்நாத்ஜி சொன்னார்.

''எத்தனையோ வருடங்களாக இங்கு வசிக்கிறேன். ஆனால் சமீபத்தில் நடப்பவை எல்லாம் விசித்திரமாகத் தான் இருக்கிறது. திடீரென நீ ஒரு நாள் வந்தாய். திடுமென கிரண் ஒரு நாள் சொல்லாமல் கொள்ளாமல் மறைந்து போனான். இத்தனை வருடம் கழித்து கங்காவின் உறவினன் என்று ஒருவன் வந்தான். அவன் தங்கியிருக்கையிலேயே கங்கா மகளுடன் எங்கோ கிளம்பி விட்டாள். அவள் உறவினனும் வந்த மாதிரியே திடுமென கிளம்பிப் போய்விட்டான்.''

''காரணங்கள் இல்லாமல் காரியங்கள் இல்லை. எல்லாவற்றிற்கும் எதாவது ஒரு காரணம் இருக்கும் ஜி'' என்றாள் ஜோஷிதா மென்மையாக புன்னகைத்து.

''உண்மை தான். என்னைப் போல் வயதானவர்களுக்குத்தான் எந்த காரியமுமில்லை. நாங்கள் வாழ்வதற்கும் காரணம் இல்லை'' என்றார் சோம்நாத்ஜி சலிப்புடன்.

''இருக்கிறது ஜி'' என்றாள் ஜோஷிதா தனக்கு வந்த அரசு முத்திரை பதித்த கடிதத்தை காண்பித்து. ''இந்திய அரசாங்கம் எனது மருத்துவ பணியை பாராட்டி வருகிற சுதந்திர தினவிழாவில் விருது வழங்கி கௌரவிக்கப் போகிறார்களாம். மிக இளம் வயதில் இந்த விருதை பெறும் ஒரே பெண் நான்தானாம்.''

சோம்நாத்ஜி மிகுந்த மகிழ்ச்சியுடன் அவள் கரங்களைப் பற்றினார்.

''எனக்கு தெரியும் பேட்டீ. எந்த எதிர்பார்ப்பும் இன்றி நீ செய்யும் சேவைக்கு விருதும், கௌரவமும் வீடு தேடி வரும் என்று எனக்குத் தெரியும்.''

''மருத்துவ பணி என்பதே சேவைதான் ஜி. ஒரு மருத்துவரின் வேலையைத்தான் நான் செய்தேன். யாருடைய கைத்தட்டலுக்காகவும் நான் பணியாற்றவில்லை.''

''நீ ஒரு அபூர்வ பெண் ஜோஷிதா. உனக்கு வர வேண்டிய அனைத்தும் வாழ்வில் வந்தே தீரும்'' என்றார் சோம்நாத்ஜி அவள் தலையில் கை வைத்து.

''கிரணைத் தவிர எனக்கு வேறு எதுவும் தேவையில்லை'' என்றாள் ஜோஷிதா பெருமூச்சுடன்.

## 15

ஜோஷிதாவும் கரீமின் அப்பாவும் மதிய உணவு சாப்பிடுகையில் ரோஸியிடமிருந்து போன் வந்தது. ''உடனே கிளம்பி வாருங்கள்'' என்றாள் ரோஸி.

லதிகா மறுபடி முரண்டு பிடிக்கிறாள் போலும் என்று நினைத்த ஜோஷிதா அவசரமாய் உணவை முடித்துக் கொண்டு கிளம்பினாள். கூடவே கிளம்பிய பெரியவரை மறுத்து விட்டு வெளியே வருகையில் தாராபாய் காய்கறி கூடையுடன் எதிரே வந்தாள். மெஷினில் அரைத்த மிளகாய்த் தூள் டப்பாவை சுமந்தபடி கபூர் அவள் அருகே நின்றிருந்தான்.

தாராபாய் கூட இருந்தால் வசதி என்றெண்ணிய ஜோஷிதா, ''தாராபாய் என்னுடன் வருகிறாயா?'' என்றதும் முந்தானையில் கைகளை துடைத்தபடி தாராபாய் ஜோஷிதாவை பின் தொடர்ந்தாள். அவர்கள் ஸ்கூட்டரில் போய் சேர்ந்த போது மருத்துவமனை வாயிலில் நின்றிருந்த ரோஸி இவர்களைப் பார்த்ததும் விரைந்து வந்தாள்.

''அந்த பெண் நம்மை எல்லாம் மோசம் செய்துட்டாம்மா'' என்றாள் குரல் அடைக்க.

''என்ன சொல்கிறாய் ரோஸி?''

''ஆமாம்மா. இன்னிக்கு வீட்டுக்கு போகச் சொல்லி டாக்டர் சொல்லிட்டார் இல்லையா? நேற்று இரவு லதிகாவிடம் குழந்தைக்கு தடுப்பூசி போடுவது, குழந்தையை



பராமரிப்பது பற்றி எல்லாம் விளக்கமாக சொன்னார்கள். லதிகா பதிலே பேசாமல் அமர்ந்திருந்தது. ''குழந்தையை ஜாக்கிரதையாய் பார்த்துக் கொள். தாய்ப்பால் கண்டிப்பாக கொடுக்க வேண்டும்'' என்றார் அவளுக்கு பிரசவம் பார்த்த டாக்டர் அதட்டலாக.

''இது உன் குழந்தை லதிகா. எந்த காரணத்தைக் கொண்டும் இதை தவிர்க்க முடியாது. நினைவில் வைத்துக் கொள்'' என்றாள் கங்கா அழுத்தம் திருத்தமாக. என்ன நினைத்தாளோ தெரியாது. காலையில் எழுந்து பார்க்கையில் குழந்தை கத்திக் கொண்டிருந்தது. படுக்கையில் லதிகாவை காணோம். ''நான் போகிறேன். தேட வேண்டாம்' என இரண்டே வரியில் ஒரு கடிதம் படுக்கை மீது இருந்தது.

''மை காட்'' என்றாள் ஜோஷிதா திகைப்புடன்.

''எல்லாவற்றிலும் துணிச்சலும், அவசரமும் அதிகம் அந்த பொண்ணுக்கு. பிடிவாதக்காரி. இத்தனை பேரின் முயற்சியையும் வீணாக்கி விட்டாளே!'' என்றாள் தாராபாய் கோபத்துடன்.

''கங்கா எங்கே?'' என்றாள் ஜோஷிதா ரோஸியிடம்.

''அதோ'' என்றாள் ரோஸி.

மடியில் குழந்தையுடன் கங்கா நிராதரவின்றி அமர்ந்திருந்தது பார்க்க பரிதாபமாக இருந்தது. அருகே சென்றதும் அவர்களைப் பார்த்த கங்கா பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தாள். ஜோஷிதா அவளை ஆறுதலாக அணைத்துக் கொள்ள, கங்கா முகத்தில் அடித்துக் கொண்டு கதறினாள். ''பாவி... பாவி... இப்படி பண்ணிட்டாளே! நான் என்ன செய்வேன்? ஐயோ கடவுளே!''

கங்காவின் அசைவில் அவள் மடியிலிருந்த குழந்தை வீறிட்டு அழுதது.

''அதற்கு பசிக்கும்'' என்றாள் தாராபாய்.

''ஆமாம். அடங்காத பசி. பிறந்ததிலிருந்து தாயிடம் பால் குடிக்கவில்லை. இனிமேலும் குடிக்கப் போவதில்லை. ஆனால் பசி மட்டும் வந்து விடும்.''

''கங்காஜி குழந்தையை இப்படி எல்லாம் வெறுப்புடன் பேசக் கூடாது'' என்றாள் ஜோஷிதா கண்டிப்புடன்.

''எங்கள் வாழ்வையே நாசமாக்கிய இதை கொஞ்சவா முடியும்?'' என்றாள் கங்கா ஆக்ரோஷத்துடன்.

தன் மகள் தன் வாழ்க்கையை தானே கெடுத்துக் கொண்டாள் என்பது புரிந்த பின்பும் கங்கா குழந்தையை வெறுப்பது திகைப்பாக இருந்தது. தாராபாய் அவசரமாய் பையிலிருந்த பால்டின்னை திறந்து பாலை கரைத்து புகட்டவும் ஒரு வழியாய் குழந்தை அழுகையை நிறுத்தியது.

மருத்துவமனையிலிருந்து லதிகாவின் மிச்சம் மீதி பொருட்களை அங்கிருப்பவர்களையே யாருக்காவது கொடுக்க சொல்லி கையெழுத்திட்டு விட்டு கிளம்புகையில் ''மாத்தி கட்ட துணி கூட இல்லாமல் இந்த பெண் என்ன செய்வாள்? அப்படி எங்கே போயிருப்பாள்?'' என்றாள் தாராபாய் அங்கலாய்ப்பாக.

தற்கொலை செய்து கொண்டிருப்பாளோ என்ற எண்ணத்தை ஜோஷிதா தனக்குள் அமுக்கினாள்.

குவாட்டர்ஸில் குழந்தையுடன் லதிகாவை எதிர்பார்த்து காத்திருந்த கரீமின் பெற்றோரிடம் விஷயத்தை சொன்ன பிறகு கங்கா சொன்னாள். ''நமக்குள் ஏதோ ஒரு ஜென்மத்தில் கொடுக்கல் வாங்கல் பாக்கியிருந்தது போலும். அந்த கடனுக்கு எனக்கும் என் மகளுக்கும் ஆதரவளித்தீர்கள். உடன் பிறப்புகள் இருந்தாலும் செய்திருக்காத உதவியை செய்தீர்கள். இந்த நன்றியை நான் என்றும் மறக்க மாட்டேன். கடைசியாக இன்னும் ஒரு உதவி செய்து விடுங்கள். இந்த குழந்தையை ஏதாவது ஆசிரமத்தில் ஒப்படைத்து விடுங்கள்.''

''கங்காஜி என்ன சொல்லுகிறீர்கள்? எதுவும் அறியாத ச்சை மண். இதை புறக்கணிக்கலாமா?'' என்றாள் ஜாஷிதா திடுக்கிட்டு.

''ஆமாம், கங்கா, நீ பேசுவது கொஞ்சமும் சரியல்ல'' ன்றாள் ரோஸி.



''நாங்கள் எப்போதும் உங்களுக்கு துணையிருக்கிறோம். குழந்தையை வளர்ப்பது பற்றி கவலைப்படாதீர்கள்'' என்றாள் கரீமின் அம்மா.

''வேண்டவே வேண்டாம்'' என்றாள் கங்கா தீவிரத்துடன். ''என் கணவன் கை குழந்தையுடன் என்னை விட்டு போன போது மனதில் வைராக்கியமும், பெண்ணின் எதிர்காலம் குறித்த நம்பிக்கையும் இருந்தது. அந்த நம்பிக்கையை பற்றிக் கொண்டே காலத்தை கழித்து விட்டேன். திடீரென்று ஒரு நாள் அந்த நம்பிக்கையே என்னை மீள முடியாத குழியில் தள்ளி விட்டது. அதிலிருந்து மீள முடியாத நிலையில் மீண்டும் இன்னொரு குழந்தையை வளர்த்து. அதன் எதிர்காலம் பற்றி கவலைப்பட்டு... அதற்காக உழைக்க என் மனசிலோ உடம்பிலோ தெம்பில்லை. விருப்பமும் இல்லை. என் பெண்ணே என்னை அநாதையாய் விட்டு விட்டு போன பிறகு யாருடைய குழந்தை எப்படி போனால் எனக்கென்ன?''

''இருந்தாலும் இது உங்களுடைய பேரக் குழந்தை ஜி'' என்றாள் கரீமின் அம்மா.

''இதன் அம்மாவே இப்போது என் குழந்தை இல்லை என்றான பிறகு இது எப்படி என் பேத்தியாகும்? இல்லவே இல்லை'' என்றாள் கங்கா முடிவாக.

யார் சொன்னதையும் காதில் வாங்க மறுத்த கங்கா சொன்னாள்.

''நான் காசிக்கு போகிறேன். வெகு நாள் கழித்து என் பிறந்தகம் போகிறேன். அங்கு என்னை அடையாளம் கண்டு கொள்ள யார் யார் உயிருடன் இருக்கிறார்கள் என்று கூட தெரியாது. யாரும் இல்லை என்றாலும் கங்கை கரையிலேயே காலத்தை கழித்து விடுவேன். உங்கள் மருத்துவ பணிகளுக்கு என் வீட்டை எடுத்து கொள்ளுங்கள். அது சம்மந்தமான பேப்பர்களை இந்த பையில் வைத்திருக்கிறேன்.''

ஜோஷிதா திகைத்துப் போனதை பார்த்த கங்கா சொன்னாள்,

''இந்த பத்திரங்களை எல்லாம் எப்போது தயார் செய்தேன் என்று யோசிக்கிறீர்கள் இல்லையா? சக்தி நிவாஸிலிருந்து வெளியேறி இங்கு வந்த போது திரும்பவும் அங்கே வரமாட்டேன் என்று லதிகா உறுதியாக சொல்லி விட்டாள். கைக் குழந்தையுடன் அங்கிருப்பவர்கள் எதிர் கொள்ள முடியாது என்பதால் நானும் அவளும் எடுத்த முடிவு தான் இது. இங்கேயே வேறு வீடு பார்க்கலாம் என்று நினைத்தேனே தவிர இப்படி ஒரு திட்டம் அவள் மனதில் இருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை.''

அதற்கு மேல் எதுவும் பேசாமல் கண்ணையும் முகத்தையும் துடைத்துக் கொண்டு முடியை வாரி முடிந்து கொண்டு கங்கா எழுந்து நின்றாள். எல்லோரிடமும் போய் வருவதாக தலையசைத்து விட்டு திரும்பிப் பார்க்காமல் நடந்தாள்.

''ரோஸி இந்த குழந்தையை'' என ஜோஷிதா ரோஸியை அழைக்கவும் ''நானே வளர்க்கிறேன்'' என்றாள் தாராபாய் இறுக அணைத்தபடி ''யார் என்ன நினைத்தாலும் சரி. கடவுள் எனக்கு அளித்த பிரசாதம் இந்த குழந்தை. என் இத்தனை நாள் பூஜையின் பலன்'' குழந்தையின் உச்சியில் முத்தமிட்ட தாராபாயின் கண்களில் நீர் நிரம்பி வழிந்தது. வெகு நாட்கள் ஏங்கிய தாய்மையின் ஏக்கம் ாராபாயின் உயிரை உருக வைத்தது. அவள் முகத்தைப் ார்த்த மற்ற நால்வரும் நெகிழ்ந்து போனார்கள்.

''தாராபாய் இந்த குழந்தை லதிகாவின் குழந்தையாக ங்கள் வீட்டில் வளரக் கூடாது'' என்றாள் ஜோஷிதா.

''இது என் குழந்தை. இந்த குழந்தை எனக்கு கிடைக்க திகா ஒரு காரணமாய் இருந்தாள். அவ்வளவுதான். கோயில் சலில் குழந்தை கிடைத்ததாக கேட்பவர்களிடம் ால்லுவேன்'' என்றாள் தாராபாய் உணர்ச்சி வசப்பட்டு.



''ஒரே ஒரு கோரிக்கை எனக்கு'' என்றார் பெரியவர். ''இந்த குழந்தை உனக்கு மகள் மட்டுமல்ல. எனக்கு பேத்தியும் கூட. இதன் அம்மா வயிற்றில் இருக்கும் போதிருந்தே ஏற்பட்டுப் போன பாசம் இது. எங்கள் பேத்தியும் எங்களுக்குள்ள பிரியத்தை நீ மறுக்கக் கூடாது'' என்றார் உருக்கமாக.

''நிச்சயம் மறுக்க மாட்டேன். ஏனென்றால் இவளுக்கு நீங்கள் தாத்தா மட்டுமல்ல. எனக்கு அப்பா அம்மாவும் நீங்கள்தான்'' என்றாள் தாராபாய்.

ரோஸியின் கண்களும் கலங்கிப் போக, ஜோஷிதாவுக்கு சோம்நாத்ஜியிடம் தான் சொன்னது நினைவுக்கு வந்தது. காரணங்கள் இல்லாமல் காரியங்கள் இல்லை. லதிகா எதிர்பாராமல் குழந்தையை விட்டு விட்டு ஓடிப் போனதற்கும், தாராபாய்க்கு வெகுநாளாய் குழந்தையை பிறக்காமல் இருந்ததற்கும் கூட ஏதோ சம்பந்தம் இருக்க வேண்டும்.

சுதந்திர தின விழாவில் ஜோஷிதாவுக்கு விருது வழங்கப்படுவது பற்றி செய்தித்தாள்களிலும், தொலைக் காட்சியிலும் செய்திகள் வெளிவந்தன. அவள் அம்மாவும், அப்பாவும் போனில் வாழ்த்தினார்கள். ''இத்தனை சிறிய வயதில் இந்த உயரத்திற்கு போயிருப்பது சந்தோஷமாக இருக்கிறது ஜோஷி. பொது வாழ்வில் நீ எத்தனை சாதித்தாலும் இயல்பான குடும்ப வாழ்க்கை அமைந்து நீ மகிழ்ச்சியாக வாழ்ந்தால்தான் எங்களுக்கு உண்மையான மகிழ்ச்சி ஏற்படும்''' என்றார்கள் கண்கலங்க,

சக்தி நிவாஸ் வாசிகள் தங்கள் குடியிருப்புக்கு ஒரு கெளரவம் ஏற்பட்டு விட்டதாக பூரித்தார்கள். தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் எல்லோரும் தங்களையே பாராட்டி விட்டது போல் கொண்டாடினார்கள். அதுவும் ஜோஷிதாவே எதிர்பாராத வகையில் ஹரிஷ் ஒரு நாள் போன் செய்தான்.

''நீ இதை விட பெரிய உயரத்துக்கு போக தகுதி உடையவள் ஜோஷிதா. என் வீட்டு சுவற்றுக்குள் உன்னை அடைக்க நினைத்தது எங்கள் முட்டாள்தனம். எனக்கு வெகு நாட்களாகவே உன்னுடைய அயராத உழைப்பையும், ஏழை மக்களுக்கு நீ மேற்கொண்டு வரும் பணிகளையும் பற்றியும் தெரியும். ஆனால் உன் எதிரில் நின்று பேசுகிற தகுதியில்லாததால் இது நாள் வரை தொடர்பு கொள்ள முயற்சிக்கவில்லை. இப்போதும் வாழ்த்தாமல் இருக்க மனசாட்சி விடவில்லை'' என்றான்.

ஷீலா நாயரும், பாமெலாவும் கூட பேசினார்கள். ஹரிதாஸ் ஒரு நாள் போன் செய்து வாழ்த்துகளை தெரிவித்தான். ''நான் இப்போது டெல்லியில் தான் இருக்கிறேன். நீ டெல்லி வருவாய் இல்லையா? அப்போது சொல்கிறேன்'' என்றான் கிரண் பற்றிய அவள் கேள்விக்கு.

''கிரணை நான் பார்க்கக் கூட வேண்டாம். அவன் இருக்கிறான் என்ற ஒற்றை வார்த்தை போதும். அந்த வார்த்தையிலேயே வாழ்ந்து முடித்து விடுவேன்'' என்றாள் ஜோஷிதா.

ஹரிதாஸ் தொண்டையை செருமியபடி சொன்னான். ''உன்னுடைய தவம் வீணாகாது என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது ஜோஷிதா. நல்லவர்களின் எதிர்பார்ப்பு பொய்ப்பதில்லை'' என்றதுடன் போனை கட் செய்தான்.

ஜோஷிதா அன்று மாலையில் வழக்கம் போல் ரோஸியுடன். போன போது ப்ளாட்பார வாசிகள் அவளை சுற்றி நின்று மகிழ்ச்சி தெரிவித்தார்கள். ஒரு அழுக்கு உடை சிறுமி சட்டென அணைத்து ஜோஷிதாவின் கன்னத்தில் முத்தமிட்டு ''எங்களை எப்போதும் மறந்து விடாதீர்கள் தீதி'' என்றாள் கெஞ்சலாக.

அந்த அன்பில் மனம் கரைந்து போன ஜோஷிதா சொன்னாள், ''நான் எப்பவும் உங்களுக்கு துணையாய் இருப்பேன். ஆனால் நீயும் உன் தோழர்களும் நன்றாக



படித்து என்னைப் போல் ஒரு டாக்டர் ஆக வேண்டும். எனக்கு பிறகு என் வேலையை நீங்கள் எல்லாம் தொடர்ந்து செய்ய வேண்டும். சரியா?''

சிறுமியும் அவளுடன் நின்றிருந்த சிறுவர்களும் 'சரி' என தலையசைத்தனர்.

அன்றைய பணி முடிந்து திரும்புகையில் ரோஸி விருதுக்கு வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கையில் ஜோஷிதா சொன்னாள். ''இல்லை ரோஸி. நான் பெரிதாக எதையும் சாதித்து விடவில்லை. வாழ்நாள் முழுவதும் சேவையில் கழித்த மருத்துவர்களும், செவிலியர்களும் பலர் இருக்கக் கூடும். எனக்கு கிடைக்கக் காரணம் அயல் நாட்டிலிருந்து வந்து நான் சேவை செய்பவள் என்பதால் தான்'' என்ற ஜோஷிதா சிறிது அமைதிக்கு பின் சொன்னாள், ''எல்லா பக்கங்களிலிருந்து பாராட்டுகள் குவிகின்றன ரோஸி. ஆனால் நான் எதிர்பார்க்கும் ஒரு குரல் மட்டும் இன்னும் என் காதுகளில் ஒலிக்கவே இல்லை. இன்னும் நான் கிரண் வீட்டில் அவனுக்காக காத்திருக்கிறேன் என்பதை அவனுக்கு தெரியப்படுத்தும் விளம்பரமாகத்தான் இந்த விழாவை நான் நினைக்கிறேன்.''

ஜோஷிதா கண்கலங்க ரோஸியும் மனம் கலங்கினாள். ''யேசுவே இவள் துணையை இவளுடன் சேர்த்து வையுங்கள்'' ரோஸியின் கைகள் சிலுவை குறியிட்டன.

கபூரின் கையிலிருந்து குழந்தை அவனைப் பார்த்து சிரித்தது. ''அட போக்கிரி, அப்பாவை பார்த்து சிரிக்கிறயா?'' என்றான் கபூர் பூரிப்புடன். கொஞ்சலை புரிந்து கொண்ட தினுசில் குழந்தை கை காலை அசைத்து குதிக்க கபூர் வாரி அணைத்து முத்தமிட்டான்.

''காலையில எழும்பினதிலிருந்து இப்படியே இருந்தால் எப்படி? இன்னிக்கு வேலைக்கு போகலையா நீ?'' என்றாள் தாராபாய்.

''போகணும்னுதான் நினைக்கிறேன். ஆனா இவ முகத்தைப் பார்த்தால் நகரவே மனசில்லை'' என்றான் கபூர் குழந்தையின் கன்னத்தை நிமிண்டியபடி.

''அடடே ரொம்பத்தான் கர்வம் உனக்கு. இந்த தெருவில் எத்தனை வீட்டில் குழந்தைகள் இல்லை?''

''இருக்கிறது. அதெல்லாம் பெற்றோருக்கு பிறந்த சராசரி குழந்தைகள். ஆனால் இது எனக்கு தெய்வம் தந்த வரம்.''

''ஹாய்... செல்லம்...'' ஜோஷிதா குழந்தையின் முன் கைகளை சொடுக்கினாள்.

குழந்தை புரிந்து கொண்டாற் போல் பொக்கை வாயை காண்பித்தது.

''என்ன கபூர், உன் பெண் இப்போதே எழுந்து ஓடி விடுவாள் போலிருக்கே! கையையும் காலையும் பாரேன், என்ன சுறுசுறுப்பு'' என்றாள் கபூரிடம்.

''ஆமாம் தீதி, எங்களுக்கு இவளை கவனிக்க இருபத்திநாலு மணி நேரம் போதவில்லை'' என்றான் கபூர் பெருமையுடன்.

''என்ன பெயர் வைப்பது என்று முடிவு செய்து விட்டீர்களா?''

''என் அம்மாவின் பெயர் வைக்கலாம் என்றிருக் கிறோம். ரூப்மதி.''

''நல்ல பெயர்'' என்றபடியே அங்கு வந்த சோம்நாத் ஜியிடம் ''என்ன அங்கிள், நீங்கள் கூட நம் வராண்டா நாற்காலியை விட்டு எழுந்து வந்து விட்டீர்களே!'' என்றாள் ஜோஷிதா.

''ஆமாம் பேட்டீ, வராண்டாவில் இருந்து கொண்டே எல்லோரையும் பார்த்து விடுவேன். ஆனால் இந்த பெரிய மனுஷியைப் பார்க்க நான் தான் வந்தாக வேண் டும்'' என்ற சோம்நாத்ஜி தானும் ஒரு குழந்தையாய் மாறி குழந்தையுடன் விளையாடினார்.



சிறிது நேரத்தில் குழந்தை பசியில் அழவும், தாராபாய் எடுத்துப் போகவும் ''எப்போது டெல்லி போகிறாய் பேட்டீ?'' என்றார் சோம்நாத் ஜி.

''இன்னும் ஒரு வாரத்தில்.''

''உன்னுடன் யார் வருகிறார்கள் ஜோஷிதா?''

''இன்னும் முடிவு செய்யவில்லை அங்கிள்.''

''நானும் உன்னுடன் வரலாம் என்று நினைக்கிறேன். ஆனால் நான் வயதானவன். நான் கூட வருவதால் உதவியை விட உபத்திரவம் தான் அதிகம்'' என்றார் சோம்நாத்ஜி.

''கவலைப்படாதீர்கள் ஜி. நான் கூடப் போகிறேன். நான் தீதியை பார்த்துக் கொள்கிறேன்'' என்றான் கபூர்.

''நீ இல்லாமல் தாராபாய் தனியாக குழந்தையை சமாளிப்பது சிரமம் கபூர். எனக்கு ஏற்பாடுகளும் தயாராக இருக்கும். பயம் எதுவுமில்லை'' என்றாள் ஜோஷிதா.

பெரியவரும் உன்னுடன் கிளம்பப் போவதாக சொன் னார்'' என்றார் சோம்நாத்ஜி.

''பேசாமல் குழந்தையை தூக்கிக் கொண்டு நாம் எல்லோரும் போகலாம்'' என்றாள் தாராபாய்.

''சரி ஒட்டு மொத்த மும்பையையும் டெல்லிக்கு ஷிப்ட் செய்து விடலாம்'' என்றாள் ஜோஷிதா, சிரித்தபடி.

கடைசியில் தாராபாய்க்கு துணையாக கரீமின் அம்மாவை இருக்க சொல்லிவிட்டு கபூரும், கரீமின் அப்பாவும் ஜோஷிதாவுடன் போவதென முடிவாயிற்று. சரியென எழுந்து நின்ற சோம்நாத்ஜி பூட்டப்பட்டிருந்த கங்காவின் வீட்டைப் பார்த்ததும் துணுக்குற்றார்.

''இந்த கங்கா இப்படி திடுதிப்பென்று மகளுடன் மறைந்து போவாள் என்று நான் நினைக்கவே இல்லை. திடீரென்று ஒரு நாள் போன் செய்து தான் இனி சக்தி நிவாஸ் வரப் போவதில்லை என்றும் வீட்டை மருத்துவ மனைக்கு கொடுத்து விட்டதாகவும் சொன்னாள்.

லதிகாவும் நீயும் எங்கே இருக்கிறீர்கள் என்ற கேள்விக்கு பதிலே சொல்லாமல் வைத்து விட்டாள். இருவரும் அப்படி எங்கே தான் போயிருப்பார்கள்? ஒரு வேளை ஹரிதாஸுடன் தங்கியிருப்பார்களா? ஒன்றும் புரியவில்லை'' என்றார் குழப்பத்துடன்.

கங்காவின் கதை இனி எப்போதும் ஒரு புதிராகத்தான் இருக்கப் போகிறது என்ற நினைவில் தாராபாயும் ஜோஷிதாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

ஜோஷிதா தன் ஒரு வார பயணத்திற்கான பொருட்களை பேக் செய்து முடித்து இரவு மணி ஒன்றாகி விட்டிருந்தது. காலை ஆறு மணிக்கு ப்ளைட். காரிடாரில் குழந்தையின் சிணுங்கலும் தாராபாயும், சுஹுரும் பேசும் சத்தமும் கேட்டது. கரீமின் பெற்றோர் தூங்கிவிட்டிருந்தனர். அன்று மாலையில் பரசுராமன் போன் செய்த போது இந்த மாத இறுதியில் தாங்கள் இந்தியா வருவதாக சொன்னார். எத்தனை நாள் விடுமுறையில் வருகிறீர்கள்? என ஜோஷிதா மகிழ்ச்சியுடன் கேட்டதற்கு ''நிரந்தரமாகவே வந்து விடலாம் என்றிருக்கிறோம்'' என்றார் பரசுராமன்.

''நிஜமாகவா?'' என்றாள் ஜோஷிதா வியப்புடன்.

''ஆமாம் ஜோஷி. இது முன்பே எடுத்த முடிவு தான். ஒரு வேளை நீ மனம் மாறி ஒரு நாள் லண்டன் திரும்பக் கூடும் என்ற எண்ணத்தில் இத்தனை நாள் காத்திருந்தோம்.''

''ஆனால் உங்களுக்கு லண்டன் தானே சௌகர்யம்! உங்களுக்கென்று அங்கே பெயரும் புகழும் இருக்கிறது. சொந்தமாய் வீடும்...'' ஜோஷிதா முடிக்கும் முன் பரசுராமன் குறுக்கிட்டார். ''உன்னை விட அதெல்லாம் பெரிதில்லை ஜோஷிதா.''

''தேங்க்ஸ் டாடி'' என்றாள் ஜோஷிதா நெகிழ்ந்து போய்.

பெற்றோர்கள் இங்கே வந்துவிடப் போகிறார்கள் என்பதே புதிய தெம்பையும் உற்சாகத்தையும் தந்தது.



ஜோஷிதா சூட்கேஸை லாக் செய்து விட்டு படுக்கையில் சாய்ந்தாள். இன்னும் மூன்று மணி நேரத்தில் கிளம்ப வேண்டும். சற்று உறங்கி எழுந்தால்தான் முடியும். அலுப்பில் கண்களை மூடிய சமயம் அவளது செல்போன் ஒலித்தது. யார் இந்த நேரத்தில்? என்ற சலிப்புடன் கண்களைத் திறக்காமல் பட்டனை அழுத்தி ''ஹலோ'' என்றாள்.

''ஜீ'' என்றது அவனது பழக்கமான குரல்.

''கோன் ஹை?'' என்றாள் ஜோஷிதா உறக்கம் கலைந்து போனவளாய்.

''இஸ்மாயில்.''

''இஸ்மாயில், என்ன இந்த நேரத்தில்? யாருக்காவது உடம்பு சரியில்லையா?'' என்றாள் திடுக்கிட்டு.

''நான் சொல்வதை கவனமாக கேளுங்கள் ஜி. சுதந்திர தின விழாவில் நீங்கள் கலந்து கொள்ள வேண்டாம்.''

''என்ன சொல்கிறாய் இஸ்மாயில்?'' என்றாள் ஜோஷிதா பதட்டத்துடன். ''அதிகம் பேச சமயம் இல்லை தீதி. நீங்கள் டெல்லி போக வேண்டாம்; நீங்கள் வாங்கப் போகும் விருதை விட உங்கள் உயிர் விலை மதிப்பற்றது. போகாதீர்கள் தீதி. போகா...''

தொடர்பு சட்டென துண்டிக்கப்பட்டது. ஜோஷிதா அதிர்ச்சியுடன் அப்படியே அமர்ந்திருந்தாள். 'இஸ்மாயில் காரணமின்றி இந்த போன் செய்திருக்க மாட்டான். மும்பையில் நடந்தது போல டெல்லியிலும் எதாவது கலவரம் நடக்கப் போகிறதா? இதை காவல் துறையிடம் தெரிவிக்கலாமா? எப்படித் தெரியும் என்று கேட்டால் என்ன சொல்வது? தான் லண்டனிலிருந்து மும்பை வந்து இறங்கியதிலிருந்து சொல்ல வேண்டும்.' ஜோஷிதா யோசனையில் அமர்ந்திருக்கையில் ''கிளம்பலாமா பேட்டீ?'' என்றபடி கரீமின் அப்பா உள்ளே வந்தார். ஜோஷிதா அமர்ந்திருப்பதைப் பார்த்தவர். ''ஓ ஏற்கனவே நீ தயாராகி விட்டாயா?'' என்றார் வியப்புடன்.

ஜோஷிதா பதில் பேசாமல் தலையசைத்தாள். அவர்களுடன் கபூரும் தயாராகி வெளியே வர சக்தி நிவாஸின் அத்தனை வீடுகளிலும் விளக்கெரிந்தது. அந்த விடிகாலை குளிரில் வெளியே காத்திருந்த காம்பவுண்ட் வாசிகள் உற்சாகமாய் கை அசைத்து வழியனுப்பி வைத்தனர். ஜோஷிதாவுக்கு முதன் முறையாக தான் இங்கு வந்த போது யாரையும் தெரியாது என்பது நினைவுக்கு வந்தது. இன்று தன்னை பாதுகாக்கவும், வாழ்த்தவும், உயிரையே கொடுக்கவும், வீட்டையே எழுதித் தரவும்... எத்தனை உறவுகள்!

'ஓ! இந்த பூமி மகத்தானது. இதன் செழுமை பொருளாதாரத்தில் இல்லை. அதன் கலாச்சாரத்தில் இருக்கிறது. பல படையெடுப்புகளுக்கு பிறகும், அந்நிய ஆதிக்கத்திற்கு உட்பட்டும் இன்னும் இந்தியாவின் பாரம்பரியம் தொடர்கிறது என்றால் அது இந்த மக்களின் மனித நேயத்தினாலும் சகிப்புத்தன்மையினாலும் தான். எந்த மதவாத சக்தியாலும் இதை சீர் குலைத்து விட முடியாது' ஜோஷிதா குழப்பங்களிலிருந்து விடுபட்டு நிமிர்ந்து அமர்ந்தாள்.

ஹரிதாஸ் டெல்லி விமான நிலையத்திற்கு வந்திருந்தான்.

"நாங்கள் எப்போது வருகிறோம் என்று தெரிவிக்கவில்லையே! உனக்கு எப்படித் தெரியும்?" என்றாள் ஜோஷிதா வியப்புடன்.

"ஹரிதாஸுக்கு தெரியாமல் டெல்லியில் ஒரு அணுவும் அசையாது" என்றான் அவன் பெருமையுடன்.

"ஹரிதாஸ்தான் டெல்லிக்கு கூர்க்கா போலிருக்கிறது" என்றான் கபூர் கேலியாக.

"யா! அப்படியும் சொல்லலாம்" என்றான் ஹரிதாஸ் சிரிப்புடன். புது டெல்லியின் தெருக்களை எல்லோரும் ஆர்வத்துடன் பார்த்தார்கள். மும்பையின் கசகசப்பிற்கும், பரபரப்பிற்கும் நேர் எதிராக இந்தியாவின் தலைநகரம்



விஸ்தாரமான அமைதியுடன் இருந்தது. நேரான சாலைகள் மொகலாய பேரரசர்களின் பெயர்களை தாங்கி நின்றன. மக்கள் ஒரு நிதானமான வேகத்துடன் நகர்ந்து கொண்டிருந்தனர். கட்சி வேஷ்டிகளின் நடமாட்டமும், போலீஸ் செக்யூரிட்டியும் அதிகம் காணப்பட்டது.

"மும்பையை விட இங்கு கெடுபிடிகள் அதிகம் போலிருக்கிறதே!" என்றாள் ஜோஷிதா.

"சுதந்திர தினம் என்பதால் பாதுகாப்பு பலமாக இருக்கிறது" என்றான் ஹரிதாஸ்.

"ஒரு சுதந்திர நாளைக் கூட சுதந்திரமாய் கொண்டாட முடியவில்லை எனில் இது என்ன ஜனநாயகம்?" என்றார் பெரியவர் சலிப்புடன்.

"உலகம் முழுவதும் தீவிரவாதம் தவிர்க்க முடியாத தாகி விட்டது ஜி. அமெரிக்கா ஆப்கனில் போராடி வருவதை நாம் பார்க்கிறோமே! வெட்ட வெட்ட துளிர்க்கும் விஷச் செடிகளைப் போலத்தான் தீவிரவாதிகளும். இதில் நம்மை பாதுகாத்துக் கொள்வதே புத்திசாலித்தனம்" என்றான் ஹரிதாஸ்.

மூவரையும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட அறையில் விட்டுவிட்டு "எதுவாயினும் என்னை தொடர்பு கொள்ளுங்கள்" என ஹரிதாஸ் போன் நெம்பரை கொடுத்து விட்டு கிளம்புகையில் "உன் சித்தி கங்காவைப் பற்றி எதாவது தகவல் தெரியுமா?" என்றான் கபூர்.

"தெரியாது" என்றான் ஹரிதாஸ் அவன் பார்வையைத் தவிர்த்து.

அடுத்த நான்கு நாட்கள் அவர்களுக்கு டெல்லியை சுற்றிப் பார்ப்பதில் கழிந்தது. அமீர் மஹால், அக்ஷர்தாம், குதுப்மினார், லோட்டஸ் டெம்பிள், தாஜ்மஹால், பாராளுமன்ற கட்டிடம், ஜும்மா மசூதி, ஹரே ராமா கோவில், பிர்லா மந்திர் என ஒன்று விடாமல் பார்த்தார்கள்.

"நல்ல வேளை டெல்லி அத்தனை நெருக்கமாக இல்லை" என்றாள் ஜோஷிதா.

''இது நியூ டெல்லி. புதிதாக கட்டமைக்கப்பட்டது. ஒல்டு டெல்லியை பார்த்தால் வியந்து போவீர்கள். நெருக்கமான தெருக்களும், பழமை மாறாத கட்டிடங்களும் டெல்லியின் பாரம்பரியத்தை சொல்கிற விதமாய் இருக்கும்'' என்றான் ஹரிதாஸ்.

கிரணை எங்காவது சந்திக்கக் கூடும் என்ற அர்த்தமற்ற எதிர்பார்ப்பில் செல்லுமிடமெல்லாம் ஜோஷிதாவின் கண்கள் தெருவை சலித்தன. பாலிகா பஜார் காம்ப்ளெக்சில் கபூரின் குழந்தைக்கு பொம்மையும், உடைகளும் வாங்கிக் கொண்டு திரும்புகையில் ''கரீம்''... என்ற பெரியவரின் உரத்த குரலை கேட்டு ஜோஷிதா அவர்களை கடந்து சென்றவனை பார்த்தாள். ''அது நம் கரீமைப் போலில்லை''... என அந்த இளைஞனை பின்தொடர முற்பட்ட பெரியவரை கைகளைப் பற்றி நிறுத்தினாள்.

''அது கரீம் இல்லை பிதாஜி.''

''கரீம்தான். என் மகனை எனக்குத் தெரியாதா?'' பற்றியிருந்த கைகளை விடுவித்துக் கொண்டு அந்த இளைஞனை நெருங்கியவர், அவன் முகத்தைப் பார்த்தும் ஏமாற்றத்துடன் சுருங்கிப் போனார். டெல்லி வந்ததிலிருந்தே பெரியவரும் பார்க்கிற முகங்களை எல்லாம் உற்றுப் பார்ப்பதை கவனித்துக் கொண்டிருந்த ஜோஷிதா ''பிதாஜி, போகலாம் வாருங்கள்'' என்றாள் அனுதாபத்துடன்.

ஹரிதாஸ் அடிக்கடி வந்து அவர்களை வெளியே அழைத்துப் போனான். முடியாத போது டிரைவருடன் காரை அனுப்பி வைத்தான்.

மும்பையில் அந்த சின்ன வீட்டில் தங்கி, எலெக்ட்ரிக் இரயிலில் நசுங்கி வெகுதூரம் நடந்து சென்று வேலை பார்த்த ஹரிதாஸ் இங்கு ஜீப்பும், காருமாய் ஆபீசர் போன்ற மிடுக்குடன் வளைய வருகிறான். ஜோஷிதா அவனிடம் கேட்டாள், ''ஹரிதாஸ் நீ முன்பு பார்த்த வேலையை விட்டுவிட்டாயா? இங்கு என்ன வேலை



செய்கிறாய்? டெல்லி தான் உன் சொந்த ஊரா? முன்பு கக்காரியின் ஊரிலிருந்து வருவதாக சொன்னாயே!''

''அடேயப்பா எத்தனை கேள்விகள்?'' என்றான் ஹரிதாஸ் மழுப்பலாக, பின்பு ''டெல்லியில் நீங்கள் எதுவும் வாங்கவில்லையா ஜோஷிதா'' என்றான் அவளிடம்.

''நான் தேடுவது எதுவென்று உனக்கே தெரியும். சொல்லு ஹரிதாஸ் நீயாக சொல்லுவாய் அல்லது அழைத்துப் போவாய் என எதிர்பார்த்திருக்கிறேன்.''

ஹரிதாஸ் ஆவல் நிறைந்த அவள் முகத்தை ஒரு கோடி யோசனையுடன் பார்த்தான். ''இந்த விழா முடியும் வரை தயவு செய்து காத்திருங்கள் ஜோஷிதா'' என்றான் அவளிடம்.

''வருடக்கணக்கில் காத்திருக்கிறேன், ஹரிதாஸ். இன்னும் ஒருநாள் காத்திருக்க முடியாதா என்ன?'' என்றாள் ஜோஷிதா கம்மிய குரலில்.

விடிந்தால் ஆகஸ்ட் 15. ஜோஷிதாவுக்கு விழாவில் அமரவேண்டிய இடம், நடந்து கொள்ளும் முறை, கடைபிடிக்கவேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி அரசு அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டிருந்தன. ஜோஷிதா இனம்புரியாத தவிப்பில் தன் அறையில் அமர்ந்திருந்த போது அவளது செல்போன் திரை ஒளிர்ந்தது. நீளமான நம்பரை இனம்காண முடியாமல் ''ஹலோ'' என்றாள் ஜோஷிதா.

''இது என்ன முட்டாள்தனம் தீதி? நான் அத்தனை முறை சொன்ன பிறகும் எதற்காக வந்தீர்கள்?''

''இஸ்மாயில்...'' என்றாள் ஜோஷிதா.

''இப்போதாவது என் பேச்சைக் கேளுங்கள். உடல்நிலை சரியில்லை என்று அறையிலேயே இருந்துவிடுங்கள். விழாவிற்கு போக வேண்டாம்.''

அத்துடன் தொடர்பு துண்டிக்கப்பட ஜோஷிதா திகைப்பிலும், குழப்பத்திலும் ஆழ்ந்து போனாள். 'இஸ்மாயிலும் டெல்லியில்தான் இருக்க வேண்டும். அவனுக்கு நான்

தங்கியிருக்கும் இடம் வரை தெரிந்திருக்கிறது. அவனது இயக்கம் அவனை ஏதோ சதியில் அனுப்பியிருக்கிறது. கரீம் இறப்பிற்கு பிறகு அவன் கொஞ்ச கொஞ்சமாக தன் பாதையை மாற்றிக் கொண்டு வந்து விடுவான் என்று எதிர்பார்த்தது தவறு போலும். அல்லது அவனே நினைத்தாலும் விலக முடியாத அளவுக்கு இயக்கத்தின் கட்டுப்பாடுகள் இறுக்குகின்றனவா?' ஜோஷிதா வேதனையடைந்தாள்.

மறுநாள் காலையில் எளிமையான காட்டன் புடவையில் தயாராகி அரசு வாகனத்தில் அமர்ந்து விழா நடக்கும் செங்கோட்டைக்கு பயணிக்கையில் கபூர் கேட்டான்.

''உடம்பு சரியில்லையா தீதி? சோர்ந்து தெரிகிறீர்களே?''

''ஆமாம் கண்கள் சிவந்து முகம் வீங்கியிருக்கிறது'' என்றார் பெரியவர்.

''புதிய இடம். இரவில் சரியான தூக்கம் இல்லை.'' ஜோஷிதா லேசாக புன்னகைத்தாள்.

''எனக்கும் இரவெல்லாம் ஏதேதோ கனவுகள். கரீம் என் எதிரில் நிற்கிறான். அருகில் சென்றால் மறைந்து விடுகிறான். சாலையில் நடந்து போகிறேன். வழியில் இரத்த காயங்களுடன் விழுந்து கிடக்கிறான். இரவு முழுவதும் கண் மூடவே முடியவில்லை'' என்றார் பெரியவர் வேதனையுடன்.

''பெரும்பாலும் கனவில் தோன்றுவது கண் விழித்ததும் மறைந்து விடும். யோசித்து நினைவு படுத்திக் கொள்ளும் போது தான் ஞாபகங்களாக தங்கி விடுகிறது. அதனால் வேதனை தரும் விஷயங்களை மறுபடி நினைவுபடுத்திக் கொள்ளாதீர்கள் ஜி.''

''கரீம் பற்றி நான் எப்படி மகளே, யோசிக்காமல் இருக்க முடியும்? வீட்டை விட்டு வெளியே கிளம்பும் போதெல்லாம் வழியில் தெருவில் என் மகன் தென்படுகிறானா என்று தேடாமல் இருப்பதே இல்லை.'' பெரியவர் தொடர்ந்து பேச முடியாமல் குரல் தழுதழுக்க,

''எனக்குத் தெரியும் ஜி'' என்றாள் ஜோஷிதா.



அவள் கண்களில் தெரிந்த வலியைப் பார்த்த பெரியவர் தன்னை சமாளித்துக் கொள்ள முற்பட்டார்.

''நம் நம்பிக்கையும், காத்திருப்பும் வீண் போகாது. இங்கிருந்து போகையில் நாம் கிரண்ஜியையும், கரீமையும் அழைத்துக் கொண்டு தான் போகப் போகிறோம் பாருங்கள்'' என்றான் கபூர்.

பலத்த சோதனைகளுக்கு பிறகு அவர்களது கார் செங்கோட்டைக்குள் நுழைந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை போலீஸ் சீருடைகளும், அரசு உயர் அதிகாரிகளும், பரேடில் கலந்தும் மாணவ, மாணவியர்களும், கலை நிகழ்ச்சியில் பங்கு பெறுபவர்கள், பொதுமக்கள் என கூட்டமாக இருந்தது.

இந்தியாவின் வரலாற்று பெருமை மிக்க சுதந்திர தின விழா தொடங்கியது. பிரதமர், அமைச்சர்கள், எம்.பிக்கள் என அரசை தாங்கி நிற்கும் அத்தனை தூண்களும் அங்கிருந்தன. ஜனாதிபதி வீரர்களின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றபடி நின்றிருந்தார். ஜோஷிதா சுற்றிலும் பார்வையை ஓட்டினாள். 'இன்று வரை பொறுத்திருக்கச் சொன்ன ஹரிதாஸ் கூட கண்ணிலேயே படவில்லை. கிரணைப் பற்றி அவனுக்கு ஏதாவது தெரிந்திருக்கக் கூடுமா? நல்ல விஷயம் என்றால் உடனே ஏன் சொல்லவில்லை? கிரண் ஒரு வேளை?....' கற்பனைகள் மனதை உலுக்கின.

காவலர்கள் இருவர் ஜோஷிதாவை நோக்கி விரைந்து வந்தனர். ஜோஷிதா திகைப்புடன் பார்த்துக் கொண்டிருக்க, ''இறங்கி வாருங்கள்'' என்றார்கள் அவர்கள். அப்போது தான் தன் பெயர் அறிவிக்கப்படுவதை கவனித்த ஜோஷிதா எழுந்து வேகமாய் அவர்களுடன் மேடையை நோக்கி நடந்தாள்.

''வாழ்த்துக்கள் மேடம். இன்று உலகமே உங்களை பார்த்துக் கொண்டிருக்கிறது. உங்கள் பணி மேலும் சிறக்க வேண்டும்'' என்றார்கள் அந்த காவலர்கள்.

நன்றி கூறி மேடை ஏறிய ஜோஷிதா பலத்த கர கோஷங்களுக்கு இடையே ஜனாதிபதியின் கையி லிருந்து விருதை பெறும் போது அவளையும் அறியாமல் உடல் சிலிர்த்தது. இது தனக்கு எதிர்பார்க்காமல் கிடைத்த கௌரவம் என்ற எண்ணத்தில் கண்கள் பனித்தன. வீடியோ, போட்டோ கேமராக்களின் மழை யில் நனைந்து ஜோஷிதா மேடையை விட்டு கீழே இறங்கினாள். திரும்பிப் போய் - மேடையின் வலது புறம் பரிசு வாங்கிய மற்றவர்களுடன் அமர வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டிருந்ததால் ஜோஷிதா மேடை யிலிருந்து இறங்கி வலது புறம் திரும்பினாள். பத்தடி தூரம் நடப்பதற்குள் அவள் கையை யாரோ அழுத்தமாக பற்றினார்கள். ஜோஷிதா திரும்பிப் பார்ப்பதற்குள் சால்வையும், தொப்பியும் அணிந்த அந்த உருவம் ஜோஷிதாவை இழுத்துக் கொண்டு ஓடத் தொடங்கியது.

''ஏய்... யார்... யார் நீ?'' என்றாள் ஜோஷிதா திகைப்புடன்.

இத்தனை பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கிடையே இது எப்படி சாத்தியம் என்ற அதிர்ச்சியிலிருந்து ஜோஷிதா மீளும் முன் மேடைக்கு அருகே பயங்கர சத்தம் கேட்டது. தலையை திருப்பி அவள் பார்க்க முற்பட்ட நொடியில் அந்த உருவம் அவள் கைகளை விடாமல் தலைதெறிக்க ஓடியது. ஜோஷிதாவுக்கு மூச்சு இரைத்தது. இதயம் வாயில் வந்து விடும் போல் அதிர்ந்தது. பின்னால் கூக்குரல்களும், பலர் ஓடி வரும் ஓசையும் கேட்டது. மைதானத்தை விட்டு வெளியே ஓடி வந்து தெருவை நெருங்குகையில் தெருவிலும் கூச்சலும் குழப்பமுமாய் இருந்தது. அதிகம் ஓடி பழக்கமற்ற ஜோஷிதாவுக்கு கால்கள் மடங்கின. சாலை ஓரம் நின்றிருந்த அந்த காரை நெருங்குகையில் ஜோஷிதாவால் முடியாமல் கீழே விழுந்தாள். தரையில் விழுவதற்கு முன் அவன் கரங்கள் அவளை தாங்கிப் பிடித்தன. அவளை வாரி எடுத்து கார்



பின்புறக் கதவை திறந்து அதில் அமர வைத்தவன், ''நாம் இருவரும் இது போல் ஓடி வெகுநாளாகி விட்டதில் லையா ஜோஷி?'' என்றான் சிரிப்புடன்.

தன் முகத்திற்கு நேராய் குனிந்திருந்த அந்த முகத்தை ஜோஷிதா நம்ப முடியாத அதிசயத்துடன் பார்த்தாள். கண்கள் நீரை சொறிந்து அவன் உருவத்தை மறைக்கவும், நீண்ட கேவலுடன் பாய்ந்து அவனை அணைத்துக் கொண்டாள்.

''கிரண்... கிரண்''... என்றாள் பேச முடியாமல்.

''எங்கே போயிருந்தாய்? .... ஏன் இத்தனை நாளாய் என்னை தவிக்க விட்டாய்? உனக்காக... உன்னை பார்க்க முடியாமல்...? அழுகையினூடே வார்த்தைகள் சிதறின.

கிரண் அவளை இறுக அணைத்து முதுகை வருடி னான். தலையை கோதினான். கன்னத்தைப் பற்றி அவள் முகத்தை நிமிர்த்தினான். ஜோஷிதாவின் முகத்தில் அவன் கண்களின் துளியொன்று விழுந்து சிதறியது.

''கிரண்...''

ஏதோ பேச முற்பட்ட ஜோஷிதாவின் இதழ்களை தன் இதழ்களால் சிறை செய்தான். முகமெங்கும் அவன் உதடுகள் மாறி மாறி புதைந்த போது ஜோஷிதா இந்த உலகையே மறந்து போனாள். அவளது நினைவில் இப் போது கிரணையும் அவளையும் தவிர யாருமே இல்லை. ஒரு நொடி திரும்பினாலும் அவன் மறைந்து போய் விடு வான் என்ற பயத்தில் அவனை விடாது இறுக்கியிருந்தாள்.

''கிரண் இத்தனை நாளாய் நீ''...

அவள் முடிக்கும் முன் உச்சி மீது உதடு பொருத்தி கிரண் சொன்னான்.

''எல்லா விபரங்களும் சொல்லத்தான் போகிறேன். ஆனால் இப்போது இல்லை. அவசரமாக இங்கிருந்து கிளம்ப வேண்டும். தாமதிப்பது சரியல்ல.'' அவளை முன் இருக்கையில் நேராக அமர வைத்து விட்டு அவன்

டிரைவிங் சீட்டில் அமர்கையில் நினைவு வந்தவளாக ஜோஷிதா சொன்னாள், "என்னுடன் கபூரும், கரீமின் வாப்பாவும் வந்திருக்கிறார்கள்."

"தெரியும்... அவர்களை ஹரிதாஸ் அழைத்து வருவான்."

"ஹரிதாஸை உனக்கு தெரியுமா?" என்றாள் ஜோஷிதா அடக்க மாட்டாத ஆச்சரியத்துடன்.

அவள் கேள்வியை காதில் வாங்காத கிரண் காரில் சாவியை நுழைத்து இஞ்சினை ஸ்டார்ட் செய்தான். கியரை மாற்றி வண்டியை நகர்த்தியவன் தள்ளாடியபடி எதிரே வந்த உருவத்தைப் பார்த்ததும் ப்ரேக்கை மிதித்தான். கிறீச்சென்ற ஓசையுடன் வண்டி நிற்க, தடுமாறியபடி வந்தவன் கார் பானெட்டின் மீது சரிந்தான். கிரண் அவசரமாய் கதவைத் திறந்து கொண்டு இறங்க, ஜோஷிதாவும் கூடவே இறங்கிச் சென்றாள். காரில் சரிந்து கிடந்தவன் முதுகெல்லாம் இரத்தம் கொப்பளித்தது.

"பர்ஸ்ட் எய்ட் பாக்ஸ் காருக்குள் இருக்கிறதா கிரண்?" என்றாள் ஜோஷிதா மருத்துவராக.

கிரண் தலையசைக்கவும், ஜோஷிதா ஓடிச்சென்று பர்ஸ்ட் எய்ட் பாக்ஸை எடுத்து வந்தாள். கிரண் மெதுவாக சரிந்து கிடந்தவனை நிமிர்த்தவும் "இஸ்மாயில்" என்றாள் ஜோஷிதா அதிர்ச்சியுடன்.

இஸ்மாயில் மூடியிருந்த விழிகளை அரைகுறையாக திறந்து புன்னகைத்தாள். "அருகில் எங்கே மருத்துவமனை இருக்கிறது? உடனே அழைத்துப் போக வேண்டும்" என்றபடி ஜோஷிதா முதலுதவி சிகிச்சையை ஆரம்பித்தாள்.

"எமர்ஜென்ஸி ஆம்புலன்ஸ் இங்கே தான் நிற்கும். நான் பார்க்கிறேன்" என கிரண் போகவும், கீழே சாய்ந்த இஸ்மாயிலை ஜோஷிதா மடியில் தாங்கிக் கொண்டாள்.

"இஸ்மாயில் என்னவாயிற்று உனக்கு?" என்றாள் கண்களில் நீர் வடிய,

இஸ்மாயில் சோர்வுடன் கண்களை மூடித்திறந்தான்.



ஹரிதாஸுடன் கபூரும், கரீமின் அப்பாவும் வந்து சேர்ந்தனர்.

கபூர் தன் பால்ய நண்பனைப் பார்த்ததும் வாய்விட்டுக் கதறினான். "இஸ்மாயில்.... சிறு வயதில் சின்ன அடி பட்டால் கூட தாங்க மாட்டாயே! ஐயோ, இத்தனை இரத்தம் ஆறாகப் போகிறதே! உனக்கு என்னாச்சு இஸ்மாயில்?"

இஸ்மாயில் புன்னகைத்தான். "எது நடக்க வேண்டுமோ அது தான் நடந்தது கபூர். ஆயுதம் ஏந்தியவன் ஆயுதத்தால் தான் சாவான் என்பது சரித்திரம். சொல்லும் உண்மை. சரித்திரத்தை சற்று மறந்து போனதால் கிடைத்த தண்டனை இது."

"இஸ்மாயில் நீ என்ன சொல்கிறாய்?" என்றான் கபூர் ஒன்றும் புரியாமல்.

இஸ்மாயில் சிரமப்பட்டு முகத்தைத் திருப்பி ஜோஷிதாவைப் பார்த்தான். "தீதி, இவனுக்கு சொல்லி விடுங்கள், இந்த துரோகியின் கதையை!"

"இல்லை இஸ்மாயில். நீ துரோகி இல்லை. பாதிக்கப்பட்ட மனம் யாரை நம்புவது என்று தெரியாததால் வந்த விபரீதம் இது."

இஸ்மாயிலின் கண்கள் சொருகின. நாடி துடிப்பு மெலிதாகியது.

"இஸ்மாயில்" கபூர் தேம்பினான். "உன் அம்மாவிற்கு என்ன பதில் சொல்வேன் நான்?"

இஸ்மாயிலின் கரங்கள் கபூரை இறுக பற்றின. ஆம்புலன்ஸ் ஒன்று சைரனுடன் வந்து நின்றது. சீருடை அணிந்த பணியாட்கள் ஆம்புலன்சிலிருந்து இறங்கினார்கள்.

இஸ்மாயில் கண்களை திறக்க முடியாமல் இமைகள் கனத்தன. மிகுந்த பிரயாசையுடன் கபூரிடம் சொன்னான். "இஸ்மாயில் பற்றி யாருக்கும் சொல்ல வேண்டாம் கபூர். கரீம் போல வெளியூரில் வேலை பார்ப்பவதாகவே எல்லோரும் நினைக்கட்டும்."

இஸ்மாயிலின் வார்த்தைகளில் தான் இத்தனை நாள் தேடலுக்கான விடை கிடைக்க, அதை தாங்க முடியா

தவராய் கரீமின் அப்பா நெஞ்சை பிடித்தபடி தரையில் அமர்ந்தார்.

இஸ்மாயிலின் அருகே ஸ்டெச்சரை கிடத்திய சீருடை பணியாளர்கள் அவனை தூக்குவதற்காக கீழே குனிந்தனர்.

ஜோஷிதாவின் கண்ணீர் முகத்தை நனைக்க, அவள் மடியில் சரிந்திருந்த இஸ்மாயில் மங்கிய விழிகளால் நிமிர்ந்து ஜோஷிதாவைப் பார்க்க முற்பட்டான். ''அனாதையாக ஏதோ ஒரு தெருவில் இறந்து கிடப்பேன் என்று நினைத்திருந்தேன். நன்றி தீதி. என்னை கௌரவப் படுத்தி விட்டீர்கள்'' என்றான் மூச்சு வாங்க.

கபூரைப் பற்றியிருந்த இஸ்மாயிலின் கரங்கள் சரிந்து கீழே விழுந்தன. தலை ஜோஷிதாவின் மடியிலிருந்து துவண்டு விழுந்தது. ஆம்புலன்சுடன் வந்த டாக்டர் நாடித்துடிப்பை கவனித்து விட்டு கிரணிடம் உதட்டைப் பிதுக்கி தலையை அசைத்தார்.

## 16

ஜோஷிதா கை நிறைய பைகளுடன் காலிங்பெல்லை அழுத்தினாள். கதவைத் திறந்த கிரண், ''தனியாகவே ஷாப்பிங் போயிருந்தாயா?'' என்றான் வியப்புடன்.

''ஆமாம். கரோல்பாக் போயிருந்தேன். என் அம்மாவும் அப்பாவும் நாளை வருகிறார்கள் இல்லையா? அதற்கு கொஞ்சம் சாமான்கள் வாங்க வேண்டியிருந்தது.''

''டெல்லி உனக்கு அதற்குள் பழகி விட்டதா என்ன?''

''பின்னே, பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் புளிய மரம் ஏற பழகிக் கொள்ள வேண்டாமா?''

கிரண் சிரித்தபடி அவள் இடுப்பை வளைத்தான். ''எங்கிருந்து பிடித்தாய் இந்த வார்த்தைகளை?''



ஜோஷிதா அவன் கைகளை தட்டி விட்டாள். ''இத்தனை நாட்களுக்கு பிறகு என் நினைவு வருகிறதே. பெரிய ஆள் தான் நீ!''

கிரண் வருத்தத்துடன் அவளை ஏறிட்டான். ''என்னைப் பற்றி நீ புரிந்து கொண்டது அவ்வளவுதானா ஜோஷி? வேண்டுமென்றே உன்னை சந்திக்கவில்லை என்றா நினைக்கிறாய்?''

''சரி என்னை தொடர்பு கொள்ளாததற்கு என்ன காரணம் என்று இதுவரை சொன்னாயா நீ?''

''நான் போன விஷயம் அரசாங்க இரகசியம் ஜோஷி. யாரிடமும் அதை சொல்ல முடியாது. நான் இந்தியாவிலேயே இல்லை என்பதை மட்டும்தான் உனக்கு சொல்ல முடியும். ரொம்ப சிக்கலான வேலை. ஆறு மாதம் முன்பு இந்தியா வந்து சேரும் வரை எந்த தகவல் தொடர்பு சாதனங்களும் என்னிடம் இல்லை. நானே முழுசாய் திரும்பி வருவேன் என்ற கியாரண்டியும் இல்லை.''

''இங்கு வந்த ஆறு மாதங்களாய் என்னை ஏன் தொடர்பு கொள்ளவில்லை?''

''தொடர்பில் தான் இருந்தேன் ஜோஷி.''

''விளையாடாதே கிரண்.''

''உண்மை ஜோஷி.''

''நிஜமாக சொல். என்னுடன் நீ பேசினாயா?''

''நேரடியாக இல்லை. ஹரிதாஸ் மூலமாக.''

''ஆமாம். அன்று கூட ஹரிதாஸை தெரியும் என்று ஏதோ சொன்னாய் இல்லையா? பிறகு நடந்த விஷயங்களில் நமக்கு பேச நேரமே இல்லாமல் போனது.''

ஜோஷிதாவுக்கு டெல்லி வந்த பிறகு நடந்த சம்பவங்கள் எல்லாம் ஒரு த்ரில்லர் படத்தை விட சஸ்பென்ஸாக இருந்தது நினைவுக்கு வந்தது. இஸ்மாயில் இறந்த பிறகு கிரண் ஜோஷிதா, கபூர், கரீமின் அப்பா மூவரையும் தான் தங்கியிருந்த வீட்டில் தங்க ஏற்பாடு செய்து விட்டு போய் விட்டான். கரீமின் அப்பா அதிர்ச்சியில் பிரமை

பிடித்தவரைப் போல் அமர்ந்திருந்ததைப் பார்க்கும் போது தான் ஜோஷிதாவுக்கு இஸ்மாயில் இறக்கும் தருவாயில் கரீம் பற்றி சொன்னது நினைவுக்கு வந்தது.

''பிதாஜி'' என்றாள் வருத்தத்துடன் அவர் கரங்களைப் பற்றி. அவர் பதில் பேச முடியாமல் இருக்க, ''தீதி நாங்கள் கேள்விப்பட்டதெல்லாம் நிஜம்தானா?'' என்றான் கபூர் நம்பமாட்டாமல்.

''என்ன கேள்விப்பட்டீர்கள்?''

''இஸ்மாயில் ஏதோ தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புடையவனாம். சுதந்திர தின விழாவை சீர்குலைப்பதற்காக அவனது மேலிடம் இஸ்மாயிலை அனுப்பி வைத்ததாம். இஸ்மாயில் திட்டமிட்டபடி நடந்து கொள்ளாததால் அவனை அவனது இயக்கத்தினரே கொன்று விட்டதாக சொல்கிறார்கள்.''

''உண்மைதான் கபூர். இஸ்மாயில் திட்டமிட்டபடி தாக்குதல் நடத்தாததற்கு காரணம் யார் தெரியுமா? நாம் தான்.''

''என்னது? நாமா?''

''ஆமாம். நாம் மும்பையிலிருந்து கிளம்புவதற்கு முன் இஸ்மாயில் எனக்கு போன் செய்து டெல்லி போக வேண்டாம் என்று சொன்னான். இங்கு வந்த பிறகும் நாம் தங்கியிருந்த இடத்திற்கு போன் செய்து விழாவில் கலந்து கொள்ள வேண்டாம் என்று எச்சரித்தான். இஸ்மாயிலின் பேச்சிலிருந்து ஏதோ தாக்குதல் நடத்த திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதை புரிந்து கொண்டேன். நாம் அங்கு இருந்தால் நமக்கெதிரான செயல்களில் இஸ்மாயில் ஈடுபட மாட்டான் என்று நினைத்து தான் அவன் எச்சரிக்கையை மீறி சென்றேன். கடைசியில் நம் மீது அவன் வைத்த பாசம் அவனது உயிரையே பறித்து விட்டது. விழா மேடையை தகர்க்க வேண்டும் என திட்டமிட்டு இஸ்மாயிலும் அவனது கூட்டாளியும் ஊடுருவியிருக்கிறார்கள். மேடைக்கருகே நாம் இருந்ததால் இஸ்மாயிலால் செயல்பட முடியவில்லை. இஸ்மாயில்



செயல்படாததற்கு காரணம் நான் தான் என்று நினைத்த அவன் கூட்டாளி என்னைத் தாக்க முயற்சித்த போது தான் அதுவரை அங்கே தலைமறைவாய் இருந்த கிரண் என்னை காப்பாற்றியிருக்கிறான். தாங்கள் நினைத்ததை சாதிக்க முடியாத ஆத்திரத்தில் அவன் கூட்டாளி இஸ்மாயிலை கொன்று விட்டான்.''

''உங்களுக்கு இதெல்லாம் எப்படி தெரியும் தீதி?''

''உயிருக்கு போராடுகையில் இஸ்மாயில் சில விஷயம் சொன்னான் மீதியை கிரண் சொன்னான்.''

''கரீம் கூட இதுபோலத்தான் இறந்தானா?'' என்றார் இதுவரை பேசாமலிருந்த கரீமின் அப்பா.

அறையில் நிசப்தம் நிலவியது.

''சொல்லு பேட்டி, உன்னை பேட்டீ என்றழைப்பது சும்மா அல்ல. உண்மையாகவே என் வயிற்றில் பிறந்தவளாகத்தான் நினைக்கிறேன். என்னிடம் மறைக்காமல் சொல். கரீம் இறந்தது உனக்கு முன்பே தெரியும் அல்லவா?''

இதற்கு மேல் மறைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நினைத்த ஜோஷிதா கரீம் பற்றி, அவன் இறந்த சூழ்நிலை எல்லாவற்றையும் விளக்கமாக சொன்னாள்.

அவள் சொல்லி முடித்ததும், வெகுநேரம் மௌனமாய் இருந்த பெரியவர் கண்களை துடைத்துக் கொண்டு நீண்ட பெருமூச்சு விட்டார்.

''என் மகன் இறப்பை பற்றி எனக்கு கவலை இல்லை. அவன் எப்படி இறந்தான் என்பதுதான் கவலை. நாட்டைக் காக்க உயிரை கொடுத்திருந்தால் மிகுந்த பெருமைப்பட்டிருப்பேன். எப்போதிருந்து அவன் நாட்டை சீர் குலைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டானோ அப்போதிருந்து அவன் என் மகன் இல்லை. ஒரு தேசத்துரோகியின் மறைவுக்கு நான் வருந்தவோ, அழவோ போவதில்லை. இப்போது உண்மையில் என் மனம் அமைதியாய் இருக்கிறது. தினமும் மகனை நினைத்து படும் கவலைகள், ஏக்கங்கள் இனி இல்லை. என் நாட்டில் ஒரு துரோகி ஒழிந்தான் என்ற நிம்மதி தான் எனக்கு.''

ஜோஷிதாவும் கபூரும் மெய்சிலிர்த்து போனார்கள்.
"பிதாஜியைப் போன்றவர்களால் தான் உலக அரங்கில் இந்தியா நிமிர்ந்து நிற்கிறது" என்றாள் ஜோஷிதா.

இரண்டு நாட்கள் ஜோஷிதாவுடன் தங்கியிருந்து விட்டு மும்பைக்கு கிளம்புகையில் பிதாஜி சொன்னார்.
"கரீம் அம்மாவிடம் மகனைப் பற்றி சொல்ல வேண்டிய தில்லை. இஸ்மாயில் வீட்டிலும் அப்படித்தான்."

"உண்மை தான்" என்றான் கபூர் தலையசைத்து.

அவர்களை வழியனுப்ப விமான நிலையம் வரை செல் கையில் கரீமின் அம்மா போலவே இஸ்மாயில் வீட்டிலும் இனி அவனுக்காக காத்திருப்பார்கள் என நினைவில் ஜோஷிதாவின் மனம் கனத்தது.

கிரணின் வீட்டில் தங்கியிருக்கையில் இஸ்மாயிலை நினைத்து புலம்புகையில் கபூர் ஒரு நாள் சொன்னான்.
"கிரண்ஜியைப் பார்த்து சந்தோஷப் பட்டு முடிக்கற துக்குள் இஸ்மாயில் இப்படி போய் சேர்ந்து விட்டான். கரீமின் அப்பா ரொம்ப எதிர்பார்ப்புடன் இருந்தார். அது வும் இல்லேன்னு ஆகிப் போச்சு. கங்காவும் கண் காணா மல் போய் விட்டாள். நல்ல வேளை குழந்தையையாவது விட்டு விட்டுப் போனாளே!"

ஜோஷிதா வியப்புடன் பார்த்தாள். "நீ எந்த குழந் தையைப் பற்றி சொல்கிறாய்?"

"என் மகள் ரூப்மதி பற்றிதான். தாராபாய் ஒரு நாள் மனசு உறுத்தல் தாளாமல் என்னிடம் சொல்லி விட் டாள். சொல்லாவிட்டாலும் நான் தவறாக நினைத் திருக்க மாட்டேன். லதிகாவின் இரகசியம் அது. எங்களைப் பொறுத்தவரை ரூப்மதி எங்கள் உயிர். கடவுள் கொடுத்த வரம்," ஜோஷிதா கபூரின் பெருந்தன்மையை நினைத்து நெகிழ்ந்து போனாள்.

இப்போது யோசிக்கையில் நம்மை சுற்றியிருக்கும் னிதர்கள் எத்தனை நல்லவர்கள் என்று தோன்றியது. விரவாத முத்திரை குத்தப்பட்ட கரீமும் இஸ்மாயிலும்



கூட அடுத்தவர்களை காப்பாற்றப் போய் தான் உயிரை விட்டனர்.

யோசனையில் ஆழ்ந்து போன ஜோஷிதா தன் கரங் களில் திணிக்கப்பட்ட ஆரஞ்சு ஜூஸின் குளிர்ச்சியில் யோசனையிலிருந்து விடுபட்டு கிரணைப் பார்த்து புன்னகைத்தாள். ஒரே சிப்பில் ஜூஸை குடித்து முடித் தவள் "ஏ க்ளாஸ்" என்றாள் டம்ளரை கீழே வைத்து விட்டு.

"உண்மையில் நீ இல்லாத போது இதை எல்லாம் நினைத்து நான் ரொம்ப ஏங்கிப் போயிட்டேன் தெரி யுமா?" அவன் கழுத்தை அணைத்து கொஞ்சினாள்.

"ஜூஸை நினைத்தாயா? சரியான சாப்பாட்டு ராமி. நீ மாறவேயில்லை" கிரண் அவள் தலையில் வலிக்காமல் குட்டினான்.

"ச்சீ போடா"... ஜோஷிதா சிணுங்க, அவள் கன்னங் களை வருடி ஆசையுடன் முத்தமிட்டான்.

ஜோஷிதா திடீரென நினைவு வந்தவளாக கேட்டாள்.
"ஹரிதாஸ் பற்றி சொல்லவேயில்லை நீ!"

"இப்போது எதற்கு அந்த பேச்சு?" என்றான் கிரண் அவள் முதுகை வருடி.

"ப்ளீஸ்... ப்ளீஸ்..." ஜோஷிதா அவன் தாடையை பிடித்து கெஞ்ச ஆரம்பிக்கவும் டம்ளரில் மீதியிருந்த ஜூஸை குடித்து விட்டு சொன்னான்.

"ஹரிதாஸின் உண்மையான பெயர் கௌதம். என் பள்ளி பருவ நண்பன். பெரிய பணக்காரன். எனக்கு அரசாங்கம் அளித்த வேலையை வெற்றிகரமாய் முடித்து விட்டு இந்தியா திரும்பும் போது உன்னை உடனே பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஒரு புறமும், நீ லண் டன் திரும்பியிருப்பாய் என எண்ணம் மறுபுறமுமாக இருந்தது. நீ மும்பையில்தான் இருக்கிறாய் என்பதை உறுதி செய்து கொண்டதும் எனக்கேற்பட்ட சந்தோஷத்தை விவரிக்கவே முடியாது. உடனே உன்னிடம் ஓடி வந்து விட துடித்தேன். அப்போது தான் என்னைப் போல்

RAWவில் பணியாற்றிய ஒருவரின் குடும்பத்தை சந்தித்தேன். சந்திரமோகன் என்ற அவர் இந்தியாவிற்கு உளவு பார்ப்பதற்காக வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டவர். அங்கே பிடிபட்டு வழக்கம் போல் பயங்கர சித்ரவதைக்குட்பட்டு இறந்தவர். பொதுவாக இதுபோன்ற உளவாளிகளை அரசு அலுவலர்களாக அரசாங்கம் பகீரங்கமாக ஒப்புக் கொள்ளாது. எனவே மற்ற அரசு அலுவலர்களுக்கு கிடைக்கக் கூடிய சட்டப்படியான சலுகைகள், அவர்கள் மனைவிமார்களுக்கு கிடைக்க வேண்டிய பென்சன், உதவிகள் எதுவும் கிடைக்காது. எனவே சந்திரமோகனின் மனைவி பழைய புடவையை உடுத்தியபடி கோவில் வாசலில் பூக்கட்டி வியாபாரம் செய்கிறார். அவர் பிள்ளைகளும் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு வேலைக்கு போகிறார்கள். நான் ஆடிப்போய்விட்டேன் ஜோஷிதா. சந்திரமோகனின் மனைவியின் முகத்தில் நான் உன்னைத் தான் பார்த்தேன். உனக்கு படிப்பும், உன் காலில் நிற்கிற தகுதியும் இருக்கிறது. இருந்தாலும் என்னுடன் இணைந்திருந்த கடைசி சில நாட்களுக்காக நீ சமூக அங்கீகாரமும் இல்லாமல் உனக்கு பொருந்தாத இடத்தில் ஆயுளுக்கும் சிரமப்பட வேண்டுமா? நான் உன் கூடவே இருந்து குடும்பம் நடத்துவதாக இருந்தாலும் கூட இது போல அடிக்கடி காணாமல் போய்விடுவேன். திரும்பி வருவேன் என்பதற்கு எந்த உறுதியும் இல்லை. சவால்கள் நிறைந்த என் வாழ்க்கையை என்னுடன் நீயும் பகிர்ந்து கொண்டால் தினமும் அது ஒரு போராட்டமாக இருக்கும். எனவே தான் உன்னை என் நினைவிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று நினைத்தேன். என்னை பார்க்கவென்று வந்த கௌதம் ஒரு நாள் எதேச்சையாக என் பர்ஸிலிருந்த உன் போட்டோவைப் பார்த்து விட்டு ''யார் இந்தப் பெண்? உன் காதலியா?'' என்றான் வைத்த கண்ணை எடுக்காமல்,

''எதற்காக கேட்கிறாய்?'' என்றேன்.



'இந்த பெண்ணுக்கு காதலன் யாரும் இல்லை என்றால் நான் இவளை மணந்து கொள்ள விரும்புகிறேன்' என்றான்.

'வெறும் போட்டோவைப் பார்த்தே திருமணத்தை முடிவு செய்து விட்டாயா?' என்றேன் வியப்புடன்.

'சில முகங்கள் பார்த்தவுடன் மனதில் பதிந்து விடும். சிலரை எத்தனை முறை பார்த்தாலும் நினைவில் நிற்காது. இந்த பெண்ணை பார்க்கும் யாராலும் எளிதில் மறந்து விட முடியாது' என்றான் தீர்மானமாக.

''உண்மை தான்'' என்றேன் வேதனையுடன்.

''இந்த பெண் யார்? சொல்லு கிரண்'' என்றான் கௌதம். மறுபடியும் எனக்குள் ஒரு முடிவுக்கு வந்தவனாக நமது கதையை சுருக்கமாக சொன்னேன். 'லண்டனிலிருந்து சில மாதங்கள் சுற்றிப் பார்க்க வந்த பெண் அவள். சந்தர்ப்ப சூழ்நிலைகளால் என்னுடன் பழகும்படி நேர்ந்தது. அதற்காக ஆயுசுக்கும் ஜோஷிதா இங்கேயே கிடந்து கஷ்டப்பட வேண்டும் என்று நான் நினைப்பது எத்தனை சுயநலமானது!'

கௌதமின் கண்கள் யோசனையில் சுருங்கின. ''அப்படி கஷ்டம் என்று நினைத்திருந்தால் நீ கூட இல்லாத இத்தனை நாட்களில் அவளது நாட்டிற்கு போயிருக்கலாமே! ஏன் அதை செய்யவில்லை?''

''தன் தொழிலின் மீதிருக்கும் பக்தி கூட காரணமாய் இருக்கலாம்.''

''இருக்கலாம். ஆனால் அது மட்டும்தான் காரணம் என்று நான் நினைக்கவில்லை.''

கிரண் மிகுந்த தயக்கத்திற்கு பிறகு சொன்னான். ''என்னைப் பற்றிய நினைவு கூட இருக்கலாம். ஆனால் அது காலப் போக்கில் மறைந்து போகும். பெரும்பாலானவர்களின் வாழ்க்கையில் பாஸிங் க்ளவுட்ஸ் போல சில காதல்கள் வந்து போவது சகஜம் தானே! உறுதியான அன்புதான் இறுதியில் நிலைக்கும்.''

கௌதம் பதில் பேசாமல் இருக்க, கிரண் தொடர்ந்து பேசினான்.

''இத்தனை நாள் இடைவெளியில் என் நினைவில் தாக்கம் சற்று குறைந்திருக்கும். இந்த சமயத்தில் உன்னைப் பார்த்து பழக ஆரம்பித்தால் கொஞ்ச கொஞ்சமாக என்னை மறக்கத் தொடங்கி விடுவாள்.''

''உண்மையில் ஜோஷிதாவுக்கு என்னைப் பிடிக்குமா?'' கௌதம் நம்பிக்கையின்றி கேட்டான்.

''என்னை விட நிறமும், மென்மையான சுபாவமும், இனிமையான சிரிப்புமாய் இருப்பவன் நீ. பணக்காரன், எந்த கெட்ட பழக்கங்களும் இல்லாதவன். உன்னை எந்தப் பெண்ணுக்குத்தான் பிடிக்காது?'' அடுத்து வந்த நாட்களில் கிரண் கௌதமிற்கு நம்பிக்கையூட்டும் விதமாய் பேசி, சக்தி நிவாஸில் உள்ளவர்களைப் பற்றிய விபரங்களை எல்லாம் தெரிவித்து அவனை மும்பைக்கு அனுப்பி வைத்தான்.

''பெரிய டிராமாதான். இந்த ஆண்பிள்ளைகளே சுத்த ப்ராட்'' என்றாள் ஜோஷிதா கோபத்துடன்.

''உன் நன்மைக்காக நடந்த ஏமாற்றுத்தனத்தில் தவறு ஏதுமில்லை ஜோஷி.''

''எது? எதுடா என் நன்மை? பொண்டாட்டிக்கே மாப்பிள்ளை பார்த்திருக்கிறாயே, வெட்கமாக இல்லை. உனக்கு?'' ஜோஷிதா மிதமிஞ்சிய கோபத்தில் வெடித்தாள்.

''ஜோஷி... நான் சொல்வதைக் கேள். நான் என்னை ிட உன்னை அதிகமாக நேசித்தேன். அதற்காகத்தான் னக்காக என்னையே இழக்கத் துணிந்தேன். தவறு ன்றால் மன்னித்து விடு ஜோஷி... ப்ளீஸ்...''

கிரண் ஏகமாய் கொஞ்சியும், கெஞ்சியும் அவளை ாதானம் செய்தான்.

''இனி எந்த சூழ்நிலையிலும் உனக்கு இந்த மாதிரி எண் மே வரக் கூடாது'' என்றாள் ஜோஷிதா கண்டிப்புடன்.



''நிச்சயம் வராது. எனக்கு எப்போதும் கிரண் மட்டும் தான். வயதாகி தோல் சுருங்கி, கண்பார்வை மங்குகிற நிலையிலும் அவனுக்காக நான் காத்திருப்பேன் என்று நீ சொன்னதைக் கேட்ட பிறகு எனக்கு வேறு எண்ணம் எப்படி வரும்'' என்றான் கிரண் கண்கள் பனிக்க.

நெகிழ்ச்சியான சில நிமிட மௌனத்திற்கு பிறகு ஜோஷிதா மலபார் ஹில்சிலிருந்து கிரண் போன பிறகு நடந்த சம்பவங்களை விவரித்தாள்.

''சர்மா சார் இறந்ததைப் பற்றி கேள்விப்பட்டேன். சர்மா போலீஸ் ஆபீசர், கரீம் தீவிரவாதி. இருந்தாலும் இரண்டு பேருமே நமக்காக அங்கே வந்து உயிரை விட்டிருக்கிறார்கள்'' என்றான் கிரண் வருத்தத்துடன்.

''இஸ்மாயிலும் அப்படித்தான். அவன் கதை இப்படி முடியும் என்று நான் நினைக்கவேயில்லை'' என்றாள் ஜோஷிதா.

''வேறு எப்படியும் முடிந்திருக்க முடியாது. ஒரு வேளை அப்ரூவராக மாறி ஜெயிலுக்கு போனாலும் அங்கேயே அவன் கதையை முடிக்க ஆட்கள் காத்திருப்பார்கள். இஸ்மாயிலை நான் கண்காணிக்க ஆரம்பித்த சமயம்தான் என்னை வேறு வேலை விஷயமாய் அனுப்பி விட்டார்கள். அதனால் அவனை கவனிக்க முடியாமல் போய் விட்டது. அடிப்படையில் இஸ்மாயில் மிகவும் நல்லவன். பழிவாங்கும் உணர்ச்சிதான் அவனை இப்படி செய்து விட்டது'' என்றான் கிரண்.

''நீ திரும்பி வந்ததற்கும், நான் விருது வாங்கியதையும் கொண்டாட மும்பையில் எல்லோரும் ஆவலாக காத்திருக்கிறார்கள்'' என்றாள் ஜோஷிதா.

''ஜோஷி, நம் பிரிவால் நமக்குள் எத்தனை வருத்தம் இருந்தாலும் உன் கருணையையும், திறமையையும் உலகிற்கு காட்டியது நம் பிரிவு தான்'' என்றான் கிரண்.

''உண்மைதான். அதற்காக பிரிந்தே இருக்க வேண்டும் என்ற அர்த்தம் இல்லை. உன்னுடைய உதவி,

ஊக்குவிப்புடன் இனி முன்பை விட அதிக உற்சாகத்துடன் என்னால் செயல்பட முடியும்.''

கிரண் கனிவுடன் அவள் முடியை ஒதுக்கி நெற்றியில் முத்தமிட்டான். ''நீ முன்பை விட இளைத்திருந்தாலும் கூட உன் கம்பீரமும், அழகும் பல மடங்கு கூடியிருக்கிறது ஜோஷி'' என்றான் காதலுடன்.

''உன்னை பற்றிய நினைவே தனி கம்பீரத்தை கொடுத்திருக்கும்'' என்றாள் ஜோஷிதா. ''நாளை அம்மாவும் அப்பாவும் வந்ததும் மும்பை போய்விடலாம். நம் வீட்டுடன் கங்கா, சோம்நாத்ஜியும் தங்களது வீட்டை தந்திருக்கிறார்கள். தாராபாய் தம்பதிகளும், கரீமின் பெற்றோருடன், சக்திநிவாஸ் வாசிகள் பலரும் நம்முடன் இணைந்து பணியாற்ற காத்திருக்கிறார்கள். மருத்துவ பணியுடன் சேர்ந்து, ஏழை மாணவர்களின் படிப்பு, வருங்கால தலைமுறைக்கு வன்முறையின் வலியை எடுத்துச் சொல்லுதல் என பல திட்டங்கள் இருக்கின்றன.''

''அப்போ, சக்தி நிவாஸ் சர்வீஸ் நிவாஸாக மாறப் போகிறதா?'' என்ற கிரண் விளையாட்டாக சொன்னான், ''அப்போ, இன்னும் சில வருடங்களில் நாம் மறுபடி விருது வாங்க இங்கே வர வேண்டும் இல்லையா?''

ஜோஷிதா 'இல்லை' என தலையசைத்தாள். ''மீண்டும் இஸ்மாயில்களும், கரீம்களும் உருவாகாமல் இருப்பதே எனக்கு கிடைக்கும் பெரிய விருது.''

''உண்மை தான்'' என்ற கிரண் மேலே எதுவும் பேசத் தோன்றாமல் தன் அணைப்பை இறுக்கினான்.

ஜோஷிதா நெகிழ்ச்சியுடன் அவன் தோளில் சாய்ந்தாள். கிரணின் சூடான இதழ்கள் அவள் முகமெங்கும் பதிகையில் ஜோஷிதா சொன்னாள், ''எனக்கு பசிக்குதுடா. சாப்பிட எதாவது இருக்கா?''